வெளியீடு 5-7-2002 Issued 5-7-2002

509/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஆகஸ்ட் 27, 2001 - தொகுதி 7 - எண் 1

**Monday the 27th August, 2001 - Volume 7 - No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை: ரூ. 3.00] [Price Rs. 3.00

27–8–2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - ix |
| Governor and Council of Ministers | xi - xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv - xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. வினாக்கள்–விடைகள்–** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1 - 31 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு–** | |
| தஞ்சாவூர், திருவாரூர், நாகை மற்றும் வேலூர் மாவட்டங்களில் குடிசைகள் அடிக்கடி தீப்பற்றி எரிதல் | 31 - 32, 33 - 47 |
| திரு. அ. அசோகன் | 33 |
| திரு. ஜி. பழனிசாமி | 33 - 36 |
| திரு. சி. ஞானசேகரன் | 36 - 38 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 38 - 41 |
| திரு. ஐ. கணேசன் | 41 - 42 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 43 - 47 |
| **3. தகவல் கோரல்–** | |
| உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள் | 32 |


53-147—1

பக்கங்கள்

4. கவன ஈர்ப்பு—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூடப்படும் நிலை — 47-55

5. ஒழுங்குப் பிரச்சினை—

பேரவை நடவடிக்கைகளை ஒளிபரப்புவது — 56-57

6. அறிவிப்புகள்—

(அ) சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு — 57-58

(ஆ) மானியக் கோரிக்கைகள், 2001-2002, முன்மொழிதல் (ஆசெ.) — 58-59

(இ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் — 123

(ஈ) இங்கிலாந்து பாராளுமன்ற பிரபுக்கள் சபை உறுப்பினர் லார்டு டேவிட் லீ பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து அவை நடவடிக்கைகளைப் பார்வையிடல் — 125

7. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 17 – கல்வி
(ஆ) கோரிக்கை எண் 51 – தமிழ் வளர்ச்சி—பண்பாடு — 59-122, 123-125, 126-218

* மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை — 59, 76, 99-100, 102, 103, 104, 111, 112-113, 114, 122, 125, 129-130, 132-133, 135-137, 165-208

223440
சென்னை-600 009



பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 17 – கல்வி
(ஆ) கோரிக்கை எண் 51 – தமிழ் வளர்ச்சி—பண்பாடு —தொடர்ச்சி

திரு. மீ.அ. வைதியலிங்கம் — 77-86

* டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி — 86-90

திரு. ஜி.கே. மணி — 67, 73, 90-99, 100, 101-102, 103-104, 105, 135, 212, 216

திரு. நா. சந்திரமோகன் — 105-108

* திருமதி எஸ். மகேஸ்வரி — 67, 109-120, 212

* திரு. வி.கே. லட்சுமணன் — 63, 121, 122, 123-124, 126-132, 138-141, 210

திரு. எஸ். இராமச்சந்திரன் — 141-146

திரு. கே. மகேந்திரன் — 146-153

திரு. ஆஸ்டின் — 66, 153-162, 212

திரு. வை. சிவபுண்ணியம் — 69, 74, 162-165, 213, 217

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 218-219

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – டாக்டர் சி. ரங்கராஜன்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

2. **நிதி மற்றும் சட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம். சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

3. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

4. **மின் துறை அமைச்சர்** - **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

   மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் -- **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**
மக்கள் நல்வாழ்வு. மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**
குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

10. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் -- **மாண்புமிகு திரு. ப. தனபால்:**
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



11. வருவாய்த் துறை அமைச்சர் -- **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**
வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

12. பொதுப் பணித் துறை அமைச்சர் -- **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**
பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

13. செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் -- **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர் -- **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

15. சுற்றுலாத் துறை அமைச்சர் -- **மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**16. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**19. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.

**20. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

**21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

வணிக வரிகள்.



**23. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**24. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

**25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

### GOVERNOR – Dr. C. RANGARAJAN

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| **2. Minister for Finance and Law** | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **3. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **4. Minister for Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Electricity, Non-conventional Energy Development. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

7. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

10. **Minister for Co-operation, Food, Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

11. **Minister for Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses.



12. **Minister for Public Works** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Public Works, Highways, Irrigation including Minor Irrigation.

13. **Minister for Information and Publicity and Forests and Environment** .. **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control.

14. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanandham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.

15. **Minister for Tourism** .. **The Hon. Tmt. R. Saroja:**

Tourism and Tourism Development Corporation.

16. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru V. Subramanian:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru S.P. Shanmuganathan:**

Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P. Rajendra Prasad:**

Fisheries and Animal Husbandry.

20. **Minister for Industries** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Industries, Iron and Steel Control, Mines and Minerals.

21. **Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru C. Shanmugavelu:**

Milk and Dairy Development.

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Commercial Taxes.

23. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru A.K. Selvaraj:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority.

24. **Minister for Transport** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

25. **Minister for Backward Classes** .. **The Hon. Tmt. Valarmathi Jebaraj:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. சோ. பாலகிருஷ்ணன்

திருமதி டி. யசோதா

திரு. லா. சந்தானம்

## முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 20—8—2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | - குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | . | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | - | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - | திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 9. | அருணாசலம். திரு. அ. | - | வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 11 | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | - | நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | - | தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி—2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | - | இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. கே. | - | செங்கல்பட்டு |
| 22. | ஆறுமுகம், திரு. த. | - | திருவொற்றியூர் |
| 23. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - | அண்ணா நகர் |
| 24. | ஆஸ்டின், திரு. | - | நாகர்கோவில் |
| 25. | இரவிராஜ், திரு. கோ. | - | திருத்தணி |
| 26. | இராசேந்திரன், திரு. சி. | - | திருவோணம் |
| 27. | இராசேந்திரன், திரு. சோ. | - | கோவில்பட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | - | திருவாடனை |
| 29. | இராமசாமி, திரு பி.சி. | - | மொடக்குறிச்சி |
| 30. | இராமச்சந்திரன், திரு. எஸ். | - | கலசப்பாக்கம் |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | - | கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - | சாத்தூர் |
| 33. | இராமு, திரு. ந. | - | உளுந்தூர்பேட்டை (செவ |
| 34. | இராம் பிரபு, திரு. இரா. | - | பரமக்குடி (செவ) |
| 35. | இராஜசேகர், திரு. மா. | - | ராஜபாளையம் (செவ) |
| 36. | இராஜரெத்தினம், திரு. ப. | - | பெரம்பலூர் (செவ) |
| 37. | இராஜா, திரு. டி.கே. | - | திருப்பத்தூர் |
| 38. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | - | பத்மநாபபுரம் |
| 39. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | - | ஆலங்குளம் |
| 40. | இலட்சுமணன், திரு. கே.என். | - | மயிலாப்பூர் |
| 41. | இளவழகன், திரு. ப. | - | அரியலூர் |
| 42. | இளையகண்ணு, திரு. கா.தி. | - | ஏற்காடு (ஆவா) |
| 43. | இன்பத் தமிழன், திரு. இரா.தா. | - | ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | | |
|---|---|---|---|
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | - | வாசுதேவநல்லூர் (செவ) |
| 45. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | - | திருவல்லிக்கேணி |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | - | தஞ்சாவூர் |
| 47. | உமாதேவன், திரு. கே.கே. | - | திருப்பத்தூர் |
| 48. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | - | செய்யாறு |
| 49. | ஏழுமலை, திரு. வெ. | - | செஞ்சி |
| 50. | கணபதி, திரு. ந. | - | வானூர் (செவ) |
| 51. | கணேசன், திரு. ஐ. | - | எடப்பாடி |
| 52. | கணேசன், திரு. ஆர்.டி. | - | தேனி |
| 53. | கண்ணன், திரு. ஏ.எஸ். | - | பொன்னேரி (செவ) |
| 54. | கந்தசாமி, திரு. க.ரா. | - | சத்தியமங்கலம் |
| 55. | கந்தசாமி, திரு. கா. | - | குன்னூர் (செவ) |
| 56. | கருணாகரன், திரு. கே.சி. | - | சிங்காநல்லூர் |
| 57. | கருணாநிதி, திரு. மு. | - | சேப்பாக்கம் |
| 58. | கருப்பசாமி, திரு. சொ. | - | சங்கரநயினார்கோவில் (செவ) |
| 59. | கருப்பணன், திரு. கே.சி. | - | பவானி |
| 60. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | - | குளத்தூர் (செவ) |
| 61. | கலாவதி, திருமதி கு. | - | சேந்தமங்கலம் (ஆவா) |
| 62. | கனகதாரா, செல்வி சி. | - | பேரணாம்பட்டு (செவ) |
| 63. | கனிதா சம்பத், திருமதி எஸ். | - | திருப்போரூர் (செவ) |
| 64. | காசாம்பு பூமாலை, திருமதி பூ. | - | சங்கராபுரம் |
| 65. | காமராஜ், திரு. மே.ப. | - | தாரமங்கலம் |
| 66. | கார்த்தி, திரு. மு. | - | சேலம்—2 |

67. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
73. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)



91. சாமி, திரு. ஆர். - மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
94. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. - திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் - கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
106. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

| | | |
|---|---|---|
| 115. | செல்வி முருகேசன், திருமதி | - காங்கேயம் |
| 116. | சேகரன், திரு. கே.என். | - திருவெறும்பூர் |
| 117. | சேகர்பாபு, திரு. பி.கே. | - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 118. | சோமசுந்தரம், திரு. வி. | - உத்திரமேரூர் |
| 119. | ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 120. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | - திருநாவலூர் |
| 121. | தமிழரசன், திரு. செ.கு. | - நன்னிலம் (செ.வ.) |
| 122. | தமிழ்ச்செல்வன், திரு. தங்க. | - ஆண்டிப்பட்டி |
| 123. | தமிழ்மொழி ராஜதத்தன் திருமதி | - மேல்மலையனூர் |
| 124. | தம்பிதுரை, டாக்டர் மு. | - பர்கூர் |
| 125. | தவமணி, திரு. க. | - திருவிடைமருதூர் |
| 126. | தளவாய் சுந்தரம், திரு. ந. | - கன்னியாகுமரி |
| 127. | தனபால், திரு. ப. | - சங்கரி (செ.வ.) |
| 128. | தாமோதரன், திரு. எஸ். | - விருதுநகர் |
| 129. | தாமோதரன், திரு. செ. | - கிணத்துக்கடவு |
| 130. | தாமோதிரன், திரு. ப.வெ. | - பொங்கலூர் |
| 131. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - பேராவூரணி |
| 132. | திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | - காஞ்சிபுரம் |
| 133. | திருமாவளவன், திரு. இரா. | - மங்களூர் (செ.வ.) |
| 134. | துரைமுருகன், திரு. | - காட்பாடி |
| 135. | துரைராஜ், திரு. சி. | - சேடப்பட்டி |
| 136. | தென்னரசு, திரு. கே.எஸ். | - ஈரோடு |
| 137. | நடராஜன், திரு. அ. | - குத்தாலம் |



| | | |
|---|---|---|
| 138. | நடராஜன், திரு. எஸ். | - நாட்ராம்பள்ளி |
| 139. | நடராஜன், திரு. பி.கேடி. | - ஆத்தூர் |
| 140. | நடராஜன், திரு. வது. | - இளையான்குடி |
| 141. | நயினார் நாகேந்திரன், திரு. | - திருநெல்வேலி |
| 142. | நரசிம்மன், திரு. பி.எம். | - பள்ளிப்பட்டு |
| 143. | நளினி மனோகரன், திருமதி | - போளூர் |
| 144. | நன்மாறன், திரு. என். | - மதுரை கிழக்கு |
| 145. | நீலகண்டன், திரு. ப. | - ஆற்காடு |
| 146. | நெப்போலியன், திரு. து. | - வில்லிவாக்கம் |
| 147. | பச்சைமால், திரு. தா. | - குளச்சல் |
| 148. | பதினெட்டாம்படியான், திரு. க. | - முதுகுளத்தூர் |
| 149. | பரணிகுமார், திரு. பா. | - திருச்சிராப்பள்ளி—I |
| 150. | பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 151. | பவானி கருணாகரன், திருமதி கே. | - அரக்கோணம் (செ.வ.) |
| 152. | பழனிசாமி, திரு. கே.எஸ். | - பெருந்துறை |
| 153. | பழனிசாமி, திரு. ஜி. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 154. | பழனியப்பன, திரு. பெ. | - மொரப்பூர் |
| 155. | பன்னீர்செல்வம், திரு. எம்-ஆர்.கே. | - குறிஞ்சிப்பாடி |
| 156. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | - பெரியகுளம் |
| 157. | பாண்டுரங்கன், திரு. கே. | - அணைக்கட்டு |
| 158. | பாப்பா சுந்தரம், திரு. அ. | - குளித்தலை |
| 159. | பாரமலை, திரு. க. | - மானாமதுரை (செ.வ.) |
| 160. | பாரிமோகன், திரு. கி. | - தர்மபுரி |
| 161. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |

| | | |
|---|---|---|
| 162. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர் .. | தொண்டாமுத்தூர் |
| 163. | பால்சுப்பிரமணியன், திரு. கே.கே. - | ஸ்ரீரங்கம் |
| 164. | பாலபாரதி, செல்வி க. .. | திண்டுக்கல் |
| 165. | பாலன், திரு. எஸ்.எம். - | லால்குடி |
| 166. | பால் மனோஜ் பாண்டியன்,<br>திரு. பி.எச். - | சேரன்மகாதேவி |
| 167. | பிச்சாண்டி, திரு. கு. - | திருவண்ணாமலை |
| 168. | புகழேந்தி, திரு. இ. - | கடலூர் |
| 169. | பூபதி மாரியப்பன், திருமதி - | வலங்கைமான் (செ.வ.) |
| 170. | பெருமாள், திரு. என்.கே. - | விளாத்திக்குளம் |
| 171. | பொன்முடி, டாக்டர் க. - | விழுப்புரம் |
| 172. | பொன்னம்பலம், திரு. ப. - | சமயநல்லூர் (செ.வ.) |
| 173. | பொன்னையன், திரு. சி. - | திருச்செங்கோடு |
| 174. | போளூர் வரதன், திரு. - | செங்கம் (செ.வ.) |
| 175. | மகாலிங்கம், திரு. எஸ். - | அவினாசி (செ.வ.) |
| 176. | மகேந்திரன், திரு. கே. - | பெரம்பூர் (செ.வ.) |
| 177. | மகேஸ்வரி, திருமதி எஸ். - | கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மணி, திரு. கோ.சி. - | கும்பகோணம் |
| 179. | மணி, திரு. டி. - | விளவங்கோடு |
| 180. | மணி, திரு. ஜி.கே. - | பெண்ணாகரம் |
| 181. | மணி நாடார், திரு. எஸ்.எஸ். - | சாத்தான்குளம் |
| 182. | மலையப்பசாமி, திரு. அ.இரா. - | கபிலர்மலை |
| 183. | மல்லிகா, திருமதி சி. - | முசிறி |
| 184. | மாணிக்கராஜ், திரு. எஸ். - | நாங்குநேரி |



| | | |
|---|---|---|
| 185. | மில்லர், திரு. அ. .. | கூடலூர் |
| 186. | முரளிதரன், திரு. கே.வி. .. | தளி |
| 187. | முருகவேல் ராஜன், திரு. க. - | வந்தவாசி (செ.வ.) |
| 188. | முருகேசன், திரு. ஆ.கு. - | ஆத்தூர் |
| 189. | முனுசாமி, திரு. கா.பூ. - | காவேரிப்பட்டினம் |
| 190. | மைதீன்கான், திரு. டி.பி.எம். - | பாளையங்கோட்டை |
| 191. | மோகன், திரு. ப. - | சின்னசேலம் |
| 192. | யசோதா, திருமதி டி. - | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 193. | ரங்கநாதன், திரு. ப. - | புரசைவாக்கம் |
| 194. | ரங்கராஜன், திரு. என்.ஆர். - | பட்டுக்கோட்டை |
| 195. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - | கோபிச்செட்டிப்பாளையம் |
| 196. | ராதாகிருஷ்ணன், திரு. எம். - | திருமயம் |
| 197. | ராமச்சந்திரன், திரு. கே. - | ஆரணி |
| 198. | ராமராஜ், திரு. ச. - | போடிநாயக்கனூர் |
| 199. | ராம்குமார், திரு. எம். - | பாபநாசம் |
| 200. | ராஜகோபால், திரு. ஆ. - | சிவகாசி |
| 201. | ராஜம்மாள், திருமதி எஸ். - | தூத்துக்குடி |
| 202. | ராஜா, திரு. எச். .. | காரைக்குடி |
| 203. | ராஜாங்கம், திரு. வி.ஆர். - | சோழவந்தான் |
| 204. | ராஜு, திரு. எச்.எம். - | உதகமண்டலம் |
| 205. | ரெங்கநாதன், திரு. என். - | பூம்புகார் |
| 206. | ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்,<br>திரு. மா.ப. - | பேரூர் |
| 207. | லட்சுமணன், திரு. வி.கே. - | கோயம்புத்தூர் கிழக்கு |

| | | |
|---|---|---|
| 208. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | - | அரவக்குறிச்சி |
| 209. வளர்மதி, திருமதி பா. | - | ஆலந்தூர் |
| 210. வளர்மதி ஜெபராஜ், திருமதி | - | மதுரை மேற்கு |
| 211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 212. வாசுதேவன், திரு. பெ. | - | மதுராந்தகம் |
| 213. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 214. வில்வநாதன், திரு. இரா. | - | சோளிங்கர் |
| 215. விளாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - | பூங்கா நகர் |
| 216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - | புதுக்கோட்டை |
| 217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - | பனமரத்துப்பட்டி |
| 218. வீரபாண்டியன், திரு. ஜெக. | - | மயிலாடுதுறை |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 220. வெங்கடாஜலம், திரு. செ. | - | சேலம்—I |
| 221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 222. வேலுசாமி, திரு. செ.மா. | - | பல்லடம் |
| 223. வேலு, திரு. எ.வ. | - | தண்டராம்பட்டு |
| 224. வேல் முருகன், திரு. தி. | - | பண்ருட்டி |
| 225. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 226. வைத்திலிங்கம், திரு. ஆர். | - | ஒரத்தநாடு |
| 227. ஜீவானந்தம், திரு. இரா. | - | நாகப்பட்டினம் |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | - | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | - | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | - | பொள்ளாச்சி |



| | | |
|---|---|---|
| 231. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 232. ஹக்கீம், திரு. எம்.ஏ. | - | மதுரை மத்தி |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - | (நியமனம்) |
| 235. (வெற்றிடம்) | - | சைதாப்பேட்டை |

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### ஆவணி 11, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032

### 2001 ஆகஸ்ட் 27, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்ற பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 16, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

16–

#### கொள்முதல் நிலையம்

***647–அ–திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரில் வாழைத்தார் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை.

வினா எண் 17, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**17–**

## ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை

***856–திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கிருஷ்ணராயபுரம், மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்) தொழிற்சாலை சரிவர இயங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்சாலை முழுமையாக இயங்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதித் துறையின் 19–2–1997 ஆம் நாளிட்ட அரசாணை எண் 75, அரசின் கொள்முதல்களில் அரசுத் துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட முன்னுரிமையை ரத்து செய்ய வழிவகுத்தது. ஆகையால், டான்செம் நிறுவனத்தின் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்ப் பிரிவு தயாரிக்கும் பொருட்களுக்கு வழங்கு ஆணைகள் தொடர்ந்து கிடைக்கப்பெறாததால் இந்த ஆலையின் இயக்கம் 2000 ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள்/தொழில் பிரிவுகள் குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.



**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 850 தொழிலாளர்களின் குடும்ப நலனைக் கருதி, இத்தொழிற்சாலை விரைவில் இயங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், அந்த அரசாணை திரும்பப் பெறப்படும் என்று கூறியுள்ளார்கள். அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று உறுப்பினர் அவர்களுக்கு உறுதிமொழி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, தள்ளிவைக்கப் பெறுகிறது.

வினா எண் 19, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**19–**

## சாதிச் சான்றிதழ்

***461–திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

குரும்பன் – குரும்பர் சமுதாய மக்கள், சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள முரண்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

என்னை வளர்த்து ஆளாக்கி அமைச்சரவை வரிசையிலே அமர வைத்திருக்கின்ற இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போட்ட உத்தரவுகளிலே மிக முக்கியமானது, சாதிச் சான்றிதழ் பெறுவதிலே உள்ள முரண்பாட்டை நீக்க வேண்டும் என்பதாகும். அந்த வகையில் குரும்பன் சமுதாய மக்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள முரண்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். குரும்பன் – குரும்பர் என்ற பெயர்கள் தற்போது பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்கள் எதிலும்

இடம் பெறவில்லை என்பதால் மேற்குறிப்பிட்டவாறு சான்றிதழ் பெற இயலாது. ஆனால் குரும்பா வகுப்பு தமிழ்நாடு முழுவதிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும், குரும்பாஸ் வகுப்பு நீலகிரி மாவட்டத்தில் மட்டும் பழங்குடியினர் வகுப்புப் பட்டியலிலும், குருமன்ஸ் வகுப்பு தமிழ்நாடு முழுவதிலும் பழங்குடியினர் வகுப்புப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட வகுப்புகளைச் சார்ந்தோர் அவரவர்களுக்குரிய சாதிச் சான்றிதழ்களைப் பெற முடியும். இவ்வகுப்பினர் சாதிச் சான்றிதழ் பெறுவதில் முரண்பாடுகள் இருப்பது குறித்து அரசின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை. அத்தகைய முரண்பாடுகள் அரசுக்குத் தெரியப்படுத்தப்படுமானால் அரசு அதனைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய பல்வேறு இடங்களிலே குரும்பன் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு, சாதிச் சான்றிதழ் வழங்குவதிலே பல்வேறு தடைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தச் சான்றிதழை வழங்கக்கூடிய அரசு அதிகாரிகள் அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டை அந்தச் சமுதாயத்தினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களிலே குரும்பன் என்று இருக்கிறவர்களுக்கு S.T. சான்றிதழைத் தருகிறார்கள். குரும்பர் என்று வருகின்றபோது அவர்களுக்கு அந்த S.T. சான்றிதழைத் தருவதில்லை. ஆகவே இந்த முரண்பாடு இந்த அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா அல்லது வருங்காலத்தில் எடுக்கவிருக்கிறதா? நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற தருமபுரி தொகுதியிலே பல கிராமங்களிலே இந்தப் பிரச்சினை இருக்கிறது. இதைத் தீர்க்க இந்த அரசு முன்வருமா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இப்படிப்பட்ட முரண்பாடுகள் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. சட்டநாதன் தலைமையில் 1969 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு முதலாவது பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் நலக் குழுவிற்கு முன்பு, குரும்பர் சாதியைக் குறிப்பதற்கு குருபா, குரும்பா என்ற இரு பெயர்கள் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பட்டியலிலே



இடம் பெற்றிருந்தன. இவ்வகுப்பினரது வாழ்க்கை முறை, கல்வி முறை ஆகியன குறித்து ஆய்வு செய்த முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு, குருபா, குரும்பா என்ற இரு இனங்களுக்குப் பதிலாக குரும்பா என்ற ஒரே பிரிவை அமைத்துக்கொள்ளலாம் என கருத்துத் தெரிவித்தது. அதனைத் தொடர்ந்துதான் குரும்பா என்ற பெயர் மட்டும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கப்பட்டது என்பதை அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு பரிந்துரையின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும்கூட குரும்பா என்ற வகுப்பு மட்டுமே இடம் பெற்றுள்ளது. குரும்பன், குரும்பர் என்ற பெயர்கள் தற்போது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலோ அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலோ இடம் பெறவில்லை என்பதால் அங்கே நாம் சான்றிதழ் பெற இயலாது. மேலும், குரும்பா வகுப்பு தவிர, குரும்பாஸ் என்ற வகுப்பு நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர பட்டியலிலும், குருமான்ஸ் வகுப்பு தமிழ்நாடு முழுவதும் பழங்குடியினர் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது. குருபா, குருபாஸ், குருபன், குருபர், குருமா, குருமன், குரும்பன்ஸ், குரும்பர், குரும்பாஸ், குரும்பன், குரும்பர் ஆகியன குரும்பன்களின் மறு பெயர்கள் என்பதை இவ்வகுப்பினரைச் சார்ந்த மக்கள் தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் முன்பாகத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், தற்போதுள்ள அரசாணைகளின்படி குரும்பா வகுப்பு தமிழ்நாடு முழுவதிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பாகவும், குரும்பாஸ் வகுப்பு நீலகிரி மாவட்டத்திலும், குரும்பன்ஸ் வகுப்பு தமிழ்நாடு முழுவதிலும் பழங்குடியின வகுப்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதால், மேற்குறிப்பிட்ட வகுப்பினர் அவர்களுக்குரிய சாதிச் சான்றிதழைப் பெறுவதில் எவ்வித முரண்பாடும் எழாது என்று அரசு கருதுகிறது. மேலும் இவ்வகுப்பினர் சாதிச் சான்றிதழ் பெறுவதில் நிலவும் இடர்ப்பாடுகள் குறித்து அரசின் கவனத்திற்கு இதுவரை கொண்டுவரப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தகைய இடர்ப்பாடுகள், முரண்பாடுகள் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டால் அரசு அதனைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு முழுவதும் பழங்குடியினர் பட்டியலில் சேர்ந்தவர்களிலே

சான்றிதழ் வழங்குவதிலே நிறைய பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே, இந்த குரும்பர் சான்றிதழ் வழங்குவதுபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதிலே, குரும்பா, குரும்பர், குருமன்ஸ், இப்படிப் பல்வேறு உட்பிரிவுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டு, அதிலே சாதிச் சான்றிதழ் வழங்குவதிலே நிறைய தடைகள் இருக்கின்றன. கடந்த ஐந்து ஆண்டு காலத்திலேகூட, கொண்டா ரெட்டி, குரும்பா, போயர், லம்பாடி, இன்னும் பல்வேறு பிரிவினர் S.C. பிரிவுகளிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லி, கோரிக்கைகளையெல்லாம் வைத்ததோடு மாத்திரம் அல்லாமல், மலைவாழ் மக்கள் பழங்குடியினர் பட்டியலிலே சான்றிதழ் பெற்றவர்கள், சான்றிதழ் பெற்று மத்திய அரசுப் பணிகளிலே, மாநில அரசுப் பணிகளிலே நிறைய பேர் பணியாற்றி வருகிறவர்களை ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லி அரசு ஒரு தாக்கீது அனுப்பி, அந்த அடிப்படையிலே உங்களுடைய மூதாதையர்கள், பெற்றோர் சான்றிதழ்களில் குறிப்பிடப் படவில்லை, நீங்கள் நிலம் அல்லது வீடுகள் பத்திரப்பதிவு செய்கின்ற நேரத்திலேயும் அதிலே குறிப்பிடப்படவில்லை என்று சொல்லி, நிறைய பேர் வேலை நீக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டு, வேலையிலே யிருந்தும் நீக்கப்பட்டு அவர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்று இப்போது பணியிலே சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் தமிழ்நாடு முழுவதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்...

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே இப்படி பாதிக்கப்பட்டவர்கள் வேலைக்குச் சேர்ந்து 15 வருடங்கள், 20 வருடங்கள், 25 வருடங்கள் ஆகிவிட்டன. இதையெல்லாம் கவனத்திலே கொண்டு, சான்றிதழ் வழங்கும்போது விசாரிக்கலாமே தவிர, சான்றிதழ் பெற்று பணியிலே உள்ளவர்களை வேலை நீக்கம் செய்வது கூடாது என்ற வகையிலே அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்திலேகூட, போயர், லம்பாடி, கொண்டா ரெட்டி, குறிச்சான் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அது எங்களுடைய தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லைப் பகுதி. நான் குறிப்பிட்ட அந்தச் சமுதாயங்களை இங்கே பழங்குடியினர் பட்டியலிலே சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது மட்டும்தான் நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய பணி. தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது எல்லாம் மத்திய அரசாங்கத்தினுடைய பணி. இருப்பினும்கூட, தமிழகத்தினுடைய முதலமைச்சர் நம்முடைய அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் அனைத்து சாதி மக்களையும், எந்தெந்த வகுப்பினர் பொருளாதாரத்திலே, சமுதாயத்திலே மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்காக ஒரு ஆய்வை நடத்தலாம் என்று முடிவு செய்து இருக்கிறார்கள். பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களையும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றெல்லாம் அரசுக்கு மனுக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மனுக்களின்மீது ஆய்வு செய்வதற்காகத்தான் நம்முடைய அன்னை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்கின்ற ஒரு ஆணையத்தை உருவாக்கினார்கள். அந்த ஆணையம் பரிந்துரை செய்கின்ற ஆய்வின் அடிப்படையில், அம்மா அவர்களுடைய ஆணையின்படி நல்ல முடிவை இந்த அரசு எடுக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாயக்கர் சாதியில் தொட்டிய நாயக்கர் என்றும் காட்டு நாயக்கர் என்றும், சென்ற முறைகூட இந்த அவையிலே பேசப்பட்டு, அவையெல்லாம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று முன்பிருந்த அரசு கூறியது. அதைப் பொறுத்தவரையில், அவர்கள் அனைவருமே தொட்டிய நாயக்கராக இருந்தாலும் சரி, காட்டு நாயக்கராக இருந்தாலும் சரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், இது குரும்பன் – குரும்பர் விவகாரம். எல்லாவற்றையும் கேட்டீர்கள் என்றால் அமைச்சரிடம் விளக்கம் இருக்காது. அதற்குத் தனிக் கேள்வி போடுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே பழங்குடியினர் பட்டியலில் பல சாதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திரு. ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே

கூறியதுபோல, அவர்கள் அனைவருமே re-verification என்ற முறையிலே அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். தற்போது, வேலைவாய்ப்புத் திட்டத்திலே வேலைக்குச் செல்லும்போது ஏற்கெனவே கொடுத்த அந்த certificate-களை எல்லாம் மறுபரிசீலனை செய்து, தாக்கீது செய்ய வேண்டும் என்று கேட்டு, அரசாணை 2 (டி) எண் 18, நாள் 1-4-1997-ல் அமல்படுத்திய காரணத்தால் இதனால் ஏற்கெனவே அந்த certificate வாங்கியவர்கள் அனைவருமே வேலைக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து, முன்பு ஒரு தடவை வாங்கியிருந்தால் போதும். போலிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அதைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. ஆனால் நியாயமானவர்களுக்கு அது கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சுந்தரம் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்துகள் ஆயப்பட்டு, விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் நீண்ட காலமாக குரும்பர், குரும்பன்ஸ் ஆகிய சமூகத்திற்கு இடையிலே, ஏதோ ஒரு அதிகாரி இவர்களுக்கு S.T. பிரிவிலே ஒரு சிலருக்கு certificate கொடுத்ததைக் காரணமாக வைத்துக்கொண்டு, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்த Community Certificate-ஐ வைத்துக்கொண்டு எங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று உரிய அதிகாரிகளிடத்திலே அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட மனுக்கள் கோட்டாட்சியரிடத்திலே வருகின்றபோது, இதை இந்த சாதி வரிசைப் பட்டியலிலே சேர்க்க முடியாது என்று திரும்பத் திரும்ப அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இதைக் களைகின்ற வகையிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு குரும்பனுடைய இனத்தை மலைசாதி இனத்தோடு சேர்ப்பதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

மேலும், பள்ளிகளிலே சாதிச் சான்றிதழ்களினுடைய பட்டியல் இருப்பதில்லை. தலைமையாசிரியர்களிடத்திலே இந்தச் சமூகத்தைச்



சேர்ந்தவர்கள் இந்தப் பட்டியலிலே வருகிறார்கள் என்று சொன்னால், நிறைய தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவதில்லை. எனவே இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பள்ளிக்கும், சாதிவாரியாக இன்னின்ன பட்டியலிலே இன்னின்ன இனம் சேர்க்கப் பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு அனுப்புமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் முனுசாமி அவர்கள் நல்ல ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய ஆலோசனைக்கு மிக்க நன்றி. அந்த ஆலோசனையை ஏற்று, அரசு விரைவில் இதைப் பரிசீலனை செய்யும் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரும்பன், குரும்பர் என்கிற இந்த வார்த்தைகளில் பாகுபாடு இருந்தாலும், வேலூர் மாவட்டத்திலே திருப்பத்தூர் தாலுகா மடாளம் பகுதியில் இந்த இன மக்களுக்குப் பழங்குடியினர், S.T. என்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது. அதே ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்த வட ஆற்காடு மாவட்டத்திலிருக்கிற செங்கம் தாலுகாவில் அப்படி சான்றிதழ் வழங்கப் படுவதில்லை. ஆனால் இருவரும், பெண் கொடுத்துப் பெண் வாங்குகிற உறவினர்களாகவே இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குலத் தொழில் என்பது காட்டிலே சென்று ஆடு மேய்ப்பதுதான். இன்றைக்கும் அதுதான் அவர்களுக்கு குலத் தொழில். ஆனால் அவர்களிடையே ஒரு மாவட்டத்திலேயே 2 தாலுகாக்களில் வேறுபாடு, முரண்பாடு இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. எனவே அவர்களையெல்லாம் ஒன்றாக்கி, அவர்களுக்கு பழங்குடியினர், Scheduled Tribes என்கிற சான்றிதழ் வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆண்டு காலம் நாங்கள் அரியணையிலே அமர்ந்து விட்டு சும்மாயிருந்துவிட்டோம், நீங்களாவது நடவடிக்கை எடுக்கக்கூடாதா என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். நிச்சயமாக எங்கள் அன்னையினுடைய ஆட்சி இப்படிப்பட்ட சிக்கலுக்குத் தீர்வு காணும் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிச் சான்றிதழ் சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். உண்மையான சாதிச் சான்றிதழ் வழங்குவதில் யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இருக்க முடியாது. பல்வேறு சமுதாயங்களுக்கு certificate வழங்குவதில் தகராறுகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன. அதுசம்பந்தமாகப் புகார்களும் மனுக்களும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கொண்டா ரெட்டி என்ற சமுதாயம் ஒன்று இருக்கிறது. 1961 ஆம் ஆண்டைய census-படி அந்தச் சமுதாயத்தினுடைய ஜனத்தொகை தமிழகத்திலே மொத்தம் 8 பேர்தான். ஆனால் 1981 ஆம் ஆண்டைய census-லே 31,521 பேராக வளர்ந்திருக்கிறார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். குடும்ப நலத் திட்டத்தைச் சரியாக அமல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது. அதன் காரணமாக மத்திய அரசிடமிருந்துகூட பாராட்டு பெற்றிருக்கிறது. அதன் காரணமாகவே நமக்கு வருமான இழப்புங்கூட ஏற்பட்டிருக்கிறது. ஜனத்தொகை அடிப்படையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் குரும்பர் இனத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். வேறு பிரச்சினைக்குள் போக வேண்டாம்.

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. குரும்பர் இனத்தைப் பற்றித்தான். தருமபுரியிலே குரும்பர், வேலூர் மாவட்டத்திலே கொண்டா ரெட்டி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களிடத்திலே இந்த வினா பற்றிய விளக்கம் மட்டும்தான் இருக்கும்.

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, நான் சமுதாயச் சான்றிதழ் பற்றிப் பேசுகிறேன். ஆகையினாலே இந்த மாதிரி குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முதன்மையாக இருக்கிற தமிழ் மாநிலத்திலே ஒரு சமுதாயம் மட்டும் 20 ஆண்டுகளுக்குள்ளே 1000 மடங்கு பெருகியிருக்கிறது என்று சொன்னால், அதுவெல்லாம் போலிச் சான்றிதழ்கள் என்பதை முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிடுகிறபோது, ஏதோ certificate வாங்கிவிட்டார்கள், வேலை பார்த்துவிட்டார்கள், ஆகையினாலே அவர்களையெல்லாம் நீக்கக்கூடாது என்று ஒரு



அறிவுரையைச் சொன்னார்கள். தவறான சான்றிதழ் பெற்று எந்த உத்தியோகத்தில் இருந்தாலும் நிச்சயமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதே நேரத்திலே, உண்மையானவர்களுக்குச் சான்றிதழ் கிடைக்க ஒரு முயற்சி, ஒரு கூட்டு முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு அரசு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த வகையிலே சான்றிதழ்கள் வழங்குவதற்கு, எப்படி வழங்குவது என்ற முறையை வகுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சில சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் போலிச் சான்றிதழ் பெற்று வருவதாக இப்போதுதான் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறீர்கள். அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, தமிழகம் முழுவதும் சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள முரண்பாடுகள் எவையெவை என்பதை விரைவில் ஆய்வு செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்தில், குரும்பன் என்கின்ற வகுப்பு ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதுபோல, தென் மாவட்டங்களிலே, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களிலே இருக்கின்ற சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியிலே இருந்தால் மட்டும்தான் மிகவும் பின்தங்கிய வகுப்பிலே இருந்தவர்கள் என்கின்ற சான்றிதழ் கிடைக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், வேலைகளின் காரணமாக- இன்றைக்கு என்னுடைய வீட்டிலே இருக்கின்ற என் பையன்கூட சென்னையிலே ஒரு அரசு வேலையிலே சேர்ந்துவிட்டால் அவனுடைய குடும்பம் இங்கேயே தங்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அவன் சென்னையிலே இருக்கின்ற காரணத்தினால், எனக்குக் கிடைக்கின்ற அந்த மிகவும் பின்தங்கியவர் என்கின்ற சான்றிதழ் அவனுக்குக் கிடைப்பதில்லை. இதேபோல், இராமநாதபுரத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் பெருவாரியாக மதுரையிலேதான் தங்குகின்ற சூழ்நிலை. வேலைவாய்ப்புப் பெறுகின்ற நேரத்தில் அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் அது புறக்கணிக்கப்படுகிறது.

எனவே எங்கு இருந்தாலும்கூட, அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக அந்த மிகவும் பின்தங்கியவர் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் சொன்ன கருத்து, ஆழ்ந்து உற்றுநோக்கிப் பார்த்து முடிவு செய்யப்படவேண்டிய கருத்து. அண்ணன் அவர்களுடைய கருத்தை அம்மா அவர்களிடத்திலே சொல்லி, அந்த சாதியைச் சார்ந்தவர்கள் எந்தப் பகுதியிலே இருந்தாலும் ஒரே மாதிரியான சான்றிதழ் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை அரசு விரைவில் பரிசீலனை செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஏ.எம். உசேன். உங்கள் தொகுதியிலே குரும்பரே கிடையாதே. (குறுக்கீடு) குறும்பர்கள் இருக்கிறார்கள். (சிரிப்பு)

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவல்லிக்கேணி தொகுதியில் குரும்பர் தெரு என்றே ஒரு தெரு இருக்கிறது. குரும்பர்களுக்கு வட்டாட்சியர் அளவில் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. மாவட்ட ஆட்சியர் அளவில்தான் அந்தச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. சான்றிதழ் கேட்கப் போகும்போது, 100 ஆண்டுகளுக்கான மூதாதையருடைய சொத்துப் பத்திரங்கள் இருக்கின்றனவா என்ற கேள்விகள் எல்லாம் கேட்கப்படுகின்றன. 100 ஆண்டுகளுக்கான அந்தச் சான்றுகளை அல்லது பத்திரங்களைத் தேடிக் கொண்டுவருவதற்குள் அவர்கள் முதியோர்களாகி, வேலைபெறும் வாய்ப்பே முடிந்துவிடும் என்ற அளவிற்கு அந்தச் சான்றிதழ் வாங்குவதில் மிகச் சிரமம் இருக்கிறது. அவர்களின் மூதாதையர் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற ஆதாரத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு அந்தச் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டிய அந்தப் பிரச்சினை இந்த 3 மாத காலத்தில் மட்டும்தான் நடந்து கொண்டிருக்கிறதா? எப்போதிருந்து நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு அவர் தயாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினரிடம் கேள்வி கேட்காதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வியை பதிலாகச் சொல்லிவிடலாம். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** எனவே பல்லாண்டு காலமாக தீர்க்க முடியாத பிரச்சினையை இப்போது இந்த அரசு தீர்க்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எங்கள் அன்னையின்மீதும், ஆட்சியின்மீதும் நம்பிக்கை வைத்து நீங்கள் சொன்ன இந்தக் கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, விரைவில் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கலிங்கனேரி, தண்டராம்பட்டு தொகுதி போன்ற பகுதிகள் அடங்கிய எங்களுடைய மாவட்டத்திலே பல்வேறு பகுதிகளிலேயும் இந்த மக்கள் வாழ்கிறார்கள். இங்கே உள்ளவர்களுக்கு ஊட்டியிலே உறவினர்கள் இருந்தாலும், குரும்பன்ஸ் என்ற சான்றிதழ் வழங்கப்படாமல் இருக்கிறது. தமிழகத்திலே அவர்கள் குறைவாகத்தான் வாழ்கிறார்கள். இவர்களிலே பழங்குடி மக்கள் என்று எத்தனை பேர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது, மற்றவர்கள் எத்தனை பேர் வசிக்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் கணக்கெடுக்கப்பட்டு அவைக்குத் தெரிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், நீங்கள் ஒன்றும் கேட்கவில்லையா? மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லுகிறபோது இந்த குரும்பா, குரும்பன்ஸ் என்று இருக்கக்கூடிய அவர்களுடைய பிரச்சினை

அரசுக்கு வரவில்லை என்று தெரிவித்தார்கள். 1991-லிருந்து 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியில்கூட இந்தப் பிரச்சினை மிக அதிகமாக எழுப்பப்பட்டு, அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆனந்தன் அவர்கள், மத்திய அரசாங்கத்தை நாங்கள் நிச்சயமாக வலியுறுத்தி இந்த முரண்பாட்டைக் களைவோம் என்று ஏற்கெனவே இந்த அவையிலேகூட அறிவித்தார்கள். பிறகு வந்த ஆட்சியில்கூட நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, குரும்பா, குரும்பன்ஸ், குரும்பாஸ் என்று, 'துப்பார்க்கு துப்பாய' என்று திருக்குறளிலே சொல்வதைப்போல அது தொடர்ந்து வந்தாலும்கூட எல்லோரும் ஒரே இனம்தான். குரும்பாஸ் என்று சொன்னாலும் அவர்கள்தான். குரும்பர்கள் என்று சொன்னாலும் அவர்கள்தான். குரும்பன்ஸ் என்று சொன்னாலும் அவர்கள்தான். சில பேர் மரியாதை நிமித்தமாக, சில தலைமையாசிரியர்கள் பள்ளியிலே மாணவன் சேருகிறபோது, மரியாதை கொடுக்கிற வகையிலே, அவனுக்கு குரும்பர் என்று 'ர்'-ஐப் போட்டு அவனை ஒரேயடியாக ஒழித்து விடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'துப்பார்க்கு துப்பாய' என்பதில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பொருள் உண்டு. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** ஆனால் இதிலே ஒரே பொருள்தான் வழங்கி வருகிறது. குரும்பன் என்று போட்டால் அது S.T.யில் வருகிறது. குரும்பர் என்று மரியாதை கொடுத்து அந்தத் தலைமையாசிரியர் அந்த மாணவனுடைய சான்றிதழில் குரும்பர் என்று அந்தச் சாதியை எழுதி விட்டால் உடனே அவர்கள் S.T.என்ற அந்த ஒரு தகுதியை இழந்துவிட்டு ஒரு பெரிய பாதிப்புக்கு ஆளாகின்றனர். என்னுடைய மாவட்டத்திலே குரும்பர்கள் மிக அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆடு மேய்க்கிற தொழிலைத்தான் அவர்கள் அடிப்படைத் தொழிலாக வைத்துக்கொண்டு இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள. இதற்காக பல பேரணிகளை அவர்கள் என்னுடைய மாவட்டத்திலே நடத்திவிட்டார்கள். ஆகவே நாங்கள் இப்போது கொண்டுவந்திருக்கிற இந்தப் பிரச்சினையையாவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்த பிரச்சினையாகக் கருதி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசை வலியுறுத்தி, குரும்பர் என்று இருந்தாலும்கூட, அவர்களும் S.T.தான் என்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி, ஆணையைப் பெற்றுத் தந்து, அவர்களுக்கு நீதி வழங்குவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அரசின் ஆய்வில் வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஆதிவாசிகள் பட்டியலில் முதன்முதலாக இருந்தவர்கள் 'குரும'. அவர்கள் இனம் 'குரும' என்பதுதான். 'குரும' என்பதுதான் அந்த இனத்தினுடைய பெயர். ஆங்கிலேயர் காலத்தில் 'பன்மையில் அதைக் கூறும்போது குருமாஸ் என்று கொண்டுவந்துவிட்டார்கள். அவர்களுடைய உண்மையான பெயர் குரும, குருமன். இரண்டு பெயர்கள் மட்டும்தான் உண்டு. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல ஆங்கிலேயர் காலத்தில் பன்மையில் சொல்வதற்காக 'குருமாஸ்' என்று கொண்டுவந்துவிட்டார்கள். ஆகவே குரும, குருமர், குருமாஸ் மூன்றும் ஒன்றுதான். இந்தமாதிரி வகையிலே, நீலகிரி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு சான்றிதழ் வழங்கும்போது அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்; வழங்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல ஒரு எழுத்துதான் மாறுகிறது. அவர்களெல்லாம் ஒரே பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்று பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாதிரியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சமுதாயம் குறித்து ஆய்வு செய்து எப்படிப்பட்ட சான்றிதழ் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்பதை இந்த அரசு விரைவில் முடிவு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குரும்பர் சமுதாயம் அல்லது குரும்பன் சமுதாயம் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே வாழ்கிறார்கள். குறிப்பாக சந்தேகம் வந்து, சென்னையிலே இருக்கிறார்களா என்றுகூட கேட்டார்கள்.

சென்னையிலே நிறைய பேர் இருக்கிறார்கள். பார்டர் தோட்டத்தைச் சுற்றிலும், ஜாம் பஜாரைச் சுற்றிலும் இருப்பவர்கள் இந்தக் குரும்பர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதேபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைய பேர் வாழ்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு இடங்களிலேயும் நிறைய பேர் இருக்கிறார்கள். தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம், காரமடை, பல்லடம், கல்தான்பேட்டை, சூலூர் போன்ற ஒன்றியங்களில் இருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் ஆடு மேய்க்கின்ற தொழில். பெரும்பாலும் ஊர்களிலே வாழ்வதே கஷ்டம். பெண்கள் மட்டும்தான் ஊர்களிலே இருப்பார்கள். மற்றவர்கள் எல்லாம் ஆண்டுதோறும் பல்வேறு இடங்களுக்குச் சென்று ஆடு மேய்த்துவிட்டு வருவார்கள். நீலகிரியிலே இருப்பவர்களும் இருக்கிறார்கள்; இல்லை என்று சொல்லவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தெளிவான முடிவு காண வேண்டும். நிச்சயமாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில்கூட அவர்கள் பெயர் இல்லை என்று சொல்வது முறையாக இருக்க முடியாது. எனவே அவர்கள் மிகவும் பின்தங்கியோர் வரிசைப் பட்டியலில் இருக்கிறார்களா அல்லது பழங்குடியினர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. அதிகாரிகளிடத்திலேயிருந்து பெற்று, நான் சபைக்குத் தெரிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்திலே திருப்பத்தூர், நாட்றாம்பள்ளி ஆகிய பகுதிகளிலே குரும்பர் இனத்தவர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் கடந்த காலங்களில் குரும்பன்ஸ் என்று certificate பெற்று, S.T.-யில் சேர்க்கப்பட்டு, அவர்கள் எல்லாம் மத்திய, மாநில அரசு வேலைகளிலே சேர்ந்திருக்கிறார்கள். இடையிலே அந்த certificate வழங்குவது நிறுத்தப்பட்டு, அவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி, அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக 10000 பேர் கொண்ட ஊர்வலத்தை





திருப்பத்தூரிலே நடத்தினார்கள். அது அரசின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது எனவே அவர்களை மீண்டும் S.T. பட்டியலிலே சேர்த்து, அவர்கள் வாழ்க்கையிலே ஒளியேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வி. இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போதே பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்ப்பது என்பது இயலாத காரியம் என்பதை உணர்கிறேன். குறிப்பாக, இந்தக் கேள்வி கேட்டு, இந்த அளவோடு இது முடிந்து விடாமல், இதைப்பற்றி நம்முடைய அரசு ஆழமாகச் சிந்தித்து இதன்மீது தலையீடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலோ அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலோ சேர்க்கப்பட வேண்டியவர்கள் குறித்தும், அதுபோல தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் இனத்தைச் சார்ந்தவர்கள், இவர்களைச் சேர்ப்பதற்குரிய பட்டியலைப் பற்றியும் பரிசீலித்து, உரிய முறையிலே நமது அவையின் மூலமாக நிறைவேற்றுவதற்கு, ஒரு தீர்மானமாக மத்திய அரசுக்கு அனுப்பி நிர்ப்பந்தம் செய்வதற்கான ஒரு முயற்சியை எடுத்து இணைத்தாலொழிய இதற்குத் தீர்வு காண்பதற்கான முயற்சி தமிழ்நாட்டிலே ஏற்படாது என்று நான் கருதுகின்றேன். ஆகவே இப்போது இந்தக் கேள்விகள் என்பது இதை உணரச் செய்வதற்குரிய ஒரு முயற்சியாக நாம் வைத்து, இதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய முறையிலே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, இதற்கான ஒரு பதிலைச் சொல்வார்களா என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். அவை முன்னவர் ஏற்றுக்கொள்வார், அரசு ஏற்றுக்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சட்டநாதன் கமிஷனைப் பற்றியும், மிகமிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இன்னும் பல வகுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்பது பற்றியும், இந்த அவையிலே சொன்னார்கள். சட்டநாதன் கமிஷனுக்குப் பிறகு, வெங்கடகிருஷ்ணன் கமிஷன் ஒன்றை நியமித்து, அதிலே ஜாதிவாரி கணக்கெடுப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி இந்த அரசு தீர ஆராய்ந்து, விரைவிலே ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க நடவடிக்கை எடுக்குமா? அப்படி ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுத்து இதுபோன்ற பல்வேறு வகுப்பினருடைய மொத்த ஜனத்தொகைக்குத் தகுந்தமாதிரி இடஒதுக்கீட்டை ஏற்படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–35*

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பல்வேறு வகுப்புகளைச் சார்ந்தவர்கள் தங்களை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று தங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்கின்ற ஆணையம் 1993ஆம் ஆண்டிலே அம்மா அவர்களால் அமைக்கப்பட்டது என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்தேன். தமிழ்நாட்டில் உள்ள ஜாதிகளை எல்லாம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது அல்லது நீக்குவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு பரிந்துரை செய்வதற்காகத்தான் அந்த பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் ஆய்வு செய்து, சில வகுப்பினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும் மற்றும் சில வகுப்பினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும் சேர்ப்பதற்கு பரிந்துரை செய்துள்ளது. அரசு தனக்கு வந்திருக்கின்ற இப்படிப்பட்ட வகுப்பினர்களின் பட்டியல்களை ஆய்வு செய்வதற்காக, விரிவான ஆழ்ந்த சிந்தனைக்கு எடுத்துக்கொள்வதற்காக, ஒவ்வொரு சமூகமும் மாநிலம் தழுவிய பொருளாதார சமூக நிலையிலே எப்படியிருக்கின்றார்கள் என்கின்ற கணக்கை எடுப்பதற்காக, ஒட்டுமொத்த மக்களின் நிலைமையைக் கருத்திலேகொண்டு ஆய்வு செய்வதற்காக, ஒரு குழுவை ஏற்படுத்தலாமா,



தமிழகத்திலேயுள்ள எல்லா வகுப்பு மக்களுடைய பொருளாதார அடிப்படையைத் தெரிந்துகொள்ளலாமா என்று சிந்தித்தபோது, ஒவ்வொரு வகுப்பினருடைய சமூகப் பொருளாதார நிலைமையை ஆய்வு செய்ய வேண்டுமென்று சொன்னால், அந்தக் குழுவினுடைய செயல்பாட்டிற்கு 5 கோடி ரூபாய் செலவாகும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த 5 கோடி ரூபாயைக் கணக்கிட்டு நடுவண் அரசிடம் நிதி அளிக்குமாறு கோரிக்கை வைத்தும், நடுவண் அரசு அதற்குச் செவி சாய்க்க மறுத்துவிட்ட காரணத்தால், இப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, மாநில அரசின் நிதியிலிருந்தே இந்த ஆய்வை மேற்கொள்ளலாமா அல்லது மத்திய அரசாங்கத்திடம் மீண்டும் கேட்கலாமா என்கின்ற எண்ணத்தில் நம்முடைய அரசு இருக்கிறது. விரைவில் இதற்காக நல்ல முடிவை ஏற்படுத்தி, எல்லா வகுப்பு மக்களுடைய சமூகப் பொருளாதார நிலைமையை ஆய்ந்து, ஒவ்வொரு வகுப்பினருக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரும்பா, குரும்பன் இனம் மற்றும் அதே பொருள்கொண்ட பெயர்களால் பல சிக்கல்கள் ஏற்பட்டிருப்பது உண்மை. யாருக்குச் சிக்கல் இருக்கிறதோ, இல்லையோ, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இது பெரிய சிக்கலாகவே தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒரே ஒரு முறையைக் கையாண்டால், அது ஒரு அடிப்படையில் அமைந்தால் இந்தச் சிக்கல்கள் எல்லாம் ஏற்பட்டிருக்காது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு அணுகுமுறையும், தமிழகத்தில் இதர மாவட்டங்களிலே இன்னோர் அணுகுமுறையும் கடைப்பிடிக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலேயிருந்து தெளிவாகிறது. ஏன் இந்த நிலை? சட்டநாதன் கமிஷன் இதற்கான சரியான ஒரு நெறிமுறையை ஏற்படுத்தித் தரவில்லையா? மாநில அரசு ஓர் அணுகுமுறையையும், மத்திய அரசு இன்னோர் அளவுகோலையும் வைத்திருக்கின்ற காரணம் என்ன? ஒரே சமுதாயத்தைச் சார்ந்த இவர்கள் பல்வேறு வகையிலே அறியப்படுகிறார்கள். அப்படி இருக்கும்போது, இந்த நிலைமை நீடிப்பதற்குக் காரணம் என்ன? உதாரணமாக

என்னுடைய தொகுதியிலே ஓர் இடத்தில், நான் பெயரைச் சொல்ல விருமபவில்லை; ஒரு பேரூராட்சி / ஊராட்சித் தலைவர் இருக்கிறார்; தேர்தல் நடந்து இத்தனை காலம் ஆகியும், தொடர்ந்து அவர் கூட்டத்தை நடத்தும்போதெல்லாம் இந்தப் பிரச்சினை எழுப்பப்படுகிறது. நீங்கள் குரும்பர் இல்லை, மலை ஜாதியைச் சேர்ந்தவர் இல்லை, நீங்கள் இன்ன ஜாதிக்காரர் என்று அங்கே தகராறு வளர்க்கப்படுகிறது. அப்படியென்றால், அவருடைய வேட்பு மனு – எது எதெற்கோ இந்த நாட்டிலே வேட்பு மனுவை ஆய்வு செய்கிற ஒரு காலக்கட்டத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) – அவருடைய வேட்பு மனுவை ஏன் ஆய்வு செய்யவில்லை? இப்படியெல்லாம் நடக்கிறது. அதிகாரிகள் அங்கு ஒரு அளவுகோல், இங்கு ஒரு அளவுகோல், இடத்திற்கு ஒரு அளவுகோல், வசதிக்கு ஒரு அளவுகோல் என்றெல்லாம் வைத்துக்கொண்டிருக்கும்போது, இந்த நிலை நீடிக்கிறதே, இதற்கு மத்திய அரசாங்கத்தோடு மாநில அரசு முறையான பேச்சு நடத்தி அல்லது மாநில அரசே மாநில மக்களைப் பொறுத்து, இந்தப் பிரச்சினையிலே நாங்களே ஆய்வு நடத்தி, நாங்களே ஒரு தீர்மானம் எடுப்போம் என்பதை நீங்கள் உறுதியாகக் கூறுவதற்கு தயார்தானா? அல்லது மத்திய அரசாங்கத்தோடு இதுவரையில் ஏதாவது பேச்சு நடத்தப்பட்டிருக்கிறதா? அப்படி நடத்தியிருந்தால் அதனுடைய விளைவு என்ன, முடிவு என்ன? இப்படியெல்லாம் உள்ள குழப்பம் எப்போது தீர்க்கப்படும், நாங்கள் எப்போது காப்பாற்றப்படுவோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக அறிவிப்பார்களா?

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாண்டு காலமாகத் தீர்க்க முடியாத இந்தப் பிரச்சினையை இன்று ஒரே நாளில் தீர்த்து விட முடியாது. இந்த அவையினுடைய மூத்த உறுப்பினர், மாண்புமிகு ஐயா அவர்களுடைய கருத்து விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாக பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வரகூர் தொகுதியில் செட்டிகுளம் பிர்க்கா பகுதியைப் பொறுத்தவரையில், அங்கே கவுண்டர்கள் நிறைய பேர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப்



பகுதியிலே இந்த குரும்பா என்பவர்களும் இருக்கிறார்கள். அந்த குரும்பா என்பவர்களுக்கு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, குரும்பா என்பவர்களுக்கு M.B.C. பட்டியலிலே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இடம் கொடுத்திருக்கிறோம் என்றார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, ஆடு மேய்ப்பவர்களுக்கு, மாடு மேய்ப்பவர்களுக்கெல்லாம், மேய்த்துக்கொண்டிருந்தால்தான் கொடுப்போம் என்று சொன்னால், இன்று ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவன் நாளைக்கு மாடு மேய்க்கிறான்; இன்றைக்கு பண்ணைக்கு அதிபதி ஆகிவிடுகிறான். இது முக்கியம் அல்ல. அந்தப் பகுதியைப் பார்த்து, அவர்களுடைய பத்திரத்தையும் பார்த்து, எங்கள் பகுதியிலே இருக்கிற அந்தக் குழந்தைகள் படிப்பதற்கு, அவர்களுக்கு certificate கிடைப்பதற்கு, அந்தப் பகுதியிலே இருக்கிற குரும்பா என்பவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருப்பதாகச் சொல்கிறார்கள்; அதையும் இதிலே சேர்க்க வேண்டுமாய் உங்கள் மூலம் கேட்டு அமர்கிறேன்

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மாவட்டத்திலுள்ள பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்கு மிக்க நன்றி. அந்தப் பிரச்சினைகள் மீது விரைவில் ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏராளமான கேள்விகள் கேட்டாகிவிட்டன. திரு. வரதன், அடுத்ததில் கேளுங்கள். வினா எண் 18, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**18–**

## விரைவுப் பேருந்து வசதி

***612–திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் உவரியிலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்குவதற்கு திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள உவரியில், சுயம்புலிங்க சுவாமி ஆல்யம், மேல உவரியிலே புனித அந்தோணியார் ஆலயம் ஆகிய சிறப்புமிக்க ஆலயங்கள் இருக்கின்றன. மிக அதிகமான பக்தர்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அங்கே வருகின்றார்கள். ஆகவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், கீழ் உவரி, வரதர் உவரி, இடையன்குடி, திசையன்விளை, மன்னார்புரம், மிட்டாதார்குளம், கோட்டைக் கருங்குளம், கும்பிகுளம், சமூகரெங்கபுரம், தெற்கு கள்ளிகுளம், வள்ளியூர் வழியாக விரைவுப் பேருந்தை விரைவிலேயே விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன். கடந்த ஐந்தாண்டு காலம், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், “இல்லை, இக்கேள்வி எழவில்லை; இல்லை, இந்தக் கேள்விக்கு இடமில்லை” என்ற இதே பதிலைத்தான் சொல்லி முடித்துவிட்டார்கள். அவ்வாறு முடித்துவிடாமல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எனது ஊரைச் சேர்ந்தவர்கள், என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள்; அந்த அடிப்படையிலே இந்த விரைவுப் பேருந்தை விரைவிலேயே உவரியிலேயிருந்து சென்னைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர் எனது தொகுதியைச் சேர்ந்தவர் என்பது உண்மை; மறுக்கவில்லை. அங்கே சுயம்புலிங்க சுவாமி கோவில் இருப்பது உண்மை. அந்தோணியார் கோவில் இருப்பது உண்மை. அங்கே பக்தர்கள்



வருகிறார்கள். இருந்தாலும்கூட, 1989 ஆம் ஆண்டு உவரியிலேயிருந்து சென்னைக்குப் பேருந்து விடப்பட்டு, பேருந்துப் பயணிகளினுடைய வருகை அதிகப்படியாக இல்லாத காரணத்தினால், 1990 ஆம் ஆண்டு அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால் அதற்குப் பதிலாக, உவரிக்கு அருகாமையிலேயே இருக்கக்கூடிய இடையன்குடி, திசையன்விளை பகுதியிலேயிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதன்மூலம் தற்போது பயணிகள் பயனடைகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, அவர்கள் குறிப்பிட்ட பக்கத்து கிராமங்களைச் சேர்ந்த பகுதிகளுக்கு, அதுவும் என்னுடைய நெல்லை மாவட்டம் என்கின்ற காரணத்தினால், அது பயணிகளுக்குத் தேவைப்படுமானால், அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

*முற்பகல் 10–45*

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினமும் ஊட்டியிலிருந்து குன்னூர் வழியாகச் சென்னைக்கு விரைவுப் பேருந்துகள் செல்கின்றன். ஆனால் அந்த விரைவுப் பேருந்துகள் குன்னூரிலே நிற்பதில்லை. குன்னூர் நகரம் ஒரு சுற்றுலாத் தலமாகும். தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து போகின்றார்கள். குன்னூர் பகுதியிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமென்று சொன்னால், மீண்டும் ஊட்டிக்குச் சென்று அங்கேயிருந்து ஏறி, மறுபடியும் குன்னூர் வழியாகத்தான் சென்னைக்கு வரவேண்டும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி, அவர் நெல்லை மாவட்டம் உவரிக்காக பேருந்து கேட்டிருக்கிறார், நீங்கள் குன்னூரிலிருந்து கேட்டால் எப்படி?

**திரு. கா. கந்தசாமி:** தலைவர் அவர்களே, போக 18 கிலோமீட்டர், வர 18 கிலோமீட்டர், மொத்தம் 36 கிலோமீட்டர் தூரம் வீணாகப் பயணம் செய்ய வேண்டும். நேரமும் வீணாகின்றது. பணமும் செலவாகின்றது. எனவே ஊட்டியிலிருந்து, சென்னை வருகின்ற விரைவுப் பேருந்துகளை குன்னூரில் நிறுத்திப் பயணிகளை ஏற்றிக்கொள்ள அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, குன்னூரிலிருந்து பயணிகள் ஏறிவருவதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து செங்கோட்டைக்கு சங்கரன்கோவில் வழியாகவும்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, உவரிக்கு பேருந்து வசதிதான் கேள்வி.

**திரு. சொ. கருப்பசாமி:** தலைவர் அவர்களே, அந்த மாவட்டம்தான் செங்கோட்டையிலிருந்து, சங்கரன்கோவில் வழியாகச் சென்னைக்கு வரக்கூடிய தடம் எண் 290 விரைவுப் பேருந்து, கடந்த ஆட்சியில் மூன்று ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுவிட்டது நான் பலமுறை இந்த அவையில் எடுத்துச்சொல்லியும் செவிசாய்க்கவில்லை. மேலாண்மை இயக்குநரிடமிருந்து ஒரு பக்கம் அளவிற்கு பதில் கடிதம் வந்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியோடு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு அதைக் கொடுக்க இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** அந்த அளவிற்கு மூன்று ஆண்டுகளாக நிறுத்தப்பட்டபோதும், அதனை மீண்டும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், தடம் எண் 290 விரைவுப் பேருந்தை, சங்கரன்கோவில் வழியாகவும், அதைச் சென்னையிலிருந்து செங்கோட்டைக்குச் செல்லும்போதும் சங்கரன்கோவில் வழியாக விடுவதற்கும் ஆவன செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, சங்கரன்கோவில் தொகுதி மக்கள் என்றைக்கும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஆதரவாக இருந்துவருகிற அந்த மக்களின் நலனைக் கருதி, புதியதொரு விரைவுப் பேருந்தை சங்கரன்கோவிலிலிருந்து, சென்னைக்கு விடுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலிருந்து சங்கரன்கோவில் வருகின்ற வழியில் பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள்.



செங்கோட்டையிலிருந்து சங்கரன்கோவில் வருகின்ற வழியில் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன உண்மை. ஆனால் அவற்றையெல்லாம் சீர்செய்கின்ற வகையிலே மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக விரைவுப் பேருந்து வழித்தடம் தொடங்க அரசு பின்பற்றும் நெறிமுறைகளுக்கேற்ப, புதியதாக செங்கோட்டையிலிருந்து விரைவுப் பேருந்து கடையநல்லூர் வழியாகச் சென்னைக்குச் செல்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒப்புதல் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலிருந்து சென்னைக்கு இப்போது பேருந்து வசதிகள் ஏற்கெனவே இருந்துகொண்டிருக்கின்றன. தற்போது அவை போதுமானதாகக் கருதிய காரணத்தினால், இப்போது திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலூர் திரு. ஆர். சாமி, உங்கள் ஊர் வழியாகத்தான் எல்லா பஸ்ஸும் போகின்றதே, எதற்குக் கேட்கின்றீர்கள்?

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கள்ளழகர் திருக்கோவில் என்ற ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அங்கே தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், இந்திய மக்கள் மட்டுமல்லாமல், அயல்நாட்டிலேயிருந்துகூட அந்தக் கோவிலுக்கு அதிக அளவில் பக்தகோடிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், மூலிகை கலந்த ஒரு தீர்த்தம். இயற்கை முறையிலே அந்தத் தீர்த்தம் வருகின்ற காரணத்தினாலே, இந்தியா மற்றும் அயல்நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலா மக்கள் எல்லாம் அங்கே வந்து, அந்தத் தீர்த்தத்தைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள். அந்தத் தீர்த்தம் மஞ்சள் காமாலை நோயை–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாமி, அழகர்கோவிலுக்கு பஸ் விட வேண்டுமா? சொல்லுங்கள்.

**திரு. ஆர். சாமி:** அந்தத் தீர்த்தம் வருவதினால் பல்வேறு மாவட்டங்களிலிருந்து, பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தகோடிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கேயிருந்து நேரிடையாக சென்னைக்கு ஒரு அரசு விரைவுப் பேருந்து விட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, அழகர்கோவிலில் இருப்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். திருவிழாக் காலங்களிலே அங்கே சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மதுரையிலிருந்து சென்னைக்கு வரும் பயணிகள்தான் அதிகம் என்பதைத் தாங்களும் அறிவீர்கள். ஆகவே மதுரையிலிருந்து சாமி அவர்கள், மேலூருக்கு வந்து, மதுரைக்கு வந்து சென்று வந்தாலே போதுமானது என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய உறுப்பினர்கள், வழித்தடங்களையும், பேருந்துகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் அவர்கள் விரும்புகிற 3 வழித்தடங்களில் பேருந்து விடுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பாகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் இந்தக் கருத்தை அவைக்குத் தெரிவித்தார்கள். கடந்த கால ஆட்சியிலே கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் தற்போது நிதி நிலைமையை அனுசரித்து, அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தொகுதியிலிருந்து இந்தப் பிரச்சினை வந்து இருந்தாலும், தமிழ்நாடு முழுவதும் மிகப் பெரிய தேவையாக பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற நிலை வருகிறது. எங்களிடம் வந்திருக்கக்கூடிய மனுக்களில், 4800 மனுக்களில், 3000–க்கும்



மேற்பட்ட மனுக்கள் கூடுதலாக பஸ் வசதி வேண்டும் என்று கேட்கின்ற கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. திருப்பூர், கோவை உள்ளிட்ட பெருநகரங்களில் ஜனங்கள் தவிக்கிறார்கள். வருமானமும் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஒருபுறம் நஷ்டத்தில் ஓடுகிறது. மறுபுறம் இலாபமாக இயங்குகிற பகுதிகளில் கூடுதலாக பஸ்களை இயக்கினால், நஷ்டத்தைச் சரிக்கட்ட முடியும் என்று தோன்றுகிறது. ஆகையினால மினி பஸ்களை நம்முடைய அரசு, நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக இயக்குவதற்கு ஆலோசனையோ, திட்டமோ இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துக் கழகங்கள், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, 4 பேருந்துக் கழகங்களைத் தவிர, அத்தனையுமே இன்றையதினம் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு கருணாகரன் அவர்கள் நன்றாக அறிவார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு நல்லதொரு திட்டத்தை, அம்மா அவர்கள் எப்படியும் அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995–96–ல் தமிழகத்திலே, 15857 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருந்தன. 1999–2000–லே 16980 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருந்தன. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 7967 வழித்தடங்கள்தான் இயங்கிக்கொண்டிருந்தன. கடந்த 5 ஆண்டுகளில், 8947 வழித்தடங்கள் இயக்கப்பட்டன. ஆகவே, 5 ஆண்டுகளிலே, 1100–க்கும் மேற்பட்ட புதிய வழித்தடங்கள் விடப்பட்டிருக்கின்றன. விடப்பட்டாலும், தேவைகள் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கும். ஆகவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சொன்னதைப்போல, கடந்த ஆண்டுகளில் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. 1100 புதிய பேருந்து வழித்தடங்கள் இயக்கப்பட்டிருக்கின்றன. துரிதப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், re–organisation--செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி என்ன கேள்வி, விழுப்புரத்திற்கு பேருந்து வேண்டுமா? என்ன கேள்வி?

**டாக்டர் க. பொன்முடி:** அமைச்சர் சொன்னதற்கு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டாம், விளக்கம் வேண்டாம். கேள்வி நேரத்தில் இது எல்லாம் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம்.

**டாக்டர் க. பொன்முடி:** கேள்வி நேரத்திலே குற்றம் சொல்லாமல் இருந்தால் நான் விளக்கம் கொடுத்திருக்க மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. உட்காருங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு நகரத்திற்கு, பகல் நேரங்களிலே சில விரைவுப் பேருந்துகள் மட்டுமே வந்து செல்கின்றன. இரவு நேரங்களில் அறவே விரைவுப் பேருந்துகள் வருவதில்லை. புறவழிச் சாலை வழியாகச் செல்கின்றன. செங்கற்பட்டு நகரிலிருந்து சுற்றுலாத் தலமாக இருக்கிற மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், வேடந்தாங்கல், காஞ்சிபுரம் போன்ற பகுதிகளிலிருந்து வருகிற பயணிகள், தென் மாவட்டங்களுக்குச் செல்கிற நிலைமை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தொழிற்பேட்டைகள், மறைமலை நகர், மதுராந்தகம் பகுதிகளிலிருக்கின்ற தொழிற்பேட்டைகளில் இருக்கிறவர்கள் எல்லாம், அந்தப் பகுதியிலிருந்து பேருந்துகளில் வந்து, தென் மாவட்டங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் பேருந்துகளிலே, குறிப்பிட்ட ஒருசில விரைவுப் பேருந்துகளே, அதுவும் பகல் நேரங்களில் செங்கற்பட்டு நகருக்குள் வந்து செல்கின்றன. இரவு நேரங்களில் புறவழிச்சாலை வழியாகவே செல்கின்றன. அதேபோன்று, மதுராந்தகம் நகரத்திலேயும், இந்த விரைவுப் பேருந்துகளைப் பொறுத்து இதே நிலைமை இருக்கிறது. அங்கேயும் புறவழிச் சாலை வழியாகச் செல்கின்றன. ஆகவே தென் மாவட்டங்களிலிருந்து வருபவர்களும், இந்தப் பகுதியிலிருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்பவர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய குறையைப் போக்க, அனைத்து விரைவுப் பேருந்துகளும், செங்கற்பட்டு, மதுராந்தகம் நகருக்குள் வந்து செல்வதற்கு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர், தங்கள் மூலம் பதில் அளிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத்



துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பேருந்துகள் நிறுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நிறுத்தப்பட்டதாக நான் சொல்லவில்லை. பல்வேறு உறுப்பினர்கள் நிறுத்தப்பட்டன என்று சபைக்குத் தெரிவித்தனர் என்பதை நான் பதிலிலே சொன்னேன் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொண்டு. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, பேருந்துகள் இரவு நேரங்களிலே ஊருக்குள்ளே வருவதில்லை என்று சொன்னதற்கு, அவருடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு ஊருக்குள்ளே வருவதற்கு அனுமதி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஆர். ராஜாங்கம்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்று–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நமது மதுரையிலா? (சிரிப்பு)

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** சபாநாயகரோடு சேர்ந்த மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் – (திரு. மு. அப்பாவு – குறுக்கீடு) மாற்றப்பட்டிருக்கிறது. அதைச் சொல்கிறேன். அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் 1200 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. கடந்த கால ஆட்சியில் அந்த பஸ்கள் நிறுத்தப்பட்டு 940 ஆக ஆக்கப்பட்டது. இன்று அந்த பஸ்களில்கூட 400 பஸ்கள் நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன என்று அதிகாரி பெருமக்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த முறைகேடுகளைக் களைந்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா? மீண்டும் அந்தப் போக்குவரத்து வழித்தடங்கள் இயக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாகப் போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே முறைகேடுகள் நடந்ததாக மாண்புமிகு உறுப்பினர் ராஜாங்கம் அவர்கள் தெரிவித்தார்கள். முறைகேடுகளைக் களைவதற்குத்தான் நமது அரசு புதியதாக ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆகவே எந்த முறைகேடுகள் இருந்தாலும் கண்டிப்பாகக் களையப்பட்டு, நல்ல முறையில் நிருவாகம் செயல்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குவதாலும், நிதி நெருக்கடி அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், எங்களால் இயக்க முடியவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அவைக்குத் தெரிவித்தார்கள். அப்படி நிதி நெருக்கடி அதிகமாக இருக்குமேயானால், தேவையைக் கருதி நீங்கள் மினி பஸ் திட்டத்தை இன்னும் கொஞ்சம், அதாவது service area - 4 கி.மீ. என்பதை 8 கிலோ மீட்டராகவும், unserviced area-வில் 16 கி.மீ. என்பதை 20 கிலோ மீட்டராகவும் நீங்கள் அதிகரித்துக் கொடுத்தால், கிராமப் பகுதிகளில் நிதி நெருக்கடியைச் சமாளிக்கின்ற வகையில் உங்களுக்கு எந்தவிதமான தொல்லையும் இல்லாமல், Private Sector அதை operate செய்வதற்கு நிச்சயமாக ஒரு வழிவகை இருக்கும். ஆகவே அந்த வகையிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை அதிகரித்துக் கொடுத்து அந்த மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மினி பஸ்கள் நகர்ப்புறங்களில் அதிகமாக இயக்கப்பட்டதன் காரணத்தால்தான், பேருந்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கிராமப்புறங்களில் வேண்டுமானால், தேவையென்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளலாம். நகர்ப்புறங்களில் மினி பஸ்கள் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இருந்தாலும் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலே கிராமப்புறங்களிலே கிராம மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட 30 கி.மீ.-க்கு உட்பட்ட பேருந்துகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு மினி பஸ்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் மீண்டும் அந்தப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான். அமைச்சரின் ஊர்க்காரர்

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் மிகச் சிறப்பாகச் செயல்படும் உழவர் சந்தைக்கு காலை நேரங்களிலும் மற்ற நேரங்களிலும் இலவசமாக இயங்கிக்கொண்டு வந்த மினி பஸ்ஸும், அரசு பஸ்ஸும் சரிவர ஓடாமல் இரத்து செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதுமட்டுமல்ல, அந்தத் தொகுதியில் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதாகக் கூறி, ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த பஸ்களும் இரத்து செய்யப்பட்டதாகவும் என்னிடம் மனுக்கள் வந்திருக்கின்றன. என்னுடைய சட்டமன்றத் தொகுதி வாக்காளராக இருக்கின்ற போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதைப் பரிவோடு கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து சரியானதல்ல. இதுவரைக்கும் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எந்தப் பேருந்தும் நிறுத்தப்படவில்லை. எல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தஞ்சாவூர், திருவாரூர், நாகை மற்றும் வேலூர் மாவட்டங்களில் குடிசைகள் அடிக்கடி தீப்பற்றி எரிதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் பல குடிசைகள் அடிக்கடி தீப்பற்றி எரிவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. [illegible] திரு. செ.கு. தமிழரசன் மற[illegible] பழனிசாமி, திரு. வை. சிவபுண்ணியம்,

திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. அசோகன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஐ. கணேசன் ஆகியோரும் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அனுமதி அளிக்கிறேன். இதன்மீது சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. அசோகன்.

*முற்பகல் 11-00*

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பு அறிவிப்பு என்ன ஆனது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாம்பரம் குடிநீர்பற்றி நாளை மறுநாள் எடுத்துக்கொள்வதாக அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய தொகுதி. கொடுத்து இருக்கிற நேரம் என்பது ஒன்று.

**திரு. ஜி. பழனிசாமி:** முதலிலே அந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து நான்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதில் இருக்கிற அவசியத்தை உணர்ந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்தான். ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தனியாக எடுத்துக் கொள்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும் சேர்த்து சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

### தஞ்சாவூர், திருவாரூர், நாகை மற்றும் வேலூர் மாவட்டங்களில் குடிசைகள் அடிக்கடி தீப்பற்றி எரிதல் - தொடர்ச்சி

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் கடந்த 2 மாத காலமாக அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு பொது மக்கள் மிகவும் பீதியிலே இருக்கிறார்கள். கிராமங்களிலே, குறிப்பாக, இரவு நேரத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலே யாருமே உறங்குவது கிடையாது. அந்த அளவுக்கு இரண்டு மாவட்டங்களிலும் மக்கள் மிகவும் பாதித்து இருக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய திருவாரூர் தொகுதியில் தேவூர், வைப்பூர், கூரனூர், மாவூர் போன்ற பகுதிகளில், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் வசிக்கின்ற பகுதிகளிலும், தேவூர் பகுதியில் 11 கடைகள்: எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் கடைகளை, அங்கே தீக்கு இரையாக்கிய நிகழ்ச்சி, பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தி. இதைப் பார்க்கின்றபோது, இந்தத் தீ விபத்துக்கு ஏதோ அரசியல் பின்னணி இருப்பதுபோல பொது மக்கள் பேசிக்கொள்கிறார்கள். உடனடியாக அரசு தலையிட்டு பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி உங்களுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 நாட்களுக்கு மேலாக நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் திடீர் திடீரென்று பகல் நேரங்களில் தீப்பற்றி வீடுகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இது எப்போது ஏற்பட்டது என்றால் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகுதான் தீப்பற்றி எரிகிறது. இதற்கு என்ன காரணம் என்று அரசு ஆராய வேண்டும் என்பதற்காகத்தான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்குப் பின்னால் மனிதர்கள் பாதுகாத்துக்கொண்டு இருக்கிறார்கள். வீடுகள் எரிகின்றன. எதனாலே எரிகின்றன, என்னவென்று தெரியவில்லை. பொது மக்களிடத்திலே கடுமையான ஒரு பதட்டம் நிலவி வருகிறது. இன்னொரு பதட்டம் என்னவென்று சொன்னால், குழந்தைகளைக் கடத்துகிறார்கள் என்கின்ற மிகப் பெரிய தீ போன்ற ஒரு பிரச்சாரம். அதிலும் ஈடுபடுகிறார்கள். ஆக, குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்ப யாரும் தயாராக இல்லை. காவல் துறையிலே இதற்குப் புகார் கொடுத்தால்,

ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு கள்ளச் சாராய வியாபாரிகள், எங்களுடைய கவனங்களை திசை திருப்புவதற்காக இதுபோன்ற காரியங்களிலே ஈடுபடுகிறார்கள் என்று காவல் துறையினர் சொல்கிறார்கள். ஆகையினால் நாங்கள் கள்ளச் சாராயக்காரர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். பொது மக்கள் யாராவது ஒருவரை, இரண்டு பேரைப் பிடித்துக் கொடுத்தால், கள்ளச் சாராய வியாபாரி என்று அவர்களை விசாரித்து, வேறு வழக்குகளைப் போட்டு அவர்களை விட்டுவிடுகிறார்கள். ஆக, அந்த 2, 3 மாவட்டங்களில் நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், இரவு நேரங்களில் ஒவ்வொருவரும் அவரவர்களிடம் இருக்கின்ற பயங்கரமான ஆயுதங்களைக் கையிலே எடுத்துக்கொண்டு நடமாட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் பார்த்தால், 100 பேர், 150 பேர். காவல்துறை ஒன்றும் கண்டுகொள்வதே இல்லை. தொலைபேசி மிரட்டல் என்பது, அரசியல் கட்சியினுடைய தலைவர்கள் வீட்டிற்கு இன்றைக்கு உங்களுடைய வீடு எரியப் போகிறது என்று தொலைபேசியிலே சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிறபடி பார்த்தோம் என்று சொன்னால், உங்கள் வைக்கோல்போர் எரியப் போகிறது என்ற மிராசுதார் வீடுகளில் தொலைபேசி மூலமாகச் சொல்கிறார்கள். அப்படிச் சொன்ன இரண்டு மணி நேரத்தில் அது எரிகிறது. இதுபோன்ற பதட்டம் வருவதன் காரணமாக, காவல் துறையினர் அங்கே நிற்கிறார்கள். அவர்கள் நிற்கிறபோதே எரிகிறது. வியாபாரிகள் கடைகள் எரிகின்றன. இது தொடர்ந்து நடக்கிறது. வேளாங்கண்ணி, நாகூர் ஸ்தலங்களுக்குப் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் வாகனங்களில், மொழி தெரியாமல், தமிழ் தெரியாமல் வரக்கூடியவர்களை மறித்து, பொது மக்களை கடுமையாகத் தாக்கி, மண்டையில் அடித்து, உடைத்து, கார்களை உடைத்து சேதப்படுத்துகின்ற ஒரு பயங்கரமான நிலைமை அந்த மாவட்டத்தில் இருக்கிறது. மக்கள் விழிப்புணர்வு பெற வேண்டும், அச்சப்படக் கூடாது என்பதற்காக நான், நேற்று 5,000 பேரைத் திரட்டி ஒரு சமாதானப் பேரணியே நடத்தி வந்திருக்கிறேன். இவ்வளவு மோசமான நிலைமைகள் அந்த மாவட்டங்களில் நிலவுகின்றன. இது என்ன காரணத்தினால் நடைபெறுகிறது என்பதை அரசு ஆய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல் துறையால் இதுவரையில் ஒரு வழக்குகூட பதிவு செய்யப்படவில்லை. அதற்கு மாறாக, நேற்று ஆந்திராவிலேயிருந்து, கர்நாடகாவிலேயிருந்து ஒரு டாடா சுமோவிலே வந்தவர்களை பலபேர் அடித்து, அவர்களைச் சேதப்படுத்தியுள்ளார்கள். அந்தப் பகுதியிலே அவர்களை அடித்தவர்கள் யார் என்று தெரியவில்லை.



ஆனால் அப்பாவிகள், ரோட்டிலே நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் மீது 50 பேருக்கு மேல் கடுமையான செக்ஷனில் வழக்கு போட்டு, அவர்களை திருச்சிக்குக் கொண்டு போய்விட்டார்கள். அதிலே பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற பையன்கள்கூட இருக்கிறார்கள். இன்னும் 500 பேரை கைது பண்ணுவதற்கு காவல்துறை இப்போதுதான் வருகிறார்கள். கடந்த 20 நாட்களாக புகார் கொடுத்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் இவர்களை அடித்து துன்புறுத்திய பின்னால் இன்றைக்குக் காவல் துறை, அப்பாவிகள் யாராவது ரோட்டிலே போனால், அவர்களையெல்லாம் அடிக்கிறார்கள். வெங்காய வியாபாரம் பண்ண முடியவில்லை. பாத்திர வியாபாரம் பண்ண முடியவில்லை. புடவை, துணிமணி விற்பதற்கு என்று சில வியாபாரிகள் சென்று வியாபாரம் பண்ணினால், அவர்களையெல்லாம் ஊரிலே உள்ளவர்கள் பிடித்து, கட்டிவைத்து, இதை எப்படிக் கொண்டு வந்திருக்கிறாய் என்று விசாரிக்கிறார்கள். டீசல் வாங்கிக்கொண்டு போக முடியவில்லை. இப்படி ஒரு பதட்டமான சூழ்நிலை இருக்கிறது. காவல் துறையும், வருவாய்த் துறையும் சேர்ந்து இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சமூக விரோத சக்திகளை, கள்ளச் சாராய வியாபாரிகளை, கள்ளச் சாராயம் கடத்தக்கூடியவர்களைக் கைது செய்ய காவல் துறை உரிய நடவடிக்கை எடுப்பதற்கான முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

முற்பகல் 11–05

அதேபோன்று, தீப்பற்றி எரிந்து இருக்கிற வீடுகள். கடுமையான சேதாரம் ஆகியிருக்கின்றன. இதுவரையில் ஒரு பைசாகூட அவர்களுக்கெல்லாம் நிவாரணம் வழங்கப்படவில்லை. அந்த எரிந்த வீடுகளுக்கும், வைக்கோல்போர் சேதம் அடைந்தவர்களுக்கும் நிவாரணம் அளிக்க நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அனைத்துக் கிராமங்களுக்கும் செல்வதற்கு, பாதிக்கப்பட்ட இரண்டு மூன்று மாவட்டங்களில் ஒரு அமைதிக் குழு அமைக்க வேண்டும். வேளாங்கண்ணி திருவிழாவிற்கு, இலட்சக்கணக்கான மக்கள் பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து அந்தக் கோயிலுக்கு வரக்கூடியவர்கள், அப்படி வருகிறவர்களை ரோட்டிலே நிறுத்தி, பிடித்து வைத்துக்கொண்டு அவர்களை விசாரிக்கிறார்கள். ஆகவே அதற்கு ஒரு அமைதிக் குழுவை அமைக்க வேண்டும். பாதிக்கப்படுகிறவர்கள் காவல் துறையினரிடம் என்ன சொல்கிறார்கள்

என்று சொன்னால், பாஸ்பரஸ் போன்ற தீப்பிடிக்கக்கூடிய பொருளை விற்கின்ற கடைகளை முதலில் தடை செய்ய வேண்டும். அதைத்தான் சாணியிலே கலந்து வைக்கோல்போரில் வைப்பதாகச் சொல்கிறார்கள். துணியிலே கலந்து, பஞ்சிலே கலந்து வைத்தவுடனே, வெயில் அடித்தவுடனே அது எரிய ஆரம்பித்து விடுகிறது. இப்படி திடீர் திடீரென்று ஆங்காங்கே எரிய ஆரம்பிக்கிறது. அந்தப் பொருள் எந்தெந்தக் கடைகளிலே விற்கப்படுகிறது; இதை விற்பதற்கு எந்தெந்த கடைகளுக்கு அரசால் லைசன்ஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று ஆராய்ந்து, அதையெல்லாம் தடை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இந்தச் சோகமான நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய கள்ளச் சாராய வியாபாரிகளை முதலிலே பிடித்து விசாரிக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையில் அரசு முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களோடு வேலூர் மாவட்டத்தைக்கூட சேர்த்து நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். இந்தப் பகுதிகளிலே தொடர்ந்து இதுபோன்ற தீச்சம்பவங்கள் ஏற்பட்டு, பலபேர் பாதிப்புக்கு உள்ளாகிற செய்திகள் அன்றாடம் வந்த வண்ணம் இருக்கின்றன. 10 ஆம் தேதி மே மாதம் தேர்தல் நடந்தது. 13 ஆம் தேதி election result வந்தது. 14 ஆம் தேதி என்னுடைய வேலூரில் வீடுகள் எரிய ஆரம்பித்து, தொடர்ந்து ஒரு மாத காலத்திற்குள் 600 வீடுகள் எரிந்தன. நேற்றைக்கு முந்தினநாள்கூட 30 வீடுகள், கஸ்பா சாஸ்திரி நகர் பகுதியிலே எரிந்து விட்டன. ராமநாயக்கன் பகுதியிலே 20 வீடுகள் எரிந்து விட்டன. அதைப்போல, அல்லாபுரம் பகுதியிலே இரண்டு வாரத்திற்கு முன்னால் 13 வீடுகள் எரிந்து விட்டன. தொடர்ந்து இப்படி வீடுகள் எரிவது குறித்து நான் ஆளுநர் உரையிலே பேசியபோதும், நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தும், அங்கே இருக்கக்கூடிய காவல் துறையினர் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே சி.பி.சி.ஐ.டி. விசாரணை கேட்டேன். அதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். ஆனால் ஆணையிட்டும்கூட, தேர்தல் முடிந்தவுடன் ஒரு சதிக் கும்பல் புறப்பட்டு, எல்லா இடங்களிலும் இப்படி எரிகிறது. இது தானாக எரிகிற தீ என்று சொல்லவே முடியாது.



காரணம். வேலூரில் அதனுடைய வரலாற்றில், இந்த அளவிற்கு தீப்பற்றி எரிந்ததாக வரலாறே இல்லை. அதைப்போல, தஞ்சை, நாகை மாவட்டங்களிலேகூட, எங்கோ 4 வீடுகள், 5 வீடுகள் வேண்டுமானால் எரியலாம். ஆனால் தொடர்ந்து பல வீடுகள் எரிகின்றன என்று சொன்னால், இதன் பின்னாலே ஏதோ ஒரு சதிக் கும்பல் இருக்கிறது. இதற்கு அரசியல் பின்னணியா அல்லது என்ன பின்னணி என்று இந்த அரசு கொஞ்சம் ஆராய வேண்டும். நீங்கள் ஆராயாமல், கடந்த மூன்று மாதங்களாக இந்தப் பிரச்சினை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. வீடுகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன. இப்படி பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு நாம் வழங்குகிற நிவாரணமோ வெறும் ஆயிரம் ரூபாய். வீடு முழுமையாக எரிந்தால் ஆயிரம் ரூபாய். பாதியாக எரிந்தால் 500 ரூபாய். அதை வைத்துக்கொண்டு பாதி அளவிற்குக்கூட அவர்களால் ஓலை வாங்க முடியவில்லை; சுவர் கட்ட முடியவில்லை. அவர்களுடைய துணி மணிகள் போன்றவையெல்லாம் எரிந்துவிட்டால், குறைந்தபட்சம் ஒரு வீட்டுக்கு 15 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏறபடுகிறது. இதையெல்லாம் அந்த இடத்திலே நாங்கள் சமாளிக்க முடியாமல், எங்களுடைய பகுதியிலே இருக்கிற அரியூர் நாராயண சித்தர் பீடத்தைச் சேர்ந்த சக்தியம்மாள் என்பவரிடம் சென்று கோரிக்கை வைத்து, அவர் மூலமாக 3 இலட்சம் ரூபாய் வாங்கி, அவர்களுக்கு நிவாரணப் பணிகளைச் செய்தேன். அதைப்போல, முகமதிய நண்பர்கள் மற்றும் பிற நண்பர்களிடமிருந்து 11 இலட்சம் ரூபாய் வசூல் செய்து முடிந்த அளவிற்குக் கொடுத்துக்கொண்டே இருக்கிறோம். ஆனால் தொடர்ந்து வீடுகள் எரிந்து கொண்டே இருந்தால், அரசாங்கமே செய்ய முடியாத ஒரு காரியத்தை நாங்கள் தனிப்பட்ட முறையிலே ஆங்காங்கே போய் பணத்தை கொஞ்சம் வசூல் செய்து அந்த ஏழையெளிய மக்களுக்குக் கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது.

முற்பகல் 11–10

நம்முடைய தமிழக அரசில் உளவுத் துறை என்று ஒன்று இருக்கிறதே, அது என்ன செய்து கொண்டிருக்கிறது என்கிற ஒரு கேள்வியை நான் உங்கள் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையான ஒரு போலீஸ் என்ற பெயரை வைத்துக்கொண்டிருக்கிற நம்முடைய தமிழக காவல் துறை, இப்படி பல மாவட்டங்களிலே, 30 வீடுகள், 40 வீடுகள், 100 வீடுகள் என்று தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும்போது, இதற்கான காரணத்தை உளவுத் துறை ஆங்காங்கே சென்று கண்டறியலாம். இந்த உளவுத் துறை, why it has become actually

ineffective என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இந்த உளவுத் துறையை அரசு கொஞ்சம் முடுக்கிவிட்டு, இப்படிப்பட்ட சதிகார வேலையை, நாச வேலையை செய்துகொண்டிருக்கிற கும்பலைப் பிடிக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி, கள்ளச் சாராய வியாபாரிகள் திசை திருப்புவதற்காக இதைச் செய்கிறார்கள் என்கிற ஒரு கருத்தைச் சொன்னார். அதுவும்கூட உண்மை. இப்படி அரசியல் பின்னணி இருக்கிறது. அதுபோல, சமூக விரோதிகள் பின்னணி இருக்கிறது. அரசாங்கம் தொடர்ந்து தன்னுடைய பணியைச் செய்ய விடாமல் பல இடர்ப்பாடுகளை, இன்னல்களைக் கொடுத்து, side track – திசை திருப்புவதற்காக இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடத்தப்படுகின்றனவா? அப்படி நடத்தப்படுகின்றபோது, ஏழையெளிய மக்கள் பாதிப்புக்கு உள்ளாகும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வேலூரிலே சி.பி.சி.ஐ.டி. விசாரணை போட்டது என்ன ஆனது? இதுவரைக்கும் யாரையும் அவர்கள் வந்து விசாரிக்கவும் இல்லை; குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிக்கவும் இல்லை. இப்படியே போய்க் கொண்டிருந்தது என்று சொன்னால், பற்ற வைப்பவன் பற்ற வைத்துக்கொண்டே தான் இருப்பான். தொடர்ந்து தமிழ்நாடு பூராவும் நாளைக்கு எரியக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். ஆகவே நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இரும்புக் கரம் கொண்டு நிச்சயமாக உளவுத் துறை மூலம், law and order போலீசை வைத்துக்கொண்டு, இந்த சதி வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற அந்த சமூக விரோதிகளை உடனடியாகக் கைது செய்து அவர்களை குண்டர் சட்டத்தில் போட்டு, ஏழையெளியவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு முன்வருமா?

அடுத்து, ஆயிரம் ரூபாய் கொடுப்பதுபற்றி நான் ஏற்கெனவே முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கை வைத்தேன். முதல்வர் நிவாரண நிதியிலிருந்தாவது எரிந்து போகிற வீடுகளுக்கு குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபாயாவது தயவுசெய்து தாருங்கள் என்று நான் பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறேன். இப்படி எரிந்து நாசமாகிக்கொண்டிருக்கிற வீட்டின் உரிமையாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயாவது குறைந்தபட்சம் நிதியை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தொடர்ந்து சில மாவட்டங்களில், குறிப்பாக திருவாரூர், தஞ்சை, கடலூர், வேலூர் மாவட்டங்கள் மற்றும் ஏனைய



பகுதிகளில் திடீர் திடீர் என்று தீப்பற்றி எரிவது, தமிழ்நாட்டில் ஓர் அசாதாரணமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. தீப்பற்றி எரிகின்ற வீடுகள், எளிதில் எரிகின்ற வீடுகளைத்தான் எரிக்கிறார்கள். எரிந்த வீடுகள் எல்லாம் பொதுவாக ஏழைகளுக்குச் சொந்தமானவை. எனவே ஏழைகள் இன்றைக்கு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எப்படி பரவலாக இவ்வளவு மாவட்டங்களிலும் இந்த வீடுகள் எரிகின்றன என்பதற்கு இதுவரையில் எந்த விளக்கத்தையும் நாம் பெற முடியவில்லை. அதுதான் மிகுந்த கவலைக்கு உரியதாக இருக்கிறது. பொது மக்கள் பலவாறாகப் பேசுகிறார்கள். யாரோ எரிக்கிறார்கள்; யாருடைய வீடுகளோ எரிக்கப்படுகின்றன. ஆனால் குறிப்பாக சிறுபான்மை மக்கள் இதிலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. இதிலே அரசியல் பின்னணி இருக்குமோ என்று முதலிலே சந்தேகித்தோம். ஆனால் இப்போது அதை நாம் பரவலாக பார்க்கும்போது, நிச்சயமாக அப்படி ஒரு பின்னணி இருக்கிறது என்பதை என்னால்கூட மறுக்க முடியவில்லை. பல இடங்களிலிருந்து தொலைபேசி மூலமாக கடிதங்கள் மூலமாக ஒவ்வொரு நாளும் கடந்த ஒரு மாத காலமாக எங்களுக்கு இப்பேர்ப்பட்ட மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் அண்மைக்காலத்தில் குறிப்பாக சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் போலீஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு இருக்கிறார்கள். எங்கு தீ விபத்து ஏற்பட்டாலும், அதற்கு நீங்கள்தான் காரணம்; நீங்கள்தான் தீவிரவாதிகள் என்ற ஒரு பெயர் இப்போது சுலபமாகக் கிடைத்துவிட்டது. பாவம், பரிதாபத்திற்குரிய அந்தத் தமிழ்ச் சொல், தீவிரவாதிகள் என்ற சொல் அடிக்கடி நம்முடைய அதிகாரிகளுக்கு மிகச் சுலபமாகக் கிடைத்து விட்டிருக்கிறது. அப்படிக் கிடைத்த நேரத்திலே முஸ்லீம் இளைஞர்கள் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற ஒரு பரவலான எண்ணத்தை திட்டமிட்டு பரப்பிவிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–15

கடந்த தேர்தல் பின்னணியை வைத்துப் பார்க்கும்போது, கடந்த தேர்தலிலே ஒரு சமுதாயம் குறிப்பிட்ட முறையிலே, குறிப்பிட்ட அளவுக்கு அது நடந்துகொண்ட காரணத்தினால், அவர்கள் தண்டிக்கப் படுகிறார்களோ என்றுகூட அஞ்ச வேண்டிய நிலைமை இன்றைக்கு நாட்டிலே உருவாகியிருக்கிறது. நான் யாரையும் குற்றம் சொல்ல

விரும்பவில்லை. இது ஒரு சமுதாய மோதல் என்றுகூட நான் நினைக்கவில்லை. இதிலே வகுப்பு துவேஷம் இல்லை. வகுப்பு அணுகுமுறை இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் அரசியல் பின்னணி இதிலே நிச்சயமாக இருப்பதாக எனக்குத் தெரிகிறது. எங்களிடத்திலே வந்திருக்கிற பட்டியல்களை அரசிடம், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சரிடம் நாங்கள் எல்லாம் ஒருங்கிணைந்து கொடுப்பதாக இருக்கிறோம். அதிலே நீங்கள் பாருங்கள் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று. நேற்றைக்கு முன்தினம்கூட முத்துப்பேட்டை, நாகப்பட்டினம் போன்ற பகுதிகளிலே சிறுபான்மை மக்கள், மற்ற சமுதாய மக்கள் எல்லாம் ஒன்றுகூடி தங்களுடைய இயலாமையை தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்தப் பாதகத்தை, அவதூறுகளை, அவர்கள் மிகுந்த வேதனையோடு ஊர்வலமாக நடத்தி நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்கள். எனவே இங்கே ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. இரகசியத் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது? இரகசியத் துறை அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய தகவல்களைத் தெரிவிக்கவில்லையா? அல்லது தெரிவித்த அந்த இரகசியக் குறிப்புகள் உரியவர்களுக்கு அனுப்பப்படவில்லையா? மாவட்ட ஆட்சித் தலைவர்களெல்லாம் இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை எல்லாம் இருக்கிறது. நான் இதிலே ஆழமாகச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், மிக நுணுக்கமாகச் சிந்தித்து, இந்த விஷயத்தில் நாம் பேசக்கூடிய, செயல்படக்கூடிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது, இன்றைக்கு பாதிக்கப்பட்டு இருக்கிற மக்களுக்கு இங்கே எடுத்துச் சொன்னதைப்போல நஷ்டஈடு நாம் கொடுத்து விடலாம். நஷ்டஈடு கொடுங்கள். அது என்னுடைய வேண்டுகோள். இது ஆரம்பிக்கப்பட்டதே வேலூரில்தான். ஆயிரம் வீடுகளுக்கு மேல் ஒரே நேரத்திலே கொளுத்தப்பட்டது. அவர்களுக்கெல்லாம் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய சில தர்ம சிந்தனை உள்ளவர்களை வைத்து நிவாரணங்களை நாம் அளித்தோம். அரசு சார்பாகவும் கொஞ்சம் நிவாரணம் அளிக்கப்பட்டது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அதிலேயே கவனம் செலுத்துகின்றேன். என்னுடைய மாவட்டத்திலெல்லாம் பாதிக்கப்பட்டது ஆயிரம் வீடுகள்; எரிந்த வீடுகள் எல்லாம் குடிசைகள்; சாதாரண வீடுகள். அதோகதியாக நட்டநடுவுக்கு வீதியிலே இழுக்கப்பட்டவர்கள்; அன்றாடக் கூலிகள். ஆயிரம் வீடுகள் எரிந்தன. அப்போதே சரியான நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை உருவாகி இருக்காது. ஏன் ஆயிரம் வீடுகள் எரிக்கப்பட்டன



என்பதற்கு அன்றைக்கே விளக்கங்கள் வந்தன; விமர்சனங்கள் வந்தன. அந்த விமர்சனங்களை நாம் கருத்தில் கொண்டு தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தி இருந்தால். அதற்கான முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது. இன்றைக்கு பெரும்பாலும் 4, 5 மாவட்டங்களிலே ஏற்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலை தமிழ்நாடு முழுவதும் பரவிவிடக் கூடாது. நாளைக்கு சுதந்திரமாக எங்களைப் போன்றவர்கள் எடுக்கின்ற முடிவுகளுக்கு இப்படித்தான் தண்டனை வழங்கப்படும் என்ற உணர்வும், பாதிக்கப்படுகிறவர்கள், பலஹீனமானவர்கள், சிறுபான்மையின மக்கள் பெற்றுவிடக் கூடாது. அதனால் நாட்டிலே மிகப் பெரிய பயங்கரமான விளைவுகள், பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதை எச்சரித்து, அரசு உடனடியாக இதுகுறித்து சரியான, தெளிவான, விவரமான ஒரு அறிக்கையைத் தெரிவித்து, இரகசியத் துறை இது தொடர்பாக உங்களுக்கு அளித்த விவரம் என்ன, மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்த நடவடிக்கை என்ன, இந்த அரசு இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது, என்ன முடிவு செய்து இருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் இந்த அவைக்குத் தெரிவித்து, நாட்டு மக்களுக்கு நாம் சமாதானம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டி அரசு இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டி, அரசினுடைய கவனத்தை இந்தப் பிரச்சினை குறித்து ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

*முற்பகல் 11–20*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பகுதிகளிலே திடீர், திடீரென்று ஏழையெளிய, பரிதாபத்திற்குரிய மக்கள் வாழக்கூடிய பகுதியிலே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, நாகை, தஞ்சை, திருச்சி மற்றும் வேலூர், சேலம் மாவட்டத்திலுள்ள மகுடஞ்சாவடி – என்னுடைய தொகுதி – அந்தப் பகுதியிலேயும் பல்வேறு வீடுகள் எரிந்து நாசமாகிக் கொண்டிருக்கின்றன. தீப்பற்றி எரியும்போது, பரிதாபத்திற்குரிய ஏழை மக்கள் துடிக்கக்கூடிய துடிப்பைப் பார்க்கும்போது, நம்முடைய நெஞ்சமெல்லாம் தீப்பற்றி எரிகிறது. இதைத் தடுக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அது எவ்வளவு பெரிய சக்தியாக இருந்தாலும், எந்த அரசியல் பின்னணியாக இருந்தாலும், ஏழையெளியவர் வசிக்கக்கூடிய அந்த வீட்டை அந்தக் குருவிக் கூட்டை,

தீ வைத்துக் கொளுத்தக்கூடிய அந்தச் சண்டாளர்களை இந்த அரசு மிகக் கடுமையான முறையிலே அடக்க வேண்டும். இதுவரை பல்வேறு பகுதிகளிலே இதுபோல தீ விபத்துகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஏழையெளியவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டிய அரசு, காவல் துறை என்ன வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறதா? இதுவரை எத்தனை பேர்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதற்கு என்ன பரிகாரம் என்பதைத் தயவுசெய்து அரசியல் கண்ணோட்டம் இல்லாமல் யார் ஏழைகளுடைய குடிசைகளுக்கு தீ வைக்கிறார்களோ அவர்களை மிகக் கடுமையாக தண்டிக்க இந்த அரசு முன்வர வேண்டும். ஏழையெளிய, பாட்டாளி வர்க்கத்தினுடைய இந்தப் பிரச்சினைகளை, இந்தக் குடிசை வாழ் மக்கள்மீது கருணை வைத்து இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். எரிந்துபோன வீடுகளுக்கு சகோதரர் ஞானசேகரன் அவர்களும், அண்ணன் பழனிசாமி அவர்களும் சொன்னதைப்போல, கொடுக்கக்கூடிய தொகை மிகக் குறைவு. 5,000 ரூபாய் என்பது, குடிசை போட ஓலை மற்றும் குடிசைக்குத் தேவையான மரங்கள் வாங்க முடியாது. 5,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ரூ.1000 தான் கொடுக்கிறார்கள். 5,000 ரூபாயே போதாது என்பதுதான் என்னுடைய வாதம். முடிந்தவரை 5,000 ரூபாய்க்கு மேலே, குறைந்தது 10,000 ரூபாயாவது இந்த அரசு கொடுக்க வேண்டும்.

எரிந்த குடிசை வீடுகளில் இருக்கக்கூடியவர்களுக்கு, அரசு 5 கிலோ அரிசி, 5 லிட்டர் சீமெண்ணெய், அத்துடன் ஆயிரம் ரூபாய் பணம், ஒரு வேஷ்டி, ஒரு புடவை, ஒரு பாய் கொடுக்கிறார்கள். இது போதுமானதல்ல. தயவுசெய்து இதை ஒரு கேலியாக, கிண்டலாக, ஒரு நகைச்சுவையாக இந்த அவையிலே இருப்பவர்கள் எடுத்துக்கொண்டால், நாட்டிலே இருக்கக்கூடிய ஏழைகள், அந்த ஏழைகளுடைய வயிற்றெரிச்சலில் இருந்து யாரும் தப்பிவிட முடியாது. சிந்திக்க வேண்டும். அந்த ஏழைகளுக்கு, இந்த மாமன்றத்தின் மூலம் எவ்வித பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை, ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான நடவடிக்கையை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் சொல்ல வேண்டும். அரசு இதைக் கடைப்பிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் ஆணித்தரமாக, அழுத்தமாகத் தங்களுக்குச் சொல்லி, பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு நல்ல விடிவு காலத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், நாகப்பட்டினம் மாவட்டத்திலும், கடலூர் மாவட்டத்திலும், வேலூர் மாவட்டத்திலும், திருவாரூர் மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் ஏற்பட்டுவிட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களைப் பற்றியும், அந்தத் துயரங்களுக்குப் பின்னால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணங்கள் பற்றியும், ஏற்பட்டுவிட்ட அந்தத் துயரங்களுக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதைப் பற்றியும், தங்களுடைய ஆதங்கத்தை, மக்கள் படுகின்ற துயரங்களை, ஒரு தேர்ந்தெடுக்கப்படுகின்ற மக்களின் பிரதிநிதிக்கே உரித்தான வாஞ்சையோடு இன்றையதினம் இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசு கவனமாக அந்தந்த மாவட்டத்தில் நடந்துவிட்ட அந்தத் துயரச் சம்பவத்திற்கு என்னென்ன வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறது; எந்தெந்த வகையில் நிவாரணங்களை வழங்கியிருக்கிறது என்ற விவரங்களை நான் முதலிலே இந்த அவைக்குத் தெரிவித்துவிட்டு, அதற்குப் பின்னால், இந்தச் செயலுக்குப் பின்னால், சதி இருக்கிறதா என்பதைப் பற்றியும், அந்தச் சதி, காவல் துறை மூலமாக எவ்வாறு களையப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் கருத்துக் கூற இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

முதலில் நாகப்பட்டினம் மாவட்டத்தில், 1-6-2001 முதல் 17-8-2001 முடிய ஏற்பட்ட தீ விபத்து பற்றிய விவரங்கள். அந்த மாவட்டத்தில் முழுமையாக தீக்கிரையாகிய குடிசைகள் எண்ணிக்கை 288 என்றும், பகுதியாக தீக்கிரையாகிய குடிசைகள் 20 என்றும், இந்தத் தீ விபத்திற்குண்டான காரணங்கள், இயற்கையாகவும், சமையல் செய்யும்போது ஏற்பட்டுவிட்ட விபத்தினால் நடந்துள்ளது என்றும், தீ விபத்தினால் ஏற்பட்ட மொத்தப் பொருள் சேதம் 16 இலட்சத்து 9 ஆயிரம் என்றும், ஏற்பட்டுவிட்ட அந்தத் துயரச் சம்பவத்திலே 4 உயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றும், அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் ரூ. 2,96,000 என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இன்னும் நிவாரணம் சென்றடையவில்லை என்ற

கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து இந்தமாதிரியான இயற்கைச் சூழலின் காரணமாக விபத்து ஏற்பட்டாலும், பல்வேறு செயற்கைக் காரணங்களினால் விபத்து ஏற்பட்டாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து அந்தப் பகுதிகளுக்குச் சென்று உடனடியாக நிவாரணம் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாடு நன்கு அறிந்துகொண்டிருக்கிறது. அந்தவகையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் குடிசைகள் தீக்கிரையாகி அதனால் பாதிக்கப்பட்ட அந்தப் பெருமக்களுக்கு 2,96,000 ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து புலன் விசாரணையும் நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள், தீ விபத்திற்குண்டான காரணம் இரசாயனப் பொருள் கலந்த கலவையின் மூலம் ஏற்பட்டிருக்கின்றதா என்ற சந்தேகம் நிலவுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதையும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் நேரடியாகத் தொடர்புகொண்டு, அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னதன்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்தப் பகுதியில் எரிந்து சாம்பலான பொருட்களை ஆய்வகத்திற்கு அனுப்பி, அவை பரிசோதனைக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றன என்ற விவரத்தினையும் இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 43 வழக்குகள் விசாரணையில் உள்ளன. 11 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் காவல் துறையினரால் வழக்கின் தன்மைக்கேற்ப விசாரிக்கப்பட்டு, வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது என்ற தகவலை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடலூர் மாவட்டத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடிசைகளின் மொத்த எண்ணிக்கை: முழுமையாக எரிக்கப்பட்ட குடிசைகள் 312; பகுதியாக எரிந்துபோன குடிசைகள் 23. இங்கும் தீ விபத்துக்குண்டான காரணம், தற்செயலாக நிகழ்ந்திருக்கிறது என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். தீ விபத்தினால் ஏற்பட்ட பொருட்சேதமாக ரூ.4,50,000 என்றும், உயிர்ச் சேதம் 3 நபர்கள் என்றும், கால்நடைகள் சேதம் 4 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட





அந்தப் பெருமக்களுக்கு நிவாரணமாக 3,38,500 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. புலன் விசாரணையில் சதி ஏதும் இல்லை என்று தகவல் தரப்பட்டிருக்கிறது என்ற விவரத்தினை இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்பட்டுவிட்ட தீ விபத்தின் காரணமாக, 11 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, வழக்குகளும் புலன் விசாரணையில் இருக்கின்றன என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–30

வேலூர் மாவட்டத்தில், 14–5–2001 முதல் 23–8–2001 முடிய ஏற்பட்டுவிட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மொத்த குடிசைகளின் எண்ணிக்கை 589–ல், 588 குடிசைகள் முழுமையாகவும், ஒரு குடிசை, பகுதி என்ற நிலையிலும் தீ விபத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றன. தீ விபத்தினால் ஏற்பட்ட மொத்த சேதம் ஒரு கோடியே பத்து இலட்சத்து நாற்பத்து மூவாயிரம் ரூபாய் என்றும், உயிர்ச் சேதம் 3 நபர்கள்: கால்நடைகள் சேதம் 13 என்றும் தகவல் வந்திருக்கிறது. வழங்கப்பட்ட நிவாரணத்தினுடைய மொத்த மதிப்பு 579,500 ரூபாய்: இது பாதிக்கப்பட்ட பெருமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காவல் துறையினர் இதுகுறித்து புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், அங்கே தேர்தலுக்குப் பின்னால் சுயேச்சையாக, சுதந்திரமாக ஏற்பட்ட கருத்தின் முடிவினால், சிறுபான்மை மக்களுக்கு திட்டமிட்டு அந்தச் சேதங்கள் விளைவிக்கப்பட்டிருக்கின்றனவா என்ற வினா எழுந்த கருத்தின் அடிப்படையில், தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், C.B.C.I.D. விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையில், C.B.C.I.D. விசாரணையில் 2 வழக்குகளும், காவல் துறையின் புலன் விசாரணையில் 4 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 1–7–2001 முதல் 25–8–2001 முடிய எரிந்துபோன குடிசைகளின் மொத்த எண்ணிக்கை 147: அதில் முழுமையாக எரிந்துபோன குடிசைகளின் எண்ணிக்கை 59–ம், பகுதியாக எரிந்துபோன குடிசைகளின் எண்ணிக்கை 88 என்றும்

தெரிவித்துக்கொள்கிறேன். தீ விபத்தினால் ஏற்பட்ட மொத்த சேதம் 6,38,680 ரூபாய். உயிர்ச் சேதம் இல்லை, கால்நடை சேதம் இல்லை. பாதிக்கப்பட்ட அந்தப் பெருமக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 66,500 ரூபாய் என்பதையும் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தீ விபத்துக்குண்டான காரணம், சதியா, சதி இல்லையா என்பதனை அறிய 10 நபர்கள் கைது செய்யப்பட்டு, வழக்கு புலன் விசாரணையில் உள்ளது என்பதையும் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கைப்பற்றப்பட்ட சாணம், தஞ்சை மருத்துவக் கல்லூரி அறிவியல் ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்டதில், அதில் தீ விபத்து ஏற்படக்கூடிய பொருள் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிய வருகிறது. இதுவரை மொத்தம் 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட வழக்குகள் புலன் விசாரணையில் இருந்துகொண்டிருப்பதையும் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–35*

தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 1–5–2001 முதல் 25–8–2001 முடிய முழுமையாக எரிந்துவிட்ட குடிசைகள் 263. பகுதியாக எரிந்த நிலையில் இருக்கிற குடிசைகள் 115. தீ விபத்தினால் ஏற்பட்ட சேத விவரம், பொருள் சேதமாக ரூபாய் 54,39,000. உயிர்ச் சேதம் இல்லை: கால்நடைகளினுடைய சேதம் 16. பாதிக்கப்பட்ட பெருமக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூபாய் 3,16,500. தீ விபத்தின் தொடர்பாக 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை புலன் விசாரணையில் உள்ளன என்பதையும் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர், சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் தீ விபத்தின்போது ஏற்பட்ட சேத விவரங்களைச் சொன்னார்கள். அதனுடைய விவரங்கள் பெறப்பட்டு சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீ விபத்தில் சதி இருக்கிறதா, குறிப்பாக தேர்தலுக்குப் பின்னால் இந்த மாதிரியான தீ விபத்துகள் திட்டமிட்டு குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற பெருமக்களுக்கு இழைக்கப்படுகிற அநீதியாக இருக்கிறது: காவல் துறை தங்களுடைய கடமையைச் செவ்வனே செய்ய வேண்டுமென்ற கருத்தினை இங்கே சொன்னார்கள். அப்பாவி



மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் எந்தவித காரணமும் இன்றி கைது செய்யப்படுவதாகவும் கருத்துகளைச் சொன்னார்கள். புலன் விசாரணைக்கென்று அப்பாவி மக்களை விசாரிப்பதற்காக வேண்டுமானால் அவர்கள் அழைத்திருக்கலாம். ஆனால் இதுவரை அந்தமாதிரியான அப்பாவி மக்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் தீ வைத்த அந்தப் பாவிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவல் துறையினுடைய சட்டத்தின் மூலம் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, இந்தமாதிரியான பிரச்சினைகள் இனிவரும் காலங்களில் தொடர் நிகழ்ச்சியாக நடைபெறாமல் இருப்பதற்கு வேண்டிய செயல்களும், அதற்கு வருவாய்த் துறை மூலமாகவும், காவல் துறை மூலமாகவும் உரிய நடவடிக்கைகள் அரசின் மூலமாக எடுக்கப்படும் என்பதனை இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, நான் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

## 4. கவன ஈர்ப்பு

### கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூடப்படும் நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பினை திரு. சி. ஞானசேகரன் அவர்கள் மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுதொடர்பான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் மற்றும் 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, 19 தனியார் சர்க்கரை ஆலைகளும் இயங்கி வருகின்றன.

2000–2001 ஆம் ஆண்டு வரை கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் ரூ.815.17 கோடி திரண்ட நட்டம் அடைந்துள்ளன. அதில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.612.30 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. மைய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச விலைக்கு மேல் மாநில அரசு கூடுதல் கரும்பு விலை வழங்கிட பரிந்துரை செய்ததால் மட்டும் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆலைகளுக்கு ரூ.538.24 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான ஆலைகளின் நிதிநிலை பாதிக்கப் பட்டுள்ளதால் கடந்த அரவைப் பருவத்திற்கு கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை 31–7–2001 நிலவரப்படி ரூ.147.01 கோடி பாக்கி உள்ளது. இதனை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ரூ.125.88 கோடி நிதியுதவி கோரியுள்ளன.

அதிக சர்க்கரை உற்பத்தி காரணமாக உலகச் சந்தையில் சர்க்கரை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1000 அளவில்தான் உள்ளது. இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் நுகர்வுத் தேவையைவிட சர்க்கரை உற்பத்தி அபரிமிதமாக உள்ளதால் சுமார் ஓராண்டுத தேவைக்கு இணையான சர்க்கரை விற்பனையாகாமல் தேங்கியுள்ளது. 31–7–2001 அன்று தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் மட்டும் சுமார் 5.2 இலட்சம் டன் சர்க்கரை இருப்பில் தேங்கியுள்ளது. இதன் மதிப்பு சுமார் ரூ.640 கோடியாகும்.

சர்க்கரை விற்பனை விலை, கரும்பு விலை உயர்வுக்கு இணையாகவோ அல்லது சர்க்கரை உற்பத்திச் செலவிற்கு இணையாகவோ அதிகரிக்கவில்லை. 1993–94 ஆம் ஆண்டை அடிப்படையாக எடுத்துக்கொண்டால், கரும்பு விலை 55% உயர்ந்துள்ளது. ஆனால் வெளிச்சந்தை சர்க்கரை விலை 12% மட்டுமே உயர்ந்துள்ளது. சர்க்கரை மற்றும் கழிவுப்பாகு, கரும்புச்சக்கை ஆகியவற்றின் மூலம் கிடைத்த வருவாயைவிட சர்க்கரை உற்பத்திச் செலவு அதிகமாக இருந்ததால் சர்க்கரை ஆலைகளில் அதிக அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

மேலும் 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுடன் 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் தங்களின் பங்கு மூலதனம் மற்றும் காப்பு நிதியை விடவும் கூடுதலாகத் திரண்ட நட்டம் அடைந்ததால் அவற்றின் நிகர மதிப்பு எதிர்மறையாகவே உள்ளது. (Negative Net Worth) மேற்படி 15 சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் நிதி இழப்பிலிருந்து மீட்டு சீரமைப்பதற்காக தக்க புனரமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

மொத்தமுள்ள 19 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் தருமபுரி, வேலூர், செய்யாறு, கோமுகி (கள்ளக்குறிச்சி–2) ஆகிய ஆலைகளில்



முழு அரவைத் திறனுக்குத் தேவையான கரும்பு உள்ளதோடு நிதி நிலைமையும் ஓரளவு திருப்திகரமாக உள்ளது. இவ்வாலைகளின் சர்க்கரைக் கட்டுமானத்தையும் கரும்பின் மகசூலையும் அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் ஆலைகளின் நிதிநிலையை மேம்படுத்தவும் தக்க செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அமராவதி, சேலம், கள்ளக்குறிச்சி–1, செங்கல்வராயன், எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி, சுப்ரமணிய சிவா ஆகிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் அறிஞர் அண்ணா, பெரம்பலூர் பொதுத் துறை ஆலைகளிலும் முழு அரவைத் திறனுக்குத் தேவையான கரும்பு உள்ளது. ஆனாலும் அதிக இழப்பின் காரணமாக நிதி நிலைமை மோசமாக உள்ளது. எனவே இவ்வாலைகளின் நிதி நிலையை மேம்படுத்த, வரும் ஆண்டுகளில் அதிக கரும்புச் சத்துள்ள ரகங்களைப் பயிரிட்டு சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரிக்கவும், கரும்பு மகசூலை அதிகரிக்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாலைகளின் நிதி நிலையை சரிசெய்யவும் புனரமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்திற்காக சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து நிதி உதவியும் கோரப்பட்டுள்ளது.

மதுராந்தகம், நேஷனல், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, ஆம்பூர், திருப்பத்தூர், திருத்தணி ஆகிய கூட்டுறவு மற்றும் பொதுத் துறையில் உள்ள மதுரா சர்க்கரை ஆலைகளில் முழு அரவைத் திறனுக்குத் தேவையான கரும்பு இல்லாததோடு நிதி நிலையும் மிகவும் மோசமாக உள்ளது. இவ்வாலைகளுக்குத் தேவையான கரும்பு கிடைப்பதற்காக இந்த ஆலைகளுக்கு கரும்புப் பகுதிகளை ஒதுக்கீடு செய்யும் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. மேலும் அதிக சர்க்கரைச் சத்துள்ள இரகங்களைப் பயிரிட்டு சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரிக்கவும், கரும்பு மகசூலைப் பெருக்கி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் நிதி நிலையைச் சீரமைக்கவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் திருத்தணி, கள்ளக்குறிச்சி, மதுராந்தகம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர் .இராமசாமி, அமராவதி, சேலம் ஆகிய 6 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்தக் கடனை ஒரு தவணையில் செலுத்தி முடிக்க அரசே முன்வந்து ரூ.32.74 கோடி தள்ளுபடி பெற்று பாக்கித் தொகை ரூ.69.20 கோடியை நான்கு சம தவணைகளில் அரசு செலுத்திட பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

நலிவடைந்துள்ள 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பெருக்கத்திற்காகவும், ஆலை இயந்திரங்களை நவீனப்படுத்தவும் அதன்மூலமாக ஆலைகளைச் சீரமைக்கவும் மைய அரசின் சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து குறைந்த வட்டியில் கடன் கோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. சர்க்கரை ஆலைகளில் தேங்கியுள்ள சர்க்கரை இருப்பைக் குறைக்கவும், உடனடி பணத் தேவையை ஈடுகட்டவும் இதன்மூலம் வங்கிகளுக்குக் கட்டப்படும் வட்டியை கணிசமாகக் குறைக்கவும் சர்க்கரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் உலகச் சந்தையில் சர்க்கரை விலை குறைந்துள்ளதால் இதனைத் துரிதப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிதி நிலையை மேம்படுத்த, முழு அரவைத் திறனுக்கு கரும்பு உற்பத்தி செய்யவும், சர்க்கரைச் சத்து அதிகமாக உள்ள இரகங்களை நடவுசெய்து சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரித்து நிதி நிலையை மேம்படுத்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனால் தற்போது சுமார் 64.0 இலட்சம் டன்கள் அரவை செய்து 9.35% சராசரி கட்டுமானம் எடுக்கும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகள் இன்னும் மூன்று பருவத்திற்குள் முழு அரவைத் திறனான 76.0 இலட்சம் டன்கள் அரவை செய்து சராசரியாக 10.0% சர்க்கரைக் கட்டுமானம் பெற்று நிதி நிலையை மேம்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேலும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஒரு ஏக்கரில் பெறப்படும் கரும்பு மகசூலை உயர்த்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இதனால் தற்போது ஏக்கருக்கு சராசரி 30 டன்கள் என்ற அளவில் உள்ள மகசூல் 2004–2005 பருவத்தில் ஏக்கருக்கு 40 டன்கள் என்ற அளவில் உயர்த்தவும் 40 டன்களுக்கு மேல் இருக்கும் பகுதிகளில் அதனை 50 டன்களாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகளுக்கு தற்போது உள்ள கரும்பின் விலை அளவிலேயே ஏக்கருக்கு ரூ.7000 அளவிற்குக் கூடுதல் வருமானம் கிடைக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

தொழில் வளர்ச்சியைப் பெருக்க முனைந்துள்ள அரசு அனைத்து சர்க்கரை ஆலைகளையும் சீரமைத்து சிறப்பாக நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. எனவே





கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அனைத்தும் மூடப்படும் நிலையில் உள்ளன என்பதும் இதனால் பதட்ட நிலை உள்ளது என்பதும் உண்மைக்குப் புறம்பானது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதன்படி நம்முடைய தமிழகத்திலே 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையிலே இயங்கிக்கொண்டிருக்கும் 3 சர்க்கரை ஆலைகளும், ஆக 19 சர்க்கரை ஆலைகள் மிகவும் நலிவடைந்த நிலையில் இன்று இருந்துகொண்டிருக்கிற காரணத்தாலே அவை மூடப்படுமோ என்கிற ஓர் அச்சம் இப்போது மக்கள் மத்தியிலே வந்து சேர்ந்திருக்கிறது. குறிப்பாக 1995–96 ஆம் ஆண்டுகளிலே 203 கோடி ரூபாய் இழப்பிலேயிருந்த இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இன்றைய சூழ்நிலையில் 815 கோடி ரூபாய் அளவிற்கு அந்த இழப்பைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. இப்படி ஒரு மாபெரும் இழப்பு எதனால் ஏற்படுகிறது என்பதைப்பற்றி கருத்து சொல்ல வேண்டும் என்று சொன்னால், குறிப்பாக முதலில் சொல்ல வேண்டியது கூட்டுறவுத் துறை என்பது இப்போது கொள்ளையடிக்கிற ஒரு துறையாகவே மாறிக்கொண்டிருக்கிறது. அதில் இருக்கக்கூடிய ஓட்டை பெரிய அளவில் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே ஆட்சிக்கு, அதிகாரத்திற்கு வரக்கூடியவர்கள் அதை mis–management செய்து முறைகேடுகள் செய்து கொண்டிருக்கிற காரணத்தினாலே பெரிய அளவிலே...

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள். இது என்ன விளக்கவுரை மாதிரி இருக்கிறதே!

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ முடித்துவிட்டேன். இதோ முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுபவம் மிக்க உறுப்பினர் நீங்கள். நீங்களே இப்படிச் செய்தால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே நாம் இந்த நட்டத்தை எப்படியாவது சரிக் கட்ட வேண்டும். ஒன்று mis–management. ஒரு மோசமான திறன் பயன்பாடு. உயர் உற்பத்திச் செலவு, மூலதன தேக்கம், கடன் பிடியில் சிக்கியிருக்கிற காரணத்தினாலே வட்டி கட்டுவது, இப்படியே காரணம் சொல்லிக்கொண்டேயிருந்தால், என்றுதான் விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை கொடுப்பது? கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு இன்னும்

நிலுவைத் தொகை 147 கோடி ரூபாய் கொடுக்கப்படவில்லை. விவசாயிகள் டன்னுக்கு 1000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று பல ஆண்டுகாலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டும் என்று சொன்னால், இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நட்டத்திலே இயங்குவதை எப்படியாவது தடுத்து நிறுத்தும் வகையில் நீங்கள் முழுக்க, முழுக்க ஓர் ஆய்வினை நடத்த வேண்டும். அரசாங்கத்திடம் முதலில் எப்படியாவது 125 கோடி ரூபாய் மானியம் கேட்டிருக்கிறோம் என்று விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வெள்ளை அறிக்கையிலே சொல்கிறபோது இதுகுறித்து எந்தவிதமான கொள்கை முடிவும் அரசு எடுக்கவில்லை என்று அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் எப்படி இதை ஈடு செய்யவிருக்கிறார்கள்? இந்த சர்க்கரை, கிட்டத்தட்ட 717 கோடி ரூபாய்க்கான சர்க்கரை இன்னும் விற்கப்படாமலே தேங்கிக் கிடக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஆலைகளினுடைய அதிகாரிகளும் அரசும் சேர்ந்து இந்தச் சர்க்கரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து எப்படியாவது அந்தச் சர்க்கரையை விற்று, காசாக்கி உடனடியாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை அரசு கொடுக்குமா? நலிவடைந்த இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை மீண்டும் நீங்கள் சரிசெய்ய முனைவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், அவருக்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அப்படி இருந்தும் மத்தியிலே ஆண்டுகொண்டிருக்கிற சர்க்கார் கிட்டத்தட்ட 23 இலட்சம் டன்களை இறக்குமதி செய்திருக்கிறார்கள். இங்கு சர்க்கரையை நாம் மத்திய அரசின் அனுமதியோடு மாதத்திற்கு 15% கொடுத்து அவர்கள் அனுமதியைப் பெற்றுத்தான் உள்நாட்டில் விற்க முடியும். இவற்றையெல்லாம் மனதில் வைத்துத்தான் இதயதெய்வம் புரட்சித் தலைவி அரசு ஒரு புனரமைப்புத் திட்டத்தை வகுத்திருக்கிறது. அதன்படி இந்தச் சர்க்கரை ஆலைகள் எல்லாம் நிச்சயமாக இயங்கும். இந்த அரசு மக்களுக்காக வேண்டி பாடுபடுகிற அரசு. பொதுமக்களுக்காக வேண்டி பாடுபடுகிற அரசு, தன் மக்களுக்காக மட்டும் பயன்படுகிற அரசு அல்ல என்பதை இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு சரியான பதிலே இன்னும் வரவில்லை. அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லிவிட்டாலுங்கூட, வெள்ளை அறிக்கையிலேயே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள சொல்கிறபோது, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நலிவிற்கான அடிப்படைக் காரணங்களைக் களைவதற்கு வழி செய்யும் கொள்கைகள்பற்றி இதுகாறும் முடிவு செய்யப்படவில்லை. இந்த நிலையில் மோசமான நிதி நிலைமையைச் சந்தித்துக்கொண்டிருக்கும் அரசாலும் இந்த ஆலைகளுக்கு ஆதரவளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற இந்த விவர அறிக்கையிலோ, கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை 31-7-2001 நிலவரப்படி 147.01 கோடி ரூபாய் பாக்கியுள்ளது. விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ரூ.125.88 கோடி நிதி உதவி கோரியுள்ளது என்று அவர்கள் இந்த விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள. இதிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற வெள்ளை அறிக்கையிலே சொல்லப்பட்டது ஒன்று, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவற்றையெல்லாம் மானியக் கோரிக்கையிலே நீங்கள் விளக்கமாகப் பேசலாம். கவன ஈர்ப்பிலே கேள்வியாகத்தான் கேட்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** Difference should be sorted out.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி கேளுங்கள், கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது முடிவு எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் இப்போது 125 கோடி ரூபாய் கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு ஆலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்கள் ஏற்கெனவே அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை போகவில்லை. இவற்றையெல்லாம் நீங்கள் சரிசெய்ய வேண்டுமென்று சொன்னால், ரூ.125 கோடி போதாது, இன்னும்கூட அரசிடம் அதிகமாக மானியம் பெற்றாக வேண்டும். ஆகவே இப்போது இறக்குமதி

செய்யப்படுகிற 23 இலட்சம் டன் சர்க்கரையை இனிமேல் இறக்குமதி செய்யாமல் இருப்பதற்கு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தி, இந்த மன்றத்திலேகூட ஒரு தீர்மானம் போட்டு அனுப்பலாம். கூட்டுறவுத் துறை எல்லாம் இப்படி நசிந்து கொண்டிருக்கும்போது, தனியார் சர்க்கரை ஆலைகளும் -- mushrooming of sugar mills now-- வந்துகொண்டே இருக்கின்றன. இப்படியெல்லாம் பிரச்சினை உருவாகிக் கொண்டிருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது? நலிந்துபோன கூட்டுறவு ஆலைகள், இந்த மொலாசஸைக்கூட விற்கமாட்டேன் என்கிறார்கள். விற்பதற்குத் தயாராக ஆர்டர் கொடுத்தால்கூட அதை எடுக்கமாட்டேன் என்கிறார்கள்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்லுங்கள். மத்திய அரசு இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும், அதைப்பற்றி.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இறக்குமதி செய்யக்கூடாது. இந்திய நாட்டிலே சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருக்கின்றது. ஆனால் 23 இலட்சம் டன் மத்திய அரசு இறக்குமதி செய்திருக்கிறது. இனிமேல் மத்திய அரசு இறக்குமதி செய்ய வேண்டாம் என்று எங்களுடைய கோரிக்கையை மத்திய அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்பதைச் சபைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும் தன்னை இதிலே இணைத்துக்கொள்ள வேண்டுமென்று காலையிலே ஓர் அறிவிப்புக் கொடுத்தார்கள். ஒரு கேள்வி கேளுங்கள், மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையிலேயிருந்து கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய விவர அறிக்கையைப் படிக்கின்ற நேரத்திலே, நிர்வாகத்திற்கு இருக்கக்கூடிய பல்வேறு சங்கடங்களை, குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொன்னாலுங்கூட, என்னைப் பொறுத்தவரையிலே சர்க்கரை ஆலையோடு நெருங்கிய தொடர்பு இருக்கின்ற காரணத்தினாலே, இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புவது நிர்வாகத்தினுடைய சீர்கேடு என்பதை நான் மிகவும் கடுமையாகவே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், தமிழகத்திலே இருக்கக்கூடிய 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்,



பொதுத் துறையின் சார்பிலே இயங்குகின்ற மூன்று ஆலைகள், இவற்றிலே ஒருசில ஆலைகள் இலாபத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய, பாலக்கோட்டிலே இயங்கிவரும் தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை இலாபகரமாக இயங்கிகொண்டிருக்கிறது. அப்படி அந்த ஆலை இலாபகரமாக இயங்கிக் கொண்டிருந்தாலும்கூட, அதிலும் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளைக் களைந்தால், இன்னும் இலாபம் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. என்னவென்று சொன்னால், அங்கே இயந்திரங்கள் பழுது பார்க்கக்கூடிய நிலை, இயந்திரங்கள் மாற்றப்படுகின்ற நிலை என்று சொல்லி, நல்ல இயந்திரங்களை எல்லாம் மாற்றிவிட்டு, உள்நோக்கத்தோடு அதிலே சில தவறுகள் செய்வதற்காகக் காரியங்கள் எல்லாம் ஆண்டுக்கு ஒரு முறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதைப்போலவே, இந்த சாக்குப் பை விற்பனை. அதிலேகூட மோசமான நிலை. பிறகு, மொலாசஸ் விற்பனை. மொலாசஸ், கர்நாடகா மாநிலத்தில் ஏறக்குறைய 2,000 ரூபாய்க்குப் போகிறது. தமிழ்நாட்டிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இதுசம்பந்தமாக ஒரு சிறிய கேள்விதான் கேட்கலாம். அமைச்சர் அவ்வளவுதான் விளக்கம் சொல்ல முடியும்.

**திரு. ஜி.கே. மணி:** இப்படியெல்லாம் குறைகள் இருப்பது மாத்திரமல்ல, விவசாயிகளுடைய எல்லைப் பகுதியை சர்க்கரை ஆலைகளுடைய மாற்றி மாற்றிக் கொடுப்பது போன்ற தவறான அணுகு முறை இருக்கின்ற காரணத்தினாலே இந்த நிர்வாகச் சீர்கேட்டின் காரணத்தினாலேதான் சர்க்கரை ஆலைகள் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதையெல்லாம் மாற்றி, இலாபகரமாக இயங்குவதற்கு நல்ல ஆய்வு செய்து, அல்லது தனி அதிகாரிகளைக் கொண்டு எல்லா சர்க்கரை ஆலைகளையும் ஆய்வு செய்து, இலாபகரமாக இயக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, இது நிறைவேற்றப்படுமா என்பதை அமைச்சரின் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனையை ஏற்று, தவறு செய்திருந்தால் விசாரணை செய்து, மீண்டும் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் சர்க்கரை ஆலைகள் நல்லவிதமாக நடக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஆகஸ்ட் 27

## 5. ஒழுங்குப் பிரச்சினை

### பேரவை நடவடிக்கைகளை ஒளிபரப்புவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

***திரு. துரைமுருகன்:** Point of order, Sir. பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்சினையைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை அரசு சார்புடையது அல்ல. பேரவைத் தலைவராக வீற்றிருக்கின்ற தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட ஒன்றாகும். இந்த மன்றத்தில் நான் ஏற்கெனவே அதுகுறித்து ஒருமுறை பேசியிருக்கிறேன். இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளை இங்கே இருக்கின்ற பல தொலைக்காட்சிகள் கேமிராக்கள் மூலமாகப் படம் எடுக்கிறார்கள். அதை யார் தணிக்கை செய்கிறார்கள், யார் அதை எடிட் செய்கிறார்கள், யார் எடுக்கிறார்கள் என்று கேட்டேன். தமிழக அரசுக்குச் சொந்தமான Films Division–ல் படம் எடுக்கிறார்கள்; அவர்கள்தான் எடிட் செய்கிறார்கள்; மற்ற தொலைக்காட்சிகளுக்கு அதைத் தருகிறார்கள் என்று சொன்னார்கள். நான் அப்பொழுதே சொன்னேன். அரசாங்கத்தின் சார்பிலே எடுக்கின்ற தொலைக்காட்சி படத்திலே எதிர்க்கட்சியாகிய எங்களுக்கும் உரிய பங்கு இருக்குமா என்று கேட்டேன். இருக்கும் என்றுதான் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து நான் பார்த்து வருகிறேன், எங்களுடைய கட்சிக்கு உரிய பங்கு இல்லாமல் முக்கியமான பல செய்திகளை இருட்டடிப்பு செய்திருக்கிறார்கள். இவை ஒவ்வொன்றிற்கும் ஆதாரம் இருக்கிறது. 'Tape'—ஐப் பார்த்து எழுதியிருக்கிறேன். நான் அவற்றை விளக்கமாக இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆனால், நாங்கள் சொல்கிற முக்கியமான கருத்துகள் அந்தத் தொலைக்காட்சியிலே காட்டப்படுவதில்லை. மாறாக, ஆளுங்கட்சியில் அமைச்சர்கள் சொல்வது, அவர்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துக் காட்டுகிறார்கள். உதாரணத்திற்கு நேற்றைக்குக்கூட, நான் ஒன்று சொல்கிறேன். கிருஷ்ணா தண்ணீரைப் பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒழுங்குப் பிரச்சினையை நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்கள். ஆளுங்கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, எதிர்க்கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்கிறீர்கள், இதுபற்றி விளக்கமாக எந்தெந்தக் காட்சிகள் அப்படி வந்திருக்கின்றன என்பதை நீங்கள் எழுதி அனுப்புங்கள். அதுபற்றி நான் பரிசீலிக்கிறேன். அவைபற்றி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, எடுக்கிறேன்.



2001 ஆகஸ்ட் 27]

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான் சொல்கிறேன். தங்களுடைய கவனத்திற்கு நான் எழுதித் தருகிறேன். இரண்டாவது, எங்களை இருட்டடிப்பு செய்வது மட்டுமல்ல, அதிலே தவறுகளையும் செய்கிறார்கள்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒழுங்குப் பிரச்சினை என்று சொல்லிவிட்டீர்கள். அதுபற்றிய விளக்கங்களை நீங்கள் எழுதியனுப்புங்கள். அதுபற்றி நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். இதற்குப் பிறகும், இருட்டடிப்பு, கண்துடைப்பு, இவைகளெல்லாம் வேண்டாம். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். எந்தெந்தக் காட்சிகள் அப்படி வந்துள்ளன என்பதைப்பற்றி விளக்கமாக நீங்கள் எழுதி அனுப்புங்கள். அதைப்பற்றி நான் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய உறுதிமொழியை ஏற்று, நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியதைத் தங்களுக்கு எழுத்து மூலமாகத் தருகிறேன். நியாயம் வழங்குவீர்கள் என்ற உறுதியோடு இப்போது அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி.

## 6. அறிவிப்புகள்

### (அ) சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு உறுப்பினர்களாக மூன்று வருட காலத்திற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்று அப்பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன

*செனட் எண்ணிக்கை: சென்னை பல்கலைக்கழகம் 6, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 4, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 3, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் 2, பாரதியார் பல்கலைக்கழகம் 2, பாரதிதாசன் பல்கலைக்கழகம் 2, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 2, தமிழ்ப் பல்கலைக்கழகம் 2, பெரியார் பல்கலைக்கழகம் 2, அழகப்பா பல்கலைக்கழகம் 1. அண்ணா பல்கலைக்கழகம் சிண்டிகேட் 1.*

மேலும், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழும நிர்வாகக் குழு, மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு தலா மூன்று உறுப்பினர்களையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நிர்வாகக் குழுக்களுக்கு தலா ஓர் உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் வந்துள்ளன. தேந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும்.

தமிழ்நாடு அனாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள் நிர்வாகக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்களின் சட்ட அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை 3–9–2001 (திங்கட்கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் பேரவை முதன்மைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 4–9–2001 (செவ்வாய்க்கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 5–9–2001 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 7–9–2001 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10–00 மணிக்கும், பிற்பகல் 1–30 மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## (ஆ) மானியக் கோரிக்கைகள், 2001-2002, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:



"In pursuance of Clause 3 of Article 203 of the Constitution of India I, C. Rangarajan, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants for the financial year 2001–2002."

## 7. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்

### (அ) கோரிக்கை எண் 17 – கல்வி

### (ஆ) கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு

### (அ) கோரிக்கை எண் 17 – கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 17–கல்வி. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4978,84,52,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 135, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூரில் அரசு பெண்கள் கல்லூரி ஒன்றினை இவ்வாண்டு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 842, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மேலப்பாளையம் பகுதியில் பெண்களுக்கு தனியாக உயர்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் கல்லூரி அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1258, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரூர் தொகுதி, ஊத்தங்கரையில் அரசு தொழில் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம்பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மரனியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 592, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் ஒரு புதிய அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1384, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, லடனேந்தலில் அரசு கல்லூரி ஒன்று ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1269, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் அரசு பெண்கள் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1449, திரு. கேஎன். சேகரன்.

**திரு. கேஎன். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவெறும்பூர் பகுதியில் அரசு மகளிர் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம்பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1474, திரு. எஸ். நடராசன்.

**திரு. எஸ். நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள மாணவ, மாணவியர்களுக்காக ஒரு ஆண்கள் மற்றும் பெண்கள் தொழிற்கல்வி கல்லூரி அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1115, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எஞ்சினியரிங், மருத்துவக் கல்லூரிகள் அரசின் சார்பாக கூடுதலாக கோவையில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1142, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1247, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரை சின்னகண்மாய் பகுதியில் அரசினர் பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1536, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 804, திரு. இ. புகழேந்தி.



**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர், தந்தை பெரியார் அரசு கலைக் கல்லூரியில் எம்.ஏ. தமிழ் பாடப் பிரிவினைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1427, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் பி.எஸ்சி. (கம்ப்யூட்டர் சயன்ஸ்) எம்.எஸ்சி. (இன்பர்மேஷன் டெக்னாலஜி) மற்றும் எம்.காம். பாடத் திட்டங்களைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1617, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மைய அரசின் மாதிரிப் பல்கலைக்கழகம் ஒன்றைத் தமிழகத்தில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 467, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், சின்னிய கவுண்டம் பாளையத்தில் உள்ள தொடக்கப்

பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1290*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பூவாணம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *85*, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, வீரமாங்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *563*, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் உள்ள புலியூர் காட்டுச் சாலை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *654*, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் நகரத்திலுள்ள காந்தி நினைவு அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *720*, திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேதாரண்யத்தில் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *439*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சிக்குட்பட்ட அம்பலவானபுரம், பிள்ளையார் குடியிருப்பு, மதசனேரி, செம்பிக்குளம் ஆகிய கிராமங்களில் பகுதி நேர நூலகம் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1465, திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகர்கோவில் தொகுதி, சரக்கல்விளை அரசு தொடக்கப் பள்ளிக்குப் போதுமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1232, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலை, நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1635, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் அரசு மேல்நிலைப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்குப் போதுமான வகுப்பறைகள் இல்லாததால் கூடுதல் வகுப்பு அறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 909, திருமதி எஸ். மகேஸ்வரி.



**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை ராஜ வீதியில் உள்ள அரசினர் ஆசிரியர் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெறுகின்ற மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 814, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட தொடக்க, நடுநிலை, மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளின் கட்டடங்களைப் பராமரித்து போதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 226, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 363, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 785, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 962, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1196, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1500, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 714, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 858, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1110, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம் ஜி. அரியூர் ஊராட்சிக்கு உட்பட்ட அம்மன்கொல்லை மேடு–புதூர் கிராமத்தில் புதிய ஆரம்பப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 46, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், சென்றாயன்பாளையம் கிரீன்வேல் நத்தத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 500, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் தொகுதி, வடபருத்தியூர் ஊராட்சி, தைளபாளையத்தில் புதியதாக தொடக்கப் பள்ளி ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 615, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மாம்பாக்கம், ஆண்டிக்குப்பம், நல்லான்பிள்ளை பெற்றான் கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 530, திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வில்லிவாக்கம் தொகுதி, அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்கப்பட



வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 51 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51, தமிழ் வளர்ச்சி—பண்பாடு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.40,77,16,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 132, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூரில் இயங்கி வரும் அருங்காட்சியகத்தை மேலும் பெரிய அளவில் விரிவுபடுத்தி அங்கு ஒலி–ஒளி காட்சிகளை தினமும் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1179, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டிற்காக மையங்கள் அமைக்க வேண்டிதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1229, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் தமிழ் மொழியை பயிற்று மொழியாக, நீதி மொழியாக, நிர்வாக மொழியாக அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 805, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூரில் உள்ள மாவட்ட இசைப் பள்ளியினை விரிவுபடுத்தி, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1438, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலையிலுள்ள இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1309, திரு. எஸ்வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 336, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 388, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 945, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண 1497, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 857, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1109, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 22, திரு. சு. சிவராஜ்.



**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்திலுள்ள அரசு மற்றும் தனியார் துறைகளில் நிர்வாகத்தில் தமிழை முழுமையாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 49, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிற மொழியில் உள்ள அரிய நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 645, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 713, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1087, திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆரம்பக் கல்வியிலும், உயர்நீதிமன்றத்திலும் தமிழ் மொழியை அமல்படுத்த அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,77,16,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 11–55

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சி–பண்பாடு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 221 முதல் 411 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய மானியக் கோரிக்கை எண் 17 மீதும், தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கை எண் 51 மீதும் கலந்துகொண்டு பேசுகிற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை"

என்று வள்ளுவன் சுட்டிக்காட்டியிருக்கிறார். மனிதனாகப் பிறந்தவருடைய பெரும் சொத்தாகத் திகழ்கிற கல்வி, சுதந்திரம் பெற்று 52 ஆண்டுகளில் இன்னும் நாம் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கினை அடையவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆண்டுதோறும் 10 இலட்சம் பேர் பள்ளி சேரும் வயதை அடைகிறார்கள். அவர்களில் வறுமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் பலர் இடையிலேயே படிப்பை விட்டு விலகி விடுகிறார்கள். 6 கோடி மக்களில் 1.8 கோடி பேர் இன்னும் எழுத்தறிவு இல்லாதவர்களாக நம்முடைய நாட்டிலே இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அப்படி எழுத்தறிவு இல்லாத மக்களை எழுத்தறிவு பெற வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தக் கல்வி மானியத்தில் பல்வேறு வசதிகள், பல்வேறு கொள்கைக் குறிப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 2001–2002–ல் ஒட்டுமொத்த ஒதுக்கீடாக கல்விக்காக 4,978.84 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே, ஒரு குறிப்பிட்ட அளவு என்று சொன்னால்கூட, வளர்ந்து வருகிற சமுதாயத்தில் அனைவருக்கும் கல்வி அளித்தாக வேண்டும் என்ற அரசின் கொள்கை அடிப்படையில் இந்த நிதி போதுமானதாக இருக்குமா என்றால், இருக்காது.

ஏற்கெனவே அளிக்கப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக தலைவர் கலைஞர் அவர்கள் 5,472 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 1995–96–ல் 2,733 கோடி ரூபாயாக இருந்த கல்வி ஒதுக்கீடு, 2000–2001–ல் 4,949 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பதைப் பார்த்தால், சராசரி ஆண்டு ஒன்றுக்கு 543 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது,

கல்விக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகை, இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே கடந்த ஆட்சிக் காலத்தில் 5,472 கோடி ரூபாய் என்பது அதே விகிதாச்சாரத்தின் அடிப்படையிலே சென்ற ஆண்டைவிட 521 கோடி ரூபாய் அதிகப்படியாக ஒதுக்கப்பட்டது ஆகும். ஆனால் இப்போது தாங்கள் 4,978.84 கோடிதான் இந்த ஆட்சியிலே ஒதுக்கியிருக்கிறீர்கள். இது எந்த அளவுக்கு நிறைவு செய்யவிருக்கிறது என்பதனை நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும்.

நண்பகல் 12–00

இந்தக் கல்வி மானியத்திலே பல்வேறு பாராட்டத்தக்க அம்சங்களும் இருக்கின்றன என்பதை நான் முதலிலேயே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமப்புற மாணவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் 15 விழுக்காடுகள் தொழிற்கல்வி பிரிவில் 1997–98–லே இடம் ஒதுக்கீடு தந்ததனுடைய விளைவாக 3 ஆண்டுகளில் 3,598 பேர் பயன் பெற்றார்கள். இந்த ஆட்சியிலே அந்த விழுக்காட்டை 25 சதவிதிமாக அதிகரித்திருப்பது பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியது என்பதனை நான் முதலிலேயே தெரியப்படுத்திக்கொள்கிறேன். ஆனால் அப்படி அதிகப்படுத்தியிருக்கிற விழுக்காடுகளில், ஒன்றியப் பகுதிகளிலே இருக்கிற, பேரூராட்சிகளிலே இருக்கிற பள்ளிகளை நாம் சேர்த்துக் கொள்வதில்லை. அப்பகுதி மக்கள் அதைப் பெரிதும் விரும்புகின்றார்கள். அதனால் பல கிராம மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று அப்பகுதிகளிலே வாழுகிற மக்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இந்த அரசு அதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஆதிதிராவிடப் பெண்களுக்கு சைக்கிள் வழங்குவது மிகவும் பாராட்டுக்குரியது. சற்றொப்ப 80,000 பெண்கள் அதனால் பயன்பெற .இருககிறார்கள் என்று சுட்டிக்காட்டியிருப்பது பாராட்டுதலுக்குரியதாகும்.

கல்வியை வளர்ப்பதற்காக 300–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ள சிற்றூர்களில் தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நடந்தால் பாராட்டுக்குரியது.

2001–2002 ஆம் ஆண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது பாராட்டுக்குரியது.



நடப்பாண்டில் 250 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் அளிக்கிறபோது சுட்டிக்காட்டினார்கள். 1991–லேயிருந்து 1996 வரையிலும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இரு:ந்தபோது உருவாக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள் 531 ஆகும். 1996 ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 4–1/2 ஆண்டு காலத்தில் உருவாக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள் 1,039. அதைப்போலவே, 1991–லேயிருந்து 1996 ஆம் ஆண்டு வரையில் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டவை. அ.தி.மு.க. ஆட்சியில் 196 நடுநிலைப் பள்ளிகள்தான் தரம் உயர்த்தப்பட்டன. ஆனால், 1996–லிருந்து 2000 வரை 4–1/2 ஆண்டு காலத்தில், தி.மு.க. ஆட்சியில் 512 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. அதுபோல, 1991–லேயிருந்து 1996 ஆம் ஆண்டு வரை நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டவை 134 தான். ஆனால் கடந்த 4–1/2 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் 380 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

அதைப்போலவே, உயர்நிலைப் பள்ளிகள் 1991–லேயிருந்து 1996 வரையில் 80 பள்ளிகள்தான் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய 4–1/2 ஆண்டு காலத்தில் 283 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. நான் இதனைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், அவற்றிற்கு ஏற்றாற்போல் நான் முதலிலே சுட்டிக்காட்டியதைப்போல ஆண்டுக்கு 10 இலட்சம் மாணவர்கள் புதிதாகப் பள்ளியிலே சேருகிற வாய்ப்பினைப் பெறுகிறார்கள். இப்போது நம்முடைய மக்கள் ஓரளவுக்கு விழிப்புணர்வைப் பெற்று தங்களுடைய பிள்ளைகளைப் படித்தவர்களாக ஆக்க வேண்டும் என்கிற நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். கிராமத்திலே வாழுகிற ஏழையெளிய மக்கள்கூட, கூலி வேலை செய்கிற மக்கள்கூட, தான் படிக்கவில்லை, தங்களுடைய பிள்ளைகளாவது படிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் கடந்த கால ஆட்சியிலே அந்த அளவுக்குப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன. புதிதாக 1,039 ஆரம்பப் பள்ளிகள் உருவாக்கப்பட்டன. இப்படி உருவாக்கப்படுகின்ற பள்ளிகளில் சேர்க்கப்படுகிற மாணவர்களுக்கு அரசு அளிக்கிற நிதி ஆதாரங்களைப் பார்க்கிறபோது நாம் ஒதுக்கியிருக்கிற இந்தத் தொகை போதுமானதாக இருக்குமா என்கிற ஐயத்தினை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர்கள் காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என அறிவித்துள்ளீர்கள். இது பாராட்டுக்குரியது. இது மிகமிக அவசியமானதும்கூட ஆகும். 1991–லேயிருந்து 1996 வரை இடைநிலை ஆசிரியர்களுடைய நியமனம் 8,450. ஆனால் 1996–லேயிருந்து 2000 வரை 4–1/2 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது 41,887 ஆக உயர்ந்தது. அதைப்போலவே, 1991 முதல் 1996 வரை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுடைய நியமனம் 843 ஆக இருந்தது. அது 1996 முதல் 2000 வரை 4–1/2 ஆண்டுகாலத்தில் 2,916 ஆக உயர்ந்து, ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–05

அதைப்போலவே, 1991–லிருந்து 1996 வரை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் 836. 1996–லிருந்து 2000 வரை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் 4,046. 1991–லிருந்து 1996 வரை சிறப்பு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. ஆனால் 1996–2000 வரை 4–1/2 ஆண்டுகாலத்தில் 2,270 சிறப்பு ஆசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. புதியதாக சிறப்பாசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அஃதன்றி, மாவட்ட ஆட்சியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் 238 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போதுகூட, பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதிலே வயது வரம்பை நாம் தளர்த்தியிருக்கிறோம். ஆனால் அவர்களுக்கெல்லாம் இப்போது தேர்வுகள் வைத்து, அதிலிருந்து அவர்களைத் தேர்ந்தெடுக்கப் போவதாக அரசு அறிவித்திருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்களிலே பெரும்பாலானவர்கள் 15, 17 ஆண்டுகாலம் பட்டதாரி ஆசிரியராக இருந்து எங்கோ சிறு சிறு பள்ளிகளிலே தனியார் பள்ளிகளிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அவர்களை எல்லாம் நீங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே இருக்கிற சீனியாரிட்டி அடிப்படையிலே எடுத்துக்கொண்டால்தான் அவர்களுடைய வயது வரம்பிற்கு, கல்வியிலே அவர்கள் பெற்றிருக்கிற தகுதிக்கு தகுந்தபடி பள்ளிகளுக்குச் சென்று அவர்கள் கல்வி பயிற்றுவிக்க முடியும். அந்தவகையிலே, நியமனத்தை தேர்வு முறையாக்கியிருப்பதை நீங்கள் எப்படியாவது மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்களுடைய திறமைகளைச் சோதிக்க வேண்டும் என்றால், அவர்களுக்கு இருக்கிற முன் அனுபவங்களை அந்த சீனியாரிட்டியோடு மீண்டும் எடுத்துக்கொண்டு அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.



பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, இப்போது பெற்றோர்–ஆசிரியர் கழகம் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பள்ளியினுடைய பொது வளர்ச்சிகளுக்கு பெற்றோர்–ஆசிரியர் கழகம் பெரிதும் பயன்படுகிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏதாவது குறைகள் இருக்கலாம். அது எல்லா ஆட்சியிலும் இருக்கும். எல்லா இடத்திலும் இருக்கும். ஆனால் பொதுவாகப் பார்க்கும்போது, பெற்றோர்– ஆசிரியர் கழகம் மிகப் பெரிய உதவியாக பெற்றோருக்கும் பள்ளிக்கும் பாலமாக இருந்து, அந்தப் பள்ளியினுடைய வளர்ச்சிக்குப் பயன்படுகிறது என்பதிலே இருவேறுபட்ட கருத்துகள் இருப்பதற்கு நியாயம் இல்லை. அதன் விளைவாகத்தான், பொதுமக்களிடம் அவர்கள் வசூல் செய்து, அசையும், அசையாச் சொத்துகளை எல்லாம் வசூல் செய்து, அந்தப் பள்ளியினுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அதிகாரம் அளிக்கப்படுகிறது என்று இந்த மானியக் கோரிக்கையிலே, கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சில பள்ளிகளில், பள்ளிப் பிள்ளைகள் சேர்க்கை நேரத்திலேதான் அந்த நிதியினை வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்கிறபோதுகூட, மாணவர்கள் பெற்றிருக்கிற மதிப்பெண்ணின் அடிப்படையிலே மட்டும் அதைச் செய்கிறார்களா என்று சொன்னால், எவ்வளவு உயரிய மதிப்பெண் பெற்றவர்களாக இருந்தாலும் ஒருசில பள்ளிகளிலே சேர்க்கிறபோது அவர்கள் நன்கொடை கொடுத்தால்தான் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் என்கிற நிலை இருக்கிறது. ஐந்தாம் வகுப்பு வரையிலே ஓர் ஏழைப் பெண், தன்னுடைய பிள்ளையை அரசு நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளிலே படிக்க வைத்து, ஆறாம் வகுப்பிலே கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்து, கொஞ்சம் தரமுள்ள பள்ளியிலே சேர்க்க வேண்டும் என்று சொன்னால், அவர்கள் எவ்வளவு அறிவார்ந்த பிள்ளைகளாக இருந்தாலும் அவர்களிடமிருந்து நிதி வசூலித்தாக வேண்டும் என்ற முறையில் பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தினுடைய துணையோடு இந்தக் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெற்றோர்–ஆசிரியர் சங்கம் வசூல் செய்வதிலேகூட நான் தவறு என்று சொல்லவில்லை. அதை எவ்வளவு என்று அரசு நிர்ணயம் செய்து கொடுத்துவிட்டால் அது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை இந்த அரசு யோசிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே பெற்றோர்–ஆசிரியர் சங்கங்கள், பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளிலேகூட மிகப்பெரிய பங்கினை வகிக்கிறார்கள் என்பதிலே இருவேறுபட்ட கருத்துக்கு இடமில்லை. வசூல் செய்கிற அந்த

நிலையைக்கூட, ஆதிதிராவிட நலத் துறைப் பள்ளிகளிலே அடியோடு வசூல் செய்யக்கூடாது என்ற ஓர் ஆணையை இந்த அரசு பிறப்பிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பள்ளிச் சீரமைப்பு மாநாடு, அதிலேயும் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் பெரும் பங்கு வகிக்கிறது. அப்படி பள்ளிச் சீரமைப்பு மாநாடு ஆண்டுதோறும் நடைபெறுகிறபோது. எந்த அரசில் நடைபெற்றாலும். அந்த ஆசிரியர்கள். ஒரு குறிப்பிட்ட இடங்களிலே ஈகை மனம் கொண்டவர்கள், பெரிய கல்வி நிறுவனங்களை உருவாக்கிட வேண்டும் என்ற எண்ணத்தை வைத்திருக்கின்றவர்கள், பொருளாதார வசதி படைத்தவர்கள் சிலபேர் நிரம்ப வாரி வழங்குகிறார்கள். ஆனால் சில இடங்களில் அந்த ஆசிரியர் பெருமக்கள் மாணவர்களையும் வைத்துக் கொண்டு கடை கடையாகப் போய்க் கேட்கின்ற நிலையும் இரு:க்கிறதா என்றால் இருக்கிறது. ஆனால் ஈகை மனம் கொண்டவர்கள் இருக்கிற காரணத்தினால், பள்ளிச் சீரமைப்பு மாநாட்டினுடைய விளைவாக 293.58 கோடி ரூபாய்க்கு அசையும், அசையாச் சொத்துக்கள் வந்திருப்பது இந்த நாட்டிலே கல்வி கற்பதற்குப் பலபேர் உதவ முன்வந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் அடையாளமாக இருக்கும் என்றுகூட நான் கருதுகிறேன்.

அடுத்து, பெற்றோர்–ஆசிரியர் சங்கத்திற்கு ஒரு மிகப் பெரிய உரிமையினை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நீங்கள் வழங்கியிருக்கிற்ர்கள். அதாவது, எளிதில் செல்ல முடியாத மலைப் பகுதியில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் தொடர்ந்து நீண்ட நாட்கள் பணியாற்றாமல் இருக்கிற காரணத்தினால், பெற்றோர்–ஆசிரியர் கழகமே அந்த ஆசிரியர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று சொல்லி, அப்படி நியமிக்கிறபோது, அந்தப் பகுதியிலே தகுதி வாய்ந்த ஆசிரியர் பெருமக்கள் கிடைக்காத பட்சத்தில் அந்தப் பகுதியில் உள்ள பட்டதாரி அல்லது முதுநிலைப் பட்டதாரிகளை பெற்றோர்–ஆசிரியர் கழகமே நியமித்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்தத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் என்பது வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கேட்டு, இல்லை என்று பெறப்பட்ட பிறகா அல்லது பெற்றோர்–ஆசிரியர் கழகமே இவர்களுக்கு தகுதி இல்லை, விடுமுறை எடுத்துக்கொள்கிறார்கள், வருவதில்லை என்று ஒதுக்கிவிடும்படியா? அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிற பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக எடுக்கப்பட வேண்டுமா அல்லது அவர்களாகவே கிராமத்திலே நியமித்துக்கொள்ளலாமா? அப்படி நியமிக்கப்படுகிற அந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், ஒதுக்கீடுகள்



அடிப்படையிலே நியமிக்கப்பட வேண்டுமா அல்லது அவர்களாகவே எப்படி வேண்டுமானாலும் நியமித்துக்கொள்ளலாமா என்பது போன்ற கேள்விகளுக்கு விளக்கங்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் தன்னுடைய உரையிலே அளிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வேண்டி. விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

அதைப்போல, விளையாட்டு. 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிலுகிற மாணவர்களிடம் குறிப்பிட்ட விளையாட்டுகளிலே காணப்படும் திறமைகளைப்பற்றி விரிவாக சோதனை மூலம் அறியப்படும் என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஏனென்றால், இந்த நிதிநிலை அறிக்கையிலே விளையாட்டிற்கு மிக முக்கியத்துவத்தைக் கொடுத்து, உலக அளவிலே, இந்திய அளவிலே வருகிறார்களோ, இல்லையோ (மணியடிக்கப்பெற்றது) நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கவில்லை. இப்போதுதான் தொடங்கியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், 15 மணித் துளிகள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். மொத்தம் 18 பேர்கள் பேச வேண்டும். ஆகவே இன்னும் 2 மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடம் உள்ள குறிப்பிட்ட அந்த விளையாட்டுத் திறமையை ஆய்வு செய்வது என்பது பாராட்டுக்குரியதாகும். ஆனால் ஒன்றை நாம் யோசிக்க வேண்டும். இன்றைக்கு இருக்கிற பள்ளிகளில் எத்தனை நடுநிலைப் பள்ளிகளில் விளையாட்டு மைதானம் இருக்கிறது; எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் விளையாடுவதற்கு மைதானம் இருக்கிறது; எத்தனை மேல்நிலைப் பள்ளிகளில் விளையாடுவதற்கு மைதானம் இருக்கிறது என்பதிலே 6ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறமையைக் கண்டறிவதற்கு முதலில் அதற்குரிய மைதானத்தை உருவாக்க வேண்டும். ஆகவே அரசு ஒட்டுமொத்தமாக கணக்கெடுத்து தமிழகத்திலே எந்தெந்த பள்ளிகளில் விளையாட்டு மைதானம் இருக்கிறது, எந்தெந்த பள்ளிகளில் இல்லை என்பதைப் பார்த்து, இல்லாத பள்ளிகளில் விளையாட்டு மைதானத்தை உருவாக்கிக் கொடுத்தால்தான், அந்த மாணவர்களுடைய விளையாட்டுத் திறமையை நாம் ஆய்வு செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

N.S.S. என்பது பள்ளிகளிலே மிக மிக முக்கியமான பங்கு வகிக்கக்கூடியதும், இந்த நாட்டினுடைய நடப்புக்குத் தேவைப்படுவது என்பதிலேயும் இரு வேறுபட்ட கருத்திற்கு இடமில்லை. இன்றைக்கிருக்கிற 2,316 மேல்நிலைப் பள்ளிகளில் சிலவற்றில்தான் மாணவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். மொத்தம் உள்ள 2,316 பள்ளிகளில் 1,170 பள்ளிகளில்தான் 58,000 மாணவர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும், அதற்காக மைய, மாநில அரசுகள் 7:5 என்ற வீதத்திலே பணம் ஒதுக்கியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இது மிக அவசியமான ஒன்று என்பதற்குக் காரணம் இந்த மாணவர்கள் கிராமப் பகுதிகளிலே ஆண்டுக்கு ஒருமுறை 10 நாட்கள் எங்கெங்கே போய் முகாமிடுகிறார்கள், அதனால் அந்தக் கிராமத்தில் இருக்கிற மக்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது? அந்தப் பயன் எப்படிப்பட்ட பயன் என்பதையும் நாம் சதவிகிதக் கணக்கிலே பார்ப்பதைவிட அங்கே செல்கிற இந்த மாணவர்கள் இந்த நாட்டினுடைய நடப்பைத் தெரிந்துகொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். நாடு சுதந்திரம் பெற்று 52 ஆண்டுகளுக்குப் பின்னாலும் இன்னும் கிராமப்புறப் பகுதிகளில் வாழ்கிற மக்கள் சில அடிப்படைத் தேவைகளைப் பெறாமல் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமைகிற காரணத்தால், அது எதிர்காலத்திலே அவர்களுடைய வாழ்விற்கு பயன்படக்கூடும் என்கிற காரணத்தால் இந்தத் திட்டத்தினை இன்னும் ஊக்கப்படுத்த வேண்டும், உயர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சாரணர் இயக்கம். 4,098 பள்ளிகளிலே இன்றைக்கு கிட்டத்தட்ட 84,300 மாணவர்களும் 49,108 மாணவிகளும் பங்கேற்றிருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறீர்கள். மிக மிக முக்கிய காலகட்டங்களிலே, போக்குவரத்தை சரி செய்வதற்காகவும் பல ஒழுங்கீனங்களை சரிப்படுத்துவதற்காகவும் இவர்கள் பயன்படுத்தப்படுகிற காரணத்தால் இந்த சாரணர் இயக்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும். அதற்காக இந்த அரசு 5 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த 5 இலட்சம் எதற்கும் பயன்படாது. இதனை உயர்த்தித் தர இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளர முறையைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இது பாராட்டுக்குரியது. சமீப காலமாக, ஆசிரியர் பதவி இடங்களுக்கு ஏற்பட்டிருக்கிற மரியாதை



காரணமாக பல்வேறு தனியார் நிறுவனங்கள் அதை இன்றைக்கு வியாபாரப் பொருளாக மாற்றி இருக்கின்றன. இந்த ஒற்றைச் சாளர முறை அதைத் தவிர்க்கப் பயன்படும் என்கிற காரணத்தினால் அதை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

பிற்பகல் 12–15

அதேபோல, பொறியியல் கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் அவை இன்றைக்கு 222 கல்லூரிகளாக உயர்ந்திருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு மணித்துளியில் எனது உரையை முடித்துக்கொள்கிறேன். ஒரு சீரான, உயர்தரமான பொறியியல் கல்வி வழங்குவதைக் கருத்தில்கொண்டு, ஒரே பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவர அரசு முடிவு செய்திருப்பதாக சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். அப்படிக் கொண்டுவருகிறபோது – அரசு பொறியியல் கல்லூரிகள் 7 தான் இருக்கின்றன; அரசு உதவி பெறும் கல்லூரிகள் 3 தான் இருக்கின்றன. எஞ்சியிருக்கின்ற 212 பொறியியல் கல்லூரிகள் அனைத்தும் தனியார் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் ஆகும். அவற்றை ஒரே பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவருகிறபோது, அதனுடைய நிர்வாகம் சரியாக இருக்குமா என்பதையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு என்று எடுத்துக் கொண்டால், 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற நோக்கத்தோடு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 13.5.1996–ல் அதற்கு ஒரு தனி அமைச்சகத்தையே உருவாக்கி அது இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டுவருகிறது. அன்றைக்கு சென்னை, மதுரை, கோவை ஆகிய 3 மாவட்டங்களில் மட்டுமே 1996 வரையிலே இசைப் பள்ளிகள் இருந்தன. பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் 4–1/2 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 17 இடங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. அதேபோல, 1999 பிப்ரவரியில் உலகத் தமிழ் இணைய மாநாடு கழக அரசால் நடத்தப்பட்டு, கணினியின் விசைப் பலகை ஒரே சீராக்கப்பட்டதுடன் உலகத் தமிழ் இணைய பல்கலைக்கழகம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதுபோல, இந்திய ஆட்சிப் பணித் தேர்வை தமிழில் எழுதினால் நம்முடைய மாணவர்கள் பெருமளவு அதிலே தேர்வு பெறுகிறார்கள். ஆனால் கடந்த காலத்தில் அதற்கான நூல்கள் எதுவுமே வெளியிடப்படவில்லை. கழக ஆட்சியிலே முதல் முயற்சியாக தமிழ்

மொழி வரலாறு நூல் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்டி, நான் இந்த அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, 5 நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

***டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அன்னையே, பொன்மனச் செம்மலின் பொற்கால ஆட்சியை மறுபதிப்புச் செய்துகொண்டிருக்கும் மங்கையர்த் திலகமே, உலக அரசியலின் உன்னத வழிகாட்டியே, கழகத் தொண்டர்களின் காப்பீட்டுக் கழகமே, தமிழக மக்களின் சிறப்புமிக்க அன்னையே, தாங்கள் இருக்கும் திசை நோக்கி தங்களின் தாளை தவமிருந்து வணங்குகிறேன்.

எளிய குடும்பத்திலே பிறந்த சாதாரண கிளைச் செயலாளரின் மனைவியும், கழக உறுப்பினருமான, சாதாரண அரசுக் கல்லூரிப் பேராசிரியையுமான என்னை கழக வேட்பாளராக அறிவித்து, தொகுதிக்கு வந்திருந்து, வாக்குகள் சேகரித்து தமிழகத்திலேயே வாக்கு வேறுபாட்டில் என்னை இரண்டாவதாக வெற்றிபெறச் செய்து, உயர்ந்த மரபும், மாண்பும் மிக்க இந்த மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக அமரச் செய்து அழகு பார்க்கும் மாண்புமிகு அன்னை அவர்களின் பொற்பாதங்களிலே கோடானு கோடி நன்றியினைச் சமர்ப்பித்துக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

அன்னையைத் தமிழக முதல்வராக்க, அன்னைக்காக வாக்களித்த குளத்தூர் தொகுதி மக்கள், அன்னைக்கு என்றும் விசுவாசம் மிக்கவர்கள் என்பதைத் தமிழகத்திலேயே அதிகமான வாக்குகளை அள்ளித்தந்து மெய்ப்பித்த வாக்காளப் பெருமக்களுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கேடில் விழுச்செல்வமாம்' கல்விக்கு முதன்மை கொடுத்து கல்வி மானியக் கோரிக்கையை முதன்மைப்படுத்தியதற்காகவும், இந்தக் கல்வி



மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை நல்கியதற்காகவும், அம்மா அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி மானியக் கோரிக்கையிலே வைக்கப்பட்டிருக்கும் அருமையான திட்டங்கள் அனைத்தையும் விளக்கிப் பேசுவதற்கு நான் தயாராக இருந்தாலும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மணியை அடித்து விடுவார்கள் என்பதால் சிலவற்றை மட்டும் இங்கு தெளிவுபடுத்த விழைகின்றேன்.

*பிற்பகல் 12–20*

கல்வி நிறுவனங்களின் தரத்தை உயர்த்த ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துதல், பொறியியல் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர்கள் பயில 15 விழுக்காட்டிலிருந்து, 25 விழுக்காடாக இட ஒதுக்கீடு செய்திருப்பது ஆகியவை மாண்புமிகு நம் அன்னை அவர்கள் கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாட்டின்மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அரசுக் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு மையங்கள் தொடங்குதல் என்ற திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பாகும். அரசுப் பணிகளிலே சேருவதற்கான பயிற்சி மையம், சென்னை, மதுரை ஆகிய நகரங்களில் தொடங்குவதற்கான திட்டம், கற்றவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகும். தாழ்த்தப்பட்ட பகுதியைச் சார்ந்த மாணவியருக்கு பட்ட மேற்படிப்பு பயிலுவதற்கு இலவசக் கல்வி என்பது, இம்மாணவியருக்குக் கிடைத்த தேவாமிர்தமாகும்.

கல்லூரி, பள்ளிக் கல்வி ஆசிரியர்கள் கலந்தாய்வு முறையில் பணியிட மாற்றம் செய்திருப்பது, இவர்கள் மேலும் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும், மகிழ்வோடும் பணியாற்ற வழிவகுக்கும். மாண்புமிகு நம் அன்னை அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் திட்டத்தை, ஆசிரியர் சமுதாயம் மட்டுமல்ல; உலகிலுள்ள ஆன்றோரும், சான்றோரும், பண்பாளர்களும், படித்தவர்களும், அனைத்துத் தரப்பு மக்களும் வாயார, மனமார பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களிடம் ஒரே ஒரு வேண்டுகோளை முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர் பற்றாக்குறையால், ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே அரசுக் கலைக் கல்லூரிகளில் உள்ள

காலிப் பணியிடங்களை நிறைவு செய்யுமாறும், பணி நியமனத்தின்போது, பள்ளி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவது போலவே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களில் மூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு செய்தால் முனைவர் பட்டம் பெற்றும், பல ஆண்டுகளாக, 40 வயதிற்கு மேலும் பணி கிடைக்காமல், குடும்பத்தோடு அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் பலருக்கும் பேருதவியாக இருக்கும் என்பதையும் அம்மா அவர்களின் பார்வைக்குப் பணிவோடு சமர்ப்பிக்கின்றேன்.

மேலும், சென்னையிலே அறிவு நகரம் ஏற்படுத்தக்கூடிய திட்டத்தால் அறிவியல் அறிஞர் பெருமக்களும், அறிவியல் உலகமும் பயன்பெறும்; பாராட்டி மகிழும்.

தமிழ் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், அன்னை அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய திட்டங்கள் அத்தனையும், தமிழ் வளர்ச்சித் துறைக்கு மேலும் சிறப்பினைச் சேர்க்கும்.

சான்றோர்க்குப் புகழரங்கங்கள் அமைக்கும் திட்டம், மாவட்ட அளவில் 5 கலைஞர்களுக்கு விருது வழங்கும் நடவடிக்கை ஆகியவை தமிழ்ச் சான்றோர்களுக்கும், கலைஞர்களுக்கும் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே அமைந்திருக்கும். இந்தத் தமிழ் கூறும் நல்லுலகம், தமிழகத்தின் தாயாக விளங்கும் நம் அன்னையைப் பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறது.

பள்ளிக் கல்வியில், அன்னை அவர்கள் எடுத்திருக்கக்கூடிய அக்கறை அளவிடற்கரியது. அனைவருக்கும் கல்வி, ஒவ்வொரு வகுப்பிற்கும் ஓர் ஆசிரியரை நியமிக்கக்கூடிய திட்டம் ஆகியவை கல்வி என்னும் கட்டடத்திற்கு அமைக்கப்படும் அருமையான, உறுதியான அடித்தளமாகும். பள்ளிக் கல்விக்காக நம் அன்னை அறிவித்திருக்கும் திட்டங்கள் அத்தனையும் ஆழ்கடலில் மூழ்கிப் பெற்ற அருமையான முத்துக்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டு, கூடுதல் எண்ணிக்கையில் பணியில் நியமிக்க வேண்டும் எனவும், பட்டதாரி ஆசிரியர்கள் 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு நியமனம் செய்யப்பட வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறும் அம்மா அவர்களிடத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பயிற்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதோடு, மறுதேர்வு அதாவது Re-selection செய்யாமல், அப்படியே



சேர்த்துக் கொள்வதோடு, ஏற்கெனவே இவர்கள் கட்டணம் செலுத்திப் படித்திருப்பதால் கட்டணத்தில் சலுகையும் வழங்கினால், இவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதையும் அன்னை அவர்களின் மேலான பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இவற்றோடு என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய சில இன்றியமையா கோரிக்கைகளை மாண்புமிகு அன்னை அவர்களின் பார்வைக்கு முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். குளத்தூர் தொகுதியிலே ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12–25*

இலுப்பூர் பகுதியில் பகல் நேரத்தில் சுமார் 7 மணி நேரம் மின்வெட்டு தொடர்ந்து இருந்து வருகிறது. இதனால் இப்பகுதியில் அதிகமாக ஈடுபட்டுவரும் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும், மகளிரும் அல்லல்படுகின்றனர். எனவே இவர்களின் துயர் நீக்கி தொடர்ந்து மின்சாரம் வழங்கி தொழிலாளர்களை, குறிப்பாக மகளிரைக் காப்பாற்ற வேண்டும் என மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இலுப்பூரில் தாலுகா அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்கு அரசு கட்டடம் ஒன்றைக் கட்டித் தருமபடி கேட்டுக்கொள்கிறேன்.

கீரனூரிலே இருக்கக்கூடிய அரசு பொது மருத்துவமனைக்கு நாள்தோறும் சுமார் 500–க்கும் மேற்பட்ட வெளி நோயாளிகளும், உள் நோயாளிகளும் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். போதிய கட்டடங்கள் இருந்தும், மருத்துவர்களும் இதரப் பணியாளர்களும் மிகக் குறைவாக உள்ளனர். எனவே குறைந்தது இரண்டு மருத்துவர்களையாவது நியமித்து உதவுமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

சுமார் 15 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய விராலிமலை ஊராட்சியை பேரூராட்சியாக உயர்த்தித் தருமபடி பஞ்சாயத்துத் தலைவர் மூலமாக அம்மா அவர்களுக்குத் தீர்மானம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், விராலிமலை பெயரளவில்தான் சுற்றுலாத் தலமாக உள்ளது. எனவே அங்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கீரனூரிலே நீண்டநாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய அரசுப் பேருந்து டெப்போ அமைத்துத் தருமாறும், அரசு கொள்முதல் நிலையம் ஒன்று ஏற்படுத்தித் தருமாறும் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கல்வி மானியக் கோரிக்கையிலே பேசுங்கள்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சு என்பதால், என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சில கோரிக்கைகளையும் நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி உபரி நீரை புதுக்கோட்டை மாவட்ட விவசாயப் பெருமக்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலே ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குளத்தூர் தொகுதியில் நான்கு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தி வழங்கியமைக்கு மாண்புமிகு அன்னை அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்திய அன்னையைத் தமிழகமே பாராட்டிக்கொண்டிருக்கின்றது. "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" என்பதை நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் நம் அன்னைக்கு, என் கன்னிப் பேச்சுக்கு வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் எனது நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். உங்களுக்குக் கன்னிப் பேச்சு அல்ல. எனவே சீக்கிரம் பேசி முடித்து விடவும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டினுடைய கல்வி மற்றும் தமிழ்ப் பண்பாடு வளர்ச்சித் துறையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை நான் இங்கே சொல்ல விழைகிறேன். இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, அதிலும் குறிப்பாக தமிழக சட்டமன்றப் பேரவையினுடைய தலைவர் அரியாசனத்தில் வீற்றிருக்கக்கூடியவர், தமிழுக்குச் சொந்தக்காரர்; அவரை தமிழ் என்று சொல்லியே நாங்களெல்லாம் போற்றிக்கொண்டிருக்கிறோம். அப்படிச் சொல்கிற நேரத்திலே, தமிழ்நாட்டிலே தமிழ் முழுமையாக ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்பது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலையாய குறிக்கோள். அந்தவகையிலே தமிழ், ஆட்சிமொழி ஆக்கப்பட வேண்டும்; பயிற்று மொழி ஆக்கப்பட வேண்டும். பள்ளிகளில்,



கல்லூரிகளில் மட்டுமல்லாமல், நீதிமன்றங்களிலேயும் வழக்கு மொழியாக, நடைமுறை மொழியாக, தீர்ப்பு நகல் வரை எல்லா நிலைகளிலும் தமிழ், ஆட்சிமொழி அந்தஸ்து பெறுவதற்கு நடைமுறையை அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கோரிக்கை வைக்கிறேன். அரசு இதற்காக என்ன ஆயத்தப் பணிகளைச் செய்ய இருக்கிறது என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

தமிழ் மொழியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

"தேனினும் இனிய நற்செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்கிடத் திகழும்தென் மொழியே
ஊனினும் ஒளிர்விடும் ஒண்டமிழ் மொழியே"

என்றெல்லாம் தமிழைப் பரவலாகப் பாராட்டிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். பாரதியார் பாடியதெல்லாம் தெரியும். அப்படி மிகத் தொன்மை வாய்ந்த மொழி என்று சொல்லி, தொல்காப்பியத்திலே அழகாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படி சிறப்பு வாய்ந்த மொழிக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும் என்பது அரசின் கடமை என்ற காரணத்தினாலே, நான் இதை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வளர்ந்த நாடுகள் என்று சொல்லக்கூடிய ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் எல்லாம், அவர்கள் தாய்மொழிக் கல்வியை தொடர்ந்து கொடுத்து வருகிறார்கள்.

பிற்பகல் 12.30

ஒரு மனிதன் சிந்திப்பதற்கு, தான் எண்ணிய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு எந்த மொழியிலே புலமை பெற்றிருந்தாலுங்கூட, எல்லாவற்றையும்விட தாய்மொழியிலே சொல்வதுதான் எளிதாக இருக்கும். எண்ணிய மாதிரி சொல்வதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

இன்னொன்று, எத்தனை மொழிகளிலே சிறப்பான புலமை பெற்றிருந்தாலும்கூட, இரவு நேரத்திலே ஒருவன் தூங்குகிறான் என்று சொன்னால், அந்தத் தூக்க நேரத்திலே கனவு வந்து உளறுகின்ற நேரத்திலேகூட அவன் தாய்மொழியிலேதான் உளறுவான். அதுமாத்திரமல்ல, இரவு நேரத்திலே நடுநிசியிலே, தூங்கிக் கொண்டிருக்கின்றபொழுது, ஒரு விபத்து அல்லது ஒரு குண்டூசி மூலம்

குத்தினால், அந்தச் சமயத்தில் அப்படி அலறுகின்ற நேரத்திலேகூட, ஐயோ ஐயோ, அம்மா என்று சொல்லி தன்னுடைய தாய்மொழியான தமிழ்மொழியிலே உளறுகின்ற வாய்ப்பெல்லாம்கூட இருக்கிறது. ஆக, இப்படி இருக்கின்ற நேரத்திலே நாம் தொடர்ந்து சொல்லி வரக்கூடிய திராவிட இயக்கங்கள் நம்முடைய நாட்டிலே நிலைத்து இருக்கக்கூடிய நேரத்திலே, இதற்கு என்ன வழிவகைகள் செய்யப் போகின்றன என்பதை நம்முடைய அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு எடுத்துக்காட்டாக, நம்முடைய அரசு செய்ய வேண்டியதாக, நான் கோரிக்கையாக வைத்துக்கொள்ள விரும்புவது, இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் முதலாக, சட்டப் பேரவை உறுப்பினர்கள் வரை அத்தனை பேரும் தமிழிலே கையெழுத்திட வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்கிறேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை துறைகளிலும் பணியாற்றக்கூடிய அதிகாரிகளும் தாய்மொழி தமிழிலே கையெழுத்திட வேண்டுமென்று ஆணை இருந்தாலும்கூட, அது நடைமுறைப்படுத்தப்படாமல், நடைமுறை வழக்கிலே வராமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

இன்னொன்று, தமிழ்நாடு பாடநூல் கழகம் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்தப் பாடநூல் கழகத்திற்கு மேலாண்மை இயக்குநராக இருக்கக்கூடியவர் தமிழ்மொழியே தெரியாதவர். பேசவும் தெரியாது; எழுதவும் தெரியாது. அவர் கீழே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு வாய்மொழி உத்தரவாக, எல்லாம் ஆங்கிலத்திலே இருக்க வேண்டுமென்று சொல்கிறார். அவரை குறை சொல்லவில்லை. இந்தியாவிலே எந்தப் பகுதியிலேயும் பணியாற்ற வேண்டுமென்ற ஒரு நிலை இருந்தாலும்கூட, வட மாநிலங்களிலிருந்து வந்து இங்கு பணியாற்றக்கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லாம் தமிழிலே படித்து புலமை பெற்றிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும்கூட, இவற்றை எல்லாம் கவனத்திலே கொண்டு இதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய நிலையிலே கல்வி மிக முக்கியமானது. ஒவ்வொரு தனி மனிதனுடைய முன்னேற்றத்திற்கும் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும், ஒரு குடும்பத்தினுடைய முன்னேற்றத்திற்கும் கல்வி மிக மிக அவசியமானதாகும். ஆகவே கல்வியினுடைய மகத்துவத்தை அறிந்து நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். 300 மக்கள்தொகை கொண்ட ஒவ்வொரு சிற்றூருக்கும் ஒரு கிலோ மீட்டர் இடைவெளி இருந்தாலும்கூட, அங்கே தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்



படும் என்ற ஒரு கொள்கையினைச் சொல்லியிருக்கிற காரணத்தினாலே, அதை நான் மனதார வரவேற்கிறேன். அதே நேரத்திலே, இப்போது எங்கு பார்த்தாலும் சரி, இப்படி வரவேற்கக்கூடிய அம்சங்கள் நிறைய இருக்கின்றன. துணைத் தலைவர் அவர்கள் என்னுடைய பேசும் நேரத்தைச் சுருக்கிக் கொண்ட காரணத்தினாலே, நான் அதிக நேரம் பேசாமல் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கக் கூடிய நல்ல அம்சங்களை எல்லாம் நான் வரவேற்கிறேன். அப்படி வரவேற்கக்கூடிய அதே நேரத்திலே, இப்போது ஆசிரியர்கள் மாறுதல்களிலே கவுன்சலிங்முறையைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். இது ஆசிரியர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. நகரப் பகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு வாய்ப்பாக அது இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் பார்ப்போம் என்று சொன்னால், இந்த கவுன்சலிங்முறையிலே எல்லா ஆசிரியர்களும் நகரப் பகுதிகளில் காலியாக இருக்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் சென்று விட்டார்கள். கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய பள்ளிகளான, தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, ஆகிய எந்தப் பள்ளியாக இருந்தாலும் சரி, எல்லா இடங்களும் காலியாக இருக்கின்றன. நான்கு ஆசிரியர்கள் இருக்கக்கூடிய இடத்திலே ஒரே ஒரு ஆசிரியர் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

அதிலும் என்னுடைய பெண்ணாகரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே, அது கிராமப்புறங்கள் நிறைந்த பகுதி. எல்லா பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளியிலிருந்து, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள் வரை எல்லா பள்ளிகளிலும் காலியிடங்களாகவே இருக்கின்றன. அதிலும் மேல்நிலைப் பள்ளிகளிலே பி.ஜி. ஆசிரியர் ஒரே ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார். ஏறக்குறைய பள்ளி மாணவர்களுடைய எண்ணிக்கை 1200–லிருந்து 2500 பேர் கொண்ட பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே இதை எல்லாம் மாற்றுவதற்கு கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, அரசு புள்ளிவிவரம் சொல்கிறது. இந்த drop–outs பற்றிச் சொல்கிறார்கள். இடைவிலகுவோர் – இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையிலே 5 ஆம் வகுப்பு வரையிலே படிக்கக்கூடிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 57 இலட்சம். இதிலே இடைவிலகுவோர், அதாவது drop–outs 7 சதவிகிதம் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் drop–outs மட்டும் மொத்தம் 8 இலட்சம் குழந்தைகள் வெளியேறுகிறார்கள். இந்த 8 இலட்சம் குழந்தைகளுக்கும் மாற்றுப்

பள்ளிகளிலே படிக்கக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை 26,629 பேர். அப்படியானால் எத்தனை சதவிகிதம் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இப்படி 8 இலட்சம் drop–outs வருகின்ற நேரத்திலே 26 ஆயிரம் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று சொன்னால், எவ்வளவு குழந்தைகள் படிப்பதற்கு கவனம் செலுத்தவில்லை என்பதைப்பற்றி இங்கே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆக, இப்படி அந்தக் குழந்தைகள் எல்லாம் மீண்டும் இடையிலே நிற்காமல், அந்தக் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு அரசு எல்லா வகையிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு மேலும் அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அனைவருக்கும் கல்வி என்ற ஒரு திட்டத்தை வகுத்து மத்திய அரசு சொல்கிறது; மாநில அரசு சொல்கிறது; வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்திலே அனைவருக்கும் கல்வி கொடுக்கக்கூடிய நிலை இல்லை. கல்வித் தரம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இதை நான் மிக வருத்தத்தோடு சொல்கிறேன். இன்று மத்திய அரசு சொல்கிறது. மாநில அரசு சொல்கிறது. இருந்தாலும்கூட, தமிழகத்தினுடைய, இந்தியத் திருநாட்டினுடைய கல்வி நிலை என்ன?

*பிற்பகல் 12–35*

நாம் கிராமப்புறங்களில் பார்க்கிறோம். பேருந்து நிலையங்களிலே பொது மக்கள் குவிந்து கிடக்கிறார்கள், பேருந்துக்காக. அங்கே கழிப்பிடங்களுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால்கூட, அங்கே கழிப்பிடங்களிலே, ஆண்கள் பெண்கள் என்று எழுதப்பட்டிருக்கும். அதைப் படித்துவிட்டுச் செல்லக்கூடிய கல்வித் தரம் நம்முடைய நாட்டிலே இல்லை. ஆனால் அந்தக் கழிப்பிடத்திலே பெரியவர்கள் சென்று பார்க்கிற நேரத்திலே, ஆண் தலை படம் போட்டிருக்கும். அதைப் பார்த்துவிட்டு, ஆண்கள் செல்லக்கூடிய நிலை. பெண் தலை படம் போட்டிருக்கும். அதைப் பார்த்துவிட்டு, ஓ, இது பெண்கள் பகுதி என்று சொல்லி பெண்கள் செல்லக்கூடிய நிலை இருக்கிறதே தவிர, அதைக்கூட படித்துவிட்டு, கழிப்பிடத்திற்குச் செல்லக்கூடிய நிலை இந்த நாட்டிலே இல்லாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

கல்விக்காக கோத்தாரி கமிஷன் சொன்ன பரிந்துரைப்படி, அரசினுடைய வருமானத்திலே 6 சதவீதம் செலவு செய்ய வேண்டும். ஆனால் இந்த நிலை இல்லை. அதற்கு மாறாக, இன்றைய சூழ்நிலையிலே, மிகக் குறைவான தொகையே ஒதுக்கப்படுகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், கோத்தாரி கமிஷன் சொன்ன பரிந்துரைபடி, 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் கல்வி ஒதுக்கீடுபற்றி



பரிசீலிக்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிலேகூட, 6 சதவீதமாவது கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்று சொல்லி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கினால்தான், 2007 ஆம் ஆண்டிலாவது எல்லோருக்கும் கல்வி கொடுக்க முடியும். அந்தக் குழு பரிந்துரை செய்தும்கூட, மிகக் குறைவான தொகையே ஒதுக்கப் பட்டிருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மாநில அரசாங்கத்தினுடைய மொத்த வருவாயில், குறைந்தது, 3–ல் இருந்து 3.5 சதவீதம் ஒதுக்க வேண்டும். இதை ஐக்கிய நாடுகளுடைய குழந்தைகள் அமைப்பு போன்ற பல்வேறு அமைப்புகள், குழுக்கள் எல்லாம்கூட சொல்லி வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, 1998–லே ஒதுக்கியது 5.5 சதவீதம். ஆனால் இந்த ஆண்டு, ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பது, 6 சதவீதம் இல்லை என்று சொன்னாலும், 3.5 சதவீதம் இல்லை என்று சொன்னாலும், 5.5 சதவீதம் இல்லை என்று சொன்னாலும்கூட, 1.68 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்புறம் எப்படி இந்தத் தொகையை வைத்துக்கொண்டு அனைவருக்கும் கல்வியைக் கொடுக்க முடியும்?

இன்னொன்றைக்கூட பாட்டாளி மக்கள் கட்சி கொள்கையாக வைத்திருக்கிறது. அது என்னவென்று சொன்னால், எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்க வேண்டும். கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும். அது தரமான கல்வியாக இருக்க வேண்டும். இப்போது அரசியல் சட்டத்திலேயே என்ன இடம் பெற்று இருக்கிறது? 14 வயது வரை எல்லோருக்கும் கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும் என்று. அந்தத் திட்டத்தை நாம் பின்பற்றவில்லை. ஆகவே இப்படியே போனால், இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்கூட, கல்வி நிலை முன்னேற்றம் இல்லாமல் போய்விடும். அதைக் கவனத்திலே கொண்டு, இந்தத் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1994 ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சர், முதலமைச்சராக இருந்த காலத்திலே, தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் கொண்டு வரப்பட்டது. வரவேற்கிறோம். அதிலே இலவசக் கல்வி என்ற வாசகம், இடம் பெறாமல் இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்திலேகூட, இலவசக் கல்வி என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால், எப்படிப் பொருத்தமுடையதாக இருக்கும்? அதே நேரத்திலே 10 ஆம் வகுப்பு வரையிலே நம்முடைய தமிழக அரசு, எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்க வேண்டும்; கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும்; தரமான கல்வியாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, எங்கு பார்த்தாலும் சரி, இப்போது பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் பணிக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வறுமை காரணமாக, பெற்றோர்கள் மாத்திரம் சம்பாதித்தால் போதாது என்ற நிலையிலே, இந்தக் குழந்தைகள் எல்லாம், பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள், பணிக்குச் சென்று சம்பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்தக் குழந்தைத் தொழிலாளர் முறையைக் கட்டாயம் ஒழிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இப்படி குழந்தைகளைப் பள்ளிக்குச் சேர்ப்பதோடு மாத்திரம் அல்லாமல், இன்றைய குழந்தைகள் எதிர்கால நாட்டை உருவாக்கக்கூடியவர்கள். அவர்களுக்குக் கல்வி கொடுப்பதோடு மாத்திரமல்லாமல், பக்குவமாக வளர்த்து எடுக்கக்கூடிய பொறுப்பு அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது.

*பிற்பகல் 12–40*

இப்போது நாம் பார்க்கிறோம். குழந்தைகள் சரியாகப் பள்ளிக்கு வருவதில்லை. அப்படிப் படித்து முடித்துவிட்ட பிறகு தீவிரவாதச் செயலிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் அறிவியல் வளர்ச்சி வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. அப்படி அறிவியல் வளர்ச்சியோடு, நாகரீக வளர்ச்சியிலும் வளர்ந்து கொண்டு இருக்கக்கூடிய அதே நேரத்தில் தீய சக்திகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. தீவிரவாதம் எங்கு பார்த்தாலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம்கூட, என்னுடைய தொகுதியில் வெடிகுண்டு விபத்து நடந்தது. வெடிகுண்டு வீசுகிறார்கள். எங்கு பார்த்தாலும் வெடிகுண்டு கலாச்சாரம் பெருகிக்கொண்டே இருக்கிறது. ஆக அத்தகைய காரணத்தினாலே, இந்தக் குழந்தைகளைப் பக்குவப்படுத்துவது, பண்படுத்துவது, பெற்றோர்களின் கடமை மாத்திரமல்ல; அரசின் கடமையாகவும் இருக்க வேண்டும். இந்தக் குழந்தைகள் என்பவர்கள் பச்சைக் களிமண்ணைப் போன்றவர்கள். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நான் விஷயத்திற்கு வரவில்லை. 10 நிமிடங்கள்கூட ஆகவில்லையே! ஆகவே இந்தக் குழந்தைகளை எப்படி வேண்டுமானாலும் வடிவமைக்கலாம். யானையாக, பூனையாக, குதிரையாக அல்லது சிலைகளாக – எந்தச் சிலைகளாக வேண்டுமானாலும் வடிவமைக்கலாம். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு பள்ளிக்கூடங்களிலே கல்வி கொடுப்பதோடு மாத்திரமல்லாமல், ஒழுக்க நெறியையும் கட்டாயம் கொண்டுவர முன்வர வேண்டும்.



"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

ஆகவே ஒழுக்கம் என்பது உயிரைவிட மேலானது. இந்தக் குழந்தைகள் எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால்,

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்று சொல்கிறார்களே, அந்தக் கவரிமான் சாதியைப் போல, குழந்தைகளை நல்வழிப்படுத்துகிற பயிற்சிகளைக் கொண்டுவர வேண்டும். ஆகவே வகுப்பிலே Moral Class என்று சொல்லக்கூடிய நல்லொழுக்கப் பாடத்தை வாரத்திலே ஒரு பாடப் பிரிவாகக் கொண்டுவர வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், குழந்தைகளை எதிர்காலத்திலே நாம் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர்த்தெடுக்க முடியாது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம் ரொம்ப குறைந்து போய்விட்டது. 1:40 என்ற விகிதாச்சாரம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆசிரியர்களெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 1:20 வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது 100 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர்கூட இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதையெல்லாம் நம்முடைய அரசு கவனத்திலே கொண்டு அரசாணை எண் 250–ஐத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது கல்வித் துறையில் இட ஒதுக்கீட்டில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இப்பொழுது I.I.T. இருக்கிறது. I.I.T. மத்திய அரசினுடைய நிறுவனமாக இருந்தாலும்கூட, மிகப் பெரிய நிறுவனமான அதில் scheduled இனத்தைச் சார்ந்தவர்கள் மூன்றே பேர்தான் பணியாற்றுகிறார்கள். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அங்கே இட ஒதுக்கீடே கிடையாது. அப்படியென்றால் என்ன நிலைமை? இப்போது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஏறக்குறைய 60% இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய இட ஒதுக்கீடு என்பது 27% தான். இந்த 27%–மும் அங்கே I.I.T.–யிலே எல்லாம் பின்பற்றப்படவில்லை. ஆகவே அதையெல்லாம் கவனத்தில்கொள்ள வேண்டும். வெட்கத்தோடு சொல்கிறேன், சென்னைப் பல்கலைக்கழகத்திலே scheduled இன மக்களுக்கு ?% என்பது நடைமுறையில் இருக்கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில்

108 சாதி என்று சொல்கிறோம். அதில் 1-1/4% எடுக்கிறோம். இப்போது எங்கே இருக்கிறது சமூக நீதி? ஆகவே அதையெல்லாம் அரசு கவனத்திலேகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பயிற்சிக்குத் தேர்வு முறையில் கவுன்சலிங் என்று அரசு அறிவித்திருக்கிறது. இந்த கவுன்சலிங் முறை கொண்டுவரப்பட்ட நேரத்தில், தமிழ்நாடு முழுவதும் கொண்டு வரப்படவில்லையென்று சொன்னால், நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய மேட்டுக் குடியிலே நன்கு படிக்கக்கூடிய குழந்தைகள் மட்டும்தான் வருவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் இருக்கிறவர்களுக்கெல்லாம் வாய்ப்பில்லாமல் போய்விடும். உதாரணத்திற்கு ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். இந்தப் புள்ளிவிவரம் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்ச்சி விவரம். அரசினுடைய புள்ளிவிவரம் இந்த அளவிற்கு இருக்கிறது என்று சொன்னால், இதில் இவர்கள் படித்து, ஒரு பி.ஏ.-வில்கூட சேருவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அரசாங்கப் புள்ளிவிவரம், மாவட்டங்களில் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி தேர்ச்சி விகிதம் கடந்த ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில் 10 ஆம் வகுப்பு 55.57%, மேல்நிலைப் பள்ளி தேர்ச்சி விகிதம் 62.75%, நீலகிரி மாவட்டம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 53.39%, மேல்நிலைப் பள்ளி தேர்ச்சி விகிதம் 66.61%. புதுக்கோட்டை மாவட்டம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 53.53%, மேல்நிலைப் பள்ளி தேர்ச்சி விகிதம் 72.02%.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள். இன்னும் கன்னிப் பேச்சுக்காரர்கள் இருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** சீக்கிரம் முடித்துவிடுகிறேன். முக்கியமான பிரச்சினை. எல்லோருக்கும் தேவையானது. பெரம்பலூர் மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 57.25%; மேல்நிலைப் பள்ளி தேர்வு - 71.03%. நாகப்பட்டினம் மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 67.74%; மேல்நிலைத் தேர்வு - 70.67%. திருவாரூர் மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 62.07%; மேல்நிலைப் பள்ளி தேர்வு - 68%. விழுப்புரம் மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 44.14%; மேல்நிலைப் பள்ளித் தேர்வு 62.19%. கடலூர் மாவட்டம் 10 ஆம் வகுப்பு 47%; மேல்நிலைப் பள்ளித் தேர்வு 63.44%. திருவண்ணாமலை மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 42.22%; மேல்நிலைப் பள்ளி தேர்வு 66.14%. வேலூர் மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 52.67%; மேல்நிலைப் பள்ளி தேர்வு 60.13%. காஞ்சிபுரம் மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 52.58%; மேல்நிலைப் பள்ளி தேர்வு 69.55%. திருவள்ளூர் மாவட்டம் - 10 ஆம் வகுப்பு 41.11%; மேல்நிலைப் பள்ளித் தேர்வு 52.24%. இராமநாதபுரம் மாவட்டம் - 10



ஆம் வகுப்பு 53.14%; மேல்நிலைப் பள்ளித் தேர்வு 69.76%. சேலம் மாவட்டம்-10 ஆம் வகுப்பு 70.35%; மேல்நிலைப் பள்ளித் தேர்வு 77.09%. இப்படி குறிப்பிட்ட மாவட்டங்களிலே தேர்ச்சி விகிதம் இந்த அளவிற்கு இருக்கிறது என்று சொன்னால், இவர்கள் ஆசிரியர் பயிற்சிக்குப் போக முடியுமா? பி.ஏ. வகுப்பில்கூட போய்ச் சேருவதற்கு இன்றைக்கு மெரிட் இல்லை.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் குறிப்பிடும்போது பெரும் புள்ளிவிவரத்தைத் தந்தார்கள். எவ்வாறு மாணவர்கள் பின்தங்கிய மாவட்டங்களில், மற்ற மாவட்டங்களில் தேர்ச்சி பெறுகிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைத் தந்திருக்கிறார்கள். கவுன்சலிங் என்ற முறையை நாம் பயன்படுத்துவது முறையான வெளிப்படையான முறையில் நல்ல தகுதியுள்ள மாணவர்களுக்காக அவர்கள் விருப்பப்படி பெறுவதற்காக வைத்திருக்கிறோம். நடைமுறையில் இதில் மட்டும் கிடையாது. இன்னும் மருத்துவக் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி போன்றவைகளுக்கு எல்லாம் கவுன்சலிங் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த கவுன்சலிங் என்பதை பொதுவாக தமிழ்நாடு அளவில் தேர்ந்தெடுக்கிறோம் என்றால், முன்பு பார்த்தால் அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறு ஒருகால கட்டத்தில் இருந்தது. காமராஜர் காலத்தில், மாண்புமிகு தலைவர் அவர்கள் காலத்தில் இருந்தது. அதற்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நண்பர், ஒரு மாணவர் இந்த முறையெல்லாம் சரியில்லை என்று கோர்ட்டுக்கு - நீதிமன்றத்திற்குச் சென்று அப்போது அந்த மாவட்ட வாரியாகவோ அல்லது , ஒரு பகுதி வாரியாகவோ மாணவர்கள் சேர்க்கை கூடாது என்று தீர்ப்பு தரப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்புக்குப் பிறகுதான் இந்த மெரிட் என்ற முறையை வைத்து, தகுதியை வைத்து, நாம் தமிழகம் அளவில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றோம். இப்பொழுது என்ஜினியரிங் துறையில் கவுன்சலிங்கில் பார்த்தீர்கள் என்றால் நம்முடைய தருமபுரி மாவட்ட மாணவன்கூட தருமபுரி கல்லூரிக்குச் செல்ல விரும்புவதில்லை. அவர்கள் சென்னைக்குத்தான் வர விரும்புகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேண்டிய உரிமையையும் அவர்கள் விரும்புகின்ற இடத்தில் கவுன்சலிங்கும் தர முடிகிறது. நாம் ஒரு ஆளை இப்படி கட்டாயப்படுத்தி இந்தக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்ற முறையை அனுமதிப்பது கிடையாது. ஆகவே மாணவர்களுடைய தகுதிக்கு ஏற்பவும் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்பவும் வெளிப்படையான

முறையில்தான் இந்தத் தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் வேறு ஒன்றும் செய்வதற்கு வழி கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 16 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய உண்மை நிலைமைகளைச் சொன்னார்கள். நான் வரவேற்கிறேன். அதைக் குறையாகச் சொல்லவில்லை. இப்பொழுது என்ஜினியரிங், எம்.பி.பி.எஸ். பற்றியெல்லாம் சொன்னார்கள். அதிலேகூட கிராமப்புற மாணவர்களுக்கு என்று 25% ஒதுக்குகிறீர்கள். ஆகவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே தேர்வு செய்யக்கூடிய நேரங்களிலேகூட கிராமப்புற மாணவர்களுக்கு என்று ஒதுக்கினால் வரவேற்கத்தக்கது. அதைக் கட்டாயம் கொண்டுவர வேண்டும். அதுமாத்திரமல்ல. உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்பொழுது ஒரு மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால், அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றவர்களோடு போட்டி போட்டு வரவேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக முடியாது. அதிலே இட ஒதுக்கீடு. தாழ்த்தப்பட்ட மக்கள் 50% மக்கள்தொகை கொண்ட ஒரு மாவட்டத்திலே பாலிடெக்னிக், I.T.I. அல்லது கலைக் கல்லூரி போன்ற அந்தக் கல்லூரிகளிலே 60% மக்கள்தொகை கொண்ட தலித் மக்கள் வாழக்கூடிய அந்த மாவட்டத்திலே 18% இட ஒதுக்கீடு கொடுத்தால் எங்கே போய் படிக்க முடியும்? எப்படி அவர்கள் மேலே வர முடியும்?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாவட்ட ரீதியாக நாம் அதில் செய்ய முடியாது. அரசு ஸ்தாபனங்களில் மாவட்ட ரீதியாக எந்தவிதமான ஒதுக்கீடும் செய்வதற்கு இப்பொழுது உரிமை நமக்குக் கிடையாது. அதை மாற்றுவதற்கும் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது என்ற நிலைமை இருக்கிறது. நீங்கள் கிராமப்புற மாணவர்களுக்கு அதிக மதிப்பெண் தரவேண்டுமென்று சொல்கிறீர்கள். அது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது. அப்பொழுதுகூட நீங்கள் மதுரை பகுதியில் உள்ள கிராமப்புற மாணவன் என்று சொன்னால் விழுப்புரம் மாணவனோடு போட்டி போட முடியுமே ஒழிய, அதற்காக வேறு ஒன்றும் சிறப்புச் சலுகை தர முடியாத நிலையில் மாவட்ட நிர்வாகம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதுதான் முறை, சட்டம்.

223440 [illegible]



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மாணவர்களுக்கு தற்பொழுது நடைமுறையில் இருக்கக்கூடிய அந்த 25 சதவிகிதத்தைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய சூழ்நிலையிலே இந்த பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கு ஒரு நல்ல நிவாரணத்தை வழங்கி இருக்கிறீர்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று. அதே நேரத்தில் அவர்களை மீண்டும் தேர்வு செய்கின்ற நேரத்திலே சில நிபந்தனை இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏதோ கட்டணம் செலுத்த வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்கள் என்ற காரணத்தினாலே அவர்களுக்கு சிறப்புச் சலுகை கட்டணம் அளித்து எவ்வித வரன்முறையும் கொண்டு வரப்படாமல், எல்லா வரன்முறைகளையும் தளர்த்தி எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையிலே அதை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே, அந்த வேலையில்லாத B.Ed. பட்டதாரி ஆசிரியர்கள் இன்றைக்கு 1-1/2 இலட்சம் பேர் வந்துவிட்டார்கள். அவர்கள் T.R.B.-யிலேயும் போய், அங்கேயும் நிறைய பேர் செலக்ஷன் ஆகாமல் வருகிறார்கள். நிறைய பேருக்கு வருவதில்லை. தொடர்ந்து இருக்கிறார்கள். இங்கே நான் இடைநிலை ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் முரண்பாடாகச் சொல்ல விரும்பவில்லை.

இன்னொன்று. கல்வித் தரத்தின் அடிப்படையிலேயும் எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேயும் சொல்கிறேன். இடைநிலை ஆசிரியர் பயிற்சி படித்தவர்கள் வரை எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும். அதேநேரத்திலே, இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை எல்லாம் B.Ed. பட்டதாரி ஆசிரியர்கள் படிக்கக்கூடிய வகையிலே கல்வி நிறுவனங்களாக மாற்றி எல்லோரும் எதிர்காலத்திலே கல்வித் தரம் மிக்கவர்களாக வருவதற்கு அந்த B.Ed. பட்டத்தைப் படிக்க வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்கி, 6, 7, 8 ஆம் வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வோம் என்று சொன்னால், கல்வித் தரம் நன்றாகவே இருக்கும். அதையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதைப்போலவே, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அதிகமாக இருக்கின்றன. அதிலும் சிறுபான்மை

நிறுவனங்கள் அதிகமாக இருக்கின்றன. நான் குறை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டும். சட்டத்திலே இடம் இருக்கிறது. இருந்தாலும்கூட, 40 சீட் இருக்கக்கூடிய இடங்களிலே 35, 36 சீட்டுகளை அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள். யாரையும் அரசு கட்டுப்படுத்த முடியாது. நீதிமன்றம் சொல்கிறது என்று சொல்கிறார்கள். இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த காலத்திலே (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்பொழுது, minority institution–ஐப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர்கள் முழுவதுமாக அந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதாகக் குறிப்பிட்டார். ஆனால் சமீபத்தில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அதை மாற்றி minority institution–களில் 50 சதவீதம் அவர்களுக்காகவும் மீதி 50 சதவீதம் non–minority–களுக்குத் தருவதற்காகவும் ஆணை பிறப்பித்து இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கேற்றாற்போல், திட்டம் வரைமுறைபடுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே இப்போது நடைபெறும் தேர்வில் அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னும் 15 உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது. உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இப்போது சிறுபான்மை பிரிவு நடத்துகிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களில் 50 சதவீதம் ஒற்றைச் சாளர முறையிலே அரசுக்கும், அதைப்போல 50 சதவீதம் சிறுபான்மையினருக்கும் என்று வைத்திருக்கிறீர்கள். தமிழகத்திலே சிறுபான்மையினர் அல்லாதவர் நடத்துகிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 7 தான் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளின் சொந்தக்காரர்கள், எங்களுக்கும் 50 சதவீதத்தை ஒதுக்கிவிட்டு 50 சதவீதத்தை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை வைக்கிறார்கள். அதை அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 50 சதவீதம் தர முடியாது. முன்பு 30 சதவீதம் தரப்பட்டு இருந்தது. இந்தக் கோரிக்கை வந்திருக்கிறது. அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலனை செய்வார்கள். அது எந்த அளவு என்பதை அவர்களே முடிவு செய்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, இந்த 69 சதவீத இட ஒதுக்கீடு, உச்ச நீதிமன்றத்திலே இருந்தாலும்கூட, அதை நிறைவு செய்ய வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு இங்கே இடங்களைக் கூடுதலாக்கி 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு மறைமுகமாக வழிவகுத்தார்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். சமூகநீதி காத்த வீராங்கனை என்றெல்லாம் பாராட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் மனதார வரவேற்கிறோம். அப்படி இருக்கக்கூடிய அதேநேரத்திலே, தொடர்ந்து இன்னும் இருக்கக்கூடிய குறைபாடுகளையெல்லாம் களைய வேண்டும். நீதிமன்றம் தலையிடுகிறது, மத்திய அரசு தலையிடுகிறது என்று சொன்னாலும்கூட, இந்த மாமன்றத்திலே அதற்கான தீர்மானங்களையெல்லாம் வடிவமைத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே உள்ளதை சிறப்புற நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இன்று மகளிர் கல்வியைப் பேண வேண்டும் என்பதற்காக, பெண் உரிமைக்காக, பெண் கல்விக்காக, தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள் வழங்கப்படுகிறது. பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி; மனதார வரவேற்கிறோம். இது பாராட்டக்கூடிய ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்திலே, M.B.C. – மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சீர்மரபினர் குழந்தைகளெல்லாம் ஏழைக் குழந்தைகள். கூலித் தொழிலாளர்களின் குழந்தைகள். அவர்களுக்கும் கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, பயிற்சிக் கல்லூரிகளிலே, மருத்துவப் படிப்பிலே ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் செவிலியர் பயிற்சி அளிக்கப்படுகிறது. வரவேற்கக்கூடிய ஒன்று. அதைப்போலவே Para medical workers – இன்றைக்கு எங்கு பார்த்தாலும், இதற்குத் தேவை அதிகமாக இருக்கிறது.

தனியார் மருத்துவமனைகளிலும் தேவை இருக்கிறது. அதையும் கொண்டுவருவதற்கு வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீண்டகாலமாக, மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் நிறைய பள்ளிகளில் இல்லை. அதற்கு நேர்முகத் தேர்வு நடத்தி நீண்டகாலம் ஆகிவிட்டது. ஆகவே உடற்கல்வி ஆசிரியர், ஓவிய ஆசிரியர், கைத்தொழில் ஆசிரியர் பணி இடங்கள் நிறைய காலியாக இருக்கின்ற காரணத்தினாலே, அவற்றையும் நிரப்புவதற்கு முன்வர வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். அடுத்து P.T. ஆசிரியர், பெற்றோர்–ஆசிரியர் கழகத்திலே பணியாற்றக்கூடியவர்கள், பள்ளிகளிலே நீண்டகாலமாகப் பணியாற்றுகிறவர்களுக்கு 500 ரூபாய், 600 ரூபாய்தான் சம்பளமாக வழங்கப்படுகிறது. இப்போது புதிதாக அங்கே செல்லக்கூடிய தலைமை ஆசிரியர்கள் அவர்களை நீக்கிவிட்டு புதிதாக வரக்கூடியவர்களை நியமனம் செய்துகொள்கிறார்கள். அங்கே அவர்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். மீண்டும் ஏதாவது ஒரு தேர்வு அடிப்படையிலே, சிறப்புச் சலுகையின் அடிப்படையிலே அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கு contract basis–லாவது அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கக்கூடிய மாணவர்கள் தரமிக்க கல்வி பெறுகிறார்கள். ஆனால் அரசு கல்வி நிறுவனங்களை நான் குறையாகச் சொல்லவில்லை. தனியார் கல்வி நிறுவனங்களின் தரத்தைப் போல அரசு கல்வி நிறுவனங்களிலும் கல்வியின் தரம் சிறப்பாக இருப்பதற்கு எல்லாவகையிலும்—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சி வந்த பிறகு நிலைமை மாறிவிட்டது. முன்பெல்லாம் பார்த்தீர்கள் என்றால்—தனியார் கல்லூரிகளுக்குச் செல்வது ஒரு மோகமாக இருந்துகொண்டிருந்த காலம் போய், இந்த ஆண்டு பார்த்தீர்கள் என்றால், அதிகமான மாணவ மாணவிகள் நம்முடைய அரசு கல்லூரிகள் அல்லது aided கல்லூரிகள் இவற்றைத்தான் விரும்புகிறார்களேயொழிய, தனியார் கல்லூரிகள் பல காலியாக இருக்கின்ற நிலைமையைத்தான் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



**திரு. ஜி.கே. மணி:** அங்கும் தரம் வர வேண்டுமென்றுதான் சொல்கிறேனே தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லை. அதைப்போலவே, ஆசிரியர்களை இந்த ஆண்டு கூடுதலாக நியமிப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான கட்டடங்களையும், கிராமப்புறங்களிலே உள்ள பள்ளிகளிலே, மாணவிகளுக்கு கழிப்பிட வசதியும் செய்து கொடுபபதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. அதை எல்லா பள்ளிகளுக்கும் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, இப்படி கல்வித் துறையில் சொல்லி இருக்கிற நல்ல அம்சங்களை எல்லாம் வரவேற்று, அதிலே நாங்கள் சொல்லி இருக்கிற ஆலோசனைகளை எல்லாம்—நல்ல ஆலோசனைகள் என்ற காரணத்தினாலே அவற்றையும் நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் மறுபடியும் வெல்லும்' என்கின்ற தாரக மந்திரத்தை மெய்ப்பித்துக் காட்டிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியாம் எங்கள் தாயை எனது சார்பாகவும், சீர்காழி தொகுதி மக்கள் சார்பாகவும் வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன். சீர்காழி தொகுதியிலே வழக்கறிஞராகப் பணியாற்றிய என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கின்ற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் நீதி நிலைத்து, நேர்மை ஆட்சி செய்கிறது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் நிதிநிலை அறிக்கை தெளிவாக உணர்த்துகிறது.

மேல்நிலைக் கல்வி பயிலுகின்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கிட உத்தரவிட்டுள்ள பெண் குலத்தின் ஒளிவிளக்காம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைக் கூறி வணங்குகிறேன்.

மக்கள்தொகை 300–க்கு மேற்பட்ட அனைத்து சிற்றூர்களிலும் தொடக்கப் பள்ளி ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற சீரிய திட்டம் வெற்றிகரமாக அமைய வழிவகுக்கும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவியர்களுக்கு அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கும் திட்டம், கல்வித் துறையில் பெண்களின் முன்னேற்றத்தை மேலும் சிறப்படையச் செய்யும் என்பது நிச்சயம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி வசதிக்காக புதிய விடுதிகள் கட்டுவதற்கு ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கியது, விடுதிகளில் திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத் தொகையை ரூபாய் 225–லிருந்து ரூபாய் 300 ஆக உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது, போற்றுதலுக்குரிய ஒன்று.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு மருத்துவர்களால் உடல்நலப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கும் திட்டம் ஆரோக்கியமான கல்விக்கு அடித்தளமாகும். அடுத்து பள்ளிகளுக்கு உறுதியான கட்டடம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டங்கள் யாவும் அனைவரும் எதிர்பார்த்த அருமையான அத்தியாவசியமான திட்டங்களாகும்.

ஆசிரியர்களுக்கு கவுன்சலிங்முறையைக் கொண்டுவந்து, ஆசிரியர்கள் விருப்பப்படி இடம் மாறுதல் செய்வதற்கு வழிவகை செய்த மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சியைக் கொண்டுவந்து மாணவர்கள் முன்னேறுவதற்கு வழிகாட்டிய அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது சீர்காழி தொகுதியில், சீர்காழி நகரத்தில் அரசுப் பள்ளிகளே கிடையாது; அனைத்தும் தனியார் பள்ளிகள்தான். தனியார் மகளிர் மேல்நிலைப் பள்ளி மட்டும் ஒன்று உள்ளது. இடவசதி இல்லாத காரணத்தால் மாணவிகள் வெளியூர்களுக்குச் சென்று படிக்கும் நிலை உள்ளது. எனவே சீர்காழியில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அரசு கலைக் கல்லூரி ஒன்றும் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

"காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா"



என்று பாரதி பாடியதற்கேற்ப, விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், விளையாட்டுகளில் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து, உலக அளவில் போட்டியிடும் திறமையைக் கண்டறியும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருப்பது உலகிலேயே சிறந்த வீரர்களைத் தமிழ்நாட்டிலே உருவாக்குவதற்கு அடித்தளமாக அமையும் என்பது நிச்சயம்.

முக்கியமாக ஒரு மாணவனோ அல்லது ஒரு மாணவியோ, சுதந்திரப் போராட்டத் தியாகியோ, விளையாட்டு வீரரோ அல்லது போர் வீரரோ வறுமையில் வாடக் கேட்டால், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் வாய்மொழிக்கேற்ப, தானே வாடியதாக உணர்ந்து, உள்ளம் உருகி, ஆயிரம் என்றும் இலட்சம் என்றும் அள்ளிக் கொடுக்கின்ற எங்கள் வள்ளலின் வாரிசாம் அம்மா அவர்களை நன்றியுடன் வணங்குகின்றேன்

அடுத்தபடியாக, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர முன்வந்த இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சீர்காழியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாசகர்கள், நூலகங்களில், தங்களுக்குத் தேவையான பகுதிகளை 'ஜெராக்ஸ்' எடுத்துக்கொள்ளும் வசதி சில மாவட்டங்களில்தான் இருக்கிறது. நாகை மாவட்டத்திற்கும் இந்த வசதியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக மீன் வளத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து மீனவர்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் எனது சீர்காழி தொகுதியிலுள்ள பழையாறு மீன்பிடித் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை மேற்கொள்ள, மத்திய அரசிடம் ரூ.10.00 கோடி நிதியுதவி கேட்டுள்ளதற்கு எனது தொகுதி மீனவர்களின் சார்பாகவும், பொதுமக்களின் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலனில் பெரும் அக்கறை கொண்டுள்ள அம்மாவின் அரசு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சிறிய மருத்துவமனைகள், நடமாடும் மருத்துவ ஊர்திப் பிரிவுகள் ஏற்படுத்த

திட்டமிட்டுள்ளது, அனைத்து அடித்தட்டு மக்களின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

தலைமையிட மருத்துவமனைகளில் குளிர் சாதன வசதி, மின் உற்பத்தி இயந்திரங்கள் நிறுவுவது போன்ற அறிவிப்பைக் கேட்டவுடனேயே நோயெல்லாம் பறந்துபோகும் அறிகுறி தென்படுகிறது.

சீர்காழி அரசு மருத்துவமனை பழங்காலக் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. வசதியின்மை காரணமாக நோயாளிகள் சிரமப்படுகிறார்கள். சீர்காழி அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் பொருளாதார வளர்ச்சியில், அவர்களுக்குரிய இடம் கிடைப்பதற்கு, நடப்பு நிதியாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் பயிற்சிகள் பெற ரூபாய் 15 இலட்சம் செலவில் ஆறு சமுதாய நிதி ஆதார மையங்கள் அமைப்பதற்கான அறிவிப்பு பெண்களின் முன்னேற்றத்திற்கு அம்மாவின் அரசு தருகிற முக்கியத்துவம் தெளிவாகத் தெரிகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் ஒரு சிக்கலும் இருக்கிறது. அதாவது வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள்தான் இதில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். முந்தைய தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட பட்டியலில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள 75 சதவிகித மக்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களைச் சரியாக அடையாளம் கண்டு, பட்டியலில் சேர்த்துக்கொள்ள அம்மா அவர்கள் உத்தரவிட வேண்டுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

குறிப்பாக, இந்த நிதிநிலை அறிக்கை, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. ஒரு காலத்தில் அவர்களுக்கு எட்டாத கனியாக இருந்த கல்வி, இப்போது சுவைத்துத் தின்பதற்கு மிக அருகிலேயே வந்துவிட்டது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் என்றென்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக, விசுவாசம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று அவர்கள் சார்பில் அம்மா அவர்களுக்கு நன்றிகூறி, "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத அம்மாவின் ஆட்சியே" என்று கூறி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி. திரு. லட்சுமணன் அவர்கள் பொறுத்தருள வேண்டும். அவர்கள் ஏதோ அவசரமாகப் போக வேண்டிய காரணத்தால் முதலில் அவர் பேசட்டும். அடுத்து நீங்கள் பேசுங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** "சமன்செய்து சீர்தூக்கும் கோல்" போல, இப்பேரவையின் நடுநாயகனாக வீற்றிருந்து, நடுநிலை பிறழாது நற்பணி ஆற்றிக்கொண்டிருக்கும், வணங்குதலுக்கும், வாழ்த்துதலுக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தோல்வியினைத் தோற்றோடச் செய்யும் வேள்வியாகும் முயற்சி
தாழ்வினிலே மாற்றெதுவென்னும் கேள்விக்கு பதில் முயற்சி
வீழ்ந்திடினும் வீறுகொள்ளும் மந்திரமே முயற்சி
வாழ்ந்திடல் வெற்றிதரும் தந்திரமே முயற்சி
உயர்வுக்கு உயிராகும் ஊக்கமதே முயற்சி
ஊக்கத்திற்கு உரமாகும் உயர்எண்ணமதே முயற்சி
மறுமலர்ச்சி தேவையெனில் செய்திடுவீர் யுகப் புரட்சி
வரும்வளர்ச்சி தேசமெங்கும் செழித்திட்டே யுறும்உயர்ச்சி"

என்னும் எனது கவிதை வரிகளிலே கருவாகி, உருவாகி. உயர்வாகி, ஒளியாகி, வெளியாகி, தமிழகத்தின் நல்வழியாகி, விடிவெள்ளியாகி வீற்றிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனத் தலைவியின் பொற்பாதச் சுவடுகள் பற்றி நடந்து பரிவோடும், பண்போடும், பணிவோடும், பாசத்தோடும், பாங்கோடும், அமைச்சுப் பரிபாலனம் நடத்தி வருகின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, "மக்கட் சேவையே மகேசன் சேவை, மானுட சேவையே மாதவ சேவை" என்று சொல்லி மக்கட் சேவையாற்ற தோள்தட்டி புறப்பட்டு வந்திருக்கும் பாசமிகு எனது சக சட்டமன்ற உறுப்பினர்களே, இந்த தேசத்தின் தலையெழுத்தையே மாற்றியெழுதவல்ல கலியுக பிரம்மாக்களாகிய பத்திரிகை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என் சார்பாகவும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும், இந்திய தேசத்தின் ஈடிணையற்ற தலைவி, எங்கள் தங்கத் தலைவி, தானைத் தலைவி அன்னை சோனியா அவர்களின் சார்பாகவும் முதற்கண் வணக்கங்களை பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்பது வள்ளுவன் வாக்கு. இத்துணை சிறப்புகள் வாய்ந்த கல்வி தொடர்பான மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இப்பேரவையோடு பகிர்ந்து கொள்வதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

*பிற்பகல் 1–05*

கல்விக்குக் கண் கொடுத்த கருந்தலைவர், அருந்தலைவர், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வழிநின்று கல்விக்கு முதன்மை இடம் கொடுத்து, அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதே எங்கள் முழுமுதற் பணி எனச் சொல்லுகின்ற வகையிலே, கல்வி மானியக் கோரிக்கையை முதல் மானியக் கோரிக்கையாக எடுத்துக்கொண்டுள்ள மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை முதற்கண் சமர்ப்பித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இனிவரும் காலங்களிலே இளைய சமுதாயத்தைப் பொறுத்தமட்டிலும் கைநாட்டுப் போடுபவர் என்னும் சிறுமை நீங்கி, கற்றவர் என்னும் பெருமை கொண்டு வாழும் வகையிலும், இல்லாதாரே இல்லை என்பதோடு கல்லாதாரும் இல்லை என்னும் சொல்லை உருவாக்கும் வகையிலும் 'அனைவருக்கும் கல்வி' என்னும் புதிய திட்டத்தை இவ்வரசு நிதிநிலை அறிக்கையின் வாயிலாக அறிவித்துள்ளதை நான் மனமார வரவேற்கிறேன். அதுமட்டுமல்ல, திட்டங்களை மட்டும் தீட்டிவிட்டு அதன் செயல்பாடுகளைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் இருந்தவர்களுக்கு மத்தியிலே, இந்த உயரிய திட்டம் உண்மையில் செயல்வடிவம் பெறுவதை உறுதி செய்யும் நோக்கோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடிப் பார்வையின்கீழ் பேரியக்கம் ஒன்று தொடங்கப்படும் எனச் சொல்லியுள்ளதையும் நாங்கள் மனமார வரவேற்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாத்தியார் பிள்ளை மக்கு" என்று ஒரு வழக்குச் சொல் உண்டு. வாத்தியார் பிள்ளை வேண்டுமானாலும் மக்காய் இருக்கலாம். ஆனால் வாத்தியாரே மக்காக இருந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் அறிவாற்றலைப் பெருக்கி, திறமையை வளர்க்க அவர்கள் அனைவருக்கும் மூன்றாண்டு பயிற்சி அளிக்கப்படும் என்பதையும், இனிமேல் நினைவுகூர் பயிற்சியில் பங்குபெறுபவர்களுக்கு மட்டுமே, ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படும் எனவும் அறிவித்திருப்பதை நாங்கள் மகிழ்வோடு வரவேற்கின்றோம். ஏனென்றால், "கோன் உயரக் குடி உயரும்"



என்று சொல்வார்கள். ஆகவே ஆசிரியர்களின் அறிவாற்றல் உயர உயர கல்வியின் தரமும் மேம்படும் என்கின்ற காரணத்தினால் இதனை முழு மனதோடு நான் வரவேற்கின்றேன்.

தொலைதூர மலைப் பகுதிகளில் உள்ள அரசினர் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றோர்–ஆசிரியர் கழகங்களுக்கு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்கு ஆதாரமான பொருளாதாரத்தை, அதாவது ஆசிரியர்களின் ஊதியத்தை யார் வழங்குவார்கள், பின்னர் இந்த ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா என்பதைப் பற்றியெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் கழகம் தங்களுக்கு வேண்டிய, கிடைக்கக்கூடிய நல்லாசிரியர்களை நியமித்துக்கொண்டால்கூட அவர்களுக்குத் தரும் சம்பளத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. மேலும் இதுபோன்ற மலைப் பகுதியிலே பணியாற்ற முன்வரும் ஆசிரியர்களுக்குக் கூடுதல் ஊதியத்தையும், சிறப்புச் சலுகைகளாக கூடுதல் சலுகைகளையும் அரசு அறிவித்து ஊக்குவிக்குமேயானால், இதுபோன்ற பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வு காணலாம் என்னும் எனது தாழ்மையான கருத்தினையும் இந்த மாமன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அரசினர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியத்தின்கீழ் வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியிடமிருந்து அதாவது NABARD வங்கியிடமிருந்து முதற்கட்டமாக நடப்பாண்டில் ரூ.30 கோடி நிதியுதவி பெறப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் நகர்ப்புறங்களில் உள்ள அரசினர் பள்ளிகளுக்கும் இதன் பயன்கள் நீட்டிக்கப்படுமா என்பதைப்பற்றி நான் அறிய விரும்புகின்றேன். ஏனென்றால், எனக்கு ஒரு சுயநலம் உண்டு. என்னுடைய மேற்குத் தொகுதியிலே இருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றிலேகூட அடிப்படை வசதிகள் இல்லாமல் அந்தப் பள்ளி இயங்கி வருகின்றது. ஆகவே இந்தத் திட்டத்தின் பயன்களை நகர்ப்புறங்களில் இருக்கும் பள்ளிகளுக்கும் நீட்டிக்க வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நடப்பாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கொண்ட முழுமையான பள்ளி, அதாவது ஒருங்கிணைந்த பள்ளி என்ற கொள்கையைத்தான் இந்த அரசு வலியுறுத்துவதாக நான் அறிகிறேன். ஏனென்றால், எந்த இடத்திலும் இந்த நிதிநிலை அறிக்கையிலேயோ அல்லது கொள்கை விளக்கக் குறிப்பிலேயோ பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்பிற்கு எனத் தனியாக Junior College என்னும் அடிப்படையிலே அங்கீகாரமோ அல்லது அதிகாரமோ வழங்கப்படும் என்னும் அடிப்படையிலே எங்குமே குறிப்பிடப்படவில்லை. இதை ஏன் நான் வலியுறுத்திக் கூறுகிறேன் என்றால், (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் சற்று பொறுத்தருள வேண்டும். ஏனென்றால் கடந்த ஆட்சியிலும் இதே கல்விக் கொள்கைதான் இருந்திருக்கிறது. ஆனால் இந்தக் கல்விக் கொள்கைக்கு முற்றிலும் முரணாக கடந்த ஆட்சியிலே பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளை மட்டும் கொண்ட பள்ளிகளுக்கு கிட்டத்தட்ட 100–க்கும் மேற்பட்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு அங்கீகாரமும், அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி பத்திரிகைகளிலேகூட பிரசுரம் ஆகியிருக்கிறது. ஆனால் பலமுறை இந்தச் செய்தி பத்திரிகைகளிலே பிரசுரம் ஆகியும்கூட கடந்த அரசு இதுகுறித்து மௌனம் சாதித்தது ஏன் என்று எங்கள் எல்லோருக்குமே புரியவில்லை. ஆகவே அவர்கள்தான் இதற்கு விளக்கம் தரவேண்டும். அதுமட்டுமல்ல, புதிதாகத் தொடங்கும் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை...

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Truncated Higher Secondary School என்ற concept வந்ததற்குக் காரணம், C.B.S.E பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக 10 ஆம் வகுப்பு முடித்த பிறகு பிளஸ் 1, பிளஸ் 2 வருவதற்கு இப்போது அதிகமான வாய்ப்புகளை உருவாக்குவதற்காக ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ், பிளஸ் 1, பிளஸ் 2, Higher Secondary–க்கு மட்டும் அனுமதி கொடுத்து, இந்த C.B.S.E மாணவர்களை அதில் சேர்த்துக்கொள்வதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் அதைத் தவறாகப் பயன்படுத்த மற்றவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள். நீங்கள் சொல்வதுபோல சென்ற ஆட்சியில்



100, 200 என்று தரவில்லை. முதன்முதலில் எங்கள் ஆட்சியில் 5 தரப்பட்டது, உதவி செய்வதற்காக. அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 28 வரையில் தந்திருக்கிறார்கள். ஆகவே இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போதும் இதனால் மற்ற மாணவர்களுக்கு தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. பொதுவாக, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ள ஏழையெளிய, குறிப்பாக ஆதிதிராவிட மாணவ மாணவிகள் கல்வியை, உயர் கல்வியைப் பெற வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. அதுதான் புரட்சித் தலைவியினுடைய கொள்கை. இந்த truncated plus 1, plus 2–வை நாம் எதற்காக அனுமதித்தோம் என்றால், நகர்ப்புறங்களிலும் சில இடங்களிலேதான் அந்தப் பள்ளி வர வாய்ப்பு இருக்கிறது. அதுவும் வியாபார ரீதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையின் காரணமாக சில வசதியுள்ள மாணவர்கள் மட்டும் அந்த நிலையத்தில் கல்வி பெற வாய்ப்புகள் வருகின்றன. எப்படி இப்போதெல்லாம் நகர்ப்புறங்களில் convent–ஆனது அதிகமாக வந்து, Corporation–னுடைய பள்ளியை கவனிக்காத ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகிறதோ, அதேபோல எதிர்காலத்தில் இதுபோல பிளஸ் 1, பிளஸ் 2 பள்ளிகள் மட்டும் வந்தால் வசதி படைத்தவர்கள் எல்லாம் இந்தக் கல்வியிலே படிக்கும்போது, நமது புரட்சித் தலைவி அவர்கள் சொல்கிறார்களே, உயர்நிலைப் பள்ளிகளையெல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவோம் என்று, அந்தக் கொள்கையைக் கொண்டு வரும்போது, அந்த மேல்நிலைப் பள்ளிகளுக்கு கிராமப்புறங்களிலே அதிக முக்கியத்துவம் இல்லாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். அதனால் ஏழையெளிய மாணவர்கள் அந்தப் பள்ளிகளில் படிப்பதும், வசதி உள்ளவர்கள் எல்லாம் அந்த Truncated Higher Secondary School–ல் படிக்கின்ற நிலைமையும் வந்துவிடும் என்பதற்காக இந்த அரசு இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலையில் இருக்கிறது. இதுபற்றிய முடிவை விரைவில் நாங்கள் தெரிவிப்போம், புரட்சித் தலைவி அவர்கள் அறிவிப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி எஸ். மகேஸ்வரி**: அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. அதுமட்டுமல்ல, புதிதாகத் தொடங்கும் தனியார் Matriculation பள்ளிகளை முறைப்படுத்த கல்வித் துறை சில விதிமுறைகளை விதித்துள்ளது. அதாவது தரமான கட்டட வசதி, விளையாட்டு மைதானம், நூலகம், அறிவியல் ஆய்வுக்கூடம், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இப்படி பல நிபந்தனைகள் உள்ளன. கூரை கட்டடமோ, லைட்ரூஃப்,

தார் அட்டை கட்டடமோ இருக்கக் கூடாது என்பதும், Building licence, Sanitary certificate போன்றவற்றை பெற்ற பிறகு அங்கீகாரம் பெற விண்ணப்பிக்க வேண்டும் என்பதும் விதிமுறை. ஆனால், இந்த விதிமுறைகளை எல்லாம் வீதியில் தூக்கி எறிந்துவிட்டு, பன்றி மேயும் குடிசைகளுக்குக்கூட Matriculation பள்ளி என்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பத்திரிகையில் செய்திகள் வந்துள்ளன. ஆகவே தாங்கள் இதுகுறித்தும் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொது மக்களுக்கான பள்ளிகள் செயல்பட அரசாங்கம் கொள்கை மற்றும் விதிமுறைகளை வகுத்த பின்னர், அவ்வாறு செயல்படாத பள்ளிகளை இயக்க அரசு அனுமதிக்கக்கூடாது என உச்ச நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பினை கருத்திற்கொண்டு, செங்கல்பட்டில் 100 ஆண்டுகளாக நடைபெற்ற இரும்புலியூர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், எழும்பூரிலே இயங்கி வந்த, 50 ஆண்டுகளாக நடைபெற்று வந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் அரசால் மூடப்பட்டிருக்கிறது. ஆகவே இதையும் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே இந்த மோசடி குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்தப் பள்ளிகளை முறைப்படுத்துவதற்குரிய நெறிமுறைகளை வகுக்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய ஊழல்கள் அற்ற, நேர்மையான, தூய்மையான...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தவறாக சில பள்ளிகள் செயல்படுகின்றன என்பதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அதற்குரிய செய்திகளை எல்லாம் கொடுத்தார்கள் என்றால், புரட்சித் தலைவி அவர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–15*

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து வந்த பத்திரிகை ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அவற்றை இந்தப் பேரவையிலே தலைவர் மூலம் சமர்ப்பிக்க நான் காத்திருக்கிறேன்.

மேலும் இத்தகைய ஊழல்கள் அற்ற, நேர்மையான, தூய்மையான, வெளிப்படையான கல்வி நிர்வாகம்தான் தற்போது நடந்து வருகிறது



என்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையிலே, ஆசிரியர்கள் பணியிட மாற்றங்களுக்கு கவுன்சலிங்முறையை அறிமுகம் செய்து கல்வித் துறையிலே ஒரு புதிய சாதனையை, சகாப்தத்தைத் தொடங்கியிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மட்டுமல்ல, தமிழகமே பெருமையோடு ஏறிட்டு நோக்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதுபோல, இந்த கவுன்சலிங் முறையினால் கிராமப்புறப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாகாமல் நாம் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு கிராமப்புற பள்ளி ஆசிரியர்கள் நகர்ப்புறப் பள்ளிகளுக்குப் பணியிட மாறுதல் கோராமல் இருக்கும் வண்ணம் அவர்களுக்குச் சில சிறப்புச் சலுகைகளை அரசு வழங்க முன்வர வேண்டும்; அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் பஞ்சாயத்து ராஜ் என்னும் கிராம மேம்பாட்டினை நம்மால் நிறைவேற்ற இயலும் என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'ஓலைக்குடிலுக்கில்லை கல்விஒளியென்ற பழிச்சொல்லை நீக்கிடனும்– முயன்றே ஏழை, எளியோர் எவர்க்கும் கல்வி பொதுநிலை ஆக்கிடனும்.' என்னும் வகையிலும்,'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்னும் கவிமணியின் கனவினை நனவாக்கும் வகையிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவியருக்கு அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கும் புரட்சித் தலைவி அவர்களின் புனிதமான கல்விப் புரட்சியையும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் உயரிய திட்டத்தையும் நான் வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பெண்மை வாழ்கவென கூத்திடும் தேசத்திலே
பெண் சிசுக்களுக்கு தாய்ப்பால் பஞ்சம்;
எருக்கம் பாலூட்டி எமனுக்கு தாரை வார்க்கும்
தாய்மையற்ற பேய்களின் வஞ்சம்'

என்று நான் ஒருமுறை சாடியிருந்தேன். ஆனால் இனி அந்தக் கவலை இல்லை. ஏனென்றால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கும் அருமையான திட்டங்களைப் பார்க்கும்போது–பெருமை சேர்க்கும் பல்வேறு திட்டங்களை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கும் திட்டங்கள். இவற்றையெல்லாம்

பார்க்கும்போது–இனி ஆண் சிசுக் கொலை ஆரம்பம் ஆகாமல் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆதங்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

'எங்கெங்கு காணினும் சக்தி மயம் – அந்தோ
ஆணிற்கு இங்கே பெரும் விரக்தி பயம்'

என்னும் நிலைகூட இனி உருவாகலாம். ஆகவே ஆண்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உண்மை நிலை என்னவென்றால் 79 விழுக்காடு பெண்கள் பள்ளி இறுதி வகுப்போடு தங்கள் படிப்பினை முடித்துக்கொள்கிறார்கள் என புள்ளிவிவரக் கணக்குகள் சொல்கின்றன. இனி அந்த நிலை மாறி, பெண் கல்வி மேம்பட இத்திட்டங்கள் நிச்சயமாக அடிகோலும் என்பதை நான் வரவேற்கின்றேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயிலும் பள்ளிகள் மற்றும் மாணவர் இல்லங்களுக்கான கட்டடங்கள் கட்டப்படும் எனவும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக 43 மாணவர் விடுதிகள் கட்டப்படும் எனவும் குறிப்பிட்டிருப்பது, ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசு என்பதை உறுதிப்படுத்தும் வகையில், மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கான உணவு செலவுத் தொகையைக் கருணையுள்ளத்தோடு 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தியுள்ளதையும் நான் மனதார வரவேற்கின்றேன்.

இருப்பதை விட்டுவிட்டு, பறப்பதைப் பிடிக்க எண்ணுவது பேதமை என்பதால், புதிய கல்வி நிறுவனங்கள் உருவாக்குவதைவிட, இருக்கின்ற நிறுவனங்களின் தரத்தை உயர்த்தும் நோக்கோடு ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை இவ்வரசு உருவாக்க இருப்பதை நான் வரவேற்கிறேன். அத்தோடு, பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறையை அமல்படுத்த இருப்பதையும், கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரி இட ஒதுக்கீட்டினை 15 விழுக்காடிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்துவதையும் நான் முழுமனதோடு வரவேற்கின்றேன்.



அதேபோன்று, பெண்கள் கல்லூரியோ ஏராளம் இங்குண்டு; ஆண்கள் கல்லூரியும் தாராளம் அவர்க்கு இடமுண்டு என்று சொல்கின்ற வகையிலே மொத்தம் இருக்கின்ற 440 கலை, அறிவியல் கல்லூரிகளில் 120 மகளிர் கல்லூரிகள் என்பதுபோக, மீதமுள்ள ஆடவர் கல்லூரிகளிலும் 30 சதம் மாணவியரைச் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும் என்பதையும்–ஒருவழியாக மகளிர் மசோதா இங்கே நிறைவேறிவிட்டது– நான் மனதார வரவேற்கின்றேன்.

அதேபோன்று மத்திய அரசுப் பணிகளிலே பெண்கள் அதிகமாகப் பணி வாய்ப்பு பெறுவதற்காக பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என்பதையும் நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்றால், தற்போது மத்திய அரசுப் பணிகளிலே இருக்கின்ற மொத்தப் பணி இடங்களிலே 7.58 விழுக்காடு மட்டுமே பெண்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். இனி, இந்த நிலை ஏற்றம் பெறக்கூடும்.

மேலும், இந்த நல்வாய்ப்பை நழுவ விடக்கூடாது என்பதனால் என் தொகுதி சம்பந்தமான சில கல்விப் பிரச்சினைகளையும் இந்த மன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவை மேற்குத் தொகுதியில், ராஜ வீதியிலே அமைந்திருக்கின்ற, Government Training School என்று 12 ஆம் வகுப்பு வரை உள்ள ஒரு மேனிலைப் பள்ளி இருக்கிறது. இந்தப் பள்ளியிலே கிட்டத்தட்ட 3500 மாணவியர் பயிலுகின்றனர். அது பெண்களுக்கான பள்ளி. Ladies special என்று வைத்துக்கொள்ளலாம். ஏனென்றால், அனைத்து ஆசிரியர்களும் இதில் பெண்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் இந்தப் பள்ளியிலே போதுமான கட்டட வசதியும் இல்லை, போதுமான கழிப்பறை வசதியும் இல்லை; போதுமான இருக்கை வசதியும் இல்லை; ஆசிரியர்களுக்கும் இதே நிலைதான் இருந்துகொண்டு வருகிறது. அதேபோன்று இந்தக் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கு ஆள்கூட இங்கு இல்லை. ஏதோ, கழிப்பறை அடைத்துக்கொண்டால் நாங்களே மாநகராட்சியிலே சொல்லி அவ்வப்போது சுத்தம் செய்து தருவதோடு சரி. ஆகவே இவர்களுக்குக் கூடுதலாகக் கழிப்பறை வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி, 15 மணித் துளிகள் ஆகியிருக்கின்றன. கொஞ்சம் தயக்கத்தோடுதான் சொல்கிறேன். ஆண்கள் ஜாக்கிரதை என்று வேறு சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு)

பிற்பகல் 1–20

**திருமதி எஸ். மகேஸ்வரி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையற்ற கல்வி தர வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். ஆகவே கல்வி மீதான விவாதத்தின்போது தடை வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தப் பள்ளியானது ஆங்கிலேயர்கள் காலத்திலே கட்டப்பட்ட பள்ளி. ஆங்கிலேயன் தந்து சென்ற அரைவேக்காட்டுக் கல்வித் திட்டம் என்று நான் ஒருமுறை சொல்லியிருக்கின்றேன். ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற கட்டடமும் அரைவேக்காடாகவே இருக்கிறது. ஆகவே இந்தக் கட்டடத்தை நீங்கள் புதுப்பித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூடுதல் இருக்கை வசதிகளும், கழிப்பிட வசதிகளும் ஏற்படுத்தித் தருவதோடு, நிரந்தரமாக இரண்டு துப்புரவுப் பணியாளர்களை இந்தப் பள்ளிக்கென நியமிக்க வேண்டுமாயும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இதே வளாகத்திலே ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே படிக்கும் மாணவிகள் காலையிலே பள்ளி வகுப்பாக அதனை உபயோகப்படுத்துகின்றார்கள். மாலையிலே அதே பள்ளி வகுப்பறைகள் பள்ளி ஆசிரியர் தங்கும் விடுதிகளாகவும் மாறிவிடுகின்றன. ஆகவே அவர்களுக்கு பிரத்யேகமாக, தனியாக தங்கும் விடுதிகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த தங்கும் விடுதிக்காக மட்டும் 27 இலட்சம் எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன் என்றால், அன்றைக்கு மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள், உங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இந்த இரண்டு கட்டடங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்தால் எங்களுக்கு ஒரு வருடத்திற்குரிய நிதி இதற்கே முழுமையாகப் போய்விடும். அந்தக் கவலையோடுதான் இதைச் சொல்கிறேன். ஆகவே தயவுகூர்ந்து நீங்கள் இந்தக் கோரிக்கையையும் ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மானியத் தோட்டத்திலே உள்ள அரசினர் மகளிர் நடுநிலைப் பள்ளியில் ஒன்று முதல் எட்டு வரை வகுப்புகள் உள்ளன. அங்கே ஒரேயொரு தமிழாசிரியரும், ஒரேயொரு இடைநிலை ஆசிரியரும்தான் இருக்கிறார்கள். ஆகவே கூடுதலாக ஐந்து இடைநிலை ஆசிரியர்களை நியமித்துத்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே, 1987 ஆம்



ஆண்டு நடுநிலைப் பள்ளிகளுக்கும் மேம்பட்ட பாடத் திட்டங்களைக் கற்பிக்கும் வகையில் 3000 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதிலே உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் மட்டும் படிப்படியாக பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பெற்றுவிட்டனர். ஆனால் காலியிடம் இல்லாத காரணத்தினால் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட சுமார் 2000 பட்டதாரி ஆசிரியர்கள் மட்டும் எத்தகைய பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பெற இயலாமல் இடைநிலை ஆசிரியர்களைவிட குறைவான ஊதியம் பெற்று வருகின்றனர். ஆகவே இவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஊதியத்தையும், பதவி உயர்வு போன்ற சலுகைகளையும் அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் காலி ஸ்தானங்களுக்கும் மற்றும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஏற்படும் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கும் இவர்களுக்கு முன்னுரிமை அளித்து நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வாயிலாக மட்டும் 3000 முதல் 5000 வரை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் ரூபாய் 300 முதல் 1000 வரை ஊதியம் பெற்று வருவதாகவும், இவர்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசுப் பணிக்காகக் காத்திருப்பதாகவும் சொல்லியுள்ளனர். ஆகவே புதிய ஆசிரியர்கள் நியமனத்தின்போது இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்து ஒரு கோரிக்கை. இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் ராஜு* அவர்கள் கோபித்துக்கொள்வார்கள். நீலகிரி மாவட்டத்தில் 1990 முதல் 2001 ஆம் ஆண்டு வரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த 150 மாணவர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கின்றார்கள். பிற மாவட்டங்களில் 1997 ஆம் ஆண்டு வரையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் ஆசிரியர் பணிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் மட்டும் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் குறைந்த அளவே பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தொடக்கத்திலே 3:1, அதாவது 3 பெண்கள், ஒரு ஆண் என்னும் விகிதத்திலே பணியில் அமர்த்தப்பட்டு வந்தனர். தற்போதைய நிலையில் 50 பெண்களும், 50 பொதுப் பணி மூப்பு அடிப்படையிலும் அமர்த்தப்படுவதால் பயிற்சி பெற்ற ஆண் ஆசிரியர்கள்

பணி நியமனம் செய்யப்பெறுவது மிகவும் கடினமாக உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து இடைநிலை ஆசிரியர் காலியிடங்களை நிரப்ப வேண்டும் எனவும், தொடக்கத்தில் அளிக்கப்பட்ட 3:1 என்ற விகிதத்தின் அடிப்படையில் பணியிடம் அமர்த்தப்பட வேண்டும் எனவும், நீலகிரி மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு முதல் பணியில்லாமல் இருக்கும் இவர்களை பிற மாவட்டங்களில் பணி மூப்பு அடிப்படையில் பணிக்கு அமர்த்த வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கிறேன்.

அதேபோன்று கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியில்லாமல் இருக்கிறார்கள். ஆங்காங்கு தனியார் பள்ளிகளிலே மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர். புதிய ஆசிரியர்கள் நியமனத்தின்போது இவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும், இவர்கள் அனுபவம் மிகுந்தவர்களாக இருப்பதால் எழுத்துத் தேர்வுக்குப் பதிலாக சீனியாரிட்டி அடிப்படையிலே நேர்முகத் தேர்வின் வாயிலாக இவர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் வளர்ச்சி பண்பாடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேஸ்வரி, இதுபோன்ற கோரிக்கைகளை நீங்கள் கல்வி அமைச்சரிடத்திலே எழுத்து வடிவத்திலே கொடுத்துவிடலாம். பிரச்சினை இல்லை.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** தமிழ் வளர்ச்சி, பண்பாடு குறித்து ஒரேயொரு கோரிக்கை. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கான தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசாணை (நிலை) எண் 314–ன்படி வழங்கப்பட்டு வந்த நிதியுதவித் தொகை சில தமிழறிஞர்களுக்கு மட்டும் 31–3–1999–க்குப் பிறகு எவ்விதக் காரணமும் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் ஏழ்மை நிலையிலும், வயோதிக நிலையிலும், ஆதரவற்ற நிலையிலும் இருக்கின்ற காரணத்தால் உதவித் தொகையை முன்பாக்கியோடு வழங்கிடவும் தொடர்ந்து வழங்கவும், நீங்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும், இதனை உயர்த்தித் தருவதற்கும் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன். முடிந்த அளவுக்குப் பேசுங்கள். மதியம் வேண்டுமானாலும் தொடரலாம்.



*பிற்பகல் 1–25*

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறைக்கு மனித வள மேம்பாட்டுத் துறை என்ற மற்றொரு பெயரும் உண்டு. அந்தப் பெயர் எந்த மாநிலத்திற்குப் பொருந்துகிறதோ பொருந்தாதோ தமிழகத்திற்கு நிச்சயமாகப் பொருந்தும். காரணம் நம்முடைய கனிம வளம், நீர்வளம் எல்லாம் சற்றுக் குறைவாக இருக்கின்ற இந்தக் காலகட்டத்திலே கல்வியின் மூலமாகத்தான் நாம் முன்னேற வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் கருத்திலேகொண்டு இந்த ஆண்டு கல்விக்காக, தமிழக அரசு, மொத்தச் செலவில் 4978 கோடி ரூபாய் செலவழிக்க முன்வந்திருப்பது உள்ளபடியாகவே மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தத் தொகையானது சென்ற ஆண்டைவிட 330 கோடி ரூபாய் அதிகம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதேசமயத்தில் உயர் கல்விக்காக நாம் செலவழிக்கிற தொகை என்ன என்று பார்க்கின்றபோது அது 27.59 கோடி ரூபாய். அது சற்றுக்குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. இதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, 0.56 சதவிகிதம் சென்ற ஆண்டைக் காட்டிலும் குறைகிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். ஆனால் அதேசமயத்திலே பள்ளிக் கல்விக்காக நாம் செலவழிக்கின்ற தொகை இந்த ஆண்டு 324.97 கோடி ரூபாய் அதிகமாகும். அது 1.07 சதவிகிதம் அதிகமாக இருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே பல்வேறு நல்ல அம்சங்களை என்னால் பார்க்க முடிந்தது. ஆதிதிராவிட மாணவிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகள், அதேசமயத்திலே நம்முடைய கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள், இவற்றையெல்லாம் பார்த்து உள்ளபடியே நம்முடைய சமுதாயம் மகிழ்ச்சி அடையும் என்று உறுதியாக நம்புகிறேன். இன்றைக்கு இந்தப் பட்டியலைப் பார்க்கிறபோது அதிலே B.B.M., B.Litt., B.C.A. ஆகிய பட்டப் படிப்புகள் அரசுக் கல்லூரிகளில் இருப்பதாகக் குறிப்பிடப் படவில்லை. அது சரியா தவறா என்பதை அமைச்சர் அவர்கள்தான் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்புகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது தனியார் கல்லூரிகளைவிட அரசுக் கல்லூரிகள் சிறப்பாக விளங்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார்கள். பொதுவாக தனியார் கல்லூரிகளில் Job Oriented Courses அதிகமாக இருக்கின்றன. ஆகவேதான் மாணவர்கள் அந்தக் கல்லூரிகளையே நாடிச் செல்கிறார்கள். நம்முடைய அரசுக் கல்லூரிகளில் எல்லாம் இத்தகைய பாடத் திட்டங்கள் இல்லை என்ற நிலைமை வருகிறது. ஆகவே இந்த ஆண்டு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தனியார் கல்லூரிகளில் எத்தகைய பாடத் திட்டங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அரசுக் கல்லூரிகளில் கொண்டுவர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய course-களை வருங்காலத்தில் நாங்கள் அறிமுகப்படுத்த விருக்கிறோம் என்றுதான் இதிலே சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) இல்லை, இல்லை, இந்த list–ல் இருக்கிறது. எதிர்காலத்தில் செயல் படுத்துவதாகச் சொல்லியிருக்கிறோம். அதனால்தான் இப்போது மாணவர்கள் அதிகமாக வருகிறார்கள். அரசுக் கல்லூரிகளில் இந்த வருடம் பார்த்தீர்களென்றால் பி.காம். போன்றவற்றிற்கெல்லாம் அரசுக் கல்லூரிக்குத்தான் போகிறோம் என்கிறார்கள். வருகிறவர்களிடம் கேட்கிறேன். Recommendation கேட்கிறவர்களுக்குக்கூட, அரசுக் கல்லூரிக்கு நாம் சிபாரிசு செய்ய முடியாது. இருந்தாலும் மாணவர்கள பட்டாளம் கேட்பதெல்லாம், எங்களுக்கு அரசினர் கல்லூரியில் இடம் கொடுங்கள் என்றுதான். தனியார் கல்லூரிக்குப் போங்கள், நாங்கள் சொல்கிறோம் என்றால்கூட வேண்டாம் என்றுதான் சொல்கிறார்கள். அந்த நிலைமை இப்போது உருவாகியிருக்கிறது என்று சொல்ல விரும்புகின்றேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 440 கலை, அறிவியல் கல்லூரிகளில் 80.36 விழுக்காடு தனியாரிடம்தான் இருக்கிறது. 13.6 விழுக்காடு கல்லூரிகள் மட்டும்தான் அரசால் நடத்தப்படுகின்றன. அதேபோல, 205 தொழில்நுட்பப் பயிலகங்களிலே, 89.26 விழுக்காடு தனியார்வசம் உள்ளது. தனியார் நடத்துவது. அதைப்போல, 272 பொறியியல் கல்லூரிகளில் 96.84 விழுக்காடு

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. லட்சுமணன் அவர்கள், மதியமும் பேச வேண்டுமா அல்லது பேசி முடித்துவிடுகிறீர்களா?

**திரு. வி.கே. லட்சுமணன்:** மதியமும் பேசுகிறேன்.



## 6. அறிவிப்புகள்– தொடர்ச்சி

### (இ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதியமும் பேசுகிறீர்களா, அப்படியானால் உங்களது பேச்சுக்கு ஒரு இடைவேளை. பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறவிருப்பதால் மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4–30*

*பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 7. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு, மறைந்த அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் தேசிய கல்விக் கொள்கையை அறிவித்தபோது, கல்விக்காக செலவிடுகிற பணம் ஒரு முதலீடு, investment என்று சொன்னார்கள். அதேபோல தமிழக அரசும் கல்விக்காக ஒதுக்குகிற பணத்தை 30 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்று நான் இங்கே தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கொடுக்கப்பட்டிருக்கிற இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயிருக்கின்ற அட்டவணையிலிருந்து

மேலும் ஒரு குறிப்பைச் சொல்கிறேன். அது தவறாக இருந்தால் கல்வி அமைச்சர் அவர்கள் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அட்டவணையில் M.C.A. படிப்பை அரசுக் கல்லூரிகளில் ஆடவர்கள் படிக்க முடியாதது போலவும், M.B.A. படிப்பை அரசுக் கல்லூரிகளில் பெண்கள் படிக்க முடியாதது போலவும் ஒரு விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சரியா, தவறா என்று அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் காலையிலே குறிப்பிட்டதுபோல தமிழ்நாட்டில் சராசரியாக இருக்கிற கல்வி நிறுவனங்களில் 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தனியாராலே நடத்தப்படுகின்ற நிறுவனங்கள். . அது பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, கலை, அறிவியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, தொழில்நுட்பக் கல்லூரியாக இருந்தாலும் சரி, இப்படிச் செய்கின்றபோது அந்த நிறுவனங்களுக்கு அவை இணைக்கப்பட்டிருக்கிற பல்கலைக்கழகத்தினுடைய ஆட்சிமன்றக் குழுவிலே, ஆட்சிக் குழுவிலே போதுமான இடமில்லை. நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், ஆட்சிக் குழு 'Syndicate' என்பது ஒரு 'Academic Body' அல்ல, அது வெறும் 'Administrative Body'. கல்லூரியினுடைய தாளாளர்கள், தலைவர்கள் இவர்கள் அனைவரும் நிர்வாகத்திலே சிறந்தவர்கள். ஆக, நிர்வாகத்திலே தொடர்புடைய 'Syndicate'-லே அவர்களுக்கு இடம் இருப்பது மிக மிக அவசியம். இந்த அரசு அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல 1991 ஆம் ஆண்டு நான் இந்தச் சட்டமன்றத்திலே அடியெடுத்து வைத்தபோது, நான் ஒரு கோரிக்கையை வைத்தேன். State Council for Higher Education– மாநில உயர் கல்வி மன்றம்— மற்ற மாநிலங்களில் இருப்பதுபோல, ஆந்திராவில் இருப்பதுபோல, தமிழ்நாட்டிலேயும் அதைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தேன். அந்தச் சட்டமன்றத்தினுடைய இறுதி நாட்களில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழ்நாட்டில் இன்றைக்கு State Council for Higher Education இயங்கி வருவதைப் பார்க்கிறோம். இங்கேகூட நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இந்த மாநில உயர் கல்வி மன்றத்திலேகூட தனியார்க்கு, கல்லூரி நிர்வாகிகளுக்கு குறிப்பாக தாளாளர், தலைவர் போன்றவர்களுக்கு அதிலே இடம் இருக்க வேண்டும். காரணம் இந்த State Council கூட ஒரு Administrative Body–தான். அவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லமுடியும்.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, State Council for Higher Education என்பது ஒரு Administrative Body கிடையாது, அது Advisory Body. ஆக அந்தமாதிரி நம்முடைய பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் ஒரு பரஸ்பரம் இருக்க வேண்டும். பொதுவான பாடத்திட்டத்தை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்கான சில அறிவுரைகளை வழங்குவதற்காக, அத்தோடு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நிலையிலேதான் இருக்கிறதேயொழிய அது ஒரு Administrative body என்று சொல்கிற நிலையில் இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

## 6. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஈ) இங்கிலாந்து பாராளுமன்ற பிரபுக்கள் சபை உறுப்பினர் லார்டு டேவிட் லீ பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து அவை நடவடிக்கைகளைப் பார்வையிடல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபையிலிருந்து லார்டு டேவிட் லீ தற்சமயம் சென்னைக்கு வருகை புரிந்துள்ளார். அவர் இப்போது பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து அவை நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரை வரவேற்கும்முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 4–35*

" I am pleased to inform Hon'ble Members of this House that this Assembly is privileged to receive Lord David Lea of Crondall, Member of Commonwealth Parliamentary Association of United Kingdom who is on a visit to Chennai and is presently in the Speaker's gallery witnessing the proceedings of the Assembly."

## 7. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே சிண்டிகேட்டிலே இருக்கிற மொத்த உறுப்பினர்களைப் பார்க்கிறபோது பெரும் பான்மையானவர்கள் ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். ஆசிரியர்கள் ஒன்றாகச் சேர்ந்து அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவும்தான் இன்றைக்கு சிண்டிகேட் இருக்கிறதேயொழிய ஒட்டுமொத்தமாக கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக அது இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆக, சிண்டிகேட்டிலேயாவது கல்லூரி நிர்வாகிகள் பிரதிநிதிகளாக இருப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசு தரப்பிலேயிருந்து வருகிற பிரதிநிதிகள் அந்தக் கூட்டத்திலே பெரும்பாலும் கலந்துகொள்ள முடிவதில்லை. காரணம், இப்போது சற்றொப்ப 11 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் அந்த அரசுச் செயலாளர் போக வேண்டுமென்று சொன்னால், அவர் சென்னையிலே இருக்கவே முடியாது. அவர் தினந்தினம் ஏதேனும் ஒரு சிண்டிகேட் மீட்டிங்கிற்குப் போய்க் கொண்டுதான் இருக்க வேண்டுமேயொழிய, சென்னையிலே இருக்கவே முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதைக் கருத்திலேகொண்டு இந்த சிண்டிகேட்டிற்கு கல்லூரி தாளாளர்களை உறுப்பினர்களாக, பிரதிநிதிகளாக அரசு ஏற்றுக்கொள்ள வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளிலே ஏறத்தாழ 15 ஆயிரம் இடங்கள் காலியாக இருப்பதாக எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 15 ஆயிரம் இடங்கள் காலியாக இருப்பது உண்மையிலேயே கவலை அளிக்கும் விஷயமாகும். இதை எப்படி சமாளிக்கலாம் என்று கேட்கின்றபோது, மாணவர்கள் சேர்க்கைக்குக் குறைந்தபட்சத் தகுதியாக நாம் சொல்வது 60 சதவீதம் மதிப்பெண்கள். அது மற்ற மாநிலங்களைப் போல, பாண்டிச்சேரி, கர்நாடகாவைப் போல 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியும்



என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே எப்படியோ கடந்த பல ஆண்டுகளாக டெல்லியிலேயிருந்து நமக்கு வர வேண்டிய சலுகைகள் கிடைக்கவில்லை, நிறுவப்பட வேண்டிய முக்கியமான தலைமை நிறுவனங்கள் எல்லாம் இங்கே நிறுவப்படாமலே போய்விட்டன. சான்றாக, பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு ஒரு மண்டல மையம் வேண்டும் என்று நாம் பலமுறை கேட்டோம். ஆனால் அந்த மண்டல மையமானது நாம் கேட்ட பின்னாலே திரு. ராமிரெட்டி அவர்கள் இங்கே வந்து சென்ற பின்னாலே, ஹைதராபாத்திற்குப் போய்விட்டது. அதற்குப் பின்னாலே மீண்டும் ஒரு மண்டல மையம் பெங்களூருக்குப் போய்விட்டது. ஆக, பல்கலைக்கழக மானியக் குழுவினுடைய மையங்கள் எதுவுமே இப்போது சென்னையிலே இல்லை. இது ஒன்று. இரண்டாவது, National Assessment and Accreditation Council – NAAC என்று சொல்லக்கூடிய அந்த நிறுவனத்தினுடைய Headquarters – தலைமையிடம் இப்போது பெங்களூரிலே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னாலே AICTE-க்கு Regional Centre சென்னையிலே இருந்தது. அதற்குப் பின்னாலே அதையும் இரண்டாகப் பிரித்து South Western Zone என்ற ஒன்றை உருவாக்கி அதையும் பெங்களூருக்குக் கொண்டு போய்விட்டார்கள். ஆக, டெல்லியிலேயிருந்து ஏதேனும் ஒரு தலைமை நிறுவனம் நிறுவப்பட வேண்டுமென்று சொன்னால், அது எப்படியோ தமிழ்நாட்டிற்கு வராமல், ஒன்று ஆந்திராவிற்கோ அல்லது கர்நாடகாவிற்கோ போய்விடுகிறது. உங்களுடைய ஆட்சிக்காலத்திலே தமிழ்நாட்டிற்கு அத்தகைய ஒரு நிறுவனத்தை டெல்லியிலேயிருந்து வாதாடிக் கொண்டுவர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-40

அடுத்தபடியாக கல்லூரிப் பணி நாட்கள். பல்கலைக்கழக மானியக் குழு புதிய ஊதிய விகிதத்தை அறிவித்தபோது எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் அதேசமயத்திலே இந்தப் பணி நாட்களைப் பற்றி அவர்கள் எதுவுமே குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள். Rastogi Committee-ஆனது ஒரு பரிந்துரையைச் செய்தது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே அன்றைக்கிருந்த தமிழக அரசு 111 என்ற ஒரு அரசாணையைப் பிறப்பித்தது. அந்த

அரசாணையின்படி ஒவ்வொரு கல்லூரியும் 180 நாட்கள் பணியாற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 180 நாட்கள் என்று சொன்னால் அதை இரண்டு விதமாகச் செய்யமுடியும். ஒன்று 36 வாரங்கள் கொண்ட 180 நாட்களாகவும் இருக்கலாம் அல்லது 30 வாரங்கள் கொண்ட 180 நாட்களாகவும் இருக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தமட்டிலே அது 36 வாரமாக இருக்கும் என்று சொன்னால் மாணவர்களுக்குப் பயிலும் நாட்கள் அல்லது Contact classes என்று சொல்லப்படுகிற அந்த வகுப்பானது, அதனுடைய எண்ணிக்கை குறைந்துபோக வாய்ப்பிருக்கிறது. பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆண்டொன்றுக்கு 1200 மணி நேரம் ஒரு மாணவன் கல்லூரியிலே படிக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இப்போதிருக்கிற நிலைமையிலே 36 வாரம் என்று கணக்கு எடுத்துக்கொண்டால், கல்லூரி மாணவர்கள் 900 மணி நேரம்தான் அந்த Contact class–லே இருக்க முடியும். அப்படியிருக்கின்றபோது 300 மணிநேரம் மாணவர்களுக்கு ஆசிரியர்களோடு சேர்ந்து பயில்கின்ற வாய்ப்பு குறைந்து போய்விடுகிறது. எனவே ஒரு வாரத்திலே 6 நாட்கள் பணிபுரிய வேண்டும். அதாவது 5 நாட்கள், ஒரு நாளைக்கு 7 மணி நேரம் அதுபோல 35 மணி நேரமும், கடைசி நாள் 5 மணிநேரமும் ஆக ஒரு வாரத்திலே 40 மணி நேரம் பணியாற்ற வேண்டும். இந்தக் கணக்குப்படி வாரம் 40 மணி நேரம் அவர்கள் பணியாற்றுகிற ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது எல்லா பொறியியல் கல்லூரிகளுக்கும் சேர்த்து ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க அரசு முடிவு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். அது மிக மிகத் தேவையான ஒன்று. ஆனால் அதேசமயத்திலே, மத்திய அரசோடு பேசி சென்னையிலே நமக்கு A.I.C.T.E. இல்லாவிட்டாலும் சரி, அல்லது மானியக் குழுவினுடைய Regional Centre இல்லாவிட்டாலும் சரி, குறைந்தபட்சம் ஒரு Model University–யாவது சென்னையிலே மத்திய அரசினால் உருவாக்கப்படும் என்று சொன்னால் அது நமக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே சொன்னதுபோல இந்த State Council for Higher Education அவர்களுடைய பணி என்னவாக இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன் என்று சொன்னால், அதுவும்கூட பல்கலைக்கழக மானியக் குழுவினுடைய விருப்பத்திற்கேற்ப, எல்லா கல்லூரிகளுக்கும் முடிந்த அளவிற்கு Autonomy சுயாட்சி, தன்னாட்சி வாங்கிக் கொடுப்பதற்கு அது முயற்சி செய்ய வேண்டும். ஆனால்



இன்றைக்கு அப்படிச் செய்யப்படுகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே இன்றுவரை முயற்சி செய்து 44 கல்லூரிகளுக்குத்தான் தன்னாட்சி கிடைத்திருக்கிறது. இன்னும் அதிகமான கல்லூரிகளுக்குத் தன்னாட்சி கிடைக்க வேண்டும். அதுதான் U.G.C–யினுடைய குறிக்கோள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Private Colleges Regulation Act, 1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அன்றைக்கு இந்த Unaided Colleges–அது சுயநிதிக் கல்லூரிகள் என்று நான் சொல்லமாட்டேன் – உதவி பெறாத கல்லூரிகள் இல்லை. அதற்குப் பின்னாலேதான் உதவி பெறாத கல்லூரிகள் தோன்றின. ஆனால் இன்றைக்கு இந்த ஒரே சட்டத்தை வைத்துக்கொண்டு இந்த இரண்டுவிதமான கல்லூரிகளையும் நாம் கண்காணிக்க முடியுமா என்று சொன்னால் நிச்சயமாக முடியாது. ஆகையினால் இன்றைக்கு இந்தச் சட்டத்தை, உதவி பெறாத கல்லூரிக்கு என்று ஒரு சட்டமாகவும், உதவி பெறும் கல்லூரிக்கு என்று தனியாக இன்னொரு சட்டமாகவும் நாம் உருவாக்கினால்தான் அதனுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

அடுத்து, தந்தைப் பெரியார் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகத்திலே நீண்ட நாட்களாகப் பதிவாளர் நியமிக்கப்படாமல் இருக்கிறது என்றும் நிதி அலுவலர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதாகவும் எனக்குத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அந்தத் துணை வேந்தருக்கு தாங்கள் அறிவுரை நல்கி அங்கே அவர்களை நியமிப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–45

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரியார் பல்கலைக்கழகத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது அங்கு பதிவாளர் போன்ற பல்வேறு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். பெரியார் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, சென்னை பல்லைக்கழகமாக இருக்கட்டும், பாரதியார், பாரதிதாசன் போன்ற எல்லா பல்கலைக்கழகங்களிலும் இன்னும் பதிவாளரைப் போடவில்லை. நான் அதற்குரிய துணை வேந்தரிடம் தொடர்ந்து தொடர்புகொண்டு இதைப்பற்றி வினா எழுப்பியபோது, அவர்கள் சொல்லியது எல்லாம்

விரைவிலே நிரப்புவதாகச் சொல்லிவிட்டு இன்னொரு காரணமும் சொன்னார்கள். நீங்கள் State Council for Higher Education என்று சொன்னீர்களே, அதில் சில Guidelines கொடுத்திருப்பதாகவும், வழிமுறைகள் கொடுத்திருப்பதாகவும், அந்த Guidelines–க்கு ஏற்ப, எல்லா பல்கலைக்கழகங்களிலும் ஒருமித்த ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிரப்பலாம் என்று காத்திருப்பதாகவும் சொன்னார்கள். நான் சொன்னேன், இருக்கும் ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு நீங்கள் அந்த Rules and Regulations–படி நிரப்பிக்கொள்ளலாம். இதற்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லியிருக்கின்றேன். சில இடங்களில் சிலருக்கு அது வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்படி அவர்கள் in-charge என்று போட்டுக்கொண்டு, ஒரு மாதத்திற்கு ஒரு பதிவாளர், 6 மாதத்திற்கு ஒரு பதிவாளர், திரும்பவும் ஒரு ஆண்டுக்கு ஒரு பதிவாளர் என்று இப்படியெல்லாம் பல பல்கலைக்கழகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நான் ஏதோ ரொம்ப அதிகமாகத் தலையிட்டால் ஏதோ Autonomous–லே அமைச்சர் தலையிடுகிறார் என்ற செய்தி பத்திரிகையிலே வர ஆரம்பித்துவிடும். பத்திரிகைகளில் இப்படி வந்துகொண்டிருக்கின்றன. அமைச்சரைப்பற்றி, எப்படி செயல்படுகிறார் என்பதுபற்றி பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் சொன்ன கருத்துகள் நல்ல கருத்துகள்தான். நீங்கள் சொன்ன கருத்தை அவர்களிடம் நான் சொல்வது, as a Postman மாதிரி செய்கிறேன். பிறகு அவர்கள் செயல்படுவது அவர்கள் கையிலேதான் இருக்கிறது. உறுப்பினருடைய எண்ணத்தையும், இந்த மன்றத்தினுடைய உணர்வையும் நான் துணை வேந்தர்களுக்குத் தெரிவிப்பேன் என்று உறுதி தருகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** முதலிலே சேலத்திலே ஒரு Extension Centre–ஆக இருந்தது. அதுதான் பின்னாலே பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. அதேபோல வேலூரிலும் ஒரு Extension Centre இருக்கிறது. அதையும் ஒரு பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஒரு காலத்திலே சென்னையிலே ஒரே பல்கலைக்கழகம்தான் இருந்தது. அதற்கு Madras University Act என்று நாம் ஒரு சட்டத்தைப் போட்டிருந்தோம். ஆனால் அதற்குப் பின்னாலே காமராஜர், மனோன்மணியம். பாரதியார், பாரதிதாசன் என்ற பல பல்கலைக்கழகங்கள் வந்துவிட்டன. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒரு சட்டம் இருக்கிறது. அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இப்படி இருக்க வேண்டியது அவசியம் தானா, ஏன் Common University Act என்ற ஒன்று இருக்கக் கூடாது,



இது எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் சேர்த்து ஒரே பல்கலைக்கழகச் சட்டம் Common University Act என்ற ஒன்று இருந்தால் அது பயனுள்ளதாக இருக்குமே என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அரசுக் கல்லூரிகளிலே இடம் போதவில்லை. அதாவது கட்டட வசதி போதவில்லை என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பல்வேறு தனியார் கல்லூரிகளிலே shift முறை இருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்கள் மனது வைத்தால் கண்டிப்பாக பரிட்சார்த்தமாக ஏதேனும் ஒரு அரசு கலைக் கல்லூரியிலே ஒரு shift முறையை அமல்படுத்தி அதிக மாணவர்களைச் சேர்க்கலாம். ஒரே கட்டடம், ஒரே உபகரணங்கள் அதை வைத்துக்கொண்டு கூடுதலாக மாணவர்களுக்கு கல்வி கொடுக்கமுடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், முதுகலைப் பாடங்கள் நடத்துகிற கல்லூரிகளிலே இன்றைக்கு Readers மட்டும்தான் இருக்கிறார்கள். அங்கே பேராசிரியர்களை நியமிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமன்று, மேல்நிலைப் பள்ளிகளிலே இப்போதெல்லாம் ஆங்கிலப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு கணக்கு வாத்தியார்தான் வருகிறார். கணக்கு வாத்தியார் ஆங்கிலப் பாடம் சொல்லிக் கொடுத்தால் எப்படியிருக்கும்? அதை நாம் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். எனவே ஆங்கில மொழிப் பாடத்தை சொல்லிக் கொடுப்பதற்கு அந்த மொழி தெரிந்த, அந்த மொழி படித்த B.A. Literature, M.A. Literature படித்த ஆசிரியர்தான் சரியான ஆங்கிலத்தைச் சொல்லிக் கொடுக்கமுடியும் என்று நான் கருதுகிறேன். எனவே அதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4–50*

நான் இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே வந்தபோது ஒரு கோரிக்கை வைத்தேன். சென்னையிலே இருப்பதுபோல, ஒரு பிளானடேரியம் – கோளரங்கு கோவைக்கு வேண்டுமென்று 1991ஆம் ஆண்டு கேட்டேன். ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அது கோவைக்கு வந்தபாடில்லை. இன்றைக்கு நம்முடைய கொள்கைக் குறிப்பிலே கோவையிலே விளாங்குறிச்சியிலே 6 ஏக்கர் நிலம் அதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக நான் படித்தேன். கோவைக்குள்ளேயிருந்தால் நல்லது. இல்லையென்றால் அங்கேயாவது இந்தக் கோளரங்கு வருமென்று சொன்னால் பரவாயில்லை. (குறுக்கீடு) விளாங்குறிச்சியிலே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கு வெளியிலே 6 ஏக்கர் நிலம் பெற்றிருக்கிறோம் என்றால், விலை அப்படியிருக்கிறது. கோவையில் நிலம் வாங்குவதற்கு கிடைக்குமா என்று பார்க்க வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** நான் சொல்ல விரும்பியது அதுதான். அங்கேயாவது வந்தால் நல்லது. அதை விரைவில் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லட்சுமணனுக்கு அது தேவையில்லை என்றால் மதுரைக்குக் கொடுத்துவிடுங்கள். (சிரிப்பு)

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குள் ஒரு சின்ன பிரச்சினை இந்த Deemed University–களுக்கும் அரசுக்கும். Deemed Universities நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருப்பதால் அரசுக்கு ஒரு சிறிய பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதாவது அந்த Deemed University–களில் சேர்ந்த மாணவர்கள் பணத்தைக் கட்டிவிட்டு இன்றைக்கு அந்த University–கள் தடையாணையைப் பெற்றுவிட்டதாலே அவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் இருக்கிறார்கள். வேறு கல்லூரிகளிலும் சேரமுடியாமல் இருக்கிறார்கள். ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி... (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் பேசும்போது Deemed University–களினுடைய நிலைபற்றியும் அதனால் சில மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில் பிரச்சினைகள் இருப்பது பற்றியும் சொன்னார்கள். என்னுடைய துறையைப் பொறுத்தவரையில், அனைத்து மாணவர்களுக்கும் 25, 26 ஆகிய இரண்டு நாட்களில் கவுன்சலிங் வைத்து அவர்கள் Deemed University–களில் இடம் பெறாவிட்டால் எந்தக் கல்லூரியில் இடம் கிடைத்திருக்குமோ அதற்கேற்றாற்போல், அவர்களுடைய மதிப்பெண்களுக்கு ஏற்றாற்போல், அவர்கள் விருப்பத்திற்கேற்றாற்போல், அனைத்து மாணவர்களுக்கும் அந்த இடத்தைத் தருவதற்கு அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்தது. அதற்காக Anna University–யில் நேற்று கவுன்சலிங் நடைபெற்றது. சில பத்திரிகைகளில் அதை வேண்டுமென்றே திரித்துச் சொல்லியிருக்கலாம். பொதுவாக அனைத்து மாணவர்களும், பெற்றோர்களும் மகிழ்ச்சியுடன்



அந்த இடத்தைப் பெற்றுக்கொண்டு சென்றுகொண்டிருக்கிறார்கள். அந்தப் பணம்கூட Anna University–யில் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு கட்டிய பணம் எந்தக் கல்லூரியில் மாணவர்களுக்கு இடம் கிடைத்திருக்கிறதோ அந்தக் கல்லூரிக்கு அவர்கள் கட்டிய பணம் போய்ச் சேர்ந்துவிடும். ஆனால் சிலர் Deemed University என்பதை ஏதோ என்று நினைத்துக்கொண்டு அங்கே பணத்தைக் கட்டியிருந்தால், அங்கே ஏதாவது நன்கொடை கொடுத்திருந்தால்—அது எனக்குத் தெரியாது—அது அரசின் கவனத்திற்கு வந்தால் அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். உறுப்பினர், இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிபற்றிச் சொன்னார்கள். இங்கே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இருக்கிறார். தேவைப்பட்டால் அவர் அதைப்பற்றிச் சொல்வார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திலே நடைபெற்ற வழக்கின் தீர்ப்பு அரசுக்கு சாதகமாக வந்தவுடன் அதற்குப் பின் கவுன்சலிங் வைத்தோம். அந்தக் கவுன்சிலிங்கிற்கு அழைக்கப்பட்ட மாணவர்கள் ஏற்கெனவே பல் மருத்துவத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்: காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்கள்: அவர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு நாங்கள் allotment order கொடுத்தோம். ஆனால் அதனை ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி நிருவாகத்தினர் ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். உச்ச நீதிமன்றம் சென்று அவர்கள் தடையாணை பெற்றிருக்கிறார்கள். எனவே நாங்கள் கவுன்சிலிங்கிற்கு அழைத்தவர்கள் ஏற்கெனவே பல் மருத்துவக் கல்லூரியிலே இடம் கிடைத்தவர்கள் என்பதால் அவர்கள் பல் மருத்துவக் கல்லூரியிலே தொடர்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை. ஒருவேளை அரசுக்கு சாதகமாக உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு வருமானால் மீண்டும் அவர்களை அந்தக் கல்லூரியிலே சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே எந்த வகையிலும் மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் மாணவர்கள் பாதிக்கப்படவில்லை.

பிற்பகல் 4–55

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சில மாணவர்கள் கவுன்சிலிங்கில் இடம் பெற்று பல் மருத்துவத் துறையிலே போய் சேர்ந்துவிட்டார்கள். அங்கே படித்துக்கொண்டிருந்தவர்களை நாங்கள் மீண்டும் அழைத்து இராமச்சந்திரா மெடிக்கல் காலேஜுக்கு

அனுப்பினோம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இருந்தாலும் அந்த மாணவர்களுக்கு பல் மருத்துவத்தைவிட M.B.,B.S. படிப்பு என்பது கொஞ்சம் உயர்வான படிப்பு என்ற ஓர் ஆசை வந்துவிட்டது. அந்த ஆசையில் அந்த இடத்திற்கு வந்துவிட்டவர்களை மீண்டும் கழுத்தைப் பிடித்து பழையபடி நீங்கள் பல் மருத்துவத்திற்குப் போங்கள் என்று சொல்லுவது அரசுக்கு அவ்வளவு நல்லதல்ல. ஆகவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த rank–கிற்கு எந்த ஒரு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கிறதோ, திருநெல்வேலி மெடிக்கல் காலேஜாக இருந்தாலும் பரவாயில்லை, திருச்சி மெடிக்கல் காலேஜாக இருந்தாலும் பரவாயில்லை, அரசு மருத்துவக் கல்லூரிகளிலே அவர்களுக்கு M.B.,B.S. படிக்க இடம் அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, நாங்கள் கழுத்தைப் பிடித்து அனுப்பவில்லை. நாங்கள் கொடுத்தது allotment order. ஆனால் இராமச்சந்திரா மெடிக்கல் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்தான் அவர்களது கழுத்தைப் பிடித்து வெளியே அனுப்பி, நாங்கள் சேர்த்துக்கொள்ள மாட்டோம் என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள். இந்த நிலைமையில் அவர்களுக்கு பாதிப்பு இல்லை. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக இருக்குமானால் அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, சேலம் கல்லூரிக்கு இன்னும் கூடுதலாக இடம் கேட்டிருக்கிறோம், வேலூர் மருத்துவக் கல்லூரி வரவிருக்கிறது. அதுபோல தூத்துக்குடிக்கு கேட்டிருக்கிறோம். செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு கூடுதல் இடம் கேட்டிருக்கிறோம். அப்படிக் கூடுதல் இடங்களை Medical Council of India வழங்குமேயானால் அந்த இடங்களில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவும் வாய்ப்பு இருக்கிறது.

* **டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல் மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்த மாணவர்களை அங்கே அனுப்பியதாகக் குறிப்பிட்டீர்கள். பல் மருத்துவக் கல்லூரியில் அவர்களது இடம் காலியானதற்குப் பிறகு, அங்கே கவுன்சலிங் நடத்தினார்களா, பல் மருத்துவக் கல்லூரியிலே புதிதாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொன்னது போல, அந்த மாணவர்களுக்கு இங்கு கவுன்சலிங் நடத்தியதற்குப் பிறகு பல் மருத்துவக் கல்லூரியில் காலியான இடத்தை நிரப்புவதற்கு நாங்கள் கவுன்சலிங் நடத்தவில்லை. நாங்கள் எச்சரிக்கையாக அந்த இடத்தைக் காலியாக வைத்திருந்தோம். அதனால் மாணவர்கள் பாதிப்புக்கு ஆளாக வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலே பொறியியல் மாணவர்களைத் தேர்வு செய்து மீண்டும் அவர்கள் கவுன்சலிங் முறையிலே தேர்வு செய்யப்பட்டது உண்மை. அதேபோல M.B.B.S.–க்கு தேர்வு செய்யப்பட்டு நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இப்போது இருக்கக்கூடிய அரசு மருத்துவக் கல்லூரிகளிலே ஒரு கல்லூரிக்கு 10 இடம் என்று கூடுதலாக வைத்தால் உடனடியாக எல்லோருக்கும் இடம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. சேலம், செங்கற்பட்டு ஆகிய இரண்டு மருத்துவக் கல்லூரிகளில் அந்த வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், ஒரு கல்லூரிக்கு 10 இடம் என்று Medical Council of India –விடம் கேட்டுப் பெற்று உடனடியாக அவர்களுக்கு இந்த ஆண்டு வாய்ப்பு இல்லாமல் போய்விடக் கூடாது என்பதை கவனத்தில்கொண்டு நடப்பு ஆண்டிலேயே சேர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Medical College–ல் டாக்டர் சீட் கிடைப்பதுபற்றி உறுப்பினர் மணி அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு உட்பட்டதாக இருந்தாலும், கவுன்சலிங் முறையைப்பற்றிச் சொன்னதன் காரணமாக, அதுவும் திரு. லட்சுமணன் அவர்கள் இந்தப் பொருள் குறித்து விவாதத்தைக் கொண்டுவந்ததால் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொறியியல் கல்லூரிகளுக்கு நடந்த கவுன்சிலிங்கிற்கும், Medical College–ல் நடந்த கவுன்சலிங்கிற்கும் வித்தியாசம் இருக்கிறது. Deemed University என்ற பிரச்சினை வந்தபோது, சில நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களிலிருந்து எங்களிடம் அனுமதி கேட்கப்பட்டது. இந்த கவுன்சலிங்கிலிருந்து எங்களை விடுவிக்க வேண்டும், நாங்கள் Deemed

University என்று கல்வித் துறைக்கு எழுதினார்கள். அந்த நேரத்தில் அதைப் பரிசீலனை செய்து சட்டத்திற்கேற்பவும், ஒழுங்குமுறைக்கு ஏற்பவும் தர முடியாது என்று கடிதம் எழுதினோம். அந்த நேரத்தில் கவுன்சலிங் நடைபெற்றுக்கொண்டிருந்ததனால் சில Managements கோர்ட்டுக்குச் சென்றார்கள். நீதிமன்றத்திலே முதலில் ஒரு stay கிடைத்தது. அப்போது மாணவர் சேர்க்கையில் அதைப்பற்றி யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. பிறகு stay vacate செய்யப்பட்டு மீண்டும் அந்த Deemed University–களை கவுன்சலிங்கில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. அப்போது கவுன்சலிங் நடைபெற்றுக்கொண்டிருந்த காரணத்தால் அவற்றை விரும்பி சில மாணவர்கள் விண்ணப்பித்தார்கள். அதை opt செய்தார்கள். அதன் அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் Medical College–ஐப் பொறுத்தவரையில் அந்தப் பிரச்சினை வரவில்லை. ஏனென்று சொன்னால் அதற்கு முன்பாகவே Medical College கவுன்சலிங் முடிந்துவிட்டது. அது முடிந்துவிட்ட பிறகுதான் பொறியியல் கவுன்சலிங் தொடங்கினோம். ஆகவே இதிலே பாதிக்கப்பட்ட மாணவர்களின் நிலைமைக்கும், Medical College கவுன்சலிங்கில் பாதிக்கப்பட்ட மாணவர்களுடைய நிலைமைக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அவர்கள் எச்சரிக்கையுடன்தான் செயல்பட்டிருக்கிறார்கள். நாங்களும் எச்சரிக்கையுடன்தான் செயல்பட்டோம். அதற்காக நாங்கள் எச்சரிக்கையாகச் செயல்படவில்லை என்று இல்லை, நாங்களும் எச்சரிக்கையுடன் செயல்பட்டோம். இருந்தாலும், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று இது நிறுத்தி வைக்கப்பட்டு, தீர்ப்பான காரணத்தால் வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில், இப்போதும் மாணவர்கள் வேண்டுமென்றால், பொறியியல் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட Deemed University மாணவர்கள் வேண்டுமென்றால் மீண்டும் அந்த இடத்தில் சேரலாம். ஆனால் 3 மாதம் காத்திருக்க வேண்டும். அந்த முடிவு தெரியும்வரை காத்திருக்க வேண்டும். இப்படி முடிவு தெரியும்வரை காத்துக்கொண்டிருந்தால், அவர்களுடைய கல்வியானது பாதிக்கும் என்பதற்காக, அவர்களுக்கு ஒரு Option கொடுத்திருக்கிறோம். வேண்டுமென்றால், இப்போது இந்த கவுன்சலிங்கை மீண்டும் நடத்துகிறோம். நீங்கள் வேறு கல்லூரிக்குச் சென்றுவிடலாம். அப்படிச் செல்லும்போது, உங்களுக்கு 12 ஆம் தேதி கவுன்சலிங்கில் என்ன வந்ததோ, எந்தக் கல்லூரி கிடைத்திருக்குமோ, Deemed University–ல் அதற்கான அந்த இடத்தைத் தருகிறோம் என்று சொன்ன காரணத்தால் அவர்கள் எல்லோரும் இடத்தை விரும்பிப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். இதுதான்



உண்மை. ஆகவே Medical கவுன்சலிங் நடத்துவதற்கும், இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. தமிழகத்தில் மேலும் பல மருத்துவர்கள் வரவேண்டுமென்று நமக்கெல்லாம் ஆர்வம்தான். 150, 200 மாணவர்களுக்கு கிடைத்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆகவே அதற்கும், இதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 5—00*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில்தான், நீண்ட ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்ட செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலே இதுவரை 50 இடங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் பல ஆண்டுகளாக, அது முந்தைய அரசாக இருந்தாலும் சரி, இந்த அரசாக இருந்தாலும் சரி, இன்னும் கூடுதலாக இடங்களை ஒதுக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறோம். ஆகவே 50 மாணவர்களுக்கு இருக்கிற infrastructure 100 மாணவர்களுக்குப் போதுமானதாக இருக்கும். 50 மாணவர்களுக்கு ஒத்துக்கொண்டாலே, 100 மாணவர்களை அதிலே சேர்த்துக்கொள்வதற்கு ஒன்றும் தடை இல்லை. அதே infrastructure போதுமானது. எனவே அந்த அடிப்படையில்தான் சேலத்திற்கு 75 மாணவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். சேலத்திற்கு 75 மாணவர்களுக்குப் பதிலாக 100 மாணவர்களும், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு 50 மாணவர்களுக்குப் பதிலாக இன்னும் கூடுதலாக 50 இடங்கள் கொடுத்து, மொத்தம் 100 மாணவர்களுக்கும் அனுமதி வழங்க நாம் ஆண்டாண்டு காலமாக கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஏதோ காரணத்தினாலே வழங்க மாட்டேன் என்று Medical Council of India மறுத்துக்கொண்டு வருகிறது. ஒருவேளை மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்களுடைய கட்சி இப்போது புதியதாக உறவு வைத்துக்கொண்டிருக்கிறது. அந்த உறவின் அடிப்படையில் Medical Council of India–விடம் போராடி, சேலத்திற்கு கூடுதலாக 25 இடங்களையும், செங்கல்பட்டிற்கு கூடுதலாக 50 இடங்களையும் பெற்றுத்தந்தால், அவர் விருப்பப்படுவதுபோல, 75 ஏழையெளிய கிராமப்புற மாணவர்களுக்கு merit அடிப்படையிலே இடம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இன்னும் இப்படியே போனால், மருத்துவ மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே நேரத்தைக் குறைத்துக்கொள்வேன். (சிரிப்பு)

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சியைப்பற்றிப் பேசுவதற்கு முன்னாலே ஒரு சின்ன செய்தியை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதெல்லாம் B.Ed. Course–க்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. அதை ஒரு integrated course–ஆக கலை, அறிவியல் கல்லூரிகளில் 5 ஆண்டுகளுக்கு நாம் நடத்தினால் அது மாணவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சிக்காக அரசு எடுத்திருக்கிற எல்லா முயற்சிகளையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, தமிழிலே படித்தவர்களுக்கு ஊதியம் குறித்து இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே பணம் கொடுப்பதிலே மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பிலே முன்னுரிமை கொடுத்தால்தான், இன்றைக்கு தமிழினை பயிற்று மொழியாக எடுத்துப் படிப்பதற்கு அதிகம் பேர் முன்வருவார்கள். என்னுடைய கிராமத்திலேகூட பல பேர் தமிழிலே படித்து, I.A.S. பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மொழிபெயர்ப்பிலே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 19 ஆம் பக்கத்தில், மந்தணக் கோப்புகள் என்று ஒரு சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மந்தணக் கோப்புகள் என்றால் என்ன என்பதை நான் தெரிந்துகொள்வதற்காகக் கேட்டுப் பார்த்தேன். அப்படிக் கேட்டபோது, மந்தணக் கோப்பு என்பதற்கு ஆங்கிலத்திலே confidential file என்று சொன்னார்கள்.

*பிற்பகல் 5–05*

இரண்டாவது, நம்முடைய மிகச் சிறந்த economist, டாக்டர் நடராஜன் அவர்கள் இந்த மந்தணம் என்ற சொல்லை, திருமூலர் கையாண்டிருப்பதற்கு ஒரு சான்றினை எடுத்துக்காட்டியுள்ளார். திருமூலர் எங்கே அதைச் சொல்கிறார் என்று சொன்னால், வாழ்க்கையினுடைய நிலையாமையைச் சொல்கிறபோது,

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேயிறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"



என்று திருமூலர் சொல்லியிருக்கிறார். அதிலே "மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்" என்று வருகிறபோது, இந்த மந்தணம் என்ற சொல் இரகசியம் என்ற பொருளிலே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று அரசு கருதியிருக்கிறது. ஆனால் நடராஜன் அவர்களுடைய கூற்றுப்படி சரிதானா என்று பார்த்தால், நடராஜன் அவர்கள், திருமூலருடைய பாட்டினை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து கீழே கொடுத்திருக்கிறார்.

"The rich repast was laid and he dined and joyed,
With damsels sweet in amorous dalliance toyed;
'A little little pain–on the left' he moaned
And laid himself to rest to be gathered to dust."

என்று அவர் சொல்லியிருக்கிறார். நான் திரும்பவும் 'dictionary'–ஐ எடுத்து, amorous என்று சொன்னால் என்ன பொருள் என்று பார்த்தேன். தயவு செய்து அதைச் சொல்வதற்காக என்னைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். பொருள் இருக்கிறது. நான் அப்படியே படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன், அது ஏதோ மந்தணமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. வி.கே லட்சுமணன்:** அதாவது 'dictionary'–யிலே அதற்கு என்ன பொருள் கொடுத்திருக்கிறது என்று சொன்னால், "showing or readily feeling sexual love" என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் "dalliance" என்பதற்கு "idle" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சொற்றொடரையும் வைத்துப் பார்க்கின்றபோது, இந்த மந்தணம் என்ற சொல்லுக்கு இரகசியம் மட்டும்தான் பொருளா என்று சொல்லிவிட முடியாது. முடிந்தால் இங்கே இருக்கிற தமிழ் அறிஞர்கள் அந்த மந்தணத்திற்கு வேறு சொல்லைக் கண்டுபிடிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன் அவர்களே, ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. ஆங்கிலத்திலேகூட, delivery என்ற சொல்லுக்கு 'post office'–லே ஒரு பொருள்; மருத்துவமனையிலே வேறு பொருள். ஆகவே இதிலேபோய் நாம் எதற்காக சிக்கலிலே மாட்ட வேண்டும்?

**திரு. வி.கே. லட்சுமணன்:** அடுத்ததாக, விளையாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் கொடுக்கப் போகிறோம்,

தங்கப் பதக்கத்திற்கு. அந்த ஒரு கோடி ரூபாயைப் பெற வேண்டும் என்று சொன்னால், நல்ல பயிற்சியாளர்கள் வேண்டும். அது இல்லாமல் முடியாது. Coaches வேண்டும். Coaches இல்லாவிட்டால், விளையாட்டில் வெற்றி பெற முடியாது. ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே, பாட்டியாலாவிலே போய் பயிற்சி பெற்று, இன்றைக்கு வேலையில்லாமல் நிறைய Coaches இருக்கிறார்கள். நாம் வேலைக்கு ஆளெடுக்கின்றபோது, ரொம்ப வயதானவர்களை, ஒரு குறிப்பிட்ட தொகைக்கு, மாதம் *4,000* ரூபாய் என்று எடுக்கிறோமேயொழிய, பாட்டியாலாவிலே படித்த இளைஞர்களைப் பணியில் அமர்த்துவதில்லை. இவர்களைப் பணியமர்த்தினால்தான், இன்றைக்கு அவர்கள் நவீன விளையாட்டுகளையெல்லாம் சொல்லிக் கொடுத்து, நாம் அந்த *1* கோடி ரூபாயைப் பெறுவதற்கான வாய்ப்பினை உண்டாக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

இந்தநேரத்திலே நான் தமிழக முதல்வருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *1991* ஆம் ஆண்டு நான் இங்கே வந்தபோது, ஒரு கோரிக்கை வைத்தேன். எங்கள் ஊருக்கு ஒரு இசைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்தக் கல்லூரி வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே இசையும் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பேரூர் கோவிலிலே ஆண்டுதோறும் நாட்டியாஞ்சலி என்ற நிகழ்ச்சி தனியாரால் நடத்தப்படுகிறது; அதை நிரந்தரமாக, சிதம்பரத்தைப் போல, அங்கேயும் நடத்துவதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்தால், நம் பண்பாடு வளருவதற்கு அது ஏதுவாக இருக்கும். அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலே ஒரு நல்ல 'ஆடிட்டோரியம்' கட்டுவதற்கு, N.G.Os.-Non-Governmental Organisations – *2* கோடி ரூபாய் பணம் வைத்திருக்கிறார்கள். சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் மனது வைத்து, இரண்டு ஏக்கர் நிலத்தைக் கொடுத்தால் உங்களுக்குச் செலவு இல்லாமல், *2* கோடி ரூபாயிலே, குளிர்சாதன வசதியோடு ஒரு நல்ல 'ஆடிட்டோரியம்' கட்ட முடியும். அந்த 'ஆடிட்டோரியம்' இந்த நிகழ்ச்சிக்கெல்லாம் பயன்படும். அதுமட்டுமல்லாமல், நல்ல மாநாடு நடத்துவதற்குக்கூட அது பயன்படும். ஆகையினாலே தேவையெல்லாம் நிலம் மட்டும்தான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் இந்த நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிக்கும், பேரூர் கோவிலிலே.(மணியடிக்கப்பெற்றது)



*பிற்பகல் 5–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள், வாக்கியத்தை முடித்துவிடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** பல்வேறு கோரிக்கைகளை நான் இங்கே வைத்திருக்கிறேன். அதிலே கடைசியாகச் சொன்னது–இந்த ஆடிட்டோரியத்திற்காக நீங்கள் இரண்டு ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். அதை நீங்கள் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிட்டா மிராசுதாரர்களும், நிலச்சுவான்தார்களும், ஆலை அதிபர்களும், படித்தவர்களும் மட்டுமே ஒரு காலத்திலேயிருந்த இந்த அவையில், என்னைப் போன்றவர்களுக்கு அரசியலிலே முகவரி தந்து, அங்கீகாரத்தை அளித்து, எங்கள் குரலையும் இந்த மாமன்றத்திலே ஒலிக்க வைத்த எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்களை–நான் மட்டுமல்ல, என்னுடைய சந்ததி முழுமையுமே நன்றி உணர்வோடும், விசுவாசத்தோடும் அவர்களுடைய பாதங்களை மட்டுமே வணங்கிக்கொண்டிருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்ற அங்கீகாரத்தை மட்டுமே ஏற்றுக்கொண்டு, கலசப்பாக்கம் தொகுதியிலே என்னை ஏறத்தாழ *29* ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்துள்ளனர். அம்மா அவர்களை இந்த மாநிலத்தின் முதல்வராக அமர்த்த வேண்டும் என்கின்ற அடிப்படையிலே வாக்களித்து வெற்றிபெறச் செய்த கலசப்பாக்கம் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை இந்த மாமன்றத்தின் மூலமாகக் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கைமீதான விவாதத்திலே பல்வேறு கருத்துகளைப் பலர் சொல்கின்ற நிலையிலே, நானும் இதிலே கலந்துகொண்டு கருத்தைச்

சொல்வதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். கல்வியை எப்படி மேம்படுத்த வேண்டும், கல்விக்கு எந்தெந்த வகையிலே சலுகைகளையும், கொள்கைகளையும் வகுத்தளித்து, அதை மேம்படுத்த வேண்டுமென்கின்ற அடிப்படையிலே அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திலே பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அதிலே எல்லோராலும், குறிப்பாக எதிர்க் கட்சியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற அளவிலே, ஆசிரியர் பணி மாறுதல்களிலே கவுன்சலிங் முறையைக் கொண்டுவந்து எல்லோருடைய பாராட்டையும் பெறுகின்ற வகையிலே ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மேலாக, கடந்த 5 ஆண்டு காலத்திலே ஆட்சியாளர்களாக இங்கே இருந்து தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு நாங்கள்தான் பாதுகாவலர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய சம்பந்தி என்று எல்லாம் சொல்லிக்கொண்டு, அந்தச் சமுதாயத்தினுடைய ஆதரவைப் பெறுவதற்காக மட்டுமே மேடைகளிலே முழங்கிக் கொண்டிருந்தவர்கள், அந்தச் சமுதாயத்தை கல்வியிலே மேம்படுத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் அந்தச் சமுதாயத்தினுடைய ஆதரவைப் பெறுவதற்காக மேடைகளிலே உதட்டளவிலே சொன்ன சில விஷயங்களை அம்மா அவர்கள் உள்ளத்தின் அளவிலே எடுத்துக்கொண்டு அந்தச் சமுதாயத்தை மேம்படுத்த வேண்டும் என்ற வகையில், ஒரு சமுதாயம் மேம்பட வேண்டுமானால், பொருளாதார ரீதியாக மேம்பட வேண்டுமானால், அது கல்வியிலே மேம்பட வேண்டும் என்கின்ற உள்ளார்ந்த அந்த ஈடுபாட்டோடு அம்மா அவர்கள், பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கின்ற ஆதிதிராவிட, தாழ்த்தப்பட்ட மலை ஜாதியைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச சைக்கிள் திட்டத்தை அறிவித்து, அந்த மக்கள் கல்வியிலே மேம்பட்டால்தான் பொருளாதாரத்திலே மேம்பட முடியும் என்கிற அடிப்படையிலே ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே ஒற்றைச் சாளர முறை, 'Single Window System' என்கின்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, தகுதி படைத்தவர்கள் அதிலே வாய்ப்பினைப் பெற்று, அந்தப் பயிற்சியைப் பெற்று, வேலைவாய்ப்புகளிலே முன்னுரிமை பெற வேண்டுமென்பதற்காக, எல்லோருடைய பாராட்டையும் பெறுகின்ற வகையிலே அந்தத் திட்டம் பற்றிய அறிவிப்பை இங்கே அறிவித்திருக்கிறார்கள். காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பினால்தான் கல்வியிலே முழுமை பெறமுடியும், கல்வியின் தரம் மேம்படும் என்கின்ற காரணத்தினால், அவற்றை உடனடியாக நிரப்புவதற்குண்டான நடவடிக்கைகளை



மேற்கொண்டிருக்கிறார்கள். மலைப் பகுதியிலே இருக்கின்ற பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் சிக்கல் இருக்கின்ற காரணத்தினால், அங்கே பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் சார்பாகவே காலிப் பணியிடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்கின்ற ஒரு நல்ல முடிவையும் எடுத்து இங்கே அறிவித்திருக்கின்றார்கள்.

100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்த வேண்டுமென்று, கடந்த காலங்களிலே, நீண்ட நாட்களாக வைக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருந்த அந்தக் கோரிக்கையை, நிறைவேற்றி, ஏழையெளிய நடுத்தர வர்க்க சமுதாயத்தைக் கல்வியிலே மேம்படுத்துவதற்கு பல்வேறு அறிவிப்புகளையும், சலுகைகளையும் இங்கே அறிவித்து ஒரு சிறப்பான திட்டத்தை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். கல்வியை மேம்படுத்த வேண்டும், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நடுத்தர, பிற்படுத்தப்பட்ட வர்க்கத்தை எல்லாம் மேம்படுத்த வேண்டும் என்று அம்மா அவர்கள் உள்ளார்ந்த ஈடுபாட்டோடு பல்வேறு அறிவிப்புகளை, கொள்கை முடிவுகளை, சலுகைகளையெல்லாம் எடுத்து அறிவித்துக்கொண்டிருக்கிற நல்ல நிலையிலே ஒரு கருத்தை அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*பிற்பகல் 5–15*

எதற்கெடுத்தாலும் குறை சொல்லிக்கொண்டு, நாங்கள் எல்லாம் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே அரசியலில் இருக்கிறோம், அரசியல் கட்சி நடத்திக்கொண்டிருக்கிறோம், நாங்கள்தான் இந்தச் சமுதாயத்தை மேம்படுத்தப் பாடுபடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, மாவட்டத்தினுடைய கல்வித் தந்தை நாங்கள்தான் என்று சொல்லிக்கொண்டு, பல்வேறு தனியார் நபர்கள் கல்லூரிகளைத் தொடங்குவதற்கும் தனியார் பள்ளிகளை நடத்துவதற்கும் அனுமதி பெறுவதிலும் மிகப் பெரிய தவறான முறையிலே, பல்வேறு முறைகேடுகளைச் செய்து, தவறான முறையிலே அனுமதி பெற்று, பல கோடி ரூபாய்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க அம்மா அவர்களுடைய அரசு முன்வர வேண்டும். கல்லூரியை நடத்த அனுமதி பெறுவதோடு மட்டுமல்லாமல், கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கு இடம் வாங்குவதிலேயும் பல்வேறு முறைகேடுகளைச் செய்து, இடம் வாங்குகிறவர்களுடைய இடத்தை ஒட்டியிருக்கிற அரசுக்குச் சொந்தமான இடங்களை எல்லாம் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டு பல்வேறு

முறைகேடுகளைச் செய்து, அங்கே கட்டடங்கள் எல்லாம் கட்டிக்கொண்டு, பல நிறுவனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கல்லூரியிலே, மின்சார இணைப்பைப் பெறுவது, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக, கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவது போன்ற பல்வேறு விஷயங்களை முறை தவறிப் பெற்று, இன்று பல நிறுவனங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவர்களை எல்லாம் சட்டத்தின்முன் நிறுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுத்து, இதுபோன்ற தவறுகள், இனி வருங்காலங்களில் நடைபெறாமல் பார்த்துக்கொள்வதற்கு, அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய பணிவான கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பை அளித்த அவைத் தலைவருக்கு நன்றி சொல்வதோடு, நான் முதன்முதலாகப் பேசுகின்ற காரணத்தினால், என்னுடைய தொகுதி பற்றிய பல்வேறு கோரிக்கைகளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கலசப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட கலசப்பாக்கம் ஒன்றியம், ஆதமங்கலம் புதூர் மற்றும் துரிஞ்சாபுரம் ஒன்றியம், மங்கலம் ஆகிய மேல்நிலைப் பள்ளிகளைப் பிரித்து, மகளிர் பள்ளியை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே வருகிற செய்யாற்றிலே ஒரு கால்வாயை வெட்டி, 15–லிருந்து 20 ஏரிகளை இணைக்க வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அந்த ஏரிகளை எல்லாம் ஒருங்கிணைத்து, மழைக் காலங்களில் வருகிற நீரைச் சேமித்து, விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற என்னுடைய பணிவான கோரிக்கையை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 18 ஆண்டு காலம் ஒரே நபர் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த காரணத்தினால், அந்தத் தொகுதியிலே, முக்கியமான அடிப்படைத் தேவைகளாக இருக்கின்ற குடிதண்ணீர்ப் பிரச்சினை, சாலை வசதி போன்ற எந்த வசதிகளையும் செய்து தராத நிலையிலே மிகவும் பின்தங்கிய தொகுதியாக என்னுடைய தொகுதி இருப்பதால், அங்கே ஏறத்தாழ 100 கிராமங்களுக்கு மேல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வசதி இல்லாமல், இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகூட கிடைக்காத நிலை அங்கு இருக்கிறது. அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அந்த 100 கிராமங்களிலே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீர் ஆதாரம் பொய்த்துப்போன கிராமங்கள், கலசப்பாக்கம் தொகுதியிலே 16 கிராமங்கள். ஏற்கெனவே



போர் போடப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியெல்லாம் கட்டியும்கூட, வறட்சியான காலங்களிலே தண்ணீர் இல்லை என்ற நிலையிலே, அங்கே குடிக்கத் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. நீர் ஆதாரம் உவர் நீராக மாறிய கிராமங்கள் 6 இருக்கின்றன. ஆகவே இந்த 22 கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்துத் தர அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 5—20

தமிழகத்திலே மட்டுமல்லாமல் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற ஒரு புண்ணிய பூமி திருவண்ணாமலை. திருவண்ணா மலையிலே, கடந்த 1996–97–லே கோயில் மண்டபம் இடிந்து விழுந்து, அந்தப் பணிகள் முடிக்கப்படாமல் இதுவரை அங்கு கோயில் திருப்பணி நடைபெறாமல் இருக்கிறது. அந்தத் திருப்பணியைச் செய்துதர அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற தை மாதம் நிச்சயமாக திருவண்ணாமலையில் அந்தத் திருப்பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. சமீபத்திலே நடந்த தேர்தலையொட்டி திருவண்ணாமலை நகருக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லி ஒரு வாக்குறுதியைத் தந்து அங்கே தேர்தலைச் சந்தித்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் கொண்டுவரப்படவேயில்லை. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாத நிலை இருக்கிறது. இன்று அது ஒரு புண்ணிய பூமியாக, ஒவ்வொரு பௌர்ணமியன்றும் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு கூடுகிற காரணத்தால், அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவந்து அந்த நகரை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தண்டராம்பேட்டை தலைமையிடமாக வைத்து, செங்கத்தை இரண்டாகப் பிரித்து தாலுகா அமைத்துத் தரவேண்டுமென்ற அந்தக் கோரிக்கை மிக நீண்டகாலமாக இங்கே வைக்கப்பட்டு, பல்வேறு அரசாங்கங்கள் வந்தும்கூட இதுவரை நிறைவேற்றப்படாத நிலையில், அம்மா அவர்கள் தயவுகூர்ந்து செங்கத்தை இரண்டாகப் பிரித்து தண்டராம்பேட்டை தலைமையிடமாக வைத்து தாலுகா அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஏன் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நாங்கள் இங்கே வைக்கிறோம் என்றால், கடந்த கால ஆட்சியிலே இவையெல்லாம் கோரிக்கைகளாக மக்களின் சார்பிலே வைக்கப்பட்டு நிறைவேற்றப் படவில்லை. அதனாலே, தயவுகூர்ந்து அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தான் அவற்றையெல்லாம் செய்து தருவார்கள் என்று மக்கள் மிகுந்த நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்போடும் இருக்கிற காரணத்தால் அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு, வாய்ப்பு அளித்த அம்மா அவர்களுக்கும், அவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய சென்னை, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக இரவு, பகல் பாராது பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையையேற்ற மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தோழர்களுக்கும் இந்த மாமன்றத்தின் மூலமாக முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கல்வி மானியக் கோரிக்கையிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆளுநர் உரையிலும், தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்களும், ஆசிரியர்களும் மகிழ்கின்ற பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார்கள். குறிப்பாக, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கக்கூடிய திட்டம், ஆசிரியர்களுடைய நீண்ட காலக் கோரிக்கையாக இருந்த கவுன்சலிங் முறையிலே பணி



மாற்றம் என்ற அந்தத் திட்டம், 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவது, 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவது என்பது உட்பட பல்வேறு நன்மைகளை தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்த அரசு செய்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் முதலிலே வரவேற்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தமிழகத்திலே இருக்கக்கூடிய கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும், மாணவர்களுடைய திறன் என்பது உயர்த்தப்பட வேண்டும் என்ற பல கோரிக்கைகளை முன்வைத்தார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை, சுதந்திரம் அடைந்து 54 ஆண்டுகளுக்குப் பின்புகூட, இன்றைக்கும் அனைவருக்கும் கல்வி வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட வேண்டிய ஒரு மோசமான நிலைமை இந்தியாவிலே நீடித்துக்கொண்டிருக்கிறது. தமிழகத்திலே சில மாவட்டங்கள் உட்பட, இந்தியாவிலே இருக்கக்கூடிய பெரும்பாலான மாவட்டங்களில் எழுத்தறிவு இயக்கத்தை நடத்தக்கூடிய சூழ்நிலையில்தான் இந்த நாடு இப்போது இருந்துகொண்டிருக்கிறது. கடந்த கால ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஆட்சியாளர்கள், தாங்கள் மக்களுக்குக் கொடுத்த அந்த வாக்குறுதிகள்– அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்படும் என்ற அந்த வாக்குறுதிகள் என்பது கடந்த காலத்திலே நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

*பிற்பகல் 5–25*

நம்முடைய கல்வித் தரத்தைப் பொறுத்தவரை, மாணவர்களுடைய கல்வித் தரம் என்பது உயர்த்தப்பட வேண்டுமென்று தொடர்ச்சியாக மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரத்தைப் பொறுத்தவரை, 1:20 என்பதிலிருந்து 1:40 ஆக அதனை உயர்த்தியிருக்கிறது. கடந்த காலத்திலே 96 மாணவர்கள் ஒரு பள்ளியில் படித்தார்கள் என்றால் அந்தப் பள்ளியிலே 5 ஆசிரியர்கள் பணியாற்றிய நிலைமை இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் 1997 ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 525–ஐப் பிறப்பித்ததற்குப் பின்பு இன்றைக்கு 96 மாணவர்கள் படிக்கக்கூடிய ஒரு பள்ளிக்கூடத்திலே 2 ஆசிரியர்கள்தான் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. 2 ஆசிரியர்கள் 96 மாணவர்களுக்கு இன்றைக்கு கல்வி போதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்றால் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சாதாரண ஏழை, எளிய உழைப்பாளி வீட்டுப் பிள்ளைகளுக்கு,

விவசாயிகள் வீட்டுப் பிள்ளைகளுக்குத் தரமான ஒரு கல்வியை கற்றுக் கொடுக்க முடியுமா என்றால் நிச்சயமாகக் கற்றுக் கொடுக்க முடியாது. ஆகவே, மெத்தப் பணிவன்போடு நாங்கள் இந்த ஆட்சியைக் கேட்டுக்கொள்வது, கடந்த காலத்தில் இருந்த ஆசிரியர்–மாணவர் விகிதமான 1:20 என்ற விகிதத்தை மீண்டும் அமலாக்குவதற்கான முயற்சியை, இன்றைக்குப் புதிதாக தமிழகத்து மக்களுடைய முழுமையான நம்பிக்கையைப் பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலும், மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலும், ஆசிரியர்–மாணவர் விகிதம் என்பது சீரமைக்கப்படும்; வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை படிப்படியாக உருவாக்கப்படும் என்று சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. அந்தவகையில் 1:20 என்ற அடிப்படையில் ஆசிரியர்களை நியமிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்கள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்றது, கவுன்சலிங் சிஸ்டத்திலே 'transfer' கிடைத்ததாகும். ஊழல் நடைபெறாமல், அதிகாரத் தலையீடுகள் எதுவும் இல்லாமல் ஓர் அற்புதமான மாற்றம் ஆசிரியர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் விகிதாச்சார அடிப்படையிலே ஆசிரியர்களுடைய எண்ணிக்கை என்பது குறைக்கப்படக்கூடிய காரணத்தினால் இன்றைக்கு கவுன்சலிங் முறையிலே மாற்றப்பட்ட ஆசிரியர்கள்கூட பல்வேறு பள்ளிகளில் ஸ்டேஷன் ஜூனியர் என்ற அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக இன்றைக்குத் தகவல் வந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை மாற வேண்டும் என்றால், இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்துக் கல்வி நிலையங்களிலும் போதுமான ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நடுநிலைப் பள்ளிகள். இன்றைக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே இருக்கக்கூடிய, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய நடுநிலைப்



பள்ளிகளுக்கு இன்றைக்குப் போதுமான விளையாட்டுக்களை அந்த மாணவர்கள் பயில்வதற்கான வசதி என்பது செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்றால், அநேகமாக பல்லாயிரக்கணக்கான கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய கிராமப்புற நடுநிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானமே இல்லாத சூழ்நிலை என்பது நீடித்துக்கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு புதிய விளையாட்டு மைதானங்களை உருவாக்கிக் கொடுப்பதற்கும், அதேபோன்று நடுநிலைப் பள்ளிகளிலே உடற் கல்வி ஆசிரியர்களை நியமிப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கோப்புகள் அனைத்தையும் 90 நாட்களிலே முடிக்க வேண்டுமென்று ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் மாவட்ட தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் கடந்த பல ஆண்டுகாலமாக ஆசிரியர்களுடைய appeal என்பது, ஆசிரியர்களுடைய மேல்முறையீடு என்பது தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதனுடைய விளைவாக இன்றைக்கு ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பல சலுகைகள்கூட கிடைக்கவில்லை என்று தமிழகத்திலே இருக்கக்கூடிய ஒரு பகுதி ஆசிரியர்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கான முயற்சியையும் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது போன்று 90 தினங்களிலே கோப்புகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்கள். இன்றைக்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை 30 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இந்த 30 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களிலே 20 மாவட்டங்களில் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் இன்றைக்கும் காலியாக இருப்பதாகத் தகவல்கள் இருக்கின்றன. 30 மாவட்ட அலுவலகங்களில், 20 மாவட்ட அலுவலகங்களிலே முக்கியமான அந்த அலுவலர்களுடைய பணியிடம் காலியாக இருந்தால் அந்த மாவட்டத்திலே நிறைவேற்ற வேண்டிய பல பணிகளை முழுமையாக நிறைவேற்ற முடியுமா என்றால், நிச்சயமாக நிறைவேற்ற முடியாது. ஆகவே அந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 5–30*

இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரை, இன்றைக்கு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய இடைநிலை ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பதவி உயர்வும் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய இடைநிலை ஆசிரியர்களுக்கு 4:1 என்ற விகிதத்திலே, 4 பேர் பணியாற்றினால் அதில் seniority அடிப்படையிலே ஒருவருக்கு ஆரம்பப் பள்ளியினுடைய தலைமையாசிரியர் ஊதியம் வழங்குவோம் என்று 1992 ஆம் ஆண்டு இந்தச் சட்டசபையிலே அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பை நிறைவேற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இன்றைக்கு இருக்கின்ற நடுநிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆகிய வகுப்புகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான முயற்சியை மேற்கொள்வதோடு, அந்த வகுப்புகளுக்குப் பாடங்களை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய இடைநிலை ஆசிரியர்களுக்கு, மாறிக்கொண்டு இருக்கக்கூடிய கல்வித் தரத்தை மாணவர்களுக்கு முழுமையான அளவிற்கு போதிப்பதற்கு, புதிய ஒரு பயிற்சி அளிப்பதும் தேவையாக இருக்கிறது என்பதை நாங்கள் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே, மேல்நிலைப் பள்ளியிலே இருக்கக்கூடிய மேல்நிலை, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு M.Phil., Ph.D. போன்ற பட்டங்களைப் பெற்ற ஆசிரியர்களுக்கு, ஊக்க ஊதிய உயர்வு வழங்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் மேல்நிலைப் பள்ளியிலே பாடங்களைக் கற்பிக்கக்கூடிய மேல்நிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதால் அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களிலே, சென்னைப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தர் பதவி இன்றைக்கும் நிரப்பப் படாமல் இருக்கிறது. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,



மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் உட்பட 4 பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களை உடனடியாக நியமிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி போன்ற உயர் கல்வி நிலையங்களிலே, செனட், சிண்டிகேட் போன்ற அமைப்புகளுக்கு–அந்தக் கல்லூரிகளிலே பயிலக்கூடிய மாணவர்களையும், செனட், சிண்டிகேட் போன்ற அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கான முயற்சியை ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கான பேரவைத் தேர்தல் இன்றைக்கு மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே நடந்துகொண்டிருக்கின்றன. பெரும்பாலான கல்லூரிகளிலே இந்தப் பேரவைத் தேர்தல்கள் என்பது நடைபெறுவதில்லை. இங்கே இருக்கக்கூடிய பல மூத்த உறுப்பினர்கள் எல்லாம் கல்லூரிப் படிப்பைப் படிக்கும்போது, பேரவைத் தேர்தலிலே போட்டியிட்டு இருக்கின்றீர்கள். வெற்றி பெற்றிருக்கின்றீர்கள். அந்த வாய்ப்பு என்பது, இன்றைக்குப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்புக் கிடைப்பதற்கு ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிளஸ் 2 பள்ளித் தேர்விலே கூடுதலான மாணவர்கள் இன்றைக்கு வெற்றி அடைகிறார்கள். ஆனால் அவர்கள் கல்லூரிப் படிப்பைப் படிப்பதற்கு, உயர் கல்வியைப் படிப்பதற்குப் போதுமான இடவசதி தமிழகத்திலே ஓரளவு இருந்தாலும்கூட, இன்னும் போதுமான இடவசதிகளை உருவாக்குவதற்கு அரசு கலைக் கல்லூரி மற்றும் Arts and Science கல்லூரிகளிலே shift system கொண்டுவருவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுத்தால் நான் என்னுடைய விவாதத்தை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்மொழி சம்பந்தமாக பல்வேறு விவாதங்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழ்மொழி ஆட்சிமொழி

ஆகவேண்டும்; அன்னை மொழி அரியணையிலே ஏற்றப்படவேண்டும் என்றெல்லாம் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்குத் தமிழகத்திலே புதிதாக முளைத்துக்கொண்டு இருக்கக்கூடிய Matriculation பள்ளிகள். அதற்குப் பல விதிகள் உருவாக்கப்பட்டு இருந்தாலும் கூட, அந்த விதிகள் இன்றைக்குத் தமிழகத்திலே முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்றால் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆகவே கடந்த ஆட்சியிலே ஓர் உத்தரவு போடப்பட்டது. ஒன்றாவது வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரை இருக்கக்கூடிய பள்ளிகளில், தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருக்கும்போது, ஒரு சட்டப் பாதுகாப்பைக் கொடுப்பதற்குப் பதிலாக, ஓர் உத்தரவைப் போட்டதினுடைய விளைவாக இன்றைக்குத் தொடக்கக் கல்வியிலே நம்முடைய தாய்மொழி தமிழ்மொழி என்பது கட்டாயப் பாடமாக மாற்றப்படாமல் இருக்கிறது. அதற்கு ஒரு சட்டப் பாதுகாப்பைக் கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு தமிழ் மொழியை இந்தியாவினுடைய செம்மொழியாக அறிவிப்பதற்கு இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய ஆட்சியாளர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியிலே தொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 5–35*

கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆசிரியர் பயிற்சி முடித்த மாணவர்கள் கூடுதலாக இருக்கிறார்கள். இதர மாவட்டங்களிலே அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்ததிலே பல பிரச்சினைகள் இருந்தன; ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன; அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மை மொழியாக தமிழகத்திலே இருக்கக்கூடிய மலையாள மொழியைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை, கன்னியாகுமரி மாவட்டத்திலே கூடுதலாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில், ஒரே ஒரு அரசுக் கல்லூரிதான்



இருக்கிறது. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில். கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஆட்சியாளர்கள், நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய வடசென்னை மாவட்டத்தைப் புறக்கணித்து இருக்கிறார்கள். 2 அரசு கலைக் கல்லூரிகள்தான் இருக்கின்றன. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் யாருடைய கோட்டையோ என்றுதான் கடந்த காலத்திலே கூறிக்கொண்டிருந்தார்கள். அந்தக் கோட்டையிலே ஓட்டையைப் போடுகின்ற வகையில் இன்றைக்கு பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணியிலே போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நான் வெற்றி பெற்றிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, ஆர்.கே. நகர் தொகுதியிலே மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இன்றைக்குத் தமிழகத்தினுடைய மின் துறை அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராயபுரம் தொகுதியிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். பூங்கா நகர் தொகுதியிலே இந்த அணி வெற்றி பெற்றிருக்கிறது. காரணம், கடந்த கால ஆட்சி வடசென்னை மாவட்டத்தை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புறக்கணிக்கப்பட்டு இருக்கக்கூடிய வடசென்னை மாவட்டத்திற்குக் கூடுதலாக நிதிகளை ஒதுக்கித் தர வேண்டும்; புதிய கல்லூரி, பெண்களுக்கான கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை வழங்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஆஸ்டின் அவர்கள். இன்னும் 10 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு சுமார் 4978.85 கோடி ரூபாய் கல்வி மானியத்திற்காக அரசாங்கத்திடம் இந்தத் துறை கோரியிருக்கின்றது. சிற்றூர்களிலும் தொடக்கக் கல்வி வசதி. அனைத்துப் பள்ளிகளிலும் கட்டடம் மற்றும்

தளவாடங்கள் போன்ற வசதி, அனைவருக்கும் தொடக்கக் கல்வி, அனைத்துப் பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகளான போதுமான அளவு வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, இப்படிப் பல்வேறு காரியங்களை நிறைவேற்றுவதற்கு இந்தத் தொகை போதுமானதல்ல என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இந்தக் கொள்கைக் குறிப்பிலே, தரமான கல்வியை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தின்படிதான் வரக்கூடிய காலத்திலே ஆசிரியர்களை நியமிக்கப் போவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். ஏற்கெனவே 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அடிப்படையிலே ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர் பணியாற்றுகின்றபோதுகூட, அங்கே பல காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. ஏனென்றால் 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்திலே ஆசிரியர்களை நியமிப்போம் என்று சொன்னால், நிச்சயமாக கல்வித் தரத்தை உயர்த்துவது என்பது கடினமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். எனவே அந்த ஆணையை நீங்கள் ரத்து செய்துவிட்டு, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தின்படி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பீர்கள் என்று சொன்னால், கல்வித் தரம் உயரும் என்ற அந்த அடிப்படை நிரூபணம் ஆவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

எங்களுடைய மாவட்டத்திலே, காத்தாடிதிட்டு என்ற ஊரிலே இருக்கக்கூடிய பள்ளியிலே 250 மாணவ, மாணவியர்கள் இருக்கிறார்கள். அங்கே தலைமை ஆசிரியர் உட்பட மூன்றே மூன்று ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். அதேபோன்று, சரக்கல்விளை, கீழக்காட்டுவிளை என்ற பகுதிகளில் எல்லாம் 125, 130 மாணவ, மாணவிகளுக்கு, தலைமை ஆசிரியர் உட்பட இரண்டே இரண்டு ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் கருத்திலேகொண்டு கல்வித் தரத்தை உயர்த்தும் வகையிலே, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தின்படி நீங்கள் ஆசிரியர்களைத் தேர்வு செய்து நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–40*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஆரம்பப் பாடசாலை தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பள்ளி இருக்கக்கூடிய



இடத்திலே, உயர்நிலைப் பள்ளி தனியாகவும், ஆரம்பப் பாடசாலை தனியாகவும் இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பிரிகின்றபோது, அங்கே இரண்டு தலைமையாசிரியர்கள் உருவாகியிருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கான infrastructure அங்கே சரியாக இல்லை. ஒரு தலைமை ஆசிரியருக்குத் தேவையான table, chair, அலமாரிகள் போன்ற அந்தத் தளவாடங்கள் ஒருவருக்குத்தான் இருக்கிறதே தவிர, ஆரம்பப் பாடசாலை என்று பிரித்த பிறகு, அந்தத் தலைமையாசிரியருக்குத் தேவையான அந்தப் பொருள்கள் எல்லாம் அங்கே இல்லாத ஒரு நிலை; அதுபோல கட்டட வசதி இல்லாத நிலையும் அங்கேயிருக்கிறது. அதையும் இந்த அரசு கருத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

40 பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்காக இந்த ஆண்டு 220 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 40 பள்ளிகள் என்று சொல்கிறபோது, இந்த மாநிலம் முழுவதும் 40 பள்ளிகளுக்குக் கட்டடங்கள் என்று சொன்னால், நிச்சயமாக அது போதுமானதல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மாவட்டத்திற்குக் குறைந்தது 10 பள்ளிகளுக்காவது புதிய கட்டடங்கள் கட்டுவதாக இருந்தால்தான் ஓரளவு பள்ளிகள் எல்லாம் நல்ல முறையில் நடக்கும். இப்போது மரத்தடியிலே நடைபெறக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் இந்த அரசு மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்காக ஒரு குறிப்பை இங்கே கொடுத்திருக்கிறீர்கள். அதிலே 1:3 என்ற அடிப்படையிலே வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக அவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்குப் பிறகு 50 மதிப்பெண்கள் என்ற அடிப்படையிலே நேர்முகத் தேர்வை நடத்தி, அவர்களைத் தேர்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு, அந்தக் குறிப்பின் கீழே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இவ்வாண்டு முதல் இத்தகைய ஆசிரியர் பணியிடங்களுக்கும் எழுத்துத் தேர்வு நடத்தி, நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கலாமா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே இடைநிலை ஆசிரியர்கள் எல்லாம், வேலைவாய்ப்பு அலுவலகத்தினுடைய seniority அடிப்படையிலே தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். எனவே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட இருக்கின்ற இந்தப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நீங்கள் எழுத்துத் தேர்வை நடத்தினால்,

அது மிகவும் சிரமமாக இருக்கும். ஏனென்றால், பணியிடங்கள் குறைவாக இருக்கும். எழுத்துத் தேர்வை எழுதக்கூடியவர்கள் இலட்சக்கணக்கிலே இப்போது காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அப்படி வருகின்றபோது, அந்த employment seniority என்பது அடிபட்டுப் போகும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் நேர்முகத் தேர்வை நடத்துகின்றபோது அதிலே ஒரு முறையைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நேர்முகத் தேர்விலே முதல் வகுப்பிலே, அதாவது பட்டப் படிப்புக் கல்வியிலே முதல் வகுப்பு மார்க் எடுத்தவர்களுக்கு 2 மதிப்பெண்கள் போட்டிருக்கிறீர்கள். 70 மதிப்பெண்களுக்கு மேல் 4 போட்டிருக்கிறீர்கள். 80 மதிப்பெண்களுக்கு மேல் 6 மதிப்பெண்கள் என்று 10, 12 மதிப்பெண்கள் என்று அந்தப் பட்டியலிலே நீங்கள் சேர்த்திருக்கிறீர்கள். பட்டப் படிப்பை முடித்திருக்கின்ற அந்த ஆசிரியர்களுக்கு இப்போதெல்லாம் பாடங்களிலே கிட்டத்தட்ட 80, 90, 100 வரை வாங்குவது மிகவும் எளிதானது. அந்த அளவிற்கு மதிப்பெண் போடுகின்றார்கள். ஆனால் 20 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் பின்னோக்கிப் பார்த்தீர்கள் என்று சொன்னால், முதல் வகுப்பு வாங்குவது என்பதே மிகவும் சிரமமான காரியம். அப்படியிருக்கிறபோது, 80 மதிப்பெண்களுக்கு மேல் 6 மதிப்பெண்கள் என்று நீங்கள் நேர்முகத் தேர்வுக்குப் போட்டீர்கள் என்று சொன்னால், அது employment seniority–லேயிருந்து வரக்கூடியவர்களுக்கு, அந்த seniority–யிலே இருப்பவர்களுக்கு வாய்ப்புகள் அளிப்பதாக இருக்காது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே முதல் வகுப்பு, 70 சதவிகிதத்திற்கு மேல், அதற்குப் பிறகு 2 ஆம் வகுப்பு என்ற அந்த ஒரு column வைத்து, அந்த 12 மதிப்பெண்களை நீங்கள் பிரித்துக் கொடுப்பீர்களானால், அது முதுமையான ஆசிரியர்களுக்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு – கேள்வி நேரத்திலே குறிப்பிடுகிறபோது நீங்கள் சொன்னீர்கள், பாதிக்கப்பட்ட அத்தனை பேர்களுக்கும் வயது வரம்பையும் தளர்த்தி, அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்திலே, இப்போது அனைவருக்கும் வாய்ப்பு என்கிறபோது, அந்த பாதிக்கப்பட்ட மாணவர்களிடத்திலே அதிகமான கட்டணம் செலுத்தவேண்டுமென்றும், அதேபோல் இப்போதைய கல்வி விதியைப் பொறுத்துதான் அவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்றும் சொல்லப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். அதையெல்லாம் மாற்றிவிட்டு, பாதிக்கப்பட்ட



அனைவருக்கும் வயது வரம்பைத் தளர்த்தி, அத்தனை பேர்களுக்கும் அந்த இடம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மேல்நிலைப் பள்ளியிலே vocational teachers–தொழில் கல்வி ஆசிரியர்கள் என்று அங்கே இருக்கிறார்கள். இப்போது தமிழகத்திலே கிட்டத்தட்ட 3000 பேர்களுக்கு மேலாக தொழில் கல்வி ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். 1978–லே அவர்கள் பகுதி நேர ஆசிரியர்களாக அன்றைக்கு நியமிக்கப்பட்டு கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்குப் பிறகுதான், 1990–லேதான் அவர்களுக்கு time scale என்பது fix செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 2000 ஜனவரி வரைக்கும் அவர்களுக்கு service rules போடப்படாமல், எந்தவிதமான சலுகைகளும், எந்தவிதமான benefits–ம் அவர்களுக்குக் கிடைக்காத சூழ்நிலை இருந்து வந்தது. 2000 ஜனவரியிலேதான் அவர்களுக்கு அந்த service rules போடப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரைக்கும் அந்த service rules நடைமுறைப்படுத்தப்படாமல் 100 ஆசிரியர்கள் இன்றைக்கு ஓய்வுபெற்ற நிலையிலும், கிட்டத்தட்ட 50–க்கும் மேற்பட்டவர்கள் காலமாகிவிட்ட நிலையிலும் அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே இந்த அரசு அந்தத் தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு அந்தப் பணியை வரன்முறைப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆசிரியர்களுக்கு– 1978–லே பணி நியமனம் செய்யப்பட்ட காரணத்தால், இப்போது 10 ஆண்டுகள் குறைந்தபட்சம் அவர்கள் பணி செய்தாலும் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே அந்த 1978 ஆம் ஆண்டைக் கணக்கிலே வைத்துக்கொண்டு, அவர்களுடைய நியமனம் கணக்கிடப்பட்டால்தான் அந்த 10 ஆண்டுகளை அவர்கள் நிறைவு செய்ய முடியும். அதையும் கணக்கிலே வைத்து, அவர்கள் 1978–லே பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியிலே சேர்ந்திருந்தாலும்கூட 1978–ஐ அளவுகோலாக வைத்து அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கக்கூடிய அளவிலே அந்தப் பணி வரன்முறை செய்யப்பட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–45*

ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசும் போதுகூடச் சொன்னார்கள். நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திலே எல்லாம் இன்றைக்கு பாதிக்கப்பட்ட அத்தனை மாணவ, மாணவிகளுக்கும் அவர்கள் விரும்பியபடி அந்தந்தக் கல்லூரிகளிலே இடம்

கிடைத்திருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் நேற்றையதினத்திலே அங்கே நடைபெற்ற அந்தக் கவுன்சிலிங்கிலே பல மாணவ, மாணவிகள் பாதிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். மார்க் அதிகமாக எடுத்தவர்கள் எல்லாம் குறைந்த நிலைக் கல்லூரிகளிலும், மார்க் குறைவாகப் பெற்றவர்களுக்கு எல்லாம் ஏற்கெனவே நல்ல நிலையிலே உள்ள கல்லூரிகளிலும் இடம் கிடைத்துவிட்ட காரணத்தினால், இவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்று சொன்னார்கள். எனவே அப்படிப்பட்ட கல்லூரிகளிலே இடத்தை நீங்கள் அதிகப்படுத்தியாவது number of admission–ஐக் கூட்டியாவது அவர்கள் நினைத்த கல்லூரிகளுக்கு மாற்றிக் கொடுப்பதற்கு முடியுமா என்பதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இதிலே சரியான முறையிலே, சரியான திட்டத்தை வைத்துச் செயல்பட்டிருக்கும் என்று சொன்னால் இதைப்போன்ற பாதிப்புகள் அந்த மாணவ, மாணவிகளுக்கு ஏற்பட்டிருக்காது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓய்வுபெற்ற கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் மறு நியமனம் செய்யப்படும் ஒரு நிலை இரண்டாண்டுகளுக்கு முன்பு இருந்தது. அப்படி மறு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு இப்போது அரசு கடித எண் 36187–ன்படி அவர்கள் பெற்ற ஓய்வூதியம் மற்றும் சலுகைகளை இன்றைக்கு அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிற ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யச் சொல்லி ஓர் உத்தரவை அரசாங்கம் போட்டிருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் ஓய்வு பெற்றவர்கள், மறு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்; மறு நியமனம் செய்யப்பட்ட பிறகு ஊதியமும், சலுகைகளும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பெற்ற ஊதியத்தையும், சலுகையையும் அவர்களுடைய ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்று சொன்னால் அவர்களுடைய வாழ்க்கை மிகவும் பாதிப்புக்குள்ளாகிவிடும். அந்த உத்தரவை அரசு ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம ஊராட்சிகளுடைய மாணவ மாணவிகளுக்கு தொழில்நுட்பக் கல்லூரிகளிலே இன்றைக்கு 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகித இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். கிராமம் என்று சொல்லுகின்றபோது Village Panchayat என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். நான் ஏற்கெனவே ஆளுநர் உரையிலேகூட அதை பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று குறிப்பிட்டேன். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே பேரூராட்சி என்பது கிராம ஊராட்சியைப் போன்று எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல்



மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே நீங்கள் 25 சதவிகிதமாக இட ஒதுக்கீட்டை உயர்த்தியிருப்பதை பேரூராட்சிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தையல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே இன்றைக்குப் படித்த தையல் ஆசிரியர்கள், பெண்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டுகாலமாக நியமனம் செய்யப்படாமல் காத்திருக்கின்றார்கள். அரசினுடைய தையல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்று பயிற்சியை முடித்துவிட்டு, காலி இடங்கள் இருந்தும்கூட 20 ஆண்டுகாலமாக அந்த காலி இடங்கள் நிரப்பப்படவில்லை. அதை அரசு கருத்திலே கொண்டு அந்த காலி இடங்களை நிரப்பி அவர்களுக்குப் பணி நியமனம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுயநிதிக் கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு பேருந்துக் கட்டணத்திலே சலுகை இன்றைக்கு நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே அவர்கள் பேருந்துக் கட்டணத்திலே சலுகை பெற்று வந்தார்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதம் இருக்கும் என்று நினைக்கிறேன். அரசால் அந்தந்த கல்லூரி முதல்வர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முதல் மாணவர்களுக்கு பேருந்துக் கட்டணத்திலே சலுகை நிறுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அரசு இதைக் கவனத்திலேகொள்ள வேண்டும். சுயநிதிக் கல்லூரிகளிலே மாணவர்கள் சேருகின்றபோது மற்ற கல்லூரிகளைவிட கட்டணம் அதிகமாகக் கொடுத்துச் சேருகின்றார்கள். Capitation fees அதிகமாகக் கொடுத்துச் சேருகின்றார்கள். ஏனென்றால் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளிலே, மற்ற அரசுக் கல்லூரிகளிலே இடம் கிடைக்காத காரணத்தால் சுயநிதிக் கல்லூரிகளிலே கட்டணத்தை அதிகமாகக் கொடுத்து ஏழ்மை நிலையிலே உள்ள மாணவர்கள் சேருகின்றார்கள். அவர்களுக்கு நீங்கள் பேருந்துக் கட்டணச் சலுகையை ரத்து செய்தீர்கள் என்று சொன்னால் மிகவும் சிரமத்திற்கு ஆளாவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நீங்கள் தேர்தல் அறிக்கையிலேகூட கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே அதைப்பற்றி எதையுமே குறிப்பிடவில்லை. அதையும் மனதிலேகொண்டு அந்தக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கக்கூடிய திட்டத்தையும் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–50*

இன்றைக்கு தனியார் ஆங்கிலப் பள்ளிகளிலே பல்வேறு வித்தியாசமான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. பல இடங்களில் தனியார்களால் ஆங்கிலப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, 10,000, 15,000, 20,000 ரூபாய் என்று அவர்கள் மாணவ, மாணவிகளிடத்தில் கட்டணங்களை வசூலிக்கக்கூடிய ஒரு நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அங்கே புத்தகங்கள், நோட்டுகள் வழங்குகிறோம் என்று சொல்லி அதற்குத் தனியாக வசூல் செய்கின்றார்கள். இந்த அரசாங்கம் ஒரு குழுவை நியமனம் செய்து ஒரு category-யை நீங்கள் fix செய்ய வேண்டும். பல்வேறு ஆங்கிலப் பள்ளிகள் இருக்கின்றன. category 1, category–2, category–3 என்று போட்டு, தரத்தை நீங்கள் முடிவு செய்து, 2 அல்லது 3 பிரிவுகளாகப் பிரித்து இவ்வளவுதான் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமென்ற ஒரு முடிவான தீர்மானத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும். இல்லையென்று சொன்னால், ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு விதமான கட்டணத்தை, அதிகக் கட்டணத்தை இந்த மாணவ மாணவிகளிடத்திலேயிருந்து வசூல் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். இப்போது தனியார் ஆங்கிலப் பள்ளிகளிலே அந்த நடைமுறை இருக்கிறது. அதை மாற்றக்கூடிய ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்திலே தென் மாவட்டங்களிலே, இப்போது I.A.S., I.P.S., தேர்வு எழுதக்கூடியவர்கள் மிகவும் குறைந்துகொண்டே வருகிறார்கள்; தேர்ச்சியும் குறைந்து கொண்டே வருகிறது. ஆகவே அதை நீங்கள் மாற்றக்கூடிய அளவிலே, தென் மாவட்டத்திலே I.A.S., I.P.S., தேர்வுக்கான ஒரு பயிற்சி மையத்தினை இந்த அரசு தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு பள்ளி, கல்லூரிகளிலே யோகாவை ஒரு பாடமாக வைக்க வேண்டும். உடல்திறன் பலமாக இருந்தால்தான் ஒரு மனிதன் எதிர்காலத்திலே கல்வியைச் சிறப்பாகக் கற்க முடியும் என்ற அடிப்படையிலே யோகாவை ஒரு பாடமாக பள்ளி, கல்லூரிகளிலே நீங்கள் வைத்தீர்கள் என்று சொன்னால், மாணவ மாணவிகளுடைய உடல் திறத்தைப் பலப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

இப்போது அரசு பல்வேறு தொழில்நுட்பக் கல்லூரிகளை எல்லாம் தொடங்கி நடத்திக்கொண்டு இருக்கிறது. ஆனால், கம்ப்யூட்டருக்கு என்று தனியாக கல்லூரி ஒரு இடத்திலும் இல்லாத நிலையிருக்கிறது. இப்போது எல்லா இடங்களிலேயும், எல்லா மாவட்டங்களிலுள்ள நகரங்களிலும் தனியார்தான் Computer College, Computer Institute ஆகியவற்றைத் தொடங்குகிறார்கள். அதிகமான கட்டணத்தை வசூலிக்கிறார்கள். இப்போது கம்ப்யூட்டர் மோகம் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற காரணத்தால், மாணவ மாணவிகள் அதிகமான கட்டணத்தைக் கொடுத்து ஆங்காங்கே படிக்கிறார்கள். அவர்கள் படிப்பதற்கு இடம்கூடக் கிடைப்பதில்லை. ஆகவே அரசு சார்பிலே எல்லா மாவட்டங்களிலும் தொடங்காவிட்டாலும்கூட (மணியடிக்கப்பெற்றது) பல இடங்களிலே கம்ப்யூட்டர் கல்லூரியைத் தொடங்குவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, நூலகம். நாகர்கோவிலைப் பொறுத்தவரையில், மாவட்ட நூலகம் ஒன்று இருக்கிறது. அந்த மாவட்ட நூலகத்திலே புத்தகங்கள் இப்போது அதிக அளவில் இல்லை. ஒரு காலத்திலே, கிட்டத்தட்ட 5 ஆண்டுகள், 10 ஆண்டு காலத்திற்கு முன்பு, அதிகமான புத்தகங்கள், ஒரு இடத்திலும் கிடைக்காத புத்தகங்கள் அங்கே அப்போது இருந்து வந்தன. ஆனால் இன்றைக்கு அங்கே பராமரிப்பு இல்லாமல் அந்த மாவட்ட நூலகத்திலே புத்தகங்கள் எல்லாம் குறைந்த அளவிலே இருந்து கொண்டிருக்கின்றன. அதையும் கருத்திற்கொண்டு நாகர்கோவிலிலே இருக்கின்ற அந்த மாவட்ட நூலத்திற்கு அதிகமாக புத்தகங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் கிராமங்களிலே பல இடங்களிலே நூலகங்கள் கட்டித் தரப்படுகின்றன. ஆனால் அந்த நூலகங்கள், நூலகங்களாக அங்கே செயல்படவில்லை. ஏனென்றால், அவற்றிற்குப் பராமரிப்புச் செலவானாலும் சரி, புத்தகங்களை வழங்குவதற்கும், அவற்றிற்கான தளவாடப் பொருட்களைக் கொடுப்பதற்கும் யாராலும் முடியவில்லை. இந்த அரசாங்கம், கிராமங்களில் உள்ள நூலகங்களுக்கு, ஒரு கிராமத்திற்கு ஒரு நூலகத்திற்காவது புத்தகங்கள், அதற்கான அலமாரிகள், தளவாடப் பொருட்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டு வளாகம் ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இது வரவேற்கக்கூடிய ஒன்றுதான். இருந்தாலும் மாவட்ட அளவிலே இது நின்றுவிடாமல், ஒவ்வொரு ஒன்றிய அளவிலும் ஒரு மினி விளையாட்டு மையம்– வளாகத்தை நீங்கள் தொடங்க வேண்டும். இன்டோர் கேம்ஸ் விளையாடக்கூடிய அளவிலோ அதாவது டேபிள் டென்னிஸ், செஸ் விளையாடக்கூடிய அளவிலோ அல்லது சிறிய சிறிய விளையாட்டுக்களை

அங்கே நடத்தக்கூடிய அளவிலோ ஒன்றியத்திற்கு ஒரு இடத்திலே ஒரு மினி விளையாட்டு வளாகம் அமைத்துக் கொடுத்தால் கிராமப் பகுதியிலே உள்ள மாணவர்கள் விளையாட்டிலே தங்களை வளர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

படித்தவர்கள் அதிகமாக இருக்கிற குமரி மாவட்டத்திலே கலைக் கல்லூரி இல்லாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதுவரைக்கும் அங்கே அரசு கலைக் கல்லூரி தொடங்கப்படவில்லை. எனவே அரசு இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ, அரசு கலைக் கல்லூரி ஒன்றை நாகர்கோவிலிலோ அல்லது குமரி மாவட்டத்தில் ஏதாவது ஒரு பகுதியிலோ தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கல்வித் துறை மானியத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றியைத் தெரிவித்து உரையை முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** நன்றியைத் தெரிவித்து தரமான கல்வியை வழங்கக்கூடிய அளவிலே ஒரு நல்ல நிருவாகத்தை இந்த அரசு கல்வித் துறைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். 6 மணிக்கு அமைச்சர் பதிலுரையைச் சொல்ல விடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. கல்வியிலே பேசி, மருத்துவத்திலே போய் அதுவே குடும்பக் கட்டுப்பாடாக மாறி, எனது பேச்சிற்குரிய நேரத்தையும் அது சுருக்கிவிட்டது என்பதுதான் இப்போதிருக்கிற நிலைமை. ஆகவே காலத்தின் அருமை கருதி நான் சுருக்கமாக உரையாற்ற விரும்புகிறேன்.

*பிற்பகல் 5–55*

அரசுத் துறையிலே இலாபம் இல்லாத துறை கல்வித் துறை. ஆனால் அனைத்துத் துறைகளும் இலாபம் பெறுவதற்குரிய ஆதர்ஸ துறையாக இருப்பது கல்வித் துறை. ஆகவே இதற்கு சுமார் 5000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது என்பது பெருந்தொகையாக இருக்கிறது



என்று சொன்னாலும்கூட, போதுமானதாக இருக்காது என்பதுதான் யதார்த்தமான உண்மை.

குறிப்பாக, கல்வியைப் பொறுத்தவரையிலும் வீரத் துறவி விவேகானந்தர் உங்களுடைய சாத்திரங்களை கங்கையிலே எறிந்துவிட்டு, உணவும், உடையும் கிடைக்கக்கூடிய கல்வியை முதலிலே மக்களுக்குப் போதியுங்கள் இவை கிடைத்தபின் உங்களுடைய சாத்திரங்களை இவர்கள் படிப்பார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இந்த உணர்வுகளையெல்லாம் உள்ளடக்கி இந்த அறிக்கையிலே பல்வேறு சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு வயது வரம்பு நீக்கம் செய்தது; ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே பயின்ற மாணவர்களுக்குரிய வாய்ப்பு; அதைப்போல ஆசிரியர்கள் பணியிட மாற்றத்தினுடைய கவுன்சலிங் முறை; அதைப்போல இன்னும் பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிற இந்த அரசாங்கத்தையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதிலே பல்வேறு சிறப்பு அம்சங்கள் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. பல உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட, குறிப்பாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே தொடங்கப்பட்ட தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் நலிவடைந்த நிலையிலே இருக்கிறது. இதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினாலே பல்வேறு சிரமங்களுக்கு அது உள்ளாகி இருக்கிறது. சென்ற முறையும் இதைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், இதனுடைய தேவையை அறிந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னையிலே செயல்படுகிறது. அதற்கும் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத நிலைமையிலே, நலிவுற்ற நிலையிலே இருக்கிறது. அதைச் செயல்படச் செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதிலே சுமார் 40 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குப் போதுமான அளவு ஊதிய உயர்வு இல்லை. அவர்களுக்கு எந்தவிதமான பயன்களும் கிட்டாத நிலையிலே இருக்கின்றார்கள். அவற்றையும் உணர்ந்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள பெரும்பாலான கல்லூரிகளிலே விரிவுரையாளர்கள் இல்லாத நிலை இருக்கிறது. இதைப் போக்குவதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லியிருந்தாலும், உடனடியாகப் போக்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். எனது மன்னார்குடி கல்லூரியிலே கிட்டத்தட்ட 28 விரிவுரையாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று மன்னார்குடி கல்லூரியில் முதுகலை பாடப் பிரிவு தொடங்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதைத் தொடங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரையிலும், நிருவாக மொழியாக நமது தமிழகத்திலே அதைச் சிறப்பாகச் செயல்படுத்திட வேண்டும். எந்த அரசுத் துறையாக இருந்தாலும், தமிழ் மொழியிலே அதற்குரிய செயல் பாட்டைக் கொண்டுவருவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று பேசப்பட்டாலும்கூட, அதை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் தொடர்ந்து நீடிக்கிறது. அதைச் செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

அதைப்போல, பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட வேண்டும் என்று சொன்னாலும்கூட, அதை உரிய முறையிலே சட்டமாக்கி நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டாலும்கூட, அது தொடர்ந்து நடைபெறாத நிகழ்ச்சியாக இருக்கிறது. அவற்றையும் சரி செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மன்னார்குடி தொகுதியிலே இருக்கிற பழமை வாய்ந்த நூலகத்திற்கு கட்டட வசதி இல்லாத நிலையில், அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கான கட்டட வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக்கப்பட வேண்டியிருக்கின்றன; நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக்கப்பட வேண்டியிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் தனித்து முறையிலே நான் எழுதிக் கொடுக்க இருக்கிறேன். இவற்றையும் செய்து தர வேண்டும்.



குறிப்பாக, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியிலே ஒரு கல்லூரி இல்லை என்ற குறைபாடு நீண்டகாலமாக இருக்கிறது. அதை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சார்பிலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்னும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன என்று சொன்னாலும், காலத்தின் அருமை கருதி, அவற்றையெல்லாம் சொல்ல முடியாத நிலையிலே இருக்கின்றேன். குறிப்பாக, பட்டதாரி ஆசிரியர்களுடைய வயது வரம்பை நீக்கியதோடு மட்டுமல்லாமல், வயது அடிப்படையிலே அவர்களை பணி நியமனம் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையோடு, 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு அவர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. குறிப்பாக, திரு. சிவஞானம் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட ஒரு குழு, அதுபற்றிப் பரிந்துரை செய்திருக்கிறது. இப்போது இருக்கிற அந்தப் பாட நிலைமைகளுக்கேற்ப, பட்டதாரி ஆசிரியர்களை 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல, 5 ஆம் வகுப்பு வரையிலே இருக்கிற தமிழ் வழிக் கல்வியைப்பற்றி எந்தச் செய்தியும் சொல்லப்படவில்லை. அது அப்படியே உச்சநீதி மன்றத்தில் இருக்கிறது என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே உச்ச நீதிமன்றத்திலே இருக்கிற அந்த வழக்கை, விரைவாக, விரைவுபடுத்தி, அவர்களிடமிருந்து அந்த ஆணையைப் பெற்று, உரிய முறையிலே 5 ஆம் வகுப்பு வரையிலும் கட்டாயத் தமிழ்க் கல்வியை உருவாக்குவதற்கான முயற்சியை தமிழகத்திலே மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 6–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம் அவர்களுக்கு மிக்க நன்றி. அடுத்து, அமைச்சர் அவர்கள் பதிலுரை.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்த்த ஔவைப் பிராட்டிக்கு நெல்லிக்கனியைத் தந்து, தமிழும் வாழ வேண்டும், கல்வியும் வாழ வேண்டுமென்று ஆண்ட

அதியமான் பிறந்த மாவட்டத்தில் பிறந்து, புரட்சித் தலைவி அவர்களாலும், புரட்சித் தலைவர் அவர்களாலும் டில்லி பாராளுமன்றத்திற்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராளுமன்றத்தினுடைய துணை சபாநாயகராக ஐந்தாண்டு காலம் பணியாற்றி, மீண்டும் நடைபெற்ற தேர்தல்களிலே புரட்சித் தலைவி அவர்களால் வெற்றி பெறச் செய்யப்பட்டு, அதன்மூலமாக அறிவுலக மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வகித்த அந்த சட்டத் துறையினுடைய அமைச்சர் என்ற பதவியிலே என்னையும் உட்காரவைத்து ஓராண்டு பணியாற்றச் செய்து, மீண்டும் இப்போது நம்முடைய சட்டமன்றத்திற்கு முதல்முறையாக நான் சார்ந்த பர்கூர் சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட வைத்து, தமிழகத்திலேயே அதிகமான வாக்கு வித்தியாசத்தில், சுமார் ஐம்பதாயிரம் வாக்கு வித்தியாசத்தில் என்னை முதல் முதன்மையான வேட்பாளராக வெற்றிபெறச் செய்வதற்குப் பாடுபட்ட என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியினைக் காணிக்கையாக்கிவிட்டு, இப்போது நான் இந்தக் கல்வி மானியத்தினுடைய வேண்டுதலை இந்த அவையின் முன்னால் வைக்கிறேன்.

காலையிலேயே நீங்கள் திருக்குறளைச் சொன்னீர்கள்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

என்று திருக்குறளைச் சொல்லி, கல்வியினுடைய முக்கியத்துவம் பற்றியும், இத்தகைய செல்வம் இந்த நாட்டிற்குத் தேவை, அந்த செல்வத்தைப் பெறுவதுதான் நம்முடைய பெருமையாக இருக்கும் என்று மிகச் சிறப்பாக வள்ளுவருடைய வாக்கைச் சொன்னீர்கள். அந்த வள்ளுவரின் வாக்குப்படி கல்வியைத் தமிழகம் முழுவதும் நன்றாகப் பரப்பி—நம்முடைய S.R.B. காலையில் சொன்னார்களே, இதை கல்வித் துறை என்று இங்கே சொன்னாலும், டில்லியிலே Human Resources Development—மனித வள மேம்பாட்டுத் துறை என்று ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொன்னது S.R.B. அல்ல, திரு. லட்சுமணன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** லட்சுமணன் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கல்வியானது மனிதனை மேம்பாடு செய்வதற்குத் தேவைப்படுகிறது என்பது அனைவரும் உணர்ந்திருக்கிற ஒரு உண்மையாகும். அந்தக் கல்வியை மேலும் நன்றாகப் பரப்புவதற்காகப்



பல்வேறு கட்டங்களிலே பல்வேறு தலைவர்கள் பல முயற்சிகளைச் செய்து வந்திருக்கிறார்கள். கர்ம வீரர் காமராஜர் காலத்திலிருந்து பல்வேறு திட்டங்களை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தி, பேரறிஞர் அண்ணா காலத்திலும் பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து இந்த நாடு முன்னேறுவதற்காக இந்த அவையிலேயே பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதுபோல புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே தமிழகம் முழுவதும் நல்ல கல்வி தர வேண்டும், ஏழை எளிய மக்கள் நல்ல கல்வியைப் பெற்று அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற வேண்டும் என்பதற்காகப் பல்வேறு திட்டங்களைத் தந்தார்கள். அவர் சொன்னது, தான் படிக்கவில்லை என்றாலும் எதிர்கால சந்ததிகள் நன்றாகப் படிக்க வேண்டும், படிக்கும்போது அவர்களுக்கு எந்தத் தொல்லையும் இல்லாமல் நல்ல கல்வியைக் கற்க வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தில் அவர் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.

*பிற்பகல் 6–05*

சத்துணவுத் திட்டம் மட்டுமல்லாமல் மாணவர்களுக்கு இலவசமாக சீருடையும், இலவசமாக நோட்டுப் புத்தகங்களையெல்லாம், புத்தகங்களையெல்லாம் தந்து, இந்த நாட்டிலே கல்வி மிக முக்கியம் என்ற எண்ணத்தில் செயல்பட்டார்கள். அந்த எண்ணத்தில் செயல்பட்டதன் காரணமாகப் பல்வேறு புரட்சிகரமான செயல்கள் இந்த தமிழகத்திலே ஏற்பட்டன. அதிலும் குறிப்பாக தொடக்கக் கல்வியை எடுத்துக்கொண்டீர்கள் என்றால் முதலில் பார்க்கும்போது மாணவர்கள் பள்ளிகளுக்கு வருகிறார்கள்; மாணவிகள் வருகிறார்கள்; ஆனால் பிறகு மாணவிகளும், மாணவர்களும் கல்வி நிலையத்தில் இல்லாத ஒரு நிலைமையைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அதுவும் குறிப்பாக ஏழையெளிய மக்களுடைய குழந்தைகள் தொடர்ந்து படிக்க முடியாத ஒரு அவல நிலைமையை இந்த நாட்டிலே நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்குக் காரணம் அவர்களுடைய வறுமை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, இலவசச் சீருடைத் திட்டத்தின் காரணமாக இதுபோன்ற பல்வேறு திட்டங்கள்ளக் கொண்டுவந்து ஏழை மாணவ மாணவிகள் படிக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டுவந்ததன் காரணமாக இடையிலே பள்ளியை விட்டுச் செல்கிற மாணவ மாணவிகள் விகிதாச்சாரம் குறைக்கப்பட்டது. இது ஒரு புரட்சிகரமான மாறுதல் என்று சொல்வதற்குக் காரணம், அதற்கு முன்

எத்தகைய திட்டங்கள் வகுத்திருந்தாலும் இந்த ஏழை மாணவர்கள் எதற்காகப் படிக்காமல் சென்று விடுகின்றார்கள் என்ற நிலைமையை தன் மனதிலே நிறுத்தி அந்த அவல நிலையை மாற்ற எப்படியும் இந்தச் சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்று இந்தத் திட்டத்தைக் கொண்ட வந்ததுதான். அதன் காரணமாகத்தான், நீங்கள் படிப்படியாகப் பார்த்தீர்களென்றால், கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகளிலே மாணவ, மாணவிகள் படிக்கின்ற ஒரு தன்மை வளர ஆரம்பித்தது. அதைப் பல பேர் பாராட்டியிருக்கிறார்கள். இதற்காக தமிழ்நாட்டிற்கு நற்சான்று தந்திருக்கிறார்கள் என்பது யாரும் மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும். அதற்குப் பிறகு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களும் அதே வழியிலே நின்று நல்ல கல்வி தர வேண்டும் என்பதற்காகப் பல்வேறு முயற்சிகளை எடுத்து, அவர்களும் அவருடைய காலக் கட்டத்திலே, drop–outs–என்று சொல்வதைப் படிப்படியாகக் குறைத்திருக்கிறார்கள். ஆகவே புரட்சித் தலைவர் வழியிலே நின்று புரட்சித் தலைவி அவர்களும் இத்தகைய செயல்பாட்டைச் செய்ததன் காரணமாக எந்த அரசு செயல்படுவதைக் காட்டிலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் காட்டிலும், இந்த drop–outs என்பது குறைந்திருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். ஏனென்றால் இத்தகைய திட்டங்கள் எல்லாம் நாட்டு மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் பயன்பட்டதன் காரணமாக இது கிராமப்புற மக்களுக்கு பயன்பட்டதன் காரணமாக இது வெற்றிகரமாக நடைபெற முடிந்தது. ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தைவிட, drop–outs என்று சொல்கிற–இடையிலே நின்று விடுகின்றார்களே, அந்த விகிதாச்சாரம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மொத்தத்தில் பார்த்தீர்கள் என்றால் 5 ஆண்டுகளுக்கு 1 சதவிகிதம்தான் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், புரட்சித் தலைவியினுடைய ஆட்சிதான், இந்த கிராமப்புறங்களுக்காக நல்ல கல்வியைத் தந்து, அவர்களுக்கு மேலும் பல வசதிகளைத் தந்ததன் காரணமாக மாணவ, மாணவிகள் தொடர்ந்து கல்வி கற்றார்கள் என்ற உண்மையை இந்த அவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல, சமீபத்திலே நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்தவுடனேயே, 3 மாத காலத்திற்குள்ளாகவே, தொடக்கக் கல்வியிலேயே ஒரு புரட்சியைச் செய்திருக்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே 250 ஆரம்பக் கல்வி நிலையங்களை இந்த ஆண்டே தொடங்குவதற்காகவும், 250 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்காகவும் அனுமதி தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்பேயே 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் மாற்றியிருக்கிறார்கள். இது ஓர் அரிய சாதனை என்று சொல்ல வேண்டும். நாம் சொல்கிறோம், நம்முடைய அரசு, புரட்சித் தலைவி அரசு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே கஜானா காலி என்று சொன்னோம். அதுமட்டுமல்லாமல், Neyveli Lignite Corporation–இன் royalty எல்லாம் advance–ஆகவே பெற்று, பணத்தையும், கடனாக முதலிலேயே செலவு செய்ததன் காரணமாக கடன் சுமையும் நமக்கு ஏறியிருக்கிறது. இந்த நிலையில்கூட தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் எப்படியாவது நம்முடைய கல்வியை மேம்படுத்த வேண்டும் கிராமப்புறங்களிலேயுள்ள ஏழை மக்களுக்குக் கல்வியைத் தர வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதோடு இன்னொரு புதிய புரட்சிகரமான திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறார்கள். பொதுவாக கிராமப்புறங்களில் இந்த ஏழையெளிய மக்களுடைய குழந்தைகள் தொடர்ந்து கல்வியைப் படிப்பதில்லை என்பதைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக, ஆதிதிராவிட மாணவர்கள் படிக்கின்ற அந்தப் பகுதியிலே சென்று பார்த்தோம் என்றால், அந்தக் குழந்தைகளை, பெண் குழந்தைகளைப் பார்க்கும்போது அவர்கள் கல்வி நிலையங்களுக்கு வராமல் தொழிலுக்குச் செல்வது பரிதாப நிலைமையாக இருக்கிறது. சத்துணவுத் திட்டத்தைத் தந்தாலும்கூட அதைப் பெறுவதற்காக அவர்கள் வருகின்றார்கள்; பிறகு பார்த்தால் இருப்பதில்லை.

பிற்பகல் 6–10

இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால், அவர்களுடைய வறுமைதான். கிராமங்களுக்குச் செல்கின்றோம், வாக்குகள் கேட்க பல பகுதிகளுக்குச் சென்றிருக்கின்றோம். நாமும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்தான். நாம் அங்கே சென்று பார்க்கும்போது உண்மை நிலையைப் பார்த்திருக்கிறோம். நமக்கே ஒரு பரிதாபம் இருக்கிறது. வறுமையின் காரணமாக ஒரு பெண் குழந்தை, கிழிந்த பாவாடையுடன் மேலே சட்டையில்லாமல் ஒரு கைக் குழந்தையை வைத்துக்கொண்டு ஒரு 10 வயது பெண் குழந்தை நின்றுகொண்டிருக்கிறது, அந்தக் காலனியிலே. இதைப் பார்க்கும்போது நமக்கு எப்படி வாக்கு கேட்பது என்றுகூட ஒரு தயக்கம் வருகிறது. நமக்கு ஒரு குழந்தையிருந்தால், நம்முடைய நிலைமை அப்படியிருந்தால் அது எப்படியிருக்கும் என்ற உணர்வு நமக்கு ஏற்பட்டு

மிகக் கடினமாக இருக்கிறது. சமுதாயத்தில் அந்தக் குழந்தை, அந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தது என்பதற்காகவா அப்படிப்பட்ட தொல்லையிருக்க வேண்டும்? அந்த எதிர்காலம் தானா நாம் தந்துகொண்டிருப்பது? அந்தக் குழந்தைகளுக்கு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஏதாவது திட்டம் வைத்திருக்கிறோமா? திட்டம் வைத்திருந்தாலும் ஏன் அது பள்ளிக்கு வராமல் இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கின்றோமா? இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் வறுமை. கட்டடங்களைக் கட்டுகின்ற இடத்திலே பார்த்தால் அந்தக் குழந்தை அங்கே உட்கார்ந்து கொண்டே இருக்கும். எதற்காக அங்கே செல்கிறது பள்ளியைவிட்டு? கைக் குழந்தையை வைத்துக்கொண்டு பாதுகாப்பதற்காகச் சென்றுவிடுகிறது. அங்கு கணவனும் மனைவியும் உழைக்கின்றார்கள். இந்தக் கைக் குழந்தையைப் பார்ப்பதற்கு வேறு வழியில்லாமல் இருப்பதன் காரணமாகத்தான் அவர்கள் அந்தக் குழந்தையை அழைத்துச் சென்று, பள்ளிக்கூடம் போகாத ஒரு நிலைமையை உருவாக்கிவிட்டு, அவர்கள் வேலைக்கு வைத்துவிடுகின்றார்கள். அதன்காரணமாக, தொடர்ந்து அந்தப் பெண் குழந்தைக்கு–அது ஆதிதிராவிட பெண் குழந்தையாக இருக்கட்டும், ஏழைக் குழந்தையாக இருக்கட்டும், அத்தகைய தொழிலாளிகள் குழந்தைகளுக்கு தொடர்ந்து கல்வி கிடைக்காமல் அவர்களெல்லாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவேதான், இந்த drop–outs என்று சொல்கிறோமே, இடை நிறுத்தம் வருகின்றதே அதற்கு ஏதாவது நாம் செய்ய முடியுமா? அதை எவ்வாறு செய்யலாம் என்பதற்குத்தான் புரட்சித் தலைவி ஒரு திட்டத்தை வகுத்திருக்கின்றார்கள். அதைத்தான் சொல்ல வருகின்றேன். இந்தக் குழந்தைகளுக்காக தனியாக் ஒரு திட்டத்தை வகுத்து எப்படியாவது அவர்கள் கல்வியைத் தொடர வேண்டும்; அந்தப் பெண் குழந்தைகள் கல்வியைத் தொடர்வதற்காக இந்த அரசு முன்வர வேண்டும் என்பதற்காக ஒரு பெரிய இயக்கத்தை உருவாக்குவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள். அதைச் செயல்படுத்துவதற்கு எங்களுக்கு ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். மாவட்ட கலெக்டர்களை வைத்து, மற்ற அதிகாரிகளையும் வைத்து இத்தகைய குழந்தைகளுக்கு என்ன செய்யலாம், இந்தக் கைக் குழந்தைகளை வைத்துக் கொள்வதற்காகத்தானே அங்கே செல்கின்றார்கள், அந்தக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு இங்கே எப்படி பால்வாடி என்று சொல்கிறோமோ, அதுபோன்ற நிலையங்களை, குறிப்பாக, அந்தக் குழந்தைகள் படிக்கின்றார்களே அந்தப் பள்ளியின் பக்கத்திலே வைத்துவிட்டால் அந்தக்



குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு திட்டத்தை வகுத்து, அதன்மூலமாக இந்தக் குழந்தைகள் தொடர்ந்து கல்வி நிலையங்களுக்குச் சென்று படிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை வகுத்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், 10 வயது, 15 வயது என்று இருக்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு என்ன செய்வது என்றால், அவர்கள் நேரடியாக முதல் வகுப்பிலே சேர முடியாது, இல்லை இரண்டாம் வகுப்பிலே சேர முடியாது. அதற்காக அவர்களுக்காக இந்த Non–Formal Education என்ற திட்டத்தின் மூலமாக கல்வியைத் தந்து, அந்தக் குழந்தைகளை மீண்டும், 3 வது 4 வது வகுப்பிலே சேர்த்து அவர்கள் கல்வியைத் தொடருவதற்காகத் திட்டம் வகுத்திருக்கின்றார்கள். இப்படியெல்லாம் இந்தச் சமுதாயத்தை மனதிலே வைத்து, தொடக்கக் கல்வியை முன்னேற்றுவதற்கு, வளர்ப்பதற்குப் பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவி அரசு எப்படி தேர்தல் அறிக்கையிலே சொன்னார்களோ, அப்படி செயல்படுத்துவதற்காகத் திட்டம் வகுத்திருக்கின்றார்கள். அதைத்தான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த drop–outs–ஐக் குறைப்பதற்கு இந்த அரசு அனைத்துத் திட்டங்களையும் வகுக்கத் தயாராக இருந்துகொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, உங்களுக்குத் தெரியும், சுமார் 31 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகள் நம் தமிழகத்திலே இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் பேசும்போது, எந்த அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடுநிலைப் பள்ளியைக் கொண்டு வந்தார்கள் என்பதுபற்றிச் சொன்னார்கள். ஆனால் எப்படி இருக்க வேண்டுமென்றால், 1:3 என்ற விகிதாசாரப்படி மூன்று ஆரம்பப் பள்ளிகள் இருந்தால் ஒரு நடுநிலைப் பள்ளி இருக்க வேண்டும். ஆகவே இதுவரையில் 10000 நடுநிலைப் பள்ளிகளாவது நம் தமிழகத்தில் இருக்க வேண்டும். அதற்கு எந்த அரசும் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டிலே எப்படியாவது அந்த நிலைமையைக் கொண்டு வர வேண்டும் என்பதற்கு படிப்படியாக இந்த 5 ஆண்டு காலத்திற்குள்ளாக Primary Schools, ஆரம்பப் பள்ளிகளையெல்லாம் நடுநிலைப் பள்ளிகளாக்க வேண்டும் என்பதற்காகத் திட்டம் வகுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான், நான் முன்பு சொன்னதுபோல, இந்த ஆண்டிலே 250 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக அறிவித்திருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் அந்த அளவுக்கு கிராமங்களில் கல்வி வளர வேண்டும் என்பதுதான். அந்தப் பெண் குழந்தைகளுக்கு நல்ல கல்வி தர வேண்டும். குறிப்பாக, ஆதிதிராவிடப் பெண் குழந்தைகளுக்கு

கல்வி தர வேண்டுமென்ற உணர்வுடன் தாயுள்ளத்தோடு அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 6–15

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலேயே நாங்கள் சொல்லியிருக்கிறோம். கிராமங்களில் கல்வியை வளர்ப்பதற்காக எல்லா உயர்நிலைக் கல்வி நிலையங்களையும் படிப்படியாக மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவோம் என்று சொல்லியிருக்கிறோம். காரணம், நம்முடைய கிராமப் பெண்களைப்பற்றி உங்களுக்குத் தெரியும். ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளியோடு படிப்பை நிறுத்திவிடுவார்கள். பக்கத்துக் கிராமத்திற்குக்கூட அவர்கள் செல்வதற்குத் தயாராக இல்லை. காரணம், நடுநிலைப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டாலே, வயது வந்தவுடன் அந்தப் பெண் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்குத் தயங்குகிறார்கள். பணக்காரராக இருந்தாலும் சரி, ஏழையாக இருந்தாலும் சரி அதே நிலைமைதான். ஆகவே பெண் கல்வியை மேலும் வளர்க்க வேண்டும் என்பதற்காக கிராமப்புறத்தில் உள்ள ஏழை மக்களும் வசதி படைத்தவர்களும்கூட, அந்தக் கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கவும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவும் திட்டத்தை வைத்திருக்கிறோம். ஆகவே குறைந்தது 5 ஆண்டுகள், 10 ஆண்டுகளுக்குள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமப்புற கல்வி நிலையங்களையும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசின் குறிக்கோள். இதுதான் புரட்சித் தலைவியின் செயல்பாடாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்காக கல்வித் துறையைப் பார்த்ீர்களென்றால் இந்த ஆண்டு சுமார் 5000 கோடி – 4,900 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. நம்முடைய நண்பர்கள் பேசியபோது இந்தத் தொகை போதாது என்று சொன்னார்கள். உண்மைதான். கல்விக்காக அதிகப் பணம் ஒதுக்குவது தேவைதான். அதை யாரும் மறுக்க முடியாது. இருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு, கல்விக்கு முக்கியத்துவம் தந்து புரட்சித் தலைவி அவர்கள் இந்த அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். பள்ளிக்குக்கூட கட்டடங்கள் கட்டுவது, வசதிகளைச் செய்து தருவது பற்றியெல்லாம் சொன்னார்கள். நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, கல்வி நிலையங்களைப் பார்த்தால், சரியான கழிப்பிட வசதி கிடையாது, குடிதண்ணீர் வசதி கிடையாது என்று இதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்த ஆண்டு பார்த்தீர்களென்றால் 330 கோடி



ரூபாய் கல்வித் துறைக்கு அதிகமாக ஒதுக்கியது மட்டுமல்லாமல் 'நபார்டு' வங்கியின் மூலமாக 300 கோடி ரூபாய் கடன் பெற்று இந்த வசதிகளை எல்லாம் மேம்படுத்துவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதையும் இந்தத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இப்படி கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், நல்ல கல்வியைத் தருவதற்கும், குறிப்பாக ஏழைப் பெண்களுக்கும், ஆதிதிராவிடப் பெண்களுக்கும் நல்ல கல்வித் திட்டத்தை வகுத்திருக்கிறோம். நண்பர் அவர்கள் சொன்னதுபோல, ஆதிதிராவிடப் பெண்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளிலே சுமார் 80,000 பெண்கள் இலவசமாக சைக்கிள்களைப் பெற்று அவர்கள் வீட்டிலிருந்து கல்வி நிலையத்திற்குச் செல்லும் திட்டத்தைச் செயல்படுத்த அறிவித்திருக்கிறார்கள். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், அந்த அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள் தொடக்கக் கல்வியிலே ஆர்வம் காட்டுகிறார், அதுவும் கிராமப்புறப் பெண்களுக்கு நல்ல உயர்நிலைக் கல்வியைத் தர வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு மேல்நிலைப் பள்ளிகளிலே கணினி கல்வி. சென்ற ஆட்சியிலே சுமார் 192 கோடி ரூபாயிலே திட்டத்தை வகுத்து அதனை மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்துவதற்கு இரண்டு கட்டமாகத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் அந்தச் செயல்பாட்டைப் பார்த்தீர்களென்றால் அது வெற்றிகரமாக அமையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். காரணம், அதைத் தனியார்கள் நடத்துகிறார்கள். அவர்களுக்கு 5 ஆண்டு contract தரப்பட்டிருக்கிறது. முதலிலே tenders–ஐப் பார்த்தீர்களென்றால் NIIT போன்ற பெரிய பெரிய கம்பெனிகள் எல்லாம் வந்திருக்கின்றன. அதற்குப் பிறகு சாதாரண கம்பெனிகள் வந்திருக்கின்றன. அந்தக் கல்வி நிலையங்களுக்குச் செல்லும்போது சிலர் என்னிடம் விண்ணப்பம் தருகிறார்கள். யார் தருகிறார்கள் என்றால் அங்கு பணியாற்றுபவர்களும் தருகிறார்கள். அவர்களுக்குச் சரியான சம்பளத்தை அந்த contract நிருவாகம் தருவதில்லை என்ற ஒரு குறைபாடு தெரிவிக்கப்பட்டது. ஏதோ ரூ.1000, ரூ.1500 என்று தந்துவிட்டு, அவர்கள் எல்லாம் நம்முடைய மாணவர்களுக்கு கணினி கல்வியைத் தருவதற்காகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே contract எடுத்தவர்கள் உண்மையிலே என்ன எண்ணத்தோடு எடுத்தார்களோ தெரியாது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது, நம்முடைய மாணவ மாணவிகளுக்குச் சரியான கல்வியைத் தரவில்லை. அதுவும் பிளஸ் 1, பிளஸ் 2–க்குத்தான் தருகிறார்கள். அதோடு அவர்களுக்கு என்ன சலுகையென்றால், மாலை நேரத்தில் தனிப்பட்ட

மாணவர்களுக்கு அந்தக் கணினி கல்வியைத் தரலாம் என்ற சலுகையும் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இதனால் என்ன நடக்கிறது என்றால் அவர்கள் மாலை நேரத்தில்தான் சரியாக நடத்தலாம் என்று அங்கு படிக்கின்ற பிளஸ் 1, பிளஸ் 2 மாணவர்கள்கூடத் தனியாக, அதிகமான ஒரு கட்டணத்தை வசூலித்துத் தருவதாகப் புகார்கள் வருகின்றன. ஆகவே இத்தகைய 'contract system' ஆனது இதை இப்பொழுது செயல்படுத்துவதில் தடை இருக்கிறது. ஆகவே இந்த அரசு அதைப் பார்த்து அவர்களுடைய குறைபாடுகளையெல்லாம் பார்த்து, நிவர்த்தி செய்ய வேண்டிய நடவடிக்கையில் ஈடுபடும் என்பதை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 6–20*

பிறகு, கல்வி நிலையங்களிலே எல்லாம், குறிப்பாக மலைப்பாங்கான இடங்களிலே உள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாத ஒரு நிலை இருந்துகொண்டு வருகிறது. அதைப் போக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. Parent–Teacher Associations–க்குகூட அதற்குள்ள அதிகாரத்தைத் தந்து அவர்களாகவே ஆசிரியர்களை நியமனம் செய்துகொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதுவும் முறைப்படிதான் செய்ய வேண்டும். Employment Exchange போன்றவற்றின் மூலமாகப் பட்டியலைப் பெற்று அவர்களைத் தேர்ந்தெடுப்பதுதான் சிறந்ததாக இருக்கும். அப்படியும் கிடைக்காவிட்டால் அங்கு அருகில் இருக்கும் நன்கு படித்துப் பட்டம் பெற்றவர்களை வைத்தும் நடத்தலாம். அதற்குரிய தொகையை அரசே தர நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதற்காக Parent–Teacher Association வசூல் செய்வதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது. ஏனென்றால் புரட்சித் தலைவி அவர்கள் இந்த முறைகேடுகள் வரக்கூடாது என்பதற்காக இப்படித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொன்று, ஒரு குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. இப்போது Entrance Test–லே பல்வேறு மாணவ மாணவிகளுக்கு கவுன்சலிங் சிஸ்டத்திலே Medical College–களிலே, Engineering College–களிலே இடம் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டுகளையும் பார்த்தோம் என்றால் எத்தகைய மாணவர்களுக்கு இத்தகைய இடங்கள் கிடைத்திருக்கின்றன என்று பார்க்க வேண்டும். குறிப்பாக improvement என்ற சிஸ்டத்தை வைத்திருக்கிறோம். பிளஸ் 1, பிளஸ் 2 என்று இரண்டு ஆண்டுகள் படிக்க வேண்டிய ஒரு பாடத் திட்டம் ஆகும். ஆனால்



பொதுவாக என்ன நடைபெறுகிறது என்றால் 50 சதவிதத்திற்கு மேல், improve செய்தவர்களுக்குத்தான் Medical College–களிலே இடங்கள் கிடைத்திருக்கின்றன. Improve செய்தவர்களுக்குத்தான் கிடைத்திருக்கின்றன என்ற புள்ளி விவரங்கள் வந்திருக்கின்றன. எனவே ஒழுங்காகப் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற அவல நிலைமை இந்த சிஸ்டத்திலே, இந்த முறையிலே வந்திருக்கிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். காலம் எல்லாம் படித்து அவர்கள் நல்ல மார்க்குகள் வாங்கினால்கூட improvement செய்தவர்களுக்குத்தான் கிடைக்கிறது என்றால் இப்போது மீண்டும் இந்த மாணவ மாணவிகளும் ஓர் ஆண்டு கழித்து improvement–க்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே improvement செய்தவர்கள், தற்காலிகமாக ஏதோ ஒரு சூழ்நிலையின் காரணமாகத்தான் படிக்க முடியாமல் இருக்கலாம். அதை இல்லையென்று சொல்லவில்லை. ஆகவே அந்த மாணவ மாணவிகளுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் தேவைதான். அதற்காகத்தான் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காக improvement system கொண்டுவந்திருக்கிறோம். அந்தத் தரத்தை உயர்த்திக்கொள்ளும்போது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஏதாவது ஒரு subject–டுக்குத்தான், ஒரு பாடத்தை மட்டும்தான் எடுத்துக்கொள்கிறார்கள். Physics என்று எடுத்துக்கொண்டால் இப்போது அவர்கள் 70 மார்க்கு வாங்கியிருந்தால்— இப்போது படித்துவரும் மாணவனோ, மாணவியோ 94 மதிப்பெண் எடுத்தால், அவர்கள் 70 எடுத்திருந்தால்—மீண்டும் எழுதி 70–லேயிருந்து 96 எடுத்துவிடுகிறார்கள். அவர்களுக்கு இடம் கிடைக்கிறது. ஆனால் அந்த 94 வாங்கிய மாணவனுக்கு இடம் கிடைக்கவில்லை. ஒரு வியாபாரமாகவும் பரவிக்கொண்டு வருகிறது. ஆகவேதான் truncated school பற்றி காலையிலே கேட்கும்போது பதில் சொன்னேன். C.B.S.E.–யிலேயிருந்து இந்த மாணவ மாணவிகளை எடுப்பதற்காக ஒரு காரணத்தைக் காண்பித்து சிலர் பிளஸ் 1, பிளஸ் 2 பள்ளியைப் பெற்று, அதை ஒரு வியாபார ரீதியாக வைத்து இவர்களை improve செய்கிறோம் என்று சொல்லி தனியாக ஒரு coach என்று சொல்லி, ஆயிரக்கணக்கிலே பணத்தை வசூல் செய்து வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இதை நிறுத்திவிட்டு அவை மற்ற பள்ளிகளைப்போல செயல்பட வேண்டும் என்று சொல்லி—இந்த improvementt பற்றி புரட்சித் தலைவி விரும்புவது—அவர்கள் improve செய்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பு தருவோம். ஆனால் அவர்கள் அனைத்துப் பாடங்களையும் எழுத வேண்டும். எப்படி முதலில் வருகிற ஒரு மாணவன் ஆறு பாடங்களையும் எழுதுகிறாரோ அதுபோல் improve செய்பவர்களுக்கும் வாய்ப்பு

தருவோம். அவர்களும் ஆறு பாடங்களை எழுதுவதற்குப் பதில் ஒரு பாடத்தை எழுதி இந்த மாணவர்களுடன் போட்டியிடுவது கூடாது. ஆகவே இப்படி ஒரு செயல்முறையை, செயல் திட்டத்தைக் கொண்டு வந்து புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதனால் உண்மையிலேயே நன்றாகப் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளிலேயும், இன்ஜினியரிங் கல்லூரிகளிலேயும் இடம் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறோம். ஆகவே அந்த முறையை இந்த ஆண்டிலிருந்தே இப்போதே செயல்படுத்தவிருக்கிறோம். அடுத்த ஆண்டு இடம் கோருபவர்கள் இந்தத் திட்டத்தின்படிதான் செயல்பட வேண்டும் என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

பிறகு, உயர் கல்வி. எனக்குச் சிறு வயதிலேயிருந்தே சில நினைவுகள் இருக்கும். திராவிட இயக்கத்திலே ஈடுபாடு கொண்டு அதில் பள்ளிப் பருவத்திலேயிருந்தே பல பொதுக் கூட்டங்களுக்குச் செல்வதும், அந்தப் பொதுக் கூட்டங்களிலே பேச்சாளர்கள் பேசுவதை எல்லாம் கேட்பேன்; பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய பேச்சுக்களால் கவரப்பட்டுதான் இந்த அரசியலுக்கு வந்தவன் நான். அண்ணா அவர்கள் பேசும்போது சொல்வார்கள். இந்த மைக்கைப் பார்த்தாயா தம்பி என்று கேட்பார்கள். ஆம் என்று சொல்வோம். இது எங்கு உற்பத்தியாகிறது என்று தெரியுமா என்று கேட்பார்கள். ஜப்பான் என்று சொல்வார்கள். ஜப்பானிலே இந்த மைக் செய்யப்படுகிறது; அங்கு இரும்பே கிடையாது, உங்களுக்குத் தெரியாதா என்று கேட்பார். ஆம் என்று சொல்வோம். ஆனால் தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் இரும்புத் துண்டு இருக்கிறது. அதைக் கவனிப்பாரற்று தூக்கி எறிந்து போட்டுவிடுகிறோம். ஆனால் ஜப்பான்காரன் இந்த இரும்புத் துண்டை, நம்மிடம் வாங்கி இப்படிப்பட்ட மைக்கைச் செய்து நம்மிடமே விற்கின்றான். இதற்குக் காரணம் நல்ல கல்வி அறிவும், அவர்களுடைய திறமையும்தான். ஆகவே அந்தக் கல்வி அறிவையும், திறமையையும் வளர்த்துக்கொள்வது நம்முடைய கடமை என்று சொல்வார். அதுவும் தமிழகம் ஒரு ஜப்பானைப் போல மிளிர வேண்டுமென்று சொல்வார். அதுவும் உயர் கல்வியிலே, தொழில் கல்வியையும் நாம் கற்க வேண்டுமென்று சொல்வார். அது இப்போது என் நினைவுக்கு வருகிறது. ஆகவே அந்தத் தொழிற் கல்வி இந்த நாட்டிலே—தமிழகத்திலே வளர வேண்டுமென்பதற்காக வித்திட்ட ஓர் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அதைச் சொல்ல விரும்புகின்றேன்.



*பிற்பகல் 6–25*

புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே சுயநிதிக் கல்லூரிகளெல்லாம் கொண்டுவரப்பட்டன. அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவர் அவர்கள்தான். அந்தத் தொழில் கல்வி நிலையங்களையெல்லாம் உருவாக்குவதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர், அண்ணாவினுடைய கொள்கையைச் செயல்படுத்துவதில் முன்னின்று செயல்படுத்தியவர், புரட்சித் தலைவர் அவர்கள்தான். அவர்களுடைய வழியிலே வந்திருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களும் அவர்களுடைய ஆட்சிக் காலகட்டத்திலேகூட பல்வேறு சுயநிதிக் கல்லூரிகளையெல்லாம் செயல்படுத்த ஆரம்பித்தார்கள். ஆனால் 1989–90, 1990–91 என்ற அந்த இடைப்பட்டிருந்த காலத்தில் பார்த்தீர்கள் என்றால் முன்னாள் முதல்வர் தி.மு.க.வின் தலைவர் அவர்கள் சொல்வார்கள். "இந்த சுயநிதிக் கல்லூரிகள் எல்லாம் வியாபார அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நான் அவற்றைச் செயல்படுத்த விடமாட்டேன் என்று அப்போது அடிக்கடி சொல்வார். நம்முடைய ஜனாதிபதியாக இருந்த உயர்திரு வெங்கட்ராமன் அவர்கள் இந்தக் கல்வி நிலையங்களையெல்லாம் வளர விடக்கூடாது என்று சொல்வார். ஆகவே அவருடைய கொள்கையை ஏற்று இந்தக் கல்வி நிலையங்களை வளராமல் தடுப்பேன்" என்று சொன்னது எனக்கு நினைவு இருக்கிறது. அப்போது சில சுயநிதிக் கல்லூரிகளை இந்த மாதிரி மூடுவதற்கு முயற்சி மேற்கொண்டதை இந்த நாடே அறியும். அப்படி சுயநிதிக் கல்லூரிகள் வளரக் கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி 1991–லே வந்தது. அவர்களுடைய அந்தக் காலகட்டத்தில்கூட பல்வேறு இஞ்சினியரிங் கல்லூரிகள் வந்தன, பல தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் வந்தன. அவற்றையெல்லாம் உருவாக்கியதால்தான் இன்று நாம் அத்தகைய இஞ்சினியர்களைப் பெற்றிருக்கின்றோம். ஆனால் மீண்டும் தி.மு.க.வினர் ஆட்சிக்கு வந்தபோது "டைடல் பார்க்கைப் பாருங்கள். இந்த டைடல் பார்க்கை உருவாக்கியிருக்கின்றோம். இதனால் எத்தனை இஞ்சினியர்களை உருவாக்கியிருக்கின்றோம். இந்த இஞ்சினியர்களெல்லாம் அமெரிக்காவில் இருக்கின்றார்கள். அவர்களைக் கொண்டுவந்து தமிழ்நாட்டை முன்னேற்றி வைப்பேன்" என்று பேசினார். ஆகவே அந்த இஞ்சினியர்களை உருவாக்கியது யார் என்று சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவி அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் உருவாக்கிய இந்த சுயநிதிக்

கல்லூரிகளால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இஞ்சினியர்கள் வந்தார்கள். அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக, ஏதோ புரட்சித் தலைவர் கொண்டுவந்தார்கள் என்பதால் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் அந்த அரசு அப்போது முனைப்புடன் செயல்பட்டது. பிறகு அவர்களும் மாற்றிக்கொண்டார்கள். பிறகு கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்களும் கொள்கை மாறிவிட்டார்கள். ஏனென்றால் புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அவர்களும் மேற்கொண்ட கொள்கைகள் நல்ல கொள்கைகளாகத்தான் இருக்கும். காலப்போக்கில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வேறு வழி கிடையாது. அதுதான் உண்மை நிலைமை. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நுழைவுத் தேர்வைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள், திறமைமிக்க மாணவர்களுக்கும் நல்ல மாணவிகளுக்கும் மருத்துவக் கல்லூரியிலும், இஞ்சினியரிங் கல்லூரியிலும் இடம் கிடைக்க வேண்டுமென்பதற்காக நுழைவுத் தேர்வு என்ற அந்த முறையைக் கொண்டுவந்தார்கள். அதற்கு முன்பு அந்த முறை கிடையாது. அதுதான் இன்றைக்கும், தொன்றுதொட்டு வந்து கொண்டிருக்கிறது. எந்த ஊழலும் நடைபெறக் கூடாது என்பதற்காகவும் திறமையுள்ள மாணவ மாணவியர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அந்த வாய்ப்பைத் தவற விடாமல் அவர்களுக்கு அந்த இடம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவும் அந்த முறையைக் கொண்டுவந்தார்கள். அந்த முறையின் காரணமாக இப்போது பார்த்தீர்கள் என்றால் கவுன்சலிங் என்ற அந்த சிஸ்டம் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதுவும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, அவர் ஏன் ஓர் இடத்திலேயே கவுன்சலிங் செய்ய வேண்டும்; இப்போது விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது, கணினிமயம் வளர்ந்திருக்கிறது, அதை வைத்துக்கொண்டு ஒவ்வோர் இடத்திலும் கவுன்சலிங் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் குறிப்பாக சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் எல்லாம் செயல்படுத்த வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் அண்ணா பல்கலைக்கழகத்திலேயிருந்து சொன்னார்கள். இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதுபோல முதலில் திருச்சியிலே வைக்கின்றோம். இந்த இரண்டு இடங்களிலேயும் வைத்து, தெற்கே உள்ள மாவட்டங்களிலிருந்து வருகின்ற மாணவ மாணவிகளும், பெற்றோர்களும் சென்னைக்கு வரத் தேவையில்லை, அவர்கள் திருச்சி வரையிலே வந்தால் போதும், அங்கேயே இந்த ஒற்றைச் சாளர முறையிலே கலந்துகொண்டு



அவர்களுக்கு எந்தக் கல்வி நிலையம் வேண்டுமோ அதைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளலாம் என்ற அந்த வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், உலகத்திலேயே இதுவரையில் எந்தக் கல்வி ஸ்தாபனங்களிலேயும் இதுபோன்று ஒரு மாநிலத்தைப் பொறுத்தவரையில் அனைத்து மாணவ மாணவியரையும் வெவ்வேறு இடங்களில் வைத்து அவர்களுடைய திறமைக்கேற்ப, அவர்களுடைய ஆர்டர், அவர்களுடைய மெரிட் எந்தவிதமாக இருக்கிறதோ, அந்த வாய்ப்புகளை நழுவ விடாமல், வெற்றிகரமாக முதன்முதலில் உலகத்திலேயே தமிழகத்தில்தான் புரட்சித் தலைவி ஆட்சியில்தான் அந்தத் திட்டம் நடைபெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையிலேயே இருக்கும் மாணவ, மாணவியர் திருச்சியிலே ஒரு மாணவன் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறான் என்பதை இங்கேயிருந்து பார்க்கலாம். தனக்கு முதலிடம் என்றால், இரண்டாவது இடம் திருச்சியிலே இருப்பவர்களுக்கு என்றால், அது முடிந்துவிட்ட பிறகு மூன்றாவது மாணவனுக்கு இடம் சென்னைக்கு வரும். யாருக்கு அங்கே கிடைக்கிறது, எந்த மாணவனுக்குக் கிடைக்கிறது, அது முறையுடன் இருக்கிறதா என்பதை transparent என்ற அந்த வெளிப்படையான முறையிலே மாணவ, மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆகவே எதற்கும் சொல்கிறேன் என்றால், கணினி வளர்ந்த அந்த விஞ்ஞான நுட்பத்தால் நம்முடைய மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தியிருக்கிறார்கள். இப்போது இதைச் சொல்வதற்குக் காரணம், எந்த ஒரு குறைபாடும் இல்லாமல் மாணவ, மாணவியருக்கு நல்ல நிலையிலே அந்தக் கல்வி நிலையங்களைத் தர வேண்டும் என்று இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது. அதற்கும் ஒருபடி மேலேபோய் அந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 6-30

அடுத்து, சில கல்லூரிகளிலே அதிகமான கட்டணத்தை வசூலிக்கிறார்கள் என்ற குறைபாடு பற்றி எல்லோரும் சொன்னீர்கள். அதற்குக் காரணம் என்ன? சுயநிதிக் கல்லூரிகளிலே இருக்கும் தாளாளர்களுக்கு எல்லாம் சிண்டிகேட்டில், செனட்டில் இடம் தருவது நன்றாக இருக்கும் என்று நம்முடைய மாண்புமிகு லட்சுமணன் அவர்கள் சொன்னார்கள். அது வரவேற்க வேண்டிய நிலைமைதான். (குறுக்கீடு)

அந்த சுயநிதித் கல்லூரிகளில் ஏற்கெனவே இருக்கிறார்கள். நீங்கள் சொன்னீர்கள், தமிழகத்தில் ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது என்று. மத்தியிலே ஓர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாநிலத்தில் இங்கு ஓர் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் கல்வியானது concurrent list–லே இருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஒரு மாநிலத்தில் சில முடிவுகளை எடுக்கும்போது, மத்தியிலே இருப்பவர்களும் கலந்து ஆலோசிக்க வேண்டும். அதுதான் முறை. ஆனால் மத்தியிலே A.I.C.T.E. என்ற ஒன்று இருக்கிறது. அது இப்போது மாநில அரசை கண்டுக்கொள்வதே இல்லை. அதனால் என்னவாகிறது என்றால், பொதுவாக நம் தமிழகத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் ஏதோ கல்வி நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. அது பொது நோக்கத்திற்கா, சேவை செய்வதற்கா என்று தெரியாது. திரு. லட்சுமணன் அவர்கள் சொன்னது போல சேவை செய்வதாக இருந்தால் அது வரவேற்க வேண்டியதுதான். பொதுவாக என்ன நிலைமை என்றால், அதிலே 15,000 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்லி வருத்தப்பட்டீர்கள். ஏன் இந்த அவல நிலைமை தமிழகத்திற்கு வந்திருக்கிறது? அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கே இருக்கும் அந்தக் கவுன்சிலானது நம்முடைய தமிழக அரசை மதிப்பதே கிடையாது. உங்களுக்குத் தெரியும் இந்த ஆண்டு மட்டும் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள், 67 சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதுபற்றி மாநில அரசுடன் கலந்தாலோசிக்கவில்லை. எந்த முடிவும் செய்வதற்கு அவர்கள் வரவில்லை. அவர்கள் அதைச் செய்து விட்டதால் இன்று 15,000 இடங்கள் காலியாக உள்ளன. இங்கே இருப்பவர்கள் ஏதோ நம்முடைய தமிழக அரசு தடையாக இருக்கிறது என்று கருதுகிறார்கள். நாங்கள் தடையாக இருப்பதற்கு விரும்பவில்லை. தடையாக இல்லாததன் காரணமாகத்தான் இப்போது 15,000 இடங்கள் காலியாக இருக்கின்றன.

குறிப்பாக, சேலம், நாமக்கல்லைப் பார்த்தால் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒருவர் கோழிப்பண்ணை சேலத்தில் ஆரம்பித்தால், எல்லோரும் கோழிப்பண்ணை ஆரம்பிப்பார்கள். ஒருவர் லாரி வாங்கினால், எல்லோரும் லாரி வாங்குவார்கள். ஒருவர் சிட்டுக் கம்பெனி ஆரம்பித்தால், எல்லோரும் சிட்டுக் கம்பெனி வைப்பார்கள். கடைசியிலே பார்த்தால், எல்லோரும் கடையை மூடிவிட்டுப் போய்க் கொண்டிருப்பார்கள். அதுபோல், ஒருவர் ஏதோ கல்லூரியை ஆரம்பித்து விட்டால், அங்கு பார்த்தால் பலரும் கல்லூரியை ஆரம்பிக்கின்றார்கள். எதற்காக என்றால், கல்வியைப் பெருக்குவதற்காகவா என்று எனக்குத் தெரியாது. ஏதோ ஒரு எண்ணத்தில் கல்லூரியைத் தொடங்க வேண்டும்



என்று எல்லோருக்கும் ஆர்வம். அவர் ஆரம்பித்துவிட்டால், நான் ஏன் ஆரம்பிக்கக் கூடாது என்று இப்படியெல்லாம் கல்லூரியைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களைத் திறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இப்படியெல்லாம் ஏதோ ஒரு குறிக்கோளுடன் சிலர் செயல்படும்போது, அதிகமான கல்லூரிகள் வந்துகொண்டிருக்கின்றன. மாணவர்களைப் பொறுத்தவரையில், இப்போது நாம் ஓரளவிற்கு குடும்பக் கட்டுப்பாட்டை வைத்துதான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே நினைப்பது போல் அதிகமான மாணவ, மாணவியர் இந்தச் சமுதாயத்தில் உருவாகிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மாணவ மாணவியர் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்களுக்கு என்ன பாடம் பிடிக்குமோ அதைத்தான் தெரிந்தெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எதைப் படித்தால் வேலை கிடைக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. முன்பெல்லாம் பார்த்தால், போன ஆண்டு கம்ப்யூட்டர், ஐ.டி.-க்கு ரொம்ப வேகம் இருந்தது. எல்லோரும் அதையே எடுத்தார்கள். ஒரு கட்டத்தில் பார்த்தால் அமெரிக்காவிலிருந்து ஒரு லட்சம் பேரை வெளியே அனுப்பிவிட்டார்கள். கல்வி நிலையங்களைப்பற்றி மட்டும் சந்தேகம் கிடையாது. சிலர் இந்தக் கல்லூரியில் படிக்காதவர்கள் ஏதோ சின்ன சின்ன இடங்களில் கல்வியைக் கற்றுவிட்டு கம்ப்யூட்டர் இஞ்சினியர் என்று அங்கே சென்றுவிட்டு, அங்கே அவர்களுடைய திறமையைக் காண்பிக்க முடியாததன் காரணமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதைப் பார்த்தால், இந்த ஆண்டு எல்லா மாணவர்களும் பொதுவாக கம்ப்யூட்டர் வேண்டாம், ஐ.டி. வேண்டாம் என்ற ஒரு நிலைமையை உருவாக்கிவிட்டார்கள். அதுவும் நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகு பார்த்தீர்கள் என்றால், Arts College-க்குத்தான் அதிகம் விரும்பி வருகிறார்கள். ஏன் என்றால், அரசுக் கல்லூரிகளிலே அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற் கல்வி படிப்புகள் எல்லாம் இப்போது படிப்படியாக அரசுக் கல்லூரிகளிலே வந்திருக்கின்றன. ஆகவே ஏதோ ஒரு எண்ணத்தில் சேர்ந்துவிட்டு, திடீரென்று பார்த்தால் எல்லா மாணவர்களும், அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்த நிலைமையைப் பார்த்தவுடனே இதை விரும்பவில்லை.

*பிற்பகல் 6–35*

இங்கே பேசியதை இரண்டு நாட்களுக்கு முன்னர் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, சில கல்லூரிகளில் கட்டணத்திற்கு மேலே அதிகமாக வசூல் செய்ததன்

காரணமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒரு திட்டத்தினைச் சொன்னார்கள். அரசு என்ன கட்டணத்தை நிர்ணயம் செய்திருக்கிறதோ, அந்தக் கட்டணத்தை அண்ணா பல்கலைக்கழகத்திலே மாணவர்கள் கட்டிவிடட்டும். இந்த மாணவர்கள் அந்தக் கல்லூரிகளுக்குச் சென்று கட்டணத்தைச் செலுத்தும்போதுதானே, அவர்களெல்லாம் மாணவர்களைத் தொல்லைப்படுத்துகிறார்கள். எனவே இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தச் சொன்னார்கள். அதைச் செயல்படுத்தினோம். அப்படிச் செயல்படுத்திய பின்னரும்கூட சிலர், பேருந்துக்கு 10,000 ரூபாய், சாப்பிடுவதற்கு 20,000 ரூபாய், புத்தகம் வாங்கிக் கொடுப்பதற்கு 5,000 ரூபாய் என்று ஏதோ நம்முடைய மாணவர்கள் எல்லாம் இவர்கள் பேருந்தில் செல்ல வேண்டுமென்பதற்காகவும், புத்தகம் வாங்கத் தெரியாமல் நம்முடைய மாணவர்கள் இருப்பதைப்போலவும், பலருக்கு உதவி செய்வதைப் போன்றதொரு தோற்றத்தைக் கொடுத்து 40 ஆயிரம், 50 ஆயிரத்தை அதிகமாக வாங்குகிறார்கள். இப்படியெல்லாம் அதிகமாக வாங்குவதன் காரணமாகத்தான் ஓர் ஆர்வம், ஏன் நாமும் ஒரு கல்லூரி ஆரம்பிக்கக்கூடாது, ஏன் இப்படி பணத்தைப் பெறக் கூடாது என்ற எண்ணத்தோடு இப்படிச் செயல்படுவதன் காரணமாகத்தான் புற்றீசல்போல பல கல்வி நிறுவனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதைப் பற்றி நாம் மத்திய அரசுக்குப் புகார் செய்தோம். அந்த நிறுவனத்திற்கு அங்குள்ள ஓர் அதிகாரி இரண்டு நாட்களுக்கு முன்னால் ஒரு பேட்டியில் சொல்கின்றார், ஏன் போலீஸை வைத்து இவர்களையெல்லாம் தடுக்கக் கூடாதா என்று சொல்கின்றார். போலீஸை வைத்துத் தடுத்ததன் காரணமாக என்னென்ன நிலைமைகள் வந்தன என்பது எங்களுக்குத் தெரியும். அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இதற்கும், கல்வி நிலையங்களுக்கும் புரட்சித் தலைவி அனுமதி பெற்று நாங்கள் போலீஸை அனுப்பி வைத்தால், அந்த D.G.P., I.G., எல்லாம் போய், அடுத்து என்னவாகும் என்றால் போலீஸையும் டெல்லிக்கு மாறுதலுக்கு அனுப்ப வேண்டிய நிலைமை வந்துவிடும். அந்த ஒரு நிலைமையைத்தான் இந்த நாட்டில் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் தலையீடு எப்போது தேவை? பணம் அவர்கள் அதிகமாக வசூலித்தால்கூட அதைத் தடுப்பதற்கு மத்தியிலே இருக்கும் அந்தக் கவுன்சிலுக்கு அதிகாரம் இருக்கிறது. நாங்கள் புகார் செய்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து இப்படி விதண்டா வாதமாகப் பேசுவது, போலீஸை வைத்து செயல்படட்டும் என்று சொன்னால் எப்படி? மாநில அரசுதான் இந்தக் கட்டணத்தை நிர்ணயம் செய்கிறது. இது உண்மை. ஆனால் அவர்களுடைய அங்கீகாரத்தை



ரத்து செய்ய வேண்டுமென்றால் - மாநில அரசு நேரடியாகச் செய்ய முடியாது-அதற்கு ஒரு முறை இருக்கிறது. டெல்லியிலே இருக்கிற அந்த அமைப்புதான் செய்ய வேண்டும். ஆகவே எதில் எதிலோ அரசியலைக் கொண்டுவருகிறார்கள். அதிலும் தமிழக அரசு இப்படிச் செயல்பட வேண்டுமென்று ஓர் அதிகாரி சொல்வது கடினமான ஒரு வார்த்தையாக இருக்கிறது. இதை கண்டனத்திற்குரிய ஒரு வார்த்தையாகக் கருதுகின்றேன். சமுதாயத்தில் யார், யார் எப்படிச் செயல்பட வேண்டுமோ அப்படிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பல்கலைக்கழகங்களைப் பார்த்தீர்களென்றால்கூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் அதிகப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. என்னுடைய துறையில் 8 பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டதில், 5 அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்தான். யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வியில் எந்த அளவிற்கு– தொடக்கக் கல்வியாகட்டும், உயர் கல்வியாகட்டும்–அத்தனை நிலைகளிலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தன்னுடைய முத்திரையைப் பதித்துக்கொண்டிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

அன்னை தெரசா பல்கலைக்கழகம் என்று ஒன்றைக் கேள்விப்பட்டு இருப்பீர்கள். புரட்சித் தலைவர் அவர்கள், கொடைக்கானலிலே நல்ல ஒரு சூழ்நிலையிலே பெண்களுக்காக உருவாக்கி, அது ஓர் ஆராய்ச்சி நிறுவனமாக மாறி, அதனுடைய வெளிப்பாடுகளெல்லாம், நல்ல அறிவாற்றல் வர வேண்டுமென்பதற்காக உருவாக்கினார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் பெண்களுக்கு எப்போதுமே முதலிடம் தருவது அனைத்திந்திய அண்ணா திமுகதான். எனவே அதை உருவாக்கினோம். அதிலும் அரசியல் வந்துவிட்டது. புரட்சித் தலைவர் உருவாக்கினார் என்பதற்காகவே, அது கொடைக்கானலிலே இருந்து வெளியே தூக்கப்பட்டு, அது எங்கெங்கோ அலைந்து சென்று சென்னையிலே சேர்ந்தது. கடைசியில் பார்த்தீர்கள் என்றால், அது புரட்சித் தலைவி ஆட்சியில் மீண்டும் கொடைக்கானலுக்கே சென்றது. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், எதைச் செய்தாலும் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலும், புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலும் அனைத்திந்திய அண்ணா திமுக. ஆட்சியில் நடைபெறும் அனைத்து திட்டங்களுக்கும் முட்டு போடுவது நம்முடைய எதிர்க் கட்சியினுடைய வாடிக்கையாகிவிட்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதற்காகத் தான் இதை எடுத்துக் காண்பித்தேன்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். காலையில்கூட பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு விளக்கம் தந்தேன். அனைத்திந்திய அண்ணா திமுக. ஆட்சியிலே–புரட்சித் தலைவி ஆட்சியிலே பல பயிற்சி நிறுவனங்கள் உருவாகின. உருவான பின், ஏதோ ஒரு காரணத்தால் உச்ச நீதிமன்றம் வரை சென்று அவை தடை செய்யப்பட்டன. அதனால் 28,366 மாணவ, மாணவிகள் அல்லலுக்குட்பட்டார்கள். பிறகு எங்களுடைய ஆட்சி சென்றவுடனே திமுக. ஆட்சி வந்தது. வந்த பிறகாவது இவர்களுக்குப் பரிகாரம் காண ஏதாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்றால் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் குழுவைப் போட்டார்கள். எதற்கு வேண்டுமென்றாலும் ஒரு கமிஷனைப் போட்டால் நின்றுவிடும். நாம் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமென்றால், தள்ளிப் போட வேண்டுமென்றால் ஒரு கமிஷனைப் போட்டால் அது போய்க்கொண்டிருக்கும் என்று சொல்வார்கள். அதுபோல இவர்கள் வந்தவுடன் ஒரு குழுவை திரு. சோ. பாலகிருஷ்ணன் தலைமையில் போட்டு காலம் தாழ்த்திக்கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக–

பிற்பகல் 6–40

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல பிரச்சினைகளிலே கடந்த கால திமுக. ஆட்சியோடு மாறுபட்ட கருத்தைச் சொல்லுகிறபோது நான் குறுக்கிடவில்லை. இப்போது இறுதியில் அவர்கள் சொல்லுகிற இந்தப் பிரச்சினை அவர்களையும் உட்படுத்திய ஒரு பிரச்சினை. இது என்னைப் பொறுத்த பிரச்சினை அல்ல. இன்றைய கல்வி அமைச்சருக்கும் அதே பிரச்சினைதான் தொடர இருக்கிறது. நீங்கள் கமிஷன் போடாமல், ஒரு Chief Secretary–ஐ வைத்தோ அல்லது Secretary–ஐ வைத்தோ அல்லது நல்ல சட்ட வல்லுநரை வைத்தோ என்ன செய்ய முடியுமோ அதை தாங்கள் செய்வதை நான் ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் சொன்னதற்காக கருத்தொன்றி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், 28,366 மாணவர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்று 15,000 பேர் பட்டயம் பெற்றிருக்கிறார்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அவர் அந்த விவரங்களுக்குள்ளே சென்று பார்ப்பாரேயானால், பிறகு அதைப்பற்றி



பேசினால் நான் வாதிடுவேன். இல்லையென்றால், நானே சொல்ல வேண்டுமென்றால், அந்த 28,000 பேரும் இரண்டு ஆண்டுகள் படிக்கவில்லை. 28,000 பேர் படித்ததாகச் சொல்லப்படுகின்ற அந்தக் கல்வி நிலையங்களை, கல்வி நிலையங்களாக ஏற்றுக்கொள்ளவில்லை. 28,000 பேரும் இரண்டு ஆண்டுகள் படிக்கவில்லை. 6,000, 8,000 பேர் இரண்டு ஆண்டுகள் படித்தவர்கள், 20,000 பேரில் 10,000 பேர் ஓராண்டு படித்தவர்கள், 10,000 பேர் சேர்க்கப்பட்ட நிலையிலேயே இருந்தவர்கள். அவர்கள் தேர்வு எழுதியதையே ஒத்துக்கொள்ளக்கூடாது என்று நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கிவிட்டது. சிலபேர் ஏற்கெனவே தேர்வு எழுதியவர்கள் என்ற பெயரில் அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதையும் நீதிமன்றம் வழங்கியது தவறு, இனி வழங்கக்கூடாது என்று தெரிவித்து தீர்ப்பு தந்துவிட்டது. உச்சநீதிமன்றம் சென்றபோது, உயர்நீதிமன்றத் தீர்ப்பே முடிவானது என்று உச்சநீதிமன்றம் சொல்லிவிட்டது. இந்தப் பிரச்சினையில் நீதிமன்றத் தடையை மாற்றி ஏதாவது செய்ய முடியுமா என்று கல்வித் துறைச் செயலாளர் – கல்வித் துறைச் செயலாளர் மட்டும் சொல்கின்ற அந்தச் சான்றுகளை வைத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் மனநிறைவு அடையமாட்டார்கள் என்று – அவருடைய தலைமையிலே குழு அமைத்து, அதற்குப் பிறகு சுப்ரீம் கோர்ட்டில் ஓர் உயர்ந்த வழக்கறிஞர் மூலமாக முயற்சி செய்து சுப்ரீம் கோர்ட் மறுபடியும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. ஆகவே இது ஒரு சட்டச் சிக்கல். இதை இந்த அமைச்சரவையில் உள்ள கல்வி அமைச்சர் தீர்ப்பாரேயானால் நான் பாராட்டுவேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் சொன்னது உண்மை. நான் மறுக்கவில்லை. இந்தப் புள்ளிவிவரங்கள் சரி என்று ஒத்துக்கொள்கிறேன். நான் சொல்லவந்தது, 28,366 மாணவ மாணவிகள் அந்தக் கல்வி நிலையங்களில் ஓராண்டு படித்தவர்களா, இரண்டாண்டு படித்தவர்களா, பட்டயம் பெற்றவர்களா என்ற கேள்வி அடுத்தது. அதனால் பாதிக்கப்பட்டு, இத்தனை ஆண்டுகளாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்லுவதைப்போல. (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அந்தக் கால அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோதே அதற்கு மாற்று ஏற்பாடாக மேல்நிலைப் பள்ளிகளில் ஓராண்டுகாலம் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம் என்று முயற்சிகளை

எடுத்துக்கொண்டு பலபேரை மேல்நிலைப் பள்ளிகளில் சேர்த்தது. அதற்கும் எதிர் வழக்கு உயர்நீதிமன்றத்திற்குப் போய், அப்படி சேர்த்தது தவறு என்று உயர்நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லி, அதையும் தொடரமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. பல முயற்சிகள் தோற்றுப்போய் இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, நீங்கள் சொன்னதுபோல புரட்சித் தலைவி அவர்கள் குறைந்தகால அடிப்படையில் அவர்களுக்கு ஒரு பயிற்சி தர முன்வந்தார்கள். நீங்கள் சொன்னதுபோல, சுப்ரீம் கோர்ட்டில் அதுவும் வெற்றி பெறவில்லை என்பது உண்மைதான். நீங்கள் 5 ஆண்டுகள் ஆட்சி செய்தபோது அவர்களுக்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடு செய்திருக்கலாம் என்று சொல்ல வந்தேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல. (குறுக்கீடு) என்னுடைய பேச்சையே முடிக்கவில்லை. சொன்னார்களே தவிர செய்யவில்லை. செய்வதற்கு இப்போது வழி வந்திருக்கிறது என்பதைச் சொல்ல வருகிறேன். இப்போது புரட்சித் தலைவி அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்து பாதிக்கப்பட்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இரண்டு ஆண்டுகள் முழு பயிற்சி தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்போது எப்படி நடைபெற்றிருக்கிறது என்பதைச் சொல்ல வருகிறேன். நீங்கள் நினைத்திருந்தால் அன்றே அதைச் செய்திருக்கலாம். ஆனால் வேண்டுமென்றே புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்தார்கள் என்பதற்காகத்தான் நீங்கள் செய்யவில்லை என்று சொல்ல வந்தேனே தவிர, வேறு அல்ல. நீங்கள் சொன்னதுபோல அனைத்துப் புள்ளிவிவரங்களும் எனக்குத் தெரியும். நான் உங்களுடைய கோப்புகளைப் பார்த்திருக்கிறேன். நீங்கள் எடுத்த முடிவுகளைப் பார்த்திருக்கிறேன். 5 ஆண்டுகாலம் காலந்தாழ்த்தி அவர்கள் வயதும் கடந்து, இப்போது அவர்கள் வயதுக்கு relaxation தர வேண்டும் என்று ஒவ்வொரு உறுப்பினரும் கேட்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல வருகிறேன். இப்போது இதற்காக புரட்சித் தலைவி அவர்கள் ஒரு தனித் திட்டத்தை வகுத்து அவர்களுக்கு இரண்டு ஆண்டுகால பயிற்சி, சுப்ரீம் கோர்ட் என்ன சொன்னதோ அதைச் செயல்படுத்த இருக்கிறோம். இதை முன்பே செய்திருந்தால், 3 ஆண்டு காலம் குறைந்திருக்கும் என்று சொல்ல வருகிறேனே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. காரணம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும், அதில் ஏதாவது குறை காண முடியுமா? அதனால் குழப்பம் ஏற்படுமா? இதனால் சமுதாயத்தில் அவர்களுக்கு கெட்ட பெயர் வருமா என்ற நிலையில்தான் தி.மு.க. செயல்பட்டது என்பதற்குச் சொல்ல வந்தேனேயொழிய வேறொன்றும் கிடையாது.-(குறுக்கீடு)



பிற்பகல் 6-45

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற அந்த நிலை ஏற்பட்டபோது, முழுநேரம் படித்தால்தான் அவர்கள் எப்படியாவது ஆசிரியர் பயிற்சியைப் பெற்றதாக ஆகும் என்ற அடிப்படையில் அரசாங்கத்தினுடைய மேற்பார்வையில் நடைபெற்ற D.I.E.T. நிறுவனங்களில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதைத் தவிர, வேறு வழியில்லாத நிலைமையிலிருந்து 30 விழுக்காடு என்று முதலில் இட ஒதுக்கீடு செய்து, பின்னர் 40 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த D.I.E.T-லே நடைபெறுகிற பயிற்சிதான் நிறைவான பயிற்சி என்று அகில இந்திய அளவிலே, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஏற்றுக்கொண்டிருந்தது. அந்தப் பயிற்சியை இவர்களுக்குத் தருகிறபோது, இன்னொரு Section-ஆக தனியாக அமைக்கலாமா என்ற எண்ணம் வந்தபோது, ஆய்வு உத்தியபோது, தாழ்த்தப்பட்ட சமூகம் போதுமான அளவு பயிற்சி பெறாத காரணத்தால் ஒரு Section அவர்களுக்காக, சிறப்பு வகுப்பாக தொடங்கப்பட்டு, நடைபெற்ற காரணத்தால் உடனடியாக அதை நிறுத்த முடியாத நிலைமையில், நடைபெறுகிற வகுப்புகளில் இப்போது 40 விழுக்காடு இடம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கு சட்டப்படி என்ன முன்னுரிமை உண்டோ, அந்த முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. அது 2 ஆண்டுகாலம் நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் சொல்வதைப்போல 40 விழுக்காடு ஒதுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதைச் செயல்படுத்த வேண்டுமென்றால் 20 ஆண்டுகாலம் ஆகும். இவர் சொன்னதைப்போல, 20,265 மாணவர்களை அங்கிருக்கும் D.I.E.T.-ல் எத்தனை வருடங்களுக்குச் சொல்லிக் கொடுப்பது? ஆகவே அதற்கு முடிவு கிடையாது. அவர்கள் retire ஆனால்கூட முடியாது. 60 வயதானாலும் அவர்களுக்குக் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு விடும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி என்ன செய்திருக்கின்றார்கள் என்றால், ஒரு புதிதான திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைச் சொல்ல விரும்புகின்றேன். இந்த 15,000 பேருக்கு-இதில் 15,000 அல்லது அதற்கு மேல் இருந்தால்கூட, N.C.T.E. permission யார் யார் முதலில் பெற்றிருக்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு நிவாரணம் தரவேண்டுமென்பதற்காக ஆட்சிக்கு வந்த 3 மாதத்திலேயே ஆணையிட்டு இருக்கின்றார்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு புறம்.

அடுத்து, விளையாட்டுத் துறையை எடுத்துக்கொள்ள வேண்டும். விளையாட்டுத் துறையிலே புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக்காலத்தில் என்ன திட்டங்களை வகுத்தார்கள், எவ்வாறு செயல்பட்டது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

18–1–1993 ஆம் நாளன்று சென்னையில் உலகத் தரத்திற்கு ஒப்பானதும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத எழிலார்ந்த நேரு விளையாட்டு அரங்கத்தை திறந்துவைத்துப் பேசுகையில், புரட்சித் தலைவி அவர்கள் "விளையாட்டுத் துறைக்கு புத்துணர்ச்சியூட்டும் புதிய முயற்சிக்கு நடத்தப்பட்ட கால்கோள் நிகழ்ச்சியின் நிறைவே இந்த அரங்கம். தமிழகத்தின் பெருமைக்காகவும், இந்தியாவின் கீர்த்திக்காகவும், உலக நாடுகளின் பாராட்டுக்களுக்காகவும் மட்டுமே இது உருவாக்கப்பட்டது அல்ல. விளையாட்டுக் கலை, அறிவியல் முயற்சியாக ஆக்குவதற்காக கட்டி முடிக்கப்பட்ட அடையாளச் சின்னம்" என்று அழகாகச் சொன்னார்கள்.

சென்னையிலே சர்வதேசத்தினுடைய தரத்திற்கு இணையாக ஒரு ஸ்டேடியம் கட்டப்பட்டது. 44 கோடி ரூபாய் செலவு செய்து, வரலாறு காணாத வகையில் 7 மாதங்களுக்குள்ளாகவே கட்டி முடிக்கப்பட்டு, அங்கே போட்டிகள் தொடங்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல், படிப்படியாக மொத்தம் 104 கோடி ரூபாய் செலவில் Indoor Stadium, Tennis Stadium, Hockey Stadium, Swimming Pool போன்றவற்றையெல்லாம் உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கப்பட்டு தமிழகத்திலே விளையாட்டுத் துறை வளர வேண்டும், நல்லெண்ணம் வளர வேண்டும். விளையாட்டு வளருவதன் மூலமாக நல்ல வலிமை கொண்ட வாலிபர்களும், மாணவிகளும் இந்தச் சமுதாயத்தில் இடம் பெற முடியும் என்பதற்காக அது உருவாக்கப்பட்டது. பிறகு கிராமப்புறங்களில் இருப்பவர்கள் எல்லாம், சண்டைச் சச்சரவுகள் இல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, விளையாட்டுத் துறை மூலமாக ஒற்றுமையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்பட்டார்கள். ஆனால் என்ன நடந்தது? அதற்குப் பிறகு வந்த தி.மு.க. அதற்கு ஆதரவாகச் செயல்பட்டதா?

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொடக்கக் கல்வியிலிருந்து, உயர்நிலைக் கல்வியிலிருந்து, பல்கலைக்கழகங்களிலிருந்து எந்தத் திட்டங்களைக் கொண்டுவந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முத்திரைப் பதித்தால், அதற்கு ஒரு கெட்ட



பெயரை–களங்கத்தை உருவாக்கி, அதை எப்படித் தள்ளிவைப்பது என்ற நிலையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டது என்பதற்காக ஓர் உதாரணத்தை நான் சொல்லிக்கொள்கிறேன். அங்கு என்ன நடைபெற்றது? ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தைப்பற்றிச் சொல்லும்போது இன்னொன்றை சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே பல்வேறு திட்டங்களைச் சொன்னார்கள். ஒலிம்பிக்கிலே வெற்றி பெற்றால் ஒரு கோடி ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். உடனே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். என்ன சொன்னார்களென்றால், யார் தமிழ்நாட்டிலிருந்து ஒலிம்பிக்கிலே போய் ஓடப் போகிறார்கள்; யார் ஒரு கோடி ரூபாய் வாங்கப் போகிறார்கள்; இவர்கள் சொல்லியிருப்பதற்குக் காரணம் இதெல்லாம் கிடைக்காது; கிடைக்காது என்ற காரணத்தால் இதற்குப் பணத்தை ஒதுக்கி என்ன பிரயோசனம் என்று சொன்னார். ஒருவேளை துரைமுருகன் அவர்களால் ஓட முடியாது இருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோடி ரூபாய் பெறமுடியாமல் இருக்கலாம். ஆனால் ஓடாத கிருஷ்ணா நீர்——

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருகாலத்திலே ஓடியவர்தான். இப்போது ஓட முடியவில்லை.

*பிற்பகல் 6–50*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஓடாத கிருஷ்ணா தண்ணீருக்காக ஓடி இங்கு வந்ததாகச் சொன்னார். இதைச் சொல்வது விசித்திரமாக இருக்கிறது. நம்முடைய மாணவ மாணவியரெல்லாம், இளைஞர்களெல்லாம் திறமை மிக்கவர்கள். நாம் எதிர்காலத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு, இந்தச் சின்னங்கள், இத்தகைய ஸ்டேடியங்கள் வருவதைப் பார்த்தாலே, அறியாமலேயே ஆர்வம் வரும். ஏன் ஒலிம்பிக்கில் வெற்றி பெற முடியாது? திறமை இல்லையா? நாம் தேர்ந்தெடுக்கும் முறையில் சரியான அணுகுமுறையை பயன்படுத்தினால், தேர்ந்தெடுக்க முடியும். இன்று இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கும் நம்முடைய இளைஞர்களைப் பார்த்தீர்களென்றால், நீச்சலிலே அவர்களுக்கு இணையானவர்கள் யாரும் உலகத்திலே காணோம். அந்த அளவிற்கு வலிமை மிக்கவர்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்து நல்லமுறையிலே பயிற்சி தந்தால், உண்மையிலேயே அவர்கள் ஒரு கோடி ரூபாயைப் பெறுவதற்குத் தகுதியாக இருப்பார்கள். தங்கம் பெறுவார்கள். நம்முடைய நீலகிரி

மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், foot ball விளையாடுவதிலே வல்லமை பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியான திறமை உண்டு. இதுபோன்று பல திட்டங்களை நாம் செயல்படுத்தினால்தான் நாம் ஒலிம்பிக்கில் வெற்றி பெறமுடியும். நாம் பெறுவோமா; பெறாமல் இருப்போமா என்ற ஓர் எண்ணத்தை வளர்த்துக்கொண்டால் நாம் எப்பொழுதும் முன்னேற முடியாது. யாராவது ஒரு படி ஏறினால், கீழே தள்ளுவதுதான் நம்முடைய எண்ணமே, நம்முடைய வேலையே. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மேலே நாம் முன்னேறுவது இல்லை. ஆகவே இப்படி ஓர் எண்ணத்தை நாம் வளர்த்துக்கொண்டு சென்றால், நாம் முன்னேற முடியாது. நாம் இன்றைக்கும் ஒலிம்பிக்கிற்குச் செல்ல வேண்டும். வெற்றியைப் பெற வேண்டும். அதைத்தான் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்த எண்ணம் வளரட்டும். நல்ல உள்ளங்கள் இருக்கட்டும். நல்ல உடல் வலிமை பெறட்டும். பயிற்சிகள் பெறட்டும் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை குறை கூறக் கூடாது. அதைப் பாராட்ட வேண்டும். அதைப் பாராட்டுவதற்குத்தான் நான் சொல்ல வருகின்றேன். இத்தகைய திட்டங்களையெல்லாம் கொண்டுவந்த பிறகு, அந்த நிலைமை என்ன ஆகிவிட்டது? அங்கே போய்ப் பார்த்தேன். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் என்னைக் கோபித்துக்கொண்டார்கள். நீங்கள் செல்ல வேண்டும், ஒவ்வொரு இடத்திலும் சென்று பாருங்கள் என்றார்கள். உடனே சென்றேன். நேரு ஸ்டேடியத்திற்குப் போனேன். அதிகாரிகள் வந்தார்கள். என்னை அழைத்தார்கள். நான் உள்ளே சென்றேன். அந்த ground-ஐ அப்படியே பார்த்தேன். நாம் ஆரம்பிக்கும்போது பார்த்த ஒரு நினைப்பு இருக்கிறது. அதற்குப் பிறகு போனது இல்லை. புரட்சித் தலைவி அவர்கள், நேரு தங்கக் கோப்பை விளையாட்டை நடத்தும்போது, நான் அங்கு சென்று இருக்கிறேன். அப்போது அழகாக இருந்தது. புல்வெளி நன்றாக இருந்தது. இந்த விளையாடு தளத்தில் அவ்வளவு அழகான புல்வெளியைப் பார்த்தேன். அப்போது, கேட்டேன் நான், அதிகாரிகளை, என்ன இப்படி இருக்கிறது? அன்றைக்கு நான் பார்த்த ஒன்றுமே காணோமே என்றேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், "ஆமாங்க, புல் இல்லைங்க" என்றார்கள். "எங்கங்க போச்சு புல்" என்றேன். அது, விளையாடிய பிறகு போய்விட்டது என்றார்கள். ஒரே புழுதியாக இருந்தது. எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. என் ஆசிரியர் சொல்வார், drawing போடச் சொல்லும்போது, சொன்னாராம்; ஒரு மாணவனைப் பார்த்து, ஒரு மாடு மேய்வதுபோல – ஒரு மனிதன்



அங்கே இருப்பதுபோலவும். மாடு புல்லை மேய்வதுபோலவும் – படம் வரையச் சொன்னாராம். உடனே அந்த மாணவன் அப்படியே இருந்துகொண்டிருந்தானாம். ஒரு மணி நேரம் ஆனது, இரண்டு மணி நேரம் ஆனது. ஆகிக்கொண்டே இருந்தது. பிறகு ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது. "என்னய்யா நீ செய்து கொண்டிருக்கிறாய். உடனே எடுத்துக்கொண்டு இங்கே வா; என்னய்யா வரைந்தாய், நான் என்ன வரையச் சொன்னேன்?" என்றார் "மாடு மேய்கிற மாதிரி வரையச் சொன்னீர்கள். புல்லை மேய்கிற மாதிரி வரையச் சொன்னீர்கள்" என்றான். "என்ன ஆச்சு" என்றார். "வரைந்து விட்டேன்" என்றான். "அப்படியே இருக்கிறது. ஒன்றுமே காணவில்லையே?" என்றார். "நீங்கள் சொன்னது உண்மை, ஐயா. நீங்கள் சொன்னது, மாடு வந்து புல்லை மேய்வது போல வரையச் சொன்னீர்கள். மாடு வந்து புல்லை மேய்ந்துவிட்டது. எனவே புல் இல்லை" என்றான். உடனே சொன்னாராம், "புல்தான் இல்லை. மாடு எங்கே போச்சு?" என்றாராம். "ஏங்க, புல்லை மேய்ந்த பிறகு மாட்டிற்கு அங்கே என்ன வேலை? அதுவும் போய்விட்டது ." என்றானாம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி அன்று சொன்னது எனக்கு நினைப்பு வந்தது. அதுபோல, இவர்களிடம்போய், என்னங்க புல்லைக் காணோம் என்றேன். விளையாடினார்கள், புல் போய்விட்டது என்கிறார்கள். பிறகு என்னதான் ஆச்சு? கோடிக்கணக்கான அளவில் செலவு செய்து, ஒரு நல்ல விளையாட்டுத் தளத்தை ஏற்படுத்திய புரட்சித் தலைவி அவர்கள் பார்க்கச் சொன்னால், புல்லைக் காணோம். மண்ணிலே போய் எப்படி விளையாடுவது? காரணம் என்னவென்றால், பழைய திட்டங்களைப் பார்த்தீர்களென்றால், அதைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் – புதிதாக ஒன்றும் கட்ட வேண்டாம் – இருப்பதையாவது பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கும் பணத்தை ஒதுக்கவில்லை; பராமரிக்கவில்லை. அந்த நிலைமை அப்படியிருந்தது. உட்காருகிற சீட்டைப் பார்த்தால் கலரே இல்லாமல் எல்லாம் வெளுத்துப் போய்விட்டது. ஏதோ வியாதி வந்ததைப்போல இருந்தது. சீட்டையெல்லாம் பார்ப்பதற்கு. அப்படி ஒரு நிலைமையிலே அவற்றைப் பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது. தமிழகத்திலே, அதுவும் குறிப்பாக சர்வதேசத் தரத்திற்கு ஏற்றாற்போல குறுகிய காலத்தில் கட்டப்பட்ட ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது இந்த ஸ்டேடியம்தான்; இந்தியாவிலேயே இது ஒன்றுதான். டெல்லியிலேகூட இந்த மாதிரி கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய ஸ்டேடியத்திற்கு இது மாதிரி ஒரு நிலைமை உருவாகிவிட்டது. அது international standard

பிற்பகல் 6-55

அடுத்ததாக மற்றவற்றிற்குப் போனேன். இன்டோர் ஸ்டேடியத்திற்கு கூட்டிக்கொண்டு போனார்கள். அங்கே போனதுமே எல்லா இடங்களிலும் சத்தம் வருகிறது. வேறு ஏதாவது நிகழ்ச்சி நடைபெறுகிறதோ என்று நினைத்து பயந்து போனேன், உள்ளே போய் பார்க்கும்போது. அங்கு என்னவென்றால், எல்லாமே காற்றிலே ஆடிக்கொண்டிருந்தது. ஒரு பக்கம் பார்த்தால் ஒரு தகர டப்பாவை அந்தப் பக்கம் இழுத்துக்கொண்டு போகிறது. இப்படி ஒரு இன்டோர் ஸ்டேடியம். இப்படி ஒரு அவல நிலை உருவாவதற்கு காரணம் என்ன? ஏன், அதி.மு.க. உருவாக்கியதை நீங்கள் பாதுகாக்கக் கூடாதா? அதுவும் பொது மக்கள் சொத்து அல்லவா? ஒவ்வொருவரும் வரிப் பணம் கொடுத்தது அல்லவா? ஏதோ ஒரு நல்ல காரியத்திற்கு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியது அல்லவா? இந்தத் திட்டத்தை ஒதுக்குவதற்கு காரணம் என்ன?

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், நான் பத்திரிகையைப் பார்க்கும்போது எல்லாம், இன்டோர் ஸ்டேடியத்தில் பல நாட்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. நாம், அங்கு பாஸ்கட் பால் விளையாடலாம். வாலி பால் விளையாடலாம். அதுபோல இன்டோர் கேம்கள் மற்றும் ஜிம்னாஸ்டிக் போன்றவற்றையெல்லாம் கொண்டுவரவேண்டும் என்றெல்லாம், அதனைக் கொண்டு வந்தார்களே. அதை விட்டு வேறு ஒரு ஜிம்நாஸ்டிக் எல்லாம் நடத்துகொண்டிருக்கிறது அங்கே. டான்ஸ், ஜிம்னாஸ்டிக் போன்ற அந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகிற அவல நிலைமை தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அந்த நிலையிலேயும் சில பிரச்சினைகள். தி.மு.க.-காரர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. அந்த ஆட்ட் போரியம், அந்த இன்டோர் ஸ்டேடியத்தை ஒரு நாளைக்கு வாடகைக்கு விட வேண்டுமென்றால் இரண்டு இலட்சம் ரூபாய் தவிர electricity bill தனியாக கட்ட வேண்டும். அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், விளையாட்டை அங்கே நடத்துவதற்குப் பதிலாக, ஒரு கலை நிகழ்ச்சியை நடத்துவதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு அதனை வாடகைக்கு தந்திருக்கின்றார்கள். அப்படி வாடகைக்கு தந்திருக்கும் நிகழ்ச்சியைப் பார்த்தீர்கள் என்றால், அவர்கள் எல்லாம் ஏதோ ஒரு Cultural Programme என்ற பெயரில் பல நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். அந்த நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு பல்வேறு சலுகைகளும் தந்திருக்கிறார்கள். குஜராத் அல்லது இராஜஸ்தான்



மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்திற்கு என்று நினைக்கின்றேன். அந்தப் பகுதியைச் சேர்ந்த நிறுவனம் கிட்டத்தட்ட 8, 9 நாட்களுக்கு ஒரு கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக அனுமதி பெற்றிருந்தார்கள். 9 நாள் என்றால் 18 இலட்சம் ரூபாய் வாடகையாகக் கட்ட வேண்டும். Electricity charges தனியாகக் கட்ட வேண்டும். அப்படி இருந்தது. ஆனால் அதற்கு 18 இலட்சமும் வசூல் செய்யாமல், ஏதோ ஒரு பெயரளவில் நாலரை இலட்சம் போதும் என்று அதற்கு ஒரு சிறப்பு அனுமதியைத் தந்திருக்கிறார்கள். பிறகு electricity bill-ஐப் பார்த்தீர்களேயானால், அது ரூபாய் மூன்று, நான்கு இலட்சம் வரும். அதற்கு இரண்டரை இலட்சம் ரூபாய் கட்டினால் போதும் என்ற நிலைமையை உருவாக்கி, அதற்கு 20, 22 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டிய அந்த வாடகைக்கு, ஏதோ ஒரு தனியாருக்காக அவர்களுக்கு அந்தச் சலுகை தரப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு கலை என்ற பெயரில் அவர்கள் அதற்கெல்லாம் டிக்கெட் போட்டு வசூல் செய்கிறார்கள். அதைச் செய்தவர் கல்வி அமைச்சர் அல்ல, முன்னாள் முதலமைச்சர் செய்திருக்கின்றார்கள். அதற்கு 22 இலட்சம் ரூபாய் தர வேண்டிய இடத்திற்கு நாலரை இலட்சம் ரூபாய்தான் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இது எதற்காக? ஸ்டேடியத்தை உருவாக்கியது விளையாட்டுத் துறைக்காக. அந்த விளையாட்டு ஸ்டேடியத்தை யாருக்கு சலுகையில் தரவேண்டும்? விளையாட்டுகளுக்கு சலுகை தரலாம், தவறு ஒன்றும் கிடையாது. அதைச் செய்வதை விட்டுவிட்டு, ஏதோ டான்ஸ் ஆடுகிறவர்களுக்கெல்லாம், அங்கேபோய் டான்ஸ் ஆடுவது, பாராட்டு விழாக்களையெல்லாம் வைத்துக்கொள்வது, அதற்காகவா ஸ்டேடியம் கட்டியிருக்கிறது? அவர்களுக்கெல்லாம் அதை விட்டதன் காரணமாக என்ன ஆகிவிட்டது? அந்த ஸ்டேடியம் spoil ஆகிவிட்டது. அந்த wooden தளம் எல்லாம் போய்விட்டது. இப்படியெல்லாம் ஆனதன் காரணமாக என்னவாயிற்று? அதனைத் திரும்பவும் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றால் பல கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஏதோ ஒரு தனியார் நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக, கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக, பாராட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக ஒரு International standard உள்ள ஸ்டேடியத்தையெல்லாம் தனியார்களுக்கு விட்டு, இப்படியெல்லாம் அதனைக் கேலிக்கூத்தாக்கிவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

எந்தத்திட்டங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்தாலும், அதனைக் கொச்சைப்படுத்தி எதற்காக அதைக் கொண்டுவந்தார்களோ அதைச் செயல்படுத்தவிடாமல் ஒரு சூழ்நிலையை உருவாக்கி, தமிழகத்திற்கு, எங்களுக்கு ஒரு களங்கம்

ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால் முடியவில்லையென்பதையும் சொல்ல விரும்புகின்றேன். ஏனென்றால் ஒவ்வொரு திட்டத்தையும் வளர்ப்பதற்கு எவ்வளவோ தேவைப்படுகிறது. எனக்கு நினைவு இருக்கிறது. புரட்சித் தலைவி எத்தனை முறை டெல்லிக்குச் சென்றார்கள், இந்த இடத்திலே இதனை ஏற்படுத்துவதற்கு? அழைப்புகளை எல்லாம் தந்தார்கள். அப்படி அரும்பாடுபட்டுச் செய்ததை இப்படி ஒதுக்கிவிட்டால் என்ன பிரயோசனம்? யார் செய்தாலும் மதிக்க வேண்டும். அம்மா அவர்கள் என்னை டெல்லியிலே அமைச்சர் ஆக்கினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வகித்த அந்தத் துறையை என்னிடம் தந்து ஓராண்டிற்குச் செயல்படச் செய்தார்கள். செயல்படுத்தும்போது அவர்கள் சொன்னதெல்லாம் நாம் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான். அதில் யார் தமிழகத்தில் ஆட்சி செய்தாலுங்கூட, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள்.

*பிற்பகல் 7–00*

Surface Transport துறை சிறிது காலம் என்னிடம் இருந்தது. ஓராண்டு என்னிடம் இருந்தது. அப்போது எனக்குச் சொன்னார்கள். தமிழகத்திற்கு எந்தெந்தச் சாலைகள் தர வேண்டுமோ அதைத் தாருங்கள் என்று சொன்னார்கள். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், நம்முடைய பேராசிரியர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு பேசும்போது, அவர்கள் பி.ஜே.பி. அரசு அண்ணா தி.மு.க.வோடு நிலைப்படுத்திக்கொள்ளும் என்று சொன்னார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், நாம் அனைவரும் சேர்ந்து அங்கு இருப்பவர்கள், தி.மு.க. நண்பர்களாக இருந்தாலும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. நண்பர்களாக இருந்தாலும், மற்ற கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து நமக்கு வேண்டிய பணத்தைப் பெற வேண்டும். அதைப் பெற்றால்தான் நம் தமிழகம் முன்னேற முடியும் என்ற கருத்தைச் சொன்னபோது, அவர்கள் சொன்னார்கள், அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் இருந்தது என்று சொன்னார்கள். உண்மைதான், நான் அதை மறுக்கவில்லை. நான் அமைச்சராக இருந்தவன்தான். அமைச்சராக இருந்தபோது இந்தத் திட்டங்கள் வரும்போதெல்லாம் தமிழகத்திற்கு அதிக நிதி தர வேண்டுமென்று சொன்னவர், புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு 1,700 கி.மீ. Highways சாலைகளெல்லாம் National Highways என்று அறிவித்தது அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம்,



(மேசையைத் தட்டும் ஒலி) எப்பொழுது? தி.மு.க. இங்கு ஆட்சியில் இருக்கும்போது. எங்களுக்குக் கட்சி வேறுபாடு கிடையாது. தமிழகம் முன்னேற வேண்டுமென்ற ஒரே குறிக்கோள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் செய்தோம்.

இங்கிருக்கும் நம்முடைய பூந்தமல்லி ரோட்டைப் பாருங்கள். நாம் அந்த வழியாகத்தான் போய்க்கொண்டிருக்கிறோம். இந்தப் பக்கம் ஏர்போர்ட் போகிறோம். இத்தனை ஆண்டுகள் ஆகிறதே, இதுவும் ஒரு முக்கியமான சாலைதான். N.H. 4. மும்பைக்குப் போகிற சாலை. அந்தச் சாலையில் போவதற்கு யாராவது முயற்சி செய்தோமா? ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை வகுத்து அளிக்க வேண்டுமென்று சொன்னவுடனேயே அந்த அமைச்சரவையிலே உடனடியாக தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதி, நீங்கள் 4 வழிப் பாதையோ, 6 வழிப் பாதையோ ஆக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொண்டேன். அதற்காக 70 கோடி ரூபாயை உடனடியாக ஒதுக்கீடு செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தினார்களா? செயல்படுத்தவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருப்பதுபோல், இரண்டு மாடிக் கட்டடங்களை இடித்தார்கள், விட்டுவிட்டார்கள். அதோடு சரி. பிறகு ஒன்றும் கிடையாது. ஏனென்றால் அண்ணா தி.மு.க. சொன்னதற்காக செய்யக்கூடாது என்றால், நாம் என்ன செய்ய முடியும்? அண்ணா தி.மு.க. தமிழகத்திற்கு 70 கோடி ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னால், வேண்டாம் என்றால் என்ன செய்ய முடியும்?

அதேபோல, ஒவ்வொரு சாலையையும் பார்த்தால் – இராமேஸ்வரம்–திருச்சி சாலையை N.H.–ஆக declare செய்யச் சொன்னார்கள். அதைச் செய்யவில்லை. ஒரு ரோடு கேரளாவுக்குப் போக வேண்டுமென்று, ஸ்ரீவில்லிப்புத்தூர் ரோடு மதுரையிலிருந்து அதை N.H. ரோடாக declare செய்தோம். பிறகு பழனி கோயிலுக்குப் போக வேண்டுமென்று, அதற்கும் N.H. ஆக declare பண்ணினோம். பொள்ளாச்சி – அந்த ரோடெல்லாம் N.H. ஆக declare பண்ணினோம். பிறகு கோயம்புத்தூர் போகிற ரோடு. அதையும் N.H. ஆக்கி declare செய்தோம். பிறகு திருப்பதி செல்லும் சாலையைக்கூட N.H.– ஆக declare செய்தோம். அதுவும் அம்மா அவர்களின் ஆணைப்படிதான். அதேபோல, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. மத்தியில் இருக்கும்போதுகூட, நாம் தமிழகத்தை நினைத்தோம், தமிழகம் வளர வேண்டும் என்று நினைத்தோம். அந்த எண்ணத்தில் செயல்பட்டோம். எங்களுக்குக் காழ்ப்புணர்ச்சி கிடையாது. ஆனால் மூன்று முறை நீங்கள் ஆட்சியில்

அங்கம் வகித்தவர்கள். நாங்கள் ஒரு முறை அங்கம் வகித்தோம். அதற்கு முன் ஒருமுறை புரட்சித் தலைவர் காலத்தில் அங்கம் வகித்திருக்கலாம். புரட்சித் தலைவியினுடை ய ஆட்சிக் காலத்தில் நாங்கள் ஒருமுறைதான் அங்கம் வகித்தோம். அவர்கள் மூன்று முறை அங்கம் வகித்திருக்கிறார்கள். அப்படி வகித்திருக்கிறவர்கள் இத்தகைய பரந்த மனப்பான்மையில் திட்டங்களைச் செயல்படுத்தவில்லை என்ற ஒரு வருத்தம்தான் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதுவும் இப்போது பார்த்தால், National Highways ரோடு போடும்போது சித்தூர் வழியாக, ஃபோர்ட், மும்பையில் சேருவதற்குப் போட்டார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள், அது தமிழகத்தினுடைய மண்ணில் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். பெங்களூர், கிருஷ்ணகிரி, சென்னை என்ற சாலையைச் சேர்த்தோம் அதை எடுத்துவிட்டு, திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் கூடக் கோபித்துக்கொண்டார்கள். இப்படியெல்லாம் செய்வதற்குக் காரணம், ஒரு நல்ல நிலையில் தமிழகத்தைக் கொண்டு வரவேண்டுமென்பதற்குத்தான். இப்போது இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், Sports பற்றி வந்ததால் சொல்லிக் கொண்டு வந்தேன். எதைச் செயல்படுத்தினாலும், அண்ணா தி.மு.க. வந்து, செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதுபோன்று விளையாட்டுத் துறைக்கு எந்த முக்கியத்துவமும் அவர்களால் கொடுக்காமல் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கல்விச்சாலையிலிருந்து, சாலைக்குப் போய்விட்டு மறுபடியும் கல்விக்கு வரவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** விளையாட்டு ஸ்டேடியங்களின் தரம் இந்த அளவிற்குத் தாழ்ந்ததன் காரணமாக, பராமரிப்புச் செய்யாததன் காரணமாக, மீண்டும் அமைப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் சுமார் 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்த ஸ்டேடியத்தை உடனடியாக மராமத்து செய்து International standard--க்கு வரவேண்டும் என்பதற்காக. நேரு ஸ்டேடியத்தில் புல் இல்லை. அந்த ஸ்டேடியத்தில் புல் காணாமல் போய்விட்டது. ஆகவே மீண்டும் புல்லைக் கொண்டுவர வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். புல்லை வளர்ப்பதற்காக மட்டும் 2 மாத காலமாக அவருடைய கண்காணிப்பிலே அவருடைய நேரடிப்



பார்வையில் சுமார் 2 இலட்சம் ரூபாய் செலவு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புல்லை வளர்க்கச் செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 7-05

அதேமாதிரி, ஹாக்கி ஸ்டேடியம். இந்த டர்ஃப்-ஐ அப்போதே மாற்றியிருக்க வேண்டும். அதை மாற்றவில்லை. மாற்றியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். அதை மாற்றாமல் விட்டதால் யாரும் International Games விளையாட வரமாட்டேன் என்கிறார்கள். அதற்கு சுமார் 5 கோடி ரூபாய் இப்பொழுது sanction செய்திருக்கிறார்கள். விளையாட்டுத் துறையின்மீது எந்த அளவுக்கு அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதற்காகச் சொல்ல வருகின்றேன். ஆனால் முந்தைய ஆட்சி செய்யவில்லை என்பதையும் சொல்ல விரும்புகிறேன். இதுதான், இதை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற அளவுக்கு செயல்பட்டு வந்திருக்கிறது. இப்பொழுது ஏதோ சென்னை மாநகருக்கு மட்டும் விளையாட்டுத் துறை என்று நினைத்துவிடாதீர்கள். புரட்சித் தலைவி அவர்கள் சென்னை மாநகருக்கு மட்டுமல்ல: தமிழகத்தினுடைய அனைத்துப் பகுதிகளிலும் இதுபோன்று விளையாட்டுத் துறையை வளர்ப்பதற்காக பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக இப்பொழுது மாவட்டந்தோறும் விளையாட்டுத் துறை குழுக்கள் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் என்னிடம் அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுத் துறை நடவடிக்கைகளை அதிகரிக்கவும், இளம் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தவும் மாவட்ட விளையாட்டுத் துறை குழுக்களை இந்த அரசு அமைக்கும். மாவட்டந்தோறும் அமைக்கப்படவுள்ள குழுவிற்குத் தலைவராக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருப்பார்கள். உதவித் தலைவராக மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் இருப்பார். குழுவின் செயலாளராக மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலர் பணியாற்றுவார். மேலும் குழுவின் உறுப்பினர்களாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள முக்கிய விளையாட்டு மன்றங்களின் தலைவர் அல்லது செயலாளர் நியமிக்கப்படுவார்கள். மேலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையில் அக்கறை காட்டுகின்ற அறக்கட்டளைகள், இந்தக் குழுவில் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்தில் அமைக்கப்படும் இந்தக் குழு, பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றும்:

1. மாவட்டத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளின்போது மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலருக்கு உதவிகள் செய்யும்.

2. மேலை நாட்டு விளையாட்டு வீரர்கள் அடைந்த சாதனை அளவிற்குத் திறமையை வளர்க்க ஊக்கமளிக்கும்.

3. ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்க பணிபுரியும்.

4. அந்தந்த மாவட்டத்தில் பெரும்பான்மையாக விளையாடப்படும் விளையாட்டைத் தேர்ந்தெடுத்து அதில் மேலை நாட்டவர் அடைந்த அளவிற்குச் சாதனைகளை மிஞ்சுவதற்கான பயிற்சி அளிக்க பணிபுரியும்.

அதை உறுப்பினர் அவர்களும் ஏற்றுக்கொண்டால் நீங்களும் பயிற்சி பெறலாம். அந்த அளவிற்கு ஊக்கத்தைத் தந்து மாவட்டந்தோறும் இந்த விளையாட்டுத் துறையை வளர்த்து பல்வேறு திட்டங்களைச் செய்வதற்குத்தான் புரட்சித் தலைவி அவர்கள் அரசு முன்வந்திருக்கிறது. அதற்காகத்தான் இந்த அளவிற்கு மானியக் கோரிக்கை கேட்டுக்கொண்டு இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு படித்தவுடன் வேலை கிடைக்க வேண்டும். அது ரொம்ப முக்கியம். விளையாட்டுத் துறையானது ஒரு பக்கம் வளரும்பொழுது நல்லொழுக்கம் வளர்கிறது, நட்பு வளர்கிறது. சமுதாயத்திலே இருக்கும் வேற்றுமைகள் எல்லாம் களையப்பட்டு அவர்கள் எல்லாம் ஒற்றுமையாகச் செயல்படுகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க இந்த விளையாட்டுத் துறை பயன்படுகிறது. அதோடு, இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற வேண்டும். படித்தவர்கள் கிராமங்களில் சும்மா இருந்தால் பிரச்சினைகள்தான் வரும். அது உண்மைதான். அதைப் போக்குவதற்காக, அந்த நல்ல நிலையைக் கொண்டுவருவதற்காக, தமிழக அரசு மூலம், எப்படி பெண்களுக்கு தனிக் குழுக்கள், சுயநிதிக் குழுக்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதுபோல சுய தொழில் செய்துகொள்ள முற்படும் இளைஞர்களுக்காக, இத்தகைய குழுக்களை தமிழகம் முழுவதும் அமைக்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதாரத்தில் முன்னேற, நல்ல வேலைவாய்ப்புகளைப் பெற அவர்களே சுயமாகத் தொழில் அமைத்துக் கொள்வதற்காக அவர்களெல்லாம் பொருளாதாரக் கடன்களைப் பெற உதவி செய்வதற்காக புரட்சித் தலைவி அவர்கள் திட்டம்



தீட்டியிருக்கிறார்கள். ஆகவே படித்த மாணவ மாணவிகள் தினந்தோறும் எங்களிடம் வருவதும், வேலை தாருங்கள், நாங்களெல்லாம் உழைத்து களைத்து பல ஆண்டுகளாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கின்ற ஒவ்வொரு கட்டத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அத்தகைய இளைஞர்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்காக படித்தவர்களுக்கு மட்டுமல்ல, படிக்காதவர்களுக்குக்கூட சுய வேலைகளைப் பெருக்குவதற்காக ஏதாவது கிராமத்துத் தொழில் செய்ய முன்வந்தால், அதற்காக இந்தக் குழுக்களின் மூலமாக அவர்களுக்கும் திட்டங்களை வகுத்துத் தந்தவர்கள் புரட்சித் தலைவி அவர்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி விளையாட்டுத் துறையிலும், இளைஞர்களுடைய வள நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களைச் செய்து வருவது நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியாகும்.

அதோடு, விளையாட்டுத் திறனைப் பதிவு செய்வதற்காக ஓர் அட்டை உருவாக்குகின்றார்கள். பள்ளியிலே மாணவர்கள் படிக்கின்றார்கள். அவர்களுக்குத் திறமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு 'progress report' மாதிரி 'progress card' அறிமுகப்படுத்த இருக்கிறார்கள். ஒவ்வொரு மாணவ மாணவியருடைய திறமை, அந்தக் கல்வி நிலையத்தின் வாயிலாக அப்பொழுதே குறிக்கப்பட்டு, அவர்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் அந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டு, அவற்றிற்கு ஓர் அடையாள அட்டை தருவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 7–10*

இப்போதுகூட பலபேர் கேட்டீர்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சொல்லும்போது, அவர்களுக்குச் சில முன்னுரிமைகள் தர வேண்டுமென்று சொன்னீர்கள். அந்த seniority பிரகாரம் employment கொடுக்க வேண்டும். அதற்கும் ஒரு மதிப்பெண் தரப்படும். அதைவிட, விளையாட்டுத் துறையிலே அவர்கள் விஞ்சியிருந்தால் அதற்கும் ஒரு தனி mark தரவேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் தருவதற்குக் காரணம், நல்ல வலிமையான மாணவர்களை இந்தச் சமுதாயத்திலே உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் முன்னேறி இருக்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் தனியாக மார்க் கொடுத்து, அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பைத் தரவேண்டும் என்று

சொல்லியிருக்கிறார்கள். விளையாட்டுத் துறையிலே சிறந்து விளங்கும் வீரர்களுக்கு பணமுடிப்பு, பரிசுகள் என்று மட்டுமல்லாமல், அதோடு அவர்களுக்கு வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை தருவதற்கு இந்த அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது. அதற்காக போலீஸ் துறையாக இருக்கட்டும், மற்ற துறைகளாக இருக்கட்டும், அவற்றுக்காக ஒரு பகுதி ஒதுக்கீடு செய்வதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் தன்னுடைய முத்திரையை புரட்சித் தலைவி அவர்கள் பதித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் வளர்ச்சிக்கு வருகின்றேன். தமிழ் வளர்ச்சி. தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டும். தமிழ் எங்கெங்கும் இருக்க வேண்டும். தமிழ் நம்முடைய தாய்மொழி என்ற உணர்வு எல்லோருக்கும் இருக்கிறது. ஏதோ உணர்வு இருந்துவிட்டால் மட்டும் போதாது. திறமைகள் இருக்கலாம். திறமைகளுக்குப் பரிசுகள் அளிப்பதற்குத் திட்டங்கள் இருக்கின்றன. புரட்சித் தலைவி அவர்கள் திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். திறமைமிக்க தமிழ் அறிஞர்களுக்குத் திட்டங்கள் இருக்கின்றன. ஆனாலும் தமிழ் உணர்வு, அதைச் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதே, அதுதான் முக்கியம். புரட்சித் தலைவி அவர்கள் எந்த வாய்ப்புக் கிடைத்தாலும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழினுடைய தரத்தை உயர்த்துவதற்கும், அதன் நிலையை உயர்த்துவதற்கும் பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறார்கள்.

உலகத் தமிழ் மாநாடுபற்றி உங்களுக்குத் தெரியும். தமிழ் வளர வேண்டும், உலக அளவிலே தமிழ் பேசப்பட வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படுகிறோம். தமிழுக்கு உலக அளவில் மாநாடு யார் நடத்தினார்கள்? உலகத் தமிழ் மாநாடு தமிழகத்தில் அண்ணாவிற்கு அடுத்ததாக புரட்சித் தலைவர் அவர்கள் நடத்தினார்கள். புரட்சித் தலைவருக்கு அடுத்ததாக புரட்சித் தலைவி அவர்கள்தான் நடத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சியினர் நடத்தவில்லையே, நடத்தியிருக்கலாமே. யாரும் வேண்டாம் என்று சொன்னோமா? ஆகவே தமிழ்மீது பற்றும் பாசமும் உதட்டளவில் இருந்தால் போதாது. செயல் வடிவில் வரவேண்டும் என்பதற்காக இவற்றையெல்லாம் சொல்ல விரும்புகிறேன். அந்த அளவிற்குத் தமிழுக்கு மேன்மை சேர்ப்பதற்காக திட்டங்களை வகுத்திருப்பவர் புரட்சித் தலைவி அவர்கள். அண்ணாவினுடைய கொள்கை என்ன? English எப்போதுமே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதா? இல்லை, ஹிந்தி வேண்டும்



என்பதா? கிடையாதே. நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் மக்கள் அவையிலே பேசும்பொழுது, மற்றவர்கள் பேசும்போது ஏன் நீங்கள் தமிழிலே பேசலாமே, ஏன் ஆங்கிலத்தில் பேசினீர்கள் என்று கேட்டபோது, சொன்னார்: நான் ஹிந்திக்கு எதிர்ப்பானவனாக இருந்தாலும் ஆங்கிலத்திற்கு வால் பிடிப்பவன் கிடையாது; ஆனால் தமிழ் மொழி இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக வேண்டும். இந்த பாராளுமன்றத்தில் தமிழ் மொழியும் ஒரு சம அந்தஸ்தில் பேசப்பட வேண்டும். அந்த நிலை வரவேண்டும், அதற்காக நான் பாடுபடுவேன் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆக அவர்களுடைய கொள்கை, இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளும் தேசிய மொழிகளாக, ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும் என்பது. அதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்தது? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் – புரட்சித் தலைவி அவர்கள்தான் முதன்முதலில் பொதுக் குழுவிலும், செயற்குழுவிலும் இந்தியாவிலுள்ள அனைத்து தேசிய மொழிகளும், ஆட்சி மொழியாக ஆக வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். 1991–92–ல் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகுதான் தி.மு.க. செயற்குழுவிலே கொண்டு வந்தார்கள். அதையும் நான் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் கொண்டுவரவில்லை என்று நான் சொல்லவில்லை. முதலில் தமிழ் மொழி உட்பட அனைத்து மொழிகளும், அனைத்து இந்திய மொழிகளும் இந்தியாவினுடைய ஆட்சி மொழி ஆக வேண்டுமென்று, மத்தியிலே ஆட்சி மொழியாக ஆக வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தது புரட்சித் தலைவி அவர்கள்தான். பிறகு வாய்ப்புக் கிடைத்தது. 1998–லே வாய்ப்புக் கிடைத்தது. அங்கே மத்தியிலே அமைச்சரவை அமைக்கும் நிலைமை வந்தபோது, புரட்சித் தலைவி அவர்கள், தன்னுடைய குறிக்கோள்களில் இதையும் ஒன்றாகச் சேர்த்தார்கள். தமிழை நீங்கள் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும், அதை நீங்கள் ஏற்றுக் கொண்டால்தான் நாங்கள் மத்திய அமைச்சரவையில் பங்கேற்போம் என்று சொன்னவர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு செயல் திட்டத்திலும் சேர்த்து இருக்கின்றார்கள். தேசிய செயல் திட்டத்தில் சேர்த்து, National Agenda–வில் சேர்த்து, தமிழ் மொழியை இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தவர் புரட்சித் தலைவி, அவர்கள். காலம் தாழ்த்தினார்கள். அப்போது என்ன சொன்னார் புரட்சித் தலைவி அவர்கள்? இந்த பாரதிய ஜனதா ஆட்சியிலே நாம் சொல்லும் திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதில்லை, நமக்கு வேண்டியது நம்முடைய தன்மானம், தமிழ்நாட்டின் தன்மானம், தமிழ்நாட்டிற்குச்

செய்ய வேண்டிய திட்டங்களைச் செய்யாத பாரதிய ஜனதா கட்சியோடு உடன்பாடு வேண்டாம் என்று சொன்னார்கள். அப்போது வேறு எதற்காகவும் சொல்லவில்லை.

*பிற்பகல் 7–15*

சேது சமுத்திரம் திட்டத்தைப்பற்றிப் பேசுகிறோம் நாம். அந்த சேது சமுத்திரம் திட்டத்தைப்பற்றி இப்போது யாராவது பேசுகிறார்களா? அண்ணா தி.மு.க. அங்கே ஆட்சியில் இருந்தபோதுதான் எல்லோரும் பேசினார்கள். ஏனென்றால், அந்தத் துறை என்னிடம் இருந்தது. சேது சமுத்திரம் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, வடிவாக்கம் செய்வதற்கு எனக்குச் சொல்லியவர் புரட்சித் தலைவி அவர்கள். அப்போது Surface Transport துறையில் அது ஒர் அங்கமாக என்னிடத்திலே இருந்தது. அப்படிச் சொல்லும்போது சேது சமுத்திரம் திட்டம் கிடப்பிலே இருந்தது. அதை தூசி தட்டி எடுத்துக்கொண்டு வந்து அதிகாரிகளை அழைத்து — இப்போது இங்கே இருந்து D.G.P. அங்கு சென்று இருக்கிறாரே, அவருடைய சகோதரர் சீனிவாசன் அவர்கள் இருந்தார்கள். அவர்தான் இந்தத் திட்டத்தைப் பார்த்து அதற்கு Environment Clearance கொடுக்க வேண்டும், அது அவருடைய control–ல் இருந்தது. அவர் என்னிடம் பேசினார். நான் அவரிடம், என்னங்க, நீங்க ஒரு தமிழராக இருக்கிறீர்கள், எப்படியாவது இதைச் செய்து கொடுங்கள் என்று சொன்னேன். உடனே அவர் ஓரிரு மாதங்களுக்குள்ளாக clearance செய்து கொடுப்பதாகச் சொன்னார். சரி, உடனே clearance செய்ததும் அப்போதே இதைப்பற்றி பி.ஜே.பி., யாருமே கவலைப்பட்டது இல்லை. இதைப்பற்றி அம்மா அவர்களிடம் சொன்னேன். அம்மா அவர்கள், நீங்கள் உடனே செய்யுங்கள் என்றார்கள். பின்னர், அதைச் செய்து அதற்காக திட்டத்தை வடிவாக்க வரும்போது, திரு. வாஜ்பாய் மெரினாவுக்கு வந்தார். மெரினாவுக்கு வந்ததும் என்ன சொன்னார்? ஏதோ, வை.கோ. சொன்னதுபோலவும், அவர் கேட்டுக்கொண்டது போலவும், செயல்படுத்துவதாக ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்திற்கு வடிவம் கொடுத்தது புரட்சித் தலைவி அவர்கள். அப்போது அந்தத் துறை என்னிடம் இருந்தது. நான்தான் அப்போது அங்கே அமைச்சர். அப்போது அந்தத் திட்டத்தை நான்தான் எடுத்து தூசி தட்டிச் செயல்படுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்தேன். எங்களுக்குத் தெரியாமல், ஏதோ பி.ஜே.பி. ஆட்சி செய்வதுபோலச் சொன்னார்களே, இப்போது எங்கே செய்கிறார்கள்? இன்றைக்கு அதற்கு நிதியை ஒதுக்கச் சொன்னார்களா? *(குறுக்கீடு)*



**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இருந்ததற்கு முன்பாக, திரு. வெங்கட்ராமன் அவர்கள் அங்கே அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் முன்பு மதுரையிலே ஒரு மாநாட்டைக் கூட்டி, அதிலே இருக்கிற தொழிலதிபர்களையெல்லாம் அழைத்துப் பேசி அதற்கான தீர்மானங்களையெல்லாம் அப்போது தொடங்கி வைத்திருக்கிறார்கள் என்பது உண்மை.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** நீங்கள் சொன்னதுபோல, தீர்மானங்கள் பல வந்திருக்கும். அதுபற்றி study பண்ணிக்கொண்டே இருக்கலாம். ஆனால் ஆக்கபூர்வமாக file–லிலே கையெழுத்து போட்டு செயல்படுத்துவதற்கு நடவடிக்கையை யார் செய்தார்கள்? அதை அண்ணா தி.மு.க.தானே செய்தது? *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தப் பெருமை எங்களுக்கு வரக்கூடாது என்பதற்காக திரு. வாஜ்பாய் அரசு எப்படிச் செயல்பட்டது? *(குறுக்கீடுகள்)* நான் yield ஆகவில்லை. நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**டாக்டர் க. பொன்முடி:** நாங்கள் விளக்கம் கொடுக்க வேண்டாமா? செய்தவர்களைச் சொல்ல வேண்டுமல்லவா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** செய்தவர்களைச் சொல்கிறேன். கொஞ்சம் இருங்கள். விளக்கம் நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* புரிந்துகொண்டேன். திரு. வெங்கட்ராமன் period–ல் செய்தார்கள் என்று சொன்னார்கள். *(குறுக்கீடு)* கொஞ்சம் இருங்கள். நாங்கள் செய்ததைச் சொல்கிறேன், நீங்கள் பிறகு சொல்லுங்கள். பிறகு நீங்கள் பதில் சொல்லலாம். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினோம். எங்களுக்கு அந்தப் பெருமை வரக்கூடாது என்ற நிலைமையை பாரதிய ஜனதா உருவாக்கியது. *(குறுக்கீடு)* ஒன்றும் வேண்டாம், சரி, நீங்கள் விடுங்கள். நீங்கள் சொல்கிறீர்களே, 1972–க்கு முன் அந்த நேரத்திலே கலைஞருடைய ஆட்சி இருந்தபோது காவிரி நீர்ப் பிரச்சினை வந்ததல்லவா? அப்போது அன்னை இந்திரா காந்தி, இவருடைய support –லேதான் அங்கே இருக்கும் நிலைமை இருந்தது. அவர்களுக்கு தமிழகத்தின்மீது, தமிழ்மீது பற்று இருந்திருந்தால், அவர் பிறந்த தஞ்சைக்கு காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நினைத்திருந்தால், அன்றைக்கு renewal–க்கு வருகின்ற நேரத்திலே condition போட்டிருக்கலாமே? இப்போது நீங்கள் condition

போடவில்லையா? நீங்கள் சேது சமுத்திரம் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை என்று சொல்லி வெளியே வந்தோம். தமிழ் மொழியை ஆட்சி மொழி ஆக்கி செயல்படவில்லை என்று சொல்லி வெளியே வந்தோம். நீங்கள் அன்றைக்கு வந்தீர்களா? உங்களை நம்பியிருந்த அன்னை இந்திரா காந்தியிடம் சொல்லி நீங்கள் காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்த்திருந்தால், தீர்த்தால்தான் உங்களுக்கு ஆதரவு தருவோம் என்று சொல்லியிருந்தால், நீங்கள் தமிழகத்தைக் காத்திருப்பீர்கள். ஆனால் அன்றைக்குச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

சேது சமுத்திரம் திட்டம் பற்றியும் அதுமாதிரித்தான் சொல்ல வருகிறேன். உங்களுக்கு அன்றைக்கு சர்க்காரியா கமிஷன்தான் முக்கியமாக இருந்தது. அன்றைக்கு சர்க்காரியா கமிஷனிலிருந்து வெளியே வரவேண்டுமென்று நினைத்தீர்களேயொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) காவிரி நீர்ப் பிரச்சினையை – இன்றைக்கு 1 டி.எம்.சி., 2 டி.எம்.சி.–க்கு அலைகிறோம் பாருங்கள். அன்றைக்கு கர்நாடகா 320 டி.எம்.சி. கொடுக்கத் தயாராக இருந்தது, எனக்குத் தெரியும். திரு. தேவராஜ் அர்ஸாக இருக்கட்டும், திரு. வீரேந்திர பாட்டிலாக இருக்கட்டும், அவர்கள் இருந்தபோதெல்லாம், அவர்களெல்லாம் ஓரளவிற்கு ஒத்திருந்தார்கள். அன்று, தி.மு.க. நினைத்திருந்தால், தனக்கு வேண்டியது தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் மண்–இது வளர வேண்டும், இதுதான் எனது குறிக்கோள் என்று நினைத்திருந்தால், அன்று தீர்த்திருக்கலாம். ஆனால் அவருக்கு வேண்டியதெல்லாம் சர்க்காரியா கமிஷன்தான். (குறுக்கீடு) அப்படி நாங்கள்போய் இதற்காக நிற்கவில்லையே! நாங்கள் ஏதாவது பண்ணினோமா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) Case–க்காகவா நாங்கள் வெளியே வந்தோம்? Case போட்டது தி.மு.க. ஆட்சி. வாபஸ் வாங்க வேண்டியது, தி.மு.க.தான் வாங்க வேண்டும் (குறுக்கீடு) எங்களுக்குத் தெரியாதா? திரு. வாஜ்பாயா வாபஸ் வாங்க முடியும்? (குறுக்கீடு) எங்களுக்கு ஒன்றும் தேவையில்லை. தமிழகம்தான் முக்கியம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், தமிழ், தமிழ் என்று சொல்லிக் கொண்டு, தமிழினுடைய வளர்ச்சிக்கு நீங்கள் எதுவும் செய்யவில்லை. தமிழை வளர்க்க வேண்டும். தமிழ்நாட்டை வளர்க்க வேண்டும் என்பதற்காகப் பாடுபடும்போது (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு கட்டத்திலும் பல தொல்லைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், தமிழை வளர்ப்பதற்காக, தமிழ்நாட்டை வளர்ப்பதற்காக பல்வேறு திட்டங்களுக்காகப் போராடியவர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 7–20

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள். என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேகத்திலே சொல்கிறார். நாங்கள் தலையிடவில்லை. ஏன் பி.ஜே.பி.-யிலே இருந்து நாங்கள் வெளியேறினோம் என்பதற்கு, தமிழ் மொழி, சேது சமுத்திரம், இந்தியாவைக் காப்பது, தமிழ்நாட்டின் உரிமை என்றெல்லாம் சொல்கிறார். அந்தமாதிரி ஏதாவது சொல்லி ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறீர்களா என்று கேட்கிறேன். எதற்காக வந்தீர்கள் என்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அறிக்கை வெளியிடப்பட்டதாக முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.ஜே.பி. தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சிக்கு அளித்துவந்த ஆதரவை வாபஸ் வாங்குவதற்கு முன்பாக, பொதுக் குழுவைக் கூட்டி, பொதுக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, அதற்கான தீர்மானத்தையே நிறைவேற்றி, எல்லாக் காரணங்களையும் பொதுமக்கள் முன்பாக வைத்துதான் ஆதரவை வாபஸ் பெற்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று–(குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே,—

**திரு. துரைமுருகன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று–(குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று நீங்கள் மத்திய அரசை வற்புறுத்தினீர்கள். அவர்கள் கலைக்க முடியாது என்றார்கள். அதற்கு இந்தக் காரணத்தையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தீர்கள், அவ்வளவுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடையாது, கிடையாது. அதை முழுமையாக நான் மறுக்கிறேன். நான் அமைச்சராக இருந்தவன். நான் பலமுறை – பீகார் அரசையெல்லாம் கலைக்கிறபோதுகூட – அவர்கள், பி.ஜே.பி.–காரர்கள். கலைத்தார்கள், நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. Issue ஒன்றும் செய்யவில்லை. உங்கள் ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று எங்களுக்கு அவசியம் இல்லை. நீங்கள் கலைந்து போவீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே உங்களைக் கலைக்க வேண்டிய நோக்கம் எங்களுக்கு இல்லை. ஆகவே—(குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வாஜ்பாய் அவர்களேகூட சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** இப்போதுகூட நீங்கள் கேளுங்கள். நீங்கள் வேண்டுமென்றால், கேட்டு வெளியே வாருங்களேன். மத்தியிலே, தமிழ் ஆட்சி மொழி வேண்டுமென்று கேட்டுவிட்டு வெளியே வாருங்களேன் பார்க்கலாம், நாங்கள் சொன்ன மாதிரி. (மேசையைத் தட்டும் ஒலி) சேது சமுத்திரம் வேண்டுமென்று கேட்டு வெளியே வாருங்களேன் பார்க்கலாம். நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை யார் தடுக்கப் போகிறார்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, இருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** நீங்கள் எல்லாம் டெல்லியிலே உட்கார்ந்துகொண்டு இருப்பது, இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று நீங்கள் சதி செய்துகொண்டிருக்கிறீர்கள். நாங்கள் அப்படி கிடையாது. போலீஸ்காரர்களைக் கூப்பிடுகிறீர்கள். எல்லோரையும் கூப்பிடுகிறீர்கள். (குறுக்கீடு) தயவு செய்து—(குறுக்கீடு) நான் இதை முடிக்கப் போகிறேன். நேரம் அதிகம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) தயவு செய்து—(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் பதிலுரையை முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வெளியே வா, எங்களை வெளியே வா என்று சொல்கிறார் அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** யாரும் வெளியே வா என்று சொல்லவில்லை. தயவு செய்து, வெளியே வா என்று சொல்லவில்லை. நீங்கள் ஆட்சியில் அங்கேயே இருங்கள். சிமெண்ட் கார்ட்டல் நன்றாக



வைத்துக்கொள்ளுங்கள். நன்றாக project பண்ணுங்கள். எல்லாம் செய்யுங்கள். யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வெளியே வாருங்கள் என்று சொல்கிறார் அமைச்சர். நாங்கள் வெளியே வந்தால், உள்ளே போகமாட்டோம் என்று சத்தியம் செய்வதற்கு நீங்கள் தயாரா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே அவர்களாக வெளியே வரவேண்டுமென்ற அவசியம்கூட இல்லை. நாங்கள் வருகிறோம் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும். பி.ஜே.பி.-யே இவர்களை வெளியே அனுப்பிவிடுவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினைக்கு முதலமைச்சர் அவர்கள் கலசம் வைத்துவிட்டார்கள். அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கீழே இறங்கி வாருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் கல்வித் துறைக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகளாக, தொடக்கக் கல்வியாக இருந்தாலும் சரி, உயர்நிலைக் கல்வியாக இருந்தாலும் சரி, பல்கலைக்கழகக் கல்வியாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டு நலனுக்காக தமிழைக் காப்பதாக இருந்தாலும் சரி, பல்வேறு திட்டங்களையெல்லாம் புரட்சித் தலைவி அரசானது செயல்படுத்திக்கொண்டு வந்தது. அதுவும் குறிப்பாக, பல்வேறு ஆன்றோர்களுக்கெல்லாம், நல்ல தமிழறிஞர்களுக்கெல்லாம் பரிசுகள் தர வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, மொழியியல் அறிஞர் தேவநேயப் பாவாணரின் நூறாவது ஆண்டு பிறந்த நாள், இந்த ஆண்டு வருகிறது. இந்தத் தருணத்தில் அவரது நூற்றாண்டு விழாவை, அரசு விழாவாக நடத்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, சற்று பொறுங்கள். பேரவையின் சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** நன்றி. தமிழ் இலக்கியப் படைப்புகளைக் காக்கும்பொருட்டு, தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் ஆற்றியுள்ள தொண்டைக் கருத்தில் கொண்டு, அவருடைய தமிழ்ப் படைப்புகளை நாட்டுடைமையாக்குவது குறித்தும் அறிவிக்கப்படும் என்பதை உங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஏற்படும் செலவு ரூபாய் 5 இலட்சம் ஆகும். இதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள் என்று கூறி, இதுபோன்று பல்வேறு திட்டங்களையெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திற்கும், தமிழ் மண்ணிற்கும், ஏழைச் சமுதாயத்திற்கும், குறிப்பாக ஆதிதிராவிடப் பெண்கள் எல்லாம் முன்னேறுவதற்காக பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். ஆகவே, இதன் காரணமாக இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள இதுபோல பல பட்ஜெட்கள் இன்னும் அதிக திட்டங்களைக் கொண்டு நாங்கள் சமர்ப்பிக்க இருக்கின்றோம். ஐந்தாண்டு காலத்தில் புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் இந்த அரசு செயல்படுத்தும் என்று கூறி, எனக்கு இந்த வாய்ப்பளித்த புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைக்கும் என் நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன். மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தந்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் வாபஸ் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். காரணம், இவர்கள் பேசும்போது எல்லாம் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பரிவுடன் பரிசீலனை செய்து புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு செயல்படுத்துவோம் என்று கூறுகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 7-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 17 – கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 17-கல்வி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4978,84,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 51 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 51, தமிழ் வளர்ச்சி, பண்பாடு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 40,77,16,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-8-2001) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

32. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

33. 1999-2000 ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

34. 1999-2000 ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

24. மானியக் கோரிக்கை எண் 17 - உயர் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

25. மானியக் கோரிக்கை எண் 17 - பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

26. மானியக் கோரிக்கை எண் 17 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

27. மானியக் கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ்)

28. மானியக் கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (ஆங்கிலம்)

---

# இணைப்பு – I

*( 76 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 17 – கல்வி

## உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2001 – 2002

### 1. கொள்கை விளக்கம்

மக்களின் சமூக பொருளாதார நிலை நன்கு அமைதல் என்பது நன்கு பயின்ற பணியாளர்களையே பெரும்பாலும் சார்ந்துள்ளது. சிறந்த பணியாளர்களை உருவாக்குவதில் மாநில அரசின் உயர் கல்விக் கொள்கை இன்றியமையா பங்கு வகிக்கின்றது. பயில்தல் மற்றும் பயிற்றுவித்தல் வழிமுறைகளில் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சீரிய மாற்றங்களை ஏற்படுத்த 21ஆம் நூற்றாண்டு மாபெரும் வாய்ப்புக்களை அளிக்கின்றது. தற்போது இருக்கின்ற கட்டமைப்பு வசதிகளைத் திரட்டுவதும், அதே வேளையில் சமூக நீதியிலும் தகுந்த கவனம் செலுத்துதல் கல்விக் கொள்கையின் முக்கிய அம்சமாகும். உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் நாட்டிலேயே தமிழகம் முதன்மைப் பெற்ற மாநிலமாக திகழ்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெரிதும் காட்டிவரும் ஆர்வத்திற்கு ஏற்ப உயர் கல்விக் கொள்கை வகுக்கப்படுகிறது.

1.2. கோரிக்கை எண் 17 கல்வியின்கீழ் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4,978.84 கோடிகளாகும். இதில் உயர் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.785.20 கோடி. இது மொத்த ஒதுக்கீட்டில் 15.77 விழுக்காடு ஆகும்.

1.3. பொறியியற் கல்லூரிகளிலும், தொழில் நுட்ப பயிலகங்களிலும் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வசதி கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 62,934-ஐ எட்டியுள்ளது. தொழில் நுட்ப பயிலகங்களில் மாணவர் சேர்க்கை 47,324-ஐ எட்டியுள்ளது.

1.4. புதிய கல்வி நிறுவனங்களை உருவாக்குவதைவிட இருக்கின்ற நிறுவனங்களில் உள்ள வசதிகளை ஒன்று திரட்டி அவற்றின் தரத்தை

உயர்த்துவதே இவ்வரசின் கொள்கையாக உள்ளது. இந்த நோக்கத்திற்காகத்தான் அரசு ஒரு தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலும், தொழில் துறையின் தேவைகளுக்கேற்ற வகையிலும், பொறியியல் கல்வியில் பாடத் திட்டத்தை மேம்படுத்த இப்பல்கலைக்கழகம் முனையும். தொழிற் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் பற்றாக்குறையினைப் போக்க தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்கும். தொழில் நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் பரஸ்பரம் பயன்பெறும் வகையில் கலந்து செயலாற்ற ஊக்கம் அளிக்கப்படும்.

1.5. பொறியியற் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர முறையை மேம்படுத்துவதில் அரசு ஈடுபாடு கொண்டுள்ளது. முதன் முறையாக திருச்சியிலும் கலந்தாய்வு நடந்ததை மாணவர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் வரவேற்றுள்ளனர்.

1.6. கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான பொறியியற் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக இந்தக் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப் பட்டுள்ளது.

17. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வேலைவாய்ப்புக்கு உகந்த படிப்புகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அகில இந்திய பணி மற்றும் குடிமைப் பணி பணித் தேர்வுகளுக்கு பெண்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டி சென்னையிலும், மதுரையிலும் இரண்டு மையங்கள் உருவாக்கப்படும்.

1.8. மேற்படிப்பு பெற்ற கல்லூரிகளை அதிக அளவில் தமிழ்நாடு கொண்டுள்ளது. கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை தேசிய மதிப்பீடு மற்றும் ஏற்பளிப்புக் குழு (NAAC) தொழிற் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை தேசிய ஏற்பளிப்பு வாரியம் (NBA) ஆகியவற்றின் ஒப்புதல் பெற ஊக்கம் அளிப்பதை அரசு ஒரு கொள்கையாகக் கொண்டுள்ளது. பாடத் திட்டங்களை மேம்படுத்தவும், கல்வி பயிற்றுவித்தல், பயில்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றை மேம்படுத்தவும் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

1.9. கல்விக்கேற்ற இதழ்கள், நூல்கள், சி.டி.ரோம்கள் மற்றும் முக்கியமான அறிக்கைகள் ஆகியவை எளிதில் கிடைக்கும் வகையில் நூலகங்கள் மேம்படுத்தப்படும். நூல்கள் மற்றும் இதழ்களின் விலை கூடுதலாக இருப்பதால், நூலகங்களுக்கிடையே நூல்களை பரிமாறிக்



கொள்ளவும். இணைய வசதிகளை பயன்படுத்திக் கொள்ளவும் சிறந்த வழிமுறை கண்டறியப்படும்.

1.10. அண்மைக் காலங்களில் கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் மேலாண்மை இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகள் பயில்வதை நாடி கூடுதலாக மகளிர் வருதலைக் காணலாம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கல்வி மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு முதுநிலை பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி இந்த கல்வியாண்டு முதல் அளிக்கப்படுகிறது.

## 2001 – 2002 திருத்திய வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்வித் துறை குறித்த நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை 17 — கல்வி என்ற தலைப்பின்கீழ் உயர் கல்வித் துறைக்கான மொத்த செலவினத் தொகை ரூ.785.20 கோடி ஆகும். இதில் ரூ.18.12 கோடி திட்டப்பணிகளுக்கானதாகும். மாநில வருவாய்க் கணக்கின்பேரிலான மொத்தச் செலவான ரூ.24,522.00 கோடியில் கல்விக்கான செலவு 3.20 விழுக்காடு எனக் கணக்கிடப்படுகிறது.

### 2001–2002–க்கான திருத்திய மதிப்பீடு

**அட்டவணை – I**

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | அரசுக் கல்லூரிகள், கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | — | 900.01 | 900.01 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 942.30 | 59,968.88 | 60,911.18 |
| 2203 | தொழில் நுட்பக் கல்வி | 439.28 | 15,217.47 | 15,656.75 |

| கணக்குத் தலைப்பு (1) | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2205 கலையும் பண்பாடும் | | | |
| 104 ஆவணக் காப்பகங்கள் | 20.52 | 316.79 | 337.31 |
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் (Scholarships and Stipends) | — — | 5.04 | 5.04 |
| 2551 மலைப்பிரதேச மேம்பாடு (Remote Sensing) | 30.16 | — — | 30.16 |
| 3425 அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 337.44 | — — | 337.44 |
| 3454 மக்கள் தொகை கணக்கெடுப்பும் ஆய்வுப் புள்ளியியல் விவரம் | | | |
| 110 விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | 39.73 | — — | 39.73 |
| நிகர மொத்தம் | 1,809.43 | 76,408.19 | 78,217.62 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | 3.32 | 301.05 | 304.37 |
| தொகு மொத்தம் | 1,812.75 | 76,709.24 | 78,521.99 |





## அட்டவணை - II

| கணக்குத் தலைப்பு (1) | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மானியக் கோரிக்கை எண்:55 | | | |
| 4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதன செலவு | | | |
| 01 பொதுக் கல்வி | | | |
| 203 பல்கலைக்கழகக் கல்வியும் ஏனைய உயர்கல்வியும் | 99.23 | — | 99.23 |
| 02 தொழில் நுட்பக் கல்வி | | | |
| 104 பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் | 49.30 | — | 49.30 |
| 105 பொறியியல் / தொழில் நுட்பக் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள் | 120.86 | — | 120.86 |
| 04 கலையும் பண்பாடும் | | | |
| 104 ஆவணக் காப்பகம் | 14.00 | — | 14.00 |
| நிகர மொத்தம் | 283.39 | — | 283.39 |

## பகுதி II திட்டம் — 2001–2002

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 2001—2002 ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில் ) | |
| | **கல்லூரிக் கல்வி (திட்டப் பணிகள்)** | | |
| 1 | ஆதிதிராவிடர் நல மாணவியர்களுக்கு அரசுக் கல்லூரிகளில் இலவசக் கல்வி அளித்தல். | 14.00 | 14.00 |
| 2 | எம்.சி.ஏ. படிப்பு உள்ள 4 அரசினர் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும், ரூ.7.50 இலட்சம் செலவில் கணினி கூட வசதிகளை மேம்படுத்தல். | 30.00 | 30.00 |
| 3 | 8 அரசினர் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் ரூ.2.50 இலட்சம் செலவில் கணினி கூட வசதிகளை மேம்படுத்தல். | 20.00 | 20.00 |
| 4 | பட்டப் படிப்புகளுக்காக ரூ.1.00 இலட்சம் வீதத்திலும், பட்ட மேற்படிப்புக்காக ரூ.1.50 இலட்சம் வீதத்திலும் 6 அரசினர் கலைக் கல்லூரிகளில் ஆய்வுக் கூட வசதிகளை வலுப்படுத்துதல். | 9.00 | 9.00 |
| | | 73.00 | 73.00 |
| | **தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (திட்டப் பணிகள்)** | | |
| 5 | கணினி ஸ்கேனர் வாங்குதல் | 2.50 | 2.50 |
| 6 | புதிய நூலகக் கட்டிடத்திற்கு மேல் முதல்மாடி கட்டுதல். | 35.00 | 14.00 |



| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 2001—2002 ல் செலவு |
|---|---|---|---|
| | **தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (திட்டம் சாராதது)** | | |
| 7 | தமிழ்நாடு ஆவண காப்பக வளாகத்தைச் சுற்றிலும், சோடியம் வாயு விளக்குகள் அமைத்தலும், 5 மற்றும் 6 ஆம் ஸ்டேக்களுக்கு புதிய மின்கம்பி இணைப்புக் கொடுத்தல். | 5.00 | 5.00 |
| | | 42.50 | 21.50 |
| | **தொழில் நுட்பக் கல்வி (திட்டப் பணிகள்)** | | |
| 8 | வேலூர், தந்தை பெரியார் அரசினர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நூலகத்தை விரிவுபடுத்தல். | 13.00 | 13.00 |
| 9 | பர்கூர், அரசினர் பொறியியல் கல்லூரியில் மேற்கோள் நூலக வசதிகளை விரிவுபடுத்தல். | 13.00 | 13.00 |
| 10 | பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் ஆய்வுக் கூடத்தை ஏற்படுத்தல். | 20.00 | 20.00 |
| | **தொழில்நுட்பக் கல்வி (திட்டம் சாராதது)** | | |
| 11 | புரசைவாக்கம் அரசினர் தொழில்நுட்பப் பயிலகத்தில் இயந்திர அணுவியல், தகவல் நுட்பவியல் மற்றும் கணினி அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைத்தல். | 40.00 | 40.00 |
| | | 86.00 | 86.00 |
| | **அண்ணா பல்கலைக்கழகம் (திட்டப் பணிகள்)** | | |
| 12 | எந்திர பொறியியல் துறையின் கணிப்பொறி வசதிகளை மேம்படுத்தல். | 7.50 | 7.50 |
| 13 | உயர்திறக் கணிப்பொறி வசதிகளின் மேம்பாட்டுக்கான சிறப்பு உதவித் திட்டம். | 20.00 | 7.50 |

| | | |
|---|---|---|
| 14 மின்னணு ஊடக மையம் நிறுவுதல். | 10.00 | 7.50 |
| 15 தகவல், தொழில்நுட்ப பாடப் பிரிவில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்காக கூடுதல் கணினி வசதிகளை ஏற்படுத்தல். | 25.00 | 7.50 |
| | 62.50 | 30.00 |

**தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் (திட்டப் பணிகள்)**

| | | |
|---|---|---|
| 16 பெரியார் காட்சிக் கூடத்திற்கான தொடுமுனை திரை அமைப்பு மற்றும் இதர உபகரணங்களுடன் கூடிய 7 கணிப் பொறி, 6 காட்சிக் கூடங்களுக்கான நவீன புகைப்படக் கருவி மற்றும் திரையுடன் கூடிய எல்.சி.டி. ஒலி விரிவாக்கி, நகரும் எல்.இ.டி. தகவல் அமைப்பு, நவீன உயர்நிலைத் தொலை நோக்கி, புதுமைகாண் புதிய காட்சிப் பொருட்களை உருவாக்குதலும், பழைய காட்சிப் பொருட்களை புதுப்பித்தலும். | 10.00 | 10.00 |

**தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் (திட்டப் பணிகள்)**

| | | |
|---|---|---|
| 17 கிராமப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிலையாக உயர்த்த உதவும் தொழில் நுட்ப உத்திகளை உருவாக்குதல். | 15.00 | 6.00 |

**தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் (திட்டப் பணிகள்)**

| | | |
|---|---|---|
| 18 பல்கலைக்கழகங்களுக்கு மாநில இணை மானியம், பல்கலைக்கழகங்களுக்கும், உயர் கல்வி நிறுவனங்களுக்கும் ஏனைய சிறப்பு மானியங்கள். | 15.00 | 15.00 |



**அறிவியல் நகரம் (திட்டப் பணிகள்)**

| | | |
|---|---|---|
| 19 சுற்றுச் சூழல் நேய திட்டங்கள் | 3.00 | 3.00 |
| 20 கட்டிடங்களைக் கட்டுதல் (அறிவியல் நகரத்திற்கு ) | 95.00 | 36.00 |
| | 98.00 | 39.00 |

**உயர் கல்வித் துறை (திட்டம் சாராதது)**

| | | |
|---|---|---|
| 21 உயர் கல்வித் துறையில் கணினி மையம் ஒன்றை ஏற்படுத்துதல். | 8.00 | 8.00 |
| மொத்தம் — திட்டத்தில் சேராதது | 53.00 | 53.00 |
| மொத்தம் — திட்டப் பணிகள் | 357.00 | 235.50 |
| பெரு மொத்தம் | 410.00 | 288.50 |

## 2. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நல்கை நிதிக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் உதவும் வகையில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1992 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்ட வாயிலாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் மாநிலக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

### மன்றத்தின் முக்கியப் பணிகள்

(அ) உயர் கல்வி மற்றும் ஆய்வு தொடர்பாக அரசு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அணுகும்போது அவற்றுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குதல்.

(ஆ) உயர் கல்வி மேம்பாட்டிற்கான தகுந்த திட்டங்களை மாநில அளவில் உருவாக்குதல்.

(இ) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கிணங்க உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில், அவற்றின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிடவும் அவற்றை நிறைவேற்றவும் உதவி செய்தல்.

(ஈ) மாநில அளவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களைத் தெரிவு செய்து மன்றத்தின் குறிப்பு மற்றும் பரிந்துரையுடன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு அனுப்புதல் மற்றும் திட்டப் பணிகளில் செயலாக்கத்தைக் கண்காணித்தல்.

(உ) உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினை உயர்த்துதல், ஒருங்கிணைத்தலை மேம்படுத்துதல் மற்றும் அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைக் கண்டறிதல்.

(ஊ) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு மற்றும் அரசு விதிமுறைகளுக்கிணங்க, புதிய உயர் கல்வி நிறுவனங்களை தோற்றுவிப்பதற்கான நெறிமுறைகளை வடிவமைத்தல்.



(எ) மாநிலத்தில் உயர் கல்விக்கென கூடுதல் நிதி ஆதாரங்களை ஏற்படுத்தும் வழிவகை குறித்து அறிவுரை நல்குதல்.

(ஏ) உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் பாடத்திட்டத்தை செழுமைப் படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் தரத்தை சீரமைக்கவும் உதவுதல்.

(ஐ) தன்னாட்சிக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் தேர்வுகளின் தரம் உயரவும், தொடர்ந்து செம்மையாக நடைபெறும்வகையில் சீரமைக்கவும் உரிய அறிவுரைகள் பகர்தல்.

(ஒ) கல்வித் தரத்தை நிர்ணயித்து அதன் தொடர்ச்சியான உயர்வுக்கு வழிவகுத்திட, பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு தேவையான உதவி புரிதல்.

(ஓ)கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்துதல், கண்காணிப்புத் திட்டம் ஏற்படுத்துதல்.

2.2. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழக நூலகங்களும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர் சமூகத்தின் வசதிக்காக கணினி மூலம் இணைப்பது போன்ற நடவடிக்கைகளில் இம்மன்றம் கவனம் செலுத்தி வருகிறது.

2.3. மாநிலத்தில் அமைந்துள்ள பல்வேறு கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளில் நடத்தப்பெறும் பாடத்திட்டங்களில் ஒருமித்த பாடத்திட்ட கட்டமைப்பும், விதிமுறைகளும் உருவாக்க இம்மன்றம் ஊக்குவிக்கும்.

2.4. அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மன்றத்தின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## 3. கல்லூரிக் கல்வி

1965 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட கல்லூரிக் கல்வித் துறை தற்கால வளர்ச்சிக்கேற்ப உயர் கல்வித் துறையில் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசின் முனைப்பான திட்டங்களுக்கேற்ப தமிழகத்தில் உயர் கல்வியின் பங்கு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போது 440 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 22 கல்வியியல் கல்லூரிகள், 9 கீழ்த் திசைக் கல்லூரிகள்,

[2001 ஆகஸ்ட் 27

4 உடற்கல்வியியல் கல்லூரிகள், 2 சமுதாயப் பணிப் பள்ளிகளும் ஆக மொத்தத்தில் 477 கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

**மகளிர் கல்வி**

3.2. 2001-2002 ஆம் ஆண்டில் பெண்கள் கல்வி முன்னேற்றம் என்பது மிகவும் பிரதானமாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஐந்து அரசு மகளிர் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்ட இடங்களான கிருஷ்ணகிரி, பர்கூர், இராமநாதபுரம், நிலக்கோட்டை, மற்றும் சிவகங்கை ஆகியவை சமூக ரீதியாகவும், கல்வியிலும் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாகும். மேற்கண்ட ஐந்து மகளிர் கல்லூரிகளிலும், வேலைவாய்ப்பிற்கு மிகவும் துணை புரியும் பாடங்களான கணிப்பொறி அறிவியல், மின்னணுவியல், உயிர் வேதியியல், நுண்ணுயிரியல், ஊட்டச்சத்து அறிவியல் மற்றும் சுற்றுலா வளர்ச்சி ஆகியவை மாணவிகளுக்கு உயர் கல்வி பயின்ற பிறகு வேலைவாய்ப்பிற்கு மிகவும் உகந்ததாக அமையும்.

3.3. தமிழ்நாட்டில் உள்ள 440 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 120 கல்லூரிகள் மகளிருக்கானவை. மகளிர் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அவ்விடத்தில் உள்ள ஆடவர் கல்லூரிகளில் 30 சதவீதத்திற்குக் குறையாமல் மாணவியர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1980 - 81 ஆம் ஆண்டு நிலவரப்படி, உயர் கல்வி பயிலும் மாணவியரின் எண்ணிக்கை சுமார் 64,000 ஆக இருந்தது. தற்போது உயர் கல்வி பயிலும் மாணவியர்களின் எண்ணிக்கை 2,14,574 ஆகும். இது தமிழகத்தில் மகளிர் உயர் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது.

**சுயநிதிக் கல்லூரிகள் தோற்றுவித்தல்**

3.4. வளர்ந்து வரும் கல்வி அனைவருக்கும் கிடைக்குமாறு செய்ய, அரசு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது. எனினும் நிதிநிலை நெருக்கடி காரணமாக அரசு தரப்பில் கல்லூரிகள் ஏற்படுத்த இயலாத நிலை ஏற்பட்டதால் தனியார் கல்வி நிறுவனங்கள் சுயநிதி அடிப்படையில் கல்லூரிகளைத் துவக்கிட அனுமதியளித்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 15 சுயநிதிக் கல்லூரிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. தற்போது இம்மாநிலத்தில் 247 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.



2001 ஆகஸ்ட் 27]

**கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்குதல்**

3.5. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிடமிருந்து அதிக அளவில் கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குவதென்பது உயர் கல்வித் துறையின் கொள்கை முடிவாகும். தன்னாட்சி உரிமம் பெற்ற கல்லூரிகள் தற்காலத் தேவைக்கேற்ப தாங்களாகவே உயர் கல்விக்கான பாடத் திட்டங்களை வகுத்துக் கொண்டும் கேள்வித்தாள் தயாரிக்கவும், தேர்வு நடத்தவும் முடிகிறது. இதில் கல்வி பயிலும் மாணவர்கள் வளர்ந்து வரும் கல்வித் தேவைக்கேற்ப புதிய பாடங்களைக் கற்க முடிகின்றது. இதனால் கல்வியின் தரம் உயர வாய்ப்பு இருக்கின்றது. மேலும் இத்தகைய தன்னாட்சி உரிமம் பெற்ற கல்லூரிகள் தற்போதுள்ள பாடப்பிரிவுகளுடன் அதிகப்படியான பட்டயப் படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. தன்னாட்சி நிலை பெறுவதன் மூலம் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிடமிருந்து கூடுதலாக உதவித் தொகை பெற இயலும்.

**தமிழ் வழியில் பயில்வோருக்கு உதவித் தொகை**

3.6. இளங்கலை/இளமறிவியல் பாடங்களை தமிழ் வழியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.400/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை தமிழ்வழிபாடு வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் அவர்களுடைய இனம், சாதி, மற்றும் பெற்றோர் ஊதியத்தைப் பொருட்படுத்தாமல் எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்கப்படுகிறது.

**கல்லூரிகளில் இணைய வசதி**

3.7. தகவல் தொழில் நுட்பவியல் [illegible]க்கு ஈடுகொடுக்கும் பொருட்டு அனைத்து அரசு கல்லூரிகளிலும் [illegible]ய வசதி படிப்படியாக செய்து கொடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. [illegible]னால் மாணவர்களுக்கு எல்லா துறைகளிலும் எளிதான முறையில் அணுகவும், பல்வேறு தகவல்களை துரிதமாக அறியவும் அதிக வசதி அளிக்க வாய்ப்பு உள்ளது. தற்போது இணைய வசதி 45 கல்லூரிகளில் உள்ளது. ஏனைய கல்லூரிகளிலும் 2001-2002ல் இணைய வசதி செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாநில ஆங்கில நிறுவனம்**

*3.8.* மாநில ஆங்கில நிறுவனம் கல்லூரிகளில் கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆங்கிலம் கற்பித்தலைச் செம்மைப்படுத்துவதில்தான் முதன்மையான கவனம் செலுத்தி வருகிறது. இந்தக் குறிக்கோளை அடைவதற்காக மாநில ஆங்கில நிறுவனம் பயன்பாட்டு ஆங்கில கற்பித்தல் குறித்து பல பணிமனைகளை நடத்தி வருகிறது. பொதுமக்கள் தொடர்பு சாதனங்களுக்கான ஆங்கிலம், மொழியாக்கம், மற்றும் அரசுப் போட்டித் தேர்வுகளுக்கான ஆங்கிலம் போன்றவற்றில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கி வருகிறது.

**உதவி பெறும் கல்லூரிகளில் மாணவர்களின் அத்தியாவசிய வசதிக்கான உதவித் தொகை**

*3.9.* அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு அத்தியாவசிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் உதவித் தொகை வழங்குகிறது. மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக சுழற்சி முறையில் ரூ.100 இலட்சம் மானியத் தொகை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உதவி பெறும் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு ஈடான அல்லது கூடுதல் தொகை நிர்வாகத்தினரால் செலவிடப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது.

**அரசுக் கல்லூரிகளில் வேலைவாய்ப்புள்ள புதிய பாடப் பிரிவுகளை சுயநிதி அடிப்படையில் தொடங்குதல்**

*3.10.* புதிதாக தொடங்கப்பட்டுள்ள சுயநிதிக் கல்லூரிகள் பெரும்பாலானவற்றில் வேலைவாய்ப்புள்ள பாடப்பிரிவுகள் மட்டுமே பயிற்றுவிக்கப்படுகின்றன. ஆனால், சுயநிதிக் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் அதிகப்படியான கட்டணத்தின் காரணமாக பல மாணவர்கள் இப்பாடப்பிரிவுகளில் சேர இயலாத நிலை உள்ளது. ஏழை மாணவர்களுக்கு உதவிட வேண்டுமென்ற சமுதாய நோக்கில் தற்போதுள்ள அரசுக் கல்லூரிகளில் பி.சி.ஏ., கணினி பயன்பாட்டுடன் இணைந்த வணிகவியல், பி.எஸ்சி., உயிர் வேதியியல், பி.சி.ஏ. காட்சி தொடர்பியல் போன்ற வேலைவாய்ப்புள்ள பாடப்பிரிவுகளை சுயநிதி அடிப்படையில் தொடங்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. இந்த சுயநிதி அடிப்படையிலான வேலைவாய்ப்புள்ள பாடப்பிரிவுகள் குறைந்த கட்டணத்தில் பயிற்றுவிக்கப்படுமாதலால், எளிய மற்றும் கிராமப்புற மாணவர்கள் பெருமளவில் பயனடைவர்.



**அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் வேலைவாய்ப்பு மையங்கள் ஏற்படுத்துதல்**

*3.11.* மாணவர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் வேலை வாய்ப்பு பெறுவதற்கு உதவிடும் வகையில் (i) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் வேலைவாய்ப்பு மையங்களை ஏற்படுத்த இந்த அரசு கருதியுள்ளது. கல்லூரியில் பணிபுரியும் மூத்த ஆசிரியர் ஒருவர் இம்மையத்தின் பொறுப்பில் இருப்பார். பல்வேறு தொழிற்சாலைகளும், வணிக நிறுவனங்களும், கல்லூரிகளில் வளர்க நேர்காணல்களை நடத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். இதன் மூலமாக மாணவர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் தகுந்த வேலையில் அமர்வதற்கான வாய்ப்புகள் உருவாகும். இந்த வேலைவாய்ப்பு மையங்கள் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதலும் வழங்கிடும்.

**அகில இந்திய பணிகள் மற்றும் மைய அரசுப் பணிகளில் சேருவதற்கான தேர்வு எழுதும் பெண்களுக்கு பயிற்சி மையங்களை அமைத்தல்**

*3.12.* தமிழ்நாட்டிலிருந்து அகில இந்திய பணிகள் மற்றும் மைய அரசு பணிகளில் சேரும் பொருட்டு தேர்வு எழுதும் மாணவிகளை ஊக்குவிப்பதற்காக பயிற்சி மையங்களை ஏற்படுத்த இந்த அரசு திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக சென்னை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் 2 பயிற்சி மையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. நாளடைவில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இத்தகைய பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். அகில இந்திய பணிகள் மற்றும் மைய அரசு பணிகளில் சேர விழையும் மாணவிகளுக்கு இப்பயிற்சி மையங்களில் நன்றாகத் திட்டமிடப்பட்ட முழுமையான பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் தமிழக மாணவிகள் அதிக அளவில் இப்பணிகளில் சேருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

**இளங்கலை மற்றும் இளம் அறிவியல் பாடப் பிரிவுகளில் அடிப்படை சுகாதார அறிவியல் மற்றும் மருத்துவம் தொடர்பான பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்**

*3.13.* தற்போதுள்ள இளங்கலை மற்றும் இளமறிவியல் பாடப்பிரிவுகளில் அடிப்படை சுகாதார அறிவியல் மற்றும் மருத்துவம் தொடர்பான பாடத்தை அறிமுகப்படுத்த இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இளங்கலை மற்றும் அறிவியல் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் எய்ட்ஸ்,

புற்றுநோய், ஹெப்படைடிஸ்-பி, காசநோய் போன்ற நோய்களின் அறிகுறிகளையும் அவற்றால் தாக்கப்படாது பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளையும் தெரிந்துகொள்வதற்கான அடிப்படை அறிவை அளிக்கும் விதத்தில் இப்பாடமுறை வடிவமைக்கப்படும். தற்போதுள்ள இளங்கலை மற்றும் இளமறிவியல் பாடப்பிரிவுகளில் அதற்கான பாடத் திட்டத்தையும் நடைமுறையையும் வடிவமைக்குமாறு தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களும் மற்றும் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றமும் கேட்டுக்கொள்ளப்படும்.

**ஆசிரியர்கள் தரமேம்பாட்டுத் திட்டம்**

*3.14.* அரசு கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஆராய்ச்சி படிப்பை மேம்படுத்திட, தற்கால போக்கின்படி ஆசிரியர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள பல்கலைக்கழக நிதியுதவியுடன் கல்லூரி ஆசிரியர்கள் மேற்கண்ட ஆராய்ச்சிப் படிப்பில் சேர்ந்து பயன்பெற ஆண்டுதோறும் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகள் அளித்தல்**

*3.15.* இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளுக்கான பாடத்திட்டங்கள் வேகமாக மாறிவருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் புதிய வேலைவாய்ப்புள்ள மற்றும் தொழிற் சார்ந்த பாடப்பிரிவுகள் கல்லூரிகளில் தொடங்கப்பட்டு வருகின்றன. இதேபோன்ற தற்போது நடைமுறையிலுள்ள மரபுசார் பாடப்பிரிவுகள் மாற்றி அமைக்கப்பட்டு வேலைவாய்ப்புள்ள பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு தேவைகளுக்கேற்ப வரும் மாற்றத்தின் காரணமாக தற்போது பணியிலுள்ள ஆசிரியர்கள் தங்களது அறிவாற்றலை புதுப்பித்துக் கொள்வது அவசியமாகிறது. எனவே தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் உதவியுடன் தற்போது பணியிலுள்ள கல்லூரி ஆசிரியர்களுக்கு புதிய பாடத் திட்டங்களை நடத்த ஏதுவாக புத்தாக்க மற்றும் புத்தறிவுப் பயிற்சிகளை நடத்த இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இப்பயிற்சிகளை நடத்துவதற்கான திட்டத்தை மாநிலத்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களைக் கலந்தாலோசித்து தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் வடிவமைக்கும்.

**தேசிய தர மதிப்பீடு மற்றும் தகுதி ஏற்றச் சான்றளிப்புக் குழுவின் சான்று**

*3.16.* தேசிய தர மதிப்பீடு மற்றும் தகுதி ஏற்றச் சான்றளிப்புக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினால் கல்வி நிறுவனங்கள் மற்றும்



கல்வி சார்ந்த அமைப்புகள் ஆகியவற்றின் தர நிர்ணயத்துக்கும், தர மேம்பாட்டுக்கும் வழி வகுப்பதற்காக 1994 ல் ஏற்படுத்தப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இவ்வமைப்பு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் தர நிர்ணயத்துக்கான தகுதிகளை மதிப்பீடு செய்து ஒவ்வொன்றுக்கும் புள்ளிகள் அளித்து தர நிர்ணயம் செய்கிறது. தற்போது, 21 அரசு கல்லூரிகளுக்கும், 25 நிதியுதவி பெறும் கல்லூரிகளுக்கும் சான்றளிப்புக் குழு தர மதிப்பீடு மற்றும் தகுதி ஏற்றச் சான்றிதழை வழங்கியுள்ளது.

**தொழில் வாய்ப்புக் கல்வி**

*3.17.* வேலைவாய்ப்பு பெறும் பட்டப் படிப்பு கல்வித் திட்டத்தை 36 பாடப்பிரிவுகளில் பல்கலைக்கழக நிதி நல்கை குழு 1994-95 ஆண்டு முதல் துவக்கியது. அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் தொழில் வாய்ப்புக் கல்வியினை பல்கலைக்கழக நிதி நல்கை குழு உதவியுடன் அறிமுகப்படுத்துவதற்கு அரசு முனைந்துள்ளது.

**ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

*3.18.* அரசு கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களில் குறிப்பாக கிராமப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்கள் மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக பாட நேரம் முடிந்த பிறகும், வார இறுதி நாட்களிலும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்க்கு முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவச கல்வியளித்தல்**

*3.19.* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்க்கு அரசு கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி பயில ஒரு புதுமையான திட்டம் இக்கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

**அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நேர்காணல் மூலம் பொதுப் பணிமாற்றம் வழங்குதல்**

*3.20.* அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் விரிவுரையாளர்கள் நேர்காணல் மூலம் பொது பணிமாறுதல் வழங்கும் திட்டத்திற்கான நெறிமுறைகளை அரசு வெளியிட்டது. இதன்படி சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை ஆகிய இடங்களில் நேர்காணல் நடத்தப்பட்டது. 24 துறைகளைச் சார்ந்த 530 அரசுக் கல்லூரி விரிவுரையாளர்கள் பங்கேற்றனர். இதில் 237 விரிவுரையாளர்கள் இந்நேர்காணல் மூலம் இந்த ஆண்டில் பயனடைந்துள்ளனர்.

**வேலைவாய்ப்பு ஆலோசனை மையம்**

*3.21.* அரசுக் கல்லூரிகளிலும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் வேலைவாய்ப்பு ஆலோசனை மையங்களை அமைத்து மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பற்றியும், சுயதொழில் வாய்ப்புகள் பற்றியும், அறிவுரை நல்கப்படும். வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தனியார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், வங்கிகள், ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு, வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை இம்மையம் மாணவர்களுக்கு அளிக்கும்.

**பாடத்திட்டம் சாராத செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல்**

*3.22.* பாடத்திட்டம் சாராத நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படைத் திட்டம் ஆகியவை சேர்ந்து ஆக்கபூர்வ செயல்களை மேற்கொள்ள மாணவர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கப்படுகிறது.



**4. பல்கலைக்கழகக் கல்வி**

உயர் கல்வித் துறையின் ஆதரவின்கீழ் கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:-

1. சென்னை பல்கலைக்கழகம்
2. அண்ணாமலை பல்கலைக்கழகம்
3. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
4. அண்ணா பல்கலைக்கழகம்
5. பாரதியார் பல்கலைக்கழகம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
8. அழகப்பா பல்கலைக்கழகம்
9. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10. பெரியார் பல்கலைக்கழகம்
11. அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்.

இப்பல்கலைக்கழகங்கள் பின்வரும் மூன்று வகைகளைச் சார்ந்தவையாகும்:-

**இணைப்பு உரிமை வகை: (Affiliating type)**

(1) சென்னை பல்கலைக்கழகம்

(2) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(3) பாரதியார் பல்கலைக்கழகம்

(4) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(5) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

(6) பெரியார் பல்கலைக்கழகம்

**ஒருமை வகை: (Unitary type)**

(7) அண்ணாமலை பல்கலைக்கழகம்

(8) அண்ணா பல்கலைக்கழகம்

(9) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

(10) அழகப்பா பல்கலைக்கழகம்

**நிகர்நிலை வகை: (Deemed type )**

(11) அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்

## சென்னை பல்கலைக்கழகம்

மிகப் பழமை வாய்ந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றான சென்னைப் பல்கலைக்கழகம், 1857 ஆம் ஆண்டு சட்டத்தினால் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் இலண்டன் பல்கலைக்கழகத்தினை முன்மாதிரியாகக் கொண்டு அமையப் பெற்றது.

4.2. சமுதாயத்திற்குத் தேவையான விழுமங்களை அடிப்படையாகக் கொண்ட உயர் கல்வி அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட பாடப் பிரிவுகளை 2001-2002 ஆண்டுகளில் அறிமுகப்படுத்த முனைந்துள்ளது.

**பிரிவு-I - அடித்தளப் பாடப்பிரிவுகள்**

4.3. பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைகளின்படி. அ) கணினியியல் அடிப்படைகள். ஆ) மனித உரிமைகள் மற்றும் மனித உறவுகள் கல்வி. இ) சுற்றுச் சூழல் கல்வி மற்றும் ஈ) சட்டம் பற்றிய அடிப்படை அறிவு போன்ற பாடப் பிரிவுகளை பல்கலைக்கழகத்தின் அனைத்து பட்டப் படிப்புகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2001-2002 முதல் இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளிலும். இவை அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

**பிரிவு-II - முறைப்படியான பாடப் பிரிவுகள் (Regular Stream)**

4.4. ஒரு இளநிலைப் பட்டப் படிப்பும், ஆறு முதுநிலைப் பட்டப் படிப்புகளும் வேலைவாய்ப்பு அளிக்கத்தக்க வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :-



1. பி.எஸ்.ஸி. தாவர உயிரியல் மற்றும் தாவர உயிர் தொழில் நுட்பவியல்.
2. எம்.எஸ்.சி. மூலக்கூறு உயிரியல்.
3. எம்.எஸ்.சி. உயிர் தொழில் நுட்பவியல்.
4. எம்.எஸ்.சி. உயிர் மருத்துவ மரபியல்.
5. எம்.பில். பண்டைய வரலாறு மற்றும் தொல்பொருளியல்.
6. எம்.பில். பொருளாதார அளவையியல். (Econometrics)
7. எம்.பில். தொழில் வழி உளவியல்.

**பிரிவு-II - ஆ - புதிய பாடப் பிரிவுகள் அறிமுகம்**

4.5. 29 புதிய பாடப் பிரிவுகள், இணைக்கப் பெற்ற கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத் துறைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4.6. பல்கலைக்கழகத் துறைகளிலும், இணைக்கப்பெற்ற கல்லூரிகளிலும் புதிய படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு, வேலைவாய்ப்புகளுக்கேற்றவாறு 17 சான்றிதழ் படிப்புகளும், 13 பட்டயப் படிப்புகளும், 3 முதுநிலைப் பட்டப் படிப்புகளும் 2001-2002 ஆம் கல்வியாண்டிலிருந்து அஞ்சல் வழிக் கல்வி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

4.7. ஏற்கெனவே பணியில் இருப்பவர்களின் திறனை மேம்படுத்த சான்றிதழ்/பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தங்கள் துறைகளில் அனுபவமிக்கோர் தாங்கள் பணிபுரியும் இடத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து தங்களது களப்பணி அனுபவங்களை பயிற்றுவிப்பதற்கு உரிய ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இப்படிப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

4.8. தகவல் தொழில் நுட்பவியல் யுகத்திற்கேற்றவாறு பல்கலைக்கழகத் துறைகளிலும், அஞ்சல் வழிக் கல்வி மையத்திலும் இணையத்தின் வழியே பட்டயப் படிப்புகள் கற்க 2001-2002 ஆம் கல்வியாண்டிலிருந்து வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.9. தேசிய கல்வித் திட்டம் மற்றும் மதிப்பீடு (NIEPA) நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து மனித இயல்புகள் மற்றும் வாழ்வு மேம்பாடு குறித்த பட்டயப் படிப்பு மற்றும் விருப்பக் கல்விக்கான பாடத் திட்டங்கள்

உருவாக்குவதற்கென சென்னைப் பல்கலைக்கழகத்தை பல்கலைக்கழக மானியக் குழு தேர்ந்தெடுத்துள்ளது.

4.10. இப்பல்கலைக்கழகத்திற்கு தேசிய மதிப்பீடு மற்றும் ஒப்பளிப்புக் குழு 5 நட்சத்திர தகுதியை ஆகஸ்ட் 2000ல் வழங்கியுள்ளது. 'உயர் தனிச் சிறப்பிற்குரிய பல்கலைக்கழகம்' என்ற தகுதியினை சென்னைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

## அண்ணாமலை பல்கலைக்கழகம்

4.11. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் தோற்றத்திற்கும் சீர்மிகு வளர்ச்சிக்கும் செட்டிநாட்டு அரசர் பெருந்தகை டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் தொலை நோக்கும், நுண்மதியும், பொதுநலம் பேணும் தூய நற்சிந்தனையும், கருணை உள்ளமுமே மூல காரணங்களாகும். 1929ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, நிறைவான உள்ளுறை வசதிகளுடன், உயர் கல்வியின் 52 பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்த உடனுறைப் பல்கலைக்கழகமாக ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் 1222 ஆசிரியர்களையும், 2844 ஆசிரியரல்லாத பணியாளர்களையும், 10668 மாணவர்களையும் கொண்டு வளர்ந்தோங்கி வருகிறது. பல்வேறு பாடத் திட்டங்களில் மாணவர்களே அவர்களுக்குத் தேவையான விருப்பமான பாடங்களைத் தேர்வு செய்து பயில்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அஞ்சல்வழிக் கல்வித் துறையில், மாணவர்கள் 4 ஆண்டுகளில் இரண்டு இளநிலைப் பட்டங்கள் (அவற்றுள் கணிதத் துறை குறித்த ஒரு பட்டத்துடன்) பெற வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு கணினி சம்பந்தப்பட்ட பாடங்களுக்கு குறுகிய கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

4.12. இந்தியப் பல்கலைக்கழகங்கள், அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் தொடர்பினை வலுப்படுத்துவதால், கல்வியின் பயன் மேலும் சிறப்புப் பெறுகின்றது. அண்ணாமலை பல்கலைக்கழகம், கீழ்க்காணும் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஆசிரியர் மாற்றுப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு கொள்கை வழி (M.O.U.) கையொப்பமிடப் பட்டுள்ளது. அவையாவன:- (i) பெல் ஸ்டேட் பல்கலைக்கழகம் (ii) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம், பால்டிமோர், (iii) சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், (iv) ஜப்பான் ப்யூச்சி பல்கலைக்கழகம்.



4.13. உயர் கல்வித் துறையில், ஆராய்ச்சிப் பணிகள் முக்கியமானவையாகும். குறிப்பாக, இப்பல்கலைக்கழகத்தில் கடல் வாழ் உயிரியல் உயர் ஆய்வு மையத்தில் கடல் அறிவியல் பற்றி பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவின் கிழக்குக் கடற்கரை மற்றும் அந்தமான் நிகோபர் தீவுகள் இவற்றில் அடங்கும். இவ்வாராய்ச்சிக்கான நிதி உதவியை கடல் வளர்ச்சிக் கழகம், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மற்றும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு ஆகியவை வழங்கி வருகின்றன. இப்பல்கலைக்கழகத்திற்கு தேசிய மதிப்பீடு மற்றும் ஒப்பளிப்புக் குழு நான்கு நட்சத்திர தகுதியை வழங்கியுள்ளது.

## மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

4.14. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் 1966ல் உருவானது. முதுநிலை ஆய்வு மற்றும் கற்பித்தல் துறைகள் இபபல்கலைக்கழகத்தில் உள்ளன. அஞ்சல்வழிக் கல்வி மையமும் இங்கு உள்ளது. இப்பல்கலைக்கழகத்துடன் 121 கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 10 கல்லூரிகள் தன்னாட்சி பெற்றவை. தேசிய தர மதிப்பீடு மற்றும் தகுதி ஏற்றச் சான்றளிப்புக் குழுவின் (NAAC) ஏற்புக்கு முதன்முதலாக இப்பல்கலைக்கழகம்தான் முயன்றது. அமெரிக்கன் கவுன்சில் ஒருங்கிணைந்து நடத்தும் "ஆயிரம் ஆண்டில் இந்தியா" திட்டத்தில் பங்கு பெற்ற ஒரே இந்திய பல்கலைக்கழகம் இப்பல்கலைக்கழகம்தான். உயிரியலில் "சாந்தி ஸ்வரூப் பட்நாகர்" பரிசு பெற்ற நால்வரை இப்பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. இப்பல்கலைக்கழக ஆசிரியர் 6 பேர் பல்வேறு பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களாக பணியாற்றியுள்ளனர்.

4.15. தாவர மூலக்கூறு உயிரியல் மையம், உயிரியல் தகவல் தொடர்பியல் மையம், மரபியல் தொழில் நுட்ப மையம் மற்றும் நீலப் பச்சை பாசி நுண்ணுயிர் உர மையம் ஆகியவற்றை இப்பல்கலைக்கழகத்தில் இந்திய அரசின் உயிரியல் தொழில் நுட்பத் துறை தொடங்கியுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்களை ஈர்ப்பதற்கென 11 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு (ELCOT) இப்பல்கலைக்கழகம் 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் அளித்துள்ளது. தொழில் நுட்பவியல் பூங்கா ஒன்றை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் பல்கலைக்கழகத்தில் அமைக்கும். இதனால், ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்பெறுவர்.

**கற்பித்தலை நவீனமயமாக்குதல்**

4.16. தகவல் தொடர்பு தொழில் நுட்பம் அனைத்துத் துறை சார்ந்த கற்பித்தலிலும், முக்கிய பங்கு வகிக்க உள்ளது. இத்தொழில் நுட்பத்தை கற்பித்தலில் அறிமுகப்படுத்த வேண்டி 64 கே.பி.பி.எஸ் திறன் கொண்ட இணையம் ஒன்றை பல்கலைக்கழகம் அமைத்துள்ளது. முதற்கட்டமாக மாணவர், ஆசிரியர் பயன்படுத்தும்வகையில் நூலகத்தில் இணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வளாகம் முழுவதுமான இணையமும் அமைக்கப்பட்டு வருகிறது. கணினி மையத்தையும், அஞ்சல் வழிக் கல்வி மையத்தையும் இணைக்கும் பணி நடந்து வருகிறது. வளாகம் முழுவதும் பைபர் ஆப்டிக் நெட்வொர்க் அமைக்கப்பட்டு வருகிறது. இணைய வழியான கற்பித்தல் இப்பல்கலைக்கழகத்தின் முக்கியமானதொரு குறிக்கோளாக உள்ளது.

**கற்றல் மற்றும் கற்பித்தல் மையம்**

4.17. நூல்கள் மற்றும் இதழ்களை இணையம் வழியாக அணுகி நூல்நிலையத்தை ஒரு கற்றல் மையமாக பல்கலைக்கழகம் மாற்றி வருகிறது. தரம் வாய்ந்த கல்வி அளிக்க வேண்டி வீடியோ கான்பரன்சிங் வசதிகள் வகுப்பறைகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

4.18. ஆய்வு மற்றும் கற்பித்தலை மேம்படுத்த துறைகளுக் கிடையேயான மையங்களை உருவாக்க பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த ஆய்வுகள் நடத்த ஏதுவாக உள்கட்டமைப்பு மற்றும் கருவிகளை இம்மையங்கள் பெற்றிருக்கும்.

**பாரதியார் பல்கலைக்கழகம்**

4.19. தேசிய கவியான சுப்பிரமணிய பாரதியார் பெயரில் 1982 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பாரதியின் குறிக்கோள்களில் ஒன்றாகிய 'பயிற்று பல கல்வி தந்து இந்தப்பாரை உயர்த்திடல் வேண்டும்' என்ற கொள்கையினைக் கற்பிக்கும் கோயிலாக பல்கலைக்கழகம் விளங்குகிறது. இப்பல்கலைக்கழகம் அறிவியல் தொழில் நுட்பம், சமூகம், மற்றும் பொருளாதாரம், மனிதவளம், மற்றும் இளைஞர்களிடையே காணப்படும் படைப்புத் திறன் போன்றவற்றை நமது நாட்டின் சமத்துவம் மற்றும் மதச்சார்பின்மை போன்ற கூறுகளைத் தேசிய வளர்ச்சிக்கு மேம்படுத்தும் வகையில் பங்களித்து வருகிறது.



4.20. இப்பல்கலைக்கழகம் பல்வேறு வகையான கல்வித் திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக சமகாலச் சிக்கல்களை மையமாகக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆய்வுகள் போன்றவற்றை கருத்தரங்குகள், மாநாடுகள், பணிமனைகள் வாயிலாக வழங்கப் படுகிறது. கல்லூரி ஆசிரியர் பணி நியமனத்திற்கான மாநில அளவு தகுதித் தேர்வினை 2001-2002 முதல் 2002-2003 ஆம் ஆண்டு வரையில் நடத்துவதற்கு அரசு பாரதியார் பல்கலைக்கழகத்தினை மைய அமைப்பாக ( Nodal Agency ) நியமித்துள்ளது.

**குறுகிய கால இலக்கு**

4.21. சமுதாய உடனடி தேவைக்கு. மனித சக்தி வளர்ச்சிக்கான கீழ்கண்ட பாடப்பிரிவுகளை இப்பல்கலைக்கழகம் தொடங்கிட திட்டமிட்டுள்ளது :-

1. உயிரி தகவல் தொழில் நுட்ப முதுகலைப் பட்டப்படிப்பு,
2. நவீன தகவல் துறை முதுகலைப் பட்டப்படிப்பு,
3. உயிரி தொழில் நுட்ப முதுகலைப் பட்டப்படிப்பு,
4. நிதி மற்றும் கணினி பயன்பாடு முதுகலைப் பட்டப்படிப்பு,
5. கல்வியியல் தகவல் முதுகலைப் பட்டப்படிப்பு.

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

4.22. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் இப்பல்கலைக்கழகத்தினை 1982ல் தமிழக அரசு நிறுவியது. கற்பித்தல், ஆய்வு, விரிவாக்க செயல்பாடுகள் ஆகியவற்றினை தனி துறைகள் மற்றும் சிறப்பு மையங்கள் இணைந்துள்ள கல்லூரிகள் வழியாக இப்பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் இணைப்பில் 112 கல்லூரிகள் உள்ளன. அவற்றுள் 9 தன்னாட்சிக் கல்லூரிகளும் அடங்கும். இவை தவிர 13 அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களும் உள்ளன. மேற்சொன்ன கல்லூரிகளுள் 74 கலை அறிவியல் கல்லூரிகள், 19 பொறியியற் கல்லூரிகள், 1 துறை நிறுவனம், 3 நுண்கலை கல்லூரிகள், 2 கல்வியியல் கல்லூரிகளும் அடங்கும். கிராமப்புறங்கள் நிறைந்த மைய தமிழ் நாட்டின் வறிய மாணவர்களின் நலன் கருதி, பொறியியல் தொழில் நுட்ப நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வி ஒரு பகல் கனவாகவே இருந்து வந்துள்ள நிலையில், இப்பகுதி

மக்களுக்கு பொறியியல் தொழில் நுட்ப நிறுவனம் ஒரு வரப் பிரசாதமாகும். தகவல் தொழில் நுட்பவியல், உயிர் நுட்பவியல், பெட்ரோகெமிக்கல், மருந்தியல் ஆகிய பாடப்பிரிவுகளில் பி.டெக் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. உயர் தொழில் நுட்பம் கொண்ட பாடப் பிரிவுகளில் முதுநிலை மற்றும் ஆய்வுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

4.23. திருச்சிராப்பள்ளி திருவெறும்பூரிலுள்ள பாரத மிகுமின் நிறுவன, வளாகத்தில் அமைந்துள்ள பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் உயர்தரக் கல்வி அளித்து வருகிறது. மேலும், இராணுவப் பணியில் உள்ளவர்களுக்காக சிறப்புப் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. தாவரவியல், விலங்கியல், நுண்ணுயிரியல், உயிர் தொழில் நுட்பவியல், வேதியியல், இயற்பியல், கணிதம், புவியியல், மண்ணியல், தொலையுணர்வு ஆகியவற்றில் முதுநிலைப் படிப்பும், தமிழ், சமூகவியல், சமூகப் பணி, பொருளாதாரம், வரலாறு, ஆங்கிலம், கல்வியியல், கிராமப்புறவியல் ஆகியவற்றில் முதுநிலைப் படிப்பும் அளிக்கப்படுகின்றன.

**வேலைவாய்ப்புக் கல்வி**

1. எம்.எஸ்., தகவல் இயல் மேலாண்மை.
2. எம்.எஸ்சி., மென்பொருள் தொழில் நுட்பவியல்.
3. எம்.எஸ்., சைபர் டெக்னாலஜி.
4. எம்.எஸ்., மின்வணிகம் மற்றும் பயன்பாடு.

4.24. தொழில் நுட்பக் கல்லூரிகளில் வேலை வாய்ப்பு மிகுந்த 5 ஆண்டு கால ஒருங்கிணைந்த கீழ்க்கண்ட படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன :-

1. எம்.எஸ்சி., மென்பொருள் தொழில் நுட்பம்
2. எம்.எஸ்சி., மல்டி மீடியா தொழில் நுட்பம்
3. எம்.எஸ்., தகவல் தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை



## அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.25. 1984ல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் கல்வியை மேம்படுத்துதல், மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிரியல் மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புகள் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டன.

4.26. முனைவர் பட்டப்படிப்பு, இளநிலை ஆய்வுப்படிப்பு, முதுகலைப் பட்டவகுப்பு, இளங்கலைப் பட்டவகுப்பு என்று அனைத்து நிலைப் பாடத்திட்டங்களும் ஆய்வு மற்றும் விரிவாக்கப் பணிகளும் மகளிரியலை முதன்மைப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மகளிரியலை மையப்படுத்திய ஒரே பல்கலைக்கழகம் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மரபு சார்ந்து அறிவுத்துறைகளில் மகளிர் பங்களிப்பு பற்றிப் பரிசீலிக்கப்படாத நிலையினை மாற்றி, அத்துறைகளில் கோட்பாடுகளைப் பரிசீலித்து, மகளிர் நோக்கினை உருவாக்கி பயனுறும் விதத்தில் செயலாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

4.27. பெண்ணின் வாழ்வு நிலையை உயர்த்தும்படி பிறரைச் சார்ந்த நிலையினின்று விடுபட்டு தன்னிறைவு நிலையை அடைவதற்கு உதவும் வகையாக பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட விரிவாக்கப் பணிகளைச் செயற்படுத்தி வருகிறது:-

1. குடிசைப் பகுதிகளைத் தத்தெடுத்தல் (மையம்: கல்வி, நலவாழ்வு, குறை நீக்குக் கல்வி, பொருளியல் தற்சார்பு முதலியன),

2. சுயதொழில் பயிற்சி திட்டங்கள் (சமூகப் பொருளாதாரத் தளத்தில் அடிமட்டத்திலுள்ள மகளிருக்கான மரபோடு ஒட்டிய தொழிற் பயிற்சிகளும், நவீனத் தொழில் நுட்பங்களும்),

3. கருத்தரங்குகள், பணிமனைகள், பயிலரங்குகள் (குறிப்பிடத்தக்க கருத்துக்கள்: தலைமைப்பணி, நிர்வாகவியல், மகளிர் மேம்பாடு, மகளிரியல் ஆய்வு முறைகள், முறைசாராக் கல்வி முதலியன)

4. விழிப்புணர்வுத் திட்டங்கள் (மகளிர் உரிமை, மகப்பேறு உடல் நலம், தொடர்பு சாதனத் துறை., மகளிர்க்கு எதிரான வன்முறை போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.),

### ஆசிரியர் கல்வி

*4.28.* பாடத்திட்ட உருவாக்கம், கல்வியியல் நிர்வாகம், கல்வியியல் தொழில் நுட்பம், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நல்கல், பங்களிப்புப் பரிசீலனை போன்றவற்றில் பல்வேறு நிலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி நல்கும் வகையில் சிறப்புப் பாடவகுப்புகளும் கல்வித் துறையால் நடத்தப்படுகின்றன.

### அழகப்பா பல்கலைக்கழகம்

*4.29.* காரைக்குடியில் தலைசிறந்த நிறுவனமாக புகழ் பெற்று விளங்கும் அழகப்பா பல்கலைக்கழகம் மிகச் சிறந்த கொடையாளரான டாக்டர் ஆர்.எம்.அழகப்ப செட்டியார் அவர்களின் கனவு நினைவாகும் வகையில் உருவாக்கப்பெற்றது. தமிழகத்தின் மிகச்சிறந்த கல்விக்கூடங்களில் ஒன்றாக மதிக்கும் அளவிற்கு இப்பல்கலைக்கழகம் வளர்ந்து வருகிறது. *1985* மே திங்களில் தமிழக அரசின் சிறப்புச் சட்ட விதியால் இப்பல்கலைக்கழகம் தோற்றம் பெற்றது.

*4.30.* மைய அரசின் உயிரித் தொழில் நுட்பத்துறையின் உதவியுடன், அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரி தொழில் நுட்பத்துறை ஒன்றினை அமைத்து *2001-2002* ஆம் ஆண்டு முதல் உயிரி தொழில்நுட்பத்தில் முதுகலை மற்றும் ஆய்வு வகுப்புகளைத் தொடங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

• *4.31.* அழகப்பா பல்கலைக்கழகம் தொழிலக கூட்டுத் திட்டத்தின் கீழ் சென்னையில் உள்ள கடலாண்மைக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் (Academy of Maritime Education and Training) இணைந்து வெளி வளாகத்திட்டத்தின் கீழ் (Off-Campus Programme) கப்பல் மற்றும் துறைமுக மேலாண்மையியலில் முதுகலை பாடத்தினை (M.S. Shipping and Port Management) *2001-2002* முதல் வழங்க இருக்கிறது.

*4.32.* மேலும் இப்பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளிலும் பயிலும் மாணவர்கள் கூடுதலாக கணினி சம்மந்தப்பட்ட பாடங்களை படித்து தகவல் தொழில்நுட்பத்துறையில் பட்டயச் சான்றிதழ் (Diploma in Information Technology) பெறவும், மேலும் ஓராண்டு கூடுதலாக படித்து முதுகலைப் பட்டம் (M.S. Information Technology) பெறவும் *2001-2002* ஆம் கல்வியாண்டு முதல் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.



*4.33.* தொலைதூரக் கல்வி இயக்கத்தின் செயல்பாட்டினை விரிவுபடுத்தி கணிப்பாணியலில் பல்வேறு நிலைகளில் சான்றிதழ் பட்டயம், பட்ட, பட்ட மேற்படிப்பு பாடத் திட்டத்தினை அளித்து சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் பயன் பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இளநிலைப் பட்ட வகுப்புகள் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் மூலமாகப் பயில வாய்ப்பளிக்கப்படுகிறது. இரட்டைப் பட்ட முறையில் தொலைதூரக் கல்வியில் இளங்கலை பயிலும் மாணவர்கள் மேலும் ஓராண்டு படித்து கணினித் துறையில் இளங்கலைப்பட்டம் பெறவும் *2001-2002* ஆம் கல்வியாண்டில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

*4.34.* இப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட பத்தாண்டுகளுக்குள் சிறந்த பல்கலைக்கழகமாக வளர்ந்துள்ளது.

*4.35.* கல்வி, வேலைவாய்ப்பு அளிப்பதற்காக "சமுதாய கல்லூரிகள்" என்ற புதிய அமைப்பை உருவாக்குவதில் இப்பல்கலைக்கழகம் முன்னோடியாக உள்ளது.

### தகவல் தொழில் நுட்ப மையம்

*4.36.* கிராமப்புற இளைஞர்களை தகவல் தொழில் நுட்பவியல் துறைக்குள் கொணர வேண்டி இம்மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. எம்.எஸ்.தகவல் தொடர்பியல், மின்வணிகம், எம்.ஐ.டி., போன்ற படிப்புகளை இம்மையங்கள் தன்னகத்தே கொண்டுள்ளன.

### மனோ கல்லூரிகள்

*4.37.* மனோ கல்லூரிகள் என்ற புதிய கல்லூரி முறையை ஏற்படுத்தி கற்பித்தலில் இப்பல்கலைக்கழகம் முன்னணியில் உள்ளது. இக்கல்லூரிகள் இதர கல்லூரிகளிலிருந்து மாறுபட்டவை. கிராமப்புற சிறுவர், சிறுமியர்க்கு அறிவு புகட்ட வேண்டி இக்கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### சிறைக் கைதிகளுக்கு சிறப்புக் கல்வி

*4.38.* சிறைக் கைதிகளுக்கு சிறப்புக் கல்வி அளித்து கல்வித் துறையில் தனக்கென ஒரு புதிய பாதையினை இப்பல்கலைக் கழகம் வகுத்துள்ளது. கல்வியின் வழியாக உள்ளத்தைப் பண்படுத்துதலே இதன் நோக்கமாகும். தமிழ்நாடு மையச் சிறைக் கைதிகளுக்காக சிறப்பு கல்வித் திட்டங்கள்

செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் சிறைக் கைதிகளின் உற்சாக வரவேற்பை பெற்றுள்ளது.

## ஆய்வு

4.39. ஒரு பல்கலைக்கழகம் செயல்படுவதற்கு ஆய்வு இன்றியமையாத ஒன்றாகும். புதிய சிந்தனை உருவாக்க முனையும் உள்ளங்களுக்கு உதவும் நடவடிக்கை ஆய்வாகும். பி.எச்டி., மற்றும் எம்பில்., பட்டம் பெற்றோரின் எண்ணிக்கையும், இப்பட்டங்களுக்காக பதிவு செய்துள்ளோர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

## பெரியார் பல்கலைக்கழகம்

4.40. மாபெரும் சமூக புரட்சியாளர் தந்தை பெரியார் திரு. ஈ.வெ. ராமசாமி அவர்களின் நினைவாக 'பெரியார் பல்கலைக்கழகம்' தொடங்கப்பட்டது. 'கல்வியால் விளையும் உலகு' என்பது இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாகும். கல்வியின் வழியாக அனைவரையும் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்பதே இதன் பொருள். நாட்டின் தொழில் நுட்ப அறிவியல், சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான அறிவாற்றல், புதிய சிந்தனைகள், புதிய திறன்களை இளைஞர்களிடம் உருவாக்க பல்கலைக்கழகம் பாடுபடுகிறது.

4.41. பொருத்தமான கற்பித்தல் முறை, பயிற்சி, ஆய்வு மற்றும் கருத்தரங்கு ஆகியவற்றின் வழியே இன்று மனித வளம் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் மற்றும் நாட்டின் தேவைகள் பற்றிய புரிந்துணர்வு ஏற்படும் வகையில் பாடத்திட்டம் உருவாக்கப்படுகிறது.

4.42. மனிதவள மேம்பாடு மற்றும் அறிவு மேம்பாடு போன்ற உடனடி சமூகத் தேவைகளுக்கேற்ப செயல் திட்டங்களை வகுத்தல் இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

4.43. இதற்கான செயற்திட்டங்கள் பின்வருமாறு :-

1. பாடத் திட்டத்தை இன்றைய நிலைக்கேற்ப அமைத்தல் மற்றும் மறு ஆய்வு செய்து கல்வித் திட்டத்தை ஒருங்கிணைத்தல்,

2. பிற பல்கலைக்கழகங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருடன் தொடர்பு கொண்டு கற்பித்தலையும், நடைமுறைத் திறமைகளையும் ஒருங்கிணைத்தல்,



3. சமூக பொருளாதார நீதி, நாட்டுப் பற்று, அறிவியல் உணர்வு, பரந்த நோக்கு, சகோதரத்துவம், அன்பு மற்றும் அமைதி ஆகியவற்றை உருவாக்குதல்,

4. கூர்ந்த அறிவாற்றல் கொண்டவர்களிடையே புதிய கருத்துக்கள் உருவாக ஏதுவான வாய்ப்பளித்தல்,

5. தொழில் துறை, வேளாண்மை, கிராம வளர்ச்சி ஆகியவற்றில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில், தொழில் நுட்பம் மற்றும் பயன்பாட்டு அறிவியல், சமூகவியல் ஆகிய துறைகளில் ஆய்வு செய்தல்,

6. சமூகத்தின் பலபிரிவினர்க்கும் அறிவினைப் புகட்டுதல்.

## பல்கலைக்கழகங்களில் புதிய பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல்

4.44. பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகங்கள் பல புதிய பாடப்பிரிவுகளைத் துவங்கியுள்ளன. அவை, எம்.எஸ்சி., (உயிரி தகவல் இயல்), எம்.எஸ்சி., (உயர் தகவல் தொழில் நுட்பம் ), எம்.எஸ்சி., (உயிர் தொழில் நுட்பவியல்), எம்.எஸ்சி., (நிதி மற்றும் கணினி அறிவியல்), எம்.எஸ்., (சைபர் டெக்னாலஜி), எம்.எஸ்., (தகவல் அறிவியல் மற்றும் மேலாண்மை), எம்.எஸ்சி. (மென்பொருள் தொழில் நுட்பம் மற்றும் எம்.எஸ்சி. (மல்டி மீடியா டெக்னாலஜி) ஆகும். இப்பாடப் பிரிவுகள் மிகவும் பயனுள்ளதாகவும், பிரபலமானதாகவும் விளங்குகின்றன. வரும் கல்வியாண்டில், பிற பல்கலைக்கழகங்கள் ஒன்றையொன்று முன்கூட்டியே கலந்து கொண்டு இதுபோன்ற பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படும். வரும் காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு பொருத்தமான பாடப் பிரிவுகளை தேர்வு செய்யுமாறு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் கேட்டுக்கொள்ளப்படும்.

## பல்கலைக்கழக தேர்வு முடிவுகளை உரிய நேரத்தில் வெளியிடுதல்

4.45. விடைத்தாள்கள் திருத்துவதை அந்தந்த பருவம் முடியும் முன்னரே முடித்து அடுத்த பருவம் தொடங்கும் முன்னர் முடிவுகளை வெளியிடும்படி பல்கலைக்கழகங்கள் கேட்டுக்கொள்ளப்படும். இம்முறையை பின்பற்றுவதால், அடுத்த பருவத்தில் பாடம் நடத்தவேண்டிய வேளையில் விடைத்தாள்கள் திருத்த ஆசிரியர்களை அனுப்ப வேண்டியதில்லை. பல்கலைக் கழகங்களோடு கலந்து கொண்டு இதனை நடைமுறைப்படுத்த ஆய்வு செய்யுமாறு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் கேட்டுக்கொள்ளப்படும்.

[2001 ஆகஸ்ட் 27

### பல்கலைக்கழகங்களில் தொலைதூரக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்

4.46. தொலைதூரக் கல்வியின் தரத்தை மேம்படுத்த கூடுதலான தனி தொடர்பு பயிற்சி வகுப்புகள் நடத்தவும் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கையில் கலந்துகொள்ள கூடுதல் வாய்ப்புகள் அளிக்கவும், வகை செய்யும்படி இவ்வரசு பல்கலைக்கழகங்களை கேட்டுக்கொள்ளும். கல்லூரி வழிபயிலும் மாணவர்கள் எழுதும் அதே தேர்வினையே, தொலைதூரக்கல்வி பயிலும் மாணவர்களும் எழுத வழி செய்து தொலைதூரக்கல்வியின் தரத்தை உயர்த்துமாறும், பல்கலைக்கழகங்களை அரசு கேட்டுக்கொள்ளும்.

### அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்

4.47. கோயம்புத்தூரிலுள்ள அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம் 1988ல் நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது.

### ஐந்தாண்டு ஒருங்கிணைந்த சிறப்புக் கல்வித் திட்டம்

4.48. ஐ.ஓ.சி. சிறப்புக் கல்வித் திட்டத்தினை 1992-93ல் இப்பல்கலைக்கழகம் தொடங்கியது. உளவியல், உடல் அமைப்பியல், குழந்தை மருத்துவ இயல் மற்றும் நோய் கண்டறிதல் போன்ற துறைகளை இது உள்ளடக்கியது. கல்வியின் அனைத்து நிலைகளிலும் ஊனமுற்றோரை ஒருங்கிணைப்பது, மாணவர்களுக்கு நல்லதொரு பயிற்சிக் களமாக அமைந்துள்ளது.

### ஒலி-ஒளிக்காட்சி தொடர்பு மையம்

4.49. பட்டப் படிப்பிற்கு ஒலி-ஒளிக் காட்சி பாடங்கள் தயாரிப்பதற்கென பல்கலைக்கழக மானியக்குழு தேர்ந்தெடுத்துள்ள 15 மையங்களில் இப்பல்கலைக்கழகமும் ஒன்று. மனையியல் சார்ந்த 25-30 மணித்துளி கால அளவு கொண்ட 220 பாடங்களை இம்மையம் தயாரித்துள்ளது.

### சமுதாயத்தை சென்றடையும் நிகழ்ச்சிகள்

4.50. மனையியல் விரிவாக்கத் துறை பல்கலைக்கழகத்தின் சிறப்பினை பறைசாற்றும் வகையில் செயல்பட்டு வருகிறது.



2001 ஆகஸ்ட் 27]

### மகளிர் கற்றல் மையம்

4.51. கற்பித்தல், ஆய்வு, விரிவாக்கம் வழியாக, மகளிர் இயல் செயற்பாடுகளை வலுப்படுத்த மகளிரியல் மையம் பாடுபட்டு வருகிறது. இம்மையம் ஆகஸ்ட் 2000 முதல் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஆதரவுடன் நடைபெற்று வருகிறது. மகளிர் மேம்பாடு, குடும்பம் மற்றும் சமுதாயத்தில் வாழ்க்கையினை மேம்படுத்துதல் இம்மையத்தின் நோக்கமாகும்.

## 5. தொழில்நுட்பக் கல்வி

தொழில் நுட்பப் பயிலகங்கள், பொறியியற் கல்லூரிகள் மற்றும் தட்டச்சு பயிலகங்களை ஒருங்கிணைத்து, 1957 ஆம் ஆண்டு, தொழில் நுட்பக் கல்வித் துறை தோற்றுவிக்கப்பட்டது. 2001-2002 ஆம் கல்வியாண்டில் பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை 222 ஆகவும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கை 205 ஆகவும் உயர்ந்துள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள பொறியாளர்கள் தேவையை ஈடுசெய்ய தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பாடப்பிரிவுகளில் புதுடில்லி, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழுவின் ஒப்புதலோடு 95 பொறியியற் கல்லூரிகளில் 7,871 இடங்களும், 48 பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 1,470 இடங்களும் கூடுதலாக்கப்பட்டுள்ளது. மேலும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு 29 பொறியியற் கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கூடுதல் பாடப் பிரிவுகளை துவங்க 1,900 கூடுதல் இடங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

### கிராமப்புற மாணவர்களுக்கு பொறியியற் கல்லூரிகளில் கூடுதல் இடஒதுக்கீடு

5.2. கிராமப் பஞ்சாயத்துக்களில் அமைந்துள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 2 வருடங்கள் படித்த கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி, பொறியியற் கல்லூரிகளில் அவர்களுக்கான இடஒதுக்கீடு 15 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

### சிறப்பு இல்ல மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு

5.3. சமூக நலத் திட்டத்தின் கீழ் இயங்கும் சிறப்பு இல்லங்களைச் சேர்ந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு பொறியியற் கல்லூரிகளில் 5 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## ஒற்றைச் சாளர முறையில் இரண்டு மையங்களில் மாணவர் சேர்க்கை முறை அறிமுகம்

*5.4.* ஒவ்வொரு ஆண்டும், ஆகஸ்ட் திங்களில் வகுப்புகளைத் தொடங்கும் வண்ணம் தொழிற் கல்வி கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கையினை முடிக்க வேண்டுமென அரசு முனைப்பாக உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு, தொழிற் கல்விக்கான சேர்க்கை முறை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

*5.5.* இதுவரை ஒற்றைச் சாளர முறை சென்னையில் மட்டுமே நடைபெற்று வந்தது. 2001-2002 ஆம் கல்வியாண்டு முதல் தென் மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்களின் நலன் கருதி, மேற்கூறிய முறை திருச்சி மையத்திலும் நடைபெற்றது. இந்த முறை பெற்றோர் மற்றும் மாணவர்களிடையே நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது.

## பொறியியற் கல்லூரியில் சேர மாணவர்க்கு நிதியுதவி

*5.6.* நல்லெண்ண அடிப்படையிலும், வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும், தகுதி வாய்ந்த மற்றும் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கு பொறியியற் கல்லூரியில் சேர, அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது.

## தொழில்நுட்ப பல்கலைக்கழகம் நிறுவுதல்

*5.7.* பொறியியற் கல்லூரிகளிலும், தொழில் நுட்பப் பயிலகங்களிலும் மிக அதிக அளவில் மாணவர் சேர்க்கைக்கான இடவசதி கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. மாணவர் சேர்க்கைக்கான இடவசதி (intake capacity) தற்போது பொறியியற் கல்லூரிகளில் 62,934 என்ற எண்ணிக்கையையும், தொழிற் நுட்ப பயிலங்களில் 47,324 என்ற எண்ணிக்கையையும் எட்டியுள்ளது. மேலும், புதிய தொழிற் கல்வி நிறுவனங்கள் உருவாகுவதை தவிர்த்து, தற்போது கல்வி நிறுவனங்களில் இருந்து வருகின்ற இட வசதியினை ஒன்று திரட்டி கல்வியின தரத்தை உயர்த்துவதே அரசின் நோக்கமாகும்.

5.8. தற்போது (2001-2002) தமிழகத்தில் உள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை 160 (7 அரசு பொறியியற் கல்லூரிகள், 3 அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள், 150 சுயநிதி பொறியியற் கல்லூரிகள் ஆகும். இவற்றுள் 150 சுயநிதி பொறியியற் கல்லூரிகள் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இணைந்து பல்வேறு





பாடத்திட்டங்களை பின்பற்றி வருகின்றன. இந்த ஆண்டு மேலும் 62 சுயநிதி பொறியியற் கல்லூரிகளுக்கு அகில இந்திய தொழில் நுட்பக் குழுமம் அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை 160 லிருந்து 222 ஆக உயர்ந்துள்ளது. புதிதாக அனுமதிக்கப்பட்ட 62 சுயநிதிக் கல்லூரிகளை பல்வேறு பல்கலைக்கழகங்களில் இணைப்பது பற்றி கருதப்பட்டு வருகிறது. அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு மாநில அரசினை இன்னும் அதிக அளவில் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்றும் சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள் தொடங்கும் அனுமதியினை உரிய நேரத்தில் வழங்குவதன் அவசியம் பற்றியும் அக்குழுவிற்கு இவ்வரசு எடுத்துரைக்கும். இதனால், மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கத்தேவையான கட்டமைப்பு, உபகரணங்கள் மற்றும் முழு எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் தேவைகளை சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் பெற்றுள்ளன என்பதையும் இவ்வரசு உறுதிசெய்து கொள்ள இயலும்.

*5.9.* ஒரே சீரான, உயர்தரமான பொறியியற் கல்வி வழங்குதலை கருத்தில் கொண்டு, அனைத்துப் பொறியியற் கல்லூரிகளையும் ஒரே பல்கலைக்கழகத்தின் கீழ் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. இப்பல்கலைக்கழகம் கல்லூரிகளை தன்னுடன் இணைக்கின்ற பல்கலைக்கழகமாகவும் எதற்காக உருவாக்கப்படவுள்ளதோ அக்குறிக்கோளை அடையத் தேவையான அதிகாரம் பெற்றதாகவும் அமையும். அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் கடும் போட்டி நிலவி வரும் இந்நவீன உலகில், நமது மாணவரும், ஆசிரியரும் அத்துறைகளில் விஞ்சி நிற்பதற்கான சூழல் உருவாக்கப்படும்.

*5.10.* தொழில் நுட்பத்தின் முன்னேற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும், தொழில் துறைகளின் தேவைகளுக்கு ஏற்றவாறும் பொறியியற் கல்வியின் பாடத்திட்டம் மேம்படுத்தப்படும்.

## சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் கட்டணம் செலுத்தும் முறையை சீரமைத்தல்

*5.11.* சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் கட்டணம் வசூலிக்கும் வழிமுறையினை சீரமைக்க அரசு ஆய்வு செய்து வருகிறது. இடர்பாடின்றி கட்டணம் செலுத்த ஏதுவாகவும், சில சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் லாபநோக்கில் கட்டணம் வசூலித்தலை தடுத்திடும் வகையிலும் வரும் கல்வியாண்டு முதல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கட்டணம் வசூலிக்க ஏதுவான வழிமுறைகளை வகுக்க அரசு ஆய்வு செய்து வருகிறது.

[2001 ஆகஸ்ட் 27

## 6. அண்ணா பல்கலைக்கழகம்

அண்ணா பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களின் அறிவாற்றலையும், தலைமைப் பண்புகளையும் மேம்படுத்தி தொழில் துறையில் முன்னணி இடம் பெறத்தக்க தகுதிகளைச் செழுமைப்படுத்தும் உறுதியான மரபினை அண்ணா பல்கலைக்கழகம் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. அங்குள்ள ஏழுபுலங்கள், பதினேழு துறைகள், ஆறு பள்ளிகள், இருபது மையங்கள் உலக அளவில் புகழ்பெற்ற நான்கு நிறுவனங்கள் ஆகியவற்றின் வாயிலாக ஏறத்தாழ பழைய, புதிய வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத் துறைகள் அனைத்திலும் மாணவர்கள் நாட்டு வளர்ச்சிக்குத் தேவையான துறைகளில் பயிற்சி பெறுகின்றனர். பல்கலைக்கழகத்தில் 18 சுயநிதிப் பகுதி நேரடிப்படிப்புகள் உட்பட 40 பட்டப் படிப்புகளும், 52 முதுநிலை படிப்புகளும், 5 முதுநிலை பட்டயப் படிப்புகளும், 5 ஆய்வுநிறைஞர் படிப்புகளும் நடத்தப்படுகின்றன. அன்றியும் 36 சிறப்புத் துறைகளில் முனைவர் பட்டத்திற்கான உயர்நிலை ஆய்வுக்குரிய வசதிகளும் நிறுவப்பட்டுள்ளன.

6.2. தகவல் தொழில்நுட்பத் துறையின் அண்மைக்கால வளர்ச்சிகளைப் பயன்படுத்தி, தகவல் தொழில்நுட்பச் செயல் திட்டம் குறித்த திட்டக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகம் நாட்டிலேயே முதலாவதாக தகுதிப்புள்ளித் திரட்டல் திட்டத்தைச் செயல்படுத்த முற்பட்டுள்ளது. நாட்டில் பல்வேறு பகுதிகளில் தொழில் பணிகளில் ஆழ்ந்து ஈடுபட்டிருக்கும் பொறியாளருக்கு இணையவழி தொலைக் கல்வி மேம்பாட்டுக்கு இத்திட்டம் வழிவகுக்கிறது.

6.3. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றும் தொழிற் கல்வி ஆசிரியர்களை வல்லுநர்களாக மேம்படுத்துவதன் வாயிலாகத் தொழிற்கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கில், இணையம் வழியான மேற்படிப்புகளையும் பல்கலைக்கழகம் தொடங்கவுள்ளது. இந்தியாவிலேயே முதலாவதாய்த் தொடங்கப் படும் இந்தப் புதுமைத்திட்டம், தொலைதூர கிராமப்புறங்களில் பணியாற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்கள் தங்கள் இயல் பணிகளுக்கு இடையூறு இல்லாவகையில் மேற்கல்வி தொடரப் பெரிதும் உதவும். இதன் பொருட்டு, தகவல் தொழில்நுட்ப வாயிலாகக் கல்வியளிக்க, தொழில் வளர்ச்சிக்கல்வி மையம் என்னும் உயர்நுணுக்க அமைப்பு ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.



2001 ஆகஸ்ட் 27]

6.4. யுனெஸ்கோ ஆதரவில் ஆஸ்திரேலியாவில் இயங்கும் பொறியியல் கல்விக்கான பன்னாட்டு மையத்தின் கூட்டு நிறுவனமாக, அண்ணா பல்கலைக்கழகம் ஏற்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோவின் செயற்கைக் கோள் வழிப் பொறியியல் கல்வி மையத்தை நிறுவிய முதல் ஆசிய பல்கலைக்கழகம் அண்ணா பல்கலைக்கழகமே. பொறியியற் கல்வி பயிற்சித்துறையில் யுனெஸ்கோவின் வளங்களையும், உயர்நுட்பங்களையும், அண்ணா பல்கலைக்கழகம் பகிர்ந்துகொள்ள இம்மையம் துணை புரிவதுடன், பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கூட்டாக நிதியுதவி பெறவும், பிற பல்கலைக்கழகங்களுடன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பரிமாற்றங்களைச் செய்து கொள்ளவும் வழி வகுக்கும்.

6.5. பல்கலைக்கழகங்களின் வரலாற்றிலேயே முதன்முறையாக 'கல்விக் கூட்டமைப்பு மையம்' எனும் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு ஒன்றையும் அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. தொழிற்கல்வி நிறுவனங்களில் நிலவும் வளக்குறைபாடுகளை நிறைவு செய்வதில் இம்மையம் பாலமாய் அமைந்து பல்வேறு நிறுவனங்களிலும் காணப்படும் மனித வளத்தைத் திரட்டுவதுடன், இந்தியாவிலும் பிறநாடுகளிலிருந்தும் வல்லுநர்களின் பணியையும் நம் கல்வி நிறுவனங்களுக்குப் பயன்படுத்த இம்மையம் செயல்படும். ஜெர்மானிய அரசின் இத்திட்டத்தின் கீழ் அயல்நாட்டு ஆய்வாளர்கள் பேராசிரியர்களை வரவழைத்தல் குறித்துக் கருத்துப் பரிமாற்றம் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது.

6.6. கணிப்பொறி அறிவியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுநிலை பட்டப் படிப்பு (M.Sc.) அண்ணா பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் தகவல் தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவைக்காக இந்திய நாட்டினை எதிர் பார்த்துள்ளனர். தற்போதைய சூழலில், தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். பொறியியற் பட்டதாரிகள், தகவல் தொழில் நுட்பத்தை குறுகிய காலத்தில் பெற, அண்ணா பல்கலைக்கழகம்" இரட்டை பட்டப்படிப்பு" முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

## 7. மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

மண்டலப் பொறியியற் கல்லூரி திருச்சிராப்பள்ளி 1964-65 ஆம் ஆண்டு மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சியால் துவக்கப்பட்டு தற்போது இந்தியாவில் உள்ள தலைசிறந்த பொறியியற் கல்லூரிகளில் இக்கல்லூரியும் ஒன்றாக திகழ்கிறது. இக்கல்லூரியில் இளங்கலை

பட்டப்படிப்பிற்கு நுழைவுத்தேர்வு மூலமாகவும் எஞ்சிய 50 விழுக்காடு மற்ற மாநில மண்டலப் பொறியியற் கல்லூரி மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் அனைத்துத் துறைகளிலும், குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பவியலுக்கு (Information Technology) முக்கியத்துவம் தரப்பட்டு கல்வி கற்பிக்கப்படுகிறது.

**அளிக்கப்படும் பாடப் பிரிவுகள்**

7.2. நாட்டின் தற்போதைய தொழில் நுட்பத் துறையின் தேவைக்கேற்ப பொறியியலில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்ட வகுப்புகள் வடிவமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

7.3. மேலும் அனைத்துத் துறைகளிலும் எம்.பில் மற்றும் பிஎச்.டி பகுதிநேர/முழுநேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பகுதி நேர இளங்கலை பட்டப்படிப்பு அனைத்துத்துறைகளிலும் நடத்தப்படுகின்றது.

**சிறப்பு வசதிகள்**

7.4. இந்நிறுவனத்தில் 24 மணிநேரம் இயங்கும் கணிப்பொறி மையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதில் ஒரே சமயத்தில் 300 மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு வசதிகள் உள்ளன.

7.5. இந்திய பிரிட்டிசு அரசுகள் உதவியளிக்கும் எரிசக்தி மையத்திட்டத்தின்கீழ் (Indo -UK-REC Project) காற்றிலிருந்து மின்சக்தி தயாரித்தல், சூரிய ஒளியில் இருந்து மின்சக்தி தயாரித்தல் மற்றும் இலை பொருட்களில் இருந்து மின்சக்தி தயாரித்தல் பொருட்டு ஆய்வுக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கூடங்களுக்கு ரூபாய் 79.96 இலட்சம் செலவிலான உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கூடங்கள் இக்கல்லூரியில் பல்வேறு பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது.

## 8. தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றம்

தமிழக அரசின் அறிவியல் கொள்கைகளை உருவாக்கவும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை இளைஞர்களிடையே பரப்புவதன் மூலம் அறிவியல் உள்ளுணர்வை ஏற்படுத்தவும், பல நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும்,



அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிகழ்ச்சிகளை மத்திய அரசுடன் இணைந்து நடத்தவும், மாநில அரசின் கீழ் தன்னிச்சையாக தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றம் செயல்பட்டு வருகிறது.

8.2. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை பரப்புதல் என்னும் திட்டத்தின் மூலம் அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், அறிவியல் கண்காட்சிகள், அறிவியல் தலைப்புகளில் விரிவுரைகள், அறிவியல் போட்டிகள், கணிப்பொறிப் பயிற்சிகள், நடுத்தர, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சிகள் நடத்தப்படுகிறது.

8.3. தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப தொடர்பு மன்றம், மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத் துறை நிதிஉதவியுடன் கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது :-

1. அறிவியல் தொழில் நுட்ப விழிப்புணர்ச்சி பயிற்சி முகாம்
2. இயற்கையை பாதுகாக்க பயிற்சி அளிக்கும் முகாம்
3. திறமையான பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் பயிற்சி முகாம்
4. மாதிரி விண்கலத்தின் மூலம் அதன் அடிப்படை கருத்துக்களை விளக்கும் பயிற்சி முகாம்
5. பொம்மலாட்டத்தின் மூலம் அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்
6. லேசர் ஒருங்கொளி பற்றி மாநிலம் தழுவிய பயிற்சி முகாம்
7. மாதிரி ஆகாய விமானத்தின் மூலம் அறிவியல் கருத்துக்களை விளக்கும் முகாம்

8.4. இளம் விஞ்ஞானிகள், (i) தங்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் கருத்தரங்குகளில், சமர்ப்பிப்பதற்கு பயணத் தொகை வழங்கப்படுகிறது. (ii) இளம் விஞ்ஞானிகள் தேசிய அளவில் சிறந்து விளங்கும் ஆராய்ச்சி மையங்களிலும், பல்கலைக் கழகங்களிலும், இரண்டு முதல் ஆறு மாதங்கள் வரை சிறப்புப் பயிற்சி பெற உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையானது, மத்திய அரசுடன் பகிர்ந்து செலவிடப்படுகிறது.

## 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, 1983 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக இயங்கி வருகிறது. நகர மற்றும் கிராமப்புற மக்களிடையே குறிப்பாக மாணவ சமுதாயத்தினரிடையே அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

9.2. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், பிர்லா நிறுவனங்களின் தாராள நன்கொடைத் தொகையான ரூபாய் இரண்டு கோடி செலவில் ஒரு கோளரங்கத்தை நிறுவியுள்ளது. மேலும், ரூபாய் நான்கு கோடி செலவில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தினை நிறுவியுள்ளது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் எட்டு விதமான அறிவியல் தலைப்புகளில் காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டு 600 நேர்முகமாக விளக்கிடும் காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9.3. திருச்சிராப்பள்ளி மண்டல அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம் அமைப்பதற்காக 22.1.1994 அன்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இதனைத்தொடர்ந்து மண்டல அறிவியல் மையம் அண்ணா அறிவியல் மையம் என பெயரிடப்பட்டு முதற்கட்டமாக கோளரங்கம் ரூ.128.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு 10.6.1999 முதல் இயங்கிவருகிறது. இக்கோளரங்கத்தில் உள்ள படக்கருவி மற்றும் இதர சாதனங்கள் ரூ.150.00 இலட்சம் மதிப்பிற்கு 'இந்திய ஜப்பானிய பண்பாட்டு உறவின்' அடிப்படையில் ஜப்பானிய அரசிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிவியல் மையத்தில் இந்திய எண்ணெய் நிறுவனத்தினர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் மூலம் அளிக்கப்பட இருக்கும் ரூ.30.00 இலட்சத்தில் 'சுற்றுச் சூழல் காட்சிக்கூடம்' ஒன்று அமைக்கப்பட உள்ளது.

9.4. கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையம் கோளரங்கத்துடன் அமைத்திட கோயம்புத்தூரின் அருகே உள்ள விளாங்குறிச்சி கிராமத்தில் 5.91 ஏக்கர் நிலத்தினை இம்மையம் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளது. விரைவில் கோளரங்கம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன.





### மாவட்டங்களில் அறிவியல் மையங்கள் அமைத்தல்

9.5. தற்போது திருச்சிராப்பள்ளியிலும், கோயம்புத்தூரிலும் வட்டார அறிவியல் மையங்கள் இயங்கி வருகின்றன. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தினை மக்களிடமும், மாணவர்களிடமும் கொண்டு செல்லும் நோக்கத்துடன் மாவட்ட தலைநகர் அனைத்திலும், படிப்படியாக அறிவியல் மையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## 10. அறிவியல் நகரம்

சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் அமைந்துள்ள மத்திய மற்றும் மாநில அரசினைச் சேர்ந்த இந்திய தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் போன்ற சுமார் 60 ஆராய்ச்சி நிறுவனங்களை உள்ளடக்கியது "அறிவியல் நகரம்" ஆகும். இவ்வறிவியல் நகரத்தின் நோக்கம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை வளர்ப்பதாகும்.

### அறிவியல் நகரின் குறிக்கோள்கள்

1. இந்த நகரத்தில் தற்சமயம் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் அமையவிருக்கும் புதிய நிறுவனங்களின் மூலமாக அறிவியல் தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்வது
2. இந்த தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் மூலதன நிறுவனங்களுக்கிடையே தொழில் நுட்பங்களை பரிமாற்றம் செய்தல்
3. உலக அளவில் தொழில்நுட்பங்களை முன் கூட்டியே அறிவது மற்றும் கணக்கிடுவது
4. உறுப்பினர் நிறுவனங்களின் பயன்பாட்டிற்குத் தேவையான இந்திய அளவிலான மற்றும் உலக அளவிலான மாநாடுகளை நடத்த ஏதுவாக அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட ஒரு வளாகத்தை உருவாக்கி அதை நன்கு பராமரித்தல்
5. சமுதாய பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் முன்னேற்றத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்தல்
6. அறிவியல் நகர நிறுவனங்களிடையே அறிவியல் தொழில் நுட்ப பரிமாற்றங்களை ஊக்கப்படுத்துவது

7. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) உதவியுடன், அறிவியல் பூங்கா அமைத்தல்,

8. உலகளாவிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இருமுனை, பன்முனை பரிமாற்றங்களை ஊக்குவித்தல்,

9. தொழிற்சாலை, மாநில அரசு, மத்திய அரசு (மனித வள மேம்பாட்டுத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அணுசக்தித் துறை, விவசாயத் துறை முதலியன ) தேசிய மற்றும் உலக நிதி முகமைகள், உலக வங்கி முதலியவற்றிலிருந்து நிதி திரட்டுதல்.

10.2. அறிவியல் நகரம் ஒரு இலாப நோக்கமற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்படும். தமிழக முதலமைச்சர் அவர்கள், இதன் தலைவராகவும், கல்வி அமைச்சர் அவர்கள் இதன் துணைத் தலைவராகவும் இருப்பர். புகழ்மிக்க விஞ்ஞானிகள்/தொழில் நுட்ப வல்லுநர்கள்/முக்கிய நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருப்பர்.

## 11. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

அரசு ஆவணங்களை ஒருங்கிணைத்து காத்து வைப்பதற்குச் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் 1805ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு அவர்களால் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர், இது ஒரு முழுமையான ஆவணக் காப்பகமாக வடிவமைக்கப்பட்டு, தற்போது எழும்பூரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வளாகத்திற்கு 1909 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. இங்குள்ள ஆவணங்கள் முந்நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்டவை. அவை டேனிஷ், டச்சு, ஆங்கிலம், பிரன்ச், பெர்சியன் மற்றும் மோடி மொழிகளில் எழுதப்பட்டுள்ளன.இவற்றில் மிகவும் பழமை வாய்ந்த ஆவணங்கள் 1657ஆம் ஆண்டைச் சார்ந்த டச்சு ஆவணங்கள் ஆகும். ஆங்கிலம் தவிர ஏனைய மொழிகளில் உள்ள ஆவணங்கள், அவற்றில் புதைந்து கிடக்கும் வரலாறுகளை வெளிக்கொணர மொழி பெயர்ப்புப் பணி அவசியமாகிறது.

11.2. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 21 ஆம் நூற்றாண்டின் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஆவணங்களின் பாதுகாப்பிற்காக நவீன தொழில்நுட்ப முறைகள் புகுத்தப்பட்டு வருகின்றன. மைக்ரோபிலிம்



ரோல்கள் பாதுகாத்திடும் அறையினில் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வரலாற்று நிர்வாக சிறப்புமிக்க ஆவணங்களை மட்டும் பாதுகாத்திட ஆவணங்களை மதிப்பீடு செய்யும் பணி செயல்பட்டு வருகிறது.

11.3. ஆவணக் காப்பகத்தில் சிப்பாய்க் கலகத்திற்கு முந்தைய காலத்தைச் சார்ந்த ஆவணங்கள் மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றிற்குப் பொருள் விவர அட்டவணை முழுமையாக இல்லை. பழைய முறையிலான அட்டவணைகளைக் கொண்டு ஆவணங்களை ஆய்வு செய்வதில் சிரமமும், காலதாமதமும் ஏற்படுகின்றன. எனவே, ஆராய்ச்சிக்கு பெரிதும் உதவும் பொருட்டு, முதற்கட்டமாக பொருள் விவர அட்டவணைகளை கணினிப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது. ஆவணக் காப்பகத்திலுள்ள நூலகத்தில் உள்ள அரிய வகையான நூல்கள் அச்சில் இல்லை. அவை வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அடிக்கடி கையாளும் நிலையில் இல்லை. எனவே, அவ்வகையான நூல்களை பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## கல்லூரிக் கல்வி

### இணைப்பு—I

**கல்லூரிகளின் எண்ணிக்கை 2001—2002 (இனவாரியாக)**

| இனம் | அரசு | அரசு மானியம் பெறுபவை | சுயநிதிக் கல்லூரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 | 133 | 247 | 440 |
| கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 1 | 22 |
| கீழ்த்திசை கல்லூரிகள் | — | 9 | — | 9 |
| உடற்பயிற்சி கல்லூரிகள் | — | 3 | 1 | 4 |
| சமுதாயப் பணிப் பள்ளிகள் | — | 2 | — | 2 |
| மொத்தம் | 67 | 161 | 249 | 477 |

### இணைப்பு—II

**பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பெற்ற கல்லூரிகள் 2001 —2002**

| வ.எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம் | 146 |
| 2 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 85 |
| 3 | பாரதியார் பல்கலைக்கழகம் | 76 |
| 4 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 75 |
| 5 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 55 |
| 6 | பெரியார் பல்கலைக்கழகம் | 40 |
| | மொத்தம் | 477 |



### இணைப்பு—III

**மாணவர்களின் எண்ணிக்கை**

| படிப்பு | 1995—96 | 1996—97 | 1997—98 | 1998—99 | 1999—2000 | 2000—2001 |
|---|---|---|---|---|---|---|
| பி.ஏ. | 93332 | 89381 | 86364 | 88967 | 94540 | 97431 |
| பி.எஸ்.சி | 130649 | 132179 | 133586 | 141136 | 161691 | 169038 |
| பி.காம் | 53623 | 54877 | 56797 | 60606 | 71096 | 73333 |
| முது நிலை | 23597 | 23327 | 32645 | 34684 | 42995 | 46092 |
| பிற | 25071 | 25857 | 22508 | 24570 | 31309 | 34280 |
| மொத்தம் | 326272 | 325621 | 331900 | 349963 | 401631 | 420714 |

## இணைப்பு—IV

### கல்லூரிகளில் பயிலும் ஆடவர் / மகளிர் மாணவர்களின் எண்ணிக்கை 2000—2001

| பாடப் பிரிவின் பெயர் | அரசுக் கல்லூரி | | அரசு மான்யம் பெறுபவை | | சுயநிதிக்கல்லூரி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் |
| இளங்கலைப் பிரிவு | | | | | | | | |
| பிஏ | 15021 | 18084 | 26871 | 29478 | 2430 | 5547 | 44322 | 53109 |
| பிஎஸ்சி | 18055 | 21874 | 44541 | 40778 | 20096 | 23698 | 82692 | 86346 |
| பிகாம் | 5245 | 4768 | 24331 | 18204 | 8127 | 12658 | 37703 | 35630 |
| பிபிஏ | 191 | 317 | 2999 | 1849 | 3305 | 3165 | 6495 | 5331 |
| பிபிஎம் | — | — | 1139 | 1558 | 2913 | 2203 | 4052 | 3761 |
| பிலிட் | — | — | 379 | 1276 | — | — | 379 | 1276 |
| பிசிஏ | — | — | 872 | 539 | 987 | 844 | 1859 | 1383 |
| முதுகலைப் பிரிவு | | | | | | | | |
| எம்ஏ | 1047 | 1411 | 3887 | 4378 | 104 | 309 | 5038 | 6098 |
| எம்எஸ்சி | 820 | 1314 | 5748 | 5983 | 2076 | 2041 | 8644 | 9338 |
| எம்காம் | 289 | 162 | 2047 | 1375 | 191 | 346 | 2527 | 1883 |
| எம்சிஏ | | 176 | 3157 | 1911 | 2238 | 1784 | 5500 | 3871 |
| எம்பிஏ | 105 | — | 350 | 448 | 1460 | 935 | 1810 | 1383 |
| பிஜிடிசிஏ | 24 | 29 | 634 | 535 | 57 | 210 | 715 | 774 |
| ஆராய்ச்சிப் படிப்புகள் | | | | | | | | |
| எம்பில் | 87 | 68 | 796 | 807 | 10 | — | 893 | 875 |
| பிஎச்டி | 48 | 19 | 108 | 86 | — | — | 156 | 105 |
| டிப்ளமோ | 8 | 2 | 202 | 90 | — | — | 210 | 92 |
| சான்றிதழ் படிப்புகள் | — | — | — | — | — | — | — | — |
| பிஎட் | 493 | 479 | 405 | 1488 | 50 | 30 | 948 | 1997 |
| எம்எட் | 32 | 22 | 35 | 69 | — | — | 67 | 101 |
| பிபிஎட் | — | — | 225 | 99 | 80 | 40 | 305 | 139 |
| எம்பிஎட் | — | — | 95 | 29 | — | — | 95 | 29 |
| இதர பிரிவுகள் | — | — | 632 | 609 | 558 | 444 | 1190 | 1053 |
| மொத்தம் | 41465 | 48735 | 119453 | 111965 | 44682 | 54274 | 205600 | 214574 |
| பெரு மொத்தம் | 90200 | | 231418 | | 98956 | | 420174 | |

## இணைப்பு—V

### கல்லூரிகளில் ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியாளர் எண்ணிக்கை 2000—2001

| கல்லூரி வகை | கல்லூரி—களின் எண்ணிக்கை | ஆசிரியர்கள் | | | ஆசிரியரல்லாத பணியாளர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| அரசுக் கல்லூரிகள் | 67 | 2868 | 1844 | 4712 | 2104 | 533 | 2637 |
| அரசு மானியம் பெறும் கல்லூரிகள் | 161 | 6467 | 3818 | 10285 | 4046 | 1074 | 5120 |
| சுயநிதிக் கல்லூரிகள் | 235 | 3306 | 3824 | 7130 | 2173 | 1353 | 3526 |
| மொத்தம் | 463 | 12641 | 9486 | 22127 | 8323 | 2960 | 11283 |



## தொழில்நுட்பக் கல்வி

### இணைப்பு VI

#### மாநிலத்திலுள்ள தொழில் நுட்ப பயிலகங்கள்

| ஆண்டு | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1996-1997 | 21 | 35 | 98 | 154 |
| 1997-1998 | 21 | 35 | 112 | 168 |
| 1998-1999 | 21 | 35 | 143 | 199 |
| 1999-2000 | 22 | 35 | 145 | 202 |
| 2000-2001 | 22 | 35 | 148 | 205 |
| 2001-2002 | 22 | 35 | 148 | 205 |

### இணைப்பு VII

#### மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகள்

| ஆண்டு | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1996-1997 | 7* | 3 | 71 | 81 |
| 1997-1998 | 7* | 3 | 76 | 86 |
| 1998-1999 | 7* | 3 | 104 | 114 |
| 1999-2000 | 7* | 3 | 113 | 123 |
| 2000-2001 | 7* | 3 | 143 | 153 |
| 2001-2002 | 7* | 3 | 212** | 222 |

** 4 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் அடங்கும்.

* திருச்சி மண்டல பொறியியற் கல்லூரி உள்ளடக்கியது.

## பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

என்பது திருவள்ளுவர் வாக்கு. கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்றது. பொருளாதார முன்னேற்றம் அடையாத, ஆனால் கல்வித்தரம் முன்னேறிய நாடுகளில்கூட இதைக் கண்கூடாகக் காண்கிறோம். வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சியடைவது மட்டுமன்றி, வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகத் துய்க்க, கல்வி கற்றவனால் இயலும். கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தக்கவாறு பயன்படுத்தி சாதகமாக்கிக் கொள்ளவும், சந்திக்கும் நிகழ்வுகளின் நன்மை தீமைகளைப் பகுத்தறியவும், கல்வி வழி செய்கிறது. மக்களிடையே கல்வியறிவு பெருகிய நாடுகளில் மக்கள் உடல்நலன்களைப் பேணிக் காப்பதில் முன்னேறி, நோய்களைத் தடுப்பதில் முன்னெச்சரிக்கையாக இருத்தல் போன்றவற்றால் குழந்தைகள், மகளிர், வறியர் ஆகியோரிடையேயும், நோயற்ற வாழ்க்கை அமைந்திருப்பது சுடரிடும் உண்மையாகும். இத்தகைய பயன்மிக்க கல்வியைப் பரவலாக அனைவருக்கும் அளிப்பதே பள்ளிக் கல்வித் துறையின் நோக்கமாகும்.

2. 2001 மக்கட் கணக்கெடுப்பின்படி, தமிழகத்திலுள்ள 6.21 கோடி மக்களில் 1.65 கோடி பேர் கல்வியறிவு பெறாதவர்கள். 1991–ல் 62.66% ஆக இருந்த மாநில எழுத்தறிவு விகிதம் 2001–ல் 73.47% ஆக உயர்ந்துள்ளது. 1991–ல் மகளிர் எழுத்தறிவு விகிதம் 51.53%–லிருந்து 2001–ல் 64.55% ஆக உயர்ந்துள்ளது. கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை விரைந்து பெருகச் செய்வது துறையின் தலையாய குறிக்கோள்.

3. 'அனைவருக்கும் கல்வி' என்ற குறிக்கோளை எய்த, கல்வி கற்கும் வசதி பெற வேண்டியவர்களின் சூழ்நிலைத் தன்மையின் அடிப்படையில் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 10 இலட்சம் சிறுவர் சிறுமியர் பள்ளியில் சேரும் வயதை அடைகின்றனர். இதைத்தவிர, பல்வேறு காரணங்களால் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நின்றுவிடும் இளம் வயதினர் எண்ணிக்கை ஒரு புறம்; முதியோர் உள்ளிட்ட 165 இலட்சம் கல்வி கற்காதவர்கள் எண்ணிக்கை மற்றொரு புறம்; இவ்வகையில் அனைத்துப் பிரிவினருக்கும் அவரவர் நிலைமைக்கு ஏற்ற வழியில் கல்வி கற்பிக்கும் அமைப்பை உருவாக்கும் பணியில் பள்ளிக் கல்வித் துறை ஈடுபட்டுள்ளது.





4. கல்வி வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு சிந்தனைக்கேற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள சில கொள்கைகளை வகுத்து அரசு செயலாற்ற உள்ளது:–

➤ தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து பள்ளியில்லாத சிற்றூர்களிலும் தொடக்கக்கல்வி வசதி ஏற்படுத்துதல்.

➤ அனைத்துப் பள்ளிகளிலும் கட்டடம், தளவாடங்கள் போன்ற வசதிகளை அளித்து பள்ளிகளின் கற்பிப்புச் சூழ்நிலையினை மேம்படுத்தி, பள்ளி மாணவர்கள் அனைவரும் சுயமாகக் கற்றலை உருவாக்குதல் மூலம் இடைநிற்றலை குறைத்தல்.

➤ பள்ளிகளில் மாணவர் பெறும் கல்வி தனது நற்பண்புகளை வளர்ப்பதாகவும், நாட்டின் பொருளாதார, சமுதாய மேம்பாட்டிற்கு வகை செய்வதற்காகவும் அமையுமாறு செய்தல்.

➤ எழுத்தறிவற்ற வயது வந்தோர்களுக்கு பொருத்தமான கல்விவசதி அளித்து அனைவரையும் நூற்றுக்கு நூறு எழுத்தறிவு பெற்றவர்களாகச் செய்தல்.

➤ குழந்தைகள் பாதியிலேயே படிப்பை விட்டு விடும் போக்கை முற்றிலுமாக ஒழித்து நூற்றுக்கு நூறு விழுக்காடு குழந்தைகள் கல்வி அறிவு பெற செய்து 'அனைவருக்கும் தொடக்கக் கல்வி' என்ற இலட்சியத்தினை அடைதல்.

➤ கிராமப்புற மாணவர்கள், குறிப்பாக மாணவிகளின் நலனை முன்னிட்டு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வசதிகள் ஏற்படுத்தித் தருதல்.

➢ பள்ளிகளில் அடிப்படை வசதிகளான போதுமான வகுப்பு அறைகள், ஆய்வுக் கூடங்கள், போதிய குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்தல்.

➢ பாடத்திட்டங்கள் திருத்தியமைப்பதற்கேற்பவும், நவீ ன கற்பித்தல் முறைக்கேற்பவும் ஆசிரியர்களுக்கு புத்துணர்வு பயிற்சி அளித்து கல்வியின் தரத்தை உயர்த்துதல்.

5. இக்கொள்கையின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக்கல்வி இயக்குநரகம், பள்ளிக்கல்வி இயக்குநரகம், பள்ளிசாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும், அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், பாடநூல் கழகம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் தத்தம் பணியில் சிறப்பாக ஈடுபட்டு, கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட இத்துறை முனைந்து செயல்படும்.

**மாநில வரவு–செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வி குறித்த நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை 17 – கல்வி என்ற தலைப்பில், 2001–2002 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4,978.85 கோடி ஆகும். இந்த ஒதுக்கீடு சென்ற ஆண்டின் ஒதுக்கீட்டுத் தொகையைவிட ரூ.330 கோடி அதிகமாகும். மேலும் இந்த ஒதுக்கீடு நிதிநிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ள வருவாய்க் கணக்கிலான மொத்தச் செலவில் (ரூ.24,522.36 கோடி) 20.30 விழுக்காடாகும். பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4,159.36 கோடி ஆகும். இதில் ரூ.273.80 கோடி திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கான இந்த ஒதுக்கீடு வருவாய்க் கணக்கிலான மொத்த செல்வில் 16.96 விழுக்காடு ஆகும்.



**அட்டவணை 1**

**2001—2002 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு பள்ளிக் கல்வி**

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 அரசுப்பள்ளிகள் கட்டிடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | — — — | 1765.29 | 1765.29 |
| 2202 பொதுக்கல்வி | | | |
| 01 தொடக்கக்கல்வி | 11728.64 | 200567.38 | 212296.00 |
| 02 இடைநிலைக் கல்வி | 12026.09 | 164633.37 | 176659.46 |
| 04 முதியோர் கல்வி | 975.08 | 173.60 | 1148.68 |
| 05 மொழி வளர்ச்சி | 2.50 | 347.23 | 349.73 |
| 80 பொதுவானவை — ஏனைய செலவு | 748.20 | 16500.00 | 17248.20 |
| மொத்தம் | 25480.51 | 382221.58 | 407702.09 |
| 2205 வீட்டு வசதி | — — — | 0.01 | 0.01 |
| 2216 கலையும், பண்பாடும் பொது நூலகங்கள் | 37.70 | 2099.88 | 2137.58 |
| 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் | 1795.91 | 24.50 | 1820.41 |
| 2235 சமூகப் பாதுகாப்பும், நலனும் | — — — | 7.90 | 7.90 |
| திருப்பி வருவிக்கப் பட்டவை | 65.65 | 2436.89 | 2502.54 |
| பெரு மொத்தம் | 27379.77 | 388556.05 | 415935.82 |

## அட்டவணை 2

### பிறதுறைகளில், பள்ளிக் கல்வி சார்ந்த சில திட்டங்களுக்கும் கீழ்வரும் கணக்குத் தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**2001—2002 ஆம் ஆண்டிற்கான செலவுத் திட்ட மதிப்பீடு**

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| அ. | வருவாய் கணக்கிற்குட்பட்டது | | | |
| | மானியக் கோரிக்கை எண் 27 சமுதாய மேம்பாடு — சமூகக் கல்வி | 27.84 | — | 27.84 |
| | மானியக் கோரிக்கை எண்.41 2071 அரசு மான்யம் பெறுகின்ற கல்வி நிலையங்களில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் | — | 4181б.83 | 41816.83 |
| ஆ | வருவாய் கணக்கிற்கு உட்படாதது | | | |
| | மானியக்கோரிக்கை எண்.55 4202 அரசு இடைநிலைக் கல்வி நிலையங்களுக்கு கட்டடங்களுக்கான மூலதனச் செலவு | 41.57 | — | 41.57 |
| | மொத்தம் | 69.41 | 41816.83 | 41886.24 |



## கொள்கை விளக்கம் மற்றும் திட்டங்கள்

### 1. தொடக்கக் கல்வி

'அனைவருக்கும் தொடக்கக் கல்வி' என்ற இலட்சியத்தை எய்தும் பொருட்டு, குழந்தைகள் பாதியிலேயே படிப்பை விட்டுவிடும் போக்கை முற்றிலுமாக ஒழிப்பதிலும், நூற்றுக்கு நூறு சதவிகிதம் குழந்தைகள் பள்ளியில் சேருவதை உறுதி செய்வதும் இவ்வரசின் நோக்கமாகும்.

1.1. "அனைவருக்கும் தொடக்கக் கல்வி"என்ற கொள்கை இன்றியமையாத மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

(அ) 6 முதல் 14 வயதுடைய பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்து 100% சேர்க்கையை நிறைவு செய்தல்.

(ஆ) பள்ளிகளில் சேர்ந்த குழந்தைகள் அனைவரும் இடையில் நின்று விடாமல் 8-வது வகுப்பு வரையில் தொடர்ந்து படிக்க பள்ளியில் தக்க வைத்தல்.

(இ) பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் அனைவரும் குறைந்த பட்சக் கற்றல் திறன்களை அடையும் வகையில் தரமான கல்வியை வழங்குதல்.

பள்ளிப் படிப்பை பாதியில் விட்டுவிட்ட குழந்தைகளையும், பள்ளியில் இதுவரை சேராத குழந்தைகளையும் கல்வி நிறுவனங்களில் சேர்ப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடி மேற்பார்வையின்கீழ் பேரியக்கம் ஒன்று தொடங்கப்படும்.

**1.2. அனைவருக்கும் கல்வி (Sarva Shiksha Abhiyan)**

'அனைவருக்கும் கல்வி இயக்கம்' எனப்படும் 'சர்வ சிக்ஷா அபியான்' என்ற புதிய திட்டத்தினை தமிழகத்தின் 22 மாவட்டங்களில் மத்திய அரசு இவ்வாண்டு முதல் அமல்படுத்தி, 2003 ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பள்ளி வயது குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்கவும், 2007 ஆம் ஆண்டுக்குள் 6 முதல் 11 வயதுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் 5 ஆண்டுக் கல்வியை வழங்கவும், 2010 ஆம் ஆண்டுக்குள் 11 முதல் 14 வயதுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் 8-வது வரை இலவசக்

கல்வியை முழுமையாக வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள அனைத்து பள்ளி வயது குழந்தைகளும் தொடக்கக் கல்வியை பெற வேண்டும் என்ற இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இத்திட்டத்தினை மைய அரசு தீட்டியுள்ளது.

இத்திட்டமானது மக்கள் கல்வி இயக்கம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பள்ளிக்கும் அடங்கிய குடியிருப்புகளில் உள்ள பள்ளி வயது மாணவர்கள் அனைவரையும் பள்ளியில் சேர்க்கவும், தரமான கல்வியை வழங்கவும், ஒரு மாவட்டத் திட்டத்தினை (District Plan) தயாரிக்க, அக்டோபர் 2000–த்திலேயே திட்ட முன்னோடி நடவடிக்கை தொடங்க 22 மாவட்டங்களிலும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன (DIET) உதவியுடன் நடைபெறுகிறது. இந்த முன்னோடி நடவடிக்கைகளுக்காக (Pre-project Activities) ரூ.3.18 கோடியை மைய அரசு ஒதுக்கியுள்ளது.

1.3 தமிழ்நாட்டில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் மாணவர்கள் சென்றடையும் வகையில் மக்கள் தொகை 300–க்கு மேற்பட்ட அனைத்து சிற்றூர்களிலும் தொடக்கப் பள்ளி அமைக்கப்படவேண்டுமென்பதை அரசு முதன்மைக் கொள்கையாக கொண்டுள்ளது. விடுபட்டுள்ள எஞ்சிய சிற்றூர்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடக்கப்பள்ளி எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கு தொடங்கப்படும்.

**1.4. மாணவர்கள் கூடுதல் சேர்க்கை**

பள்ளிகளில் சிறார்களின் இடைநிற்றலை தடுக்கும்பொருட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், இலவச கற்பலகை, இலவசப் பாடப்புத்தகங்கள், இலவச சீருடைகள், இலவச பேருந்துப் பயணம் முதலான ஊக்குவிப்பு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

ஆசிரிய சமுதாயத்தின் நலனுக்காக, வெளிப்படையான, தெளிவான பணியிடமாற்ற வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனை சமுதாயத்தில் அனைவரும் வரவேற்று பாராட்டியுள்ளனர். எளிதில் செல்ல இயலாத மலைப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் நீண்ட காலம் தொடர்ந்து பணிபுரியாததால் அப்பள்ளிகளின் கல்வித் தரம் பாதிக்கப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, அது போன்ற பள்ளிகளில் தகுதியுள்ள ஆசிரியர்களை அந்தந்தப் பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழகமே



நியமிக்க ஏதுவாக உரிய அதிகாரம் அளிக்கப்படவுள்ளது. அந்தந்தப் பகுதியில் தகுதியுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காதபட்சத்தில், அந்தப் பகுதியில் உள்ள பட்டதாரிகளையோ அல்லது முதுகலைப் பட்டதாரிகளையோ நியமித்துக் கொள்ளலாம்.

பள்ளிகளில் சேரும் குழந்தைகளில் ஐந்தாவது வரை தொடர்ந்து படிக்காமல் இடைவிலகுவோர் ஏழில் ஒருவர் (14.41 விழுக்காடு) ஆகும். அதிலும் 54 விழுக்காடு மாணவர்கள்தான் குறியீட்டுத் திறன் அனைத்தும் பெற முடிகிறது என அறியப்படுகின்றது. எனவே, தொடக்கப் பள்ளிகளில் ஒரு வகுப்புக்கு ஓராசிரியர் என்ற வகையில் ஆசிரியர்கள் நியமனம் செய்வதன் மூலமும், மாணவர்களின் கல்வித் திறன் வளர்ப்பதற்கு ஏற்ற வகையில் கற்பிக்க மறுபயிற்சி அளிப்பதன் மூலமும், தொடக்கக் கல்வி பயிற்றுவிக்கப்படும் முறைகளைப் பயனுள்ள வகையில் மேற்பார்வையிட்டு சீர்செய்யும் நடவடிக்கை எடுப்பதன் மூலமும், குறியீட்டுத் திறன் மேம்படுத்தப்படும். பள்ளியில் மாணவ–மாணவியர் கல்வி கற்றல் இனிமையான சூழலில் அமைய, பள்ளிக்கு அடிப்படை வசதிகள் இன்றியமையாததாகும். கற்றல் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் அமைந்த, பயில்வதற்கு எளிதான பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதும், பாடத்திட்டத்தின்படி கூடுதல் கற்பித்தல் பொருட்கள் (Teaching Materials) உருவாக்கிக் கொள்ள ஆசிரியர்களைத் தயார் செய்வதும் அரசின் திட்டமாகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட கல்வித் திட்டம் செயல்படுத்தப்படும். பள்ளியின் சுற்றுப்புறச் சூழலும் கற்றலுக்கு ஏற்றதாக இருத்தல் அவசியம். உறுதியான கட்டடம், குடிநீர் வசதி, கழிப்பறை ஆகியவையும் அமைக்கப்படும். விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதுடன், விளையாடுமிடம் அமைப்பதையும் அரசு கருத்தில் கொள்ளும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஒரு மாவட்டத்திற்கு மூன்று பள்ளிகள் வீதம் 30 மாவட்டத்திற்கு 90 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவைகளுக்கு சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசு ஆண்டுதோறும் சுமார் ரூ.2,123 கோடி தொடக்கக் கல்விக்கு செலவிடுகிறது. இத்தொகையானது, பள்ளிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவு செய்ய போதுமானதாக இல்லை. எனவே, பொதுமக்கள், தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் ஆகியோரை அணுகி பள்ளியின் அடிப்படை வசதிகளான கட்டட

வசதி, தளவாடம் மற்றும் கற்றல் கற்பித்தல் திறன் வளர்ச்சிக்கு உபகரணங்கள் போன்ற தேவையான உதவிகளை நன்கொடைகள் மூலம் பெறும் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், தகுந்த கட்டட வசதியுள்ள வகுப்பறைகள் இல்லாத பள்ளிகளுக்கு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் நிதி ஆதாரத்தைக் கொண்டு, கட்டட வசதிகளை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம் செயற்படும் மாவட்டங்கள் தவிர, இதர மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அப்பள்ளிகளில் பயன்படுத்தத் தேவைப்படும் எழுதுபொருள் மற்றும் இதர உபகரணங்கள் ஆண்டுதோறும் வாங்குவதற்காக, 3 ஆசிரியர்கள் வரை உள்ள பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ.300/-ம், 3 ஆசிரியர்களுக்கு மேல் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ.500/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து மாணவ மாணவியரின் ஒட்டு மொத்த உடல் நலன் காத்து, அதன்மூலம் அவர்களுக்கு எதிர்கால நல்வாழ்வு அமைய வகை செய்யும் திட்டத்தின்கீழ், மாநில, மாவட்ட, ஒன்றிய அளவிலும் ஆசிரியர்கட்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் பயனாக மாணாக்கர்களிடையே ஏற்படும் சிறு நோய்களை ஆசிரியர்கள் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட கிராம சுகாதார செவிலியர் அல்லது சுகாதார ஆய்வாளர்களிடம் தெரிவித்து உடனுக்குடன் சிகிச்சை அளித்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 1.5. ஆசிரியர் நியமனம்

பள்ளிகளில் ஆசிரியர்–மாணவர் விகிதம் சீரமைக்கப்படும். ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்படும். ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

## 1.6. பதினோராவது நிதிக் குழு பரிந்துரைகள்

நிதிக்குழுவின் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001–2002ம் ஆண்டில் கீழ்க் குறிப்பிட்டவாறு பள்ளிகள் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது



| வ. எண் | இனங்கள் | பயன்பெறவுள்ள பள்ளிகள் எண்ணிக்கை | தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | இரு அறைகள் கொண்ட கட்டடங்கள் | 40 | 220.00 |
| 2 | குடிநீர் வசதி | 2,025 | 810.00 |
| 3 | கழிவுநீர் வசதி | 411 | 172.62 |
| 4 | மின் வசதி | 1,003 | 097.29 |
| | மொத்தம் | 3,479 | 1299.91 |

## 1.7 கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான முனைப்புத் திட்டம்

மைய அரசின் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான முனைப்புத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் ஊராட்சி ஒன்றியமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியமும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்ட ரூ.150.12 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் தவணையாக ரூ.72.81 இலட்சம் பெறப்பட்டு, கட்டட வேலைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. இதன்மூலம் நீலகிரி மாவட்டத்தில் 15 பள்ளிகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 பள்ளிகளும் பயன்பெறும். மீதி ரூ.77.31 இலட்சத்தினை விடுவிக்க மைய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

## 1.8. வானொலி, தொலைக்காட்சி பெட்டி வழங்குதல்

தொடக்கப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர, மைய அரசின் தொழில்நுட்பக் கல்வித் திட்டத்தின்கீழ், தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு வானொலி–ஒலிப்பதிவுப் பெட்டி 20000 பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 6100 பள்ளிகளுக்கு வானொலி–ஒலிப்பதிவுப் பெட்டியும், 2000 பள்ளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டியும் 2001–2002—ல் அளிக்கப்படவுள்ளன.

**1.9. தாய்மொழி வழிக்கல்வி**

அனைத்துப் பள்ளிகளிலும் (ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் தவிர) 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி பயிற்று மொழியாக அமையும் என அரசு பிறப்பித்த ஆணையானது, சென்னை உயர்நீதிமன்ற 20—4—2000 நாளைய தீர்ப்பால் நிலைநிறுத்தப்படவில்லை. இதனை எதிர்த்து அரசு தாக்கல் செய்த சிறப்பு அனுமதி மனுக்கள் (Special Leave Petition) உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

**1.10. கரும்பலகைத் திட்டம்**

மைய அரசின் கரும்பலகைத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி தொடக்கப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும் கற்றல் கற்பித்தல் தொடர்பான பொருட்கள் வாங்கி வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தற்போது 4 ஆம் கட்டப்பணிகள் நடந்து வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 120 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 1560 நடுநிலைப் பள்ளிகள் ஆகியவற்றுக்கு கற்றல் கற்பித்தல் பொருட்களை வாங்கி வழங்கிட முறையே 11.91 இலட்சமும், ரூ.633.70 இலட்சமும் மைய அரசு வழங்கியுள்ளது. மேற்கண்ட பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும், கற்றல் கற்பித்தல் பொருட்களானது சமப்பகுதியிலுள்ள பள்ளிகளுக்கு 16 வகையான அறிவியல் சாதனங்களும், மலைப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு 26 வகைச் சாதனங்களும், அனைத்துப் பள்ளிகளுக்கும் 80 வகையில் நிலப்படங்கள் மற்றும் பட்டியல் நிலப்படங்கள் (Maps and Charts) வழங்கப்படும். இப்பொருட்களை வாங்கி வழங்கும் பணி முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| 4 ஆம் கட்டப் பணியின் விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|
| மைய அரசு வழங்கியுள்ள தொகை | ரூ.6.46 |
| 30—6—2001 முடிய செலவு செய்யப்பட்டது | ரூ.5.06 |
| மீதியுள்ள தொகை | ரூ.1.40 |

இந்தத் தொகையில் மேலே குறிப்பிட்டுள்ள 1560 நடுநிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக 29 அறிவியல் உபகரணங்கள் வாங்கி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



5-ம் கட்டப் பணிகளின்கீழ், 1828 நடுநிலைப் பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வாங்க மைய அரசு ரூ.9.14 கோடி அனுமதித்துள்ளது.

**1.11. இலவசப் பாடநூல், சீருடை, கரும்பலகை திட்டம்**

இலவசப் பாடநூல், இலவசச் சீருடைகள் மற்றும் இலவசக் கரும்பலகைத் திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு சுமாராக பயனடைந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | | |
|---|---|---|
| இலவசப் பாடநூல் | : | 60.37 இலட்சம் மாணவர்கள் |
| இலவச சீருடைகள் | : | 49.32 இலட்சம் மாணவர்கள் |
| முதல் வகுப்பில் இலவசக் கரும்பலகைகள் | : | 11.34 இலட்சம் மாணவர்கள் |

**1.12 கற்றலில் இனிமை**

குழந்தைகள் இயற்கையாகவே விரும்பி ஏற்கின்ற ஆடல், பாடல், கதைகள், நாடகங்கள் மற்றும் விளையாட்டு போன்ற செயல்வழிகள் மூலம் கற்பதே "கற்றலில் இனிமை"ஆகும். இதுவே குழந்தை மைய செயல் பாட்டுக்கல்வி எனவும் அழைக்கப்படுகிறது. கற்பித்தலை இனிமையாக்குவது ஆசிரியர்களின் தார்மீகக் கடமை. இதற்கு ஆசிரியர்களை முறையாக பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டு 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டம் நடைமுறையில் உள்ள 8 மாவட்டங்களைத் தவிர்த்து, மீதமுள்ள 22 மாவட்டங்களில் ஏறத்தாழ 1,75,000 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, இதுகாறும் 13 மாவட்டங்களிலுள்ள 68149 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கென 'யுனிசெப்' நிறுவனம் ரூ.5.50 கோடி நிதியும் அளித்துள்ளது. அரசு ரூ.52 இலட்சம் செலவிட்டுள்ளது. எஞ்சியுள்ள 9 மாவட்டங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் இப்பயிற்சி வரும் கல்வியாண்டின் தொடக்கத்தில் வழங்கப்பட்டுவிடும். இதற்காக 'யுனிசெப்' நிறுவனம் கற்றலில் இனிமை ஆசிரியர் கையேடுகள் 42,208 பிரதிகளை அச்சிட்டு வழங்கியுள்ளது. முழுமையாக பயிற்சியளிக்கப்பட்ட மாவட்டங்களில் புதிய கற்பித்தல் முறைகளை பயன்படுத்துவதில் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைகளை ஆய்வு செய்ய 199 கற்றலில் இனிமை மையங்கள் (Cluster Centres) உருவாக்கப்பட்டுள்ளன..

### 1.13. கற்றலில் இனிமைப் பள்ளிகள்

மாறுபட்ட சூழ்நிலையில், தரமான கல்வி வழங்கப்பட வேண்டுமென்ற இலட்சியத்தை அடைய, சில பள்ளிகள் இதர பள்ளிகளுக்கு முன்னுதாரணமாக விளங்கினால், இதர பள்ளிகளும் இதனைப் பின்பற்றி நல்ல கல்வி வழங்க தூண்டுகோளாக அமையும் என்ற நோக்கில் தொடக்கக் கல்வித் துறையில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் முதல் இயக்குநர் வரையுள்ள அனைத்துப் பணியாளர்களும் ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்து, அப்பள்ளி மற்றப் பள்ளிகளுக்கு மாதிரியாக விளங்கி, மற்றப் பள்ளிகளையும் இத்தகையச் சிறப்பு வாய்ந்த பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் மொத்தமுள்ள 838 அலுவலர்கள்வசம் ஒவ்வொருவருக்கும் ஒரு பள்ளி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய 838 பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக செயல்பட்டு வருகின்றன. அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளின் நடைமுறைகளை, சிறப்பாக ஆலோசனை வழங்கியும், கண்காணித்தும் வருகின்றனர். இருக்கின்ற வசதி வாய்ப்புகளை நன்முறையில் பயன்படுத்தி சிறப்பான கல்வி வழங்குவதே மாதிரிப் பள்ளிகளின் நோக்கமாகும். கற்பித்தலிலும், பள்ளிச் செயல்பாடுகளிலும் இந்தப் பள்ளிகள் மற்றப் பள்ளிகளுக்கு முன்னோடியாக விளங்க வேண்டும். இப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியைகள் சீருடையில் வருகின்றனர். கற்பித்தலில் ஆசிரியர்கள் முழுமனதுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

வகுப்பறையானது பள்ளிக் குழந்தைகளுக்கு உகந்ததாகவும், ஆர்வத்துடன் அவர்கள் பள்ளிக்கு வரும் பழக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த "சுயமாகக் கற்றலை" (Self Learning) ஊக்குவிக்கும் புதிய கற்பிக்கும் முறை உருவாக்கப்பட்டு, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் மூன்று ஆண்டுகளுக்குள் இதற்கானப் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

### 1.14. பெற்றோர் ஆசிரியர் கழகங்களின் செயற்பாடுகளை முறைப்படுத்துதல்

1975–ஆம் ஆண்டு சங்க விதிகளின்படி, பதிவு செய்யப்பெற்ற சங்கங்களாக, 1994–95 ஆம் ஆண்டிலிருந்து, பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இயங்கி வருகின்றன. பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு, ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்பதற்கு பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு சிறந்த கூட்டமைப்பாக விளங்குகின்றது.





இந்த அமைப்பின் நோக்கங்களாவன:–

(அ) பள்ளி வயது எய்திய எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்கு வழிசெய்தல்.

(ஆ) படிப்பைத் தொடராமல் பள்ளியை விட்டு, இடையில் நின்றுவிடும் குழந்தைகளைப் பள்ளியில் தக்க வைப்பதற்குத் துணையாகும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

(இ) கல்வித்தரமும், மாணவர் திறமும் வளர்வதற்குரிய கற்பித்தல்–கற்றல் செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கு உதவுதல்.

இத்தகைய பெற்றோர் ஆசிரியர் கழகங்கள், பள்ளி நலன் கருதி, பொது மக்களிடமிருந்து பள்ளி வளர்ச்சிப் பணிகளுக்காக நன்கொடை திரட்டும் உரிமை பெற்றவை. பொதுமக்களிடமிருந்து அசையும், அசையாச் சொத்துக்களை நன்கொடையாகப் பெற்று, அடிப்படைத் தேவைகளாகிய கட்டடங்கள் கட்டுவதிலும், சுற்றுச்சுவர்களை அமைத்துத் தருவதிலும், இதர வசதிகளாகிய மின்சாரம், குடிநீர், கழிப்பிடம் முதலியவற்றை ஏற்படுத்தித் தருவதிலும், ஆய்வகத்திற்காக பொருள்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்கி வழங்குவதிலும் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் முன்னின்று செயலாற்றி வருகின்றன. மேலும், பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் பெரும் பங்கு வகித்து பள்ளிக்குத் தேவையான பொருட்களை வழங்கி வருகிறது.

## 2. மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம்

பள்ளிகளில் இடை நிற்றலை அறவே ஒழித்து 100% கல்வி அறிவை அடைவதற்கு அனைவருக்கும் தரமான தொடக்கக் கல்வியை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் பல்வகைச் செயல்பாடுகளில் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டமும் ஒன்று.

### 2.1. திட்டங்கள்

இத்திட்டத்தின்படி முதற்கட்டமாக, பெண்கள் எழுத்தறிவு நிலை தேசிய சராசரிக்கும் குறைவாக உள்ள 4 மாவட்டங்களில் (தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர்) 1994–95 ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளுக்கு ரூ.168.97 கோடி ஒதுக்கீட்டில் செயல் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டமாக, அறிவொளி இயக்கம்

வெற்றிகரமாக செயல்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்திலும், பெண் கல்வியறிவு குறைவாகவுள்ள பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களிலும், பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திலும், 1997–98 முதல் 6 ஆண்டுகளுக்கு ரூ.92.44 கோடி செலவில் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. திட்டச் செலவுகளை மைய அரசும், மாநில அரசும் 85:15 என்ற விகிதத்தில் திட்ட செலவினை ஏற்று வருகிறது.

## 2.2. குறிக்கோள்கள்

இத்திட்டத்தின் குறிக்கோள்கள்படி, 1814 வகுப்பறைக் கட்டடங்களில் 1351 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பள்ளி வசதியில்லா இடங்களில் பள்ளி வசதி ஏற்படுத்துவதற்காக கடந்த சில ஆண்டுகளில் 406 பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2001–2002—ல் சுமார் 70 பள்ளிகள் தொடங்கப்படவுள்ளன. புதிய பள்ளிகளுக்கும் ஏற்கெனவே உள்ள பழைய பள்ளிகளுக்கும் 1764 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:41 லிருந்து 1:39 ஆக குறைந்துள்ளது. பள்ளிகளில் சேராத, சேர்ந்து இடையில் விட்டு விட்ட முழு நேரமும் பள்ளிக்கு வர இயலாத நிலையில் உள்ள குழந்தைகள் கற்பதற்காக, சுமார் 1014 மாற்றுப்பள்ளி மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 26629 மாணவர்கள் பயிலுகின்றனர். ஆண்டு இறுதியில், தகுதி பெற்ற மாணவர்கள் தொடக்கப் பள்ளிகளில் 3, 4, 5 வகுப்புகளில் சேர்ந்து கற்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், சில மாற்றுப்பள்ளி மையங்களைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.3. திட்டத்தின் சிறப்பியல்புகள்

பள்ளிகளின் வளர்ச்சிக்கு சமுதாயத்தின் பங்கேற்பு மிக அவசியமாகிறது. தொடக்கப் பள்ளிகளில் பள்ளி வயது குழந்தைகளைச் சேர்க்கவும், தொடர்ந்து பயிலவும் வேண்டுகோள் விடுக்கும் வகையில் ஒவ்வொரு பள்ளியிலும் கிராமக் கல்விக் குழு அமைக்கப்பட்டு வருகிறது. 100 விழுக்காடு மாணவர் சேர்க்கையை உறுதி செய்ய, பொதுமக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் விழிப்புணர்வு முகாம்களும், சேர்க்கை விழாக்களும் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் பள்ளி வயது குழந்தைகள் அனைவரும் குறிப்பாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின குழந்தைகள் 5 ஆம் வகுப்பு வரை கற்க வழிவகை செய்யப்படுகிறது.



## 2.4. தர மேம்பாடு

பள்ளி வசதியை மேம்படுத்தவும், பழுதுபார்க்கவுமான சில்லறைச் செலவினங்களை மேற்கொள்ள பள்ளிகளுக்கு (உதவி பெறும் பள்ளிகளை தவிர்த்து) ரூ.2000/– வீதமும், கற்றல், கற்பித்தல் பொருள்கள் தயாரிக்க அனைத்துப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500/– வீதமும் வழங்கப்படுகிறது. கல்வியின் தர மேம்பாட்டிற்கு ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒன்றியப் பயிற்சி மையங்களில் ஆங்கிலம் கற்பிக்க புத்துணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது. கருத்தாய்வு மையங்களில் கிராமக் கல்வி குழுவிற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## 2.5. இயலாதோருக்கான கல்வி

இயலாக் குழந்தைகளுக்கான கல்விக்கு உதவும் வகையில், 8 மாவட்டங்களில் 21 ஒன்றியங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஒருங்கிணைந்த கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இயலாக் குழந்தைகள் என கண்டறியப்பட்ட 14549 குழந்தைகளில், சுமார் 13552 குழந்தைகள் முறையான பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2001–2002—ல் மேலும் 21 ஒன்றியங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

## 2.6 சிறப்பு வகுப்புகள்

3, 4, 5 வகுப்புகளில் கற்கும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினப் பெண் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்த மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் 2411 மையங்களில் சுமார் 59277 குழந்தைகள் பயனடைகின்றனர்.

## 2.7 திட்டச் செலவினம்

இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் தொகை பல்வகைச் செலவுகளுக்கும் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது:

| | |
|---|---|
| தரமேம்பாடு | 70% |
| கட்டுமானப் பணி | 24% |
| மேலாண்மை | 6% |

முதற்கட்ட பணிகளுக்கு பெறப்பட்ட ரூ.124.74 கோடியில், இதுவரை ரூ.117.08 கோடி (94%) செலவிடப்பட்டுள்ளது. 2—ம் கட்டப் பணிகளுக்கு

[2001 ஆகஸ்ட் 27

இதுவரை பெறப்பட்ட ரூ.54.03 கோடியில், ரூ.43.83 கோடி (81%) செலவிடப்பட்டுள்ளது.

சமுதாயம், ஆசிரியர்கள், கிராமக் கல்விக் குழு, மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து தயாரித்த 2001–2002 ஆம் ஆண்டுக்கான ரூ.84.11 கோடி திட்டம் மைய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## 3. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

மாணவர்கள் எதிர்கால வாழ்விற்குத் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்வதற்கு ஏற்ற துறையை, பாடப்பிரிவைத் தேர்ந்தெடுக்க அடிப்படையாகவும், வாயிலாகவும் அமைவது இடைநிலைக் கல்வி. தொடக்கக் கல்வியில் பெறுகின்ற மூன்று முக்கியத் திறன்களாகிய படித்தல், எழுதுதல், கணக்கறிதல் ஆகியவை ஒரு மாணவனை இடைநிலைக் கல்வி பெறத் தகுதியுடையவனாக்குகின்றன. மொழிப் பாட அறிவு பெறுவது தொடர்ந்து தேவைப்படுவதான ஒன்று. முக்கியமாக அறிவியலறிவு பெற மாணவனை ஊக்குவித்திட வாய்ப்பான பருவம் இடைநிலைக் கல்விப் பருவம். மிக விரைவாக வளர்ந்துவரும் அறிவியல் உலகில் ஒரு மாணவன் தன்னையும் தகுதியுடையவனாக்கிக் கொள்ள இக்காலக்கட்டத்தில் அறிவியல் கல்விக்கும், கணிப்பொறிப் பயிற்சிக்கும் முக்கிய இடம் தரவேண்டியது அவசியம். ஒரு மாணவனிடம் மறைந்து கிடக்கின்ற அரிய ஆற்றல்களை வெளிப்படச் செய்வதற்கு வாய்ப்பான முக்கியப் பருவம் இடைநிலைக் கல்விப் பருவம். செயல்முறைப் பயிற்சியுடன் இணைந்து பெறுவதால், மாணவன் தன் திறனை வளர்த்துக் கொள்ளத் துணை செய்வது அறிவியல் கல்வி. அத்தகைய கல்வியை இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் அளித்து வருகின்றன.

### 3.1. அடிப்படை வசதிகள் செய்து தருதல்

அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, அறிவியல் ஆய்வக வசதிகள் போன்றவைகளை ஏற்படுத்தித்தர அரசு உறுதிபூண்டுள்ளது. மகளிர் பள்ளிகளில் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தவும் அரசு முனைந்துள்ளது. மாணவர்கள் அறிவியலில் அறிவைப் பெருக்க அறிவியல் ஆய்வுக் கூடங்கள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன. சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பல பள்ளிகளில்



2001 ஆகஸ்ட் 27]

கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலமும் வகுப்பறை வசதிகள் செய்து தரப்படுகின்றன. இருப்பினும், பள்ளிகளில் காணப்படும் அடிப்படை வசதிகளின் தரம் மெல்ல மெல்ல சீ ரழிந்து வருகிறது. அரசினர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், போதிய குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பிட வசதிகள் இல்லை. பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ.300 கோடி அளவுக்கு திட்டங்கள் தீட்டப்பட்டு ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியத்தின்கீழ் வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியிடமிருந்து கடனாகப் பெறப்படவுள்ளது. ரூ.30 கோடி நடப்பு ஆண்டில் கடனாகப் பெற்று, முதல்கட்ட அடிப்படை வசதிகள் செய்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் கட்டட சீரமைப்பிற்காகவும், பழுதுகளைச் சீர் செய்யவும், சிறப்பு பொதுப் பணித் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் அரசால் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது.

### 3.2. அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறிக் கல்வி

மாணவர்கள் குறிப்பாக அறிவியல் துறையில் தங்கள் அறிவை நவீ ன காலத்திற்கேற்ப மேம்படுத்திக்கொள்ளுதலின் பொருட்டும் மற்றும் கணினித் துறையில் அதிக அளவில் வேலைவாய்ப்பை பெருக்கிக் கொள்ளும்பொருட்டும், அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கணிப்பொறி மற்றும் அதைச் சார்ந்த கருவிகள் வழங்குதல் அவசியமாகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டு, 1999–2000 மற்றும் 2000–2001 ஆம் கல்வி ஆண்டுகளில், 1181 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் (மாநகராட்சி பள்ளிகள் உட்பட) இரு கட்டமாக கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கணினி முறை பாடமானது தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன மேற்பார்வையின்கீழ் தனியார் கணினி நிறுவனங்கள் மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது. 2001–2002 ஆம் கல்வியாண்டில் 127 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஏற்கெனவே வகுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புகளுக்கான கணினிப் பாடத்திட்டம் தற்போதைய கணினி அறிவியல் தேவைக்கு ஏற்றதாக இல்லை. இதில் முழுமையான மாற்றம் தேவையென உணரப்பட்டு, இதற்காக டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் தகவல்

தொழில்நுட்பத் துறைக் குழு அமைக்கப்பட்டு, 2000 – 2001ம் கல்வி ஆண்டில் 11 மற்றும் 12 வகுப்புகளுக்கு பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப் பட்ட அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களில், விருப்பப்படும் மாணவர்களுக்கு கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, கணினிப் பாடத்திற்கான மாதிரி வினாத்தாள் தயார் செய்யப்பட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஒவ்வோர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் தலைமையாசிரியர் உட்பட ஐந்து ஆசிரியர்களுக்கு கணினி அறிவியல் பயிற்சி அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

**3.3. வாழ்வொளித் திட்டம்**

தமிழ்நாட்டில் பள்ளி செல்லும் மாணவர்களின் உடல்நலம் பேணிக்காப்பதை கருத்தில் கொண்டு, அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் வாழ்வொளித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவர்களால் பள்ளி மாணவ மாணவியர்களின் உடல்நலப் பரிசோதனை செய்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**3.4. வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றை பள்ளிகளின் மூலம் வழங்குதல்**

மாணவ மாணவியர் பள்ளியில் படித்து முடித்த பின்னர் தங்களது மேல் படிப்பிற்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும், இருப்பிடச் சான்றிதழ் ,குடும்ப வருமானச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் இவைகளைப் பெற அரசு அலுவலகங்களுக்குச் சென்று காத்திருக்காமல் இருப்பதற்காகவும், இதற்கான நடைமுறையைச் சீரமைக்கும் சீரிய நோக்குடனும் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது.

**3.5. ஆசிரியர்களுக்கு புத்துணர்வு பயிற்சி**

மாணவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடரவும், பாதியிலேயே பள்ளிப் படிப்பை விட்டு விலகுவதை குறைக்கவும், தரமான கல்விமுறை பெரும்பங்கினை வகிக்கிறது. எனவே, பள்ளிகளில் பாடத்திட்டம் மாற்றியமைப்பதற்கேற்பவும், நவீ ன கற்பிப்பு முறைக்கேற்பவும், அனைத்து ஆசிரியர்களும் கட்டாயப் புத்துணர்வு பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். இப்பயிற்சியானது ஆண்டு ஊதிய உயர்வுக்கும் உட்படுத்தப்படும்.



**3.6. கல்வி வசதிகளை விரிவுபடுத்துதல்**

ஆறாவது அகில இந்திய கல்வி அளவையின்படி 9995 குடியிருப்புகளில் 5 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உயர்நிலைப் பள்ளி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இந்தக் கருத்தின்படி. மாநிலத்தில் பல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக படிப்படியாக நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன.

கிராமப் புறங்களில் உள்ள குழந்தைகள், குறிப்பாக பெண் குழந்தைகள் எளிதில் சென்று வர இயலும் தொலைவில் பள்ளிகளை ஏற்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் படிப்படியாக நிலை உயர்த்துவது இந்த அரசின் நோக்கமாகும். அதன்படி 2001–2002 ஆம் கல்வி ஆண்டில் 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பள்ளிகளில் உள்ள ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும். எளிதில் செல்ல இயலாத மலைப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் தொடர்ந்து நீண்ட காலம் பணிபுரிவதில்லை. ஆதலால், அப்பள்ளிகளில் கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது. எனவே, அது மாதிரியான பள்ளிகளை பெற்றோர் ஆசிரியர் கழகமே ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள ஏதுவாக அதிகாரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்தந்தப் பகுதியில் தகுதியுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காத நிலையில் அந்தப் பகுதியில் உள்ள பட்டதாரிகளையோ அல்லது முதுகலை பட்டதாரிகளையோ நியமித்துக் கொள்ளலாம்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வித் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. விவசாயம், பொறியியல், வணிகவியல், மனையியல், தொழிற் நுட்பவியல், சுகாதாரம் போன்ற 7 இனங்களில் 66 பாடப்பிரிவுகள் மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்பாடங்களாக கற்றுத் தரப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள குழந்தைகளுக்கான கல்வியை மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் அதிக அளவில் பூர்த்தி செய்து வருகிறது. 1976ல் 30 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மட்டுமே இருந்தன. தற்போது, 2523 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் (959 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட) உள்ளன.

**3.7. கிராமப்புற மாணவ/மாணவியருக்கு ஊக்கப் பரிசுத் தொகை வழங்கும் திட்டம்**

கிராமப் பகுதியில் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/ மாணவியருக்கு ஆண்டுதோறும் மே திங்களில் அரசுத் தேர்வு இயக்குநரால் தேர்வு நடத்தப்பட்டு இதன்மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 100 நபர் (50 மாணவர் + 50 மாணவியர்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவருக்கும் 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் ரூ.1000/– படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**3.8. இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னதமான திட்டத்தின்படி, மேல்நிலை வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் அனைவருக்கும் இலவச மிதி வண்டி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 80000 மாணவர்கள் பயன் பெறுவர்.

**3.9. அறிவியல் கண்காட்சி**

மாணவர்களிடையே அறிவியல் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டு மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

**3.10. தடகள விளையாட்டுப் போட்டிகள்**

மாணவர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் தடகள விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

3.11. 'உலக அளவில் போட்டியிடும் திறனைக் கண்டறியும் திட்டம்' (World Beaters Talent Spotting Scheme) எனும் புதியதொரு திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 6 முதல்





8-ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களிடம் குறிப்பிட்ட விளையாட்டுகளில் காணப்படும் திறமைகள், பல சோதனைகள் மூலம் கண்டறியப்படும். குறிப்பிட்ட விளையாட்டுகளில் தேவையான திறமை பெற்ற மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கமளிக்க இத்திட்டம் உதவும்.

**3.12. பெற்றோர் ஆசிரியர் கழகம்**

1975 ஆம் ஆண்டு சங்க விதிகளின்படி, பதிவு பெற்ற சங்கங்களாக 1994–95 ஆம் ஆண்டிலிருந்து பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இயங்கி வருகின்றன. பள்ளி வயது எய்திய அனைத்துக் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பது, பள்ளி இடை நிற்றல் ஏற்படாமல் மாணவர்களைத் தக்க வைப்பது, கல்வியின் தரம் உயர பாடுபடுதல், உள் கட்டமைப்பு வசதிகளான கட்டடம் கட்டுதல், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்து தருதல் போன்றவை பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நோக்கங்களாகும். இத்தகைய பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் பள்ளி வளர்ச்சிக்காக பொதுமக்களிடமிருந்து நன்கொடை திரட்டவும், அசையும், அசையாச் சொத்துக்களை நன்கொடையாக திரட்டவும் உரிமை பெற்றவை. மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வியில் சேருவதற்கான கையேடுகளை வெளியிட்டு, நுழைவுத் தேர்வு இலவசப் பயிற்சிகளையும் பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்தி வருகிறது.

**3.13. பள்ளிச் சீரமைப்பு மாநாடு**

தமிழகத்திலுள்ள அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்வி மேம்படுவதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளான விளையாடுமிடம், கட்டடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின்விசிறி வசதி, கற்பிக்கும் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் முதலானத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தும் திட்டம் வழி செயகிறது. இந்த வசதிகளைப் பூர்த்தி செய்யப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன. இத்திட்டத்தை முழு ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமென அனைத்து கல்வித் துறை அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். அதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அனைத்து மாவட்டங்களிலும் பெறப்பட்ட நன்கொடை மதிப்பு பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| அசையும் சொத்து | 47.19 |
| அசையாச் சொத்து | 246.39 |
| மொத்தம் | 293.58 |

### 3.14. நாட்டு நலப்பணித் திட்டம்

இந்திய விடுதலைக்குப் போராடி வெற்றி பெற்றபின் எதிர்கால தலைமுறையின் முன்னேற்றத்திற்காகவே என்.எஸ்.எஸ். என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான இளந்தலைமுறையினரைப் பேணிக் கற்பிக்கும் கல்வி அமைப்புகள் சமூகத்தை விட்டு தனித்திருக்கக்கூடாது என்று அது விரும்பியது. சமூகத்தின் சிக்கல்களை, குறிப்பாக கிராமப்புற, நகர்ப்புற ஏழைகளின் பிரச்சினைகளை மாணவர்கள் உணர்ந்திட வாய்ப்பாகும் வழி ஒன்றினை அவர்கள் விரும்பினார்கள்.

சமூகப் புரட்சியை நோக்கும் வழியில் மாணவர்களின் உத்வேகத்திற்கும், வலிமைக்கும் வாய்க்காலாய் அது அமைந்திட வேண்டும்.

எனவே, காந்தி நூற்றாண்டு விழா ஆண்டில் (1969) நாட்டுநலப் பணித் திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது தற்போது 1170 மேல்நிலைப் பள்ளிகளில் 58000 தொண்டர்களுடன் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 120 மணிநேரம் கொண்ட தொடர் நடவடிக்கைகளும், 10 நாட்கள் சிறப்பு முகாம்களும், இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்திற்கான செலவினை 7 : 5 என்ற விகிதத்தில் மைய, மாநில அரசுகள் ஏற்கின்றன.

#### சாரணர் இயக்கம்

தமிழ்நாட்டில் 4098 பள்ளிகளில் சாரணர் இயக்கம் செயல்படுகிறது. சமூக நல நடவடிக்கைகளில் சாரணர் இயக்கத்தில் 84300 மாணவர்களும் 49108 மாணவிகளும் பங்கேற்கின்றனர். 2000–2001 ஆம் கல்வியாண்டில் திறமையான 3205 சாரண சாரணியர்கள் "ராஜ்ய புரஸ்கார்" விருது பெற்றுள்ளனர். இத்திட்டம் 1998–1999ல் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக நடைபெறும் புதிய திட்டமாகும். இத்திட்டத்தில் கூடுதல் எண்ணிக்கையில் மாணவ, மாணவியர்களைச் சேர்த்து அவர்கள்



பயன்உடைய முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென அரசு ஆண்டுதோறும் ரூ.5.00 இலட்சம் செலவிடுகிறது.

#### தேசிய மாணவர் படை

தமிழ்நாட்டில் 718 பள்ளிகளில் தேசிய மாணவர் படை இயக்கம் செயல்பட்டு வருகிறது.

#### இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

1920 ஆம் ஆண்டில் இந்திய நாட்டில் தொடங்கப்பட்ட இந்திய செஞ்சிலுவைச் சங்கமானது 3781 பள்ளிகளில் நன்முறையில் இயங்கி வருகிறது. மனித நேயத்தை பாதுகாத்தல், இரத்த வங்கி ஏற்படுத்தி இரத்த தானம் செய்து தேவைப்படுவோருக்கு அளித்தல் போன்ற சேவையை இச்சங்கம் ஆற்றி வருகிறது.

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

நல்ல திறமையான ஆசிரியர்களை உருவாக்குவதும், அவர்கள் பணிக்கு சேர்ந்தபின் நவீன கற்பித்தல் முறைக்கேற்ப பணியிடைப் பயிற்சி அளிப்பதுவே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

### 4.1. ஆசிரியர் கல்வி

ஆசிரியர் கல்விக்கென தனி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டு, 1990 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்ககத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் விபரம் வருமாறு

| | |
|---|---|
| மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் | 29 |
| அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 8 |
| அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையல்லாதோர் | 7 |
| **ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்** | |
| அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 35 |
| அரசு அங்கீகாரம் பெற்று நிதியுதவி பெறாத சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 2 |
| ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 1 |

[2001 ஆகஸ்ட் 27

அரசு நிறுவனங்களில் சிறுபான்மை மொழிப் பிரிவுகள்

| | |
|---|---|
| உருது | 2 |
| மலையாளம் | 1 |
| தெலுங்கு | 3 |

இவற்றில் 17 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென தனிப் பிரிவு தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள மொத்த சேர்க்கை இடங்களில் 60% இடங்கள் முறையாக +2 முடித்து வரும் மாணவர்களுக்கும், 40% இடங்கள் அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் ஒதுக்கப்படுகிறது. இதன்படி பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி அளிப்பதெனில் மேலும் பல ஆண்டுகள் பிடிக்கும். இதனை மனதிற்கொண்டு பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் நடப்பு ஆண்டிலேயே பயிற்சி கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் ஏற்பட்ட இடர்பாடுகளை களையும் பொருட்டு 2001–2002 ஆம் கல்வியாண்டு முதல், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையினை ஒற்றைச்சாளர முறையில் நிரப்ப ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சமீபத்தில் தொடங்கப்பட்ட 8 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் (குருகத்தி, ஜி. அரியூர், லால்குடி, மன்னார்குடி, உத்தமசோழபுரம், உத்தமபாளையம், களியாம்பூண்டி, கீழப்பழூர் ஆகிய இடங்களில் உள்ளவை) ரூ.12 கோடி செலவில் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைப் பொறுத்தவரை, அவைகளின் கட்டடங்கள் யாவும் மிகவும் பழமை வாய்ந்தவை. முதல் கட்டமாக இராயப்பேட்டை, ராணிப்பேட்டை, கெங்கவள்ளி, சின்னதாராபுரம் ஆகிய நான்கு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் ரூ. 150 இலட்சம் செலவில் கட்டடம் கட்டும் பணி நடை பெற்று வருகிறது.

## 4.2. ஆராய்ச்சியும், பயிற்சியும்

மாணவர்கட்குத் தரமான கல்வி வழங்குவதற்கு ஏதுவாக, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககமும், 29 மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் இணைந்து, ஆசிரியர்



2001 ஆகஸ்ட் 27]

பயிற்சியாளர்கட்குக் கல்வி மற்றும் கற்பித்தல் சார்ந்த அடிப்படையான பயிற்சியை அளிக்கின்றன.

## 4.3. குறிக்கோள்கள்

இவ்வியக்ககத்தின் நோக்கங்களை, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்ற மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்.

(அ) மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் பயிற்சி ஆசிரியர்களின் திறன்களையும், தொழில் திறமையையும் மேம்படுத்தி ஆசிரியர் கல்விப் பணித்திட்டத்தை, ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியநிலைக்கு உயர்த்துதல்,

(ஆ) கல்வித்தர மேம்பாட்டிற்கான பாடப் புத்தகங்கள், கையேடுகள், பயிற்சியேடுகள், ஒலி–ஒளி நாடாக்கள் உள்ளடக்கிய கற்றல்–கற்பித்தல் கருவிகளைத் தயாரித்தல்,

(இ) அனைத்து ஆசிரியர்களுக்கும் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்,

(ஈ) தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி வழங்கும் பல்வேறு பகுதிகளில் ஆய்வுகள் மேற் கொள்ளுதல், அனைத்து நிலை ஆசிரியர்களிடமும் ஆய்வு நோக்கை ஊக்குவித்தல்,

(உ) நூலறிவை நடைமுறையில் தெளியும் பொருட்டு செயலாராய்ச்சியில் கண்டறிந்தவற்றைப் பரப்புதல்.

## 4.4. நிர்வாகத் திறன்கள்

மேற்காணும் குறிக்கோள்களை அடையக் கீழ்க்கண்ட நிர்வாகத் திறன்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

➢ தேசிய ஆசிரியர் கல்வி அமைப்புடனும், பல்கலைக்கழகத் துறைகளுடனும் கலந்தாலோசித்து எல்லா நிலையிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்வியின் பாடத்திட்டத்தைச் சீர்செய்து திருத்தி அமைத்தல்.

➢ படிப்படியான நிலைகளில் எல்லா வகுப்புகளுக்கும் பாடப்புத்தகங்களும், கையேடுகளும், பயிற்சியேடும் தயாரித்தல்.

➢ கல்வித் தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் பாடங்களைத் தெளிவிக்கும் ஒலி–ஒளி நாடாக்கள் தயாரித்தல்.

➢ உடல்நலக் கல்வி, மக்கள்தொகைக் கல்வி, உயிர்கொல்லி நோய் (எய்ட்ஸ்) கல்வி, மழலையர் கல்வி, நிறுவனத் திட்டமிடுதல் ஆகியவற்றிற்கான கற்றல் ஆதாரப் பொருட்களைத் தயாரித்தல்.

➢ தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாடப்பொருள், கற்பித்தல் முறை மற்றும் பொதுத் தலைப்புகளில் பணியிடைப் பயிற்சி அளித்தல்.

➢ பாடப் புத்தகங்கள் மற்றும் கற்றல்–கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றின் பயன்பாடு குறித்து ஆய்தல்.

➢ பள்ளி மற்றும் வகுப்பறை சூழல் குறித்த செயல் முறை ஆய்வுகள் மேற்கொள்ள ஆசிரியர்களையும், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களையும் ஊக்குவித்தல்.

➢ ஆய்வின் முடிவுகளைப் பரப்ப ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் செய்தி மலர்கள் வெளியிடுதல்.

➢ பயிற்சி குறித்த பல்வகைத் திட்டமிடுதலுக்கு வசதியாக மாவட்டங்களில் புள்ளி விவர மையங்கள் பராமரித்தல்.

## 4.5. தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி

அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற தொடக்கக் கல்வி இயக்கம் மூலம் ஒன்றாம் வகுப்புப் பாட நூல்கள் மாற்றியமைக்கப்பட்டதால், இப்புதிய நூல்களைக் கையாண்டு, மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமாகக் கற்பிப்பது எவ்வாறு என்பதில் அனைத்து ஒன்றாம் வகுப்பு ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

வகுப்பறையானது பள்ளிக் குழந்தைகளுக்கு உகந்ததாகவும், ஆர்வமுடன் அவர்கள் பள்ளிக்கு வரும் பழக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டும். இந்நிலையை ஏற்படுத்த சுயமாகக் கற்றலை (self-learning) ஊக்குவிக்கும் பொருத்தமான கற்பிக்கும் முறை உருவாக்கப்பட்டு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் மூன்று ஆண்டுகளுக்குள் இதற்கான பயிற்சி அளிக்கப்படும்.



## 4.6. தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்புப் புத்தறிவுப் பயிற்சி

சிறப்புப் புத்தறிவுப் பயிற்சியின் முக்கிய நோக்கம், தேசியக் கல்விக் கொள்கையில் கூறப்பட்டவாறு குறைந்தபட்சக் கல்வித் திறன் பெறச்செய்ய, அடைய வேண்டிய திறன்களை அறிமுகப்படுத்துவதாகும். இத்திட்டத்தின் மூலம் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலுமான தமிழகத்திலுள்ள அனைத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும், தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு விட்டன. இத்திட்டத்தின்கீழ் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டு பயிற்சி அளிக்கப்படும். மைசூர் ஆங்கில மொழிக்கான வட்டார நிறுவனம் (RIE), கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்துக்கான தேசிய நிறுவனம் (NIEPA), கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவனம் (NCERT), மற்றும் ஆசிரியர் கல்விக்கான தேசிய குழுமம் (NCTE) ஆகியவற்றிலுள்ள கல்வி வல்லுநர்களைக் கொண்டு கணக்கு மற்றும் அறிவியல் பாடங்களில் பெட்டகங்கள் தயாரித்து ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

## 4.7 வட்டார வள ஆதார மையங்கள்

தேசிய கல்விக் கொள்கையின்படி அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்க வலியுறுத்தப்படுகிறது. பள்ளி வயதைக் கடந்த குழந்தைகள், வேலை செய்யும் குழந்தைகள், நலிவுற்ற வகுப்பைச் சார்ந்த குழந்தைகள், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திய குழந்தைகள் மற்றும் எல்லா பள்ளி வயது குழந்தைகளும் முறையான பள்ளித் திட்டத்தில் சேர்ந்து கல்வி பெறச் செய்வது என்பது மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்பட்டு வரும் 8 மாவட்டங்களில் வட்டார வள ஆதார மையங்கள் (Block Resource Centres) ஏற்படுத்தப்பட்டு, அம்மையங்களுடன் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து, அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி என்ற இலக்கினை அடைய ஒரு இணைப்புப் பாலமாக செயல்பட்டு வருகின்றது. இதேபோன்று மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படாத மற்ற மாவட்டங்களிலும் வட்டாரவள ஆதார மையங்கள் ஏற்படுத்தப்படும். தற்போது தேனி மாவட்டத்தில் 8 மையங்களும், திருவாரூர் மாவட்டத்தில் 10 மையங்களும், சிவகங்கை மாவட்டத்தில் 12 மையங்களும் ஆக மொத்தம் 30 வட்டார வள ஆதார மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2001 ஆகஸ்ட் 27

## 4.8. ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான புதிய கல்வித் திட்டம்

1994–95–ல், தொடக்கநிலை, இடைநிலை, மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கான கலைத் திட்டமும், புதிய பாடத்திட்டமும், குறைந்தபட்ச கற்றல் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன் விளக்கமும் உள்ளடக்கிய பாடப்புத்தகங்கள் எழுதி வழங்கப்பட்டுள்ளன. ஆனால், ஆசிரியர் பட்டயப் பயிற்சியைப் பொறுத்தவரை, 1990–ல் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் கல்விக் கலைத் திட்டம் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இது மிகவும் பழமையானது. இக்காலத்திற்குத் தேவையான குறைந்தபட்ச கற்றல் திறன் உள்ளிட்ட மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை வளர்க்கும் ஆசிரியர் பட்டயப் பயிற்சிக் கல்வி என்பது மிகவும் தேவையான ஒன்றாகும். இதன் அடிப்படையில் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் தயாரித்த திறன் அடிப்படையிலான கலைத் திட்டத்தினைப் பின்பற்றி ஆசிரியர் கல்விக் கலைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கக் கருதப்பட்டு, இதற்கென, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் தலைமையிலான 12 பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தெரிந்தெடுக்கப்பட்ட பாடக்குழு உறுப்பினர்களின் துணைகொண்டு பல்வேறு கருத்துப்பட்டறைகள் நடத்திக் கண்ட திறன்கள் அடிப்படையில், ஆசிரியர்கள் தங்களை ஈடுபடுத்தி பாடம் நடத்துவதற்குரிய ஆசிரியர் கல்விக் கலைத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. முதன்முறையாக, பணிமுன் ஆசிரியர் பயிற்சிக்குரிய, திருத்தியமைக்கப்பட்ட திறன் அடிப்படையிலான கலைத் திட்டம் நூல் வடிவில் தயாரிக்கபட்டுள்ளது.

ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சிக்காக தயாரிக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தில், கைத்தொழில், உடற்பயிற்சிக் கல்வி, யோகாசனம், ஊனமுற்றோருக்கு ஒருங்கிணைந்த கல்வி ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. இதே போன்று, இடைநிலை ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும் கணினிக் கல்விப் பயிற்சித் திட்டம் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆறாம் வகுப்பு முதல் +2 வகுப்பு வரை உள்ள அனைத்து பாடங்களுக்கும் கலைத் திட்டம் தயாரிக்கப்படும். இதற்கென பள்ளிக் கல்வி இயக்ககத்திலிருந்து ஒவ்வொரு பாடத்திலும் உள்ள வல்லுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கூடி விவாதித்து அவரவர்களுக்குரிய பாடங்களுக்கான கலைத் திட்டத்தினைத் தயாரிப்பார்கள். பின்னர் இவைகள் பணிமனைகள்மூலம் கண்டறியப்படும் திறன்கள் அடிப்படையில் செயல்படுத்தப்படும்.



2001 ஆகஸ்ட் 27]

மேல்நிலை வகுப்புகளில் தொழிற் கல்விக்கான கலைத் திட்டம் இவ்வாண்டு தயாரிக்கப்பட வுள்ளது.

## 4.9 திறந்தவெளி பள்ளித் திட்டம்

பத்தாம் வகுப்பு வரையில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நிறுத்திவிட்டவர்கள் தொடர்ந்து படித்து, பத்தாம் வகுப்புக் கல்வித் தகுதியைப் பெறுவதற்கு வழி செய்வதற்கென தமிழ்நாடு திறந்தவெளி பள்ளித் திட்டம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டம் வீட்டில் இருந்துகொண்டே கல்வி கற்பதற்கு வழி செய்வதால் குறிப்பாக இல்லத்தரசிகள், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைச் சார்ந்த பெண்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றி வரும் அடிப்படை ஊழியர்கள், வறுமை போன்ற காரணங்களினால் பள்ளிப் படிப்பைக் கைவிட்டவர்கள் போன்ற அனைத்து மக்களும் படித்துப் பயன் பெறுவதற்கு வழிவகை செய்வதே இத்திட்டத்தின் சிறப்பு. இதனால் எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் நேரடியாக இத்திட்டத்தில் சேர்ந்து பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றார்கள். திருத்தி அமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி திறந்தவெளி பள்ளிக் கல்வித் திட்டத்திற்குரிய பாடப்புத்தகங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. திறந்தவெளி பள்ளியில் வழங்கப்படும் பத்தாம் வகுப்புச் சான்றிதழ் அரசுத் தேர்வுத் துறை வழங்கும் இடைநிலைப் பள்ளியிறுதி சான்றிதழுக்கு இணையானதாக ஏற்கப்பட்டு, வேலை வாய்ப்பிற்கும் பயன்படும் தகுதியுடையது.

## 4.10. கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம்

பள்ளிக் குழந்தைகளுக்கு பாடத் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி–ஒளி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும்.

தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் ஒளி நாடாக்கள் தயாரிக்கப்பட்டு சென்னைத் தொலைக்காட்சியின் "காண்போம் கற்போம்" கல்வி நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்படும். மேலும் இதன் ஒளி நாடாக்கள் 29 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி

நிறுவனங்களிலும், வட்டார வள ஆதார மையங்களிலும் ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சியின் போது பயன்படுத்தப்படும்.

தேசியக் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம், மாநிலக் கல்வித் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் வெளிநாட்டுக் கல்வி அமைப்புகள் தயாரித்துள்ள ஒலி—ஒளி நிகழ்ச்சிகளையும் பெற்று நமது தேவைக்கேற்ப மாற்றியமைத்து, பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தொடக்கக் கல்விச் சீரமைப்பு குறித்து பல்வேறு கருத்துகள் ஆராயப்பட்டு பள்ளிகளில் பாடமுறையை ஒலி-ஒளிப் பேழைகள்மூலம் கற்பிக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. இதற்கென ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் இயங்கும் கல்வித் தொலைக்காட்சிப் பிரிவினை மேம்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பக் கருவிகள் ரூ.102 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் அவசியமான சீரமைப்புப் பணிகள் ரூ.16.10 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகிறது.

## 5. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

கல்லாமையை இல்லாமை ஆக்கும் சீரிய குறிக்கோளை எய்த தமிழக எழுத்தறிவு முனைப்பு ஆணையும் செயல்பட்டு வருகிறது. 15 முதல் 35 வரை வயதுடைய எழுத்தறிவற்றவர்களை எழுத்தறிவு பெற்றவர்களாகவும், அவர்கள் சுய வேலை வாய்ப்பு பெறும் நிலையை உருவாக்குவதும், பள்ளியில் இடை நின்ற 6–14 வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும் ஐந்தாம் வகுப்புக்கு இணையாக கல்வி அளித்தலுமே இவ்வாணையத்தின் பணியாகும். இதற்காக கீழ்க்காணும் பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 5.1. அறிவொளி இயக்கம்

### முழு எழுத்தறிவு இயக்கம்

இதன்மூலம் 15 முதல் 35 வரை வயதுப் பிரிவினில் எழுத்தறிவற்றவர்களை எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றுதல் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் தொடங்கப்பட்ட திட்டமானது மார்ச் 1999—ல்



அனைத்து மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் மூலம் பயன் பெற்றவர்கள் சுமார் 79.70 இலட்சம் பேர். இதற்காக மைய அரசு ரூ.36.44 கோடியும், மாநில அரசு ரூ.17.54 கோடியும் செலவிட்டுள்ளன.

### தொடர் கல்வி இயக்கம்

புதிதாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் கற்றதை மறந்து விடாது நிலை நிறுத்திக்கொள்ளும் திறன் பெற்றிட தொடர் கல்வி இயக்கம் நடைபெறுகிறது. அதன்படி 27 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளது. மைய அரசு ரூ.18.54 கோடியும், மாநில அரசு ரூ.8.54 கோடியும் செலவு செய்துள்ளது. இவ்வியக்கத்தின்மூலம் இதுவரை சுமார் 56.19 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். தற்போது காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு முடிவு பெறும் தருவாயில் உள்ளது.

### வளர் கல்வி இயக்கம்

முழு எழுத்தறிவு இயக்கம் மற்றும் தொடர்கல்வி இயக்கம் முடிவுற்ற பின், மூன்றாவது கட்டமாக வளர் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

முழு எழுத்தறிவு இயக்கம் மற்றும் தொடர்கல்வி இயக்கத்தின் மூலம் கல்வி அறிவு பெற்றவர்கள் கற்றதனை நிலை நிறுத்திக்கொள்ளவும், விரிவுபடுத்தவும், நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இது ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு நூலகமாக செயல்படுத்தப்படுகிறது. இந்நூலகத்தில் நாளிதழ்கள், வார இதழ்கள் மற்றும் வாழ்க்கைக்கு தேவையான எளிய புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், பல்வேறு பயிற்சிகளும் இந்நூலகங்களின்மூலம் வழங்கப்படுகின்றன. இதற்காகும் செலவினத்தை முதல் மூன்று ஆண்டுகளுக்கு மைய அரசு முழு நிதியுதவியுடன் ஏற்றுக்கொள்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மைய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் செலவினத்தை மேற்கொண்டு இத்திட்டம் செயல்பட உள்ளது. இத்திட்டத்தினை 5 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து நடைமுறைப்படுத்த மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிகளிடம் ஒப்படைத்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது 9 மாவட்டங்களில் 2832 மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமாராக 5 முதல் 7 வளர் கல்வி மையங்களுக்கென ஒரு தலைமை வளர் கல்வி மையம் செயல்படுகிறது. மேலும் தொடர்கல்வி இயக்கம் முடிவுற்ற 14

மாவட்டங்களில் வளர் கல்வி மையங்கள் தொடங்க கருத்துருக்கள் மாநில அரசின் மூலமாக நடுவண் அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. மேலும், மூன்று மாவட்டங்களுக்குக் கருத்துருக்கள் நடுவண் அரசிற்கு பரிந்துரைக்க வேண்டி அரசின் பரிசீலனையில் உள்ளன.

### 5.2. குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புப் பள்ளிசாராக் கல்வித் திட்டம்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் 6–14 வயது குழந்தைத் தொழிலாளர்களுக்கென ஏழு பள்ளிசாராக் கல்வித் திட்டங்கள் நான்கு மாவட்டங்களில் சனவரி 2000 முதல் மைய, மாநில அரசு நிதியுதவியுடன் தொடங்கப்பட்டன இத்திட்டத்தின் காலவரம்பு மூன்று ஆண்டுகள். இத்திட்டத்திற்கு பதிலாக 1.4.2001 முதல், கல்வி உறுதித் திட்டம் மற்றும் புதிய மாற்றுத் திட்டத்தினை மைய அரசு செயல்படுத்த இருப்பதால், 30.3.2001க்கு பிறகு நிதி அளிக்க இயலாதென மைய அரசு தெரிவித்ததன் பேரில், 31.3.2001-உடன் இத்திட்டம் முடித்துக்கொள்ளப்பட்டது. இதனால் சுமாராக 17837 பேர் பயனைடந்துள்ளனர்.

### 5.3. பள்ளிசாராக் கல்வித் திட்டம் 90 திட்டப் பகுதிகள்

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்குச் செல்லாத, பள்ளியை இடைநிறுத்திய குழந்தைத் தொழிலாளர்களுக்காகவும், பெண்களுக்காகவும் 90 பள்ளி சாராக் கல்வித் திட்டங்களை, 18 மாவட்டங்களில் (திருநெல்வேலி, திருச்சி, கரூர், திருவாரூர், நாகப்பட்டினம், நாமக்கல், சேலம், தஞ்சாவூர், ஈரோடு, சிவகங்கை, விருதுநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், வேலூர், திண்டுக்கல், தூத்துக்குடி, நீலகிரி) செயல்படுத்த மைய அரசால் அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஓராண்டிற்கு மைய அரசின் பங்காக ரூ.6.29/– கோடியும், மாநில அரசின் பங்காக ரூ.2.34/– கோடியும் செலவிட உத்தேசிக்கப்பட்டு, இதில் மைய அரசும் தனது பங்கில் முதல் தவணையாக ரூ.3.09/– கோடியும் இரண்டாம் தவணையாக ரூ.62.83 இலட்சத்தையும் விடுவித்தது. இத்திட்டம் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக செயல்படுத்தப்பட்டு, மூன்றாம் ஆண்டின் முடிவில் 5–ம் வகுப்புக்கு இணையான கல்வி வழங்கப்பட்டு அதனால் சுமார் 2,25,000 பேர் பயனடைவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது, எனினும் 1.4.2001 முதல் கல்வி உறுதித் திட்டம் மற்றும் புதிய மாற்று திட்டத்தின் கீழ் தற்போதுள்ள பள்ளிசாராக் கல்வி திட்டத்தினை மாற்றி அமைக்க வேண்டுமென்று மைய அரசு கூறியுள்ளது. மேலும் 31.3.2001 வரைதான் நிதி அளிக்கப்படுமென்று மைய அரசு தெரிவித்தன்பேரில், 31.3.2001 உடன்



இத்திட்டம் முடித்துக்கொள்ளப்பட்டது. மைய அரசிடமிருந்து உத்தரவு பெறப்பட்டதும் புதிய திட்டம் தொடங்கப்படும்.

### 5.4. மக்கள் கல்வி நிறுவனம் (JSS):

தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களிடம் தொழில் நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், சுயவேலை வாய்ப்பினை உருவாக்கும் நோக்கத்திலும் மக்கள் கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வரும் மக்கள் கல்வி நிறுவனங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு ஒரு தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றன. இவை மைய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மூலம் குறுகிய கால பயிற்சிகளான சோப்பு, சோப்புத் தூள், ஷாம்பு, வாசனைபத்தி, பினாயில் போன்றவை தயாரிப்பதற்கான பயிற்சிகளும் நீண்ட கால பயிற்சிகளான வீட்டு மின் இணைப்புப் பணி, நீர் இறைப்பு இயந்திரம் பழுது பார்த்தல், தட்டச்சு, தையல் பயிற்சி, வண்ணத்திரை அச்சிடுதல், கவரொட்டி தயாரிப்பு, தொலைக்காட்சி, வானொலிப் பெட்டி பழுது பார்த்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. பள்ளிசாராக் கல்வி திட்டத்தினை மாநில அரசு செயல்படுத்தி வருவதோடல்லாமல் தன்னார்வு தொண்டு நிறுவனங்களும் 16 மாவட்டங்களில் மைய அரசின் முழு உதவியுடன் செயல்படுத்தியுள்ளது.

**நடைமுறையில் உள்ள திட்டங்கள் சார்பான புள்ளி விவரங்கள்**

**தொடரகல்வி இயக்கம்**

| வ. எண் | மாவட்டம் | பயனடைந்தோர் விவரங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆதி திராவிடர் | பழங் குடியினர் | இதரர் | மொத்தம் |
| 1. | விழுப்புரம் | 1.10 | 0.13 | 1.79 | 3.02 |
| 2. | திருவள்ளூர் | 1.03 | 0.06 | 1.8.5 | 2.94 |
| 3. | காஞ்சிபுரம் | 1.01 | 0.03 | 1.84 | 2.88 |
| கூடுதல் | | 3.14 | 0.22 | 5.48 | 8.84 |

**வளர்கல்வி இயக்கம்**

| வ. எண் | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட மையங்கள் | | செயல்படும் மையங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | வளர் கல்வி மையங்கள் | தலைமை வளர் கல்வி மையங்கள் | வளர் கல்வி மையங்கள் | தலைமை வளர் கல்வி மையங்கள் |
| 1. | விருதுநகர் | 288 | 62 | 264 | 60 |
| 2. | சிவகங்கை | 154 | 22 | 154 | 22 |
| 3. | புதுக்கோட்டை | 441 | 63 | 441 | 63 |
| 4. | கன்னியாகுமரி | 165 | 23 | 165 | 23 |
| 5. | மதுரை | 247 | 35 | 220 | 35 |
| 6. | தேனி | 82 | 12 | 82 | 12 |
| 7. | வேலூார் | 424 | 60 | 398 | 58 |
| 8. | திருநெல்வேலி | 387 | 55 | 381 | 55 |
| 9. | இராமநாதபுரம் | 350 | 50 | 350 | 43 |
| | மொத்தம் | 2538 | 382 | 2455 | 377 |

**மக்கள் கல்வி நிறுவனம் (JSS):**

**தொழிற் கல்வி பயிற்சி மூலம் பயன்பெற்றோர் விவரம்**

| | எண்ணிக்கை | ஆதிதிராவிடர் | பழங்குடியினர் |
|---|---|---|---|
| ஆண்கள் | 11.212 | 2812 | – |
| பெண்கள் | 17,300 | – | – |
| மொத்தம் | 28,512 | 2812 | – |



## 6. அரசுத் தேர்வுகள்

பள்ளிக் கல்வித் துறை சார்ந்த பல தேர்வுகள் நடத்துவது, தேர்வு முடிவுகளை வெளியிட்டுச் சான்றிதழ்களை வழங்குவது ஆகிய பணிகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் முக்கியப் பணிகளாகும். மறைபொருள் தன்மையை ஒவ்வொரு நிலையிலும் காப்பதே இத்துறையின் தலையாயக் கடமையாகும். இப்பணி ஆற்றுவதில் ஒவ்வோர் ஆண்டும் பெருகிவரும் தேர்வு எழுதும் மாணவர் எண்ணிக்கை ஒரு சவாலாக அமைகிறது. எனவே, பொறுப்புப் பகிர்தல் முறையைப் பின்பற்றுவதன்மூலம் இச்சவாலுக்கு ஈடுகொடுத்து தேர்வு நடத்தும் முறையில் கவனம் செலுத்த வேண்டிய திறன்பாடுகள், மறைபொருள் தன்மை காத்தல், குறைபாடுகளற்ற முறையில் தேர்வு முடிவினை வெளியிடுதல் ஆகிய குறிக்கோள்களை அடைய வழிசெய்யப்பட்டுள்ளது

### 6.1. பள்ளி சார்ந்த தேர்வுகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் சுமார் 40 வகையான அரசுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள், பள்ளி இடைநிலை (எஸ்.எஸ்.எல்.சி) மற்றும் மேல்நிலை பள்ளித் தேர்வுகள்(+2) பெரிய அளவிலானவை. இவை மட்டுமன்றி ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன், ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு, கைத்தறி, நெசவு, இசை, மரவேலை, தையல், அச்சு மற்றும் விவசாயம் போன்ற தொழில்பாடம் தொடர்பான தேர்வுகளும் இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகின்றன.

### 6.2. பிற தேர்வுகள்

மைய அரசு பணியாளர் தேர்வாணையம்(Union Public Service Commission), பணியாளர் தேர்வாணையம் (Staff Selection Commission) போன்ற அமைப்புகளுக்காக இவ்வியக்ககம் 30 வகையான தேர்வுகளை நடத்தி வருகிறது.

### 6.3. கேட்டல், பேசுதல் திறன் தேர்வு

மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறனறிய மொழிப் பாடங்களின் பகுதியாக இதற்கான தேர்வு புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டு, தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு 20 மதிப்பெண்கள் வழங்கிட அந்தந்த பள்ளி மொழி ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[2001 ஆகஸ்ட் 27

### 6.4. மாற்று எண் மதிப்பீட்டு முறை

விடைத்தாள் மதிப்பீட்டில் மறைபொருள் தன்மையைக் காத்திடும் பொருட்டு, மேல்நிலைப் பள்ளித் தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், கணிதம், வணிகவியல், கணக்குப் பதிவியல், வணிகக் கணிதம், தொழிற்கல்வி பாடப் பிரிவில் பொறியியல் தொடர்புடைய பாடங்கள் ஆகியவற்றுக்கு மாற்று எண் வழங்கி விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. அத்துடன், மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ-இந்தியன், ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு முதலானவற்றுக்கும் மாற்று எண் வழங்கி விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

### 6.5. போலிச் சான்றிதழ்களைத் தடுத்தல்

இடைநிலை, மேல்நிலை, ஆங்கிலோ-இந்தியன், மெட்ரிகுலேஷன் மற்றும் ஆசிரியர் பட்டயத் தேர்வு சான்றிதழ்களுக்கு மதிப்பெண் சான்றுகளில் முப்பரிமான வில்லை (Hologram Sticker) ஒட்டும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பெருமளவில் போலிச் சான்றிதழ்கள் வெளிவருவது தடுக்கப்படுகின்றது.

### 6.6. மதிப்பெண் முறையில் மாற்றம்

2001—ம் ஆண்டுக்கு முன், +2 வில் தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வுக்கெனவும், செய்முறைத் தேர்வுக்கெனவும் தனித்தனியாக மதிப்பெண் நிர்ணயம் கிடையாது. 2001—ஆம் ஆண்டிலிருந்து செயல்முறை கலந்த (Theory subjects involving practicals) எழுத்துப் பாடங்களில் எழுத்துத் தேர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 150 மதிப்பெண்களில் தேர்ச்சி பெற குறைந்த பட்சம் 40 மதிப்பெண்களும், செயல்முறைத் தேர்வில் 50க்கு குறைந்தபட்சம் 30 மதிப்பெண்களும் கட்டாயம் பெற வேண்டுமென நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஆங்கிலோ-இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வுகளிலும் அறிவியல் பாடத்தில் தேர்ச்சி பெற, எழுத்துத் தேர்வு மற்றும் செயல்முறைத் தேர்வில், எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 200க்கு 70 மதிப்பெண்களும், செயல்முறைத் தேர்வில் 100க்கு 35 மதிப்பெண்களும் கட்டாயம் பெறவேண்டும்.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு இறுதித் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்கள், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் கொண்டதாக வழங்கப்பட்டு வருகின்றன.



2001 ஆகஸ்ட் 27]

### 6.7. கணினி அறிவியல் பாட விடைத்தாள் மாற்றம்

இவ்வாண்டு (2001) நடந்து முடிந்துள்ள மேல்நிலைப் பள்ளித் தேர்வில், கணினி அறிவியல் பாட எழுத்துத் தேர்வுக்கு (Computer Science - Theory Paper) கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி வினாத்தாள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

(அ). வினா ஒன்றுக்கு ஒரு மதிப்பெண் கொண்ட 75 வினாக்கள் (Multiple choice questions).

(ஆ). ஒவ்வொரு வினாவிற்கும் 2 மதிப்பெண்கள் கொண்ட 20 வினாக்கள்.

(இ). ஒவ்வொரு வினாவிற்கும் 5 மதிப்பெண்கள் கொண்ட 7 வினாக்கள்.

மேற்படி மூன்று வகை வினாக்களில், ஒரு மதிப்பெண் கொண்ட 75 வினாக்கள் உள்ள தொகுப்பில் மட்டும், தேர்வருக்கு வழங்கப்படும் வினாத்தாள் தொகுப்பு வேறு வேறாக இருப்பினும், அதே 75 வினாக்களே அனைத்து தொகுப்பிலும் வெவ்வேறு இடங்களில் இடம் பெற்றிருக்கும்.

மேற்படி வினாத்தாள் முறை மாற்றம் கணினி தேர்வுக்கு மட்டும் நடந்து முடிந்துள்ள மேல்நிலைக்கல்வி பொதுத் தேர்வில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பிற பாடங்களைப் பொறுத்த அளவில் ஏற்கெனவே நடைமுறையிலுள்ள முறையே தொடரப்படும்.

### 6.8. மைய மதிப்பீட்டு மையங்களில் O.M.R. முறை பயன்படுத்துதல்

மேல்நிலைத் பள்ளித் தேர்வு மைய மதிப்பீட்டு மையங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த மதிப்பெண் தாள்களுக்குப் பதிலாக, O.M.R. முறையிலான மதிப்பெண் தாள் முறை சோதனை முறையில் கடைபிடிக்கப்பட்டது. இம்முறையானது, தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிட பெரிதும் பயனளிப்பதாக உள்ளது. எனவே, இந்த O.M.R. மதிப்பெண் தாள் மூலம் பதியப்படும் மதிப்பெண்கள், நேரிடையாக O.M.R. கருவிமூலம் Scanning முறையில் கணினி மூலம் மதிப்பெண் பதிவு செய்யப்படுகிறது. இம்முறையின்மூலம் மனித உழைப்பும் நேரமும் மிகவும் மிச்சப்படுகிறது.

சோதனை முறையில் மேல்நிலைக்கல்வி தேர்வுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, மிகவும் வெற்றி கண்டுள்ளதால் இந்த OMR முறை மேல்நிலைக் கல்வித் தேர்வில் நிரந்தரமாக செயல்படுத்தப்படும்.

### 6.9. விடைத்தாள் நகல் வழங்குதல்

மேல்நிலைப் பள்ளித் தேர்வில் இதுவரை மறு மதிப்பீடு முறை இல்லை. 2001-ம் ஆண்டிலிருந்து மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் தேர்வர்கள் விரும்பினால் அவர்களுக்கு விடைத்தாள் நகல்கள் வழங்கவும், மறுமதிப்பீடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கென விடைத்தாள் நகல் பெற ரூ.50/-ம், மறுமதிப்பீடு செய்ய ரூ.400/-ம் கட்டணம் செலுத்த வேண்டும்.

### 6.10. மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளில் முதல் மூன்று நிலை பெறும் மாணவர்களுக்குச் சலுகை

மாணவர்களின் படிப்பு ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் மேல்நிலைப் பள்ளிப் பொதுத் தேர்வில், தமிழ் மொழியைப் பாட மொழியாகக் கொண்ட மாணவர்களில் மாநில அளவில் முதல் மூன்று மாணவர்களுக்கும், மாவட்ட அளவில் முதல் மூன்று மாணவர்களுக்கும் (அதாவது அரசு, நகராட்சி, மாநகராட்சி பள்ளிகளிலிருந்து ஒரு மாணவன், உதவிபெறும் பள்ளிகளிலிருந்து ஒரு மாணவன், சுயநிதி பள்ளிகளிலிருந்து ஒரு மாணவன்) உயர்கல்விக்கான செலவை (மருத்துவம், பொறியியல் போன்ற பட்டப்படிப்பு செலவு உட்பட) அரசே ஏற்று வருகிறது. இதேபோன்று 10-வது படித்து முடித்த சிறந்த மாணவர்களுக்கு மாநில அளவில் 3 மாணவர்களுக்கும், மாவட்ட அளவில் 3 மாணவர்களுக்கும் ஒவ்வொருவருக்கும் ரூ.1,500/- வழங்கப்படுகிறது.

### 6.11. முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உயர்கல்விக்கான சலுகை

மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று, தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைத்து படிப்பினைத் தொடர இயலாத ஏழை, எளிய, நலிவுற்ற பிரிவினரைச் சார்ந்த மாணவ மாணவிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நேரடியாக பாராட்டப்பட்டு, முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உயர்கல்விக்கான செலவுத் தொகை அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது.

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

மாணவர் சமுதாயத்தின் நலனுக்காக திறமை மிகுந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கும்பொருட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் 1987ம் ஆண்டு நிறுவப்பட்டது.



7.1. அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, வனத் துறை ஆகிய துறைகளால் நடத்தப்படும் பள்ளிகள் உட்பட) ஆகியவற்றின் பட்டதாரி ஆசிரியர், மொழி ஆசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இது தவிர, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்கள் ஆகியவற்றுக்கான விரிவுரையாளர் மற்றும் பயிற்றுநர் பணியிடங்களுக்கும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் கல்லூரிகளின் விரிவுரையாளர் பணியிடங்களுக்கும், அரசு சட்டக் கல்லூரி விரிவுரையாளர் பணியிடங்களுக்கும், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள முதுநிலை விரிவுரையாளர், விரிவுரையாளர் பணியிடங்களுக்கும் வாரியம் தகுந்த பணிநாடுநர்களை தேர்வு செய்கிறது.

7.2 ஆசிரியர் பணியில் நாட்டம், திறமை மற்றும் ஈடுபாடு கொண்ட ஆசிரியர்களை, கீழ்க்கண்ட வெளிப்படையான போட்டித் தெரிவு நெறிகளின்படி தேர்வு செய்யும் பொறுப்பினை ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது :

அ) வெளிப்படையான போட்டித் தேர்வுகள் நடத்துதல்.

ஆ) நேர்முகத் தேர்வின்மூலம் சிறப்பான தகுதிவாய்ந்த பணி நாடுநர்களை தேர்வு செய்தல்

இ) வெளிப்படையான தெரிவு நெறிமுறைகளின் மூலம் பொது மக்களின் நம்பிக்கையைப் பெறுதல்.

### 7.3. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், மொழி ஆசிரியர் தேர்வு

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், மொழி ஆசிரியர் ஆகிய பணியிடங்களுக்கான நேரிடை நேர்முகத் தேர்விற்கான விதிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதன்படி ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க வேலை வாய்ப்பகத்திலிருந்து பணிநாடுநர்கள் பட்டியல்

[2001 ஆகஸ்ட் 27

1: 3 என்ற விகிதத்தில் பதிவு முன்னுரிமை அடிப்படையில் பெறப்பட்டு அப்பணிநாடுநர்களுக்கு நேர்காணல் நடத்தி அந்நேர்காணலில் அவர்கள் பெறும் அதிகபட்ச மதிப்பெண்கள் அடிப்படையிலும் இனச்சுழற்சி அடிப்படையிலும் தேர்வு செய்யப்படுகின்றனர். இந்த நேர்காணலுக்காக வழங்கப்படும் 50 மொத்த மதிப்பெண்களானது கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது—

| | | |
|---|---|---|
| 1 | வேலைவாய்ப்பகப் பதிவு உரிமைக்கு (வருடத்திற்கு ஒரு மதிப்பெண் வீதம்) | 12 அதிகபட்ச மதிப்பெண் |
| 2 | ஆசிரியர் அனுபவம் (வருடத்திற்கு ஒரு மதிப்பெண் வீதம்) | 10 அதிகபட்ச மதிப்பெண் |
| 3 | பட்டப்படிப்பில் கல்வித் தகுதி | |
| | முதல் வகுப்பில் | 2 மதிப்பெண் |
| | 70 மதிப்பெண் அதற்குமேல் | 4 மதிப்பெண் |
| | 80 மதிப்பெண் அதற்குமேல் | 6 மதிப்பெண் |
| | கல்வியியலில் கல்வித் தகுதி | |
| | முதல் வகுப்பில் | 2 மதிப்பெண் |
| | 70 மதிப்பெண் அதற்குமேல் | 4 மதிப்பெண் |
| | 80 மதிப்பெண் அதற்குமேல் | 6 மதிப்பெண் |
| 4 | எம்.பில். | 2 மதிப்பெண் |
| 5 | பி.எச்.டி | 4 மதிப்பெண் |
| 6 | கல்வித் திட்டம் சாரா சான்றிதழ்கள் | 4 மதிப்பெண் |
| 7 | நேர்முகத் தேர்வு | 6 மதிப்பெண் |



2001 ஆகஸ்ட் 27]

இத்தகைய பணிநாடுநர்களை வேலை வாய்ப்பகப் பட்டியலிருந்து முன்னுரிமைப்படி தேர்வு செய்யப்படும்போது 50 வயது கடந்தவர்களை தேர்வு செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இதனால் அவ்வப்போது மாற்றியமைக்கும் பாடத்திட்டத்தினை இவர்கள் கையாள இயலாமல் கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது. எனவே இவ்வாண்டு முதல் இத்தகைய ஆசிரியர் பணியிடங்களுக்கும் எழுத்துத் தேர்வு நடத்தி நேர்காணல்மூலம் தேர்ந்தெடுக்கலாமா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

### 7.4. கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களுக்கு பணிநாடுநர்களை தேர்வு செய்தல்

மாணவர்களின் அறிவுத் திறன்களைப் பெருக்கி பொறுப்புள்ள சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பில் கல்லூரி விரிவுரையாளர்களுக்கு பெரும் பங்கு உண்டு என்ற காரணத்தைக் கருத்திற்கொண்டு அரசு கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் ஆகியவைகளிலுள்ள விரிவுரையாளர் மற்றும் பயிற்றுநர் காலிப் பணியிடங்களைத் திறந்தவெளி விளம்பரம் மூலம் தேர்வு செய்வதற்கான விதிமுறைகள் அரசால் வரையறுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியக் குழுவும், வெளிப்படையான போட்டித் தேர்வுகள் நடத்துதல் மூலமே தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களை தேர்வு செய்வதை வலியுறுத்துகிறது. அதன்படி தகுதிவாய்ந்த ஆசிரியர்களை தேர்வு செய்ய நாளேடுகளில் திறந்த விளம்பரம் செய்து அதன்மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஒரு முகமை மூலமாக (Nodal agency) எழுத்துத் தேர்வும் நடத்தப்படுகிறது. (பகுதி–I Objective type மற்றும் பகுதி–II Descriptive type) ஒவ்வொரு பகுதிக்கும் 200 மதிப்பெண்கள் வீ தம், எழுத்துத் தேர்விற்கு மொத்தம் 400 மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. பணிநாடுநர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும், இனச்சுழற்சி அடிப்படையிலும் 1:2 என்ற விகிதத்தில் (காலிப் பணியிடங்கள் 5க்கும் குறைவாக இருப்பின் 1:3 என்ற விகிதத்தில்) நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு நேர்காணல் நடத்தியபின் (20 மதிப்பெண்கள்), எழுத்துத் தேர்விலும், நேர்காணலிலும் பணிநாடுநர்கள் பெறும் அதிகபட்ச மதிப்பெண்கள் அடிப்படையிலும் இனச்சுழற்சி அடிப்படையிலும் தகுதிவாய்ந்த பணிநாடுநர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

நேர்காணலின்போது, பணிநாடுநர்களின் தகுதி அறிய கீழ்காணும் முறையில் சோதிக்கப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகிறது

அதிகபட்ச மதிப்பெண்கள்

| | | |
|---|---|---|
| 1. ஆளுமை | – | 02 |
| 2. பொது அறிவு | – | 03 |
| 3. வெளிப்படுத்தும் ஆற்றல் | – | 10 |
| 4. கல்வித்திட்டம் சாரா சான்று | – | 05 |
| மொத்தம் | – | 20 |

7.5. எழுத்துத் தேர்வு மற்றும் நேர்க்காணல் முறையைப் பின்பற்றியே பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல் தொழில்நுட்பப் பயிலகங்கள், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தைச் சார்ந்த விரிவுரையாளர் பணியிடங்களுக்கும் பணிநாடுநர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

7.6 நேர்காணலுக்கு வரும் சிறுபான்மை மொழி ஆசிரியர்கள் மற்றும் ஆதரவற்ற விதவைப் பெண்கள் பெறவேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண்களை குறைத்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதே கொள்கையின் அடிப்படையில் பார்வையற்ற ஆசிரியர்களின் நலன் கருதி அவர்கள் பெறவேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண்களைக் குறைப்பது பற்றியும் கருதப்பட்டு வருகிறது. பார்வையற்ற பணிநாடுநர்களின் நலத்தை கருத்திற்கொண்டு, முன்னர் நிரப்ப இயலாத பணியிடங்களில் (வெவ்வேறு பாடங்களில்) 14 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு செய்ய அரசு அனுமதி வழங்கியது. இதன் அடிப்படையில் தேர்வு நடத்தி 6 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும், 2 பட்டதாரி ஆசிரியர்களும் தேர்வு செய்யப்பட்டனர். எஞ்சிய 6 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

7.7 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் விவசாயத்தை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, விவசாயப் பட்டதாரி ஆசிரியர்களை தொழிற்பாட ஆசிரியர்களாக நியமனம் செய்யும் பணி ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 100 காலிப் பணியிட மதிப்பீட்டின்படி, தகுதிவாய்ந்த பணிநாடுநர்களின் பட்டியல் வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்டது. இதுதொடர்பாக





தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு பெறப்பட்ட பின்னர் அதற்கேற்ப தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்.

7.8 ஒவ்வொரு தேர்வு ஆண்டின் இறுதியிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் ஆகிய இனத்தவருக்குரிய நிரப்பவியலாத பணியிடங்கள் கண்டறியப்பட்டு, அப்பணியிடங்கள் பின்னடைவு பணியிடங்களாக (backlog vacancies) அறிவிக்கப்படுகிறது. இத்தகைய பணியிடங்கள் அடுத்து வரும் தேர்வு நியமன ஆண்டிற்கு கொண்டு செல்லப்பட்டு, புதிய பணியிடங்கள் நிரப்புவதற்கு முன்பு நிரப்பப்படுகிறது.

## 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் நாட்டுடமை ஆக்கப்பட்ட பாடநூல்களை அச்சடித்து விற்பனை செய்து வருகிறது. பாடநூல்கள் தனியார் துறை மூலமாக வெளியிடப்பட்ட காலகட்டங்களில் பாடநூல்களின் விலை அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டு வந்த காரணத்தினாலும், பல்வேறு வெளியீட்டாளர்களால் பாடநூல்கள் வெளியிடப்பட்டதால் ஒருமைத்தான ஒழுங்கின்றி பாடநூல்கள் அமையப் பெற்றதாலும், பாடநூல்கள் உரிய காலத்தில் விநியோகம் செய்யப்படாத நிலையில், ஏழை மாணவர் மற்றும் அவர்தம் பெற்றோர்களுக்குப் பெரிதும் இன்னல் ஏற்பட ஏதுவாயிற்று. இந்த அவல நிலையைப் போக்கும் நோக்கத்தில் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் நிறுவப்பட்டது. இக் கழகம் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடநூல்களை அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்கள், தமிழ்நாட்டுக் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை அறிந்துகொள்ளும் வகையில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான சிறுபான்மை மொழிப் பாடநூல்களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகமே தயாரித்து வெளியிட்டுள்ளது. சிறுபான்மைமொழிப் பாடநூல்களைப் பொறுத்த மட்டிலும் அதே ஆண்டு மொழி பெயர்க்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

### 8.1 பாடநூல் அச்சிடும் முறை

மாணவர்களுக்குத் தரமான பாடநூல்களை நியாயமான விலையில் வழங்க வேண்டுமென்ற குறிக்கோளுடன், ஒப்பந்தப்புள்ளிமூலம் தாள்

மற்றும் மேலட்டை ஆகியவற்றின் தரம் உறுதி செய்யப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தப்புள்ளிமூலம் அச்சகத்தார் தேர்வு செய்யப்படுவதால் புதிய அச்சகத்தினர் சேர்க்கப்படுகிறார்கள். இவ்வகையில் அச்சுக் கூலியும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன், மாணவர்களுக்கு நியாயமான விலையில் பாடநூல்கள் கிடைக்க வழிவகை செய்யப்படுகின்றது. இவ்வாறு தரமாகப் பெறப்படும் தாள். மேலட்டை அச்சகத்தார்களுக்கு வழங்கப்பட்டு அச்சுப்பணி முன்னேற்றம் மிகுந்த கவனத்துடன் மேற்பாரவை செய்யப்படுவதால் மாணவர்களுக்கு உரிய காலத்தில் தரமான பாடநூல்கள் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது. மேலும் அச்சடிப்பதற்கான தாள், மேலட்டை, நெகடிவ். அச்சகப்படிகள் ஆகியவை மொத்தமாக சேர்த்து வழங்கப்படுவதால் அச்சகத்தார்கள் பணியை தாமதமின்றி செய்து முடிககின்றனர்.

## 8.2 பள்ளிகளில் பாடநூல்கள்

1 முதல் 12 வரை உள்ள வகுப்புகளுக்கான பாடநூல்களையும் மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பாடநூல்களையும் பாடநூல் கழகம் அச்சிடுகிறது. இது தவிர, குறிப்பேடுகளையும் அச்சிடுகிறது. அவ்வாறு அச்சிடும் நூல்களையும், குறிப்பேடுகளையும், 21 பிராந்திய அலுவலகங்கள் மூலம் 50 கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் 1590 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. மாநில வாரியான பள்ளிகளின் வகுப்புகளுக்கு 324 பாடத் தலைப்புகளில் 1.46 கோடி பாடநூல்கள் ரூ.15.40 கோடிக்கும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் 10 ஆம் வகுப்புக்கு 10 பாடத்தலைப்புக்ளில் 5.15 இலட்சம் பாடநூல்கள் ரூ.1.38 கோடிக்கும் 2000-2001—ல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலோ இந்திய பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் 8 தலைப்புகளில் பாடநூல்கள் அச்சிடப்பட்டுள்ளது. 1 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்புவரை பாடநூல்களின் மேலட்டைகள் லேமினேட் செய்து வெளியிடப்படுகின்றன. தீண்டாமை, சமய நல்லிணக்கம், சாதி ஒற்றுமை பற்றிய கருத்துக்களைகொண்ட வாசகங்கள் பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களின் வசதிக்காக ஆங்கிலம்–தமிழ் அகராதியினையும் கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

## 8.3 இலவசப் பாடநூல்கள்

இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் கல்வியாண்டில் கீழ்க்கண்டவாறு பாடநூல்கள் விநியோக்கப்பட்டுள்ளன.



| | | எண்ணைப் | மதிப்பு |
|---|---|---|---|
| 1. | உதவித் தொடக்க கல்வி அலுவலர் மூலம் (1—8 வகுப்புகளுக்கு) | 3.54 கோடி பாடநூல்கள் | ரூ.25.23 கோடி |
| 2. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் (1—10 வகுப்புகளுக்கு) | 46.41 இலட்சம் பாடநூல்கள் | ரூ.5.21 கோடி |
| 3. | பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் (6—10 வகுப்புகளுக்கு) | 37.51 இலட்சப் பாடநூல்கள் | ரூ.5.95 கோடி |

## 8.4 மற்ற துறைகளுக்கு குறிப்பேடுகள்

2001–2002 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறைகளுக்கு ரூ.9.17 கோடி அளவிற்கு குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன. பகிரங்க மார்க்கெட்டில் 81 இலட்சத்திற்கு குறிப்பேடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 8.5. வட்டார அலுவலகங்கள்

தற்போதுள்ள 21 வட்டார அலுவலகங்களில், நான்கிற்கு சொந்த கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எஞ்சிய 17 அலுவலகங்கள் வாடகை கட்டடத்தில் செயல்படுகின்றன.

## 9. பொது நூலகங்கள்

'பொதுமக்கள் அனைவருக்கும் அதிக செலவு இல்லாமல் புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தை எற்படுத்திக் கொடுப்பதுதான் பொது நூலகத் துறையின் குறிக்கோளாகும்'. வாசகர்களைக் கவரும் வகையில் நூலகங்களில் சிறந்த பயனுள்ள நூல்கள் இடம் பெறச் செய்தல். நூல்களை ஒளிப்படம் எடுக்க வாசகர்களுக்கு வசதி செய்தல் ஒலி, ஒளி பதிவுப்பெட்டி. வி.சி.ஆர். மூலம் கல்விச் செய்திகளை அளித்தல், சிறந்த நூலகக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் கிராமப்புறங்களில் நூலகச் சேவையை வளர்த்தல் ஆகியவற்றின் மூலம் பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி சிறந்த சேவை செய்தல் என்ற குறிக்கோளை நோக்கி பொது நூலகத் துறையின் பணி தொடர்கிறது.

**9.1. புதிய நூலகங்கள் திறத்தல்**

தமிழ்நாட்டில் தற்போது 1598 நூலகங்கள் உள்ளன. இதில் உறுப்பினர்கள் 28.52 இலட்சம் ஆவர். 5000 மக்கள் தொகைக்கு அதிகம் உள்ள ஊர்களில் தேவையின் அடிப்படையில் கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

**9.2. கிராமப்புற நூலகங்கள்**

நூலகப் பயனை கிராமப்புறங்களுக்கும் நீட்டித்து அம்மக்களும் பயனடையும் வகையில் 625 கிராமப்புற நூலகங்கள் திறக்க அனுமதியளிக்கப்பட்டு அவை நன்முறையில் இயங்கி வருகின்றன. இது தவிர, 649 பகுதிநேர நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

**9.3 நடமாடும் நூலகங்கள்**

நூலக வசதி இல்லாத பகுதிகளில் நூலகப் பணியை விரிவுபடுத்த நடமாடும் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய 7 மாவட்டங்களில் இப்பணி நடைபெற்று வருகிறது. இம்மாவட்டங்களில் 7 நடமாடும் நூலகங்கள் உள்ளன.

**9.4. செய்தி மடல்**

பொது நூலகத் துறை சார்பாக, 'பொது நூலகச் செய்தி மடல்' என்ற காலாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகளும், பொது நூலக இயக்கம் சம்பந்தப்பட்ட பல்வேறு சிறந்த செய்திகளும் இடம் பெற்று வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**9.5. வாசகர் வட்டம்**

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள், உள்ளூர் பிரமுகர்கள் ஆகியோரைக் கொண்டு 'வாசகர் வட்டம்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் அறிமுகம், இலக்கியக் கூட்டம் முதலிய பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்த ஆவன செய்யப்பட்டு வருகின்றன.





**9.6. இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி பெறுதல்**

கொல்கத்தாவிலுள்ள இராசாராம் மோகன்ராய் என்ற அறக்கட்டளை இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் பொது நூலக வளர்ச்சிக்கு இணை மானியம் அளித்து வருகிறது. இந்த அறக்கட்டளையிலிருந்து கணிசமான அளவில் இணை மானியம் பெற்று தமிழ்நாட்டில் நூலகச் சேவையை செவ்வனே ஆற்றி வருகிறது.

**9.7. நூல்கள் வாங்குதல்**

நாள்தோறும் வளர்ந்துவரும் அறிவியல் முன்னேற்றத்தின் பயனை அடையவும், மக்களின் தேவையை நிறைவு செய்யவும், நூல் தேர்வுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் வாங்கப்பட்டு நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. நூலக வரியில் ஏறத்தாழ 25 விழுக்காடு தொகையானது (சுமாராக ரூ. 4 கோடிக்கு) நூல்கள் வாங்க செலவு செய்யப்படுகிறது. தமிழ் நூல்களில் அதிகபட்சம் 850 படிகள்வரை வாங்கப்படுகின்றன. மேலும், ஏற்பு விலையில் நூலகக் கழிவின்றி நூல்கள் வாங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் பதிப்பாளர்கள் சிறந்த நூல்களை வெளியிட ஏதுவாகிறது.

**9.8. குடிமைப்பணி கல்வி மையங்கள்**

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, வங்கிகள், இரயில்வே தேர்வாணையம், மத்திய தேர்வாணையம், தமிழ்நாடு தேர்வாணையம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பங்குகொள்ளும் வகையில் "குடிமைப் பணி கல்வி மையங்கள்" என்ற பிரிவு மாவட்ட மைய நூலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரிவை நகராட்சிகளில் அமைந்துள்ள நூலகங்களுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**9.9. நூலகக் கட்டடங்கள் கட்டுதல்**

நூலகங்களுக்குப் படிக்க வரும் வாசகர்கள் காற்றோட்டமான பரந்த இட வசதியுடன் கூடிய கட்டடங்களில் அமர்ந்து படிக்க ஏதுவாக வாடகை கட்டடங்களில் செயல்பட்டுவரும் நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 1598 நூலகங்களில் 897 நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு அவை

சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், 172 நூலகங்களுக்கு கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

## 9.10. வாசகர்களுக்கு கூடுதல் வசதி

### அ. ஒளிப்படம் எடுத்தல்

வாசகர்கள் தாங்கள் வாசிக்கும் நூல்களில் முக்கியமான பகுதிகளை ஒளிப்படம் எடுத்துக்கொள்ள, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், வேலூர், தஞ்சாவூர், ஈரோடு, தூத்துக்குடி, கடலூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஒளிப்படம் எடுக்கும் கருவி (ஜெராக்ஸ் இயந்திரம்) அமைக்கப்பட்டுள்ளது.

### ஆ. தொலைக்காட்சி

வாசகர்கள் படிக்கும் பழக்கத்துடன் அன்றாடச் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள 21 மாவட்டங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒலி, ஒளிநாடா பதிவுப்பெட்டி (விசிஆர்), வசதி ஆகியவை அமைக்கப்பட்டு வாசகர்களின் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### இ. கணிப்பொறி வசதிகள்

பொது நூலகங்களில் கணிப்பொறியின் அவசியத்தை உணர்ந்து முதல் கட்டமாக கன்னிமாரா பொது நூலகத்திற்கு கணிப்பொறி வசதி, மேலிப்நெட் வசதி மற்றும் இன்டர்நெட் வசதி ஏற்படுத்தப்பட்டது. இதுதவிர அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் கணிப்பொறி வசதி அமைத்துத் தரக் கருதி சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்ட மைய நூலகங்களிலும் கணிப்பொறி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 9.11 நூலக நிதியைப் பெருக்குதல்

நூலக ஆணைக் குழுக்கள் நூலக வரி வசூல் மூலம் கிடைக்கும் வருவாயை நம்பியே செயல்படுகின்றன. வளர்ந்துவரும் நூலகத் தேவைக்கு இவ்வருவாய் போதுமானதாக இல்லை. எனவே, பொது மக்களும் நூலக இயக்கத்தில் ஆர்வம் காட்டவும், நூலகங்களில் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், பொதுமக்களிடத்திலிருந்து நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதுவரை பெற்ற நன்கொடைகள் மதிப்பு வருமாறு:—



ரூபாய் கோடியில்

| | | |
|---|---|---|
| 1) புரவலர் நன்கொடை மூலம் பெறப்பட்ட தொகை | : | 1.15 |
| 2) கட்டடம்/காலிமனை மதிப்பு | : | 6.53 |
| 3) தளவாடங்கள் மதிப்பு | : | 2.78 |
| மொத்தம் | : | 10.46 |

## 9.12. கன்னிமாரா பொது நூலகம்

இந்தியாவிலுள்ள நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றான கன்னிமாரா பொது நூலகம் வியத்தகு நூலகமாக விளங்குவதுடன் சென்னை மாநகரத்தில் சிறப்பான நூலகச் சேவையை செய்து வருகிறது. இதன் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. தவிர ரூ.179/- இலட்சத்தில் 21,823 சதுர அடியில் புதிய இணைப்புக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சிக்கு ரூ.1 கோடிக்கு தளவாடங்கள் நூல் அடுக்குகள் ஆகியவை வாங்கப் பட்டுள்ளன. நூற்றாண்டு பழமையான நூலகக் கட்டடம் அதன் பொலிவு மாறாமல் ரூ.121 இலட்சம் செலவில் புதுப்பிக்கும் பணி தொல்பொருள் ஆய்வுத் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நூலகத்திலுள்ள மதிப்பு வாய்ந்த பழைய நூல்களை நுண்படமாக்கி பாதுகாக்க நுண்படப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## IV. புள்ளி விவரம்

### பள்ளிக் கல்வி புள்ளி விவரம்

1. பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்
2. பள்ளிகளின் எண்ணிக்கை
3. ஆசிரியர்களின் எண்ணிக்கை
4. ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்
5. பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்களின் சேர்க்கை, ஆசிரியர்கள் எண்ணிக்கை (நிர்வாக வகைப்படி)

6. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை – வகுப்பு வகைப்படி

7. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை – வகுப்பு வகைப்படி

8. மாணவர்கள் சேர்க்கைப்பட்டியல்

9. தொழிற்கல்விப் பாடங்கள்

10. பள்ளிப்படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)

11. உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)

12. மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி

13. உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி)

14. மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி)

15. (அ) உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு மார்ச் 2000

(ஆ) உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு மார்ச் 2001

16. பெண்களின் கல்வி நிலை புள்ளி விவரம்

அ. பெண்களின் எழுத்தறிவு நிலை

ஆ. மாணவிகளின் சேர்க்கை விவரம்

இ. அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியைகளின் எண்ணிக்கை

ஈ. பள்ளியை விட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு)



## புள்ளி விவரங்கள்

## பள்ளிக் கல்வித்துறை 2000–2001

### 1. பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்

| வயது தொகுதி | இனம் | மொத்த எண்ணிக்கை | மாணவர் சேர்க்கை | மாணவர் சேர்க்கை |
|---|---|---|---|---|
| | | (இலட்சத்தில்) | | (விழுக்காட்டில்) |
| 6 - 11 | ஆண் | 29.61 | 29.18 | 98.55 |
| | பெண் | 28.40 | 27.91 | 98.27 |
| | மொத்தம் | **58.01** | **57.09** | **98.41** |
| 11 - 14 | ஆண் | 19.43 | 18.32 | 94.29 |
| | பெண் | 18.64 | 17.19 | 92.22 |
| | மொத்தம் | **38.07** | **35.51** | **93.28** |
| 14 - 16 | ஆண் | 12.11 | 8.46 | 69.86 |
| | பெண் | 11.80 | 7.05 | 59.75 |
| | மொத்தம் | **23.91** | **15.51** | **64.87** |
| 16 - 18 | ஆண் | 12.91 | 4.24 | 32.84 |
| | பெண் | 12.58 | 3.72 | 29.57 |
| | மொத்தம் | **25.49** | **7.96** | **31.23** |
| 6 - 18 | ஆண் | 74.06 | 60.20 | 81.29 |
| | பெண் | 71.42 | 55.87 | 78.23 |
| | மொத்தம் | **145.48** | **116.07** | **79.78** |

**2. பள்ளிகளின் எண்ணிக்கை**

| பள்ளிகளின் வகை | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 30619 | 30796 | 30844 | 31052 | 31142 |
| நடுநிலைப்பள்ளிகள் | 5503 | 5473 | 5538 | 5640 | 5703 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 3574 | 3765 | 4208 | 4551 | 4500 |
| மேல்நிலைப்பள்ளிகள் | 2734 | 2975 | 3149 | 3292 | 3439 |
| **மொத்தம்** | **42430** | **43009** | **43739** | **44535** | **44784** |

**3. ஆசிரியர்களின் எண்ணிக்கை**

| பள்ளிகளின் வகை | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளிகள் | 115561 | 115651 | 115697 | 120449 | 121311 |
| நடுநிலைப்பள்ளிகள் | 64454 | 64395 | 61719 | 58395 | 59892 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 46536 | 46372 | 47212 | 49012 | 51100 |
| மேல்நிலைப்பள்ளிகள் | 81420 | 83451 | 92301 | 94808 | 97969 |
| **மொத்தம்** | **307971** | **309869** | **316929** | **322664** | **330272** |



**4. ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம்**

| பள்ளிகளின் வகை | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 40 | 40 | 38 | 35 | 33 |
| நடுநிலைப் பள்ளிகள் | 40 | 40 | 36 | 40 | 38 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 44 | 45 | 43 | 38 | 37 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 39 | 40 | 36 | 35 | 34 |

5. பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை
2000–2001 (நிர்வாக வகைப்படி)

*மாணவர்கள் எண்ணிக்கை இலட்சத்தில்*

| பள்ளிகளின் வகைகள் | நிர்வாக வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | அரசு | 1592 | 2.31 | 7001 |
| | நகராட்சி/மாநகராட்சி | 1024 | 2.07 | 7364 |
| | ஊராட்சி ஒன்றியம் | 23276 | 26.06 | 76233 |
| | தனியார் | 5250 | 10.02 | 30713 |
| | **மொத்தம்** | **31142** | **40.46** | **121311** |
| நடுநிலைப்பள்ளிகள் | அரசு | 317 | 0.95 | 3781 |
| | நகராட்சி/மாநகராட்சி | 381 | 1.58 | 5416 |
| | ஊராட்சி ஒன்றியம் | 3206 | 10.54 | 27012 |
| | தனியார் | 1799 | 9.90 | 23683 |
| | **மொத்தம்** | **5703** | **22.97** | **59892** |
| **மொத்த தொடக்க/நடுநிலைப்பள்ளிகள்** | | **36845** | **63.43** | **181203** |
| உயர்நிலைப்பள்ளிகள் | அரசு | 2002 | 9.64 | 27204 |
| | நகராட்சி/மாநகராட்சி | 112 | 0.50 | 1630 |
| | தனியார் (உதவி பெறுபவை) | 610 | 3.37 | 7268 |
| | தனியார்(உதவி பெறாதவை) | 135 | 0.31 | 1696 |
| | **மொத்தம்** | **2859** | **13.82** | **37798** |
| | ஆங்கிலோ இந்தியன் | 12 | 0.10 | 310 |
| | மெட்ரிகுலேஷன் | 1564 | 4.55 | 11882 |
| | மைய அரசு | 65 | 0.40 | 1110 |
| **மொத்த உயர்நிலைப்பள்ளிகள்** | | **4500** | **18.87** | **51100** |



| | | | | |
|---|---|---|---|---|
| மேல்நிலைப்பள்ளிகள் | அரசு | [illegible] | [illegible] | [illegible] |
| | நகராட்சி/மாநகராட்சி | 81 | 0.88 | 4015 |
| | உதவிபெறுபவை(தனியார்) | 909 | 12.12 | 33630 |
| | உதவி பெறாதவை(தனியார்) | 68 | 0.40 | 1636 |
| | **மொத்தம்** | **2316** | **27.63** | **79026** |
| | ஆங்கிலோ இந்தியன் | 29 | 0.42 | 1209 |
| | மெட்ரிகுலேஷன் | 959 | 4.66 | 13215 |
| | மைய அரசு | 135 | 1.06 | 4520 |
| **மொத்த மேல்நிலைப்பள்ளிகள்** | | **3439** | **33.77** | **97969** |
| | **பெரு மொத்தம்** | **44784** | **116.07** | **330272** |

| | |
|---|---|
| மாணவர்கள் | 6019758 |
| மாணவிகள் | 5589558 |
| மொத்தம் | 11609316 |

### 6. ஆசிரியர்களின் எண்ணிக்கை–பள்ளி நிர்வாக வகைப்படி 2000–2001

| வ.எண் | பள்ளி வகைகள் | மாநில அரசு/ மைய அரசு | நகராட்சி/ மாநகராட்சி | ஊராட்சி ஒன்றியம் | தனியார் | | மொத்தம் | ஆசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | | ஆண் | பெண் |
| 1 | தொடக்கப்பள்ளிகள் | 7001 | 7364 | 76233 | 30491 | 222 | 121311 | 47312 | 73999 |
| 2 | நடுநிலைப்பள்ளிகள் | 3781 | 5416 | 27012 | 23337 | 346 | 59892 | 19764 | 40128 |
| 3 | உயர்நிலைப்பள்ளிகள் | 28314 | 1630 | 0 | 7268 | 13888 | 51100 | 35981 | 15119 |
| 4 | மேல்நிலைப்பள்ளிகள் | 44264 | 4015 | 0 | 33630 | 16060 | 97969 | 78136 | 19833 |
| | மொத்தம் | 83360 | 18425 | 103245 | 94726 | 30516 | 330272 | 181193 | 149079 |



### 7. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை (வகுப்பு வகைப்படி) 2000–2001

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 - 5 | 74153 | 109653 | 183806 |
| 6 - 8 | 56642 | 12002 | 68644 |
| 9 - 10 | 30445 | 17020 | 47465 |
| 11 - 12 | 19953 | 10404 | 30357 |
| 1 முதல் 12 | 181193 | 149079 | 330272 |

## 8. மாணவர்கள் சேர்க்கை பட்டியல் 2000–2001 (இலட்சத்தில்)

| வகுப்பு | இனம் | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 - 5 | ஆண் | 20.76 | 7.08 | 0.71 | 0.63 | 29.18 |
| | பெண் | 19.70 | 6.86 | 0.69 | 0.66 | 27.91 |
| | மொத்தம் | 40.46 | 13.94 | 1.40 | 1.29 | 57.09 |
| 6 - 8 | ஆண் | - | 4.54 | 6.12 | 7.66 | 18.32 |
| | பெண் | - | 4.49 | 5.80 | 6.90 | 17.19 |
| | மொத்தம் | - | 9.03 | 11.92 | 14.56 | 35.51 |
| 9 - 10 | ஆண் | - | - | 2.92 | 5.54 | 8.46 |
| | பெண் | - | - | 2.63 | 4.42 | 7.05 |
| | மொத்தம் | - | - | 5.55 | 9.96 | 15.51 |
| 11 - 12 | ஆண் | - | - | - | 4.24 | 4.24 |
| | பெண் | - | - | - | 3.72 | 3.72 |
| | மொத்தம் | - | - | - | 7.96 | 7.96 |
| 1 முதல் 12 | ஆண் | 20.76 | 11.62 | 9.75 | 18.07 | 60.20 |
| | பெண் | 19.70 | 11.35 | 9.12 | 15.70 | 55.87 |
| | மொத்தம் | 40.46 | 22.97 | 18.87 | 33.77 | 116.07 |



## 9. தொழிற்கல்விப் பாடங்கள் 2000–2001

| வ.எண் | பாடப்பிரிவு | சேர்க்கை | | |
|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | வேளாண்மை | 7162 | 2175 | 9337 |
| 2 | மனையியல் | 564 | 3817 | 4381 |
| 3 | வணிகவியல் மற்றும் வாணிபம் | 22487 | 21713 | 44200 |
| 4 | பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் | 14385 | 2013 | 16398 |
| 5 | சுகாதாரம் | 214 | 4120 | 4334 |
| 6 | கணினி கல்வி | 18032 | 11731 | 29763 |
| 7 | இதர பிரிவுகள் | 11866 | 11506 | 23372 |
| | மொத்தம் | 74710 | 57075 | 131785 |

10. பள்ளிப் படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | | | நடுநிலைப் பள்ளிகள் | | | உயர்நிலைப் பள்ளிகள் | | | மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1991-92 | 17.71 | 21.16 | 19.31 | 37.48 | 46.50 | 41.67 | 64.45 | 71.93 | 67.94 | 83.92 | 86.07 | 84.90 |
| 1992-93 | 17.11 | 19.62 | 18.27 | 34.75 | 43.54 | 38.85 | 63.65 | 71.02 | 67.08 | 82.94 | 85.39 | 84.08 |
| 1993-94 | 16.39 | 18.35 | 17.30 | 32.16 | 41.20 | 36.85 | 62.98 | 69.85 | 66.17 | 81.89 | 84.28 | 83.00 |
| 1994-95 | 15.58 | 17.65 | 16.54 | 30.75 | 39.36 | 34.74 | 61.46 | 69.15 | 65.05 | 80.59 | 84.19 | 82.26 |
| 1995-96 | 14.86 | 16.97 | 15.85 | 28.60 | 37.11 | 32.54 | 60.14 | 68.20 | 63.87 | 79.45 | 83.65 | 81.40 |
| 1996-97 | 14.05 | 16.20 | 15.06 | 26.38 | 34.78 | 30.27 | 58.63 | 67.05 | 62.53 | 78.21 | 83.09 | 80.46 |
| 1997-98 | 13.99 | 16.18 | 15.05 | 25.94 | 34.64 | 29.99 | 57.04 | 65.74 | 61.06 | 77.54 | 82.54 | 79.86 |
| 1998-99 | 12.98 | 16.15 | 14.52 | 36.85 | 33.37 | 35.23 | 57.72 | 58.35 | 58.01 | 82.10 | 80.61 | 81.49 |
| 1999-2000 | 12.93 | 16.07 | 14.41 | 36.03 | 34.74 | 35.43 | 57.97 | 57.85 | 57.92 | 83.43 | 80.92 | 82.27 |
| 2000-2001 | 12.86 | 16.03 | 14.40 | 36.00 | 35.15 | 35.59 | 57.86 | 57.91 | 57.89 | 82.15 | 82.40 | 82.30 |



11. உயர்நிலை பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)

| ஆண்டு | அரசு | மாநிலப் பள்ளிகள் | | | மொத்தம் | மெட்ரி-குலேஷன் | ஆங்கிலோ-இந்தியன் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் | | | | | | | |
| | | | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | | | | | | |
| 1985-86 | 1723 | 80 | 450 | 5 | 2258 | 212 | 13 | 86 | 311 | 2569 |
| 1986-87 | 1765 | 80 | 445 | 2 | 2292 | 289 | 11 | 96 | 396 | 2688 |
| 1987-88 | 1762 | 80 | 450 | 2 | 2294 | 406 | 13 | 106 | 525 | 2819 |
| 1988-89 | 1795 | 80 | 416 | 2 | 2293 | 515 | 13 | 101 | 629 | 2922 |
| 1989-90 | 1839 | 78 | 387 | 23 | 2327 | 606 | 12 | 89 | 707 | 3034 |
| 1990-91 | 1864 | 83 | 370 | 44 | 2361 | 684 | 13 | 93 | 790 | 3151 |
| 1991-92 | 1872 | 83 | 352 | 66 | 2373 | 684 | 13 | 93 | 790 | 3163 |
| 1992-93 | 1883 | 83 | 346 | 84 | 2396 | 709 | 13 | 85 | 807 | 3203 |
| 1993-94 | 1889 | 83 | 346 | 94 | 2412 | 759 | 13 | 86 | 858 | 3270 |
| 1994-95 | 1902 | 83 | 332 | 121 | 2438 | 806 | 13 | 83 | 902 | 3340 |
| 1995-96 | 1915 | 87 | 304 | 139 | 2445 | 885 | 12 | 75 | 972 | 3417 |
| 1996-97 | 1932 | 88 | 304 | 140 | 2464 | 1032 | 12 | 66 | 1110 | 3574 |
| 1997-98 | 1917 | 94 | 294 | 144 | 2449 | 1245 | 12 | 59 | 1316 | 3765 |
| 1998-99 | 1986 | 94 | 626 | 96 | 2802 | 1335 | 12 | 59 | 1406 | 4208 |
| 1999-2000 | 2006 | 103 | 626 | 104 | 2839 | 1641 | 12 | 59 | 1712 | 4551 |
| 2000-2001 | 2002 | 112 | 610 | 135 | 2859 | 1564 | 12 | 65 | 1641 | 4500 |

## 12. மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)

| ஆண்டு | அரசு | மாநிலப் பள்ளிகள் | | | | மெட்ரிக் குலேஷன் | ஆங்கிலோ இந்தியன் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் | | | | | | | |
| | | | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | மொத்தம் | | | | | |
| 1985-86 | 690 | 62 | 624 | 1 | 1377 | 79 | 28 | 67 | 174 | 1551 |
| 1986-87 | 755 | 62 | 651 | 1 | 1469 | 100 | 30 | 79 | 209 | 1678 |
| 1987-88 | 765 | 62 | 653 | 1 | 1481 | 121 | 29 | 79 | 229 | 1710 |
| 1988-89 | 769 | 62 | 676 | 19 | 1526 | 155 | 29 | 77 | 261 | 1787 |
| 1989-90 | 809 | 68 | 677 | 53 | 1607 | 192 | 28 | 87 | 307 | 1914 |
| 1990-91 | 848 | 68 | 674 | 70 | 1660 | 276 | 28 | 81 | 385 | 2045 |
| 1991-92 | 869 | 68 | 674 | 88 | 1699 | 276 | 28 | 81 | 385 | 2084 |
| 1992-93 | 879 | 68 | 674 | 94 | 1715 | 338 | 28 | 84 | 450 | 2165 |
| 1993-94 | 891 | 68 | 674 | 98 | 1731 | 373 | 28 | 89 | 490 | 2221 |
| 1994-95 | 903 | 68 | 674 | 112 | 1757 | 440 | 28 | 93 | 561 | 2318 |
| 1995-96 | 932 | 69 | 674 | 140 | 1815 | 540 | 29 | 106 | 675 | 2490 |
| 1996-97 | 1012 | 70 | 674 | 155 | 1911 | 668 | 29 | 126 | 823 | 2734 |
| 1997-98 | 1087 | 75 | 674 | 183 | 2019 | 792 | 29 | 135 | 956 | 2975 |
| 1998-99 | 1157 | 78 | 869 | 29 | 2133 | 852 | 29 | 135 | 1016 | 3149 |
| 1999-2000 | 1206 | 80 | 884 | 46 | 2216 | 912 | 29 | 135 | 1076 | 3292 |
| 2000-2001 | 1258 | 81 | 909 | 68 | 2316 | 959 | 29 | 135 | 1123 | 3439 |



## 13. உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் | | | | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உதவி பெறுபவை | | | உதவி பெறாதவை | | | | | |
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1985-86 | 411032 | 271770 | 682802 | 22056 | 23136 | 45192 | 153907 | 126533 | 280440 | 1130 | 376 | 1506 | 588125 | 421815 | 1009940 |
| 1986-87 | 439308 | 307396 | 746704 | 22989 | 23365 | 46354 | 150876 | 127990 | 278866 | 1260 | 391 | 1651 | 614433 | 459142 | 1073575 |
| 1987-88 | 450268 | 317398 | 767666 | 23978 | 28794 | 52772 | 165332 | 153661 | 318993 | 1378 | 416 | 1794 | 640956 | 500269 | 1141225 |
| 1988-89 | 481562 | 329688 | 811250 | 26269 | 28203 | 54472 | 191676 | 170163 | 361839 | 1410 | 431 | 1841 | 700917 | 528485 | 1229402 |
| 1989-90 | 505175 | 349658 | 854833 | 24949 | 29160 | 54109 | 199741 | 188212 | 387953 | 7431 | 3712 | 11143 | 737296 | 570742 | 1308038 |
| 1990-91 | 541843 | 369505 | 911348 | 31132 | 31569 | 62701 | 170949 | 180766 | 351715 | 11117 | 5131 | 16248 | 755041 | 586971 | 1342012 |
| 1991-92 | 570948 | 402332 | 973280 | 32421 | 32423 | 64844 | 157824 | 168298 | 326122 | 22248 | 20945 | 43193 | 783441 | 623998 | 1407439 |
| 1992-93 | 601613 | 438733 | 1040346 | 34552 | 33940 | 68492 | 155939 | 165003 | 320942 | 27449 | 25248 | 52697 | 819553 | 662924 | 1482477 |
| 1993-94 | 588002 | 403111 | 991113 | 36770 | 35884 | 72654 | 171359 | 178938 | 350297 | 29572 | 27596 | 57168 | 825703 | 645529 | 1471232 |
| 1994-95 | 609052 | 465799 | 1074851 | 39121 | 37985 | 77106 | 169295 | 176489 | 345784 | 42023 | 36941 | 78964 | 859491 | 717214 | 1576705 |
| 1995-96 | 628566 | 485186 | 1113752 | 39960 | 39033 | 78993 | 162853 | 168975 | 331828 | 46558 | 42809 | 89367 | 877937 | 736003 | 1613940 |
| 1996-97 | 642667 | 498359 | 1141026 | 40856 | 40116 | 80972 | 166506 | 174428 | 340934 | 47602 | 43953 | 91555 | 897631 | 756856 | 1654487 |
| 1997-98 | 634069 | 494382 | 1128451 | 40309 | 39788 | 80097 | 164278 | 173001 | 337279 | 46966 | 43593 | 90559 | 885622 | 750764 | 1636386 |
| 1998-99 | 427908 | 451571 | 879479 | 32544 | 31660 | 64204 | 151900 | 162313 | 314213 | 116561 | 117880 | 234441 | 728913 | 763424 | 1492337 |
| 1999-2000 | 439345 | 484523 | 923868 | 21175 | 21638 | 42813 | 154976 | 164821 | 319797 | 35008 | 36055 | 71063 | 650504 | 707037 | 1357541 |
| 2000-2001 | 444381 | 519248 | 963629 | 24755 | 24828 | 49583 | 164557 | 171991 | 336548 | 15972 | 14660 | 30632 | 649665 | 730727 | 1380392 |

உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (தொடர்ச்சி)

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் | | | ஆங்கிலோ-இந்தியன் | | | மைய அரசு | | | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1985-86 | 41860 | 33237 | 75097 | 3401 | 7923 | 11324 | 24663 | 16304 | 40967 | 658049 | 479279 | 1137328 |
| 1986-87 | 43928 | 32213 | 76141 | 3136 | 6830 | 9966 | 23728 | 14763 | 38491 | 685225 | 512948 | 1198173 |
| 1987-88 | 52308 | 38491 | 90799 | 2931 | 6617 | 9548 | 29098 | 20810 | 49908 | 725293 | 566187 | 1291480 |
| 1988-89 | 56271 | 48673 | 104944 | 3440 | 7171 | 10611 | 28443 | 20137 | 48580 | 789071 | 604466 | 1393537 |
| 1989-90 | 67058 | 60855 | 127913 | 3559 | 7333 | 10892 | 28239 | 20092 | 48331 | 836152 | 659022 | 1495174 |
| 1990-91 | 93763 | 75157 | 168920 | 3681 | 7367 | 11048 | 30153 | 23089 | 53242 | 882638 | 692584 | 1575222 |
| 1991-92 | 101501 | 77739 | 179240 | 4070 | 7837 | 11907 | 28214 | 21767 | 49981 | 917226 | 731341 | 1648567 |
| 1992-93 | 112007 | 83994 | 196001 | 4174 | 8774 | 12948 | 26150 | 19911 | 46061 | 961884 | 775603 | 1737487 |
| 1993-94 | 143512 | 114284 | 257796 | 4261 | 9203 | 13464 | 25874 | 19790 | 45664 | 999350 | 788806 | 1788156 |
| 1994-95 | 153269 | 117936 | 271205 | 4615 | 9418 | 14033 | 26225 | 19938 | 46163 | 1043600 | 864506 | 1908106 |
| 1995-96 | 184790 | 152260 | 337050 | 4297 | 9012 | 13309 | 27248 | 20890 | 48138 | 1094272 | 918165 | 2012437 |
| 1996-97 | 192446 | 159395 | 351841 | 4317 | 9057 | 13374 | 27064 | 21072 | 48136 | 1121458 | 946380 | 2067838 |
| 1997-98 | 208384 | 17724 | 226108 | 4791 | 9119 | 13910 | 27591 | 21424 | 49015 | 1126388 | 799031 | 1925419 |
| 1998-99 | 251923 | 226604 | 478527 | 3326 | 7863 | 11189 | 27550 | 22254 | 49804 | 1011712 | 1020145 | 2031857 |
| 1999-2000 | 251426 | 185443 | 436869 | 2954 | 7281 | 10235 | 28433 | 22587 | 51020 | 933317 | 922348 | 1855665 |
| 2000-2001 | 301482 | 154367 | 455849 | 2712 | 7559 | 10271 | 20670 | 19305 | 39975 | 974529 | 911958 | 1886487 |



14. மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம்
நிர்வாக வகைப்படி (1 முதல் 12 வரை)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் - உதவி பெறுபவை | | | தனியார் பள்ளிகள் - உதவி பெறாதவை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1985-86 | 495158 | 250766 | 745924 | 64323 | 50119 | 114442 | 466350 | 326707 | 793057 | 543 | 252 | 795 | 1026374 | 627844 | 1654218 |
| 1986-87 | 541189 | 274414 | 815603 | 70191 | 51583 | 121774 | 479736 | 354197 | 833933 | 763 | 352 | 1115 | 1091879 | 680546 | 1772425 |
| 1987-88 | 559551 | 297530 | 857081 | 72287 | 52150 | 124437 | 511400 | 359332 | 870732 | 518 | 221 | 739 | 1143756 | 709233 | 1852989 |
| 1988-89 | 614432 | 338611 | 953043 | 78118 | 56089 | 134207 | 516815 | 359852 | 876667 | 7194 | 3811 | 11005 | 1216559 | 758363 | 1974922 |
| 1989-90 | 634181 | 352449 | 986630 | 88181 | 64675 | 152856 | 519816 | 394560 | 914376 | 18573 | 8548 | 27121 | 1260751 | 820232 | 2080983 |
| 1990-91 | 644590 | 368621 | 1013211 | 95907 | 71735 | 167642 | 522202 | 410187 | 932389 | 23339 | 13531 | 36870 | 1286038 | 864074 | 2150112 |
| 1991-92 | 682068 | 387125 | 1069193 | 97211 | 72802 | 170013 | 533999 | 422609 | 956608 | 31892 | 16308 | 48200 | 1345170 | 898844 | 2244014 |
| 1992-93 | 704381 | 439836 | 1144217 | 98024 | 73398 | 171422 | 545340 | 421815 | 967155 | 35412 | 25119 | 60531 | 1383157 | 960168 | 2343325 |
| 1993-94 | 697304 | 409168 | 1106472 | 105853 | 79430 | 185283 | 562496 | 438240 | 1000736 | 37855 | 28300 | 66155 | 1403508 | 955138 | 2358646 |
| 1994-95 | 739013 | 452328 | 1191341 | 110511 | 83025 | 193536 | 576925 | 451425 | 1028350 | 47422 | 35358 | 82780 | 1473871 | 1022136 | 2496007 |
| 1995-96 | 760813 | 473059 | 1233872 | 110721 | 83211 | 193932 | 582049 | 455814 | 1037863 | 57843 | 43732 | 101575 | 1511426 | 1055816 | 2567242 |
| 1996-97 | 785765 | 491111 | 1276876 | 114348 | 86338 | 200686 | 601115 | 472895 | 1074010 | 59738 | 45375 | 105113 | 1560966 | 1095719 | 2656685 |
| 1997-98 | 810254 | 513892 | 1324146 | 117916 | 90343 | 208259 | 619873 | 494831 | 1114704 | 61603 | 47480 | 109083 | 1609646 | 1146546 | 2756192 |
| 1998-99 | 730408 | 541697 | 1272105 | 34009 | 49029 | 83038 | 637793 | 559746 | 1197539 | 45974 | 45991 | 91965 | 1448184 | 1196463 | 2644647 |
| 1999-2000 | 786300 | 629747 | 1416047 | 59275 | 71247 | 130522 | 584188 | 526054 | 1110242 | 15898 | 8760 | 24658 | 1445661 | 1235808 | 2681469 |
| 2000-2001 | 781766 | 640766 | 1422532 | 45896 | 42368 | 88264 | 641892 | 570279 | 1212171 | 20523 | 19788 | 40311 | 1490077 | 1273201 | 2763278 |

## மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (தொடர்ச்சி)

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் | | | ஆங்கிலோ-இந்தியன் | | | மைய அரசு | | | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1985-86 | 39689 | 43817 | 83506 | 20024 | 14970 | 34994 | 49500 | 27441 | 76941 | 1135587 | 714072 | 1849659 |
| 1986-87 | 42433 | 48374 | 90807 | 20195 | 16255 | 36450 | 51291 | 34809 | 86100 | 1205798 | 779984 | 1985782 |
| 1987-88 | 56411 | 48460 | 104871 | 20359 | 16407 | 36766 | 53644 | 38614 | 92258 | 1274170 | 812714 | 2086884 |
| 1988-89 | 58085 | 49068 | 107153 | 20498 | 16462 | 36960 | 52291 | 35606 | 87897 | 1347433 | 859499 | 2206932 |
| 1989-90 | 63706 | 53548 | 117254 | 20505 | 16592 | 37097 | 56492 | 36423 | 92915 | 1401454 | 926795 | 2328249 |
| 1990-91 | 71575 | 60311 | 131886 | 20809 | 16710 | 37519 | 57981 | 36815 | 94796 | 1436403 | 977910 | 2414313 |
| 1991-92 | 79667 | 65744 | 145411 | 21523 | 17111 | 38634 | 53569 | 34662 | 88231 | 1499929 | 1016361 | 2516290 |
| 1992-93 | 94759 | 74860 | 169619 | 23507 | 19922 | 43429 | 54946 | 36182 | 91128 | 1556369 | 1091132 | 2647501 |
| 1993-94 | 127317 | 10369 | 137686 | 23556 | 19983 | 43539 | 58138 | 38540 | 96678 | 1612519 | 1024030 | 2636549 |
| 1994-95 | 138252 | 109025 | 247277 | 23982 | 19867 | 43849 | 58922 | 38846 | 97768 | 1695027 | 1189874 | 2884901 |
| 1995-96 | 180094 | 150591 | 330685 | 24171 | 20041 | 44212 | 65267 | 44897 | 110164 | 1780958 | 1271345 | 3052303 |
| 1996-97 | 188143 | 157693 | 345836 | 25068 | 20972 | 46040 | 68159 | 47033 | 115192 | 1842336 | 1321417 | 3163753 |
| 1997-98 | 214692 | 183244 | 397936 | 25806 | 21164 | 46970 | 70135 | 48577 | 118712 | 1920279 | 1399531 | 3319810 |
| 1998-99 | 280487 | 248291 | 528778 | 23035 | 23684 | 46719 | 82373 | 60983 | 143356 | 1834079 | 1529421 | 3363500 |
| 1999-2000 | 227885 | 195423 | 423308 | 22788 | 22217 | 45005 | 96429 | 75418 | 171847 | 1792763 | 1528866 | 3321629 |
| 2000-2001 | 234081 | 232396 | 466477 | 21082 | 21350 | 42432 | 61760 | 44720 | 106480 | 1807000 | 1571667 | 3378667 |



## 15(அ) உயர்நிலை, மேல்நிலை பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு (மார்ச் 2000)

| மாவட்டம் | உயர்நிலைப் பள்ளி | | | மேல்நிலைப்பள்ளி | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| கன்னியாகுமரி | 76.10 | 80.90 | **78.70** | 81.58 | 89.18 | **85.95** |
| திருநெல்வேலி | 85.00 | 89.00 | **86.90** | 90.83 | 95.66 | **93.32** |
| தூத்துக்குடி | 85.00 | 91.20 | **88.20** | 91.41 | 96.88 | **94.43** |
| இராமநாதபுரம் | 69.70 | 69.80 | **69.70** | 85.90 | 90.27 | **88.00** |
| சிவகங்கை | 72.40 | 74.40 | **73.30** | 84.68 | 90.98 | **88.12** |
| விருதுநகர் | 90.90 | 92.60 | **91.70** | 93.77 | 97.76 | **95.71** |
| தேனி | 77.90 | 83.30 | **80.30** | 92.07 | 95.67 | **93.71** |
| மதுரை | 81.40 | 88.30 | **84.80** | 88.41 | 94.80 | **91.65** |
| திண்டுக்கல் | 73.50 | 79.20 | **76.30** | 84.38 | 93.31 | **88.95** |
| நீலகிரி | 54.00 | 66.80 | **60.80** | 80.00 | 86.60 | **83.54** |
| கோயம்புத்தூர் | 78.80 | 84.10 | **81.60** | 89.61 | 93.51 | **91.80** |
| ஈரோடு | 80.50 | 86.00 | **83.30** | 90.71 | 95.17 | **92.99** |
| சேலம் | 67.10 | 70.00 | **68.50** | 84.44 | 91.18 | **87.59** |
| நாமக்கல் | 76.70 | 79.70 | **78.20** | 83.94 | 91.12 | **87.22** |
| தர்மபுரி | 56.20 | 60.00 | **57.90** | 65.94 | 75.52 | **70.02** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | 58.20 | 59.00 | **58.60** | 71.94 | 82.06 | **76.87** |
| கரூர் | 66.90 | 75.10 | **70.80** | 71.97 | 88.49 | **80.01** |
| பெரம்பலூர் | 64.40 | 65.60 | **64.90** | 76.59 | 88.46 | **81.65** |
| திருச்சிராப்பள்ளி | 77.50 | 83.50 | **80.50** | 81.21 | 91.67 | **86.62** |
| நாகப்பட்டினம் | 72.40 | 72.30 | **72.30** | 76.94 | 84.11 | **80.58** |
| திருவாரூர் | 68.80 | 68.20 | **68.50** | 69.54 | 82.86 | **76.53** |
| தஞ்சாவூர் | 68.70 | 76.40 | **72.60** | 79.91 | 87.62 | **83.92** |
| விழுப்புரம் | 47.50 | 49.50 | **48.30** | 55.16 | 66.48 | **59.85** |
| கடலூர் | 55.70 | 63.50 | **59.20** | 67.45 | 78.32 | **72.53** |
| திருவண்ணாமலை | 48.10 | 50.20 | **49.00** | 60.45 | 73.10 | **65.80** |
| வேலூர் | 57.30 | 61.90 | **59.40** | 66.08 | 77.71 | **71.46** |
| காஞ்சிபுரம் | 59.50 | 67.00 | **63.10** | 73.01 | 84.12 | **78.72** |
| திருவள்ளூர் | 48.10 | 58.00 | **58.80** | 64.50 | 79.09 | **71.52** |
| சென்னை | 57.00 | 72.30 | **65.00** | 80.35 | 88.88 | **84.95** |



**15(ஆ) உயர்நிலை, மேல்நிலை பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு (மார்ச் 2001)**

| மாவட்டம் | உயர்நிலைப் பள்ளி | | | மேல்நிலைப் பள்ளி | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
| கன்னியாகுமரி | 71.23 | 77.50 | 74.40 | 77.61 | 79.88 | 78.77 |
| திருநெல்வேலி | 83.19 | 85.70 | 84.50 | 86.43 | 93.42 | 89.92 |
| தூத்துக்குடி | 70.80 | 87.80 | 77.07 | 80.41 | 88.86 | 85.52 |
| ராமநாதபுரம் | 51.75 | 56.60 | 53.14 | 66.58 | 73.97 | 69.76 |
| சிவகங்கை | 69.80 | 72.30 | 71.20 | 75.26 | 84.44 | 80.68 |
| விருதுநகர் | 84.90 | 86.80 | 85.60 | 86.36 | 89.18 | 87.50 |
| தேனி | 75.89 | 79.73 | 77.33 | 79.49 | 83.68 | 81.16 |
| மதுரை | 49.93 | 73.41 | 70.17 | 77.56 | 86.25 | 81.72 |
| திண்டுக்கல் | 65.07 | 72.67 | 68.78 | 78.95 | 86.22 | 82.58 |
| நீல்கிரீஸ் | 55.29 | 51.25 | 53.39 | 66.92 | 66.12 | 66.62 |
| கோயம்புத்தூர் | 77.24 | 84.00 | 80.33 | 81.58 | 86.16 | 83.87 |
| ஈரோடு | 78.66 | 86.67 | 82.62 | 83.74 | 89.42 | 86.62 |
| சேலம் | 67.41 | 73.77 | 70.35 | 75.57 | 78.67 | 77.09 |
| நாமக்கல் | 75.02 | 78.04 | 76.07 | 78.30 | 86.20 | 81.90 |
| தர்மபுரி | 53.55 | 57.85 | 55.57 | 60.23 | 66.12 | 62.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | 54.21 | 53.02 | 53.58 | 69.79 | 74.39 | 72.02 |
| கரூர் | 65.07 | 69.00 | 67.04 | 75.90 | 78.10 | 82.50 |
| பெரம்பலூர் | 60.57 | 53.27 | 57.25 | 69.10 | 75.31 | 71.30 |
| திருச்சி | 64.08 | 67.94 | 66.95 | 73.42 | 78.00 | 75.55 |
| நாகப்பட்டினம் | 71.22 | 64.76 | 67.74 | 67.46 | 74.29 | 70.67 |
| திருவாரூர் | 63.05 | 62.00 | 62.07 | 67.50 | 68.60 | 68.00 |
| தஞ்சாவூர் | 63.37 | 62.33 | 62.82 | 73.66 | 77.20 | 75.53 |
| விழுப்புரம் | 45.39 | 42.82 | 44.14 | 59.56 | 65.42 | 62.19 |
| கடலூர் | 45.85 | 47.93 | 47.00 | 57.54 | 68.93 | 63.44 |
| திருவண்ணாமலை | 41.33 | 43.37 | 42.22 | 62.94 | 70.49 | 66.14 |
| வேலூர் | 50.68 | 54.70 | 52.67 | 55.91 | 64.88 | 60.13 |
| காஞ்சிபுரம் | 49.53 | 55.57 | 52.58 | 65.25 | 72.83 | 69.55 |
| திருவள்ளூர் | 35.87 | 47.00 | 41.11 | 52.46 | 67.18 | 59.24 |
| சென்னை | 55.45 | 68.00 | 62.36 | 74.47 | 79.00 | 77.50 |



## 16 மகளிரின் கல்வி நிலை – புள்ளி விவரம்

### (அ) பெண்களின் எழுத்தறிவு 1901 முதல் 1991

சதவீதம்

| ஆண்டு | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1901 | 1.02 | 7.64 |
| 1911 | 1.53 | 9.18 |
| 1921 | 2.43 | 10.38 |
| 1931 | 2.94 | 11.34 |
| 1941 | 6.88 | 16.19 |
| 1951 | 10.06 | 20.82 |
| 1961 | 18.17 | 31.41 |
| 1971 | 28.86 | 39.46 |
| 1981 | 34.19 | 46.76 |
| 1991 | 52.29 | 63.72 |

16.(ஆ) மாணவிகளின் சேர்க்கை விவரம்
(1 முதல் 12 வகுப்பு வரை – அனைத்து பள்ளிகளும்)

| ஆண்டு | பெண்கள் | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1985-86 | 4787287 | 10924927 | 43.82 |
| 1986-87 | 4947126 | 11275998 | 43.87 |
| 1987-88 | 5140347 | 11666494 | 44.06 |
| 1988-89 | 5279573 | 11963482 | 44.13 |
| 1989-90 | 5424771 | 12268168 | 44.21 |
| 1990-91 | 5573833 | 12558707 | 44.38 |
| 1991-92 | 5722426 | 12850511 | 44.53 |
| 1992-93 | 5873234 | 13144999 | 44.68 |
| 1993-94 | 6106581 | 13443297 | 45.42 |
| 1994-95 | 6179499 | 13738759 | 44.98 |
| 1995-96 | 6329284 | 14040374 | 45.08 |
| 1996-97 | 5735009 | 12389725 | 46.29 |
| 1997-98 | 5866249 | 12623981 | 46.46 |
| 1998-99 | 5911278 | 12287215 | 48.11 |
| 1999-2000 | 5592691 | 11677765 | 47.89 |
| 2000-2001 | 5589558 | 11609316 | 48.15 |



16 (இ) அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியைகள் எண்ணிக்கை

| ஆண்டு | ஆசிரியைகள் | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1986-87 | 119598 | 290723 | 41.14 |
| 1987-88 | 121347 | 293155 | 41.39 |
| 1988-89 | 121823 | 294339 | 41.39 |
| 1989-90 | 124493 | 297918 | 41.80 |
| 1990-91 | 127841 | 300857 | 42.50 |
| 1991-92 | 129376 | 302943 | 42.71 |
| 1993-94 | 126106 | 295413 | 42.69 |
| 1994-95 | 127352 | 295710 | 43.06 |
| 1995-96 | 132361 | 303798 | 43.57 |
| 1996-97 | 134239 | 307971 | 43.59 |
| 1997-98 | 135277 | 309869 | 43.66 |
| 1998-99 | 138454 | 316929 | 43.69 |
| 1999-2000 | 140337 | 322664 | 43.49 |
| 2000-2001 | 149079 | 330272 | 45.14 |

16. (ஈ) பள்ளியை விட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு)

| ஆண்டு | 1 – 5 | 1 – 8 | 1 – 10 | 1 – 12 |
|---|---|---|---|---|
| 1986-87 | 25.06 | 57.83 | 78.59 | 89.64 |
| 1987-88 | 24.46 | 53.14 | 77.32 | 85.84 |
| 1988-89 | 24.01 | 51.35 | 76.45 | 85.58 |
| 1989-90 | 23.64 | 50.65 | 73.85 | 87.98 |
| 1990-91 | 22.68 | 49.43 | 72.63 | 86.60 |
| 1991-92 | 21.16 | 46.50 | 71.93 | 86.07 |
| 1992-93 | 19.62 | 43.54 | 71.02 | 85.39 |
| 1993-94 | 18.35 | 41.20 | 69.85 | 84.28 |
| 1994-95 | 17.65 | 39.36 | 69.15 | 84.19 |
| 1995-96 | 16.97 | 37.11 | 68.20 | 83.65 |
| 1996-97 | 16.20 | 34.78 | 67.05 | 83.09 |
| 1997-98 | 16.18 | 34.64 | 65.74 | 82.54 |
| 1998-99 | 16.15 | 33.37 | 58.35 | 80.61 |
| 1999-2000 | 16.07 | 34.74 | 57.85 | 80.92 |
| 2000-2001 | 16.03 | 35.15 | 57.91 | 82.40 |



## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு

### அத்தியாயம்–1

### முன்னுரை

1.1. ஒரு சமுதாயத்தின் வலிமை, அச்சமுதாய மக்களின் மனரீதியான நலத்தையும் உடல் ரீதியான வலிமையையும் பொறுத்துள்ளது. அறிவு சக்தியாயின், உடல் வலிமை சொத்தாகும். ஒருவரின் ஆளுமை முழுமையான வளர்ச்சி பெறுவதற்கு விளையாட்டு அத்தியாவசியமானது. விளையாட்டு, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும், நேர்மையாகச் செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன், வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய மனத்திண்மையையும் அளிக்கிறது. தனி நபர் உறுதியுடன் முயற்சி செய்யவும் தன்னிலை இழக்காமல் தேடல் உணர்வுடன் வளர்ச்சியடைய விளையாட்டு உதவுகிறது.

1.2. மாணவர் சமுதாயத்தில், நன்னடத்தையை வளர்ப்பதையும், சேவை மனப்பான்மையை மேம்படுத்துவதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தற்போது தேசிய மாணவர் படை, சாரணர், சாரணியர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவை இயங்குகின்றன. மைய அரசைச் சார்ந்த ' நேரு யுவகேந்திரா சங்கேதன் ' (இளைஞர் மன்றம்) பணிகளைத் தவிர, மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கின்ற மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் செயல்பட வேறு அமைப்புகள் இல்லை. மைய அரசாலும், மாநில அரசாலும் அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல திட்டங்களை, மாணவரல்லாத இளைஞர்கள் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் சீரிய முறையில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தினால், அவர்களை ஆக்கபூர்வமான சக்தியாக உருவாக்க முடியும்.

### 1.3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்களின் ஆக்க சக்தியினை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு அரசாணை எண் 641 கல்வி (ஒய் 1) துறை, நாள் 18–7–1992–ல் அதற்கு முன்பு இயங்கி வந்த

இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு ஒப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார்.

தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

## 1.4. குறிக்கோள்களும், இலக்குகளும்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.

2.திறமை மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.

3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற் பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்.

5. மாணவரல்லாத சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.



7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

1.5. தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

## நிதி ஒதுக்கீடு

2001–2002 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை – 17–ன் கீழான நிதி ஒதுக்கீடு ரூ. 34.27 கோடி ஆகும். இதில் ரூ. 18.63 கோடி திட்டப் பணிக்களுக்கானதாகும்.

## அத்தியாயம் – 2

## 2. விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு

### 2.1. சென்னை விளையாட்டரங்கங்கள்

தமிழகத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கும் மாணவர்களுக்கும் மற்ற இளைஞர்களுக்கும் பயன் அளிக்கும் வகையிலும் சர்வதேச தரத்திலான நவீன தனித்தன்மை வாய்ந்த அளவில் விளையாட்டு அரங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில், சென்னையில் தடகளம் மற்றும் கால்பந்து விளையாட்டிற்கென வசதிகளைக் கொண்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1992–93 ஆம் நிதியாண்டில் கட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக சர்வதேச தரத்திலான செயற்கை புல் தரை கொண்ட ஹாக்கி விளையாட்டரங்கம், செயற்கை விளையாட்டு தளத்தைக் கொண்ட Tennis விளையாட்டரங்கம், பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், நீச்சல் குள வளாகம் ஆகிய விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதன் விவரம் பின்வருமாறு:

**1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை** – இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 பார்வையாளர்கள் அமரும் வசதியைக் கொண்டு கட்டப்பட்டது. மேலும் கால்பந்து ஆடுகளம் (புல்வெளியுடன்), தடகள ஓடுகளம் (400 மீ. 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்), மூன்று கையுந்து பந்து ஆடுகளங்கள் - மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல் கருவி ஆகிய வசதிகளைக் கொண்டது.

**2. பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை** – 8000 பார்வையாளர்கள் அமரும் வசதியைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்து பந்து, கூடைப் பந்து, மேசைப் பந்து, சிறகுப் பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது.

**3. வளைகோல் பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை** – இவ்விளையாட்டரங்கம் 4000 பார்வையாளர்கள் அமரும் வசதியுடன் செயற்கை புல்வெளி (ஆஸ்ட்ரோ டர்ஃப்) வளைகோல் பந்து ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

**4. நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை** – இவ்விளையாட்டரங்கம் 4000 பார்வையாளர்கள் அமரும் வசதியுடன் ஒரு போட்டி குளம் – (50 x 25 மீ), ஒரு பாய்ச்சல் குளம் - (18 x 25 மீ) மற்றும் ஒரு பயிற்சிக் குளம்– (20 x 25 மீ) ஆகிய வசதிகளுடையது.

**5. டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை** – இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5000 பார்வையாளர்களும் மற்றும் 6 பயிற்சி ஆடுகளங்களில் 2000 பார்வையாளர்களும் அமரும் வசதியுடன் உள்ளது. இந்தச் செயற்கை இழை ஆடுகளங்கள் சர்வதேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன் கூடியதாகவும் உள்ளது.

இந்த நவீன விளையாட்டரங்கங்கள் அதிக அளவில் பயன் அடையும் வகையில் பராமரிப்பு தேவைப்படுகிறது. இருப்பினும் பராமரிப்பு பணிகள் தேவையான அளவிற்கு மேற்கொள்ளப்படவில்லை. தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் நடத்துவதற்கு ஏற்றவாறு இந்த விளையாட்டு அரங்கங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். சென்னை, எழும்பூரில் உள்ள வளை கோல்பந்து விளையாட்டு அரங்கத்தில் சர்வதேச வளைகோல் பந்து



விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக அவ்விளையாட்டரங்கம் மின்னொளி மயமாக்கப்படும்.

இதர கட்டமைப்புகள்:–

**1. ஷெனாய் நகர் நீச்சல் குளம், சென்னை** – இதில் 33 x 21 மீ. அளவு கொண்ட நீச்சல் குளமும், கையுந்துப் பந்து மற்றும் சிறகுப் பந்து ஆடுகளங்களைக் கொண்டது.

**2. நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை** – இதில் கால்பந்து ஆடுகளம்–1, 400 மீ. ஓடுபாதை–1, கூடைப் பந்து ஆடுகளங்கள்–2, கபாடி ஆடுகளங்கள்–2, Tennis ஆடுகளங்கள்–2, கையுந்துப் பந்து ஆடுகளங்கள்–2 மற்றும் 3 ஸ்குவாஷ் ஆடுகளங்களைக் கொண்ட உள்ளரங்க ஸ்குவாஷ் அகாடமி அமைந்துள்ளது.

**3. அண்ணா நீச்சல் குளம், மெரினா, சென்னை**– விரைவில் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

### 2.2. மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்துதல்

மைய அரசு மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை ஏற்படுத்த மானியம் தந்து உதவி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், மைய அரசு 50:50 விகிதாச்சாரத்தின்படி உச்சவரம்பு மானியமாக ஒரு கோடி ரூபாய் தருகின்றது. மலைப்பாங்கு மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு 75:25 விகிதாச்சாரத்தின்படி உச்சவரம்பு மானியமாக 1.50 கோடி ரூபாய் தருகின்றது. தமிழ்நாட்டில் கோவை, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இந்தச் சிறப்புச் சலுகையின் கீழ் மானியம் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில அரசு தனது அரசாணை நிலை எண் 9, கல்வித் துறை, நாள் 5-1-1994–ன் மூலம் தன்னுடைய பங்காகக் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது:

| | |
|---|---|
| 1. மைய அரசின் பங்கீடு | .. 50 விழுக்காடு |
| 2. மாநில அரசின் பங்கீடு | .. 25 விழுக்காடு |
| 3. விளையாட்டரங்கக் குழு பங்கீடு (பொது மக்களின் நன்கொடைகள்) | .. 25 விழுக்காடு |

[2001 ஆகஸ்ட் 27

பின்வரும் வசதிகளை ஏற்படுத்த நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன:

| வ. எண் | விளையாட்டு வசதிகள் | மைய அரசால் பரிந்துரைக்—கப்பட்ட உத்தேச மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டரங்கம் 8 ஓடுகளப் பாதைகளைக் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து, வளைகோல்பந்து மைதானங்கள் மற்றும் மாணவ, மாணவியர்க்கென தனித்தனியே உடை மாற்றும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் | 36 |
| 2. | திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் ஒன்று அல்லது இரண்டு மரபுவழி விளையாட்டுக்கள், கோ—கோ, கபாடி அல்லது உள்ளூரில் விளையாடும் பிரபலமான விளையாட்டு | 10 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கும் அறை | 10 |
| 4. | 6 நீச்சல் பாதைகளுடன் நீர் சுத்திகரிப்புக் கருவியுடன் கூடிய 25மீ x 13மீ அளவிலான நீச்சல் குளம் | 50 |
| 5. | மரத்தாலான ஆடுகளத்தைக் கொண்ட — 35மீ x 19மீ x 12.5மீ அளவு குறையாமல் மாணவ, மாணவியர்க்கென உடைமாற்று அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் கொண்ட உள் விளையாட்டரங்கம். | 90 |
| 6. | மொத்தத்தில் 80 படுக்கைகளைக் கொண்ட விடுதியில் குறைந்த பட்சம் மாணவியர்க்கென 30 படுக்கைகள் | 60 |
| | மொத்தம் | 256 |



2001 ஆகஸ்ட் 27]

மைய அரசு, உச்சவரம்பு மானியத் தொகை. ரூபாய் 1 கோடி (பழங்குடியினர், மலைவாழ் பகுதியினர் நீங்கலாக) என நிர்ணயித்துள்ளதால், விளையாட்டு விடுதி வசதிகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்து, மற்ற வசதிகளைக் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகங்களை மேம்படுத்துவதெனத் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான பங்கீட்டுத் தொகை பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விளையாட்டு வசதிகள் | உத்தேச மதிப்பீடு | மைய அரசின் உச்ச வரம்பு மானியம் | மாநில அரசின் பங்கீடு | பொது மக்களிட—மிருந்து பெறும் நன்கொடை |
|---|---|---|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டு அரங்கம் 400மீ ஓடுதளம், கால்பந்து, வளைகோல்பந்து, மைதானங்கள் வசதிகளுடன் | 36 | 18 | 9 | 9 |
| 2. | கையுந்துபந்துகூடைப் பந்து, ஆடுகளங்கள் மற்றும் கோ—கோ, கபாடி ஆடுகளங்கள் | 10 | 5 | 2.50 | 2.50 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கக் கூடிய அறை | 10 | 5 | 2.50 | 2.50 |
| 4. | 6 நீச்சல் பாதையுடன் 25 x 13மீ. நீச்சல்குளம். | 50 | 25 | 12.50 | 12.50 |
| 5. | 35 x 19 x 12.5மீ. மரத்தாலான தளத்துடன் உள் விளையாட்டு அரங்கம் | 90 | 45 | 22.50 | 22.50 |
| | மொத்தம் | 196 | 98 | 49.00 | 49.00 |

மேற்கண்ட 5 வசதிகளையுடைய மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்திட மாநில அரசின் பங்கீட்டுத் தொகை ரூ. 49 இலட்சம் ஆகும்.

[2001 ஆகஸ்ட் 27

## 2.3 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு



2001 ஆகஸ்ட் 27]

| வ. எண் | மாவட்டம் | வெளி விளையாட்டு அரங்கம் | | | நீச்சல் குளம் | உள் விளையாட்டு அரங்கம் |
|---|---|---|---|---|---|---|
| | | 400 மீ தடகள ஓடு பாதையுடன் கால்பந்து / வளைகோல் பந்து ஆடுகளம் | வெளி விளையாட்டு மைதானம் | ஜிம் | | |
| 1. | தஞ்சாவூர் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 2. | தர்மபுரி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 3. | நீலகிரி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 4. | ஈரோடு | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி நடைமுறையில் உள்ளது | இல்லை |
| 5. | சேலம் | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது | உண்டு |
| 6. | மதுரை | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது | உண்டு |
| 7. | திருச்சி | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது | மைய அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது |
| 8. | கன்னியாகுமரி | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது | இல்லை |
| 9. | விருதுநகர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | மைய அரசின் ஒப்புதலுக்காக கருத்துரு அனுப்பப்பட்டு உள்ளது |
| 10. | இராமநாதபுரம் | உண்டு | உண்டு | உண்டு | மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது | இல்லை |
| 11. | திருநெல்வேலி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 12. | தூத்துக்குடி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 13. | காஞ்சீபுரம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 14. | கடலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 15. | வேலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 16. | கோயம்புத்தூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 17. | புதுக்கோட்டை | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| கட்டமைப்புப் பணி நடைபெறும் இடங்கள் | | | | | | |
| 18. | நாகப்பட்டினம் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 19. | திண்டுக்கல் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 20. | விழுப்புரம் | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |

## 2.4. ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்க மானியம்

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும் அல்லது விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் (நிரந்தரம் மற்றும் நிரந்தரமல்லாத) அல்லது இரண்டிற்கும் மைய அரசு ரூபாய் 1.50 இலட்சம் மானியம் அளித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் மானியம் பெறும் ஊரகப் பள்ளிகள்:

1. நிலையான அளவுடன்கூடிய ஆடுகளம் அமைக்க உதவி கோருதல்.

2. குறைந்தபட்சம் 200 மாணவர்களைக் கொண்ட பள்ளி.

3. ஒரு முழுநேர உடற்கல்வி ஆசிரியர் இருக்க வேண்டும்.

4. அப்பள்ளியானது, ஆண்டுக்கு ரூ.10,000/- அளவில் பராமரிப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும் வசதி படைத்ததாக இருத்தல் வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்தோ அல்லது வேறு வகைகளிலோ நிதியினைப் பெறும் நிலையில் இருத்தல் வேண்டும்.

மைய அரசு ஓராண்டுக்கு ஓர் ஒன்றியத்திற்கு ஒரு பள்ளிக்கும், ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓர் ஒன்றியத்தில் இரண்டு பள்ளிகளுக்கு மிகாமலும் நிதியுதவி வழங்கும். இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள 385 ஊரகப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு ரூ. 1.50 இலட்சம் வீதம் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும், விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் மைய அரசின் ஒப்புதலுக்காக கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, 102 ஊரகப் பள்ளிகளுக்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்த கொள்கை ஒப்புதல் மைய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 283 ஊரகப் பள்ளிகளின் கருத்துருக்கள்மீது மானியம் வழங்க மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 2.5. அரசுப் பள்ளிகளில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த மானியத் திட்டம்

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், மைய அரசு, அரசுப் பள்ளிகளுக்கு ரூ. 5 இலட்சத்திற்கு மிகாமல் கீழ்க்கண்ட விளையாட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்த 50 விழுக்காடு நிதியுதவி வழங்கி வருகிறது. அதற்கான வசதிகளாவன:

1. விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துதல்.

2. திறந்தவெளி கான்கிரீட் ஸ்கேட்டிங் ரிங் அமைத்தல்.

3. ஓடுகளப் பாதையுடன் வளைகோல் பந்து /கால் பந்து / கிரிக்கெட் மைதானம்.

4. உள் விளையாட்டரங்கக் கூடம் (17 x 17 x 17 மீ. அளவு)

5. நீச்சல் குளம் (25 x 13 மீ) அளவு

இத்திட்டத்தின்படி, மாநில அரசின் மானியமான 50 விழுக்காடு பங்கினை முதலில் முழுமையாகச் செலவிட வேண்டும். பின், மத்திய



அரசு, அதன் பங்கான 50 விழுக்காடு மானியத்தினை வழங்கும். இத்திட்டத்தின்கீழ் மைய அரசின் மானியம் பெறவும், அரசுப் பள்ளிகளில் விளையாட்டுக் கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் மாநில அரசு தனது பங்கான ரூ. 22.75 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு செய்து, அதில் ரூ. 9.10 இலட்சம் (40 விழுக்காடு) மானியம் வழங்கியுள்ளது.

25 அரசுப் பள்ளிகளின் கருத்துருக்களை 50 : 50 என்ற விகிதத்தின்படி மைய அரசின் மானியம் மற்றும் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டது. இதில் 24 பள்ளிகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட மைய அரசு கொள்கை ஒப்புதல் வழங்கியுள்ளது. மீதமுள்ள 1 கருத்துரு மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## அத்தியாயம் – 3

## 3. பயிற்சித் திட்டங்கள்

முறையான பயிற்சி என்பது முறையே, திறமைவாய்ந்த விளையாட்டு வீரர்களின் திறனை அதிகப்படுத்துவதற்கும், சாதனைகளை ஏற்படுத்துவதற்கும் ஒரு திறவுகோலாகும். இதனைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு பல்வேறு வயது பிரிவுகளைக் கொண்ட விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### 3.1 விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

| வ. எண் | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை. | தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து நீச்சல் |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | தடகளம், கிரிக்கெட், கால்பந்து |

| வ. எண் | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து |
| 2. | மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |

தேர்வு முறை : தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவு : உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்படும்.

மாநில அளவு : குழு விளையாட்டுக்களில் விளையாட்டுத்திறன் மற்றும் நுட்பம் குறித்தும், தனியாள் விளையாட்டுக்களில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8–ம் வகுப்பு, 9–ம் வகுப்பு மற்றும் 11–வது வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, அரசு, உணவிற்காகவும் மற்ற தலைப்பிலும் கீழ்க்கண்டவாறு மானியம் அளிக்கிறது:–

அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை – 710

மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை (10 மாதங்களுக்கு மட்டும்) – ரூ.720



சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி– ஒரு மாணவனுக்கு ரூ.700

ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க படி - ரூ.250

ஒரு மாணவனுக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்படுகின்றபணித் தொகை

அ) விளையாட்டுப் பள்ளி – ரூ.400

ஆ) விளையாட்டு விடுதி – ரூ.300

விளையாட்டு விடுதிகள் நேரிடையாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு, அதற்கென்று தனி அலுவலரும் அதாவது விளையாட்டு விடுதிக் காப்பாளரும், பயிற்றுநர்களும் மற்றும் சமையல்காரர்களுடன் செயல்பட்டு வருகிறது.

## 3.2. சிறப்பு விளையாட்டு விடுதி

கல்லூரி செல்லும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 1994–95 ஆம் ஆண்டில் செயல்படுத்திட அரசு அனுமதித்துள்ளது. இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது:

1) தடகளம் 2) கூடைப் பந்து 3) குத்துச்சண்டை 4) நீச்சல் மற்றும் 5) கையுந்துப் பந்து.

இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களைத் தந்துள்ளது.

அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை – 50

மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை (10 மாதத்திற்கு) – ரூ.1500

சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு – ரூ.3000

ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் -- ரூ.1500

### 3.3 வேலூர், சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும், பெற்றுத் தந்துள்ள காரணத்தினால் அங்கு பளுதூக்கும் மையம் ரூ. 11.87 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டது. தகுதிவாய்ந்த பயிற்சியாளர்கள் மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 360 நாட்களுக்கு அங்கு பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் சிற்றுண்டி தொகையாகவும், விளையாட்டு உபகரணப்படியாக ரூ.2400/-ம் (ஆண்டொன்றுக்கு) வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ரூ. 1.81 இலட்சம் ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாகச் செலவிடப்படுகிறது.

### 3.4 கோவையில் கூடைப் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

கோயம்புத்தூரில் கூடைப் பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்களின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க விளையாட்டு சிறப்பு மேம்பாட்டு மையம் ரூ6.30 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கோவை நேரு விளையாட்டரங்கத்திற்குத் தினந்தோறும் பயிற்சி பெற வருகின்றார்கள். அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 3200/-ம், வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்வதற்கு போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றுக்கு ரூ. 10/-ம், மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவினமாக நாள் ஒன்றுக்கு ரூ. 10/-ம், ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டொன்றுக்கு தொடர் செலவினம் ரூ. 3.55 இலட்சம் ஆகும்.



### 3.5 திருநெல்வேலியில் வளைகோல் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல் பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் ரூ. 5.03 இலட்சம் தொடர் செலவினத்தில் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 3600/- விளையாட்டு உபகரணப்படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றில் 300 நாட்களுக்கு வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து போக போக்குவரத்துச் செலவினமாக நாளொன்றுக்கு ரூ. 10/-ம், மற்றும் சிற்றுண்டிச் செலவினமாக நாளொன்றுக்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ. 10/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

### 3.6 தனியார் கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி பெருமை சேர்த்திடும் வகையில் அரசு, அந்தந்த கல்லூரிகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளை பயன்படுத்த, கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியது. மேலும், அரசு குறைந்த பட்ச தகுதியை நிர்ணயித்தும் கல்லூரி நிர்வாகமே மாணவர்களை தேர்வு செய்யவும் அனுமதி வழங்கியது.

கல்லூரிகளின் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | கல்லூரியின் பெயர் | விளையாட்டுகள் | பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | ஆண்கள் கல்லூரி | | |
| 1. | லயோலா கல்லூரி, சென்னை | கால்பந்து<br>தடகளம்<br>கூடைப்பந்து | 8<br>6<br>5 |
| 2. | சென்னை கிறித்துவக் கல்லூரி, தாம்பரம் | தடகளம் | 5 |
| 3. | பிஎஸ்ஜி ஆர். கலைக் கல்லூரி, கோவை | கூடைப்பந்து | 5 |
| 4. | பச்சையப்பன் கல்லூரி, சென்னை | வளைகோல் பந்து | 8 |

| | | | |
|---|---|---|---|
| 5. | ஜமால் முகமது கல்லூரி, திருச்சி | கைப்பந்துபந்து | 6 |
| 6. | தூய வளனார் கல்லூரி, திருச்சி | தடகளம் | 5 |
| | | கூடைப்பந்து | 6 |
| | | கால்பந்து | 8 |
| 7 | எம்.எல்.என்.வக்ப் போர்டு கல்லூரி, மதுரை | தடகளம் | 5 |
| | பெண்கள் கல்லூரி | | |
| 1. | எத்திராஜ் கல்லூரி, சென்னை | தடகளம் | 5 |
| | | கூடைப்பந்து | 5 |
| | | கைப்பந்துபந்து | 6 |
| 2. | எஸ்.டி.என்.பி.வைஷ்ணவா கல்லூரி, சென்னை | தடகளம் | 5 |
| | | வளைகோல்பந்து | 8 |
| 3. | வி.வி.வி. கல்லூரி, விருதுநகர் | தடகளம் | 5 |
| 4. | ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, பெரியகுளம் | கைப்பந்துபந்து | 6 |
| 5. | நிர்மலா கல்லூரி, கோவை | கூடைப்பந்து | 5 |

மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

கீழ்க்காணும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப் படி - ரூ.600/-

(10 மாதங்களுக்கு) ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணப்படி - ரூ.500/-

பயிற்சி : அந்தந்தக் கல்லூரி நிர்வாகமே, தனது சொந்த பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பது அவர்களின் பொறுப்பாகும்.

### 3.7 மாவட்ட அளவிலான கோடை காலப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வோராண்டும் மாவட்டத் தலைநகரங்களில் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாத ஆண், பெண் இருபாலருக்கும் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் - தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து மற்றும் கைப்பந்து பந்து விளையாட்டுக்களில் நடத்தப்படுகின்றன.



### 3.8 மாநில அளவிலான கோடை காலப் பயிற்சி முகாம்

கோடை காலத்தில் ஒவ்வோராண்டும், தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து மற்றும் கைப்பந்துப் பந்து விளையாட்டுப் பிரிவுகளில் குடியரசுதின விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடங்களைப் பெற்ற 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு தங்கும் வசதியுடன் கூடிய 21 நாட்களைக் கொண்ட மாநில அளவிலான கோடை காலப் பயிற்சி முகாம் நடத்தபபட்டு வருகின்றது. சுழற்சி முறையில், இந்தப் பயிற்சி முகாம் ஒவ்வோராண்டும் ஒரு மாவட்டத் தலைநகரத்தில் நடத்தப்படுகின்றது.

### 3.9. 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கென சிறப்புப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வோராண்டும் தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து, கைப்பந்துப் பந்து மற்றும் நீச்சல் விளையாட்டுக்களில் 14 வயதிற்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியருக்கென நடத்தப்படுகின்ற விளையாட்டுப் போட்டிகளில் இளமையில் தெரிந்தெடுக்கும் விளையாட்டு வீரர், தேர்ந்தெடுக்கப்படுகின்ற திறமைமிக்க விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு, சிறப்புப் பயிற்சி முகாம்களை நடத்த தமிழக அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒலிம்பியன் / சர்வதேச விளையாட்டு வீரர், மாநில விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பயிற்றுநர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களைக் கொண்ட தேர்வுக்குழு திறமைமிக்க விளையாட்டு வீரர்களை இப்பயிற்சி முகாமிற்குத் தேர்வு செய்கிறது. 165 மாணவ, மாணவியர் (கால்பந்து விளையாட்டில் 15 மாணவர் மற்றும்5 விளையாட்டுப் பிரிவுகளில் ஒவ்வொரு விளையாட்டிலும் 15 மாணவர் மற்றும் 15 மாணவியர்) இந்த சிறப்புப் பயிற்சி முகாமில் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

இந்தப் பயிற்சி முகாம் மூன்று கட்டமாக நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு கட்டப் பயிற்சி முகாமின் கால அளவு 21 நாட்களாகும்.

### 3.10 மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுவோருக்கு சிறப்புப் பயிற்சி முகாம்

மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெறுகின்ற மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத விளையாட்டு வீரர்களுக்கு 21 நாட்கள் கால அளவைக் கொண்ட சிறப்பு விளையாட்டுப் பயிற்சி

முகாம்கள் 157 விளையாட்டு வீரர்களுக்கு கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் 1999–2000-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது:–

1) தடகளம் (25 மாணவர்கள் மற்றும் 25 மாணவியர்கள்)

2) கால் பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)

3) வளைகோல் பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)

4) கூடைப் பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)

5) கையுந்துப் பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)

## 3.11. பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுபவர்களுக்கு சிறப்புப் பயிற்சி முகாம்

பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெறுகின்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 21 நாட்கள் கால அளவு கொண்ட சிறப்புப் பயிற்சி முகாம்கள் மொத்தம் 157 மாணவர்களுக்கு கீழ்க்கண்ட விளையாட்டுப் பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகிறது:–

1) தடகளம் (25 மாணவர்கள் மற்றும் 25 மாணவியர்கள்)

2) கால் பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)

3) வளைகோல் பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)

4) கூடைப் பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)

5) கையுந்துப் பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)

## 3.12. இந்திய விளையாட்டுக் குழுமத்தின் பயிற்சி மையங்கள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இந்திய விளையாட்டுக் குழுமத்தின் பயிற்சி மையங்களை தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் தொடங்க விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை அளித்துள்ளது:–



| இடம் | திட்டம் | விளையாட்டு |
|---|---|---|
| சென்னை | இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | வளைகோல்பந்து, கால்பந்து, கபாடி |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | வளைகோல்பந்து, கால்பந்து, கபாடி, குத்துச்சண்டை, சிறகுப்பந்து, நீச்சல் |
| | இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்சி மையம் (மாணவியர்கள்) | வளைகோல்பந்து, கையுந்துபந்து, கபாடி |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவியர்கள்) | வளைகோல்பந்து, கையுந்துபந்து, சிறகுப்பந்து,கூடைப் பந்து, ஸ்குவாஷ். |
| சேலம் | இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | தடகளம், கையுந்துபந்து, கூடைப்பந்து |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | தடகளம், கையுந்துபந்து, கூடைப்பந்து |
| நாகர் கோவில் | இந்திய விளையாட்டுக் குழும சிறப்பு விளையாட்டு டே போர்டர் திட்டம் | தடகளம், கராத்தே. |

## 3.13. சிறப்புப் பயிற்சித் திட்டம்

### அ) நீச்சல் பயிற்சித் திட்டம்

ஒவ்வொரு வருடமும் கோடைகால விடுமுறையில் "நீச்சல் பயிற்சி" திட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நீச்சல் வளாகங்களான வேளச்சேரியிலும், ஷெனாய் நகரிலும் பல்வேறு பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகிறது.

### 4.5. இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகள்

பள்ளியில் பயிலும் 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியரிடையே உள்ள விளையாட்டுத் திறனைக் கண்டறிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் பின்வரும் 6 விளையாட்டுக்களில் நடத்துகிறது. 1) தடகளம் 2) கூடைப்பந்து 3) கால்பந்து 4) வளைகோல்பந்து 5) நீச்சல் மற்றும் 6) கையுந்துபந்து.

### 4.6 அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் சுற்றுமுறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

### 4.7. சென்னை பெருநகர அரசு ஊழியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

சென்னை பெருநகரில் உள்ள அரசு ஊழியர்களுக்கிடையே விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுப் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக ஐந்து வெவ்வேறு வயது பிரிவில் பின்வரும் விளையாட்டுக்களில் நடத்தப்பட்டு வருகின்றன. தடகளம், கையுந்துபந்து, பூப்பந்து, மேசைப்பந்து மற்றும் சிறகுப்பந்து.

### 4.8 அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்நாட்டைச் சார்ந்த அரசுப் பணியாளர்கள் அணி, வெவ்வேறு மாநிலங்களில் சுற்று முறையில் நடத்தப்படும் தேசிய அளவிலான அரசுப் பணியாளர்கள் போட்டியில் பங்கேற்று வருகிறது.

### II. இந்திய விளையாட்டுக் குழுமத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்

### 4.9 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள்

இந்திய விளையாட்டுக் குழுமம் ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுக்களில் 16





வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. தேசிய போட்டிகளில் பங்கேற்புக்கு முன் மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும், தெரிந்தெடுக்கப்பட்டவருக்கு பயிற்சி முகாமும் நடத்தப்படுகின்றது.

### 4.10 தேசிய மகளிர் விளையாட்டு விழா

இந்திய விளையாட்டுக் குழுமம் மகளிருக்காக வயது வரம்பின்றி 13 விளையாட்டுக்களில் தேசிய மகளிர் விழாவை நடத்தி வருகிறது. தமிழக அணி இவ்விழாவில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இப்போட்டிகளில் பங்குபெறுவதற்கான மாநில அணியைத் தெரிந்தெடுப்பதற்காக ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தெரிவு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தேசிய போட்டிகளில் பங்குபெறுவதற்கு முன் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

### 4.11 விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்

சென்னையில் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கங்கள் இருப்பதால், மாநில விளையாட்டுக் கழகங்களை தேசிய விளையாட்டுப் போட்டிகளையும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும், மற்றும் இதர முக்கியமான விளையாட்டுப் போட்டிகள் நடத்த தமிழக அரசு ஊக்குவிக்கும். இவ்வாறான சர்வதேச விளையாட்டு அரங்கங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் தமிழ்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் தனித் திறமைகளை மிளிரச் செய்ய இயலும்.

## அத்தியாயம் – 5

## உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு எண்ணற்ற உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

### 5.1 விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இத்திட்டத்தின்கீழ், 14 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர்,

வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒருமுறை மட்டும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5000/–மும், கல்லூரி / பல்கலைக் கழக மாணவராக இருந்தால் ரூ.6500/–ம் வழங்கப்பட்டு வருகிறது.

**5.2 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டமான 10–7–1993 நாளிட்ட பொதுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க அரசு, அரசாணை எண் (4டி) எண் 2, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 3–4–1996ன்படி, பன்னாட்டுப் போட்டிகளில் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளைக் கௌரவிக்கும் வகையில், "முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது" ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தலா ரூ.1.00 இலட்சம் பணமுடிப்பும், விருதிற்கான பதக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரம் பரிசாக வழங்கி வருகின்றது. இதுவரையிலும் சர்வதேச போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த 12 விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

**5.3 தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றோருக்கு ரொக்கப் பரிசு**

பெங்களூரில் நடைபெற்ற 4வது தேசிய விளையாட்டுப் போட்டிகளிலும் மற்றும் மணிப்பூரில் நடைபெற்ற 5வது தேசிய விளையாட்டுப் போட்டிகளிலும் (National Games) பதக்கங்கள் வென்றவர்களுக்கு (தங்கம் – ரூ.50,000, வெள்ளி – ரூ.30,000 மற்றும் வெண்கலம் – ரூ.20,000) என்ற வகையில் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 107 நபர்கள் பயன்பெற்றனர். இதற்கு ரூ.46.60 இலட்சம் செலவிடப்பட்டது.

**5.4 சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு அடுக்குமாடி/காலிமனை இடங்கள் ஒதுக்கீடு செய்தல்**

அரசு, தனது அரசாணை எண் 639, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 28–7–1993–ன்படி, ஒலிம்பிக்ஸ், ஆசிய



விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் திறமையைப் பாராட்டும் முகத்தான், அடுக்குமாடி / காலிமனை இடங்களை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

| | | |
|---|---|---|
| தங்கப் பதக்கம் | – | உயர் வருமானப் பிரிவு அடுக்குமாடி/காலிமனை |
| வெள்ளிப் பதக்கம் | – | நடுத்தர வருமானப் பிரிவு அடுக்குமாடி |
| வெண்கலப் பதக்கம் | – | குறைந்த வருமானப் பிரிவு அடுக்குமாடி |

மேற்படி அரசாணையின்படி, 17 விளையாட்டு வீரர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**5.5 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**

தற்போது நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.500/–க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் உள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/– வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 25 பேர்கள் இத்தகைய ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மேலும் இத்திட்டத்தின்படி இறந்தவர்களின் குடும்பத்திற்கும் ஓய்வூதியம் வழங்கப் பெறுகிறது. இதுவரை 9 நபர்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

**5.6 அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல்**

தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் மற்றும் 41 மாநில விளையாட்டுக் கழகங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அங்கீகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு தேசிய மற்றும் தென்மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் மற்றும் அப்போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்வதற்கும் மானியம் வழங்கப்படுகின்றது.

### 5.7 சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மானியம்

தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க மைய அரசின் பயணச் செலவின உதவியினைப் பெறாதபட்சத்தில், விமானப் பயணக் கட்டணத்திற்கான மானியம் அதிகபட்சமாக ரூ.25,000/- வரை வழங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

### 5.8 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு சீருடைப் பணியாளர் துறைகளில் (காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை, மற்றும் வனத் துறை இன்னபிற துறைகளில்) பணியிட ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி வருகிறது.

## அத்தியாயம் - 6

## இளைஞர்கள் நலத் திட்டங்கள்

6.1. இளைஞர்கள், அதாவது 15-35 வயதுக்குட்பட்டவர்கள் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1/3 பங்காக உள்ளனர். சமுதாயத்தின் துடிப்புமிக்க திறமைமிக்க இந்தப் பிரிவை ஒழுங்காகக் கையாள்வதன்மூலம் அவர்களிடம் உள்ள சக்தியைத் தனி மனித வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் பயன்படுத்தலாம். இளைஞர்களிடையே அவர்களின் தனித்துவத்தை உணரச் செய்தல், சமுதாய சேவை மனப்பான்மையை மேம்படுத்துதல் " நமக்கு நாமே" என்ற கொள்கையில் பிடிப்பு ஏற்படுத்துதல் ஆகியவைகள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது.

### 6.2. தேசிய மாணவர் படை, தமிழ்நாடு

#### தொடக்கம்

தேசிய மாணவர் படை இயக்ககம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய மாணவர் படை சட்டத்தின் (எண் XXXI 1948) கீழ் 16-7-1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது.





#### குறிக்கோள்

(அ) இளைஞர்களிடையே நற்பண்பு, துணிவு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமை, சமய சார்பற்ற நோக்கம், துணிவுச்செயல், போட்டி, நேர்மைப் பண்பு மற்றும் சுயநலமில்லாத தொண்டுகளின் உயர் குறிக்கோள்களை வளர்த்து அவர்களை ஒரு நல்ல குடிமகனாக்குதல்.

(ஆ) ஒழுங்கு முறையில் பயிற்சி பெற்று சிறந்த செயல்நோக்குடைய இளைஞர்களின் மனித வளத்தைக் கொண்டு அவர்கள் வாழ்வின் எல்லா நடைமுறைகள் மற்றும் ஆயுதப் படைகளிலும் தலைமைப் பொறுப்பு வகிக்க வகை செய்து அவர்களை நாட்டுப் பணிக்காக எப்பொழுதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள் ஆயுதப்படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

#### நோக்கம்

ஒற்றுமை மற்றும் ஒழுங்குமுறை.

#### அறிமுகம்

தன்னார்வமிக்க பள்ளி மாணவ/மாணவிகள் தேசிய மாணவர் படையில் இளநிலை கோட்டம்/பிரிவு (வகுப்பு 8 முதல் 9 வரை) முதுநிலை கோட்டம் / முதுநிலை பிரிவு (கல்லூரி அளவில்) அறிமுகம் பெறலாம்.

#### அறிவுரை குழு

தேசிய மாணவர் படை சிறப்புடன் இயங்குவதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் முழு பங்குவகித்து செயல்பட்டு வருகின்றன. இந்நோக்கத்திற்கென கீழ்க்கண்ட இரண்டு அறிவுரை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன :

1) மத்திய அறிவுரைக் குழு

2) மாநில அறிவுரைக் குழு

தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை இயக்ககத்தின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் விவரம் :

[2001 ஆகஸ்ட் 27

| | | |
|---|---|---|
| 1 | தேசிய மாணவர் படை இயக்ககம் (துறைத் தலைமையகம்), சென்னை—9 | 1 |
| 2 | தேசிய மாணவர் படை தலைமைப் பிரிவுகள் | 5 |
| 3 | அலகுகள் | 51 |
| 4 | தேசிய மாணவர் படை இடம் பெற்றுள்ள கல்லூரிகள் | 221 |
| 5 | தேசிய மாணவர் படை இடம் பெற்றுள்ள பள்ளிகள் | 672 |
| 6 | மொத்த மாநில அரசு அலுவலர்கள் / பணியாளர்கள் | 1129 |
| 7 | மொத்த தேசிய மாணவர் படை மாணவர்கள் | 89344 |

தேசிய மாணவர் படையின் நடவடிக்கைகள் / பயிற்சிகள் :

1. நிறுவனப் பயிற்சி
2. சமுதாய முன்னேற்றம்/சமூகநலப் பணிகள்
3. இளைஞர் பரிமாற்ற செயல்முறை திட்டம்
4. விளையாட்டுகள்
5. துணிவுச் செயல் நடவடிக்கைகள்

**நிர்வாகம்**

தேசிய மாணவர் படை இயக்கம் பாதுகாப்பு அமைச்சகத்தால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை இயக்ககத்தின் நிர்வாகத்தினை திறம்பட நிறைவேற்றுவதற்கு துணை தலைமை இயக்குநர் தேசிய மாணவர் படை அவர்களுக்கு துறை தலைமை அலுவலகத்திற்கான அனைத்து அதிகாரங்களையும் மாநில அரசு அளித்துள்ளது.

**விருதுகள்**

மொத்தமுள்ள 16 தேசிய மாணவர்படை இயக்கங்களினுள் தமிழ்நாடு தேசிய மாணவர்படை இயக்ககம் 11 முறை முதலிடத்தை வகித்து



2001 ஆகஸ்ட் 27]

பெருமைமிக்க அனைத்திந்திய இயக்கக விருதை பிரதம மந்திரியின் பெயரில் வென்றுள்ளது. மேலும் 5 முறை இரண்டாம் இடத்தையும் வகித்துள்ளது.

**ஊக்கங்கள்**

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் ஊக்கங்களை தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு அளித்துள்ளது:

அ) 80 முதுநிலை கோட்ட/பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.1,200/-ம் 90 இளநிலை கோட்ட/பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.600/-ம் வழங்கப்பட்டுள்ளது (மொத்த தொகை ரூ.1,50,000/-- வருடத்திற்கு)

ஆ) சிறந்து விளங்கும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இத்திட்டம் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கல்லூரி மற்றும் தொழிற்நுட்ப கல்லூரிகளில் இளநிலை பட்ட வகுப்பில் ஒரு இடமும் முதுநிலை பட்ட வகுப்பில் ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இ) குடியரசு தின முகாம் மற்றும் மாநில அளவிலான முகாம்களில் பங்குபெறும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடத்திற்கு ரூ.3.17 இலட்சங்கள் வரை ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

ஈ) தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் பத்து இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உ) 2001–2002 கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.3. நாட்டு நலப் பணித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவத்

தொண்டர்களின் எண்ணிக்கை 1,70,000 ஆக இருந்தது. சிறப்பு முகாம்களில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை 85,000 ஆக இருந்தது. நாட்டு நலப் பணித் திட்டத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது 1,70,000லிருந்து 1,87,000 ஆகவும், சிறப்பு பயிற்சி முகாம்களில் பங்கு கொள்வோரின் எண்ணிக்கை 85,000 லிருந்து 93,500 ஆகவும் 2001–2002 ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 1115 அலகுகளும், மேநிலைப் பள்ளிகளில் 1170 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன. நாட்டு நலப் பணித் திட்டம் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

## 6.4. சாரண சாரணியர் இயக்கம்

சர்வதேச இயக்கமான சாரண சாரணியர் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் பள்ளி மாணவ மாணவியரிடையே நல்லொழுக்கத்தை வளர்த்தல், நாட்டுப்பற்று உணர்வு, இரக்க மனப்பான்மை, சமூகப் பணி ஆகியவைகளை புகட்டுவதாகும் " எப்போதும் தயாராக இரு" என்பது அதன் கோட்பாடாகும். இந்த இயக்கம் தமிழ்நாட்டில் 5000 பள்ளிகளில் இயங்கி வருவதுடன், இந்த இயக்கத்தில் 81,398 மாணவர்களும், 19,683 மாணவியர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். 2000–2001ஆம் ஆண்டு முதல் 3064 சிறந்த சாரண சாரணியருக்கு "இராஜ்ய புராஸ்கர்" விருது வழங்கப்பட்டது. அரசு இதற்காக ரூ.5 இலட்சம் செலவு மேற்கொண்டுள்ளது.

## மாணவரல்லாத இளைஞர்களுக்கான திட்டங்கள்

## 6.5. இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்கான நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.



தற்சமயம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டுவதற்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாக இளைஞர் விடுதிகளைக் கட்டுவதற்கு மைய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

## 6.6. இளைஞர் விழா

இளைஞர் விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர்களிடையே அர்த்தமுள்ள சுமூகமான நட்புறவையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நடத்தப்பட்டு வருகின்றன. மைய அரசும் இதேபோன்று ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் இளைஞர் விழாவினை சனவரித் திங்கள் 12–16 வரை நடத்தி வருகிறது. இவ்விழாக்களில் பல்வேறு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த அணிகள் 18 வெவ்வேறு போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர்.

## 6.7. இளைஞர் மன்றங்கள்

இன்றைய இளைஞர்களிடையேயுள்ள சக்தியினையும், திறமையினையும், தனி மனித வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் பயன் அடையும் வகையில் வெளிக் கொணர வேண்டும். நமது இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக்கொணரும் வகையில் இந்த அரசு இருவகையான இளைஞர் நலத்திட்டங்களை செயல்படுத்திட முடிவு எடுத்துள்ளது. அதில் முதலாவதாக மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போன்று இளைஞர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்தான் இக்குழுக்களின் முக்கிய நோக்கம். மேலும் இக்குழுக்களின் நிகழ்ச்சிகள் ஊரக வளர்ச்சித் துறையால் ஒருங்கிணைக்கப்படும். இக்குழுக்கள், பொருளாதார மேம்பாட்டிற்கும் இளைஞர்களின் நலத்தினையும் கருத்தில் கொண்டு செயல்படவும், அதனால் பொருளாதார செயல்பாடுகளின் மூலம் இளைஞர்கள் தாங்களே தங்களை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாகும்.

இத்திட்டத்தின் இரண்டாவது நோக்கம் இளைஞர் குழுக்களை அமைப்பதாகும். ஆண், பெண் இளைஞர்களுக்கென தனித்தனியே

இளைஞர் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இக்குழுக்கள் மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களை விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடுத்தி அவர்களுடைய நேரம் மற்றும் சக்தியினை ஒருமுகப்படுத்தும் வகையில் செயலாற்றும். அவர்களுடைய ஓய்வு நேரத்தில் சமூக நலப் பணிகளிலும் மது அருந்துவதற்கு எதிராகவும், தீண்டாமை ஒழிப்பிற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், வீர தீர செயல்களிலும் ஈடுபடுத்தப்படும். கரகம், கும்மி, கோலாட்டம், தெம்மாங்குப் பாடல்கள், கிராமியப் பாடல்கள், வில்லுப்பாட்டு, கிராமிய நடனங்கள் மற்றும் இதர பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் இக்கலைகளை வளர்க்கவும் இளைஞர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, கலை மற்றும் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து இளைஞர்களிடையே உள்ள பாரம்பரிய கலை நிகழ்ச்சி திறமைகளை மேம்படுத்த செயல்படும்.

### 6.8. வீரதீரச் செயல்களை ஊக்குவிக்கும் திட்டம்

மைய அரசு 50 விழுக்காடு மானியம் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இளைஞர்களைப் பேணுவது, சவால்களை எதிர்கொள்ளும் திறன், பரந்த மனப்பான்மை, ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி மற்றும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு விரைந்து முடிவெடுக்கும் திறனை வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பின்வரும் வீரதீரச் செயல்களுக்காக மாநில அரசுகள், கல்வி நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், தனிநபர் குழுக்கள் உதவி வழங்கப்படுகிறது.

நீண்ட தூரப் பயணம், நீண்ட நடைப்பயணம், முகாம் அமைத்தல், மலைக்குன்று ஏற்றம், மலையேற்றம், சைக்கிள் பயணம், பனி சறுக்குதல், படகு சவாரி, நீர் சறுக்குதல், தொலைதூர நீச்சல், காற்றில் மிதத்தல், குதித்தல், பாய்மர சவாரி, துடுப்புப் போட்டி, பாராசூட்டிங் மற்றும் பல.

### 6.9. இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்

15 – 35 வயதுள்ள கிராமப்புற இளைஞர்களுக்காக மைய அரசால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். அந்தந்த இடத்திலுள்ள தேவைகளைக் கருத்திற்கொண்டு தக்க பயிற்சி அளிப்பதன் மூலம் இளைஞர்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், சுய வேலைவாய்ப்பு மற்றும் போதிய வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கிடுவதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், கோழி வளர்ப்பு, தையற்கலை, வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்ப்பு, கணினி பயிற்சி போன்றவைகள் இப்பயிற்சித் திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி முகாமின் கால அளவு ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை கொண்டதாகும்.



இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் பங்கேற்பாளர்களுக்கு மைய அரசு, அவர்களின் இருப்பிடத்திலிருந்து பயிற்சி நடைபெறும் இடத்திற்கு சென்றுவர இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம் அல்லது குறுகிய தூர பேருந்து கட்டணம் மற்றும் உணவு, தங்குமிடம் மற்றும் இதர செலவினங்களுக்காக அதிகபட்சமாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.50/– வீதம் வழங்கி வருகிறது.

### 6.10. தேசிய ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல்

இத்திட்டத்தின்கீழ், தேசிய ஒருமைப்பாட்டைப் பேணவும் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் நடத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக மைய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இதில் அடங்கியுள்ள இரண்டு முக்கியப் பயிற்சித் திட்டங்கள்:–

அ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம்

ஆ) மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனை

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 7 – 10 நாட்கள் நடத்தப்படுகிறது. இதில் 50 முதல் 200 இளைஞர்கள் பங்கேற்கலாம். இந்த முகாம்களில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இளைஞர்கள் ஒன்றாகத் தங்கியும், உணவருந்தியும், ஒருவரையொருவர் புரிந்து கொண்டும், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றும் மற்றும் தொழில் முகாமில் பங்கேற்றும் வருகின்றனர்.

மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனையின்கீழ், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள மாறுபட்ட கலாச்சாரத்தைத் தெரிந்து கொள்ள ஏதுவாகிறது.

15 – 35 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கேற்கலாம். குறிப்பாக, 1) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 2) இளைஞர் மன்றங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள

மாணவரல்லாத இளைஞர்கள் 3) விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 4) தொழிலாளர் அமைப்பைச் சார்ந்தவர்கள் போன்றோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:—

அ) உணவு மற்றும் தங்குமிடம் – மாநகரங்கள் அல்லது மாநில தலைநகரங்களாயின் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.40/–, மற்ற இடங்களுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.35/–.

ஆ) பயணக் கட்டணம் – இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணத்தில் 90 விழுக்காடு அல்லது பேருந்து கட்டணம்.

இ) அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் – இளைஞர்கள் பரிவர்த்தனை நிகழ்ச்சி பற்றிய அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்கான விலை நிகழ்வு ஒன்றுக்கு ரூ.1000/–க்கு மிகாமல் வழங்கப்படுகிறது.

## 6.11. இளைஞர்களுக்கான கண்காட்சித் திட்டம்

இத்திட்டத்தின் குறிக்கோள், தேசிய வளர்ச்சியில் இளைஞர்களின் ஈடுபாட்டினை மதித்து வளர்த்தல், மதச் சார்பற்ற தன்மையை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப்பாடு, வேற்றுமையில் ஒற்றுமை, இந்திய குடிமகன் என்பதில் பெருமைப்படுதல், சமூக தீமைகளை ஒழித்தல் போன்றவையாகும். இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், வண்ணம் தீட்டுதல், கலை மற்றும் கைத்தொழில், புத்தகங்கள் மற்றும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் இளைஞர்கள் சார்ந்த திட்டங்கள் ஆகியவைகள் மைய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:—

அ) நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பாடல்கள், வண்ணம் பூசுதல், கலை மற்றும் கைத்தொழில் மற்றும் தேசிய அளவிலான இளைஞர்கள் மாநாடு / கலந்துரையாடல் / கருத்தரங்கம் / இளைஞர்கள் முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றிற்கு:—

1) உணவுக் கட்டணம் ரூ.20/– நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு.

2) பயணக்கட்டணம் – பங்கேற்பாளர் தங்குமிடத்திலிருந்து முகாம் நடக்கும் இடத்திற்கு வர குறுகிய வழி பயணக் கட்டணம்.



3) அனுமதிக்கப்பட்ட செலவினத் தொகையிலிருந்து 25 விழுக்காடு எதிர்பாரா செலவினங்களுக்காக அனுமதிக்கப்படுகிறது.

ஆ) ஏனைய தேசிய கருத்துத் திட்டங்களுக்கு 90 விழுக்காடு ஒதுக்கீடு.

## 6.12. மலைவாழ் பகுதியில் இளைஞர் நலத்தினை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம்

மலைவாழ் இளைஞர்களுக்கிடையே தலைமையேற்கும் தன்மையை வளர்க்கும் பயிற்சித் திட்டங்கள், சுயவேலை வாய்ப்புத் திறனை வளர்க்க உதவும் தொழில் பயிற்சிகள், கண்காட்சிகள் இத்திட்டத்தின்கீழ் நடத்தப்படுகின்றன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஏனைய இளைஞர் நலத் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவியைப் போன்று இத்திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது.

## 6.13. முடிவுரை

இளைய தலைமுறையினரிடையே சீரிய நல்லொழுக்கத்தைப் புகுத்துவதிலும், மதச்சார்பற்ற மனப்பான்மையையும், விளையாட்டு வீரர்களின் நற்பண்புகளையும், தன்னலம் கருதா சேவைமனப்பான்மையை ஊக்குவித்தல் ஆகிய சீரிய நோக்கங்களை மேம்படுத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

## இணைப்பு II

*(76 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2001-2002

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு"*
*-பாவேந்தர் பாரதிதாசன்*

இன்றைய சூழ்நிலையில், ஒரு மொழி, சர்வதேச சமுதாயத்தில், இடைவிடாது நிகழ்ந்துகொண்டிருக்கிற, சமூகப் பொருளாதார, உணர்ச்சிபூர்வமான மாறுதல்களையும் மாற்றங்களையும் எதிர்கொண்டு, புதிய மாறுதல்களுக்கு ஏற்பத் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலையில் உள்ளது. புதிய மாற்றங்களை, ஒரு மொழியினால் ஏற்க முடியாமல் போனால், அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள், அந்த மொழியின் வலிமையைக் குறைத்துவிடும். வளமார்ந்த மொழியாக, வழக்கில் என்றென்றும் இருக்கும் மொழியாக மாற வேண்டும் என்றால், நிலைத்த பழமையும், வளரும் புதுமையும் இரண்டறக் கலந்து, இரண்டின் தன்மைகளையும் உள்ளடக்கியதாக அந்த மொழி வளர்ந்து வரவேண்டும். மாற்றங்கள் என்பது தவிர்க்க முடியாத இயற்கையின் விளையாட்டு. இறைவனின் அருட்கொடை. மாற்றங்களுக்குத் தடைபோடுவது என்பது இன்றைய சர்வதேச அரங்கில் இருந்து, தம்மை நாமே தனிமைப்படுத்திக்கொள்வதற்கு ஒப்பான செயலாகும். ஒரு மொழி, காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப அனைத்துப் பணிகளையும், செம்மையாகச் செய்யும் திறமையும் வலிமையும் பெற்றால்தான், அந்த மொழி வளர்கின்ற மொழியாக இருக்கும்.

மொழியின் தனித்தன்மை அழிந்து விடாமலும், அதே நேரத்தில் காலத்தின் தாக்கத்திற்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக்கொள்வதற்குத் தேவையான ஆற்றலை அதற்கு அளிக்கவும், மறைந்துவரும், பழந்தமிழ்

இலக்கிய உணர்வுகளைத் தட்டி எழுப்பவும், தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பையும் இலக்கிய மரபையும் இனம் காட்டவும் பழந்தமிழ்க் கலைகளிலும், நாட்டுப்புறக் கலைகளிலும் மக்களின் மனங்களில் ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டை ஏற்படுத்தவும், தமிழ் மொழியின் தாக்கம், நமது வாழ்வியல் முறையிலும், கலை இலக்கியங்களிலும், கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றிலும் உண்டு என்பதைத் தெள்ளத்தெளிவாகக் காட்டவும், இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் தமிழ் மொழி, தனது சீரிளமை குன்றாமல், அதே தனிப் பண்புகளுடன் திகழ வைக்கவும் இன்றைய வளரும் தலைமுறை உறுதி ஏற்க வேண்டுமென்று இந்த மாநாட்டின் வாயிலாக இன்றைய இளைய தலைமுறையினரைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று 'உயிரினும் இனிய உயர்தமிழ் மொழிக்கு 1995-ல் தஞ்சையில் நடந்த எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் ஐந்து நாள் ஆராதனையின் நிறைவுநாள் விழாவில்' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை, தமிழ் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைப்பதாகவும் வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தளிப்பதாகவும் அமைந்ததைத் தமிழகம் மட்டுமன்றி உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பாராட்டி மகிழ்ந்தனர். தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் மீண்டும் மேத்திங்கள் 2001-இல் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டின் கலைகளின் வளர்ச்சிக்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், கொள்கைகள் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். இத்தகைய அடித்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலும் வழிகாட்டுதலிலும் தமிழ் வளர்க்கவும் தமிழ்க்கலை-பண்பாடுகள் தழைக்கவும் இந்த அரசு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயற்பட உறுதிபூண்டு, (1) தமிழ் நலம் பேணல், (2) தொன் மரபு காத்தல், (3) வளர்கலை ஊக்குவித்தல் போன்ற மிக இன்றியமையாத பணிகளைச் செய்துவருகிறது. இவ்வரிய பணிகளைச் செய்ய இத்துறையின்கீழ், கீழ்க்காணும் நிறுவனங்களும் அமைப்புகளும் இயங்கி வருகின்றன.



**தமிழ் நலம் பேணுவன**

1. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
3. தமிழ்ப் பல்கலைக்கழகம்
4. ஆசியவியல் ஆய்வு நிறுவனம்
5. தமிழ் இலக்கியச் சங்கப்பலகையின் - குறள்பீடம்
6. மொழி பெயர்ப்புப் பிரிவு
7. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம்

**தொன் மரபு காப்பன**

8. அரசு அருங்காட்சியகங்கள்
9. தொல்லியல் துறை
10. அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம்

**வளர்கலை ஊக்குவன**

11. கலை-பண்பாட்டு இயக்ககம்
12. மண்டலப் பண்பாட்டு மையங்கள்
13. அரசு இசைக் கல்லூரிகள், இசைப்பள்ளிகள்
14. அரசு கலைத் தொழிற் கல்லூரிகள்
15. அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி
16. இயல் இசை நாடக மன்றம்
17. ஓவிய நுண்கலைக் குழு
18. சவகர் சிறுவர் மன்றம்

[2001 ஆகஸ்ட் 27

**2001—2002 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு (1) | | திட்டப் பணிகள் (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | பொதுப் பணிகள் | | | |
| 01 | அலுவலகக் கட்டிடங்கள் | | | |
| 051 | கட்டுமானம் | — | 0.30 | 0.30 |
| 053 | பராமரித்தலும், செப்பனிடுதலும் | — | 34.99 | 34.99 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 102 | பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | 17.67 | 478.90 | 496.57 |
| 05 | மொழி வளர்ச்சி | | | |
| 001 | நெறிப்படுத்தலும், நிருவாகமும் | 25.23 | 239.05 | 264.28 |
| 102 | இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 0.01 | 53.00 | 53.01 |
| 800 | ஏனைய செலவு | 67.76 | 865.03 | 932.79 |
| 2205 | 00 கலையும் பண்பாடும் | | | |
| 001 | நெறிப்படுத்தலும், நிருவாகமும் | 22.52 | 21.04 | 43.56 |
| 101 | நுண்கலைக் கல்வி | 203.37 | 233.13 | 436.50 |
| 102 | கலை—பண்பாட்டை வளர்த்தல் | 101.75 | 315.75 | 417.50 |
| 103 | தொல்பொருளியல் ஆய்வு | 194.05 | 242.10 | 436.15 |
| 105 | பொது நூலகங்கள் (அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்) | 1.06 | 25.08 | 26.14 |
| 107 | அரும்பொருட் காட்சியகங்கள் | 243.36 | 245.90 | 489.26 |
| 800 | ஏனைய செலவு— | — | 25.00 | 25.00 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | | | |
| 60 | ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் | | | |
| 200 | ஏனைய திட்டப் பணிகள் | — | — | — |
| மானியக் கோரிக்கை எண் 51 | | 876.78 | 2779.27 | 3656.05 |



2001 ஆகஸ்ட் 27]

**தமிழ் வளர்ச்சி இயக்ககம்**

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

அரசு நிருவாகத்தில் ஆட்சி மொழியாகிய தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆட்சி மொழிக் குழுவாக 1957இல் உருவாகி, பின்னர் தமிழ் வளர்ச்சி இயக்ககமாகியிருக்கும் இத்துறையால் தமிழ் மொழி வளர்ச்சித் தொடர்பான பிற பணிகளும் மேற்கொள்ளப் பெறுகின்றன.

## ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம்

### ஆய்வு

ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதுகுறித்து அரசால் தக்க அறிவுரைகள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இதுகுறித்துத் தலைமைச் செயலகத்தைத் தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை அரசுச் செயலாளரும், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலுள்ள மண்டல நிலை, மாவட்ட நிலை, சார்நிலை அலுவலகங்களை மண்டலத் தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்களும் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர்.

### ஆட்சி மொழிக் கருத்தரங்குகள்

ஆட்சி மொழித் திட்டம் முனைப்புடன் செயற்பட ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் 1984 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பெறுகின்றன.

### தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம் – ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில், ஆர்வமும் திறமையும் காட்டும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயமும், பாராட்டும் வழங்கும் திட்டம்

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதுவோருக்குப் பரிசுகள் வழங்கப்பெற்று வருகின்றன.

தமிழ் மொழியிலேயே நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிறந்த துறைத் தலைமை அலுவலகம் ஒன்றிற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஒன்றிற்கும், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகம் ஒன்றிற்கும் ஆண்டுதோறும் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது; மேலும், மாவட்டங்களிலுள்ள மாவட்ட நிலை அலுவலகங்களுள் ஒன்றிற்குக் கேடயமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கும். திட்டமும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## நிதியுதவி

### சிறந்த தமிழ் நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

தகுதியும் சிறப்பும் மிக்க நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நூல் ஆசிரியர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குகின்றது. இத்திட்டத்தின்படி நூல் ஆசிரியர்களுக்குப் பெரும் அளவாக ரூ.25,000/– அல்லது நூல் வெளியீட்டுச் செலவில் 50% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது.

### அரிய தமிழ் நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

ஒப்பற்ற அரிய தமிழ் நூல்களை வெளிக்கொணரும் நோக்கத்திற்காக இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பெறும் நூல்களுக்கு ரூ.20,000/– அல்லது நூல் அச்சிடும் செலவில் 60% தொகை, இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது.

### சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகை செய்கிறது. இதன்படி வெளியிடப்பெறும் மொழியாக்க நூல்களுக்கு ரூ.25,000/– அல்லது அச்சிடும் செலவில் 60% தொகை, இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது.

### அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

தமிழுக்குத் தொண்டாற்றிய அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. திங்கள் வருமானம்



ரூ.400/–க்கு மேற்படாத 58 அகவை முதிர்ந்த, தகுதியுடைய தமிழறிஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் ரூ.500/– வீதம் வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்கப்பெற்று வருகிறது.

### தமிழ்மொழிக் காவலர் நிதியுதவித் திட்டம்

தமிழ்மொழிப் பண்பாட்டைப் பேணி வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள்தோறும் நிதியுதவியாக ரூ.3000/–, மருத்துவப் படியாக ரூ.15/– சேர்த்து ரூ.3015/– ஆக வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மொழிக் காவலர்களின் மரபுரிமையருக்கு நிதியுதவியாக ரூ.1,500/–, மருத்துவப் படியாக ரூ.15/– என மொத்தம் ரூ.1515/– ஆக வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

## பரிசுகள்

### தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் 15 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன.

இவ்வாண்டு முதல், பரிசுக்குரிய தலைப்புகள் விரிவுபடுத்தப்பட்டு, 30 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு தலைப்பிலும் பரிசுக்குரியதாகத் தெரிவுசெய்யப்படும் நூலின் ஆசிரியருக்கு பரிசுத் தொகையாக ரூ.10,000/– வழங்கப்படவுள்ளது. பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பகத்தாருக்கு ரூ.2000/- பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

### பல்கலைக்கழக – கல்லூரி அளவில் தமிழில் போட்டிகள் நடத்துதல்

மாணவர்களுக்குத் தமிழ் மொழியின்பால் ஈடுபாட்டை வளர்த்தெடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்மொழித் தேர்ச்சியை ஊக்குவிக்கும் முறையிலும், தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்திற்கு உறுதுணை புரியும் வகையிலும் அறிவியல் தமிழின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் வகையிலும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் வாயிலாகப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

[2001 ஆகஸ்ட் 27

**இந்திய ஆட்சிப் பணித் தேர்வினைத் தமிழில் எழுதித் தேர்ச்சிப் பெறுவோருக்குப் பரிசு வழங்கும் திட்டம்**

இந்திய ஆட்சிப் பணித் தேர்வினைத் தமிழில் எழுதுவோரை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய ஆட்சிப் பணித் தேர்வினைத் தமிழ் வழியில் எழுதித் தேர்ச்சி பெறுவோருள் தரநிலையில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

**சிறந்த இதழ்களுக்குப் பரிசு**

தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் வகையில் வெளிவரும் தமிழ் நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசு என மூன்று பரிசுகள் வழங்கி ஊக்குவிக்க இத்திட்டம் வகை செய்கிறது.

**குறள் பரிசு**

கடலூர் மாவட்டம் வீரமுடையான்நத்தம் கிராமத்தைச் சேர்ந்த செல்வி சி. சிவராஜி எனும் சிறுமியின் திருக்குறள் முற்றோதல் திறமையைப் பாராட்டி, தனி நேர்வாகக் கருதி, ரூ. 5,000/- பரிசுத் தொகை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இவ்வாண்டு ஜூன் திங்களில் வழங்கப்பெற்றது.

**விருதுகள்**

**திருவள்ளுவர் விருது**

திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து, ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

**பாவேந்தர் பாரதிதாசன் விருது**

தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றிய கவிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது பெறுபவர் ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் பரிசாகப் பெறுவார்.



2001 ஆகஸ்ட் 27]

**திரு.வி.க. விருது**

சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து தமிழ்த் தென்றல் திருவிகவின் பெயரால் விருது வழங்கப்பெறுகிறது. விருது பெறுபவருக்கு ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்படுகிறது.

**பாரதியார் விருது**

பாரதி நெறி பரப்பும் தகைமையாளர் ஒருவரைத் தெரிவு செய்து விருதுத்தொகை ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகிறது.

**கி.ஆ.பெ. விசுவநாதம் விருது**

தமிழ் நெறியில் தமிழ்த் தொண்டாற்றும் பெருந்தகையாளருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. ஒரு சவரன் தங்கப் பதக்கத்துடன் ரூபாய் ஒரு இலட்சம் விருதுத் தொகையும் விருது பெறுவோருக்கு வழங்கப்பெறுகிறது.

மேலும், தமிழுக்குப் பெருமை சேர்த்தது மட்டுமல்லாமல், ஆன்மீக வாழ்வுக்கும் தங்களை அர்ப்பணித்த வள்ளலார், காரைக்கால் அம்மையார், அருணகிரிநாதர், சைவ சமயக் குரவர்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளர்களின் பெயரில் விருதுகள் ஏற்படுத்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

**நல்கை/நிதியுதவி**

தமிழ்மொழியைப் பரப்புதல், தமிழ் வளர்ச்சி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பின்வருமாறு மூன்று வகையில் செயற்படுத்தப்படுகிறது:

**1) பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல், பட்டய வகுப்பு நடத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மானியம், நிதியுதவி**

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்பிடவும் பிற மாநிலங்களிலுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும் பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும், தமிழில் பட்டய வகுப்பு நடத்துவதற்கும் மானியம், நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

**2) தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி**

தமிழ் நாட்டிலும், பிற மாநிலங்களிலும் உள்ள தமிழ்ச் சங்கங்களிலிருந்து அவ்வப்போது வரப்பெறும் வேண்டுகோளின் அடிப்படையில் அவற்றின் தேவைக்கேற்ப நிதியுதவி வழங்கப்பெறுகிறது. கட்டடம் கட்டுதல், கட்டடச் சீரமைப்பு, சங்கத்தின் சார்பில் நடத்தப்பெறும் பள்ளிகளைப் பராமரித்தல், சங்கத்தின் மேம்பாடு மற்றும் தமிழ்ப் பணித் திட்டங்கள் ஆகியவற்றிற்காக இந்நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

**3) தமிழாய்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்**

தமிழாய்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு, அந்நிறுவனங்களின் ஆய்வுத் திட்டம், பணிகளின் தன்மைக்கேற்ப மானியம் வழங்கப்பெறுகிறது. ஆசியவியல் ஆய்வு நிறுவனம், தென்மொழிகள் புத்தக நிறுவனம், திருவனந்தபுரத்திலுள்ள பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி ஆகிய நிறுவனங்களுக்கு இவ்வகையிலான ஆண்டு மானியம் வழங்கப்பெற்று வருகிறது.

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடன் தமிழாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் ஆண்டுதோறும் நல்கை வழங்கப்படுகிறது.

**விழாக்கள் மற்றும் நூற்றாண்டு விழாக்கள்**

தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள பெருமக்களைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழா, உ.வே.சாமிநாதய்யர் பிறந்தநாள் விழா முதலியன கொண்டாடப்பெறுகின்றன. மேலும், சித்திரை முழுநிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்து சிறப்புச் செய்யும் நிகழ்ச்சியும் நடத்தப்பெற்று வருகிறது.

**நூல்கள் வெளியிடுதல்**

**ஆட்சிச் சொல்லகராதி**

ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்குப் பெரிதும் பயன்படுவன ஆட்சிச்சொல் அகராதிகளாகும். எனவே, இதுவரை ஆறு பதிப்புகள் வெளியிடப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறையிலும் உள்ள சிறப்புச் சொற்களுக்கும் அகராதி தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.



**தமிழ்நாட்டு வரலாறு**

தமிழ்நாட்டு வரலாற்றினை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அதனை முறைப்படி தொகுத்து ஏழு தொகுதி நூல்களாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை நான்கு தொகுதி நூல்கள் (7 தனி நூல்கள்) வெளியிடப்பட்டுள்ளன. ஐந்தாம் தொகுதியாகிய, "பாண்டியப் பெருவேந்தர் காலம்", எனும் நூல் அச்சுப்பணி முடிந்துள்ளது. "தமிழக வரலாறு" – (ஒரே தொகுதி) நூலின் அச்சுப்பணி நடைபெற்று வருகிறது.

**இந்திய ஆட்சிப் பணித் தேர்வு கருவி நூல்**

இந்திய ஆட்சிப் பணித் தேர்வினைத் தமிழில் எழுதுவோருக்குத் துணைபுரியும் வகையில் தமிழில் கருவி நூல்கள் தயாரிக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்மொழி வரலாறு எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. வரலாறு, புவியியல் - கருவி நூல்கள் தயாரிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

**தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்**

தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருதி, இத்துறையின் வாயிலாக அவ்வப்போது தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகிறது.

**தமிழ் நூல் விவர அட்டவணை**

தமிழ்நாட்டில் வெளிவந்து பதிவு செய்யப்பெற்று ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்களுக்கு விவர அட்டவணை நூல்கள் தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 1935ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவர அட்டவணை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 1946ஆம் ஆண்டு முதல் உரிய நூல்களுக்கு விவரத் தொகுப்புப் பணி நடைபெற்று வருகிறது.

**கலைக் களஞ்சியம்/அகராதிகள்**

அகராதி–கலைச் சொல்லகராதி தயாரித்தல், கலைக் களஞ்சியங்கள் தயாரித்தல், மருத்துவக் களஞ்சியம் தயாரித்தல் ஆகியவற்றிற்குத் தனியே நிதியுதவி அளித்து, இவ்வகையிலான நூல்கள் வெளிவரவும் இயக்ககம் துணை புரிகின்றது.

[2001 ஆகஸ்ட் 27

## நூல்கள் நாட்டுடைமையாக்கம்

பாரதியார், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் (விடுதலைப் போரில் தமிழகம் நூல் மட்டும்), கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், மறைமலையடிகள், திருவிக, கல்கி, வெ.சாமிநாதசர்மா ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டன. மேலும், சுதந்திரப் பொன்விழா ஆண்டை யொட்டி, பதின்மூன்று தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டன. திருமயிலை சீனி வேங்கடசாமி, திரு. சாமி சிதம்பரனார், கவிஞர் முடியரசன், பன்மொழிப் புலவர் திரு கா. அப்பாத்துரை ஆகியோரின் நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டு பரிவுத்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

## நான்காவது தமிழ்–அறிவியல் தமிழ் வளர்ச்சி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இயல் இசை நாடகம் எனும் முத்தமிழோடு நான்காவது தமிழாக அறிவியல் தமிழை வளர்த்தெடுக்க வேண்டும் என்று எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் அறிவுறுத்தியதற்கேற்ப, தரம் நிறைந்த கணினித் தகவல் தொழில் நுட்ப மனித வளத்தில் உலகிலேயே தலைசிறந்த இடம் தமிழகம்தான் என்ற பெருமைக்கு அடித்தளம் அமைக்கவும் 'எதிலும் கணினி! எங்கும் கணினி!' என்ற கணினி மயம் நடைமுறையாகவும் கணினி வழிக் கல்வி, மின் அஞ்சல், கணினிவழி வணிகம் குறித்துச் சிற்றூர் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படவும் கல்வி அறிவே இல்லாதவர்களும் திரையில் உள்ள உருவ அமைப்புகளைத் தொட்டு இணையத்தை எளிதாக இயக்கவும் உதவுகிற வகையில் கணினியில் தமிழ்மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், எழுத்துப் பிழைதிருத்தம், இலக்கணப் பிழைதிருத்தம், மின்னியல் முறை அகராதி, தேடுபொறி, பேச்செழுத்து, மொழிபெயர்ப்பு, எழுத்தமைப்பு ஆகியவை ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கு உருவாக்கப்பட்டுள்ளதைப் போன்று தமிழ் மொழிக்குச் செம்மையாக உருவாக்கவும் அறிவியல் நூல்கள் தமிழில் வெளிவர ஊக்கமளிக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## புதிய திட்டங்கள்

நடப்பு நிதியாண்டில் (2001–2002) சொல்வங்கி அமைக்கும் திட்டம், மாநிலத்திலுள்ள 11 மாவட்ட தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்



2001 ஆகஸ்ட் 27]

அலுவலகங்களுக்குத் தளவாடப் பொருட்கள் வாங்கும் திட்டம், தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கு மாநில அரசின் நிதியுதவி வழங்குதல் மற்றும் தமிழ்ப் புத்தகங்களுக்கு கணினி வழி அட்டவணை தயாரித்து வெளியிடும் திட்டம் ஆகியன செயற்படுத்தப்படவுள்ளன.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவிடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியம், சுவடிப்புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம் என்ற நான்கு புலங்கள் உள்ளன. நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான திட்டப் பணிகள் நூல் வெளியிடுதல், தமிழ்மொழி, சுவடியியல், மொழிபெயர்ப்பியல் வகுப்புகள் நடத்துதல், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல், செய்திக்கதிர், தமிழியல் இதழ் வெளியிடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிறுவனம் பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் செய்து வருகிறது. தமிழியல் தொடர்பாக இதுவரையிலும் வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவை யாவும் சிறு விளக்கக் குறிப்புடன் தொகுக்கப்பட்டுக் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை இணையம் (Internet) வாயிலாக உலகத்தினர் அனைவரும் தமிழியல் செய்திகளைப் பெறும் வகையில் அமைக்கப்படும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒரு தகவல் தொடர்பு மையமாக இயங்கவும், இத்திட்டப் பணி வழிவகுக்கும். இந்நிறுவனம் இதுவரையில் 392 நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம் தனியாகவும், பிற நிறுவனங்களோடு இணைந்தும் பல கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றது. இந்நிறுவனத்தில் தற்போது 22 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. இவ்வறக்கட்டளை பொறுப்புகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, அறக்கட்டளைப் பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது நூலகத்தில் 65 ஆயிரம் நூல்கள் உள்ளன. இந்நிறுவனம் 1971-ஆம் ஆண்டு முதல் தமிழியல் இதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இந்நிறுவனம் 1987-ஆம் ஆண்டு முதல் செய்திக்கதிர் எனும் காலாண்டிதழையும் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம்

இந்தியப் பண்பாட்டின் வலுவான இயக்கத்திற்கு ஆதாரமான கருத்தாக்கங்களைப் பண்டுதொட்டே வழங்கியிருக்கும் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களை ஆராய்தல், எதிர்காலத்தில் தமிழினம் வீறுடன் முன்னியங்குவதற்கான அடிப்படைகளைக் கட்டமைக்கும் அறிவியல் பண்புமிக்க ஆராய்ச்சி நூல்களையும் நோக்கிட்டு நூல்களையும் உருவாக்குதல் என்ற உயர் குறிக்கோளுடன் 1981 ஆம் ஆண்டு மொழியின் பெயரால் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஐந்து பெரும்புலங்களில் அடங்கும் 23 தனித் துறைகள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.353 இலட்சம் அரசிடமிருந்து நல்கையாக வழங்கப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகப் பணிகளை வெளிப்படுத்தும் நிலையில் நூல் வெளியீடுகள் முதலிடம் வகிக்கின்றன.

'செந்தமிழைச் செழுந்தமிழாய் மாற்றவேண்டும்' என்ற பாவேந்தர் பாரதிதாசனாரின் இலட்சிய நோக்குக்கேற்ப ஒவ்வொரு துறையிலும் ஆசிரியர்களால் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர பல்கலைக்கழக நிதிக்குழு உதவியுடன் பெருந்திட்டங்களும் CSIR, ICHR, TNSCST, போன்ற பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் நல்கை பெற்றுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே 40 அறக்கட்டளைகளும், தற்போது மேலும் 5 அறக்கட்டளைகளும் நிறுவப்பெற்றுள்ளன. அறக்கட்டளைகள் மூலம் சொற்பொழிவுகள், இசைப்போட்டிகள், ஆய்வுக்கட்டுரைகள் வெளியிடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 2001–2002 ஆம் ஆண்டுக் கொள்கையானது, இருக்கும் வசதிகளை ஒருங்கிணைத்தல், நிகழ்வுத் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்துதல், எதிர்காலத் தேவைக்கேற்ப புதுமையான திட்டங்களைத் தொடங்குதல் ஆகியவற்றின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறது. மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கேற்ப தற்காலத் தேவைக்கும் பயன்பாட்டிற்கும் தக்கவாறு முதுகலைப் பட்டப்படிப்பு வரும் கல்வியாண்டில் தொடங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## ஆசியவியல் ஆய்வு நிறுவனம்

இருபதாம் நூற்றாண்டில் மேலைக் கோட்பாடுகள் ஆதிக்கம் செலுத்தியதைப் போல், இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் ஆசியவியல்



கோட்பாடுகளே ஆதிக்கம் செலுத்தப் போகின்றன, என்ற கருத்தியலை முன்னிருத்தி, ஆசிய நாடுகளின் மொழி, இலக்கியம், பண்பாடு, சமயம், வரலாறு, கலை, அறிவியல் முதலானவைகளுக்கிடையிலான உறவு, நாட்டம், ஒப்புமை முதலானவைகளை ஆய்ந்து, ஆதாரபூர்வமான நூல்களை வெளியிடும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது ஆசியவியல் நிறுவனம். இந்நிறுவனம் 1982 ஆம் ஆண்டு 1975 சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி (எண்.41/82) பதிவு செய்து சென்னையில் தொடங்கப்பெற்றது. பன்னாட்டுத் தரம் வாய்ந்த ஆய்வு மையமாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் இதுவரை 110 தரமான நூல்களை வெளியிட்டுள்ளது. மேலும், ஆசியப் பின் புலத்தில் தமிழ்ப் பண்பாடு, இலக்கியம், சமயம், சிந்தனைகள் முதலியன பெறும் இடம், ஆசியவியலுக்குத் தமிழியலின் பங்களிப்பு, போன்றத் தேடல்களைத் கருவாகக் கொண்டு, தமிழியல் ஆய்வுப் புலம், சுவடித் துறை, பன்னிரு திருமுறை மொழிபெயர்ப்புத் துறை முதலிய துறைகள், நவீன ஆய்வு முறையியலின் அடிப்படையில் தம்முடைய ஆய்வு, மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்புப் பணிகளை செவ்வனே செய்து வருகின்றன.

தமிழ் ஓலைச் சுவடிகளைப் பற்றிய விவா அட்டவணை (ஆங்கிலத்தில்) தயாரித்தல், அச்சேறாத இலக்கியம், மருத்துவம், கணக்கியல் முதலான அரிய நூல்களைச் சுவடிகளிலிருந்து படியெடுத்து, செப்பம் செய்து, உரை மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புடன் வெளியிடல்; சுவடியியல் பயிலரங்கம், கருத்தரங்கம் நடத்துதல் முதலிய பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது. இத்துறையின் மூலம் இதுவரை ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிறுவனத்திற்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் மானியம் வழங்குகிறது. 2001–2002 ஆம் நிதி ஆண்டில் புறநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, சூளாமணி, முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி, காலந்தோறும் தமிழ்க் கவிதை மூன்றாம் தொகுதி முதலிய மொழிபெயர்ப்புப் பணிகளும், கணிதநூல் தொகுதி 2, வைகுண்ட அம்மானை தொகுதி 2, அலேசியர் நாடகம், வலைவீசின கதை, அகத்தீசர் கலம்பகம் முதலான பத்திற்கும் மேற்பட்ட நூல்களைச் சுவடிகளிலிருந்து படியெடுத்து, செம்மைப் படுத்தி, உரையுடன் மொழிபெயர்த்தல் முதலிய திட்டங்கள் செயல்படுத்தப்படவும் தமிழ் இலக்கிய களஞ்சியம் தொகுதி 4, தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி 3, பன்னிரு திருமுறைகள் மொழிபெயர்ப்பில் ஒரு தொகுதி முதலியன வெளியிடப்படவும் உள்ளன.

**தமிழ்ச் சங்கப் பலகை - குறள் பீடம்**

தமிழ் எழுத்தாளர்களின் தலை சிறந்த படைப்பிலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து (புதினம், சிறுகதைகள்) அவற்றை ஆங்கிலம் மற்றும் இந்தியாவின் பிற மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவதும் விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்குவதும் இவ்வமைப்பின் நோக்கமாகும்.

தமிழ்ச் சங்கப்பலகை - குறள் பீடத்தைத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்துடன் இணைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மொழிபெயர்ப்புப் பிரிவு

மொழி பெயர்ப்புப்பிரிவு, தலைமைச்செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் வெளியிடப்படும் அறிவிக்கைகள் அனைத்தையும் தமிழாக்கம் செய்வதன் மூலம், தமிழக அரசின் செயல்பாடுகளை மக்கள் அறிந்து கொள்ள பேருதவியாக செயல்பட்டு வருகிறது. அத்துடன், ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் இப்பிரிவு மொழி பெயர்க்கின்றது.

அறிவிக்கைகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், பொதுக் கணக்குக்குழு, பொது நிறுவனங்கள் குழு அறிக்கைகள், மாநில ஆட்சி அறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், பொதுத்துறையின் மந்தனக் கோப்புகள், விசாரணை ஆணைய அறிக்கைகள், தேர்தல் ஆணையக் கோப்புகள், நிதிக்குழு அறிக்கைகள், காபிபோசா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான கோப்புகள், அரசாணைகள், அமைச்சரவைக் குறிப்புகள், அமைச்சர்கள் உரை, வாழ்த்துச் செய்திகள், சுற்றோட்டக் குறிப்புகள் போன்ற அனைத்து வகைக் கோப்புகளும் மொழியாக்கம் செய்யப்படுகின்றன.

மேலும், சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெறும் காலங்களில், சட்டமன்ற மொழிபெயர்ப்புப் பணிகளைக் கவனிப்பதற்காக இப்பிரிவிலிருந்து உதவிப்பிரிவு அலுவலர் ஒருவர் அனுப்பி வைக்கப்படுகிறார்.

இதுபோன்றே, வரவு செலவுத் திட்ட அறிக்கைகள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழி பெயர்க்க இப்பிரிவிலிருந்து ஆண்டுதோறும் உதவி இயக்குநர் ஒருவர், பிரிவு அலுவலர் ஒருவர், உதவிப்பிரிவு அலுவலர்கள் மூவர், ஆகியோரைக் கொண்ட ஒரு தொகுதியினர் நிதித்துறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.



மேலும், இந்த ஆண்டு, ஒரு பிரிவு அலுவலர், நான்கு உதவிப்பிரிவு அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று இரண்டாவது மாநில நிதி ஆணையத்திற்கு அனுப்பப்பட்டது. இக்குழு மிகக் குறுகிய காலத்தில் அப் பணியைச் செவ்வனே செய்து முடித்தது.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில் அகரமுதலி உருவாக்குதலும் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு பணியாகும். தமிழ் மொழியில் தனித்தன்மை வாய்ந்த பேரகரமுதலியைப் பன்மடலங்களில் வெளியிடும் நோக்கத்தின் விளைவாக 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்' எனும் இத்துறை உருவாக்கப்பட்டது. இருமொழிப் பேரகரமுதலியான இதில் ஒவ்வொரு சொல்லுக்கும் எடுத்துக்காட்டுகளுடன் உரிய விளக்கமும், செந்தமிழ்ச் சொல்லாட்சியும், வேரும் வரலாறும் அளிக்கப்படுவதால், குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளருக்கு இந்நூல் பெரிதும் பயன் அளிப்பதாயிருக்கும். தவிரவும், எல்லார்க்கும் பயன்படும் பொதுவகையான சொற்பொருள் அகரமுதலியாயும் இந்நூல் அமைந்துள்ளது. திரட்டப் பெறும் சொற்களுக்குத் தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல் மற்றும் இலக்கண இலக்கியங்களிலிருந்து விரிவான விளக்கங்களும், சான்றுகளும், மேற்கோள்களும் தரப்படுவதோடு, தேவையான இடங்களில் படவிளக்கங்களும் இடம் பெற்று இப்பேரகரமுதலிக்கு அணி சேர்க்கின்றன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகளாக இதுவரையிலும் உயிரெழுத்துகள் வரிசையில் "அ" கரம் முதல் "ஔ" காரம் வரை மூன்று பகுதிகளும், உயிர்மெய்யெழுத்துகள் வரிசையில் "க" கரம் முதல் "கூ" காரம் வரை இரண்டு பகுதிகளுமாக மொத்தம் ஐந்து பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை யாவும் மொழியியல் வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. மூன்றாம் பகுதியான 'க' தொகுதியில் 'கெ' கரம் முதல் 'கௌ' காரம் வரையிலான பகுதி அச்சில் உள்ளது. இவற்றைத் தொடர்ந்து 'ச', 'ஞ', 'த', 'ந', 'ப', 'ம', 'ய', 'வ' ஆகிய எழுத்துகளில் தொடங்கும் பகுதிகள் ஒவ்வொன்றாக வெளியிடப்படும். இப்பகுதிகளின் சொல்லடைவு மற்றும் அட்டவணைப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நடப்பு 2001–2002-ஆம் நிதியாண்டில் 'அ' காண்டத்தின் மூன்று பகுதிகள் அச்சுக்கு அணியமாக்கும் பணி மேற்கொள்ளப்படும். கணிப்பொறியமைப்பின் துணையுடன் பேரகரமுதலியின் எஞ்சிய படலங்களை விரைந்து வெளிக்கொணர அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## அரசு அருங்காட்சியகம்

இந்தியாவிலுள்ள மாநில அருங்காட்சியகங்களுள் சென்னை அரசு அருங்காட்சியகம் பழமை வாய்ந்ததும் இரண்டாவது பெரிய அருங்காட்சியகமுமாகும். சென்னை அருங்காட்சியகம் அதன் அரிய மற்றும் விலை மதிப்பிடற்கரிய சேகரிப்புகளால் மிகவும் புகழ் பெற்றதாகும். இது பலதரப்பட்ட துறைகளின் பொருட்களையும் பண்பாட்டுச் செல்வங்களையும் பாதுகாக்கிறது. கலை, தொல்லியல், மானிடவியல், இயற்கை அறிவியல், புவியியல், சிறுவர் அருங்காட்சியகம், வேதியியல் பாதுகாப்பு தொடர்பான சேகரிப்புகளைப் பாதுகாக்கிறது. இது தேசிய மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கும் ஒரு மையமாகும். ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக இவ்வருங்காட்சியகம் தன்னுடைய விலை மதிப்பிடற்கரிய பழம் பொருட்கள் அடங்கிய சேமிப்பிற்காக உலகப் புகழ் பெற்றுள்ளது. பல அயல் நாட்டு மற்றும் உள்நாட்டு பார்வையாளர்களைப் பெரிய அளவில் ஈர்த்து வருகின்றது. மேலும், இது நமது புகழ்மிக்க பண்பாடு மற்றும் பாரம்பரிய கலைக் கருவூலங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. இதுவரை புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், ஈரோடு, உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருட்டிணகிரி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், கரூர், இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 20 மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

சென்னை அருங்காட்சியகம் தென்னிந்தியப் படிமங்கள், அமராவதி சுண்ணாம்புக்கல் சிற்பங்கள், இராஜா ரவி வர்மா ஓவியங்கள், இயற்கை அறிவியல் மற்றும் அறிவியல் சேமிப்புகளுக்குப் புகழ் பெற்றதாகும். உலகிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் இவ்வருங்காட்சியகப் பொருட்கள் குறித்த விளக்கங்களை அறிவதில் ஆர்வமாய் இருக்கின்றனர். ஏற்கெனவே அருங்காட்சியகத்திடம் மின் அஞ்சல் மற்றும் இணையம் உள்ளது. உலகின் எந்தப் பகுதியிலுள்ள அறிஞர்களும், மக்களும் இவ்வருங்காட்சியகம் குறித்த செய்திகளைப் பெற தகவல் தளம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.



தகவல்தளத்தில் இணைய அருங்காட்சியகமும் ஏற்படுத்தப்பட்டு நேரில் வராமலேயே காண வசதி செய்யப்பட்டு வருகிறது.

தினந்தோறும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வருகை புரிகின்றனர். இவ்வருங்காட்சியகத்தை உலகத் தரத்திற்கு உயர்த்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றை நல்ல முறையில் பாதுகாத்துப் பராமரிக்க அரசு சாரா நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு, அவற்றைப் பயன்படுத்துவதற்கானப் பயிற்சி பணியாளர்களுக்குத் தரப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முறையாக அருங்காட்சியகப் பேரழிவுத் தவிர்ப்பு என்ற மேலாண்மைத் திட்டக் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

வளர்கலைக் கூடம் மற்றும் தேசியக் கலைக் கூடத்தில் இராஜா ரவி வர்மா, சீனிவாசலு, தனபால் போன்ற கலைஞர்களின் 100 ஓவியங்களும், 11 உலோக சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. அரிய ஓவியங்களைத் தேசியக் கலைக் கூடத்தில் (தேசிய கருவூலங்கள்) காக்க கண்ணாடி ஒளி நூலிழை ஒளியமைப்பும் வளர்கலைக் கூடத்தில் டிராக் ஒளியமைப்பும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரியான தொழில்நுட்ப ஒளியமைப்பு இந்தியாவிலுள்ள அருங்காட்சியகங்களுள் இங்கே முதன்மையாக அமைக்கப்பட்டுத் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பாறை ஓவியக் காட்சிக் கூடம் அமைக்கவும், சிறுவர் அருங்காட்சியகத்தில் கலாச்சார மற்றும் உடையலங்கார பொம்மைகள் காட்சிக் கூடத்தைப் புதுப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியத்திலுள்ள பழைய நூல்களை மறு பதிப்பு செய்ய, புதிய நூல்கள் வெளியிட, கையேடுகள், வண்ண அட்டைகள் போன்றவை வெளியிட செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட அருங்காட்சியகத்திலுள்ள படிமக் கூடத்தை நவீனப் படுத்துதல், சென்னை சிறுவர் அருங்காட்சியகம் கீழ்த் தளப்பகுதியில் அறிவியல் கூடம் அமைத்தல், சென்னை அருங்காட்சியகத்திற்கு நான்கு கணினிகள் வாங்குதல் மற்றும் திருச்சி மாவட்ட அருங்காட்சியகத்திற்கு சிறப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளுதல், பதினோராவது நிதிக்குழுவின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பாரம்பரியமிக்க அருங்காட்சியகக் கட்டடங்களைப் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், அரசு

[2001 ஆகஸ்ட் 27

அருங்காட்சியகத்தின் 150–ஆவது ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டு திசம்பர் திங்களில் கொண்டாடப்படுதல், அப்போது அருங்காட்சியகக் கலையரங்கின் படம் போட்ட தபால்தலை வெளியிடப்படுதல் போன்றவை 2001–2002 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள இதர திட்டங்களாகும்.

## தொல்லியல் துறை

தொல்லியல் துறை 1961 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தமிழ் நாட்டில் உள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பது மற்றும் சரித்திரப் புகழ்பெற்ற இடங்களில் அகழாய்வு செய்தல், வரலாற்றுச் சின்னங்களையும் அகழாய்வின் போது பல்வேறு நிலைகளையும் நிழற்படம் எடுத்தல் போன்ற பணிகளை மட்டும் மேற்கொண்டு வந்தது. மக்கள் நலனுக்காகத் தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து அவற்றை நூல்கள் வடிவில் கொண்டு வரும் திட்டம் 1966 ஆம் ஆண்டில் அரசால் ஒப்பளிக்கப்பட்டது. கல்வெட்டுகள், அவை பற்றிய கையேடுகள் மற்றும் ஆய்வுக் குறுநூல்கள் ஆகியவற்றை அச்சிடுவதற்காக இயக்குநரகத்தில் ஒரு அச்சிடும் பிரிவு தொடங்கப்பட்டது. தற்போது தொல்லியல் துறையில் இருபது சார்நிலை அலுவலகங்கள் மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. கீழ்க்கண்ட பணிகள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1. பழைய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

2. வரலாற்று வெளிகளை (Sites) அகழாய்வு செய்தல்

3. கல்வெட்டுகளைப் படியெடுத்துப் படித்து நூல்கள் கையேடுகள், ஆய்வுக் குறுநூல்கள் வடிவில் வெளியிடுதல்.

4. நிழற்படப் பதிவு

5. சென்னையிலும், மதுரையிலும் உள்ள ஆய்வுக் கூடங்களில் வேதியியல் பாதுகாப்பு செய்தல்

6. பழங்காலப் பொருட்களைப் பதிவு செய்தல்

7. அகழ்வைப்பகங்கள்

8. தொல்லியலாளர்களுக்கு நூலக வசதிகள் அளித்தல்



2001 ஆகஸ்ட் 27]

9. சென்னை அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள ஓலைச் சுவடிகளையும் கைப்பிரதிகளையும் பாதுகாத்தல்.

### அகழாய்வு

ஒவ்வொரு ஆண்டும் இத்துறை அகழாய்வு மேற்கொண்டு வருகிறது. இதுவரை 24 வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு நடத்தி உள்ளது. இவ்வகழாய்வில் விலை மதிப்பிடற்கரிய அருங்கலைப் பொருட்கள் (Artefacts) அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்ட மாங்குடியிலும், கோயம்புத்தூர் மாவட்ட பேரூரிலும் 2001–2002ஆம் ஆண்டில் அகழாய்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

தமிழ்நாட்டில் 85 வரலாற்றுச் சின்னங்கள் கண்டறியப்பட்டு அவை பாதுகாக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சின்னங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மதச்சார்பற்ற மரபுச் சின்னங்களும் அடங்கும். நிதி வசதிக்கேற்ப மரபுச் சின்னங்களைச் சீரமைத்துப் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### கல்வெட்டுப் படியெடுத்தல் மற்றும் கல்வெட்டுச் சுவடிச் சொல்லகராதி தொகுத்தல்

தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுக்கவும், மக்கள் நலனுக்காகவும் ஆராய்ச்சியாளர்களுக்காகவும் அவற்றை நூல்களாக வெளிக்கொணரவும், ஆய்வு செய்யவும் இத்துறையில் கல்வெட்டுப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இதுவரை 7244 கல்வெட்டுகள் படியெடுத்துப் படிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளை அச்சிட்டு வெளியிட்ட பிறகு கல்வெட்டுப் படிகள் உதகையில் உள்ள சார்–அலுவலகத்திற்கு அனுப்பிப் பாதுகாக்கப்படுகின்றன.

### கல்வெட்டியல் பயிற்சி நிறுவனம்

இயக்குநரகத்தில் செயற்படும் கல்வெட்டியல் பயிற்சி நிறுவனத்தில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியலில் ஓராண்டுப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.500/- வழங்கப்படுகிறது.

[2001 ஆகஸ்ட் 27

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், திருவாங்கூர் மற்றும் புதுக்கோட்டை கல்வெட்டுத் தொகுதிகளிலிருந்து கல்வெட்டுகளில் காணப்பெறும் உயிரெழுத்துகளில் தொடங்கும் 1000க்கும் மேற்பட்ட சொற்கள் தமிழில் தக்க பொருள் விளக்கத்துடன் ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை வெளியிடுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## கல்வெட்டியல் கருத்தரங்கும் பயிலரங்கும்

முதுகலைப் பட்டம் பெற்ற அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் நலனுக்காகக் கல்வெட்டியல் பயிலரங்கு ஒன்றினைச் சென்னையில் இந்த ஆண்டு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் 25 பேர் பங்கேற்பர்.

## அகழ்வைப்பகங்கள்

இத்துறையின் கீழ் 17 அகழ்வைப்பகங்கள் செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிதியாண்டிலும் இரு அகழ்வைப்பகங்கள் மேம்படுத்தப்படுகின்றன. 2001–2002 நிதியாண்டில் கங்கைகொண்டசோழபுரம் மற்றும் கரூரிலுள்ள அகழ்வைப்பகங்களை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## பண்டைய கலைப் பொருட்கள் பதிவு

பழங்கலைப் பொருட்கள் பதிவுச் சட்டம் 1972-ன்கீழ் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டையக் கலைப் பொருட்களைப் பதிவு செய்வதற்காக மத்திய அரசால் வழங்கப்படும் நூறு விழுக்காடு நிதியிலிருந்து தொல்லியல் துறையில் சென்னை மற்றும் திருச்சி ஆகிய இரு மையங்களில் பதிவு அலுவலர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

கலைப் பொருட்கள் களவுபோவதைத் தடுக்கும் பொருட்டு இத்திட்டத்தின்படி ஆலயச் சிலைகள் மற்றும் கலைப் பொருட்கள் பதிவு அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டு சான்றுகள் வழங்கப்படுகின்றன.

## அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்

இத்துறையின்கீழ் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு மொழிகளில் உள்ள 72,314 ஓலைச்சுவடிகள் உள்ளன. இதுவரை 450 ஓலைச் சுவடிகள் நூல் வடிவில்



2001 ஆகஸ்ட் 27]

வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் தமிழ் நூல்கள் 69. 12 தமிழ் ஓலைச் சுவடிகளை நூல்களாக வெளியிடும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

கல்வெட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளுதல், பயிலரங்கம் நடத்துதல், தொல்லியல் துறை பாதுகாப்புப் பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல், தொல்லியல் துறை இரசாயனக் கூடத்திற்கு உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் வாங்குதல், இரு அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல், அரசினர் கீழ்த்திசை நூலகத்திற்கு இழுப்பறை, நிலைப்பேழை மற்றும் இரும்பு நிலைப்பேழைகள் வாங்குதல் போன்ற திட்டங்கள் 2001–2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்துறை பராமரித்து வரும் வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காகப் போதிய அதிகாரங்கள் கொண்ட ஒரு வல்லுநர் குழு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கலை-பண்பாட்டு இயக்ககம்

டிசம்பர் 1991–இல் கலைக் கல்வி நிறுவனங்களையும், கலையமைப்புகளையும் ஒரு குடையின் கீழ்க் கொணர்ந்து 'கலை பண்பாட்டு இயக்ககம்' என்று தனி இயக்ககம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கக அமைப்பைப் பணியாட்சி அலுவலகங்கள், கலைக்கல்வி நிறுவனங்கள், கலை வளர்ச்சி நிறுவனங்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். கலை– பண்பாட்டு இயக்ககம் சென்னையிலும், பணியாட்சி அலுவலகங்களான மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் 6 இடங்களிலும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் கலை பண்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து அரசின் கொள்கைகள் நிறைவேறத் துணை நிற்கின்றன. அரசு இசைக் கல்லூரிகள் 4 இடங்களிலும், மாலை நேர இசைக்கல்லூரிகள் சென்னையில் 4 மையங்களிலும், மதுரையில் 1 மையத்திலும் இயங்கி வருகின்றன. மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் 17 நகரங்களில் இயங்கி வருகின்றன. அரசு கலைத் தொழில் கல்லூரிகள் சென்னை, கும்பகோணம் ஆகிய நகரங்களிலும், அரசு கட்டட சிற்பக் கலைக் கல்லூரி மாமல்லபுரத்திலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு ஆகியவை சென்னையில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் சென்னையைத் தலைமையிடமாகவும், 22 மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களாகவும், 10 சவகர் சிறுவர் மன்ற

விரிவாக்க மையங்களாகவும், 2 ஊரக மையங்களாகவும் இயங்கி வருகின்றன. சென்னை நீங்கலாகப் பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்கள் செயல்படுகின்றன.

### மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய 6 இடங்களில் இயங்கி வருகின்றன. துறையின் உதவி இயக்குநர்களைத் தலைமை அலுவலர்களாகக் கொண்டு இயங்கும் இம்மையங்கள் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து அரசின் கொள்கைகளை நிறைவேற்றி வருகின்றன. கலை பண்பாட்டுத் துறை சார்பில் தனியாகவும், மாவட்டக்கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், மேதகு ஆளுநர் தலைமையில் இயங்கும் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் கலை விழாக்களையும் கலை பண்பாட்டுப் பயிற்சிகளையும் அளிக்கின்றன.

### கலைக் கல்வி நிறுவனங்கள்

### இசைக் கல்லூரிகள்

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய 4 இடங்களிலுள்ள அரசு இசைக் கல்லூரிகளில் மூன்றாண்டுப் பட்டயப்படிப்புகள் நடைபெறுகின்றன. திருவையாறு கல்லூரியில் மட்டும் பட்டயப்படிப்புகளுடன் மூன்றாண்டு இளங்கலை இசைப் பட்டப் படிப்பும் நடைபெறுகின்றது. சென்னை, மதுரை கல்லூரிகளில் மட்டும் ஓராண்டு இசை ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு உள்ளது. சென்னையில் 4 இடங்களிலும், மதுரையில் ஓர் இடத்திலும் மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஈராண்டுச் சான்றிதழ்ப் படிப்பு வழங்கப்படுகிறது.

### இசைப் பள்ளிகள்

மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருட்டிணகிரி, சீர்காழி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு ஆகிய 17 நகரங்களில் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் குரலிசை, பரதம், நாதசுரம், தவில்,



தேவாரம் ஆகிய பாடப்பிரிவுகளில் மூன்றாண்டுச் சான்றிதழ்ப் படிப்பு உள்ளது.

### கலைத்தொழில் கல்லூரிகள்

சென்னை, கும்பகோணம் ஆகிய இடங்களில் அரசு கலைத்தொழில் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை கல்லூரியில் சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு, காட்சித் தொடர் வடிவமைப்பு, வண்ணக்கலை, சிற்பக் கலை, பதிப்போவியம் ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டமும், வண்ணக்கலை, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் சேர்வதற்கான கல்வித் தகுதியாகப் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்ச்சி உள்ளது. இக்கல்லூரி 150 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பெருமைக்குரியது. கும்பகோணம் கல்லூரியில் வண்ணக்கலை, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, சிற்பக் கலை ஆகிய பிரிவுகளில் ஐந்தாண்டுப் பட்டமும், வண்ணக்கலை, சிற்பக் கலை ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் சேர்வதற்கான கல்வித் தகுதியாகப் பத்தாம் வகுப்புத் தேர்ச்சி உள்ளது.

### கட்டட சிற்பக் கலைக் கல்லூரி

மாமல்லபுரத்தில் அரசு கட்டட சிற்பக் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் கடந்த ஆண்டு முதல் நான்காண்டுப் பட்டப் படிப்பு நடைபெற்று வருகின்றது. மரபுக் கட்டடக் கலைப் பிரிவில் தொழில் நுட்பவியல் இளவல் பட்டமும், மரபுச் சிற்பக் கலை, மரபோவியம் – வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின்கலை இளவல் பட்டமும் வழங்கப்படுகின்றன. ஆசியாவிலேயே மரபு வழியிலான சிற்பக் கலை, கோவில் கட்டடக் கலை பயிற்றுவிக்கும் கல்லூரி இது ஒன்றேயாகும்.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

மத்திய சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், தமிழக அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது.

[2001 ஆகஸ்ட் 27

கலைத் துறையில் அரிய பணியாற்றிய புகழ்மிக்கக் கலைஞர்களைப் பாராட்டுகின்ற வகையில் ஆண்டுதோறும் கலைமாமணி விருது வழங்குதல், வளர்கலைக்குத் தொண்டாற்றிய நலிந்த கலைஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்குதல், மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குப் பேணுகை நிதி வழங்குதல் முதலிய திட்டங்கள் இயல் இசை நாடக மன்றத்தால் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு முடிய 167 கலைஞர்களுக்குக் "கலைமாமணி விருது" வழங்கப்பெற்றுள்ளது.

வாழ்நாள் முழுவதும் வளர்கலைக்குத் தொண்டாற்றிய நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவியாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 5568 கலைஞர்கள் பயனடைந்துள்ளார்கள். மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பேணுகைத் தொகை தற்போது ரூ.5000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை மொத்தம் 218 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை மேம்படுத்தவும், தமிழ்ப் பண்பாட்டு மரபினைப் பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ளவும் உதவும் வகையில், மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளும் திட்டத்தின்கீழ்ச் சென்ற ஆண்டு முடிய தமிழகத்திற்கு வெளிமாநில கலைக் குழுக்கள் 77 வருகை புரிந்துள்ளன; 81 தமிழகக் கலைக் குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்றுள்ளன.

திறம்படைத்த கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம் முதலிய பல்வேறு கலைப் பிரிவுகளைச் சார்ந்த 25 இளங்கலைஞர்கள் கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டு ஒவ்வோர் இளம் கலைஞருக்கும், 4 நிகழ்ச்சிகள் வீதம் சென்னை, மதுரை, திருநெல்வேலி, பொள்ளாச்சி, கரூர், திருச்சிராப்பள்ளி, கோபிச்செட்டிப்பாளையம், நெய்வேலி, காரைக்குடி, சிவகாசி ஆகிய இடங்களில் தொடர்ந்து நன்முறையில் இயங்கி வரும் தன்னார்வக் கலைநிறுவனங்கள் மூலம் நடத்திட வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அரிய கலைநூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் எட்டு நூல்கள் தேர்வுசெய்யப்பட்டு, ஒவ்வொரு நூல் வெளியீட்டிற்கும் உயர்ந்த அளவாக ரூ.15,000/- வழங்கப்படவுள்ளது.

தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 14 நாடகங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு நாடகத்திற்கும் ரூ.15,000/- முதல் ரூ.22,000/- வரை நிதியுதவி வழங்கி,



2001 ஆகஸ்ட் 27]

மன்றத்தால் ஏற்பாடு செய்யப்படவுள்ள நாடக விழாவில் மேடையேற்றம் செய்யப்படவுள்ளன.

நலிந்த ஊரகக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும், இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 329 தனிப்பட்ட கலைஞர்களும் 44 கலைக்குழுக்களும் தேர்வு செய்யப்பட்டு 9 மாவட்டங்களைச் சேர்ந்த 145 தனிப்பட்ட கலைஞர்களுக்கும், 48 கலைக்குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நட்டுவாங்கப் பயிற்சியளிக்கும் திட்டத்தின்கீழ் 6 பரதநாட்டிய மாணவியர் தேர்வுசெய்யப்பட்டு, சிறந்த கலை வல்லுநர் மூலம் மன்ற வளாகத்தில் ஓராண்டுக் காலத்திற்குச் சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. நாதசுரம், தவில் இளம் கலைஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கும் திட்டத்தின்கீழ் 12 நாதசுரக் கலைஞர்களும், 5 தவில் கலைஞர்களும் தேர்வு செய்யப்பட்டு கலை வல்லுநர்மூலம் ஓராண்டுக் காலத்திற்கு மன்ற வளாகத்தில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. 5 அகவை முதல் 15 அகவை வரையிலான இசைத்துறை சார்ந்த 30 குழந்தைக் கலைஞர்களும், பரதநாட்டியத் துறையைச் சார்ந்த 20 குழந்தைக் கலைஞர்களும் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்தத் துறையில் மேலும் தங்கள் திறனை வளர்த்துக்கொள்ள ஊக்குவிக்கும் பொருட்டு இசைத் துறைக் குழந்தைக் கலைஞர்களுக்கு ஆண்டிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1600/- வீதமும், பரதநாட்டியத் துறைக் குழந்தைக் கலைஞர்களுக்கு ஆண்டிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ.2400/- வீதமும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

மன்றம் ஆண்டுதோறும் கலைமேதைகளின் நினைவு விழா, நாட்டுப்புறக் கலைஞர்களின் விழா ஆகிய விழாக்களையும், பூம்புகாரில் இந்திர விழா, குற்றாலத்தில் சாரல் விழா ஆகிய விழாக்களில் பல்வேறு துறைகளுடன் இணைந்து கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றது.

## தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

கவின்கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும் இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு அரசால் 1975-இல் தோற்றுவிக்கப்பட்டது. ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படும் நல்கைத் தொகையைக் கொண்டு ஓவிய சிற்பக் கலை வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

[2001 ஆகஸ்ட் 27

ஓவிய சிற்பக் கலைத் துறைகளில் சிறந்த சாதனை புரிந்த கலை வல்லுநர்களைப் பாராட்டும் வகையில் ஆண்டுதோறும் மரபுவழி, புதுப்பாணி, கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ்மிக்க ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்குக் கலைச்செம்மல் விருதுகள் வழங்கப்படுகின்றன. இக்கலைச்செம்மல் விருதாளர் ஒவ்வொருவருக்கும் பாராட்டிதழுடன் ரூ.20,000/– பரிசுத்தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

மரபுவழி புதுப்பாணி ஓவிய சிற்பக் கலைகளை மேம்படுத்தவும் இக்கலைகளைச் சார்ந்த படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் மரபுவழி, புதுப்பாணி கலைக்காட்சிகள் நடத்தப்பட்டு இக்காட்சிகளில் சிறந்த கலைப்படைப்புகளை உருவாக்கிய ஓவிய சிற்பக் கலைஞர்களுக்குக் கலைக்காட்சி விருதுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை மரபுவழி கலைக்காட்சியில் 31 ஓவிய சிற்பக் கலைஞர்களும், புதுப்பாணி ஓவிய சிற்பக் கலைக்காட்சியில் 234 ஓவிய சிற்பக் கலைஞர்களும் விருதுகள் பெற்றுள்ளார்கள். மரபுவழி கலைக்காட்சியில் சிறந்து விளங்கும் படைப்புக்களை உருவாக்கும் 10 கலைஞர்களுக்கு ரூ.5,000/- வீதம் கலைக்காட்சி விருதுகளும், புதுப்பாணி ஓவிய சிற்ப கலைக்காட்சியில் 30 அகவைக்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் பங்குகொள்ளும் பிரிவில் 5 கலைஞர்களுக்கு ரூ.15,000/– வீதமும், 30 அகவைக்குட்பட்ட இளங்கலைஞர்கள் பங்குகொள்ளும் பிரிவில் 10 கலைஞர்களுக்கு ரூ.5,000/ – வீதமும் கலைக்காட்சி விருதுகள் தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

திறமைமிக்க தகுதிவாய்ந்த வளரும் ஓவிய சிற்பக் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களது கலைப் படைப்புகளடங்கிய கலைக்காட்சியினை நடத்துவதற்கு ரூ.5000/– வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 20 கலைக்காட்சிகள் நடத்தவும், நுண்கலைகள் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் வாய்ப்புகள் உண்டாகின்றன.

நுண்கலைகள் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் படிப்புதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் தற்போது இளங்கலை இறுதியாண்டு பயிலும், சென்னை அரசு கலைத்தொழில் கல்லூரியின் 10 மாணவர்களுக்கும், கும்பகோணம், அரசு கலைத் தொழில் கல்லூரியின் 10 மாணவர்களுக்கும், சென்னை ஸ்டெல்லாமேரி கல்லூரியின் 2 மாணவிகளுக்கும், கலாசேத்திரா கலை நிறுவனத்தின் 3 மாணவர்களுக்கும் ஆண்டுக்கு



2001 ஆகஸ்ட் 27]

ரூ.3000/– வீதம் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னை அரசு கலைத் தொழில் கல்லூரியில் முதுகலை இறுதியாண்டு பயிலும் 4 மாணவர்களுக்கும், கும்பகோணம் அரசு கலைத் தொழில் கல்லூரியில் முதுகலை இறுதியாண்டு பயிலும் 2 மாணவர்களுக்கும் ஆண்டிற்கு ரூ.5000/- வீதம் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை இளங்கலைப் பிரிவில் 358 மாணவ–மாணவியர்களும், முதுகலைப் பிரிவில் 22 மாணவ – மாணவியர்களும் படிப்புதவித் தொகைகளைப் பெற்றுள்ளனர்.

மாவட்டங்களில் கலைவளர்ச்சியினை ஊக்கப்படுத்தும் வகையில் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மண்டலக் கலை–பண்பாட்டு மையங்களுடன் இணைந்து மாவட்டங்களில் கலைக்காட்சிகள், கருத்தரங்குகள், கலைப்பட்டறை போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்று வருகின்றன.

ஓவிய நுண்கலைக்குழுவின் கலைக்கூடம் ஒன்று உதகமண்டலத்தில் 1992 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டினைச் சார்ந்த கலை வல்லுநர்களின் கலைப்படைப்புகள் இக்கலைக்கூடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. மதுரையிலும், ஓவிய நுண்கலைக்குழுவின் கலைக்கூடம் இயங்கி வருகின்றது. நுண்கலை பயில ஆர்வமுள்ளவர்களுக்காக நுண்கலைப் பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் சென்னையில் ஓவிய நுண்கலைக் குழுவின் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டைச் சார்ந்த மூத்த ஓவிய, சிற்பக் கலைஞர்களைப் பற்றி ஒரு நூலினைத் தொகுத்து ஓவிய நுண்கலைக் குழு ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டு ஓவியம், சிற்பம் ஆகிய நுண்கலைகளைப் பற்றி ஆவணத் தொகுப்பு தயாரிக்கும் பணி ரூ.3.00 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்**

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

5 அகவை முதல் 16 அகவைக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்குக் கலைப் பயிற்சி அளிப்பதும் அவர்களின் கலைத்திறனை மேம்படுத்துவதும் இதன் நோக்கங்களாகும்.

அரியலூர் மாவட்டம் தவிர அனைத்து மாவட்டங்களிலும் சவகர் சிறுவர் மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் பள்ளி விடுமுறைக் காலமாகிய கோடைக் காலத்தில் பயிற்சி முகாம் நடத்தப்பெறுகிறது. இதனால் ஆண்டுதோறும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமியர் பயனடைந்து வருகின்றனர்.

புதுதில்லியில் ஆண்டுதோறும் நவம்பர் மூன்றாவது வாரத்தில் நடைபெறும் தேசியக் குழந்தைகள் விழாவில் தமிழ்நாட்டு சவகர் சிறுவர் மன்றங்களில் பயிற்சி பெறுவோர் கலந்துகொண்டு பாராட்டு பெற்று வருகின்றனர்.

மேலும் இங்கு பயிற்சி பெறும் சிறுவர், சிறுமியர் வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்பெற்று தமிழ்க் கலைகளையும் பண்பாட்டையும் வெளிப்படுத்திப் பாராட்டும், பரிசும் பெற்று வருகின்றனர்.

**கலை வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தைப் போற்றிப் பாதுகாக்கும் முயற்சியாக, இவ்வரசு, தமிழ் இசை, நாட்டுப்புறக் கலைகள், தெரு நாடகங்கள், நாட்டியங்கள், நாடகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நம் நாட்டு சான்றோர்களுக்குப் புகழாரங்கங்கள் அமைக்கும் நோக்குடன் தொல்காப்பியருக்குச் சென்னையிலும், சைவ சமயக் குரவர்கள் நால்வருக்கு மதுரையிலும், இளங்கோவடிகளுக்குக் கோவையிலும், ஊரகக் கலைஞர்களுக்கு திருநெல்வேலியிலும், பரதநாட்டியக் கலையில் முன்னோடியாக விளங்கிய விற்பன்னர்களுக்குத் தஞ்சையிலும் புகழாரங்கங்கள் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நெறியுரைக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் கலை–பண்பாட்டினைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், கலைஞர்களின் கலைப் பணிகளை சிறப்பிக்கும் வகையிலும் மாவட்ட அளவில் விருதுகள் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 கலைஞர்களுக்கு மாவட்ட கலை மன்றம் வாயிலாக விருது வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



மேலும் மாமல்லபுரம் கட்டட சிற்பக் கலைக் கல்லூரிக்குப் புதிய கருவிகள் வாங்கவும் புதிய பாடத் திட்டத்திற்கேற்ப நூல்கள் வாங்கவும், கும்பகோணம் அரசு கலைத் தொழில் கல்லூரியில் நூலகப் பயன்பாட்டிற்கான கட்டடம் கட்டவும், கணினிகள் வாங்கவும், இரண்டு கலை பண்பாட்டு மையங்களுக்கு ஒளிப்படிப் பொறி வாங்கவும், திருவையாறு அரசு இசைக் கல்லூரிக்கு ஒலி, ஒளிப் பேழை நூலகம் அமைக்கவும் இவ்வாண்டில் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும்.

— — —

223440
600 008
D
V2'',3'P01
P02.7.1

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002